ISSUED 24—7—1972]



38

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

MONDAY, 27th MARCH 1972
Volume XCVI—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1972

Legislative Council Department
Madras-9

Price 35 Paise

Index to Tamil Nadu Legislative Council Debates

3897

FORTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

27th to 30th March 1972 and 3rd to 7th April 1972.

VOLUME XCVI (Nos. 1-9).

TABLE OF CONTENTS

Monday, 27th March 1972

		Pages.
	Personnel of the Government of Tamil Nadu	i–ii
	Principal officers of the Tamil Nadu Legislative Council ...	iii
	List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	iv–vi
I	Questions and Answers	1–24
II	Announcement *re* decision of the Business Advisory Committee	24–25
III	Adjournment motion *re* failure of the Government to give normal protection to political parties and attack on Thiru Thangavelu, Secretary, Ramanathapurm District Congress Committee	25–27
IV	Calling attention to delay in giving effect to the order of giving Selection Grade to B.T. Teachers working in Salem and Dharmapuri Districts	27
V	Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1971–72	27–31
VI	Government Motion—	
	Discussion on the Policy Note on 'Animal Husbandry'.	31–84
VII	Papers laid on the table of the House	84–85

Tuesday, 28th March 1972.

I	Questions and Answers	155–159
II	Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1971–72	160–208
III	Papers laid on the table of the House	209–210

6.30.53

PAGES

Wednesday, the 29th March 1972.

I Questions and Answers 211-221

II Point of information *re* answering of Questions 211

III Government Motions—

(1) Election of three Members to the Committee of Privileges 222

(2) Election of six Members to the House Committee ... 222-223

(3) Discussion on the Policy Notes on Community Development Projects, National Extension Service and Local Development Works and Public Works Grants-in-aid 223-226

IV Papers laid on the table of the House 266

Thursday, 30th March 1972

I Questions and Answers 477-486

II Announcements—

(1) Message from the Governor 487

(2) Messages from the Assembly 487

III Government Motions—

(1) Nomination of five Members to serve on the Committee on Subordinate Legislation of the Assembly. 487-488

(2) Nomination of five Members to serve on the Committee on Public Accounts of the Assembly 488-489

(3) Nomination of five Members to serve on the Committee on Estimates of the Assembly 489

(4) Change in the order of Business 490

IV Government Bills—

(1) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972) 490

(2) The Tamil Nadu Appropriation Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972) 491-546

V Papers laid on the table of the House 546

Monday, 3rd April 1972

I Questions and Answers 573-583

II Government Business—

Consideration of Report on the Rules of Procedure of the Legislative Council 584-612

III Papers laid on the table of the House 613-626

PAGES

Tuesday, 4th April 1972.

I Questions and Answers 627-635

II Announcements—

(1) Message from the Governor 635

(2) Messages from the Assembly 636-637

III Government Motions—

(1) Suspension of rule 42 (3) of the Council Rules ... 637

(2) The Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 (L.A. Bill No. 23 of 1972) 642-644

IV Calling attention to matters of urgent public importance—

(i) Non-co-operation between the Trustees of Sri Kailasanathaswamy Devasthanam at Thirumanur, Tiruchirappalli District and the Executive Officer of the Temple 639-639

(2) Decrease of dearness allowance of labourers due to fall in cost of living index 639-642

V Government Bills—

(1) The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 2 of 1972) 646-647

(2) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendments) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972) ... 647-648

(3) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 4 of 1972) 649-650

(4) The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972). 650-685

VI Papers laid on the table of the House 686-694

Wednesday, 5th April 1972.

Condolence Resolution on the death of Thiru M. Muhammad Ismail, M. P. 695-700

Thursday, 6th April 1972.

I Questions and Answers 701-730

II Point of information *re* adjournment motion *re* incidents at Tiruppattur 730

III Announcements—

(1) Nomination of members to the House Committee ... 730-731

(2) Nomination of members to the Committee of Privileges. 731

(3) Messages from the Assembly 731-732

PAGES.

Thursday, 6th April 1972—cont.

IV Calling attention to matters of urgent public importance—
(1) Breach of bridge near Urangampatti village on the Sivagangai-Madurai Highway 732
(2) Attack on the Traffic Manager and Checking Inspectors by the Transport Employees on route No. 56-A on 24th March 1972 732

V Government Bills—
The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent Bill, 1972 (L.A Bill No. 6 of 1972) 733–764

VI Valedictory references to the retiring members 764–784

VII Papers laid on the table of the House 785–786

Friday, 7th April 1972.

I Announcements—
(1) Message from the Governor 787
(2) Messages from the Assembly 787
(3) Business transacted during the current Budget Session of the Council 850
(4) Signing of the Rules of Procedure of the Council as amended by the Select Committee, by the Hon. Chairman 851

II Statement under rule 82 of the Council Rules re grant of increased dearness allowances to Government servants and others 791-792

III Government Bills—
(1) The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) 792–793
(2) The Public Wakfs (Extension of Limitation), Tamil Nadu Amendment Bill, 1972 (L.A. Bill No. 5 of 1972) 794-795
(3) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972). 795–796
(4) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972) 796-809
(5) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1792 (L.A. Bill No. 15 of 1972) 810-814
(6) The Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972) 815
(7) The Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972) 816-820

PAGES.

Friday, the 7th April 1972—cont.

(8) The Tamil Nadu Pawn Brokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972) 821–826
(9) The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972) ... 826–830
(10) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972) 831–838
(11) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) (Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) 839–846
(12) The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) 847–848
(13) The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) 849

IV Ppapers laid on the table of the House 867–906
Index 867-975

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

Thiru Kodardas Kalidas Shah.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to I.C.S. and I.A.S. Officers and District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Public, Relations, Cinematograph Act, Passports, Newsprints Contol, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board and Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Food and Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Scheme, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMY, Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness Legislation on Chits and Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

PRINCIPAL OFFICERS.

Chairman.

THE HON. THIRU C. P. CHITRARASU.

Deputy Chairman.

THIRU G. KRISHNAMOORTHY.

Panel of Vice-Chairmen.

1. THIRU R. DHARMALINGAM.
2. THIRUMATHI S. MANJUBHASHINI.
3. THIRU S. JAYARAMA REDDIAR.
4. THIRU T. K. SHANMUGAM.

Secretary to Government.

THIRU G. M. ALAGARSWAMY, B.A., B.L.

LIST OF MEMBERS OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL WITH THEIR CONSTITUENCIES.

Serial number and name of member. (1)	Name and class of Constituency. (2)
1 Abdul Wahab, K. S. ..	State Legislative Assembly
2 Adityan, S. T., B.A.,B.L. ..	Tirunelveli Local Authorities
3 Aiyaswamy, M. ..	Nominated.
4 Arivazhagan, K., M.A. ..	Madras Chingleput Teachers.
5 Arivudai Nambi, Pulavar O.	North Arcot-South Arcot Teachers.
6 Arumugaswami, M.	State Legislative Assembly.
7 Arunachalam, T. S. ..	Do.
8 Ayyanan Ambalam ..	Madurai Local Authorities.
9 Chitrarasu, C. P. (Hon. Chairman) ..	State Legislative Assembly.
10 Clubwala Jadhav, Mary C. ..	Nominated.
11 Damodaran, A. R., B.SC. (Hons.) ..	Madras North Graduates.
12 Deivasigamani Arunachala Desikar, (Kundrakkudi Adigalar) ..	Nominated.
13 Devaraja Mudaliar, T. V. ..	North Arcot Local Authorities.
14 Dharmalingam, R. ..	Do.
15 Ganesan, Saw. ..	State Legislative Assembly.
16 Hanifa Nagore, E. M. ..	Do.
17 Isvarmurti, V., M. A., (Visva Bharathi) M. A. (Oxon.) ..	Madras West Central Graduates.
18 Janardhanam, A.P., M.A. ..	Nominated.
19 Jayarama Reddiar, S., B.A.	Ramanathapuram Local Authorities.
20 Kaliyannan, T. M., M.A., B.COM. ..	Salem - Dharmapuri Local Authorities.
21 Kattoor Gopal	State Legislative Assembly.
22 Kolappa, C. R.	Do.
23 Krishnamoorthy, G. (Deputy Chairman).	Thanjavur-Tiruchirappalli Teachers.

Serial number and name of member. (1)	Name and class of Constituency. (2)
24 Krishnaswamy Naidu, R. ..	State Legislative Assembly.
25 Lakshmanan, S.V., B.A. ..	Do.
26 Mani, K.S. ..	Thanjavur Local Authorities.
27 Manjubhashini, S. ..	Nominated.
28 Muthu, S. ..	State Legislative Assembly.
29 Muthu, P. T. ..	Salem-Dharmapuri Local Authorities.
30 Muthuswamy, S.	Salem-Dharmapuri-Coimbatore.Nilgiris Teachers.
31 Natarajan, N. V. (Minister for Labour.) ..	State Legislative Assembly.
32 Narayanaswamy, D.V. ..	Nominated.
33 Narayanaswamy, P. ..	State Legislative Assembly.
34 Narayanaswamy, S. ..	Madras District Graduates.
35 Neela Narayanan	Nominated.
36 Parangusam, G. (Government Whip).t	State Legislative Assembly.
37 Ponnappa Naidu, A. ..	Do.
38 Ponnuvelu, T.K., B.A. ..	Do.
39 Rajagopal, C.V. ..	Do.
40 Rajah Iyer, M. M.A., L.T. ..	Madurai-Ramanathapuram Teachers.
41 Rajaram, K. (Leader of the Opposition).	Madurai Local Authorities
42 Rajamanickam, S. A. ..	State Legislative Assembly.
43 Ramakrishna Achari, K. ..	Do.
44 Raman Nair, R. ..	Do.
45 Ramanathan, M.	Coimbatore-Nilgiris Local Authorities.
46 Ramasamy Padayatchi, S. S.	South Arcot Local Authorities.
47 Rani Annadurai ..	Madras Local Authorities.
48 Sambasivam, R. ..	South Arcot Local Authorities.
49 Sankaralingam Pillai, M. M.A..	Tirunelveli-Kanyakumari Teachers.

Serial number and name of member. (1)	Name and class of Constituency. (2)
50 Santosham, D., M.A., B.L. ..	Madras South Graduates
51 Sengottuvelappa Gounder, S. C.	Coimbatore - Nilgiris Local Authorities.
52 Shanmugham, T. K. ..	Nominated.
53 Srinivasam Pillai, T.S. ..	Tiruchirappalli Local Authorities.
54 Subbiah, T. K.	Do.
55 Sundaresa Thevar, N. ..	Thanjavur Local Authorities.
56 Swaminathan, G., B. PHARM.	Madras East Central Graduates.
57 Thangapandian, V., B.A., B.T.	State Legislative Assembly.
58 Thennarasu, S. S.	Nominated.
59 Thirugnanasambandam, P. ..	Ramanathapuram Local Authorities.
60 Vasantha Pai, G. ..	Madras District Graduates.
61 Vellapandian, S.	Tirunelveli Local Authorities.
62 Venga, V.	Chingleput Local Authorities.
63 Wilson Apollos, N. ..	Kanyakumari Local Authorities.

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Monday, the 27th March 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. CHAIRMAN (The Hon. Thiru C. P. CHITRARASU) in the Chair.

1. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Pre-University Examinations

310 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the state percentage of passes in the Pre-University Examinations held during the last three years;

(*b*) whether the same is lower in 1971 than in the previous years; and

(*c*) if so, the steps taken to improve the percentage of passes?

புகுமுக வகுப்புத் தேர்வுகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த மூன்றாண்டுகளில் நடந்த புகுமுக வகுப்புத் தேர்வுகளில் மாநிலத்தில் தேறியவர்களின் சதவீதம் யாது?

(இ) அந்த சதவீதம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் 1971-ல் குறைவாக உள்ளதா?

(உ) ஆம் எனில், தேறியவர்களின் சதவீதத்தை உயர்த்த எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), (இ) & (உ) அவைகள் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

[27th March 1972

Festival Advance for Teachers

* 311 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that most of the teachers are not able to get festival advance due to the orders in force to the effect that festival advace would be sanctioned only if six months basic pay has accrued in the Provident Fund Accounts as the basic pay of the teachers has been enhanced under the revised pay scales; and

(b) if so, whether the Government propose to modify the said order?

ஆசிரியர்களுக்கு விழா முன் பணம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிய ஊதியவிகிதப்படி ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் உயர்ந்துள்ள நிலையில், சேமிப்பு நிதியில் 6 மாத அடிப்படை ஊதியத் தொகை இருந்தால் தான் விழா முன் பணம் பெறலாம் என்ற உத்தரவின் காரணமாக பெரும்பாலான ஆசிரியர்கள் முன் பணம் பெறமுடியவில்லை என்பது உண்மையா?

(இ) அப்படியானால், அவ்வுத்திரவை மாற்றும் உத்தேசம் அரசுக் குண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆசிரியர்களின் வைப்புத் தொகை கணக்கில் 4 மாத ஊதியத்திற்குச் சமமான தொகை இருப்பின் விதிகளைத் தளர்த்தி, முன்பணம் வழங்கும் அதிகாரம் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பண்டிகைச் செலவு களுக்கும், கைத்தறித்துணிகளை வாங்குவதற்கும் வழங்கப்படும் முன் பணத்தை பொறுத்தவரை, குறைந்தபட்ச வைப்புத் தொகை மூன்றுமாத ஊதியத்திற்கு சமமானதொகையாக குறைக்கப்பட்டுள்ளது.

@ Printed as Appendix I on page. 86

27th March 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆறு மாத அடிப்படை ஊதியத் தொகை என்பது சாதாரணமாக ஒரு ஆசிரியர் ஓராண்டு புரபேஷனில் இருந்து, அதற்குப் பிறகு அவர் பர்மனென்ட்டாகி ஏழாண்டு கள் ஆசிரியர் பணி புரிந்தால் தான், இந்த அடிப்படை ஊதியத் தொகை வரும் என்று சொல்லுகிறார்கள். அந்த ஏழாண்டுகளுக்குள்ளாக தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு முன்பணம் பெற முடியாது என்று சொல்லுகிறார்கள். இதை அரசு அறிந்து பரிசீலித்து முடிவு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர் களே, இந்த வகையான சூழ்நிலை ஏற்படக் கூடாதுதான். கூடுமானவரை கடன் வாங்காத சூழ்நிலையை வைத்திருந்தால் நல்லது. ஆகவே இந்த வகையில் 6 மாதம் என்பதை 3 மாதமாகக் குறைத்திருக்கிறோம். இன்னும் குறைக்க இயலுமா என்பது ஆராயப்பட வேண்டிய ஒரு விஷயம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆசிரியர்கள் சம்பளம் 100 ரூபாய் என்று இருந்தாலும் கூட, இந்தப் பண்டிகைகளுக்காக முன் பணம் இரண்டாண்டுகள் வேலை செய்தாலும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏழாண்டுகள் முன்பணம் பெற முடியாது என்ற நிலை சங்கடத்தை உருவாக்குகிறது என்பதை அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர் களே, இது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

திரு. எம். ராஜா அய்யர்: இம்மாதிரியான முன் பணங்கள் இந்த பிராவி டென்ட் பண்டிலிருந்து வாங்க வேண்டும் என்பது முன்பு இருந்த நிலையாக இருக்கும். இப்பொழுது அரசாங்கத்தாலேயே அந்த ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கப்படுவதால், பிற அரசாங்க ஊழியர்களுக்கொப்ப அவர்களுக்கு இந்த முன் பணத்தைக் கொடுத்து மாதாமாதம் அந்த அதிகாரி களே சம்பளத்திலே பிடித்துக்கொண்டு விடலாம். ஆக 3 மாதம், ஆறு மாதம் என்று இல்லாமல், அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய சம்பளத் திலிருந்து மாதாமாதம் பிடித்துக்கொள்ளக் கூடிய நிலையை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்றத் துறைகளில் எந்த அளவுக்கு முன் பணம் வழங்கப்படுகிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அதையும் ஆராய்ந்து ஒத்த அளவுக்கு வைக்க முடியுமா என்பதைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

[27th March 1972

Medical Identity Cards to Teachers

* 312 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that in every ward in Government Hospitals the teachers are asked to produce every-time certificate from the school correspondent ; and

(*b*) if so, whether the Government will make arrangements to supply Medical Identity Cards to teachers also as in the case of Government employees?

ஆசிரியர்களுக்கு மருத்துவ அடையாளப் புத்தகம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவ மனைகளில், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பிரிவிலும் தனியார் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து பள்ளி மேலாளர் சான்றிதழ் கேட்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால், அரசு ஊழியர்களுக்கு உள்ளது போன்று இவ் வாசிரியர்களுக்கும் மருத்துவ அடையாளப் புத்தகம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். இப் பொருள் குறித்து குறிப்புரை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்கப் பட்டுள்ளார். அவரின் குறிப்புரை கிடைத்ததும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Pension

* 313 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether orders have been passed by the Government increasing the minimum pension in the case of retired teachers to Rs. 50; and

(*b*) if not, when such orders can be expected?

27th March 1972]

ஓய்வூதியம்,

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் குறைந்த அளவு ஓய்வூதியத்தை ரூ. 50-க்கு உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளதா ?

(இ) இல்லையெனில், எப்போது அத்தகைய ஆணைகள் எதிர்பார்க்கலாம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) சாதாரண ஓய்வூதியம் குறைந்தபட்சம் மாதத்திற்கு ரூ. 30-ம் குடும்ப ஓயவூதியம் குறைந்த பட்சம் மாதத்திற்கு ரூ. 50. இந்த வரம்புகளை உயர்த்த கோரிக்கை இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களில் இம்மாதிரியாகக் குறைந்த ஊதியம் ரூ. 45 ஆக இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே 20 ஆக இருந்தது 30 ஆக உயர்ந்திருக்கிறது. இப் பொழுது இந்த ஊதியத்தை 50 ஆக உயர்த்துவது பற்றிப் பரிசிலனை இல்லை. தனியாகக் கோரிக்கை வருமானால், அதுபற்றிப் பரிசிலிக்கப்படும்.

Idols

* 314 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of idols from the treasure-trove finds acquired by the Government Museum, Madras during the last fifteen years; and

(*b*) the number of idols, out of the same which remain unexhibited there till date ?

[27th March 1972

சிலைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த 15 ஆண்டுகளில் சென்னை, அரசு பொருட்காட்சிச் சாலையால் பெறப்பட்ட புதைபொருள் சிலைகளின் எண்ணிக்கை யாது?

(இ) இவைகளில், இத்தேதிவரை பொருட்காட்சி சாலையில் காட்சிக்கு வைக்கப்படாமல் உள்ள சிலைகளின் எண்ணிக்கை யாது?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (*a*) 390 idols and utensils big and small have been acquired during the past 15 years.

(*b*) 8 pieces which are unique from the point of view of Chronology and Iconography are exhibited permanently in the Gallery.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே கடந்த 15 ஆண்டுக் காலத்திலே 380 புதை பொருள்கள் இங்கு வந்தன என்றும், அவற்றில் 8 தான் வைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட பாக்கியுள்ள 372 என்ன செய்யப்பட்டிருக்கிறது, எந்த நிலையிலே உள்ளது என்று அறிய விரும்புகிறேன். பாக்கியுள்ளதை அங்கு வைப்பதனால், அங்கு இருக்கிற இடம் பற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மொத்தப் பொருள்கள். 380 அல்ல 390 அவற்றில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்ற அடிப்படையில் 8 பொருள்களை ஐகனோலஜி என்று சொல்லப்படுகிற அடிப்படையில் தேர்ந்தெடுத்து, அந்தச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மற்றவைகள் இதற்கென்று ஒரு தனி இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை காட்சிப் பொருளாக, மக்கள் வருகிற போகிற இடத்திலே, தனித் தன்மை பொருந்தியவைகளை தனியாக எடுத்து வைத்திருக்கிறோம். மற்றவைகளெல்லாம் கூட மாணவர்களுக்குப் பயன் படத்தக்க அளவிலேயும் ஆராய்ச்சி அறிஞர்களும் காண வேண்டுமென்று வசதி செய்யக் கூடிய அளவிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில வெளியிடங்களில், அதாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் போதும் அல்லது வேறு சில பொருட்காட்சிகள் நடைபெறும்போதும் எடுத்துச் செல்லப்பட்டு, காட்சிப் பொருளாக வைக்கப்பட்டு மீண்டும் திரும்பக் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஆனால் எப்போதும் மக்கள் பார்க்கத்தக்க அளவில்

27th March 1972]

இருக்கின்ற எல்லாப் பொருள்களையும் வைக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒவ்வொரு பொருளின் தனித்தன்மைக்கேற்றவாறு ஒவ்வொரு பொருட் காட்சியில் இருக்க வேண்டிய அடிப்படையில் வைக்கப்படுகிறது. ஆனால் மற்றப் பொருள்கள் எல்லாம் பாதுகாக்கப்பட்டு, அவை பார்வையிடுவதற்கு ஏற்ற வகையிலும், ஆராய்ச்சிக்குத் தகுந்த வகையிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சென்னை அரும்பொருட்காட்சி சாலையில் இட வசதி போதவில்லை. இன்னும் கொஞ்சம் பெரிதாக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அரசு தக்கபடி பரிசீலித்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்தில் தோண்டியெடுக்கப்பட்ட மிகச் சிறந்த விக்கிரகங்கள் எல்லாவற்றையும் அந்தப் பொருட்காட்சி சாலையிலே வைக்காமல் 'கோல்ட் ஸ்டோரேஜ்' (Cold Storage) என்ற அளவிலே ஒரு இருட்டறையில் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே நல்லமுறையிலே மக்கள் காணவேண்டிய அவசியம் உள்ளதால், அங்கு இட வசதி போதாது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இட வசதியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த இட வசதியைப் பெருக்க வேண்டுமென்று அரும்பொருட் காட்சி சாலையின் இயக்குநர் அவர்கள் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. அதற்கு ஓளவு நிதி ஒதுக்க வேண்டுமென்று முயன்று வருகிறோம். இன்னும் இட வசதி பெருகுமானால், அதிகமான பொருள்களைக் காட்சிப் பொருளாக வைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Icons

* 315 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the famous icons unearthed in Thiruvengadu village, Thanjavur district, during 1967 and which are under exhibition at the Art Gallery, Thanjavur for the past four years are being proposed to be shifted to Government Museum, Madras; and

(*b*) if so, the reason therefar?

[27th March 1972

கடவுள் சிலைகள்

திரு. ஜீ சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-ல் தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு கிராமத்தில் தோண்டியெடுக்கப்பட்ட புகழ்பெற்ற கடவுள் சிலைகள், கடந்த 4 ஆண்டுகளாக தஞ்சாவூர், கலைக்கூடத்தில் காட்சிப் பொருள்களாக இருப்பதை சென்னை அரசு பொருட்காட்சிச் சாலைக்கு மாற்றக் கருதப்பட்டு வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (*a*) Yes.

(*b*) As per the Treasure Trove Act, the Madras Museum has the first claim of Treasure Trove articles declared ownerless. The Thanjavur Art Gallery requested that pieces referred to in the question may be given to them. The Director of Museums stated that the Madras Museum is better equipped to preserve these rare specimens, identify them properly and scientifically and it will be helpful to research scholars. The Government considered the recommendation and ordered that the Treasure Trove find be handed over to Government Museum, Madras.

திரு. ஜீ. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டிலே தஞ்சை மாவட்டத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட மிகச் சிறந்த சிலைகளான 14 திருவெண்காடு சிலைகள் பெறப்பட்டன. அவற்றில் 4 சிலைகள் மட்டும் தஞ்சையிலே பொருட்காட்சிக்குக் கொடுத்துவிட்டு பாக்கியுள்ளதையெல்லாம் சென்னைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். 13 சிலைகள் கோல்ட் ஸ்டோரேஜில் (cold storage) இருக்கிறதே தவிர, அவை வெளியே காட்சிக்கு வைக்கப்படவில்லை. இந்த நிலையிலே மிக மூக்கியமான இராச இராச சோழன் காலத்திய சிலைகளைத் தஞ்சையிலேயே வைக்க வேண்டுமென்று பேரறிஞர்கள் பலர் அபிப்பிராயப்படுவதனால், தஞ்சை மாவட்டத்திலேயே வைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தச் சிலைகள் தஞ்சையிலேயே இருக்க வேண்டுமென்று தஞ்சைக் கலைக்கூடத்தார் விரும்பினர்கள். ஆனால் அதனுடைய பழங்காலச் சிறப்பினுடைய அடிப்படையில் அது பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தாலேயே அவைகள்

27th March 1972]

இங்கே இருக்கின்றன. அவையெல்லாம் முறைப்படி வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்திலேயே இந்த அரும்பொருட்காட்சிச் சாலையில் இருக்கின்றன. ஆகவே, அதனுடைய முக்யத்துவம் கருதி இயக்குனர் கருத்து தெரிவித்ததனாலேயே இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இட வசதி காரணமாக அவை இங்கே கொண்டுவரப்பட்டிருக்குமானால், மிகமிக முக்யத்துவம் அல்லாத அளவுக்கு இருக்குமானால், அது ஆராயப்பட்டு, அந்தச் சிலைகளைத் தஞ்சைக்கே திருப்ப இயலுமா என்று வேண்டுமானால் ஆராயலாம். இதுபற்றி அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சையிலுள்ள அந்தப் பொருட்காட்சி சாலையும் அரசாங்கத்தைச் சேர்ந்தது தான். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மிகச் சிறந்த அருமையான சிலைகளை வெளியிலிருந்து வருகிறவர்கள் தஞ்சை மாவட்டச் சூழ்நிலையிலேயே பார்க்க விரும்புகிறார்கள். அது மட்டுமல்லாமல், அங்கேயிருந்து எடுத்துவந்த அழகான சிலைகளையெல்லாம் அழகாகக் கூட வைக்காமல், வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தச் சிலைகள் தஞ்சை மாவட்டத்திலேயே இருக்க வேண்டிய அவசியத்தை அமைச்சரவர்கள் உணருவார்களா ? அவை இங்கே இருக்க வேண்டிய அவசியம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூன்று காரணங்களுக்காக அவற்றை இங்கே கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆராய்ச்சிக்கு உரியன, மாணவர்களுக்குப் பயன்படத்தக்கன, அரும் பெரும் சிலைகள் என்று ஆராய்ந்து, 'ப்ரொடக்ஷன் அண்டு பிரசர்வேஷன்' ஆகியவைகளுக்காக என்றெல்லாம் ஆராய்ந்து பார்ப்பதற்கு அறிஞர்கள் இங்கே இருக்கிறார்கள். தஞ்சை அரும்பொருட்காட்சிச் சாலையிலிருந்தால் பயன்படுமா, இங்கேயிருந்தால் பயன்படுமா என்றெல்லாம் ஆராய்ந்த பிறகு தான், அவற்றை இங்கே வைத்திருக்கிறார்கள். அது இப்போது பயன்படுமா என்று வேண்டுமானால் ஆராய்ந்து அது பயன்படாவிட்டால், தேவையானவற்றை வைத்துக் கொண்டு அல்லாதனவற்றை தஞ்சை போன்ற அரும்பொருட்காட்சிச் சாலைகளுக்கே திருப்பியனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

MR. CHAIRMAN : How many supplementary questions is the hon. Member putting?

THIRU G. SWAMINATHAN : One more, Sir. தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலிருந்து எடுத்த சிலைகளைத் தான் அங்கே வைக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஆராய்ச்சியாளர்கள் தஞ்சைக்குத்தான் அதிக அளவில் வருகிறார்கள். எனவே, அந்தச் சிலைகள் தஞ்சைச் சுற்றுப்புறச் சூழ்நிலையில்

இருந்தால்தான், அதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு வசதியாக இருக்கும். அதுபற்றிய தகவல்கள் அங்கேயுள்ள பதிவேட்டில் பார்த்தால் தான் தெரியும். இதுபற்றித் தஞ்சை மாவட்ட அதிகாரிகள் எழுதியிருக்கிறார்கள் அந்தச் சிலேகூட நல்லமுறையில் வைக்காமல் இருட்டறையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால், அவருடைய விருப்பத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், அதனுடைய இன்றியமையாத தன்மையை அந்தத் துறையிலுள்ள வல்லுனர்கள் தான் தெரிவிக்க வேண்டும். வல்லுனர்கள் தெரிவித்த கருத்தின்படி அவை வகைப்படுத்தப்பட்டு, அவை அங்கே இருப்பதா, அல்லது இங்கே இருப்பதா என்று முடிவெடுத்து, அந்த அடிப்படையில் தான் அவை இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எப்படியாவது பயன்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதுபற்றி அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

Students of Raja Serfoji (Government) College

* 316. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that some men students of Rajah Serfoji (Government) College misbehaved towards a lady student in the College Campus during the last week of October 1971;

(b) whether the same was followed by fighting between two groups of students on the subsequent day; and

(c) if so, the action taken on the boys who have misbehaved?

இராஜா சரபோஜி (அரசு) கல்லூரி மாணவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 அக்டோபர் கடைசி வாரத்தில் இராஜா சரபோஜி (அரசு) கல்லூரி மாணவர்கள் சிலர் கல்லூரி சுற்றுவளவில் ஒரு மாணவியிடம் ஒழுங்கீனமாக நடந்துகொண்டனர் என்பது உண்மையா?

(இ) இதைத் தொடர்ந்து, மறுநாள் மாணவர்கள் இரு சாராருக்கிடையே சண்டை ஏற்பட்டதா?

(உ) ஆமெனில், ஒழுங்கீனமாக நடந்து கொண்ட மாணவர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ)வும் (இ)யும் 27-10-1971 அன்று முதல் ஆண்டு மாணவிகளை இரண்டாவது ஆண்டு மாணவர்கள் கேலி செய்ததாகக் கூறப்பட்டு அதனால் அறிவியல் முதல் ஆண்டு மாணவர்களுக்கும் இரண்டாவது ஆண்டு மாணவர்களுக்கும் இடையே சிறிய சலசலப்பு ஏற்பட்டது.

(உ) எதிர்சாரார்கள் ஆத்திர மூட்டினர் என்று இரு சாரார்களும் குற்றம் சாட்டியதால், பதட்ட நிலையைச் சமாளிக்கவும் சுமுகமான சூழ் நிலையை உருவாக்கவும் வகுப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இப்பொழுது நிலைமை சரியாகிவிட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாணவிகள் கேலி செய்யப் பட்டார்கள் என்று சொன்னார்கள். மாணவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று அங்கேயிருக்கிற பேராசிரியர்களும், மாணவர்களில் 90 சதவிகிதத்தினரும் முதல்வரிடத்தில் சொன்னார்கள். அதன்பேரில் எந்தவிதமான விசாரணையும் செய்யப்பட வில்லை. இதனால்தான் மாணவர்களில் ஒரு பகுதியினருக்கும் இன்னொரு பகுதியினருக்கும் தகராறு ஏற்பட்டது. அதனால் தான் மூன்று நாட்கள் கல்லூரி மூடப்படும் என்று இயக்குனரால் தெரிவிக்கப்பட்டதா என்பதை அரசு அறியுமா? ஒழுங்கீனங்கள் நடைபெற்றதற்கு எதாவது விசாரணை நடைபெற்றதா என்பதையும் அறிய விரும்புகிறேன். விசாரணை நடைபெறுதது தஞ்சையில் இதுபோன்ற இன்னும் ஒழுங்கீனங்கள் நடைபெற காரணமாக ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவலின்படி, மாணவர்களில் இரு சாராருக்கிடையே சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. பிறகு, முதல்வரும், பேராசிரியர்களும், மாணவர்களும் ஓரளவு சமாதனப்படுத்தி நிலைமை சுமுகமாக சமாளிக்கப் பட்டது. இதனால் 27, 28, 29-10-1971 ஆகிய நாட்களில் கல்லூரி மூடப்பட்டு. பதட்ட நிலைமை நீங்கிய பின்னால், திறக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு 31-10-1971 அன்று கல்லூரி திறக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. இரு சாராரும், ஒருவர் மீது மற்றொருவரும், மற்றவர் மீது இவரும் குற்றச்சாட்டு களைச் சாட்டியிருக்கிறார்கள். இரு சாராரும் குற்றச் சாட்டுகளைச் சாட்டி யிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆக, "விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்கிற அளவுக்கு சுமுகமாக சூழ்நிலைகள் ஏற்பட்ட தன் காரணமாக" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, விசாரணை செய்து முடிவு இங்கே அறிவிக்கப்படவில்லை. அதற்கான தகவல்கள் இன்னும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [27th March 1972

தேவையென்றால், தனிக் கேள்வி போட்டால், அத்தகைய தகவல்களைத் திரட்டித் தருகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தவறான முறையில் மாணவர்கள் நடந்திருக்கிறார்கள். நடந்திருக்கிற சம்பவங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக, கல்லூரியை மட்டும் மூடிவைத்துவிடுவது இன்னொரு சமயம், மாணவர்கள் மாணவிகளை வம்பு செய்ய ஏதுவாகும். தவறு செய்த மாணவர்கள் கண்டிக்கப்படவில்லை என்று சொல்லும்போது, அப்படிச் செய்யாமல் கல்லூரியை மட்டும் மூடி வைத்ததன் காரணம் என்ன? இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் பிற்பாடும் நடைபெறக் காரணமாக இருந்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாணவர்களைப் பொறுத்து, இப்படிப்பட்ட சமயங்களில் அப்படி நடவடிக்கை எடுப்பதும் மேலும் சூழப்பரும் தகராறுகளும் நடப்பதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில், எந்தச் சூழ்நிலையில் இந்த நிலை எடுக்கப்பட்டது, எந்தச் சூழ்நிலையில் இந்த முடிவுக்கு வந்தார்கள் என்பதை விசாரித்து அறிந்து அறிவிக்கிறேன். கல்லூரிகளில் சில சமயங்களில் இப்படி நடந்து விடுகின்றது. எனவே, எத்தகைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன என்று அறிந்து மேற்கொண்டு நடவடிக்கை தேவைப்படுமானால் எடுக்கலாம்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவரவர்களே, இந்த மாதிரிச் சம்பவங்கள் ஏற்படாமலிருப்பதற்கு ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்ப்பதில்லை என்று வருங்காலத்திலாவது முடிவெடுத்து இம்மாதிரியான இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுக்க முடியுமா என்று இந்த அரசு ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தக் காரணமாக இல்லை. அப்படியிருந்தாலும் கூட பெண்கள் கல்லூரிக்கு எதிரிலேயே இப்படி நடக்கின்றன. ஆகவே, சில சிரமங்கள் இருக்கின்றன. இது குறித்து இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. புகுமுக வகுப்புகளில் மாணவிகளைச் சேர்க்க வேண்டாம் என்று வைத்திருக்கிறது. பி.ஏ., பி.எஸ்.சி. ஆகியவற்றில் இருவரும் சேர்ந்தே படிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருந்தாலும் கூட, பிற்காலத்தில் சேராமலிருக்கிற சூழ்நிலை இருக்கிறதா என்றால் ஏதுமில்லை. இத்தகைய சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இம்மாதிரிப் பிரச்னைகள் நாளாவட்டத்தில் தீர்க்கவேண்டியவைகளாக இருக்கின்றன என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

27th March 1972]

Law College, Madras.

*317 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of posts of full-time and part-time Lecturers to be filled up in Law College, Madras;

(b) the period for which they were kept unfilled; and

(c) the reasons for the delay in filling them up?

சென்னை சட்டக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சட்டக் கல்லூரியில் முழு நேர, பகுதிநேர விரிவுரையாளர் பதவிகள் எத்தனை நியமனம் செய்யப்படாமல் காலியாகவுள்ளன?

(இ) எவ்வளவு காலமாக அப்பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன?

(உ) அப்பதவிகளுக்கு நியமனம் செய்வதில் உண்டான தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மூன்று இடங்கள்.

(இ) இவை 1-11-1971 லிருந்து காலியாக உள்ளன.

(உ) முழு தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள் பெறுவது அரிதாயிருப்பதால் இப்பதவிகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நவம்பர் 11-ஆம் தேதி அளவில் முழுநேர விரிவுரையாளர் மூன்று பேரும் பகுதிநேர விரிவுரையாளர் 17 பேர்களும் எடுக்கப்பட்டிருப்பதற்கு விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறதா? இவர்கள் எடுக்கப்படாத காரணத்தால், இரண்டு டேர்ம் என்று சொல்லக் கூடிய ஆறு மாதங்களுக்கு மாணவர்களுக்கு வகுப்புகள் நடக்கவில்லை என்று கூறுகிறார்கள். அங்கே ஆறு மாதகாலத்திற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முழு நேர விரிவுரையாளர்கள் 15 பேர்கள் இருக்கிறார்கள். பகுதி நேர விரிவுரையாளர்கள்

[27th March 1972

47 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 3 முழுநேர விரிவுரையாளர்களும், 3 பகுதி நேர விரிவுரையாளர்களும் 1-11-1971 முதல் நிறைவு செய்யப்படாமல் இருக்கிறார்கள். தகுதிகளின் பட்டியலின் படி அவர்கள் எம்.எல். அல்லது பி.எல்.-இல் செகண்ட் கிளாஸ் பெற்று 5 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்தத் தகுதி உடையவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஏற்கனவே இருந்த பட்டியலில் உள்ளவர்களைப் போட்டுக்கொள்ளட்டுமா என்று இயக்குனர் அவர்கள் கேட்டார்கள். ஆனால், பணித் துறையைச் சேர்ந்தவர்களை எடுக்கக்கூடாது என்றும், விளம்பரப்படுத்தித் தான் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இந்தக் காரணங்களால் தான் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதுபற்றிப் பல்கலைக் கழகத் தேர்வுக் குழுவிற்கும் எழுதியிருக்கிறோம். தேர்வின் கீழ் எடுக்கப்படாவிட்டால், விளம்பரப்படுத்தித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அடுத்த சூனிலிருந்து நிரப்பப்பட வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலையான அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதனால் வகுப்புகள் நடைபெறுமல் இருக்கவில்லை. மூன்று முழுநேர விரிவுரையாளர்களும், 47 பகுதி நேர விரிவுரையாளர்களும்—மூன்று பேர்களைத் தவிர—இருக்கிறார்கள். நிலையாக அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. நிரப்பப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, is it not a fact that the Tamil Nadu Public Service Commission has held an interview and already some persons who are III Class degree holders have been selected for these posts?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தேர்வுக் குழுவினர் தகுதி பற்றி, அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறவர்கள் தகுதி பற்றி இங்கே விமரிசிக்கக் கூடாத நிலையில் இருக்கிறோம். அம்மாதிரி அவர்களுடைய தகுதிபற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்க முடியும்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I take it that those persons who have been selected and who are not qualified will not be accepted by the Government?

MR. CHAIRMAN : The hon. Member must put it as a separate question.

27th March 1972]

State award for best teachers.

* 318 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether teachers working in colleges are being considered for annual State Award for best teachers; and

(b) if not, the reason therefor?

சிறந்த ஆசிரியர்களுக்கு அரசுப் பரிசு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறந்த ஆசிரியர்களுக்கு ஆண்டு அரசுப் பரிசு வழங்குவது தொடர்பாக கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையும் தெரிந்தெடுப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) செலவில் சிக்கனத்தை மேற்கொள்வது அவசியமாகியுள்ள சூழ்நிலையில் இந்த யோசனை அவசரமானதாகக் கருதப்படுவதற்கில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்தப் பரிசு வழங்குகிறார்கள். அவ்வாறு பரிசு வழங்குவதன் காரணமாக ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்கம் ஏற்படுகிறது. ஆகவே கல்லூரிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் இதுமாதிரி அரசு ஒரு பரிசுத் திட்டத்தை வழங்கி கௌரவிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய அளவுக்கு எவ்வளவு செலவாகும் என்று அரசு கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவ்வப்போது அவர்களுடைய படிப்பு சொல்லிக் கொடுக்கிற திறன் இவைகளை ஆராய்வதற்கு ஆய்வாளர்கள் இருக்கிறார்கள், டி.இ.ஓ. இருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய தகுதி, திறமை இவைகளைக் கருத்திற்கொண்டு அவர்களின் பெயர்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய வகுப்பில் சுற்றுக் கொடுக்கும் திறமையை ஆராய்வதற்கு முடியாது. வேண்டுமானால் முதல்வரைக் கேட்டு அவர்களைப் பொறுத்த வரையில் ஒரு 'பேனல்' அனுப்பச் சொல்லலாம்.

[27th March 1972

அந்த உ.உ.கயில் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஓய்வு பெற்று வருகிறவர்களின் திறமை, ஆண்டு, பெருமை, புகழ், இவைகள் அடிப்படையில் அவர்களை ஊக்குவிக்கிற முறையில் சில பரிசுகளை வழங்கலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், பணியாற்றுபவர்களில் சிறந்தவர்களை, துவக்கப் பள்ளிகளிலே ஒரு 75 பேரையும், உயர்நிலைப் பள்ளிகளிலே ஒரு 75 பேரையும் தேர்ந்தெடுக்கிறார்கள். கல்லூரிகளில் ஓய்வு பெற்று வருபவர்களைத் தேர்ந்தெடுக்க திட்டம் வகுத்து அதற்கென ரூ. 20,700-க்கு திட்டம் தந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் பரிசிலிக்கப்பட்டு ஓரளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது கைகூடி செம்மையாகும் சூழ்நிலையில் 'டெபர்டு' என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

Coimbatore West District Development Council

* 319 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Coimbatore West District Development Council has passed any resolution requesting the Government to allot a portion of the surplus income derived as a result of the suspension of prohibition ; and

(b) if so, the decision taken by the Government thereon ?

கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட வளர்ச்சி மன்றம்

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுவிலக்கை அமுல் படுத்தாததால் கிடைக்கும் உபரி வருமானத்தில் ஒரு பகுதியை பஞ்சாயத்துக்களுக்கு வழங்கவேண்டுமென்று கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசாங்கம் எடுத்துள்ள முடிவென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மேற்படி வருமானத்தில் ஒரு பகுதியை பஞ்சாயத்துக்களுக்கு வழங்கவேண்டுவது அவசியமில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

27th March 1972]

New Science Books in Tamil

* 320 Q.—THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have any proposal to induce the Tamil Professors to secure Science degrees and also the Science Professors to secure degrees in Tamil Language and Literature so as to enable the publication of new Science Books in Tamil ?

தமிழில் புதிய அறிவியல் நூல்கள்

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழில் புதிய அறிவியல் நூல்கள் படைக்கும் சக்தியைப் பெற தமிழ்ப் பேராசிரியர்களை அறிவியல் துறையிலும், அறிவியல் பேராசிரியர்களைத் தமிழ்த் துறையிலும் படித்து பட்டங்கள் பெறத் தூண்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆலோசனை கருத்தில் கொள்ளப்படும்.

Theft from Foreign Tourists

* 305 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the kit of the foreign tourists was stolen on or about 14th August 1971 at Paramakudi, Ramanathapuram district ; and

(b) if so, the details thereof?

வெளி நாட்டிலிருந்து சுற்றுலா வந்தவர்களிடம் களவு

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் 14-8-1971-ஆம் நாள் அளவில் வெளிநாட்டில் இருந்து சுற்றுலா வந்தவர்களின் பொருள்கள் களவாடப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[27th March 1972

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இருவருக்குச் சொந்தமான படகு ஒன்று காணாமற் போய்விட்டது என்று புகார் செய்ததின் பேரில் மாஹே காவல்நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவுசெய்யப்பட்டு புலனுய்வு செய்யப் பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு சிவகங்கை சப் மாஜிஸ்டிரேட் முன்பு வழக்குத் தொடுக்கப்பட்டது. 14—12—1971 ஆம் நாள், அவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஒரு மாதம் கடும் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

திரு. எம். அய்யாசாமி: தலைவர் அவர்களே, அந்தப் பொருள் கைப்பற்றப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காணுமல் போனது ரூ. 210, அதில் செலவிட்டது போக மிச்சம் ரூ. 35 கைப்பற்றப்பட்டது.

Police Cell under the Slum Clearance Board

* 306 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Police Cell has been placed under the control of the Slum Clearance Board; and

(b) if so, the details thereof?

குடிசை மாற்று வாரியத்தின் கீழ் காவற் பிரிவு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிசை மாற்று வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காவற் பிரிவு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

27th March 1972]

Provident Fund

* 307 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the rate of interest allowed by the State Government on Provident Fund accumulation of its employees; and

(b) whether there is any proposal to increase the same?

வருங்கால வைப்பு நிதி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசுப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி சேமிப்பு களின் மீது அரசு அனுமதித்துள்ள வட்டி வீதம் யாது?

(இ) இதைக் கூடுதலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 1971-72 ஆம் ஆண்டுக்கு ஒப்பளிக்கப்பட்ட வட்டி வீதங்களாவன—

(1) ரூ. 10,000 வரை 5.70 சதவீதமும்;

(2) ரூ. 10,000-க்கு மேல் 5 சதவீதமும் ஆகும். ஊதியங்களில் 6 சத வீதம் கட்டாயப் பங்குத் தொகைக்கு மேல் கூடுதலாக அளிக்கப்படும் பங்குத் தொகையின் மேல் 1-4-1971 முதல் 8 சதவீதம் வட்டி கொடுக்கப்படும். அவ்வாறு கூடுதலாக அளிக்கப்படும் குறைந்த அளவு பங்குத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 ஆக இருக்க வேண்டும்.

(இ) இதனை மேலும் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, உதவி பெறும் ஆசிரியர் களுடைய இம்மாதிரியான பிராவிடண்டு பண்டு நிதிக்கு இப்போது கொடுக்கக் கூடிய வட்டிவீதமானது அரசு கொடுக்கும் வட்டிவீதத்தைவிட மிகக் குறை வானது என்பதை அரசு அறியுமா? ஆகவே இப்போது இருக்கின்ற 'டீச்சர்ஸ் பிராவிடண்டு பண்டு' நிதி இருப்பது தேவை தானு? அதை ஒழித்து விட்டு இம்மாதிரியான கவர்மெண்டு பிராவிடண்டு பண்டு திட்டத்தில் சேர்க்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது பல்வேறு நிலைகளை ஆய்ந்து சிந்தித்து அதன் பிறகு எடுக்க வேண்டிய முடிவாகும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு இருக்கும் வருங்கால வைப்பு நிதியின் கணக்குகள் முறையான வகையில் இலலையென்று அறிகிறேன். அவைகளை ஒழுங்குபடுத்த பாஸ் புக் கொடுக்க பதற்கு செயல்முறைத் திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபோன்ற ஒரு முறையைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

Antique Theft

* 308 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether antique thefts are being maintained in the Modus Operandi Bureau as a separate category of crime by the State Police Department; and

(*b*) if not, the reason therefor?

பழங்கலைப் பொருட்கள் களவு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பழங்கலைப் பொருட்கள் களவுகளை மாநிலக் காவல் துறை செயல் முறைக் கழகத்தில் (Modus Operandi Bureau) தனிவகைக் குற்ற மாகப் பதிவு செய்து வருகின்றதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: பழங்கலைப் பொருள்கள் திருடுவதை 'ஹவுஸ் பிரேக்கிங்' என்று வீட்டில் களவு என்பது போல போலீஸ் துறையினர் கருது கிறார்கள். ராஜஸ்தான் மாநிலத்தில் இது போன்ற களவு செய்கிறவர்களுக்குத் தனி பட்டியல் வைத்து எந்த முறையில் களவு செய்கிறார்கள் என்று ஆராய்ந்து வருகிறார்கள். அது களவைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்குமென்று சொல்லு கிறார்கள். அது போன்ற ஒரு முறையை இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் ராஜஸ்தான் முறையைப்பற்றிச் சொன்னார்கள். வேண்டுமானால் ராஜஸ்தான் முறையை அவர் களிடத்தில் கேட்டுத் தெரிந்து அதுவும் நம்முடைய நாட்டுக்கேற்ற வகையில் அமையுமா என்பதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

The Tamil Nadu Water Supply and Drainage Board.

* 309 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the recruitment to the Water Board is being made through the Employment Exchange; and

(*b*) if so, the details of the recruitment made so far?

தமிழ்நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத்தின் பணியாளர் நியமனம் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நடைபெறுகின்றதா?

(இ) ஆமெனில், இதுவரை பணிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியம் தமிழ்நாடு 1970-ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் கீழ் (சட்டம் 4/1971), 14-4-1971-ம் நாளிலிருந்து அமைக்கப்பட்ட தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பாகும். இச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், வாரியத்தின் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியவர் களின், நியமன வரையறைகள், நிபந்தனைகள் ஆகியவற்றையும் பணி நிபந்தனை களையும் முறைப்படுத்துவதற்கு வாரியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக் கிறது. அரசினால் ஏற்பளிக்கப்பட வேண்டிய விதிமுறைகளை வாரியம் வகுத் துள்ளது. வாரியம் வகுத்துள்ள ஒழுங்கு முறைகளின்படி வாரியப் பணியில் உள்ள நியமனங்கள் அனைத்தும் (அரசுப் பணியில் உள்ள ட்டேதார், கடைநிலை ஊழியர்கள், காவல்காரர் ஆகியவற்றை ஒத்துள்ள பதவிகள் தவிர) வாரியத் தின் தலைவர், நிர்வாக இயக்குநர், மற்றொரு இயக்குநர் ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழு ஒன்றின் மூலமாகச் செய்யப்பட வேண்டும். விதிமுறைகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்குவதை எதிர்பார்த்து அன்றுட அலுவல்களை நடத்த வேண்டி, தற்போது இந்தப் பதவிகள் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நேர்முக நியமனம் மூலமாக அல்லது வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமாக

நிரப்பப்படுகின்றன; இந்த விதிமுறைகளுக்கு அரசின் ஒப்பளிப்பு கிடைத்த பின்னர், இதுவரை செய்யப்பட்ட தற்காலிக நியமனங்கள் பற்றி தேர்வுக்குழு மறு ஆய்வு செய்யும்; தேர்வுக் குழுவின் பரிவுரைகளின் மேல்தான் நியமனங்கள் செய்யப்படும்.

(இ) 14-4-1971 நாளுக்குப் பின்னர் நிரப்பப்பட்ட 20 பதவிகளில், 6 பதவிகள் பதவி மாற்றல் மூலமும், 13 பதவிகள் நேர்முக நியமனம் மூலமும், ஒரு பதவி வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமும் நிரப்பப்பட்டன.

Pilot Medical Check-up for the Pupils.

* 321 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are any proposals under the consideration of the Government to launch a pilot medical check-up for the pupils below 10 years of age; and

(b) if so, the details thereof?

மாணவர்களின் முன்னோடி மருத்துவச் சோதனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பத்து வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கு முன்னோடி மருத்துவச் சோதனை நடத்துவதற்கான செயற் குறிப்புகள் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்ட மன்ற மேலவை மூன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Report of the Committee on Air Pollution.

* 322 Q.—THIRU V. ISVARMURTI AND THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to answer given to supplementary question to L.C. Q. No. 155 on 21st July 1971—

(a) whether the Committee has submitted its report to the Government; and

(b) if so, to place it on the Table of the House?

@ Printed as Appendix II on page. 87

காற்று தூய்மை கெடுதல் பற்றிய குழுவின் அறிக்கை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி, திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 21—7—1971 ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் துணை வினு எண் 155-க்கு அளித்த விடையினையொட்டி. கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுக்கு, குழு தனது அறிக்கையை பணித்தனுப்பி விட்டதா?

(இ) ஆமெனில், அவையின் முன் அவ்வறிக்கை வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று அரசு பரிசீலனையில் உள்ளது.

Opening of a Medical College for Homoeopathy.

* 323 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open a Medical College for Homoeopathy in this State; and

(b) if so, the details thereof?

ஓமியோபதி மருத்துவக் கல்லூரி தொடங்குதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Industrially Backward Area.

* 324 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Madurai (East) District Development Council has requested the Government to declare the Madurai South Taluk as an industrially backward area for encouraging entrepreneures to move into the Kappalur Indutrial Estate and utilise its fully developed space and amenities ; and

(*b*) if so, the action taken thereon?

தொழில் துறையில் பின்தங்கிய பகுதி

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கப்பலூர் தொழிற் பேட்டையில் தொழிற்சாலைகளை நிறுவவும் அங்குள்ள முழுமையாக மேம்படுத்தப்பட்ட இடத்தையும், வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளவும் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கமளிக்க, மதுரை தெற்கு வட்டத்தை தொழிற் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்குமாறு, மதுரை (கிழக்கு) மாவட்ட அபிவிருத்தி மன்றம் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டம் முழுமையும் தொழில் பின் தங்கிய பகுதியாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. *Announcement re decision of the Business Advisory Committee.*

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following further programme of business of the Council has been decided :—

1—4—1972 No meeting.

2—4—1972 Sunday—Holiday.

3—4—1972 Consideration and approval of the Report of the Select Committee on the Rules of Procedure of the Council appointed in the year 1971.

4—4—1972 Official Bills.

5—4—1972 Official Bills and Validictory speeches.

The Council will meet on 6th April 1972, if necessary. The Council will meet from 4.00 p.m. to 7.00 p.m. daily.

III. *Adjournment motion re failure of the Government to give protection to political parties and attack on Thiru Thangavel, Secretary, Ramanathapuram District Congress Committee.*

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the Government to give normal protection to political parties, the politically motivated attack on Thiru Thangavel, Secretary, Ramanathapuram District Congress Committee at Thiruppathur on the 24th March 1972 near the Police station in daylight, robbing him of his valuables and also the inability of the Police to prevent such occurrences and apprehend the culprit immediately.

I want to know from the hon. Member how the matter fails within the scope of the rules, governing adjournment motions.

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இது 24-ம் தேதியன்று பட்டப்பகலில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அன்றே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். எனவே இது காலம் தாழ்ந்து கொடுத்ததாகாது. நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது. இராமநாதபுரம் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் தங்கவேலர் அவர்கள் பஸ் ஏறச் சென்றபோது, பட்டப் பகலில் சுமார் 1-30 மணிக்கு பஸ் ஸ்டேண்டுக்கு அருகில் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலேயே பத்து பதினைந்து பேரால் தாக்கப்பட்டு அவர் கையிலிருந்த கெடிகாரம், மணிபர்ஸ் போன்றவைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு, அவரை இரத்தக் காயத்துடன் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே திருப்பத்தூரில் ஒரு கொள்ளையே நடந்திருக்கிறது. இவை அனைத்தும் அரசாங்கத்துக்கும் தெரியும். இப்போது நடைபெற்ற சம்பவத்தில் ஒரு

[திரு. கே. ராஜாராம்] [27th March 1972

மாவட்டத்தின் காங்கிரஸ் காரியதரிசியே தாக்கப்பட்டிருக்கிறார். காரிய தரிசிக்கே இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி நடைபெறுமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். போலீஸ் ஸ்டேஷனில் பாதுகாப்பு கொடுக்கவில்லே. எனவே தான் இதுபற்றி விவரங்கள் தெரிய வேண்டுமென்று இதை அரசின் கவனத் திற்குக் கொண்டுவந்து, இனியாவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறு வதைத் தடுப்பதற்காக இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின் றேன். இப்படி எதிர்க்கட்சியினருக்கு ஒரு பயமுறுத்தல் ஏற்பட்டால், ஜன நாயகத்தில் கட்சிகள் நடத்துவதே கஷ்டமாக இருக்கும். எனவே இதுபற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். எனவே இதை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : I would like to know the viewpoint of the Government in this regard.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திருப்பத்தூரில் தங்கவேலன் என்பவர் தாக்கப்பட்டது சம்பந்தமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களே இங்கே தந்தார்கள். இது சம்பந்தமாக பத்திரிகை களிலும்—காங்கிரஸ் சார்புடைய பத்திரிகைகளிலும்—செய்திகள் வந்திருக் கின்றன. அதில் அவரை அடித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று இறுதியாகவும், அப்படி அடிக்கும்போது 'மந்திரி மாத வனேப்பற்றிப் பேசாதே' என்று சொல்லி அடித்தார்கள் என்றும் செய்திகள் வெளிவந்தன. இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஒத்திவைப் புத் தீர்மானத்தை அளிப்பதன் மூலம், அரசின் சார்பிலே உண்மையை எடுத்துச் சொல்லுவதற்கு இது எனக்குப் பயன் பட்டது என்ற முறையில் ஒருபுறத்தில் மகிழ்ச்சிகூட அடைகின்றேன். இது போன்ற சந்தர்ப்பங்கள், வன்முறைகள் அரசியலின் பெயரிலேயோ அல்லது வேறு தனித்த முறையிலேயோ நடைபெறு கின்றதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசும் இதை அனுமதிக் காது என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிந்திருக்கிறோம். 24-ம் தேதி யன்று மதியம் சுமார் 1-50-க்கு அவர் அடிபட்டு, பகல் 2 மணிக்குப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருக்கின்றார். அப்போதே புகார் கொடுக்காமல் 'எனக்கு ஓய்வு வேண்டியிருக்கிறது, ஆகவே பிறகு தருகின்றேன்' என்று சொல்லிவிட்டு, மீண்டும் கிட்டத்தட்ட மாலே 4-15 மணிக்குப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து

27th March 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

'அப்போது உடனே கொடுக்காததற்குக் காரணம் எனக்கு மயக்கமாக இருந் தது, எனவே புகார் கொடுக்கவில்லே' என்று சொல்லிப் புகார் கொடுத்திருக் கின்றார். பத்துப் பேர் திடீரென்று தன்னைத் தாக்கினார்கள் என்றும் அவர்கள் "ஆறுமுகம் பிள்ளே, நாகராஜன் இவர்களேப்பற்றி எப்படிப் பேசலாம்" என்று சொல்லித் தாக்கினார்கள் என்றும், அந்தப் புகாரில் சொல்லப்பட்டிருக்கின்றது. 'அவர்களில் சிலர் பேசிய பேச்சுக்களிலிருந்து வந்தவர்களில் ஒரு சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றவர்கள் திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளே வீட்டில் வேலே செய்பவர்கள்தான் என்றும் தெரிகிறது' என்று அந்தப் புகாரில் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, பத்திரிகையில் வந்ததுபோல 'திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் இதில் ஈடுபட்டார்கள்' என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லே. யார் தாக்கினார்கள் என்பதைவிட தாக் கப்பட்டவர் கொடுத்த புகாரை இன்றையதினம் காவல் துறையினர் எடுத்துக் கொண்டு வழக்கொன்றினேப் பதிவு செய்திருக்கின்றார்கள். இ.பி.கோ. 343, 323 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கினேப் பதிவு செய்து புலன் விசாரணையினைத் தொடங்கியிருக்கின்றார்கள். தங்கவேலர் மருத்துவ மனேக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றார். காவல் துறையினர் ஏற்ற நடவடிக்கைகளே எடுத்து வரு கின்றனர். ஆகவே இந்த விளக்கங்களுக்குப் பிறகு, சபையின் நடவடிக்கை களே ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லேயென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : In view of the statement made by the Hon. the Chief Minister and also as the matter involves nothing more than the ordinary administration of law, I withhold my consent to the raising of the matter.

IV. *Calling attention to delay in giving effect to the order of giving selection grade to B.T. Teachers working in Salem and Dharmapuri districts.*

MR. CHAIRMAN : Thiru V. Isvarmurti is not in his seat.

V. *Presentation of the Final Supplementary Statement of Expenditure for* 1971–72.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்களே, 1971-72 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணே மதிப்பீடுகளே இம் மன்றத்தின் கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளே விளக்கும் விரிவான

அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 116.34 கோடியாகும். இதில் ரூ. 29.88 கோடி மட்டுமே அனுமதித்த இனங்களின் கீழ்வரும்; எஞ்சிய ரூ. 86.46 கோடி சாட்டிய இனங்களைச் சார்ந்தனவாகும்.

2. தற்போது கோரப்படும் நிதி ஒதுக்கத்தில் கணிசமான பகுதி, மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரியதாகும். இதற்கென 80.67 கோடி ரூபாய் அளவிற்கு இத் தலை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பெருந் தொகை ஏன் தேவைப்படுகிறதென்று விளக்குவது எனது கடமையாகும். 1971-ஆம் ஆண்டு சூன் திங்கள் 30-ஆம் நாளன்று நமக்கு இந்திய ரிசர்வ் வங்கியிடம் ரூ. 43.70 கோடியளவில் இருந்த அதிகப் பற்றை ஈடு செய்ய மத்திய அரசு நமக்குக் கடன் வழிவகை முன்பணத்தை நடப்பாண்டிலேயே திருப்பிச் செலுத்தியுள்ளோம். இதற்கு இம் மானியக் கோரிக்கையில் வகை செய்யப் பட்டுள்ளது.

3. மத்திய அரசுக்கு நாம் 1970-71-ல் செலுத்த வேண்டியிருந்த கடன் தவணைகளில் ஒரு பகுதியைச் சில ஆண்டுகளுக்கு ஒத்திப்போடவேண்டுமென்று நாம் கோரியிருந்தோம். இக்கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, ரூ. 19.18 கோடி அளவிற்கு நடப்பு ஆண்டில் வகை செய்ததற்கு அதிகப்படியாக, மத்திய அரசுக்கு நாம் கொடுக்க வேண்டியதையும் இம் மானியக் கோரிக்கைகளில் சேர்த்துள்ளோம்.

4. கடன்களைத் தீர்க்கும் வகையில் மேலும் ரூ. 17.79 கோடி அளவிற்கு ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்க வேண்டியதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விரிவான விளக்கம், இக் கோரிக்கைகளுடன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிதி ஒதுக்கம், இவ்வாண்டின் திருத்த மதிப்பீடுகளை ஒட்டியே அமைத்துள்ளது.

5. நடப்பு ஆண்டில் கிட்டச் செலவின் அளவு உயர்ந்ததையும், ஊதியக் குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நிறைவேறியதையும் இத்தலை மானியக் கோரிக்கையில் காண்கிறோம். கல்விக்காக ரூ. 448 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளதில், ஆசிரியர்களுக்கு ஊதியம் தாமதமின்றித் தருவதற்காக மாநாட்சி ஒன்றியங்களுக்கு, அரசு கொடுக்க முன்வந்துள்ள மானியம் அடங்கும். ஏப்ரல் திங்கள் முதல் நாளன்று மாநாட்சி ஒன்றிய ஆசிரியர்கள் தங்கள் ஊதியங்களைப் பெறுவதற்கென, மார்ச் திங்களிலேயே தரப்படும் முன் பணமான ரூ. 273 இலட்சம் இதில் குறிப்பிடத்தக்கது.

6. 'மருத்துவம்' என்ற தலைப்பின்கீழ் சுமார் 91 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. இந்த ஆண்டு அரசினர் மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பல பதவிகளுக்காகவும் கூடுதல் படுக்கைகளுக்காகவும், உணவு, மருந்தகங்கள் ஆகிய செலவுகளுக்காகவும் இத்தொகை தேவைப்படுகிறது.

7. 'வேளாண்மை' என்ற தலைப்பிற்காக ரூ. 107 இலட்சம் அதிகத் தொகை கோரப்படுகிறது. தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 46 இலட்சம், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்கெனவே நடைபெறும் செலவுகளுக்கு மேலாக மானியம் ரூ. 30 இலட்சம், மீகுபயன் விளைச்சல் திட்டத்தைப் பரப்புவதற்கு விதைகளைப் பெருக்குவதற்காக ரூ. 26 இலட்சம் ஆகியவை இத்தலைப்பின்கீழ் வரும் முக்கியமான கூடுதல் செலவுகளாகும்.

8. 'பாசனம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 211 இலட்சம் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. காவிரி கழிமுகப் பகுதியில் செய்யப்பட்டு வரும் சீரமைப்புத் திட்டத்திற்காக ரூ. 54 இலட்சம், மாநாட்சி ஒன்றியங்களுக்கு சிறுபாசன ஆதாரங்களைப் பேணி வருவதற்கு மானியங்கள் ரூ. 16 இலட்சம், மற்ற பாசன அமைப்புகளில் பழுதுபார்க்கும் வேலைகளுக்காக ரூ. 115 இலட்சம் ஆகியவை பாசனத்துறையில் குறிப்பிடத்தக்க கூடுதல் செலவினங்களாகும். இந்த மானியத்தின்கீழ் இவ்வாண்டிற்கான மொத்தச் செலவு, 1971-72 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளை ஒத்துள்ளது.

9. "பொதுப் பணிகள்—பணியாளர், கருவிகள், இயந்திரச் சாதனங்கள்" என்ற தலைப்பின்கீழ் சுமார் 130 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது. நிலநீர் ஆய்வு அலுவலகங்களிலும் மற்றைய பொது பணித்துறை அலுவலகங்களிலும் ஏற்படுத்தப் பட்டுள்ள புதிய பதவிகளுக்காகவும், புதிதாக வாங்கப்பட்ட பல கருவிகளுக்காகவுமே இந்தச் செலவு செய்யப்பட்டுள்ளது.

10. விவசாயிகளுக்கு, மின்வசதி அளிப்பதால் நேர்ந்த நட்டத்தின் காரணமாக, மின்வாரியத்தின் கணக்குகளில் பெருமளவு தொண்டு விழுந்து வருகிறது. உலக வங்கியிடமிருந்து கடன் எழுப்பியபோது, நட்டமில்லாமல் தன் கணக்கு களை வைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், மூலதனச் செலவின் மீது 11.5 சத வீதமேனும் வருவாய் கிட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நமது மின்வாரியம் உறுதியளித்துள்ளது. 1970-71-ல் இந்த வருவாய் கிட்ட, வாரியத்துக்கு ரூ. 9.5 கோடி மானியமாக அரசு கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால், மாநிலத்தின் வழிவகை நிதிநிலையில் (ways and means position) மாற்றமேதும் ஏற்படாது, ஏனெனில், வாரியம்

மாநில அரசுக்குத் தரவேண்டிய வட்டி நிலுவைகள் இம் மானியத் தொகை மூலம் ஈடு செய்யப்படும். இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையில் இதற்காக வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மானியத்தின்கீழ் குறிப்பிட வேண்டிய மற்றொரு செலவினம், பங்களா தேச அகதிகள் நலத்திற்காக, நம் மாநில அரசு, மத்திய அரசுக்குத் தரவேண்டிய தொகையான ரூ. 44.15 இலட்சம் ஆகும். மத்திய அரசுக்கு பங்களா தேச அகதிகளால் ஏற்பட்ட கூடுதல் செலவை ஓளவு ஈடு செய்யவும், மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காகும் செலவை ஏற்கவும், 1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சில புதிய வரிகளை அரசு விதித்து இருப்பதை இந்த மன்றம் அறியும். இதில் ஒரு பகுதியான 44.15 இலட்சம் ரூபாயை நாம் மத்திய அரசுக்குக் கொடுத்து உதவியிருக்கிறோம். இவ்விரண்டு தொகைகளைச் சேர்த்து, இந்த மானியத்தில் ஏற்பட்டுள்ள மிச்சத் தொகையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கமாக ரூ. 9.33 கோடி தற்போது கோரப்படுகிறது.

11. கடாஞ நதி திட்டத்திற்காக கூடுதலாக ரூ. 43 இலட்சம், காவிரி கழிமுகப் பகுதியில் வடிகால் வேலைகளுக்காக ரூ. 23 இலட்சமும், சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 82 இலட்சம் ஆகிய செலவினங்களுக்காக "பாசனத்திற்காகும் மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் கூடுதலாக ரூ. 148 இலட்சம் கோரப்படுகிறது.

12. "போக்குவரத்து மீதான மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ், ரூ. 32 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது. 50 பேருந்துகளுக்கு மேல் வைத்துள்ள போக்குவரத்து நிறுவனங்களை நாட்டுடைமை ஆக்கியதால் அந்த நிறுவனங்களுக்கு அரசு இழப்பீடு அளிக்க வேண்டியுள்ளது. இந்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பது இன்னும் முடிவாகவில்லை. ஆயினும், இடைக்கால இழப்பீடாக "சதர்ன் ரோட்வேஸ்", "ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட்", "எஸ்.ஆர்.வி.எஸ்.", "ராமன் அண்டு ராமன்" என்ற நான்கு நிறுவனங்களுக்கு 57.25 இலட்சம் ரூபாய் அரசு அளித்துள்ளது. இம் மானியத்தில் ஏற்கெனவே உள்ள மிச்சத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கமாக ரூ. 32 இலட்சமே கோரப்படுகிறது.

13. "அரசு வாணிபத் திட்டங்களின் மீதான மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் கூடுதலாக ரூ. 218 இலட்சம் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது. சர்க்கரை, உணவுதானியங்கள் போன்ற இன்றியமையாத பொருட்கள் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசு அப்பொருள்களை வாங்குவதற்காகச் செய்யும் கூடுதல் செலவு இக்கோரிக்கையில் அடங்கியுள்ளது.

14. இந்த துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள எனைய செலவினங்கள் பற்றி, விரிவான அறிக்கையில் கொடுத்த குறிப்புகளுக்கு மேல் சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லை என்று கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

VI. GOVERNMENT MOTION.

Discussion on the Policy Note on Animal Husbandry.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Health will now move the motion standing in his name.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

"சட்ட மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள 'கால்நடை வளர்ப்பு' என்னும் அறிக்கை @ விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Policy Note on Animal Husbandry placed on the table of the Council be taken into consideration"

* **திரு. என். சுந்தரேசத் தேவர் :** மதிப்பிற்குரிய மேலவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த 'கால் நடை வளர்ப்பு'த் தலைப்பின் கீழ் 4,40,59,800 ரூபாயை மானியக் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடை வளர்ச்சியைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழ் நாட்டில் அது ஒரு திருப்திகரமான முறையில் இயங்கவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, இந்தக் கால்நடை இலாக்காவிலே அதிகமான அளவிலே பரவலாக ஊழல் மலிந்திருக்கின்றது. கால்நடைப் பண்ணைகளிலேயும் சரி, கோழிப் பண்ணைகளிலேயும் சரி, கால்நடைகளை வாங்கி விற்கக் கூடியவைகளிலேயும் சரி, கால்நடைக்காக அளிக்கும் மானியங்களிலேயும் சரி, எல்லாத் துறைகளிலேயும் ஊழல்கள் மலிந்த ஒரு நிலையை நாம் காண வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துப் போக்க வேண்டும். நம்முடைய நாட்டிலே கால்நடைச் செல்வம் மிக முக்கியமானது. அதற்கு ஒதுக்கியிருக்கின்ற

@ Printed as Appendix III on pages. 88

[திரு. என். சுந்தரேசத்தேவர்]

தொகையானது மிகவும் குறைவாக இருக்கிறது. கால்நடை வளர்ச்சிக் கென்று பல தலைப்பின் கீழ் பணம் ஒதுக்கியிருந்தாலும் கூட, நேரடியாகக் கால்நடை வளர்ப்பிற்காக 83 இலட்சம் ரூபாய் தான் செலவு செய்கிறார்கள். பாக்கி கால்நடை கல்வித் துறையிலே வைக்கப்பட்டிருக்கின்றது. முன்பு இங்கே இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட கோழிப் பண்ணை களிலே அதிகமாக ஊழல்கள் மலிந்துவிட்டதாகவும், நஷ்டம் அதிகமாக இருப்பதால் கோழிப் பண்ணைகளை மூடிவிடப் போகிறேன் என்றும் சொன்னார் கள். சில பண்ணைகளையும் மூடினார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக ஊழல் இருக்கிறது, எல்லாப் பண்ணைகளிலேயும் அது இருக்கிறது, எனவே சரியாக அவைகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் அப்படி அவர் சொல்லுகின்ற குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று அவர் விரும்பினால், குறிப்பிட்டத்தக்க ஊழல்கள், குறைபாடுகள் எங்கே இருக்கின்றன என்பதைச் சொல்லுவார்களானால், அவர்கள் அரசாங்கத்திற்கு உதவி செய்தவர் ஆவார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: பொதுவாக கால்நடைகளிலே "எருதுகள்" வாங்குவதிலே அரசாங்கம் மானியம் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம்.

மில்டர் சேர்மன்: "வைத்துக் கொள்வோம்" என்பதில்லை. ஊகங்கள் எல்லாம் உண்மையாக இருக்க முடியாது. உண்மையைத் தான் உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: நான் உண்மையைத் தான் சொல்லு கிறேன். கோழிப் பண்ணையை எடுத்துக்கொண்டால், அதிகப்படியான கோழிகளைத் தரக்குறைவான கோழிகள் என்று தள்ளுபடி செய்து, 2 ரூபாய் ஒரு ரூபாய்க்கு விற்றுவிடுகிறார்கள். நல்ல கோழிகளையும் இப்படி விற்று விடுகிறார்கள். அந்தக் கோழிகள் முட்டை இடும் நிலையைப் பார்த்தால், ஒரு கோழிப் பண்ணையிலே 2,000 முட்டைகள் 3,000 முட்டைகள் என்று இடுகிறது. ஆனால் கணக்கிலே முட்டைகள் குறைவாக பதிவு செய்து விற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு காலத்திலே அப்படி இருந்தது என்று சொல்லுகிறார? அது எப்பொழுதோ இருந்தது, இப்பொழுது அதை நினைவூட்டுகிறேன் என்பதற்காகச் சொல்லுகிறார என்பதை அறிய விரும்பு கிறேன்.

27th March 1972]

திரு. என். சுந்தரேசத் தேவர்: சென்ற ஆண்டிலேயும் இருந்திருக்கிறது. மேடப்பு ஆண்டிலேயும் இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இல்லாமலிருந்தால், நன்றாக இருக்கும். பொதுவாக ஊழலைப் போக்க வேண்டு மென்பதற்காகத் தான் இதையெல்லாம் சொல்லுகிறேன். சில தவறுகளை யெல்லாம் போக்கலாம் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டத்திலே நாம் பார்க்கப் போனால், கால்நடைத் திட்டம் மிக முக்கியமானது. சாதாரணமாக, நெல்லூர், மைசூர் மாநிலம் போன்ற இடங்களுக்குச் சென்று அங்கே வயலிலே இருக்கும் மாடுகளைப் பார்த்தால், கொழு, கொழுவென்று இருக்கிறது. நம் மாடுகளைப் பார்த்தால், இளைத்துப் போய் தோலும் தும்புமாகத் தான் இருக்கிறது. அதே போல், அங்கேயிருக்கும் பசுக்கள் எல்லாம் வளம் உள்ளதாக கொழு, கொழு வென்றிருக்கிறது. இங்கே பார்த்தால், ஏதோ நல்ல வசதியுள்ளவர்கள் அல்லது சர்க்காருடைய பண்ணை மாடுகள் தான் நன்றாக இருக்கின்றனவே தவிர, சாதாரண கிராமங்களிலே இருக்கின்ற பெரும்பான்மையான மாடுகளைப் பார்த்தால், தரக்குறைவான மாடுகளாகத் தான் காணப்படுகின்றன. எனவே, அவையெல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் 'பொலி காளைகள் திட்டம்' என்ற ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டம் கூட சரிவரச் செயல்படாமல், இருக்கிறது. சான்றாக சர்க்கார் பண்ணையில் விற்பனை செய்யும் காளைகள் எண்ணிக்கை குறைந்துகொண்டு வந்திருக்கிறது. 1966-67-லே 192 பொலிகாளைகள் விற்கப்பட்டதென்றால், இப் பொழுது 1970-71-லே 62 பொலிகாளைகள் தான் விற்கப்பட்டிருக்கின்றன. எதற்காக இந்தப் பொலிகாளைகள் விற்கப்படுகின்றன என்றால், நம்முடைய நாட்டு மாட்டினங்களின் இனப் பெருக்கத்தின் காரணமாக தரமான மாடுகள் வருவதில்லையென்று அறிந்து, அதனால் நல்ல தரமான மாடுகளைப் பெற வேண்டும் என்பதற்காகத் தான் பண்ணைகளிலே சாதி எருதுகள் விற்கப்படு கின்றன. இப்போது சாதாரண மக்களுக்கு சாதி பொலிகாளைகளைக் கொடுப் பதை நிறுத்திவிட்டார்கள். எனவே, அந்த நடவடிக்கைகளிலேயெல்லாம் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Thirumathi S. Manjubhashini—Vice-Chairman in the Chair]

ஆகவே, இப்போது யாரிடம் பொலிக் காளை இருக்கிறதென்றால், வசதி யுள்ளவர்களிடத்தில் தான் இருக்கின்றது. ஒரு பொலிக் காளை வாங்க வேண்டு மானால், ஆயிரம் ரூபாய் செலவாகிறது. வசதியுள்ளவர்கள் பல பொலிக் காளைகள் வைத்துக்கொள்ள முடிகிறது. சாதாரண ஜனங்களிடத்திலுள்ள

மாடுகளுக்கு, பொலிக்காளை வைத்து இனப் பெருக்கம் செய்ய வேண்டுமானால், வசதிபடைத்தவர்களிடம் சென்று அவர்களது காளையை பயன்படுத்துவது முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது கிராமத்திலுள்ள நிகழ்ச்சி. சாதாரண மக்களிடத்தில் பொலிக்காளை வைத்துக் கொள்வதற்கு சர்க்கார் மான்யம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்த மான்யத்தை ரத்து செய்திருப்பது மிகவும் தவறான விஷயமாகும். மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்து மான்யத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கால்நடையைப் பொறுத்த வரையிலும், தீவன வசதிகள் மோசமான நிலையிலுள்ளன. சரியான மேய்ச்சல்தரை இடையாது. தீவனத்தைப் பொறுத்த வரையிலும், மாடுகளுக்கு நாம் பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு, நல்ல கலப்புத் தீவனங்களெல்லாம் அளிக்கின்றோம். இருந்த போதிலும் கூட, மாடுகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது புல் தீவனம். கிராமங்களில் புல் தீவனம் குறைந்து விட்டது. முன்பு சாகுபடிக்கு, குளப் புறம்போக்கு, மேய்ச்சல் தரையை ஒதுக்கி விட்டு, சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொண்டோம். ஆனால் இப்போது மேய்ச்சல்தரையைக் கூட சாகுபடி நிலமாக எடுத்துக்கொண்டு, பட்டா கொடுத்து விட்டோம். கிராமங்களில் மாடுகளுக்கு மேய்ச்சல்தரையில்லாத நிலை ஏற்பட்டு விட்டது. இந்த மாதிரிக் கஷ்டங்களெல்லாம் கால்நடைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த மருந்தகங்களைப் பொறுத்த வரையில், எப்படி இருக்கிறது என்று பார்த்தால், நம்முடைய அமைச்சரின் குறிப்பிலிருக்கிறபடி, 520 மருந்தகங்கள் இருக்கின்றன. கால்நடை குறிப்பின் பிரகாரம் ஆயிரம் மருந்தகங்கள் வேண்டுமென்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மருந்தகங்கள் போதவில்லை என்பது அமைச்சர் அவர்களே அறிக்கையில் ஒப்புக்கொண்டுள்ள விஷயம். மருந்தகங்கள் எப்படி இருக்கின்றன, உதவி மருத்துவ நிலையம் எப்படியிருக்கிறதென்று ஆராய்ச்சி செய்தால், இதில் மாற்றம் தேவை. பஞ்சாயத்து யூனியன், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மூலமாக பல உதவிப் பணிகளெல்லாம் செய்கிறோம். உதவி மருத்துவ மனை ஒரு வட்டாரத்திற்கு 5, 6 வைத்திருக்கிறோம். அது எப்படி இயங்குகிறதென்றால், அது சாதாரண 'செகண்ட் கிரேட்' மருத்துவரைப் போட்டு, நாம் சில் தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கு வசதியாக இருக்கிறது. ஆனால் மாடுகளுக்கு நல்ல வைத்திய உதவி பார்ப்பதற்கு Capacity இல்லை. நாட்டு வைத்தியரிடத்தில் போய் வைத்தியம் செய்து கொண்டால் போதும் என்ற நிலை இருக்கிறது. ஒரு வட்டாரத்திற்கு 5, 6 உதவி நிலையங்கள் இருக்கும் நிலையைக் கூட தவிர்த்து, ஆறு என்பதை மூன்றாகக் குறைத்து, மேம்

பாடுள்ள மருத்துவரைப் போட்டு, நல்ல மருத்துவ நிலையங்களாக ஏற்படுத்தலாம். அப்படி ஏற்படுத்துவதற்கு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கு அனுமதி கொடுங்கள். பொருளாதார நிலையைப் பார்க்கும்போது, செலவில் அரசாங்கம் முன் வராவிட்டாலும், பஞ்சாயத்து யூனியன் பாதிப் பணம் அல்லது முக்கால் பங்குப் பணம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கிறது. அரசாங்கம் ஓரளவுக்கு மான்யம் கொடுத்தால், போதும். ஒரு பட்டதாரி டாக்டரை அரசு செலவில் போட்டுக் கொடுத்தால் போதும். அதே மாதிரி, கூட்டு மன்றங்களுக்கு, வட்டார வளர்ச்சிக்கெல்லாம் ஒரு ஆஸ்பத்திரி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு டாக்டர் அங்கேயிருந்து வைத்தியம் பண்ண வேண்டுமென்றும், இன்னொருவர் கிராமங்களுக்குச் சென்று, நோய்களைப் பார்த்து, மருந்து கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. ஒரு ஆஸ்பத்திரிக்கு இரண்டு டாக்டர்கள் என்றிருப்பதை விட, ஒரு ஆஸ்பத்திரியை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, இரண்டு ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி, காலையில் ஆஸ்பத்திரியில் இருக்கும்படியும், மாலையில் வெளியே சென்று பார்ப்பதற்கும் இசைவான வகையில் மாற்றியமைக்க வேண்டும். காஞ்சிக்கு தலைநகரத்தில் சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. வட்டாரத்தில் இருக்கும் உதவி மருத்துவ நிலையங்கள் மேம்பாடு செய்யப்பட்டு, பட்டதாரி டாக்டர்களை நல்ல விதத்தில் மாற்றம் செய்ய வேண்டும். மருந்தகங்களைப் பொறுத்த வரையில், மேம்பாடு அவசியம் தேவையாக இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, வட்டாரத்திற்கு இரண்டு மூன்று கால்நடை ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்தபடியாக, தம்முடைய மருந்தகங்களுக்குப் போடுகிற பட்டதாரிகள் மிகக் குறைவாகயிருக்கிறார்கள். நம்முடைய கல்லூரிகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 136 மாணவர்கள் தான் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். ஆயிரம் ஆஸ்பத்திரிகள் அரசாங்கம் அமைக்க வேண்டுமென்றிருக்கிறது. இதல்லாமல், வட்டார வளர்ச்சி ஆஸ்பத்திரிகள் அமைக்க வேண்டும். கிட்டத்தட்ட ஆயிரம் மாணவர்கள் தேவையென்று பேசும்போது, 136 பேர் வருஷம் ஒன்றுக்கு படித்து வெளியே வருகிறார்களென்றால், எந்த வருஷத்தில் இந்தத் கிட்டங்களைப் பூர்த்தி செய்வது என்பது தெரியவில்லை. இன்னொரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி, இந்தக் குறையை உடனடியாகப் போக்க வேண்டும்

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கிற எல்லா மருத்துவ நிலையங்களிலும், கால்நடை டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கால்நடை டாக்டரில்லாத காரணத்தால், எந்த மருத்துவ மனையும் இயங்காமலில்லை. கடந்த ஆண்டில் 20, 22 மருத்துவ மனைகள்

[திரு. க. அன்பழகன்] [27th March 1972

ஏற்பட்டிருக்கின்றன. சில ஒன்றியங்களில் இரண்டு மருத்துவ மனைகள், அவர்கள் விரும்பி, மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகை கொடுத்து, ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு வரையில் டாக்டர்கள் இருக்க வேண்டிய இடங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இனி அடுத்த ஆண்டு 136 பட்டதாரிகள் வருவார்களானால், 100 பேர் வந்தால் கூட, அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க முடியுமா என்பது தெரியவில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாணவர்கள் நிலை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் தான், ஆஸ்பத்திரிகள் குறைவாக இருக்கின்றன என்று நான் குற்றம் சாட்டுகிறேன். நம்முடைய பொறுப்பேற்ற பணிகளுக்கு அதிகம் செலவு செய்வதில் தப்பில்லை. ரூ. 4 கோடிக்குப் பதிலாக இன்னும் ரூ. 2 கோடி, ஆக ரூ. 6 கோடி செலவு செய்தால், நல்லது. ஆகவே, இந்த 136 மாணவர்களைக் கொண்டு எந்த வருஷத்தில் பூர்த்தி செய்ய முடியும் என்பதை மாற்றி, பரிசீலனை செய்ய வேண்டும். இதை பூர்த்தி செய்யாமல், தாட்களை நீடித்துக் கொண்டு போனால், தமிழ் நாட்டில் கால்நடைச் செல்வம் சிறப்புடையதாக இருக்காது. கூடிய விரைவில் மூன்று அல்லது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் இதைச் செயலாற்ற வேண்டும். விவசாயத் துறையில் பசுமைப் புரட்சித் திட்டம் என்பது போல, இந்தத் துறையிலும் ஒரு புரட்சிகரமான திட்டத்தைச் செயலாற்ற அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். அடுத்தபடியாக, ஏழை எளியவர்கள் நல்ல மாடு வாங்க வேண்டுமானால், ரூபாய் ஆயிரத்திற்கு மேலாகிறது. நல்ல வண்டி மாடு வேண்டுமானால், ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேலாகிறது, நல்ல பூரணி மாடு வாங்கவேண்டுமானால், ரூ. 2 ஆயிரம், ரூ. 3 ஆயிரம் ஆகிறது. இந்த மாதிரி மாடுகளை வாங்கினால் தான், ஏழை விவசாயிகள் தங்கள் வேலைக்கும் பயன்படுத்துகிறார்கள், வாடகைக்கு விட்டும் சம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட மாடுகளுக்கு நோய்களைத் தடுப்பதற்கு நல்ல மருத்துவம் இல்லை. நோய்களினால் விலை உயர்ந்த மாடுகள் திடீரென இறந்து விடுகின்றன. 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் கொடுத்துத் திரும்பவும் வாங்கக் கூடிய சக்தி ஏழை எளியவர்களுக்கு இல்லை: ஆகவே, அரசாங்கம் இதை உடனடியாகக் கவனித்து, ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்துவது அவசியம். இந்த மாதிரித் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டால், ஏழை எளியவர்களுக்கு நஷ்டமடையக் கூடிய நிலைமை ஏற்படாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நாட்டிலே பால் பற்றாக்குறை இருக்கிறது. சென்னைக்கு மதுரையிலிருந்து பால் வரவேண்டியிருக்கிறது. அதனால் சென்னையில் முதல் தரமான பால் கிடைக்கிறது. அது கூட கிராமங்களில் கிடைப்பதில்லை. கிராமங்களில் பண்ணைப் பால் கிடைப்பதில்லை. கல்யாணம் போன்ற சில முக்கியமான

27th March 1972] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

காரியங்களுக்கு மனுப்போட்டாலும் கூட, பால் கிடைப்பதில்லை. ஆகவே இந்தப் பால் பண்ணைகளில் உள்ள யூனிட்டுகளைத் தனித் தனியாகப் பிரித்து நல்ல முறையில் இயங்கக்கூடிய வகையில் வைக்க வேண்டும். பொதுப்படையாக யாராக இருந்தாலும், விதிதாசாரப்படி பால் பண்ணைகளிலேயிருந்து பால் கொடுக்க ஒரு கொள்கையை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஓட்டல்களிலே காபி குடித்தால், என் குடித்தோம் என்று யோசிக்கக் கூடிய அளவில் தான் இருக்கிறது. ஏனென்றால் அந்த காப்பியல் அவர்கள் கலப்பது பவுடர் பால். இந்தப் பவுடர் பால் எப்படி அவர்களுக்குக் கிடைக்கிறது என்று பார்த்தால், வெளி நாடுகளிலேயிருந்து நம் குழந்தைகளுக்காக அனுப்புவதையெல்லாம் திருடி சிலர் வெளி மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள்; அதை வாங்கி அதையும் ஒழுங்காகச் செய்யாமல் அதிலும் கலப்படம் செய்து காப்பிக்கு அந்தப் பாலை உபயோகிக்கிறார்கள். இந்த அளவுக்கு இன்றைய தினம் பால் பற்றாக்குறை இருக்கிறது. நல்ல தரமான பால் இப்பொழுது கிடைப்பதில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். அதோடு கூட நம்முடைய மக்களுக்குப் பாலில் உள்ள சத்துணவைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும், ஏனென்றால் இன்றைய தினம் மக்கள் காபி அருந்துவதை ஒரு பொழுது போக்காக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக சத்துள்ள பால் அருந்துவதற்குரிய வகைகளை மக்களுக்கு நம் அரசாங்கம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

நல்ல பால் பண்ணைகள் இப்போதில்லை. இப்பொழுது சில பால் பண்ணைகள்தான் இருக்கின்றன. அது கூட சரியாக நடக்கிறதா என்பது எனக்குச் சந்தேகம் தான். பண்ணைகளை வைக்கிறபோது, சீதோஷ்ண நிலையையும் கணக்கெடுத்து நல்ல சீதோஷ்ணமுள்ள இடத்தில் பால் பண்ணையை வைத்தால் தான், மாடுகள் நிறையப் பால் கொடுக்கும். இல்லாவிட்டால், நிறையக் கறக்கிற மாடு கூட ஒரு லிட்டர் அரை லிட்டர் என்றுதான் கறக்கும். செட்டி நாட்டிலேயுள்ள பண்ணை கூட சரியாக நடக்கிறதா என்பது எனக்குச் சந்தேகம் தான். அங்கே கூட சீதோஷ்ணம் சரியாக இருக்கிறதா என்பது எனக்குச் சந்தேகம்தான். பண்ணைகளை வைக்கிறபோது, சீதோஷ்ண நிலைகளைப் பரிசீலனை செய்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏழை மக்களுக்கு பசு, எருமை மாடுகள் வாங்க மானியங்கள் கொடுக்கலாம், கடன்கள் கொடுக்கலாம். ஏழைகளும் கூட கறவை மாடுகளை வாங்கும் அளவுக்கு அரசாங்கம் வழி பண்ண வேண்டும். உதாரணமாக தஞ்சை மாவட்டத்திலே மறவக்காடு என்கிற இடத்திலே ஒரு காடு உள்ளது. அங்கே நான்கு மைல் அளவுக்கு நான்கு அடி உயர அளவில் இயற்கையாகவே ஒரு புல்

விளைகிறது. இது கறவை மாடுகளுக்கு நல்லது. இதைத் தின்றால், கறவை மாடுகள் நிறையப் பால் கொடுக்கும். இவற்றையெல்லாம் சுற்றித் திரியும் மாடுகள்தான் மேய்கின்றன. ஆகவே இந்த மாதிரி இடங்களில் எல்லாம் பரிசீலனை செய்து அங்கு பண்ணைகளை வைத்தால், லாபகரமாக இருக்கும். இது போல் எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் பண்ணைகளை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலனை செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கோழிப் பண்ணைகள் நல்ல முறையில் இருக்க வேண்டும். இப்பொழுது உள்ள கோழிப் பண்ணைகள் நல்ல லாபகரமாக நடப்பதில்லை. அதிகமாக, 'லார்ஜ் ஸ்கேல்' என்ற முறையில் பண்ணைகளை நடத்தினால், லாபமிருக்கும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். குறைவான முறையில் இருந்தால், நஷ்டம் தான் வருமென்றும் கூறுகிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அதுமாதிரி 'லார்ஜ் ஸ்கேல்' முறையில் கோழிப் பண்ணைகளை நடத்த வேண்டும்.

பொதுப்படையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை இன்னும் அதிகமாகக் கவனிப்பார்களேயானால், இந்தத் துறையும் சிறப்பான அளவுக்கு முன்னேற முடியும். இதற்காகச் செலவிடப்படுவது மிகவும் குறைவு. இந்தத் துறையிலே ஏதோ சில இலட்சங்களை மட்டும் கால்நடைக்கு ஒதுக்கிவிட்டு, பாக்கிப் பணத்தையெல்லாம் அதன் கல்விக் கென்றும், ஆராய்ச்சிக்கென்றும், இன்னும் இது போன்ற பலவிதமான காரியங்களுக்காகவும் பல்வேறு தலைப்பின் கீழ் ஒதுக்கிவிட்டு முக்கிய காரியமாகிய இந்தக் கால்நடைப் பராமரிப்புக்குச் செலவு செய்வது மிகவும் குறைவு. மற்ற வைகளுக்குச் செலவு செய்வது ஏறக்குறைய 300 இலட்சத்துக்கு இருக்கிறது

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயவு செய்து அங்கத்தினர் அவர்கள் இங்கு கொடுத்துள்ள விவரங்களைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் கால்நடை வளர்ச்சிக்காக சென்ற ஆண்டு செலவு செய்தது ரூ. 83 இலட்சம், ஆனால் இந்த ஆண்டு செலவு செய்வது ரூ. 98.3 இலட்சம். கோழிக்காக இந்த ஆண்டுச் செலவு ரூ. 53 இலட்சம்; ஆட்டுக்காக இந்த ஆண்டு ஏறக்குறைய ரூ. 13 இலட்சம்; மருத்துவக் கல்விக்காக ரூ. 83 இலட்சம்; ஆக இப்படி பண்ணைகளுக்காகத் தனி செலவு இருக்கிறது. தனித்தனியாக அந்தப் பட்டியல் அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : நான் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் சொல்லுவதெல்லாம் இருக்கிறது. நான் அந்தத் தொகையிலிருந்து நிர்வாகத் திற்கு ஆகும் செலவையெல்லாம் கழித்துத் தான் சொல்கிறேன். வேறு ஒன்று

மில்லை. ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனித்துப் பரிசீலனை செய்து, வரும் இடைக்கால பட்ஜெட்டிலாவது அதிக மாக ஒதுக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளு கிறேன்.

* **திரு. ஆர். ராமன் நாயர்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புக் கொள்கைக் குறிப்பின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். கால்நடைச் செல்வத்தை வளர்ப்பதற்காக இன்றையதினம் மலைப் பகுதிகளிலே நல்ல வாய்ப்பு இருக்கிறது. மலையில் ஏராளமாகக் கால்நடைகளைப் பல ஆண்டுக் காலமாக தோட்டத் தொழிலாளர்கள் வளர்த்து வந்தார்கள். அதன் காரணமாக, பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு கொஞ்சம் பரிகாரம் இருந்துகொண்டு வருகிறது. அங்கே கால்நடைகளை மேய்ப்பதற்கு எல்லா வசதிகளும் இருந்தும் கூட, தோட்டத் தொழிலாளர்கள் மாடு வைத்திருக்கக் கூடாது என்று தோட்ட முதலாளிகள் சில காலம் நிர்ப்பந்தம் செய்து, அப்படி யாராவது தோட்டத்தில் வேலை செய்யக்கூடியவர்களின் குடும்பங்கள் மாடு வைத்திருந்தால், மாடு வைத்து இருப்பவர்களையும் அவர் களுடைய சொந்தக்காரர்களையும் வேலையிலிருந்து நிறுத்திவிடுகிறார்கள். கால் நடை வளர்ப்பதற்கு உண்டான நல்ல சூழ்நிலை இருக்கக்கூடிய இடங்களில் அதை ஒரு சிலருடைய சொந்த இடம் என்ற காரணத்தினால், அங்கு இருக்கக் கூடிய ஏழை மக்கள் மாடு வாங்கி வளர்த்தால், அதன் மூலமாகத் தோட்டத் தொழிலாளர்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது. அதை முதலாளிகளிடத்தில் கேட்டால், பால் கிடைக் காததால், கஞ்சி கொடுத்தால் போதும் என்று சட்டத்தில் இருக்கிறது என்று சொல்லி, அவர்கள் பால் கிடைக்க வாய்ப்பு இருந்தும், அரிசியில் கஞ்சி காய்ச்சி, அதில் தண்ணீரை ஊற்றி, அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அங்கு மாடுகளைக் கட்டுவதற்குக் கூட கொட்டகைகளைக் கட்டிக் கொடுத்திருந்தார்கள். இவ்வாறு ஏராளமாக மாடுகள் வளர்க்க கொட்டகைகள் இருந்தும், மேலும் நல்லவிதமான வசதிகள் இருந்தும் கூட, இன்றைய தினம் தோட்டங்களில் மாடு வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் சில தோட்ட முதலாளிகள். அங்கு மாடுகளை வளர்ப்பதால் அந்த முதலாளிகளுக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டப் போவதில்லை. அந்த மாடுகள் தேயிலைச் செடியை தின்பது கூட இடையாது. அப்படியிருக்கும்போது, அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர் களுடைய குழந்தைகளுக்கும் பால் கிடைக்காததால், கோரிக்கை நோட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து தோட்டத் தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும்.

அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சர்க்கார் அளவில் ஒரு மாடு வாங்கிக் கொடுத்து, அந்த மாட்டை சர்க்கார் பார்வையிலேயே வைத்துக்கொண்டு, அவைகளைச் சரியானபடி அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளே மேற் பார்வை பார்த்து ஆதாயத்தை அடைந்தால், அவர்களின் கஷ்டத்தையும், இன்றைய தினம் இருக்கக் கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கு வதற்கு ஒரு நல்ல வசதியாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் வளர்க்கும் மாடுகளுக்கு வரக் கூடிய சீக்குகளைத் தடுப்பதற்காக ஆஸ்பத்திரி இல்லாத இடங்களில் வேன்கள் மூலமாகவும் பஸ்கள் மூலமாகவும் அந்தக் கிராமங்களுக்குச் சென்று, சரியான படி வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது தினசரியோ சென்று தடுப்பு ஊசி போடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாடு வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்த வரையில், அதிலும், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அல்லது மலைப் பிராந்தியங்களைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதைப் போல, மாடு வளர்ப்பதற்கு தோது இல்லாமல் இருக்கிறது. மாடு வளர்க்க வசதியுள்ள இடங்களில் கூட வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. முன்பெல்லாம், ஒவ்வொரு தோட்டத்திலும் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மாடு வைத்துக்கொள்ளு வதற்கு வசதி இருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இப்பொழுது மாடு வைத்துக்கொள்ளக் கூடாது, அப்படி மாடு வைத்துக்கொண் டிருக்கிறவர்கள் கூட அவற்றை விற்றுவிட வேண்டும் என்று தோட்டச் சொந்தக்காரர்கள் சொல்கிறார்கள். பத்து நாட்களுக்குள் மாடுகளை விற்கா விட்டால், வேலையே இல்லையென்று சொல்லக்கூடிய நிலை வந்திருக்கிறது. இதனால், வேலை போய்விடுமே என்ற பயத்தினால், குறைந்த விலைக்கு மாடுகளை விற்றுவிடக்கூடிய காட்சியைப் பார்க்கிறோம். அதுவும், சென்ற இரண்டு வருஷங்களாகத் தான் இந்தக் கெடுபிடியை, நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக் கிறார்கள். இதற்கு முன்னால் ஏராளமானவர்கள் மாடுகள் வளர்த்துக்கொண் டிருந்தார்கள். மலைத் தோட்டத் தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இந்தச் சூழ்நிலையில், இப்படிச் சொல்வது சரியா என்று பார்க்க வேண்டும். மலைத் தோட்டத் தொழிலாளர்கள் குழந்தை களுக்கெல்லாம் முன்பெல்லாம் பால் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது, மாடுகள் வளர்க்கக்கூடாது என்று சொல்வதால், பால் தட்டுப்பாடு நிலைமை ஏற்பட்டு, அந்தக் குழந்தைகளுக்குப் பால் இல்லை என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். எனவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்

போக்கவும், தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்குப் பால் கிடைக்க வழி செய்யவும், தோட்டத் தொழிலாளர்கள் மாடு வளர்க்க ஏற்பாடு செய்து அவர்கள் வாழ வழிவகுக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குழந்தைகளுக்கும் பால் கிடைக்காதது மட்டுமல்ல, சாப்பிடக் கூட இல்லாமல், கால் வயிற்றுக் கஞ்சிக்கூட கிடைக்காமல் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுக்கப்பட்ட தலைப்பிலிருந்து நீண்ட தூரம் விலகிச் சென்று விட்டார். எனவே, அவர் "கால்நடை"க்குக் கிட்டே வரும்படி கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஆர். ராமன் நாயர்: தலைவரவர்களே, பால் என்று சொல்லும்போது, குழந்தைகளுக்குப் பாலோ, உணவோ கிடைக்காத நிலையும் சேர்ந்து வருகிற காரணத்தால், இதைச் சொன்னேன். நீண்டதூரம் விலகிச் சென்றிருப்பேனே யானால், மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை வளர்ச்சி என்று வரும்போது, பால் என்று வருகிறது. பால் குழந்தைகள் சாப்பிடுவதற் காகத் தானே என்று சொல்லும்போது, அந்த நிலை வருவது. எனவே அதைப் பற்றியே பேசுவதும் சரியல்ல தான். எனவே, நான் அதைப்பற்றிப் பேச வில்லை.

தோட்டத் தொழிலாளிக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாடு என்ற அளவி லாவது சர்க்கார் வாங்கித் தர வேண்டும். அவர்களாக, திடீரென்று வாங்கக் கூடிய சக்தி அவர்களுக்கு இல்லை. சக்தி உடையவர்கள் வாங்கிக் கொள்ளட்டும். வசதி உள்ளவர்களுக்கு அரசாங்கம் வாங்கித் தர வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அப்படி மாடுகளை வளர்ப்பதற்கு தோட்டச் சொந்தக்காரர்களை ஒத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும். அவர்கள் கூட ஒன்றும் சும்மா அனுமதிப்பதில்லை. ஒரு தோட்டத்தில் ஒரு மாட்டை மேய்ப்பதற்கு ரூ. 10 வாங்கிக்கொண்டு தான் அனுமதிக்கிறார்கள். இப்படி அரசாங்கம் அவர்களுக்கு மாடுகள் வாங்கித் தர வேண்டுமென்று சொல்கிறபோது, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக வாங்கிக்கொடுத்து, அவர்கள் பார்வையிலேயே விட்டு வைக்கலாம். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும், ஏழை தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்கள் வாழ வழி பிறக்கும் என்று என்னுடைய கருத்தைக் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். மணி: மாமன்றத் தலைவரவர்களே, "கால்நடை வளர்ப்பு" என்ற தலைப்பின் கீழ் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பில்

[திரு. கே. எஸ். மணி] [27th March 1972

விவாதித்துக்கொண்டிருக்கும்போது, நான் என்னைப் பொறுத்த வரையில், ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இந்த விவாதத்தில் பேசுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் கூறினார், "கால்நடை வளர்ப்பதில் ஊழல் மலிந்திருக்கிறது. கால்நடை வளர்க்கின்ற இடங்களில் ஆடுகளும், மாடுகளும், கோழிகளும் குறைந்து காணப்படுகின்றன" என்று சொன்னார்கள். அவர் கூறிய கருத்துக்கு மாற்றுக் கருத்து கூற வேண்டுமென்பதற்காக நான் இதைக் கூறவில்லை. நடக்கிற நடப்பை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் கூறுகிறேன். சொம்ப நீண்ட காலத்திற்கு முன்பு, அதாவது 5, 6 வருஷங்களுக்கு முன்னலெல்லாம், கோழி வளர்ப்பு இடங்கள் என்று கூறி, அங்கே ஒரு போர்டு தான் மாட்டப்பட்டிருந்தது. ஆனால் உள்ளே ஒன்றும் இருக்காது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம், இப்போது கொஞ்சம் கோழிகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய கருத்தினைக் கூறிவிடுகிறேன். இதற்கு மாற்றுக் கருத்து கூற வேண்டுமானால், பிறகு பேசவிருப்பவர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சொன்னால், சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். முன்பெல்லாம் வெறும் கொட்டாய் இருந்தது, போர்டு தொங்கியது. இப்போது கொஞ்சம் கோழிகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள்.

கோழி வளர்ப்பில் நட்டம் இருக்கிறது என்கிறார்கள். ஒத்துக்கொள்கிறேன். கால்நடை வளர்ப்பு என்று சொல்லும்போது, இது லாபத்திற்காக நடத்தப்படுவதல்ல. கால்நடை வளர்ச்சியில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பது தான் நோக்கம். நட்டம் என்று எடுத்துக்கொண்டால், 1967-க்கு முன்னிலிருந்து அது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, இன்று வரை நட்டத்தில் தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதை நடத்துகிற அரசு—அது எத்தகைய அரசாக இருந்தாலும், எந்தக் கொள்கையையுடைய அரசாகவிருந்தாலும், அது நட்டத்தில் தான் நடக்கும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் துறையை எண்ணிப்பார்க்கிற போது, லாபம் நட்டம் என்பதை விட வளர்ச்சி அதிகமா, குறைவா என்பதைத்தான் பார்க்க வேண்டும் என்று என்னைப் பொறுத்த வரையில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அப்படி நட்டம் வருவதற்குக் காரணம் என்ன என்று கூறும்போது, "ஊழல் மலிந்து விட்டது, ஊழல் மலிந்து விட்டது" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட குறுக்கிட்டு, எந்த இடத்தில், எந்தக் காரியத்தில், எப்போது, ஊழல் நடந்தது குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பொதிகாளை

27th March 1972] [திரு. கே. எஸ். மணி]

வாங்குவதில் ஊழல் என்று சொன்னார்கள். பொதிகாளைகள் பஞ்சாயத்துக்களின் மூலமாகத் தான் வாங்கப்படுகின்றன. அப்படிப் பார்க்கும்போது, பல பஞ்சாயத்து யூனியன்களில் பொதிகாளைகள் இல்லை, ஆனால் வஞ்சர்கள் மட்டும் தான் இருந்திருக்கின்றன. அப்படி நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இருக்கிற பஞ்சாயத்து மன்றங்களும் ஊராட்சி கூட்டுமன்றங்களும் அவர்களிடத்தில்தான் இருக்கின்றன. நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் கூட ஒரு யூனியன் தலைவர்தான். எனவே அவருக்கு நிறையத் தெரியும். எப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன என்று. அவற்றையெல்லாம் நான் குறைத்துப் பேச விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரையில், அக்குறைபாட்டிற்கெல்லாம் அரசு பொறுப்பு என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இது இப்போது ஏற்பட்ட ஊழலுமல்ல. ஆனால், காங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்த ஊழல்கள் . .

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் இந்த அரசாங்கத்தைக் குறை கூறியதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை, நண்பர் அப்படி கூறுவதும் சரியல்ல. அன்றும், இன்றும், கால்நடை அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றுதான் கூறி வந்திருக்கிறேனே தவிர, அந்த அரசு, இந்த அரசு என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்கள் பொதிகாளை வாங்குவது பற்றிச் சொன்னார்கள். இதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு பொறுப்பு அதிகமில்லை. வெட்டரினரி டாக்டர்கள் எந்தப் பொதி காளையைக் குறிப்பிட்டு வாங்க வேண்டுமென்று சொல்கிறார்களோ, எதற்கு சர்டிபிகேட் கொடுக்கிறார்களோ, அதைத் தான் பஞ்சாயத்து யூனியன்கள் வாங்குகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் அவர்களாகவே நேராக வாங்குவதற்கு அதிகாரமேதுமில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். மணி: நன்றி. எங்கள் அரசு, உங்கள் அரசு என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையென்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் ஊழல், ஊழல் என்ற பேச்சு வந்தது. வராமல் இல்லை. அப்படி ஊழல் என்று சொன்னதால் தான், இதைச் சொன்னேன். அடுத்து, பொதி காளைகள் வாங்குவதில், பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பொறுப்பு இல்லை, அதிகாரிகளுக்கும், அரசாங்கத்தின் இலாக்காவுக்கும் தான் பொறுப்பு என்று கூறினார்கள். அதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. இதில் எல்லாத் தரப்பினருக்கும் பொறுப்பு இருக்கிறது. ஊராட்சி மன்றம் கூடித் தான் முடிவு எடுக்கிறது. இன்ன காளை வாங்க வேண்டும், இன்னாரிடம் வாங்க வேண்டும், இந்த முறையில் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூட கூட்டுமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு தான், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த

அதிகாரம் அவர்கள் கையில் தான் இருக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்வேன். பொதி காளை நல்ல நிலையில் இருக்கிறதா? திடகாத்திரமாக இருக்கிறதா? இவ்வளவு ரூபாய் பெறுமா என்றெல்லாம் "சர்டிபை" பண்ணுகிற பொறுப்பு, உரிமை அவர்களிடம் தானிருக்கிறது. இன்னும் கூட தெளிவாகச் சொல்லுகிறேன். அரசியல்வாதிகள் தலையீடு இல்லாமல் இருந்திருந்தால், அங்கே நாணயமும் குவிந்திருக்கும்.

பாலில் தரமில்லை, சென்னையில் பால் தரமானதாக இருக்கிறது என்று எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் இரண்டு பேர் ஒத்துக்கொண்டார்கள். கிராமங்களிலிருந்து வருகிற பால் தரமானதாக இல்லையென்று சொன்னார்கள். மாடு வாங்குவதற்கு வசதியளிக்க வில்லையென்று சொன்னார்கள். கால் நடை பராமரிப்புப்பற்றி, கால்நடை இன வளர்ச்சிபற்றி இந்த இலாகா பொறுப்பேற்றிருக்கிறது. மாடு வாங்கிக் கொடுக்க இந்த இலாகா முன்வரவில்லை. மாடுகளை வளர்ப்பதற்கு, அதன் வளர்ச்சியைப்பற்றிச் சொல்லிக் கொடுப்பதற்கு, மாடுகளைப் பேணி வளர்க்க இந்த இலாகா இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால் மாடு வாங்கிக் கொடுப்பதற்காக . . .

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாடு வாங்கிக் கொடுக்கும் திட்டங்களை அரசு மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கறவை மாடு வாங்கிக் கொடுக்கிற திட்டம் என்பது நேரடியாகக் கால்நடைத் துறையினரால் நடத்தப்படவில்லை. மாவட்ட ஆட்சியாளர்களின் மேற்பார்வையில் 'ஸ்மால் பார்மர்ஸ் ஸ்கீம்', சிறு விவசாயிகள் திட்டம் என்று 'சீ பைனான்சிங் கார்ப்பரேஷன்' உதவியுடன் நடத்தப்படுகிறது. இடையில் தான் கால்நடைத் துறையினர் வருவார்கள். ஆகவே இந்த இலாகாவின் நேரடிப் பணியாக இல்லை.

திரு. கே. எஸ். மணி: மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கூட்டுறவுத் துறையிலும் மாடு வாங்க, கடன் கொடுக்கப்படுகிறது. எங்கள் ஊரில், சுமார் 16,800 சொச்சம், சின்ன கிராமமாக இருந்தாலும், மாடு வாங்க கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுத்திருக்கின்றன. பலர் மாடு வாங்கி வைத்திருக்கிறார்கள். நாம் பால் கறக்கிறோம். தரமான பால்தான் மாடுகளிடமிருந்து கிடைக்கிறது. அப்போது அதன் தரம் குறைவதில்லை. கறந்துகொண்டு எடுத்துப் போகிற போது தரம் குறைகிறது. அதைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அது சில இடங்களில் தளர்த்தப் பட்டிருக்கிறது. தடுக்கப்பட்டும் இருக்கிறது. பாலை எடுத்துப் பரீட்சார்த்தம் பார்த்து, அதன் மேல் பிராசிக்யூஷன் செய்வதற்கு இருக்கிறார்கள் என்றால், ஒரு சிலரிடம் மாமூல் வாங்கிக்கொண்டு அதை நிறுத்திவிடுகிறார்கள். அப்படி இல்லை

யென்றால், நான் போய்ச் சொல்லி அந்த ஆள் நமக்கு வேண்டியவர், இந்த ஒரு தரம் விட்டுவிடுங்கள், ஏற்கனவே இரண்டு தரம் பிடித்திருக்கிறார்கள், ஆகவே அபராதம் கிடையாது, ஜெயில் தண்டனை வந்துவிடும் என்ற அளவுக்குச் சிபாரிசு செய்து அங்கு அரசியல் கலக்கிறது. ஒரு தரப்பில் மட்டுமல்ல என்பதற்காகச் சொல்லுகிறேன். பாலின் தரம் குறைய இந்த இலாகா மட்டும் பொறுப்பில்லை. இந்த இலாகாவில் இருக்கிற பணியாளர்கள் பொறுப்பில்லை. "சர்டிபை" செய்ய டாக்டர்கள் இல்லை. பல கோணங்களில் பாலின் தரம் குறைகிறது. அத்துடன் இப்போது பால் மாடுகள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுப்பதற்கு, கூட்டுறவுத் துறை பணம் ஒதுக்குகிறது. ஆனால் ஒரு சங்கடம். கிராமங்களில் போய் பாலை யார் வாங்கிக்கொள்ளுகிறார்கள் என்று உறுதி தருவதற்கு யாரும் முன்வரவில்லை. திடீரென்று ஒரு பத்து நாளைக்குள் 5,000 லிட்டர் பால் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கி, அதில் ஏதாவது காரியம் செய்து, அதுவும் முடியாமல், வேறும் பால் நஷ்டப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. பத்து நாள் பால் கிடைக்கவில்லை. பத்தாயிரம் லிட்டர் தேவை என்ற நிலை வருகிறது. இதைக் கூட்டிக்குறைத்துப் பார்க்கும் பொழுது, பால் வாங்குகிறவர்கள் உறுதியளித்து, திட்டவட்டமாக இவ்வளவு பால் நீங்கள் தந்தால் வாங்குகிறோம் என்று சொல்லுகிற அளவுக்கு சங்கங்களின் தரம் இல்லை. அதற்கான நேரமும் இல்லை, வசதிகளும் இல்லை. அப்படிப்பட்ட காரணத்தால், கடன் கேட்பவர்களும் இந்தக் கடனைப் பெற்று மாடுவாங்கினால், எப்படி வளர்ப்பது, எப்படி பால் விற்பது, 'சீபேயிங் கெப்பாசிட்டி' எப்படி வரும் என்று பார்த்து கடன் கேட்க முடியாமல் தயங்குகிறார்கள். ஆகவே மாடு வாங்குவதற்குக் கடனும் தாராளமாகக் கிடைக்கிறது. இன்னொன்று. இந்தப் பொலிகாளைகள் வசதிபடைத்தவர்களிடம் தான் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில், அதை வசதி படைத்தவர்களிடம் கொடுப்பதில் அவ்வளவு கெடுதல் இல்லையென்று நான் கருதுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: நான் சொன்னது அரசாங்கத்தில் தேவையான மாடுகள் இருந்தால் நல்லது. ஏழைகள் வாங்க முடியவில்லை. வசதி படைத்தவர்கள் சொந்தப் பணத்தில் வாங்கியிருக்கிறார்கள். ஏழைகளுடைய பசுக்கள் கலப்பு இனம் சேர்க்க முடியாமல் அவர்கள் தயவை நாடி நிற்கிறார்கள். ஆகவே ஏழைகளிடத்தில் இருந்தால் நல்லது என்று சொன்னேன்.

திரு. கே. எஸ். மணி: ஏழைகளுக்குப் பணம் கொடுத்து மாடு வாங்கிக் கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது. மாடு வாங்குவது இன வளர்ச்சிக்குத் தான். இன வளர்ச்சிக்கு வாங்கும்போது, ஏழைகளுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, வாணிபமாக மாறுகிறது. 5, 6 மாதம்

வைத்திருந்து உடல் கட்டு இருக்கிற வரையில், எவ்வளவு இன விருத்தி செய்ய முடியுமோ, அந்த அளவு ரூ, 5, 10 கொடுத்தால் அதை வாங்கிக்கொண்டு அதை மட்டும் வருமானமாக வைத்துக்கொண்டிருப்பதைத் தவிர, டாக்டர் என்ன சர்டினப பண்ணுகிறார்களோ இவ்வளவு தீவனம் போடவேண்டும், இவ்வளவு பராமரிப்பு செய்ய வேண்டும் என்று, அதன்படி ஏழைகள் 10 பேரிடத்தில் இருந்தால் 9 பேர் செய்வதில்லை. ஒன்று இரண்டு பேர் செய்கிறார்கள். சொந்த மாடுகளையே வளர்க்க முடியவில்லை. வளர்ப்புக்குக் கொடுக்கப்பட்ட மாடுகளை இதுவரையில் பார்த்தால், இன வளர்ச்சி அடைந்திருக்கின்றன. நான்கு, ஐந்து இன மாடுகளில் கூட, காங்கேயம், உம்பளாச்சேரி, போன்ற இனங்கள் போகிற இடங்களில் தெரிகிறது. மற்ற நான்கு வகை மாடுகள் கண்டிப்பாக எங்கு போனாலும் தென்படுவதில்லை. காரணம் உம்பளாச்சேரியும், காங்கேயமும் கோயம்புத்தாரிலிருந்து தஞ்சாவூருக்கு வருகிறதில் அதிகமாகத் தென்படுகிறது. பாக்கி மாடுகள் தெரியவும் இல்லை, இன வளர்ச்சி கூட ஆகவுமில்லை. இந்தக் காங்கேயம், உம்பளாச்சேரி, இனங்களைத் தவிர மற்ற 3, 4 வகை மாடுகளை அதிகம் அபிவிருத்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளைச் சமர்ப்பிக்கக் காத்திருக்கிறேன். இதற்குக் காரணம் மாடு அதிகம் பால் தருவதோடு கூட, அது தருகிற ஊட்டச்சத்தை விட அதிகமான ஊட்டச்சத்து கொடுக்கக்கூடிய அளவுக்குச் சில மாடு வகைகள் அமைந்திருக்கின்றன. ஆகவே அதற்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. அவைகளை ஏககாலத்தில் செய்ய முடியாமல் மாட்டுக்கு இருக்கிற சுயத்தன்மையும் குறைகிறது. அப்படியில்லாமல் குறைந்த செலவில் தீவனம் போட்டு வளர்க்க எந்த இனம் உபயோகமாக இருக்குமென்று பரீட்சார்த்தமாகப் பார்த்து, அந்த இனத்தை அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று. கோழி வளர்ப்பில் லாபமில்லையென்று சொல்லுவதைவிட லாபம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். நானே கூட கோழி வளர்க்கிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்பு வளர்க்க ஆரம்பித்தேன். 3 ஆண்டுகளுக்கு முன்பு கோழி வளர்த்தேன். இப்போதும் வளர்க்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புள்ள நிலைக்கும் இப்போதிருக்கும் நிலைக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. கொஞ்சம் லாபம் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே 1964-ல் 30 கோழிகள் வாங்கினேன். 2 கோழிகளைக் கடைசியாக அடித்துத் தின்று விட்டேன். பாக்கி 48-ம் இறந்துவிட்ட காரணத்தால் . . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்போது எல்லாம் கோழிக் குஞ்சுகள் கேட்பவர்களுக்கு இலாகா கொடுக்கும்பொழுது அதற்கு முன் கூட்டியே

குஞ்சுகளுக்குத் தடுப்பு மருந்து தருகிற முறை இருக்கவில்லை. அண்மைக் காலத்தில் தடுப்பு மருந்து கோழிக் குஞ்சுகளுக்குப் போட்டு, 1, 2 மாதம் வளர்ந்த பிறகு, நோய் நின்ற பிறகு அவைகள் இறப்பதில்லை. ஆகவே கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக இந்தத் துறையில் கோழி வளர்ப்பு வரவர மக்களுடைய ஆதரவைப் பெறுகிற முறையில் நஷ்டமில்லாமல் வளர்ந்து வருகிறது.

திரு. கே. எஸ். மணி: அதைத் தெரிவிப்பதற்குத் தான் இதைக் குறிப்பிட்டேன். சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் அதிக லாபம் கிடைக்கிற அளவுக்கு நான் நல்ல பலன்களைப் பெற்றிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்குக் காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துத் தந்த விளக்கம் தான். இன்னும் பீல்டில் கவனம் செலுத்தக் கூடிய கிழ்த்தர அரசாங்கச் சிப்பந்திகள் தேவை. டாக்டர் தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். பீல்டு ஏஜென்ட்ஸ் தேவைப்படுகிறார்கள். இந்தக் கோழி, இந்த மாட்டுக்கு இந்த நோய் இருக்கிறது, நீங்கள் வந்து பார்த்து மருந்து தாருங்கள் என்று சொல்லலாம். இவ்வாறு டாக்டர்களை அழைத்து வர நமக்கும் டாக்டருக்கும் உள்ள இடைவெளியில் அலுவலர்கள்

(Mr. Chairman in the Chair.)

அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இதை ஏற்பாடு செய்துகொடுத்தால், அதை நல்ல முறையில் பயன்படுத்த முடியும். இன்றையதினம் பல நோய்களும் ஆராய்ச்சி செய்யப்பட்டு தடுப்பு ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்டு பல நோய்களும் குணப்படுத்தப்பட்டு அவை மறுபடியும் வராத நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இனி தடுப்பு ஊசி போட வேண்டுமென்ற தேவையே இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு கிராமப்புறங்களிலே ஒரு நிலை நிச்சயமாக கடந்த ஒரு வருஷகாலமாக ஏற்பட்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இந்த நிலை வளர வேண்டும். மேலும் ஊட்டச்சத்துள்ள தீனி கொடுத்து இப்போதுள்ள சாதாரணப் பசு, எருமைகளே அதிகமாகப் பால் கறக்கும்படி, அதாவது குறைந்த செலவில் அதிக அளவிற்கு வருமானம் வரத்தக்க அளவிற்கு உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ஏதாவது செய்ய வேண்டும். அடுத்து, ஒரு சில இடங்களிலே தனிப்பட்டவர்களிடம் சிறந்த எருதுகள் இன அபிவிருத்தி செய்வதற்கு என்று இருக்கின்றன. ஆனால் இது வட்டாரத்திற்கு ஒன்று இரண்டு என்ற அளவில்தான் இருக்கின்றன. உதாரணமாக முதலில் ஆடுதுறை 27, ஐ.ஆர். 8 போன்ற விதைகள் எல்லா இடத்திலும் இல்லையென்றாலும் இப்போது அதை அபிவிருத்தி செய்து அநேகமாக எல்லா விவசாயிகளும் இப்படிப்பட்ட விதைகளை வைத்திருக்கின்றார்கள். அது போன்றே சிறந்த ரக மாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக

எருதுகள் அதுவும் இரண்டொரு வகைகள்தான் இருக்கின்றன. அதுவும் போதிய அளவில் இல்லை. எனவே இவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எனது வேண்டுகோளைச் சமர்ப்பித்து முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது கடந்த சில ஆண்டுகளாக இந்தத் துறையில் ஊழல்கள் பெருகிவிட்டன என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களும் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன, அவை எங்கே எப்படி எப்படி எப்போது நடந்திருக்கின்றன என்பதுபற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலிருந்தே இப்படிப்பட்ட குறைகள் வரும்போது, 'இப்படிப்பட்ட ஊழல்கள் நடந்து விட்டன, அதிலும் கடந்த நான்காண்டு காலத்தில் நடந்து விட்டன' என்பதைப் பற்றி எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் இப்போது சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றுகூட நான் கருதுகிறேன். காரணம் 1967 ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட கால்நடைப் பண்ணைகளில் ஊழல்கள் நடந்திருப்பதைப் பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவை அரசு நியமித்தது. அரசாங்கம் நியமித்த அக்குழு கடந்த நான்காண்டுகளில் இந்தத் துறையில் மிகப் பெரிய ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதையும் அப்படிப்பட்ட ஊழல்கள் எங்கெங்கே நடந்திருக்கின்றன என்பதைப்பற்றியும் ஆராய்ந்து அதுபற்றிய நீண்டதொரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அக்குழுவினரின் அறிக்கை என்னிடம் இருக்கிறது. மேலவை உறுப்பினர்களுக்கும் இவ்வறிக்கையின் நகல்கள் அளிக்கப்பட்டன. பத்திரிகைகளிலும் இவை பற்றி விவரமாக வந்துள்ளன. நான் இந்தத் துறையில் அனுபவம் பெற்றவன் இல்லையென்றாலும் கூட, இத்துறைபற்றி ஓரளவிற்குப் பேசவேண்டுமென்ற ஆர்வம் வந்ததற்கே காரணம் அவ்வளவு மோசமான முறையில் அரசாங்கத்தைப்பற்றி, ஆங்கிலத்தில் 'டேமேஜிங்' என்று சொல்லுவார்கள், அதற்குச் சரியாக தமிழில் என்ன வார்த்தை என்று தெரியவில்லை, அந்த அளவிற்கு இந்த அறிக்கையில் கொடுத்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையிலே ஒரு பகுதியை மாண்புமிகு அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"The Committee said "some farms have been grossly mismanaged. Several irregularities have taken place during the last four years in all livestock farms in general and at Hosur cattle farm in particular."

அது மட்டுமில்லை, இன்னொரு இடத்தைப்பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1970-ல் அறிக்கை கொடுக்கப்பட்டு 1971-ல் தான் அது நமது கைக்குக் கிடைக்கிறது. ஆனால் கமிட்டியை நியமித்தது 1967-ல் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இந்த நான்காண்டு காலத்தில் இந்த அரசுத் துறையில் நடந்துள்ள ஊழல்கள்பற்றி இந்த அறிக்கையில் மிக விவரமாகச் சொல்லப்பட்டுக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்கு முன்பு நடந்துள்ள ஊழல்கள், இதற்குப் பிறகு நடந்துள்ள ஊழல்கள் என்று இந்த அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு சிறு கருத்து விளக்கம் பெறுவது நல்லது என்று கருதுகிறேன். எனென்றால் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் ஒரு நடவடிக்கை ஹோசூர் பண்ணையில் 1967-க்கு முன்பும் 1967-க்குப் பிறகும் தொடர்ந்து தவறுகள் பல நடந்து வந்த காரணத்தினால் அன்றைக்கு கால்நடைத்துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் அங்கேயிருந்த பலர் மீது நடவடிக்கை எடுத்து அவற்றுக்கு என்ன முடிவு கட்டவேண்டுமோ அதைக் கட்டினார்கள். அது போன்று பல பண்ணைகளிலிருந்த பெரும் ஊழல் காரணமாக பல மூடப்பட்டன. பலர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பலர் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த அறிக்கையில் காணப்பெறும் கருத்துக்கள் பல நடைமுறைப் படுத்தப்பட்டு இப்போது அவை நடைமுறையில் இருந்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள், 'ஊழல்கள் எங்கே நடந்திருக்கின்றன' என்று. எனவே 1967-க்குப் பிறகு நடந்த ஊழல்கள்பற்றி கமிட்டி சொன்னதையே நானும் குறிப்பிட்டேன். 1967-க்கு முன்பு மட்டுமல்ல, 1967-க்குப் பிறகு நடந்துள்ள ஊழல்கள் பற்றியும் அக்குழு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது தன்னுடைய அறிக்கையில். அவர்களுடைய அறிக்கையைப் பார்க்கும்போது, ஒரு அரசாங்கத்தால் அமைக்கப்பட்டதொரு குழு இவ்வளவு மோசமான முறையில் அரசாங்கத்தைப் பற்றி விமர்சனம் செய்திருப்பதைப் பார்க்கும்போது — பல்வேறு குழுக்களின் அறிக்கைகளை நாம் படித்திருக்கின்றோம், ஆனால் இந்தக் குழு தனது அறிக்கையில் அரசாங்கத்தைப்பற்றி விமர்சனம் செய்திருப்பதைப் போல, வேறு எந்தக் கமிட்டியும் விமரிசனம் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள் "Policies and programmes which serve as guidelines, get initiated or altered as per inclinations (we do not want to use a stronger word) of individual officers." அதாவது அரசாங்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் இவைபற்றி என்ன நடந்திருக்கிறது என்றால், அதிகாரிகள் தங்களுடைய விருப்பு-வெறுப்புகளுக்கு உரிய முறையில் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நடைமுறைத் திட்டங்களையும் செயலாற்றி அவர்கள் இஷ்டப்படி அவை மாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். இதைவிட இன்னும் அழுத்தமான கண்டனவார்த்தைகளைச் சொல்லத் தேவையில்லை என்று அந்தக் குழு தன்னுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொல்லத்தக்க அளவிற்கு ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. அவர்களும் எங்கெங்கே எப்படி எப்படியெல்லாம் ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதிகமாக இத்துறை பற்றிய அனுபவம் எனக்கு இல்லையென்றாலும் இத்துறை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நேரடியாகச் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென்று விரும்பியதற்கே காரணம் இந்த அறிக்கையை ஓளவிற்குப் படித்து அறிந்து கொண்டதினால்தான். இந்த அறிக்கையில் ஒரு சில முக்கியமான கொள்கைகளைக் கூட வரையறுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். நமது நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் குறிப்பிட்டது போல, 'கேட்டில் இன்ஷூரன்ஸ்', கால்நடை இன்ஷூரன்ஸ் பற்றிப் பரிந்துரைகள் கொடுத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். அவை பற்றி அரசு முடிவெடுத்திருக்கும் என்றே நான் நம்புகிறேன். இரண்டாவது, அந்தப் பரிந்துரையில் சொல்லப்பட்டிருப்பது, "ஒவ்வொரு பண்ணைகளும் பார்வையாளர்களை நியமிக்க வேண்டும்" என்று சொல்லியிருப்பதாகும். இதற்கு முக்கியமான காரணம் பல பண்ணைகளில் நடைமுறையில் அடிக்கடி பல தவறுகள் நடந்துவருவது. அவை அனைத்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதில்லை. ஆகவே கட்சிச் சார்பற்ற முறையில் பார்வையாளர்களை நியமித்து அவர்கள் அடிக்கடி பண்ணைகளைப் பார்வையிட வேண்டுமென்று ஒரு பரிந்துரையைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பரிந்துரைகள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு விட்டனவா அல்லது இனிச் செயல்பட இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த மாதவரம் பால் பண்ணையில் தான் 1964-65-ஆம் ஆண்டிலே பால் சிந்தியதன் காரணமாக இத்தனை இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். அவ்வளவு சிந்துகின்ற நிலைமை இருந்ததால், மாடுகள் அங்கே குறைந்திருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாடுகள் இறந்துவிட்ட நிலையிலும், அங்கிருந்த நிலையைத் தான் அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, குறைந்து விட்டது என்றாலும், 3,400 மாடுகள் 4 ஆண்டுக்குள்ளே குறைந்து விட்டன என்பதைத் தான் குறிப்பிடுகிறோம். அந்த மாடுகள் குறைந்ததால் தான், பாலும் குறைந்திருக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இங்கே, இது எல்லாம் முன்னாலே நடந்தவை, அதற்குப் பிறகு அவைகளை எல்லாம் நீக்கும் பொருட்டு நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், இந்த மாதிரியான தவறுகளையெல்லாம் செய்த அதிகாரிகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே சொல்ல வேண்டும். வேறு நல்ல முறையிலே இன்றைக்கு நாங்கள் இதை நிர்வகிக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது, அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்ட நிலையிலே, அரசாங்கத்தினுடைய் கொள்கைக்கு மாறுக தன்னிச்சையாக நடந்து அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்திய அதிகாரிகளின் மீது எந்தவிதமான தண்டனையைக் கொடுக்க இந்த அரசு உத்தேசித்திருக்கிறது என்பதை இங்கே சொல்ல வேண்டும்.

அமைச்சர் அவர்கள் கூட "பன்றிக் கறி ருசியைப்" பற்றிப் பல இடங்களிலே பேசினார்கள். உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இன்று காலையிலே என்னிடம் வந்து "இனிமேல் நீங்கள் புஹாரி ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட வேண்டாம்" என்று சொன்னார்கள். ஏன் என்று நான் கேட்டேன். அவர் சொன்னார், நான் மாமிசம் சாப்பிடுபவனுக இருந்தாலும் கூட அங்கே மாட்டுக் கறியும், பன்றிக் கறியும் கலந்து போடுவதாக என் மனதிலே படுகிறது என்றார். நான் ஏதோ மாமிசம் சாப்பிடுபவன், அங்கே சென்று சாப்பிடுபவன் என்று நினைத்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், இந்த மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் மத்தியிலேயே மாட்டுக் கறியும், பன்றிக் கறியும் சாப்பிடக் கூடாது என்ற தப்பு அபிப்பிராயம் இருக்கிறது. எனவே, அந்த அபிப்பிராயத்தை முதலிலே போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களைத் திருத்திவிட்டால், பிறகு "சைவர்களாக" இருக்கின்ற என்னைப் போன்றவர்களும் மாற வாய்ப்பிருக்கும். அண்மையிலே ஜப்பான் நாட்டிற்கு நான் சென்றபொழுது, அங்கே விருந்திலே "சுக்கியாக்கி" என்ற பதார்த்தத்தைக் கொண்டுவந்து வைத்தார்கள். சாப்பிட்டவர்கள் மிகவும் சுவையாக இருக்கிறது என்றார்கள். நானும் அதை வாங்கிப் பார்த்தேன் அது சர்க்கரைப் பொங்கல் மாதிரி இருந்தது; அதன் சுவைக்கு என்ன காரணம் என்று கேட்கப்போக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள், அது மாட்டுக் கறியிலே

செய்யப்பட்டது என்றார்கள். எனவே, அந்த மாதிரி அந்த பன்றிக் கறியை நல்ல முறையிலே செய்து விற்று, வாங்கிச் சாப்பிடுபவர்கள் அதைப்பற்றி நல்ல முறையிலே சொன்னால், பன்றிக் கறியைப் பற்றிய விளம்பரம் நாட்டு மக்கள் மத்தியிலே நல்ல முறையிலே பரவி, நிறையப் பேர் அதைச் சாப்பிட முன்வந்து சாப்பிடுவார்கள். மேலும் அதை வெளிநாடுகளுக்கும் அனுப்புவதற்கு எல்லாத் தொழில் முறையையும் அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைக் கூறி எனது பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, கால்நடை வளர்ப்பு குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கால்நடைகள் வளர்ச்சியின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 1964-ஆம் ஆண்டிலே 108.59 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகமாக இருந்தாலும், அவைகள் தரத்திலே வளரவில்லை என்று தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதே போல் இந்த நாட்டு மக்கள் உபயோகிக்கக்கூடிய பால் ஆண்டு ஒன்றுக்கு 30 லிட்டர் என்ற வகையில் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கின்றது. கால்நடைகளைப் பொறுத்த வரையில் நல்ல தாமுள்ளவை களாக வளர்ச்சி பெற்ற வேண்டுமென்ற கருத்து எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்தத் துறையின் மீது ஏற்கனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கூட ஆரம்பத்திலே இந்தத் துறையைப் பற்றி வேறுகச் சொல்லிவிட்டு இறுதியிலே முடிக்கும் பொழுது ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பன்றி இறைச்சியின் ருசி குறித்து எடுத்துச் சொன்ன விளக்கத்தைப்பற்றிச் சொல்லுகிறபொழுது, அமைச்சர் அவர்களது பேச்சால் சைவர்களாக உள்ளவர் கள் கூட இந்த ருசியை அறிவதற்கு வேண்டிய நிலைக்கு வந்துவிடுவார்கள் என்ற நிலையை எடுத்துச் சொன்னார்கள். இதுபோன்ற பேச்சாற்றலால் மக்கள் சமுதாயத்திற்கு உணர்த்திட முடியும். அமைச்சரது விரிவான விளக்கங்கள் இந்தத் துறைக்கே கிடைத்திருக்கின்ற பெரிய பெருமை என்று நான் கருதுகிறேன். கால்நடைகள் எப்படியாவது இருக்கும், எப்படியாவது வளரும் என்றுதான் முன்பெல்லாம் கருதப்பட்டு வந்தது. ஆனால் . . . .

திரு. என். சுந்தரேசத் தேவர்: இந்த பன்றிக் கறியை பொறுத்த மட்டில், எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தச் சந்தே கத்தைத் தீர்த்து வைக்க வேண்டும். பன்றிக் கறியின் சுவையைப்பற்றிச் சொன்னார்கள். இங்கே இருக்கும் பன்றிகள் எல்லாம் மலம் சாப்பிடுகின்றன. ஆனால், வெளிநாடுகளிலே இருக்கும் பன்றிகள் எல்லாம் காய் கறிகளைச் சாப்பிடுகின்றன. எனவே அந்தப் பன்றிகளின் கறி சுவையாக இருக்கும்.

ஆனால் இங்கே மலம் சாப்பிடும் பன்றிகளின் கறிக்கு அப்படிப்பட்ட சுவை எப்படி வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இங்கே அரசாங்கத்தின் மூலமாக யார்க் ஷயர் என்ற வெளிநாட்டுப் பன்றிகளைத் தான் பண்ணைகளிலே வளர்க்கிறோம். இப்படிக் கிட்டத்தட்ட 1,000 பன்றிகளுக்கு மேல் தமிழ் நாட்டிலே இருக் கின்றன. ஒரு வாரத்திற்கு 10 அல்லது 15 பன்றிகள் வரை இறைச்சிக்காக அறுக்கப்பட்டு, வழங்கப்படுகின்றன. அவைகளையெல்லாம் மேல் நாடுகளிலே வளர்ப்பதைப் போல் தான் நாமும் வளர்க்கிறோம். அதை மக்களும் வளர்க்க முடியும்; அதனால் பயன் பெற முடியும். ஆனால் நாட்டுப் பன்றிகளைத் தின்ப வர்களும் நம் தமிழ் நாட்டிலேதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. காட்டூர் கோபால்: ஆனால் கால்நடைகள் எப்படியோ வளரும் என்று இருந்த மக்கள் இன்னின்ன வகைகளிலே எல்லாம் திட்டமிட்டு அவைகள் செம்மையாக வளர்க்கப்பட்டாக வேண்டும் என்று உணர்ந்துள் ளார்கள். கால்நடை வளர்ச்சி இன்னின்ன வகைகளிலே பெரிதும் பயன் படுகின்றது என்ற விளக்கம் நாட்டு மக்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் மக்கள் புரிந்துகொள்ளத் தக்க வகைகளிலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கங்களைத் தருகின்ற காரணத் தினால், இந்தத் துறை மேலும் நல்ல வகைகளிலே செயல்படும் என்று நம்பு கிறேன். பன்றி வளர்ப்பின் அவசியம் குறித்தும் பன்றிக் கறியின் ருசி குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு கட்டங்களிலே எடுத்துச் சொல்லியிருப்பது, "பன்றி" என்கின்ற சொல்லைக் கேட்டவுடனேயே மக்களுக்கு வருகின்ற அருவருப்பைப் போக்குகின்றதாக இருக்கிறது; இது உண்மை யிலேயே இந்தத் துறையில் பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்தக் கால்நடை வளர்ப்புத் துறையில் "கறவை மாடுகள்" நமது மாநிலத்தில் எல்லா இடங்களிலேயும் சீராக வளருகின்ற வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றபடி "கோயில்கள், மடங்கள், அறை இல்லங்கள் போன்ற நிறுவன நிர்வாகிகளின் கீழ் பசுக்களைக் காக்கின்ற" வகையிலே திட்டம் இருப்பதாகவும், அதே போல் இன்னொரு இடத்திலே "சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், குறைந்த நிலமுள்ள உழவர்கள்—வேளாண்மைத் தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் கீழ், பால் பண்ணைக் கால்நடைகள், கோழியினங்கள் ஆகியவற்றை வளர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்" என்றும், "பால் பண்ணை வைத்துள்ள உழவர்கள், கோழியின வளர்ப்போர் ஆகியோருக்கு, கூட்டுறவு வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவற்றிலிருந்து கடன்கள்

பெறுவதற்கு வகை செய்யப்படும். மூலதனச் செலவில் 25 சதவீதம் உதவித் தொகையாகக் கிடைக்கும்" என்று இந்த குறிப்பிலே கோடிட்டுச் சொல்லப் பட்டிருக்கிறது வரவேற்கத்தக்கதாகும். மேற்கொண்டும் எந்த வகைகளிலே பலனுள்ள திட்டங்களைச் செயலாற்ற முடியும் என்று ஆராய்ந்து பார்த்து, தனியார்களுக்கும் அவர்கள் குக்கிராமத்திலே இருந்தாலும் சரி, பெரிய நகரங் களிலே இருந்தாலும் சரி, கால் நடை வளர்க்கிறவர்களுக்கு இந்த உதவிகளோடு மேலும் என்ன செய்ய முடியும் என்று ஆராய்ந்து, அவைகளைச் செய்யுமானால், நிச்சயமாக கறவை மாடு வளர்ச்சிக்கு விரைவான வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். இதேபோல் கூலி விவசாயிகள்கூட, நாடு சுதந்திரம் அடைந்து 25, 26 ஆண்டுகள் கழிந்த பின்னுலேயும், தங்க ளுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு, சரியான வழியின்றி அவதிப் பட்டுக் கொண்டிருக்கிற நிலை மாறவில்லை. அந்தக் கூலி விவசாயிகள் கூட்டுறவு மூலமாகவோ அல்லது தனிப்பட்டோ கிராமங்களிலே சொந்தமாக அனைவரும் வருவாய் பெறுவதற்கு வேண்டிய ஒரு வழியினை இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை வளர்ச் சியிலே நான் என்னுடைய சொந்த அனுபவத்தைத் தான் சொல்லுகிறேன். கிராமங்களிலே மட்டுமல்லாமல், நகரங்களிலே கூட 2 அல்லது 3 கறவை மாடுகள் ஒருவர் வைத்திருப்பாரானால், அது ஒரு பெரிய வருமானமாக அவருக்கு இருந்து வருகிறது என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியும். சற்றுக் கடின மாக உழைத்தும் கறவை மாடுகள் வளர்ப்பு மீது தனிக் கவனமும் செலுத்த வேண்டும். இதைச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் தான், இந்தக் கால்நடை வளர்ச்சியின் பேரில் பேசுவதற்கு விரும்பினேன். கோழி வளர்ச்சி யிலே கூட, கோழிகளுக்கு வந்துவிடுகிற சேதாரத்தைக் கணக்கிடுகிறபோது, அந்த வருமானம் போதாதென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. தடுப்பு ஊசி போடுவதால் இந்த இரண்டாண்டு காலமாகத்தான் சேதாரம் குறைத் திருக்கிறதென்றும் தெளிவாக்கப்பட்டது. ஒரு குறுகிய எண்ணிக்கையிலே கூட அவரவர்கள் வீடுகளில் உள்ள இடவசதியையொட்டி கோழிகளை வளர்ப் பதில் ஓரளவு கணிசமாக வளர்ச்சியைப் பெருக்கலாம். அவர்களுடைய சுய தேவைகளும் பூர்த்தியாகி, ஓரளவுக்கு வருவாயும் கிடைக்கின்ற நிலையிருக் கிறது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய நகரங் களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட விருப்பமுள்ளவர்களுக்கு, இந்தத் துறை என்னென்ன நலன்களைச் செய்ய முடியும் என்று ஆய்ந்து அறிவிக்கின்ற நிலையில் பிரத்தியட்ச நடைமுறை நிலைமையை ஆய்ந்து அவர்களுக்கு உதவுகின்ற வகையில் இந்தத் துறையில் "நோடி அலுவலர்கள்" அமர்த்தப்பட்டு, அத்தகையவர்கள் நேரிடையாகக்

கேட்டறிந்து ஆய்வு நடத்தி, இந்த வளர்ச்சிக்கான நல்ல முறைகளை மேற் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். குறுகிய காலத்திலேயே இந்தக் கால்நடை வளர்ச்சி மீது மக்கள் மத்தியிலே ஒரு நல்ல கவனத்தை ஈர்த்திருக்கின்ற வகையில் இந்தத் துறை பணியாற்றியுள்ளது என்று சொல்லி, இந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும், ஊழி யர்களுக்கும், பாராட்டினைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கால் நடைத் துறை விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கொடுத்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை பற்றி நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள், "மேழிச் செல்வம் கோழை போகாதென்று".

மிஸ்டர் சேர்மன்: விவசாயத்திற்குத்தான் மேழிச் செல்வம் என்று சொல்லுவார்கள். கால்நடைக்கல்ல.

திரு. சி. வி. ராஜகோபால்: நம் முன்னோர்களெல்லாம் பெரிய பொன்மொழி களெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஒன்றிரண்டு பொன்மொழிகள் வேண்டு மானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைச் சொல்லச் சொல்வேன். கால்நடையைப்பற்றிப் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கமிட்டி சுட்டிக்காட்டிய குறையைக் கூறினார்கள். மாண்புமிகு திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஊழலைப்பற்றிப் பேசினார்கள். ஊழல் என்பது பாரம்பரியமாக வளர்ந்த ஒன்று. அது குறைக்கப் பட வேண்டுமென்றால், அது ஆட்சியாளர்களுடைய கடமை. இந்தக் கமிட்டி நம்முடைய ஆட்சியாலே ஏற்படுத்தப்பட்ட கமிட்டி. அது மிக்க தைரியமாகக் குறைகளைக் கூறுகிறபோது, ஜனநாயகம் எவ்வளவு மலர்ந்திருக்கிறது என்பதைக் காண வேண்டும். எவ்வளவு நியாயமாக இந்தக் கமிட்டி குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறது என்பதைப்பற்றிப் பெருமைப்பட வேண்டுமே தவிர, உங்கள் கமிட்டியே இவ்வளவு குறைகளைக் காட்டியிருக்கிறதே என்று அந்தக் கமிட்டியைக் குறை சொல்வதையோ, குறைத்துக் கூறுவதையோ நான் விரும்பவில்லை. அந்தக் கமிட்டியார் இவ்வளவு தைரியமாக ஊழல்களையும், குற்றங்களையும் எடுத்து வைத்து, இவைகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அந்தக் கமிட்டியாருக்கு என்னுடைய நன்றியறிதலையும், பாராட்டுதலையும் முதற்கண் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறு வயதில் படிக்கின்றபோது, கால்நடை ஏராளமாக இருக்கும். மக்கள் இதைவிடக் குறைவாகத்தான் இருப்பார்கள். பால் ஏராளமாகக் கிடைக்கும். பால் அருந்துவதற்கு ஆளில்லாமலிருந்த காலம் ஒன்று இருந்தது.

[திரு. சி. வி. ராஜகோபால்] [27th March 1972

இப்போது அந்தக் கால்நடை தொகை குறைந்து விட்டது. மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது 2 அல்லது 3 வருஷத்திற்கு ஒரு முறை மாடு கன்று போடுகிறது. இந்தச் சின்னக் குறை ஒன்று இருக்கிறது. எப்படி மனித சமுதாயம் குழந்தைகளை ஆண்டுக்கு ஒன்றாகப் பெற்றுவிடுகிறதோ, அதைப் போல கால்நடைகள், குறிப்பாக மாடுகள் கன்றுகளை நிறைய உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதவரம் பால் பண்ணையில் மாடுகள் இருக்கின்றன. நல்ல அருமையான மாடுகள் இருக்கின்றன. ஆனால் மட்டமான மாடாக இருந்தால், துரத்தி விடுகிறார்கள். அதன் கதி என்ன ஆவது? ஒரு லிட்டர், இரண்டு லிட்டர் கறக்கும் மாட்டை, மாதவரம் பால் பண்ணையில் கழித்துக் கட்டு என்று சொல்வது ஒரு பால் பண்ணைக்கு அழகல்ல. ஒரு லிட்டர் கறக்கும் மாட்டை, நல்ல சத்துள்ள தீவனத்தைப் போட்டு, 20 லிட்டர் கறக்கும்படியாகச் செய்தார்களானால், அந்தப் பால் பண்ணையைப் பாராட்டலாம்.

மிஸ்டர் சேர்மன்: தண்ணீர் ஊற்றினால் 1 லிட்டர் 20 லிட்டர் ஆகும்.

திரு. சி. வி. ராஜகோபால்: தண்ணீர் ஊற்றுமல் பாலைப் பெருக்க வேண்டும். சில மாடுகளுக்கு இயற்கையான சுபாவம் இருக்கிறது. வைக்கோலைத் தின்று விட்டு 2 படி பால் கறக்கும்.

மிஸ்டர் சேர்மன்: 2 படியா, 2 லிட்டரா?

திரு. சி. வி. ராஜகோபால்: 2 படி தான். நல்ல தீவனம் வைத்துக் கறந்தால், ½ லிட்டர் கூட இருக்காது. வாங்கும்போது கொழு கொழுவென்று இருக்கும். வாங்கும்போது 4 லிட்டர் கறக்கும். கட்டி வைத்து, நான்கு நாட்கள் கழித்துப் பார்த்தால், 1¼ லிட்டர் தான் கறக்கும். இப்படிப்பட்ட தன்மையினால் தான் நாட்டில் பால் பற்றாக்குறை இருக்கிறது. எனக்கு முன்னால் நண்பர்களெல்லாம் பேசினார்கள். சென்னையில் மிக அருமையான பால் என்று சொன்னார்கள். நான் வாங்கிச் சாப்பிடுகிறேன். அதில் ஏதோ ஒரு வாசனை அடிக்கிறது. 10, 15 நாளுக்கு முன்னால் ஊட்டியிலிருந்து பால் வரவழைத்து, ஐஸ் பெட்டியில் வைத்து நாள் கடந்து விற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உண்மை தெரியாத காரணத்தால், நினைத்ததையெல்லாம் அவையில் சொல்வது அவ்வளவு பொருத்தமானதல்ல. ஊட்டியிலிருந்து பால் வருவதாக இருந்தால் கூட, 24 மணி நேரத்திற்குள் இங்கே பால் வருகிறது. அப்படி வருகிற பாலும் பதப்படுத்தப்பட்டுத்தான் வருகிறது. ஆகவே பால் கெட்டுப் போவதற்குக் காரணமில்லை. Toned milk என்று பாலில் உள்ள வெண்ணைச் சத்தை நீக்கி

27th March 1972]

விட்டுக் கொடுக்கிறார்கள். பணம் ஏதாவது வேறுபட்டு இருக்குமானால், அதில் எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பதை நான் கால்நடைத் துறை அமைச்சர் என்றல்ல, சுகாதார அமைச்சர் என்ற முறையில் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, மிக்க நன்றி. நான் ஏதோ மாதவரம் பால் பண்ணையில் தவறு நடக்கிறது என்று சொல்லவில்லை. ஏதோ வாசனை வருகிறது. 2, 3 நாள் மூடி வைத்துப் பால் கொடுக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 2, 3 நாட்கள் மூடி வைத்து விட்டுக் குடிக்கிறீர்களோ என்னவோ.

திரு. சி. வி. ராஜகோபால்: வீடுகளிலிருக்கிற எருமை மாடுகள் ரோடு ஓரமாக மேய்ந்து கொண்டு, மலத்தை சாப்பிடுகின்றன. அந்தப் பாலைச் சாப்பிட்டால், மலம் வாசனை வருகிறது. அதிகாரிகள் இதில் கொஞ்சம் கவனம் செலுத்தி, இதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதோ தந்திருக்கின்ற இந்த இலாக்காவின் புத்தக அட்டையின் பின்னால் பார்த்தால், ஆடு, மாடு, கோழி எல்லாம் கொழு கொழுவென்றிருக்கிறது. அந்த மாதிரி வர வேண்டுமென்று ஆசைக்காக அந்தப் படத்தைப் போட்டிருக்கிறார்கள் என்று நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தயவு கூர்ந்து இதற்கு ஒதுக்கக் கூடிய பணம் பற்றாக் குறையாக உள்ளதால் நிறைய ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பண்ணைகளிலே ஆயிரம் ரூபாய், ஆயிரத்து நானூறு ரூபாய் என்று பணம் கொடுத்து ஒரு மாடு வாங்கினால், மறுநாள் அந்த மாடு இறந்துவிடுகிறது. அதற்கு வைரூரி என்னும் நோய் வந்து இறந்துவிடுகிறது. அதைத் தடுப்பதற்கு உங்களால் ஆன பிரவென்ட்டிவ் மெஷர்ஸ்—தடுப்பு நடவடிக்கைகளை—எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அல்லது வேறு ஏதாவது காரணத்தால் அந்த மாடு இறக்குமானால், ஏன் இறந்தது, அதற்குரிய காரணங்கள் யாவை என்று அதற்குரிய அதிகாரிகளிடம் 'எக்ஸ்பிளனேஷன்'—விளக்கம்—கேட்க வேண்டும். எப்படி இறந்தது என்று அதைக் கண்காணிக்கிற அதிகாரிகளைக் கேள்வி கேட்டு அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கிற மாதிரி, நல்ல முறையில் இந்த 'அனிமல் ஹஸ்பண்டரி டிப்பார்ட்மென்ட்' வேலை செய்ய வேண்டும். அந்தத் துறை எங்கு இருக்கிறதென்றே மக்களுக்குத் தெரியவில்லை. இந்தத் துறையைப்பற்றி மூலை முடுக்குகளில் உள்ள மக்கள் எல்லாம் அறிய வேண்டும்.

பன்றி வளர்ப்பதைப்பற்றிச் சில வார்த்தைகள். மக்களுக்கு அதிக வேலையின் காரணமாக மூலச் சூடு என்னும் நோய் வருகிறது. இந்த நோய்க்குச் சிறந்த மருந்து எது என்று கேட்டால், இந்தப் பன்றியின் கறிதான் என்று

சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய நேரு கூட பன்றிக் கறி உண்பதைப் பற்றியும் அதன் அவசியத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் மக்களுக்கு இதையெல்லாம் எடுத்துச் சொல்லி, பன்றிக் கறியை மக்கள் உண்ணக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கலாம். பொதுவாக வயதானவர்கள் சாப்பிட மாட்டார்கள். ஆதலால் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். 10 முதல் 14 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அந்தக் குழந்தைகளுக்குப் பால் பவுடரைக் கொடுத்துவிட்டு சத்துள்ள உணவு கொடுத்துவிட்டோம் என்று சொல்லுவதை விட, பன்றிக் கறியைச் சுவையாகச் சமைத்து, மதிய உணவிலே கலந்து குழந்தைகளுக்கு வழங்கலாம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களென்று எண்ணுகிறேன். ஆகவே இன்னும் மிகத் தீவிரமாக ஆடுகள், மாடுகள், பன்றிகள் குழந்தைகளை (குட்டிகளை) தமிழ் நாட்டுக்குப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்—மக்கள் குழந்தை பெறுவதை விட—என்று கூறி என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு தலைவர்களே, கால்நடை வளர்ப்புத் துறை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்துள்ள இந்த அறிக்கையின் அடிப்படையிலே, இத்துறையின் வளர்ச்சி குறித்து விவாதிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை மேலவைக்கும் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல்லாண்டுகாலமாகவே நமது நாட்டிலே கால்நடை வளர்ச்சிக்கு என்று நல்லபல திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயலாக்குவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. முற்காலத்திலே கிராமங்களில்தான் ஆடுமாடுகள் அதிகமாக இருக்கும். அப்பொழுதெல்லாம் ஏதேனும் ஆடுமாடுகளுக்கு நோய் என்று வந்தால், தொடர்ந்து ஒரு பகுதியில் ஆடுமாடுகளைப் பாதிக்கக்கூடிய காலரா போன்ற நோய் வந்தால், நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் அவை மடிந்துவிடும். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் இந்தக் காலத்தில் நாம் பார்க்க முடியாது. ஏதேனும் ஒரு இடத்தில் அத்தகைய நோயால் ஆடு மாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றால், உடனடியாக, சம்பந்தப்பட்ட இந்த இலாகா அதிகாரிகள், அலுவலர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று அங்குள்ள ஆடுமாடுகள் அனைத்துக்கும், அவசியமானால் கோழிகளுக்கும்கூட, தடுப்பு ஊசிகளைப் போட்டு நோய் பரவாமல் தடுக்கும் முறை இப்போது நடை முறையில் வந்துவிட்டதைப் பார்க்கிறோம். இருந்தாலும் இதில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, எங்கெங்கே இப்படிப்பட்ட நோய்கள் இருப்பதாகத் தெரிகின்றதோ அங்கே கால தாமதமின்றி காலாகாலத்தில் சென்று, கால்நடை

களுக்கு ஏற்பட்டுள்ள நோய்களைக் குணப்படுத்தவும் மேற்கொண்டு பரவாமல் இருப்பதற்கான தடுப்பு ஊசிகள் போடுவதற்குமான தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ளுவது நலமாக இருக்கும்.

அடுத்து, இங்கே கால்நடை வளர்ச்சித் துறை பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதில் காணப்பட்டுள்ள சில விஷயங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை பற்றி நானும் இங்கே பேச வேண்டுமென்று இருந்தேன், ஆனால் அவரே இதுபற்றிய விஷயங்களைச் சற்று விவரமாகக் கூறிவிட்ட காரணத்தாலும், மேலும் நேரமும் அதிகமாக இல்லாத காரணத்தினாலும், அவற்றை நான் திரும்பக் கூற வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். அதில் உள்ள பல குறைகளை எடுத்துக் காண்பித்து அவை மீண்டும் நிகழாமலிருப்பதற்கு என்னென்ன முயற்சிகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பது பற்றிய விவரங்களையெல்லாம் அவர்களே கேட்டுவிட்டார்கள். நான்கூட இந்த அறிக்கையைப் பற்றி ஒரு கேள்வியொன்றினைக் கேட்டு இந்த அவைக்கு அனுப்பியிருக்கின்றேன். ஆகவே இதுபற்றி மறுபடியும் நான் பேச வேண்டிய தில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது இந்தக் கால்நடை களுக்கே, ஒரு பொருத்தமான வார்த்தையொன்றைக் கண்டுபிடித்து உபயோகிக்க வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போதுள்ள இந்தக் 'கால் நடை' என்ற வார்த்தை பொதுவாக எல்லாவற்றையும் குறிப்பதாக இருக்கின்றது. அமைச்சரவர்களே ஒரு பேராசிரியர்தான். எனவே ஆடுமாடுகளை மட்டும் குறிக்கக்கூடியதொரு பொருத்தமான வார்த்தையைக் கண்டுபிடிப்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜோதகப் பலன் கூறுகின்றவர்கள் சொல்லும் கவிதைகளில் அடிக்கடி ஒன்றைச் சொல்லுவார்கள், கன்றெருமை காலி, கன்றேறு காலி என்று. கவிதைகளில் இந்தக் 'காலி' என்ற வார்த்தை சேர்த்து வரும். அது இந்த இனத்தைக் குறிப்பதாகும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, பொறுத்தமானதொரு வார்த்தையைக் கண்டு பிடிப்பது அவசியம் என்று கருதுகிறேன். இந்த வார்த்தை அதாவது 'கால்' என்ற வார்த்தை நமக்கு வெகுகாலமாகப் பழக்கப்பட்டுவிட்டதால் இந்த அறிக்கையில் அது சாதாரணமாக உபயோகப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்கிறோம். ஆனால் இதிலே பசு இனத்தையும் எருமை போன்ற மற்ற மற்ற இனங்களையும் பிரித்துச்சொல்லுவதற்கு ஒன்றும் இல்லாததால், அவற்றைப் பிரித்துச் சொல்லுவதில் சிறிது சிரமம் ஏற்படுகிறது. இந்த அறிக்கையின் முதற்

பக்கத்தில் 'கால் நடை' என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எட்டாவது பக்கத்தில் 'ஆவினம்' என்ற சொல்லை உபயோகித்திருக்கின்றார்கள். இது மிகவும் பொருத்தமான சொல். காளைகள், பசுக்கள் இந்த இனங்களை 'ஆவினம்' என்று சொல்வது முற்றிலும் பொருத்தமாக இருக்கும். 'ஆ' என்றால் பசு. எனவே அதைச் சார்ந்த இனத்தை— காளைகளை, பசுக்களை—'ஆவினம்' என்று குறிப்பிடுவது சாலச்சிறந்ததாகும். 'மனித இனம்' என்று சொல்லும்போது, ஆண் இனத்தை மட்டுமா குறிக்கிறது? இல்லையே, எல்லாரையும்தானே குறிக்கிறது? அது போன்றே 'ஆவினம்' என்று சொல்லுவதும் மிகப் பொறுத்தமானது என்றே நான் கருதுகிறேன். இன்னும் நமது பண்டைய தமிழ் நூல்களைப் பயிலுகின்றவர்கள், இதுபோன்ற பல பொருத்தமான சொற்களைக் கண்டு பிடிக்க முடியும். பாரதத்திலேகூட வருகின்றது. "வண்டார் விராடன்தன் வளநாடு தண்டால் மலைந்தே சொறுக்கொண்டால், அவன் குழலிற் குழும் வினையம் குறித்தோர் இருப்பு உண்டாக்கின் நிறைமீளும் இன்றியின் மீளா தென்றுட் கோளி தென்று . . . எண்டாடும் இதையத்து, நிருபர்க்குறைத் தான் இரவி மைந்தனே" என்று. பாண்டவர்கள் பன்னிரண்டாண்டு காலம் வனவாசம் இருந்துவிட்டு, மேலும் ஓராண்டு காலம் அஞ்ஞாதவாசம் இருந்த போது அவர்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துவிட்டால் மீண்டும் வன வாசம். ஆனால் அவர்களைக் கண்டுபிடிக்க துரியோதனாதியர் கையாண்ட உபாயம் என்ன? அந்த உபாயத்தைக் கையாண்டு பாண்டவர்கள் விராட நாட்டில் இருப்பதையறிகின்றார்கள். ஆனால் அவர்களை மறைவிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டுமே? உள்ள உபாயம் இதுதான். விராட நாடு வளம் உள்ள நாடு. 'விராடனுடைய பசு நிறைகளை நாம் பறித்துக்கொண்டு வந்துவிடுவோமானால் மீட்பதற்குச் சண்டை வரும். பாண்டவர்கள் அங்கிருந்தால் பசு நிறை மீளும், இல்லையெனில் மீளாது' என்று துரியோதனாதியர்கள் யோசிக்கின்றார்கள். இந்த உபாயத்தைக் கர்ணன் சொன்னதாக அதில் வருகிறது. அதில் 'சொறுக்கொண்டால்' என்று வருகின்றது. இது ஒரு பொருத்தமான சொல். இப்படிப்பட்ட பொருத்தமான வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதில் நமது கவனத்தைச் சற்று செலுத்தினால் நல்லது. இவற்றை நமது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகவும்கூட நாம் வைத்துக்கொள்ளுவது பொருத்த மாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அடுத்து, 'ரீஜனல் டைரெக்டர்' என்பதற்கு 'வட்டார இயக்குநர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 'வட்டாரம்' என்ற சொல்லைப் பஞ்சாயத்து யூனியன் தன்னுள் அடக்கியுள்ள பகுதியைக் குறிப்பதற்கும் உபயோகப்படுத்தி யிருக்கின்றார்கள். அடுத்து, தாலுக்காவிற்கு வட்டம் என்றும் 'டிஸ்ட்ரிக்ட்' என் பதற்கு மாவட்டம் என்றும் இருக்கிறது. இந்த நிலையில் 'ரீஜனல்' என்று

சொல்லும்போது, வட்டாரம் என்பதைவிட 'பிராந்தியம்' என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமா அல்லது வேறு வார்த்தை ஏதாவது பொருத்தமாக இருக்குமா என்று யோசித்துப்பார்க்க வேண்டும். 'மண்டலம்' என்ற சொல் பொருத்தமாக இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, நமது நாட்டில் கால்நடை இனங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும், அவை தரத்தில் மிகவும் தாழ்ந்திருக்கின்றன என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார். இது பலகாலமாகவே இருந்து வந்திருக்கிறது. இதற்கான உபாயங்களையும், முயற்சிகளையும், திட்டங்களையும், கால்நடைகள் இன்னும் தரத்தில் உயர்ந்திருப் பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்வது மிகமிக அவசியமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொலி காளைகளை வளர்ப்பதற்காக இன்னும் கலப்பு இனக்கன்றுகளைப் பரா மரிப்பதற்காக பிரிமியம், மானியம் ஆகியவை கொடுக்கப்பட்டு வந்தன. அவை இப்போது தரப்படுவதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதெல் லாம் மக்களிடத்திலே ஒரு பழக்கம் வந்துவிட்டது. எதற்கெடுத்தாலும் அரசாங்கத்திடமிருந்து காசு வருகிறதா, பணம் வருகிறதா என்கிற எண்ணம் வளர்ந்து விட்டது. இந்தத் திட்டம் தங்களுக்காகத்தான், தங்களை ஊக்குவிப் பதற்காகத்தான் என்று எண்ணுவதில்லை. மக்களை ஊக்குவிப்பதற்காக, எந்த ஒரு நாட்டிலும் இத்தகைய சலுகைகள் கொடுப்பது பொருத்தமாகவேதான் இருக்கும். ஆனால், எப்போதும் அப்படி மானியங்கள் கொடுத்துக்கொண்டு வருவது, அப்படிக் கொடுக்காவிட்டால் அதன் வளர்ச்சி அத்தோடு நின்று விடுவது என்று சொன்னால், இதனால் கண்ட படிப்பினை என்ன? மக்கள் என்ன படிப்பினையைக் கற்றுக்கொண்டார்கள் என்பது யோசிக்கத்தக்க விஷயம். எனவே, எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தைக் கேட்பது என்ற பழக்கத்தை மக்கள் கைவிட்டு விட வேண்டும் என்ற அளவில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் மக்களிடம் குறைய வேண்டும். ஊக்கம் அளிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. இதற்கு என்றைக்காவது, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இப்போ திருந்தே அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொலிகாளைக் கன்றுகளை விருத்தி செய்ய வேண்டும். இப்போது பொலி காளைக்கன்றுகளை வளர்க்க முன்வருகிறவர்கள் எல்லாம், ஏதோ பணம் வரு கிறது என்ற காரணத்தால் தான், அப்படி முன்வருகிறார்கள். அதில் ஒரு சிலர் உண்மையிலேயே பொறுப்புடன் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் எல் லோரும் அப்படியில்லை. மற்றவர்கள், ஏதோ அரசாங்கம் மானியம் அளித்தால்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [27th March 1972

அதற்கு ஊக்கமளிப்பது இலாகாவுடன் ஒத்துழைப்பது. இல்லாவிட்டால் பின் தங்கி விடுவது என்ற நிலை உண்மையிலேயே அந்தத் திட்டத்தை நடத்தி வைக்கிறவர்களுக்கு, அதிலே பணியாற்றி வருகிற அரசு அலுவலர்களுக்கு மகிழ்ச்சியைக் குன்றச்செய்து, அலுப்புத் தட்டச் செய்து விடுகிறது. சேவைக் காக என்று செய்வதில்லை, காசுக்காகத்தான் செய்வது என்று சொன்னால், அந்தப் பணியாற்றுகிற அலுவலர்களிடத்திலே, "என்ன, மக்கள் இப்படியே இருக்கிறார்களே" என்று அவர்கள் மனதிலே உற்சாகம் குன்றிப்போய் விடுகிறது. இது இயற்கை. என்றாலும்கூட, அந்த நிலையைப் போக்குகின்ற முறையில் இந்த அரசு திட்டங்களை நடத்தி வைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் ஆறு பெரிய பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகள் எல்லாம் எப்படிப் பணியாற்றிக்கொண்டு வருகின்றன என்பதைப் பற்றியெல்லாம் அமைச்சர்கள் அறிந்திருப்பார்கள். குறைபாடுகள் எவை யெவை என்றும், எப்படி அந்தக் குறைபாடுகளை நீக்குவது என்பதையும் ஆராய, விரிவான கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டு சிபாரிசுகள் செய்யப்பட்டிருக் கின்றன என்பதைப் பார்க்கிறோம். அதையும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தில் உள்ள திட்டங்களையும் கூட முடியுமா என்று யோசிக்க வேண்டும். எனது யோசனைதான் சிறந்த யோசனை என்று சொல்லவில்லை. அந்த இடத்தில் அந்தத் திட்டத்தை நடத்த முடியுமா என்று ஆராய்ந்து, திட்டமிட்டு, குறிகளை எய்த வேண்டும். அப்படிச் சரியாக நடத்த முடியவில்லை என்றால், அப்படி முடியாமைக்கு அங்கேயுள்ளவர்கள் சரியான நம்பத்தகுந்த காரணங்களை விளக்க வேண்டும். அந்தப் பொறுப்பை அரசாங்கம் அவர் களிடம் ஏற்படுத்த வேண்டும். அது முடியுமா என்றும் யோசிக்க வேண்டும். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், அந்தப் பெருமை தங்களையே சாரும் என்ற உற்சாகத்தில் தாங்களாகவே வலுவில் முன்வர வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றைப்பற்றி விவரங்கள் இந்தக் குறிப்புகளில் காணப்படுகின்றன. அதிலே இருக்கக்கூடிய ஆறு இனங்களில் பர்கூர் இனம் ஒன்று. மற்றொன்று புலிக்குளம் இனம். இவற்றின் வளர்ச்சி பற்றிய முயற்சியை அரசாங்கம் கைவிட்டு விடப்போகிறது போன்று தொனிக்கிறது. பர்கூர் இனம் என்று எடுத்துக்கொண்டால், பர்கூர் கிருஷ்ணகிரிக்குப் பக்கத் தில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய அனுபவம் எனக்கில்லை.

மிஸ்டர் சேர்மன்: நாட்றம்பள்ளிக்கும் கிருஷ்ணகிரிக்குமிடையே பர்கூர் இருக்கிறது.

27th March 1972]

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: புலிக்குளம் மதுரை ஜில்லாவில் இருக் கிறது. தயவு செய்து இதைக் கை விட்டுவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். புலிக்குள இனக் காளைகளும் பசுக்களும், உருவத்தில் மிகப் பெரியதாக இல்லாமலும், மிகவும் சிறியதாகவும் இல்லாமலும் இருக்கும். அந்த இனக் காளைகளும் பசுக்களும் சுறுசுறுப்பாக நடக்கக்கூடியவை. எனவே, விவ சாயிகள் அதை விரும்பி வாங்குவார்கள். அந்தக் காளைகள் பார்ப்பதற்கும் மிக அழகாக இருக்கும். அவைகளுக்கு அதிகத் தீனி தேவையில்லை என்ற காரணத்தால், ஏழை எளியவர்கள் அவற்றைக் கஷ்டமில்லாமல் காப்பாற்ற முடியும். ஆகவே, புலிக்குள இனத்தைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைத் தீவன உற்பத்தியைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுகளையெல்லாம் கிலோகிராம் அளவில் கொடுத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், கிலோகிராம் அளவில் கணக்குப் போடும் அனுபவமில்லை. என்னைக் கேட்டால், ஒரு ஜோடி மாட்டிற்கு ஒரு வருஷத் திற்கு 12 வண்டி வைக்கோல் வேண்டும். அதுதான் என் அனுபவம். எனவே, இதை விவசாயிகள் புரிந்துகொள்ளும் வகையில், ஒரு வண்டிச் சுமை என்றால், எவ்வளவு கிலோகிராம் இருக்கும் என்று சொன்னால் அவர்கள் புரிந்துகொள்ள முடியும். இந்தப் புதிய நயாபைசா வந்தபோது, பழைய நாணயத்திற்குச் சமமான புது நாணயம் எவ்வளவு என்று இரண்டையும் போட்டிருந்தார்கள். அந்த மாதிரி இதிலும், இரண்டு இலக்குகளையும் போட்டால், உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேய்ச்சல் தரைகள் தமிழ் நாட்டில் வெகுவாகக் குறைந்து விட்டன. பெரிய விவசாயிகளுக்கு அவ்வளவாக இதனால் பாதகமில்லை. ஆனால், கொஞ்சம் ஆடுமாடுகளை வைத்துக்கொண்டிருக்கிற ஏழைகள் இதனால் பாதிக் கப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் மேய்ச்சல் தரைக்கு எங்கே போவார்கள்? ஆகவே, சர்க்கார் மேய்ச்சல் தரைகளில் தான் அந்த ஏழை மக்களுடைய ஆடு மாடுகள் மேய்கின்றன. அவர்களுக்கு இல்லை விட்டால் வேறு தொழிலும் இல்லை. இத்தகைய மேய்ச்சல் நிலங்கள் குறைந்துகொண்டே போகின்றன. எனவே, இனிமேலாவது, மேய்ச்சல் நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கும் போது, சர்க்கார் யோசிக்க வேண்டும். இதைப்பற்றி எங்கள் ஜில்லா கலெக்டரிடமும், மாவட்ட ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலினிடமும், இலாக்கா வினரிடமும் பல தடவைகள் தெரிவித்திருக்கிறோம். ஒரு மாட்டுக்கு இவ்வளவு மேய்ச்சல் நிலம் வேண்டும் என்றெல்லாம் கூட சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தக் கணக்கின்படி பார்த்தால் இப்போதுள்ள மேய்ச்சல் தரையின் அளவை யும், அந்த ஜில்லாவிலுள்ள ஆடுமாடுகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேய்ச்சல் தரையின் அளவு போதாது என்று சொன்னார்கள். ஆனால், இதை யாரும் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் இதை மனதிற்கொண்டு மேய்ச்சல் தரைகள் குறையாதபடி அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 'ஆ நிறை காப் பகங்கள்' நடத்துவதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பெயர் கொம்பப் பொருத்தமானது. அரசு இந்தக் காப்பகங்களுக்குக் கணிசமான உதவி தருகிறது. கோவில் தேவஸ்தானங்கள் இத்தகைய காப்பகங்களை நடத்தி வரவேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்புத் துறையிலிருந்து வற்புறுத்திக் கட்டளையிடுவது கூட பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். பால் வற்றிய மாடுகளைப்பற்றி அரசு சில முயற்சிகள் எடுத்திருக்கிறது. அதில் பொது மக்கள் அக்கறை காட்டாதது மிகவும் வருந்தத்தக்க விஷயம். வீட்டுக்குப் பால் குறைந்து விட்டால், அந்தப் பிராணி மீது ஜீவகாருண்யம் கூட இருப்பதில்லை. அவைகளை விலைக்குக் கொடுத்துவிடுகிறார்கள். பொது மக்களுக்கு இதைப்பற்றிக் கூற வேண்டும்.

இன்னொன்று. முக்கியமாகச் சென்னை நகரத்தில் கோவில் மாடுகள் தெரு வெல்லாம் திரிகின்றன. அவைகள் நடமாட்டத்திற்கு இடைஞ்சலாக இருந்தால், சென்னைக் கார்ப்பரேஷனே அவைகளைக் கைப்பற்றி விற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவு போடுவது தர்மம், மதத்துறையிலோ கோவில் நிர்வாகத் திலோ தலையிடுவதாக நான் கருதமாட்டேன் அத்தகைய இடைஞ்சலாக இருக்கிறது. கோவில் பெயரால் மாடுகளைத் தெருக்களில் விட்டால், எத்தனையோ இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இதையும் கவனிப்பது நல்லது என்று கருதுகிறேன். செம்மறியாடு இன வளர்ச்சித் திட்டம் பல இடங்களில் இருக்கின்றன. அவை மேம்பாடு அடையச் செய்வதற்கு மேலும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அழகர்கோவில் பக்கத்தில் இத்தகைய ஒரு ஆட்டுப் பண்ணை ஏற்படுத்துவதற்கு முயற்சி இருந்தது. வேளாண்மைக்கல்லூரி வருவதற்கு முன்பு இந்த முயற்சி இருந்தது. கல்லூரி வருவதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்தார்களே, அது போல் ஆட்டுப் பண்ணையைக் கேட்டால், நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ளுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அந்தக் கோரிக்கை கூட இல்லாமல் நின்று விட்டது. அவசியம் வரும்பொழுது, அரசு இதை யோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பன்றி வளர்ப்பு

விஷயம்பற்றி அமைச்சர் அவர்கள் முன்பே சொன்னார்கள். இன்றும் பேசப் பட்டது. வள்ளுவத்திற்கு கும்பிடு போட்டு, சற்றே விலகியிரும் என்று இந்தக் காரியத்தைப் பண்ண வேண்டியதுதான் போதும்.

கோழி இன வளர்ச்சி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது கொம்ப முக்கியமான திட்டம். எல்லோருக்கும் வாழ்வளிக்க வந்த திட்டம். ஏழை முதல் விவசாயிகள் வரையில் இந்தத் திட்டத்தை விஞ்ஞான ரீதியில் பொறுப் புணர்ச்சியோடு ஏற்றுக்கொண்டு நடத்தினால் நல்ல வகையில் அனுகூலம் அடைவார்கள், பொருளாதார வகையிலும் அனுகூலம் பெற முடியும். மூடிய 39 பண்ணைகளுக்குத் திரும்ப புத்துயிர் கொடுத்து, சரிவர நடக்க, முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முட்டை உற்பத்திக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி குறைந்தது போல் தெரிகிறது. அதை நிவர்த்தி செய்ய வழிவகைகள் காண வேண்டும். ஏ.ஆர்.சி. உதவித் திட்டம் செயல்படுவதற்கு நல்ல மேலாளர்களை நியமித்து நல்ல வகையில் செயல்பட வேண்டும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியர் திண்ணியராகப் பெறின்", 'இதனை இதனால் இவன் செய்யும் என்றுய்ந்து, அதனை அவன்கண்விடல்', என்ற குறளுக்கேற்ப, அத்தகையவர்களுடைய பொறுப்பில் விட்டு சரிவரப் பலன் பெறத்தக்க வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு, என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பொதுக் கருத்துக்களை இந்த மன்றம் விவாதிப்பது போல் கால்நடை வளர்ச்சிபற்றியும் அதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்பற்றியும் இந்த அவை விவாதிக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டு, அது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டு கால்நடை துறையினுடைய வளர்ச்சியில் அரசு பெரும் அளவு அக்கறை எடுத்துக்கொண்டு, கடந்த ஆண்டு ஒதுக்கிய தொகையை விட பல லட்ச ரூபாய் அதிகம் ஒதுக்கி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தமாகக் கால் நடை வளர்ச்சிக்கு ஏறத்தாழ தமிழ் நாட்டில் ரூ. 8 கோடி ஒதுக்க வேண்டு மென்று கருதி, பின்னர் அது ரூ. 4 கோடியாகக் குறைக்கப்பட நேரிட்டாலும், அந்த நான்கு கோடியில் முதல் இரண்டு ஆண்டுகள் செம்மையாகத் திட்டத் திற்கு அதிக நிதி ஒதுக்க முடியாத நிலையில், இந்த ஆண்டு பல்வேறு நெருக் கடியில் திட்ட வளர்ச்சிக்காகவும் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டு நடை பெறுகிறது. இங்கு கூட மாண்புமிகு அங்கத்தினர்கள் முதலாவது பேசியவர்கள்

எடுத்துச் சொன்னார்கள். கால்நடை வளர்ச்சிக்கு ரூ. 82 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, அது திட்ட வளர்ச்சியில் காணப்படுகிற தொகையாகும். அத்தகத் திட்ட வளர்ச்சியில் இப்படிப்பட்ட பெரியதொரு பொறுப்பை அரசு ஏற்றிருப் பதன் காரணமாக, நாம் விரும்புகிற நல்ல பலன்களைப் பெறமுடியுமென்று நீங்க ளூட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. கால்நடை வளர்ச்சி என்பது இது வரையில் ஏதோ ஒரு வகையில் மக்களுடைய நல்வாழ்வுக்குத் தேவையாக இருக்கிற ஒரு துறையின் வளர்ச்சி என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் அகில இந்தியாவிலும் கூட கால்நடை வளர்ச்சியில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தை இந்திய நாடு அடையவில்லையென்றால், இந்தியா விலேயே வேளாண்மையை நம்பி வாழ்கிற மக்கள் தாங்கள் வறுமை நிலையி லிருந்து ஒரு தெளிவான முன்னேற்றத்தை அடைய முடியாது என்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது. ஒன்று கிராம நலம். மற்றொன்று வேளாண்மைக்குத் துணைத் தொழில். மூன்றாவது பஞ்சம், பசி, பட்டினி ஆகிய நிலைமைகளிலுள்ள மக்களுக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பு. நான்காவது மக்களுடைய உணவுத் தேவையை நிறைவு செய்வதற்கு ஒரு துணைக் கருவி. ஐந்தாவது, உணவின் தரத்தை உயர்த்தி சத்துணவுத் திட்டத்திற்கு வழி வகுப்பது. அதே போல் நோய்த் தடுப்பு என்று இப்படிப் பல்வேறு காரணங்களுக்காக, இந்தத் திட்டத்தில் கால்நடை வளர்ப்பில் அரசு கவனம் செலுத்துவதை இன்றைக்கு முக்கியமாகக் கருதுகிறது. அது மட்டுமல்ல. இங்கு இந்த அறிக்கையை வெளியிட்டபோது, இதை விரிவாகப் படித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்றுதான் நான் விரும்பினேன். இந்தக் கால்நடைத் துறையைப் பற்றி எற்கனவே உள்ளத்தில் இருந்த குறைபாட்டின் காரணமாக ஊழல் என்ற கருத்தோடு விவாதம் தொடங்கியது. தமிழ்நாடு லிவ்ஸ்டாக் டெவலப்மெண்டு கமிட்டி 1967-ல் நியமிக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை 1970 பிப்ரவரியில் வந்திருக்கிறது. அந்த அறிக்கையை எடுத்து வைத்து அழுத்தந்திருத்தமாகத் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். "அந்த ஊழல் 1967-க்கு முன்னாலும் 1967-க்குப் பின்னாலும் நடைபெற்றிருக் கிறதா; அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. இந்த அறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, எவ்வளவு குறைபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன, அதில் தெளிவாக ஊழல் என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே இந்தக் கால்நடைத் துறை பல்வேறு விதமான குறைபாடுகளோடு இருக்கிறது, அந்தத் துறை சரியாகச் செயல்படவில்லையென்று அறிந்து, அது சம்பந்தமாகக் கால்நடையில் அக்கறையுடையவர்களாக யார் இருப்பார்கள்

என்று எண்ணிப் பார்த்து திரு. முத்து கவுண்டர், வேளாண்மையில் ஈடுபட் டிருப்பவர், நாடாளுமன்ற உறுப்பினர், அவரைத் தலைவராகவும், திரு. சுவாமி நாத கவுண்டர், வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர், கழக சட்டமன்ற உறுப் பினர், அவரை ஒரு உறுப்பினராகவும் அமைத்து, நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் ஈடுபட்ட திரு. வினயக முதலியாரை, உறுப்பினராக அமைத்து கால்நடைத் துறையின் செயலாளர் திரு. வேதநாராயணனை மெம்பர்-செக்கரட்டரியாகவும் நியமித்து விசாரணை நடத்தச் செய்தார்கள். அப்படி நடத்தி என்ன பலன் ஏற்பட்டது? இவ்வளவு விரிவாக அறிக்கை 1970-ல் தந்து இன்னும் இந்த அறிக்கை தானே இருக்கிறது என்று கேட்ட போது, இடைமறித்துச் சொன்னேன், சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று. இந்தக் குழுவினுடைய கருத்துப்படி ஏறத்தாழ 78 அல்லது 80 என்று இருந்த இந்தக் கோழி வளர்ப்புப் பண்ணைகள் நல்ல முறையில் செயல்பட வில்லை, பல குறைபாடுகளோடு நடத்தப்படுகின்றன, இவைகளில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு எல்லாம் இயற்கை மட்டும் காரணம் இல்லை, செயற்கை கூட காரணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டிருப்பதால், அப்படிப்பட்ட கோழிப் பண்ணைகளில் 39 நீங்கலாக மற்றவையனைத்தும் மூடப் பட்டுவிட்டன. ஆகவே இந்த அறிக்கையின் நோக்கம், கருத்து ஆகியவற்றை அரசு ஏற்றுக்கொண்ட காரணத்தினால் 1969-70-ல் 39 பண்ணைகள் தவிர மற்ற வற்றை மூட நேரிட்டது. இப்படி மூட நேரிட்ட காரணத்தினால் கோழி வளர்ப்பு பாதிக்கப்பட்டு, முட்டைகள் கிடைப்பதும் பெருமளவிற்குப் பாதிக்கப் பட்டுவிடும் என்றால், 1968-69-ஆம் ஆண்டில் 74 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள் இருந்த நேரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 32,56,158. அதற்கு அடுத்த ஆண்டில் அதன் எண்ணிக்கை 35,48,254 முட்டைகள். ஆனால் ஆதாயமற்ற காரணத்தினால், 39 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்களை மட்டுமே வைத்துக்கொண்டு, மற்றவை 1970-71 ஆம் ஆண்டில் மூடப்பட்டுவிட்ட காலத்தில் அவற்றின் மொத்த உற்பத்தி 33,25,744 முட்டைகளாகும். எனவே பல மூடப்பட்டுவிட்ட காரணத்தினால், பெருமளவிற்கு நிர்வாகச் செலவுகள் குறைந்துவிட்ட அதே நேரத்திலே உற்பத்தி மட்டும் அதே அளவில் இருந்து வந்திருப்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இவற்றைச் சொல்லுகிறேன். பெரு மளவிற்கு கோழி முட்டைகளின் உற்பத்தி பெருகவில்லையென்றாலும்கூட, நஷ்டங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. குறைகள் என்று தெரிந்தபோது, இந்த அரசு என்றைக்கும் அவற்றைத் திருத்திக்கொள்ளத் தயங்கியதில்லை. எனவேதான் குறைகளைக் கண்டறிந்து சொல்லிய குழுவின் அறிக்கையின் அடிப்படையிலே காலதாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல

தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். இரண்டாவது பால் உற்பத்தி பற்றிச் சொன்னார்கள். மாதவரம் பால் பண்ணையில் உற்பத்தி பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள், 'தமக்குச் சம்பந்தமில்லை' என்று. அந்த அறிக்கை கால்நடை சம்பந்தமான அறிக்கை. அதில் குறிப்பிட்டிருக்கின்றார்கள் கடந்த மூன்று அல்லது நான்காண்டு காலத்தில் எவ்வளவு மாடுகள் அந்தப் பண்ணையில் குறைந்துவிட்டன என்பதுபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த மாதவரம் பால் பண்ணையில் சுமார் 3,900 மாடுகள் இருந்தன நான்காண்டு காலத்திற்கு முன்பு. இப்போது, நான்காண்டுகளில் அவை 590 ஆகக் குறைந்துவிட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கு மாடுகள் அந்தப் பண்ணையில் குறைந்து, அந்த அளவிற்குப் பால் உற்பத்தியும் குறைந்து தினசரி சென்னைக்கு வரும் பாலும் பெருமளவிற்குக் குறைந்துவிட்டது என்று அந்த அறிக்கையில் சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்தும் விதத்தில் "Intensive Cattle Development Project" என்றும், 'Key Village Centres' கிராம மைய வளர்ச்சித் திட்டம் என்றும் ஏற்படுத்தி, பாவலாக, கால்நடை வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டுமென்றும் கருதி, 1971-வது ஆண்டுத் தொடக்கத்திலேயே இந்த இலாகா முழுவதும் உள்ளபடியே பல திருத்தங்களுக்கு உள்ளாகி பல மாற்றங்களைப் பெற்றிருக்கிறது. இதற்கு முன்பு மண்டல அமைப்பு இருந்தது. இது 1—1—1970 முதல் மாற்றப்பட்டு, இப்போது வட்டார அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியிருக்கின்றது. இப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டுவந்த பிறகு, இம்மாநிலம் ஆறு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் ஒவ்வொரு வட்டாரத் துணை இயக்குநர் ஒருவர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இப்படி நியமிக்கப்பட்டுள்ள ரீஜனல் டெபுடி டைரெக்டர்களின் கீழ் ஐந்தாறு அஸிஸ்டெண்டு டைரெக்டர்களும், அவர்களுக்குக் கீழே அவர்களுக்கு உதவியாக இரண்டு மூன்று வெட்டினெரி ஸர்ஜன்களும் இயங்குகின்றனர். கோழிகளில் ஒரு வல்லுநர், கால்நடைகளில் ஒரு வல்லுநர், கால்நடை நோய் ஆய்வுப்புணி புரிந்த வல்லுநர் ஒருவர் ஆக மூன்று வல்லுநர்கள் ஒரு வட்டாரத்தில் பணி புரிகின்றார்கள். இவர்கள் தவிர, ஊசாட்சி ஒன்றிய அளவில் கால்நடை வளர்ப்பு வளர்ச்சிப் பணி அதிகாரிகள் இருக்கின்றார்கள். இத்துறை திருத்தியமைக்கப்பட்டதற்கு முன்னதாக பல்வேறு அமைப்புகள் மூலம் செய்யப்பட்டனல்லா வகைப் பணிகளும், அதாவது மைய கிராமப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி போன்றவை அனைத்தும் தற்போது இந்த வளர்ச்சிப் பணி

அதிகாரிகளால் கவனிக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும திருத்தியமைத்த அமைப்பிற்கிணங்க நல்ல முறையில் செயலாற்றி வருகின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள், 1967-க்குப் பிறகல்லவா இத்துறையில் பல்வேறு குறைகள் காணப்பட்டன என்று, அறிக்கை அவர் கையில் இருக்கும் காரணத்தினால் தைரியமாகக் கேட்டார்கள். ஆனால் நடைபெற்ற ஊழல்கள் அனைத்தும் ஏற்கெனவே இந்த இலாகாவினுடைய இயக்குநராக, திரு. ஐ. டி. மந்திரமூர்த்தி அவர்கள் இருந்த போது ஏற்பட்டவையாகும். அவர் எப்போது யாரால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார் என்பது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு நன்கு தெரியும். அவரது இலாகாவில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு ஊழல்கள் காரணமாக அவரைப் பதவியிலிருந்து விலக்கியது மட்டுமின்றி, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குப் போடப்பட்டு இரண்டரை ஆண்டுக்காலம் தண்டிக்கப்பட்டும் இருக்கின்றார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு பெரும் இலாகாவினுடைய இயக்குநராக இருந்த ஒருவர் தண்டிக்கப்படும் அளவிற்கு ஒரு ஆட்சி இதற்கு முன்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றதா என்றால், நிச்சயமாக இல்லையென்றே சொல்லலாம். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அந்த அறிக்கையை முழுதுமாகப் படித்திருந்தால், அவர் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு இவற்றைப் பேசியிருக்கமாட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 1967-க்குப் பிறகும் நடந்துள்ள ஊழல்கள் பல இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. 1967-க்குப் பிறகு நடந்த ஊழல்களுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்பற்றிச் சொல்லுவார்களானால், நல்லதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அறிக்கை 1965, 1966, 1967, 1968 மற்றும் 1969-ம் ஆண்டு வரையில் நடைபெற்ற நிர்வாகத்தைப் பற்றியதாகும். இதில் குறிப்பாக 1968, 1969 மற்றும் 1970-ம் ஆண்டுக்கான காலங்களிலே நடந்ததாகக் கருதப்படும் ஊழல்கள் 1968-க்கு முன்பே நடந்தவை. இப்படிப்பட்ட ஊழல்களுக்குப் பிறகுதான் இந்த இலாகாவினுடைய இயக்குனர் அவர்கள் மீது மேலே நான் சொன்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர் எவ்வளவு தூரம் சிபாரிசுக்காக மன்றாடினார் என்பது எனக்குத் தெரியும். இலாகாவில் நிர்வாகம் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என்று பொறுப்புணர்ச்சியோடு விரும்புகின்றவர்கள் குறைகள்பற்றி எப்போதும் என்னிடம் தெரிவிக்கலாம். நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். இதே நோக்கத்தோடுதான், புகார்கள் வந்தபோது, மாண்புமிகு

[திரு. க. அன்பழகன்] [27th March 1972

திரு. கோவிந்தசாமி அவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு ஓசூர் பண்ணைக்கு நேரில் சென்று, வைக்கோல் வாங்குவதிலிருந்து பொருள்கள் விற்பனை வரையில் ஒவ்வொன்றையும் நன்கு கேட்டறிந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள். அன்றைக்கு இருந்த பல குறைகளை நான் அறிக்கையிலிருந்து சொல்லவில்லை, அவர்கள் சொல்லக்கேட்டே நான் அறிந்திருக்கின்றேன். அவர் சென்று விசாரித்ததன் காரணமாக அங்கே ஃபார்ம் சூப்பெரின்டெண்டெண்டாக இருந்த திரு. திருநாவுக்கரசு மீது நடவடிக்கை எடுத்து வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, பிறகு ஒரு ஆண்டுக் காலம் தண்டிக்கப் பட்டிருக்கின்றார். Another set of cases against Dr. Thirunavukarasu is pending before the Court of Special Judge, Krishnagiri. என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக இப்படி ஒரு இயக்குனர் நீக்கப்படும் அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இன்றைக்குள்ள எந்த அதிகாரியும் துணிந்து தவறுகள் செய்யும் அளவிற்குப் போகமாட்டார்கள், இந்த அரசு கோழைத்தனமானது, தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்ற எண்ணமிராது என்ற அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இவ்வளவுக்குப் பிறகுதான் இந்தத் துறையில் ஓரளவிற்கு வளர்ச்சி ஏற்பட ஆரம்பித்திருக்கின்றது. தவறுகள் தலைமுதல் அடிவரையில் நடந்துகொண்டிருந்தால், எந்தத் துறையானாலும் அது உருப்படாது. கடந்த காலத்தில் இதே மேலவையில் எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில் நானேகூட சில குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அப்படிக் குறைகள் சொல்லும்போது, அவற்றை உடனுக்குடன் கவனித்து தவறுகளைக் களைந்தால், நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும் என்று திடமாக நம்புகிறோம். இன்னும் வருங்காலத்தில் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இந்த இடத்தில் இந்த இந்தக் குறைகள் இருக்கின்றன, இந்த இடத்தில் புரையோடியிருக்கின்றது, இதை அறுத்தெறிய வேண்டும் என்று சொன்னால், நான் உடனே அதைக் கட்டளைபோல் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கின்றேன். ஆனால் அப்படிச் சொல்ல முடியாதபோது, ஏதோ என்றைக்கோ ஆரம்பித்த ஊழல்கள் இன்றைக்கும் இருக்கின்றன என்று 'ஊதும் சங்கை ஊதிவைப்போம், விடியும்போது பொழுது விடியட்டும்' என்று சொன்னால், சென்னையிலுள்ள மக்கள் சங்கு ஊதும்போதே தூங்கிப் பழக்கப் பட்டவர்கள், ஆகவே அவர்களை நீங்கள் எழுப்ப முடியாது என்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே நான் சொல்லுவதெல்லாம் குறை எங்கே இருக்கின்றதோ அதை முன்வந்து தைரியமாகத் தெரிவியுங்கள். அவற்றைக் களைய முடியும், அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்பதுதான்.

27th March 1972] [திரு. க. அன்பழகன்]

ஆறு மாத காலத்திற்கு முன்பு செட்டிநாடு பண்ணையைப் பார்வையிடச் சென்றிருந்தேன் நான். அங்கே அந்தப் பண்ணையின் நடைமுறை திருப்திகரமாக இல்லை. முதலில் பேசிய திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், செட்டிநாடு பண்ணை பார்க்கவே பரிதாபகரமாக இருக்கிறது என்று. அங்கே போதுமான தண்ணீர் வசதியின்றி, பண்ணையில் காணப்பட வேண்டிய பசுமை இல்லாமல் கொட்டகையைக்கூடப் பார்க்கும்போது, ஒரு கால்நடைப் பண்ணை என்று சொல்லப்பட வேண்டிய தோற்றம்கூட இல்லாததுகண்டு, அங்கேயுள்ள அதிகாரிகள்பற்றியும் அவர்கள்மீது உள்ள குறைபாடுகள்பற்றியும் விசாரிக்கச் செய்து, அவர்களில் சிலரை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றச் செய்து, பழைய வரவு-செலவுக் கணக்குகளையும் ஆராயச் செய்து, இப்போது புதிதாக ஒருவரை நியமிக்கும்படி இயக்குனர் அவர்களிடம் தெரிவித்து, 'இயக்குனர் இயங்கிக்கொண்டு இருப்பவராக இருக்க வேண்டுமே யன்றி வேறு ஒருவர் இயக்கும் அளவிற்கு இருக்கக் கூடாது, இயங்குங்கள், நன்கு இயங்குங்கள்' என்று சொல்லி, இப்போது அந்தச் செட்டிநாடுப் பண்ணையில் சிறந்த மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதுபோன்று அபிஷேகப்பட்டிப் பண்ணையைப் பார்வையிடலாம் என்று நான் கருதியபோது, அங்குள்ள அதிகாரிகள் இன்னும் சில வசதிகளைச் செய்திட வேண்டும், அவற்றை முடித்த பிறகு வாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆக, இப்போது பல பண்ணைகளும் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓசூர் பண்ணையானாலும் திருச்சி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டைப் பண்ணையானாலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓரத்த நாடு, ஈச்சங்கோட்டை, கொருக்கை ஆகிய இடங்களிலே உள்ள பண்ணைகள், ஆக எதை எடுத்துக்கொண்டாலும் வளர்ந்து வருகின்றனவே தவிர, இந்தத் துறை மங்கிவிடவில்லை. சிற்சில இடங்களிலே அதிகாரிகள் சற்று துடிதுடிப் போடு இல்லாத காரணத்தினால், சில குறைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். இப்படிப் பட்ட குறைகள் கூட ஏற்படுகிறதைத் தடுத்திட வேண்டுமென்ற நோக்கத் தோடு 'ஹாஸ்பிட்டல் அட்வைஸரி கமிட்டி' போன்று ஒரு குழுவினை அமைத்து இக்குழு இத்தகைய பண்ணைகளை அடிக்கடி சென்று பார்வையிட வேண்டும், என்று பரிந்துரை செய்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் சென்ற முறை 'கேவ் ஸ்டாக் அட்வைசரி' கூட்டத்தில் ஓரத்தநாட்டில் உறுப்பினர்களைச் சேர்த்து இக்குழுவை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினரும் மற்றவர்களும் அதில் இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தெரிவித்தேன் 'ஒரு பண்ணையைப் பார்வையிடச் சென்றால் முன்கூட்டியே தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள், குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்னதாக அவர்களுக்குத் தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள். அதிகாரிகள் அங்கே வருவதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். எந்தக் குறைபாடுகள் இருந்தாலும், அரசாங்கத்தின்

வனத்திற்குக் கொண்டுவாருங்கள். ஆனால் குறைந்தது இரண்டு பேராவது செல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். காரணம் ஒன்றைப் பார்க்கும்போது, ஒருவர் மட்டுமே சென்றால், அது பார்வையிடுவதுபோல் இருக்காது. 'Individual inspection' என்று இருந்தால், அது செம்மை யாக இராது. ஒரு "இன்டிவிடுயுவல் இன்ஸ்பெக்ஷனுக" அமையும்பொழுது, அது சிறப்பாக இருக்காது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் கூட, தங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற கால்நடைப் பண்ணைகளைப் பார்வையிட விரும்புவார்களேயானால், செயலாளரிடம் மட்டும் செய்தி தெரிவித்துவிட்டு, எந்த நேரத்திலே வேண்டுமானாலும் பார்வையிட்டு, தக்க ஆலோசனையைக் கொடுக்கலாம். ஆனால் இப்படியெல்லாம் சீர்திருத்தம் செய்யும்பொழுது, பொதுவாக ஊழல் என்று சொன்னால் மட்டும் பயன் தராது என்ற முறையிலேதான், நான் மாற்றுக் கருத்தைத் தெரிவிக்க முற்பட்டேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக் கின்ற பல்வேறு ஆலோசனைகளிலே பலவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக் கிறது.

"Number of recommendations made in 16 Chapters consisting of 174 recommendations, Number of recommendations on which orders were issued in 5 Chapters consisting of 42 recommendations"

அப்படி ஏறத்தாழ 42 பரிந்துரைகள் அரசாங்கத்தினால் உறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

'Number of recommendations pending for want of final replies in 5 Chapters consisting of 86 recommendations.

Number of recommendations under examination in 6 Chapetrs consisting of 46 recommendations.

என்று இந்த அறிக்கையினுடைய கருத்துக்கள் இந்த இலாக்காவால் பரிசீலிக்கப் பட்டு 4, 5 ஆண்டுக் காலத்திலே நடைமுறைப்படுத்தக் கூடிய கட்டத்தை அடைந்திருக்கின்றன. இதிலே அதிகக் கவலையை நான் எடுத்துக்கொள்ளவில்லை; காரணம் இதிலே ஒரு செயலாளரைப் போட்டு அவர் தான் இந்த இலாகாவின் செயலாளரும் கூட, அவரே அதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இருப்பதால் இதை நடைமுறைப்படுத்துவதிலே அதிக சிரமம் இருக்காது. பெரும் அளவிலே இது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்தத் தெரிவிப்பது, இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற சிறப்பான வளர்ச்சி. கல்வித் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியும், மருத்துவத்

துறையிலே அதாவது ராணிப்பேட்டையிலே இருக்கின்ற கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிறுவனத்திலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியும் கால்நடைக் கல்வித்துறையிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்துடன் இது நூறு ஆண்டுக் காலமாக ஏற்பட்டிருக்கிறது. அங்கே 136 மாணவர்கள்தான் ஆண்டுக்கு எடுக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும் கூட, அந்த மாணவர்களை இந்த அரசு முழுமையாகப் பயன்படுத்துவார்களானால், அது போதுமானது. கால்நடைத் துறையிலே படித்த டாக்டர்களுக்கு தனியார் துறையிலே போய் பணி புரிவதற்கு வாய்ப்பில்லை. அத்தோடு தாங்களாகவே ஒரு தொழிலைச் செய்யும் வாய்ப்பு நூற்றுக்கு இரண்டு பேருக்கு இல்லாத நிலைமையில் அந்த எண்ணிக்கையை மட்டும் பெருக்குவதால் ஏதும் பயனில்லை. அதைவிட கல்வித் துறையிலே ஒரு ஆழ்ந்த கருத்தைச் சொல்லுவார்களேயானால், சில கல்வி ஏட்டுக் கல்வி; சில தூறைக் கல்வி பயிற்சிக் கல்வி. அது மருத்துவக் கல்வியாக இருந்தாலும், கால்நடைக் கல்வியாக இருந்தாலும், அது ஒரு பயிற்சிக் கல்வி. என்ஜினியரிங் கல்வி கூட முழு அளவுக்குப் பயிற்சிக் கல்வி அல்ல. அது பாதி தியரி, பாதி பயிற்சி. இங்கே பெறப்படும் கால்நடை மருத்துவக் கல்வி என்பது பயிற்சி அடிப்படையிலேயுள்ள ஒரு கல்வியாகும். அதிலே படித்து வருபவர்கள் ஒரு ஆண்டுக்கு 136 பேர் என்றால், 4, 5 ஆண்டுகளிலே படித்தவர்களின் எண் ணிக்கையைப் பார்த்தால் 700, 750 பேருக்கு மேல் போகும் என்று பார்த்தால், இந்த எண்ணிக்கையை மேலும் உயர்த்த முடியாது. ஆனால் இவர்களுக்குத் தரப்படும் பயிற்சியின் தரத்தை வைத்தும் இவர்களை முழு அளவில் பயன்படுத் திக்கொள்ள இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று சொல் லிக்கொள்கிறேன்.

அது போல் இன்னொரு விஷயம், கால்நடை மருத்துவ மனை பற்றியது. கால்நடை மருத்துவ மனையை ஒவ்வொரு ஒன்றியத்திற்கு ஒன்று என்றில் லாமல், இன்னொரு மருத்துவ மனையையும் ஏற்படுத்த வேண்டுமென்று கருத்து சொல்லப்பட்டது. அதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன; ஒன்று மருத்துவ மனையைக் கட்டுவதற்கு ஏற்படுகின்ற மூலதனச் செலவு. அதைவிட "நடைமுறைச் செலவு". மூலதனச் செலவை வேண்டுமானால், இந்த அரசு ஒத்துக்கொண்டு, கட்டிடத்தைக் கட்டிவிட முடியும்; ஆனால் நடைமுறைச் செலவு என்பது மிக முக்கியமானது. ஒரு ஒன்றியத்தின் தலைவராக இருக் கின்ற திரு. சுந்தரேசத் தேவர் அவர்களே வந்து, எந்தெந்த ஒன்றியங்கள் இந்த நடைமுறைச் செலவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றன என்று சொல்லுவார்களானால், அதையெல்லாம் உடனடியாக நாங்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

27th March 1972

திரு. என். சுந்தரேசத் தேவர்: அப்படி ஒரு "ஜீ.ஓ." போட்டுவிட்டால், நன்றாக இருக்கும். அதற்குப் பிறகு எந்தெந்த ஒன்றியம் அப்படி 'நடை முறைச் செலவை' ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றது என்பதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கடந்த ஆண்டு கூட இந்த மருத்துவ மனைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று சிற்சில ஒன்றியங்கள் விரும்பிக் கேட்டார்கள். அப்படிக் கேட்டது கஞ்சைக்கு பக்கத்திலே இருக்கிற திருக்காட்டுப்பள்ளி ஒன்றியம் என்று கருதுகிறேன், சரியாக அதன் பெயர் ஞாபகத்தில் இல்லை. கன்னபெரம்பூர் ஒன்றியம் என்று நினைக்கிறேன் . . . . அப்படி ஏற்றுக்கொண்டால், எத்தனை மருத்துவ மனைகளை வேண்டுமானாலும் வைக்கலாம்.

திரு. என். சுந்தரசேத் தேவர்: அரசாங்கத்தின் பங்கைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கம் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து, டாக்டரைப் போட்டுக் கொடுத்தால், மருந்துச் செலவு-மெயின்டனன்ஸ் செலவு பூராவையும் பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவர் சொல்லுவதை நான் சரியான குறிப்பாக எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் சொன்னால், எத்தனை மருத்துவ மனை கேட்டாலும் தரப்படும். அரசாங்கம் இந்த மருத்துவ மனைகளை நடத்துவது என்று சொல்லும்பொழுது, ஆண்டுக்கு 5 இலட்சம் 10 இலட்சம் என்ற அளவுக்குத் தொகையை ஒதுக்கி ஒரு ஐந்து இலட்சம் ரூபாயிலே 18 அல்லது 20 இடங்களிலே இந்த மருந்துவ மனைகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மருத்துவ மனை என்ற நிலைக்கு மாறாக, மேலும் ஒரு மருத்துவ மனை வேண்டுமென்று நகர் மன்றங்களிலே கேட்பார்களேயானால், கட்டிடச் செலவிலே மூன்றில் இரண்டு பங்கை ஒன்றியமும், ஒரு பங்கை அரசாங்கமும் தந்து, அந்தக் கட்டிடத்தை அமைத்து, அதை அரசாங்கச் செலவிலே நடத்துவது என்ற முறைப்படி 10 அல்லது 20 இடங்களிலே அப்படி வைக்க முடியும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். காரணம் நிதியெல்லாம் விரிவாக்கப்பட இடமில்லை. ஆனால், ஒன்றியமும் ஒத்துழைத்து இப்படி இரண்டாவது மருத்துவ மனைகளை ஏற்படுத்த அக்கறை காட்டினால்தான், அவைகளை யெல்லாம் செய்ய முடியும். ஆனால், அதே நேரத்தில் இன்றைக்குக் கால்நடை மருத்துவ மனைகளும், கிளை மருந்தகங்களும் பயன்படவில்லையென்று சொன்னார்கள். அவைகளெல்லாம் "டாக்டரால் நோயுக்குச் சிகிச்சை செய்ய" பயன்படவில்லை என்றும், இதைவிட அடிப்படையான தமிழ் நாட்டிலேயுள்ள மாடுகளுடைய,

27th March 1972] [திரு. க. அன்பழகன்]

கால்நடைகளுடைய தரத்தை உயர்த்துவதற்கும், செயற்கை முறையிலே கருவூட்டவும், கூடுமானால் ஒரு வகையிலே அந்த மாடுகளுக்கு வரக் கூடிய நோயை அடக்க ஊசி போடுகின்ற "பிரவென்டிவ் மெடிசின்" என்ற முறையில் முன்னாலே நான் சொன்னதைப் போல் ராணிப்பேட்டையிலே தயாரிக்கின்ற மருந்துகள் கால்நடை மருந்தகங்களிலே வாங்கப்பட்டாலும் கூட, கால்நடைகளின் நோய் பரவக் கூடிய நிலைமை இருக்கிறது. சில ஆடுகளுக்கும் சில மாடுகளுக்கும் சில பகுதிகளிலே சில மாதங்களிலே இன்னின்ன நோய் வரும், இன்னின்ன மாதத்திலே வெக்கை நோய் வரும், இன்னின்ன மாதத்திலே கோமாரி நோய் வரும், இன்னின்ன மாதத்திலே அம்மை நோய் வரும் என்றிருக்கிறது. ஆக அந்தக் காலத்திற்கு முன்னாலே தடுப்பு ஊசிகளை இந்த உதவி நிலையங்கள் மூலமாகப் பெருமளவிற்குப் போடுகிறோம். நம்முடைய நாடுகளிலே நோய் வந்த மாடுகளைக் காப்பாற்றுவது என்பதிலேகூட நான் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று விரும்பமாட்டேன். முறையான அக்கறை செலுத்தி எவ்வளவு பாதுகாக்க முடியுமோ அவ்வளவு பாதுகாக்கலாம். ஆனால் நம்முடைய நாட்டினுடைய கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதில்தான் நம்முடைய நாட்டு மக்கள் முழு கவனத்தைச் செலுத்த வேண்டும். இங்கே கூட பல உறுப்பினர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், நம்முடைய கால்நடைகள் எல்லாம் தரம் குறைந்து போனதைத் தடுக்க என்னென்ன செய்யப்படுகிறது என்ற கருத்துபடப் பேசினார்கள். தரம் குறைந்து போவதாக உள்ளதை தடுப்பதற்கு நம்முடைய நாட்டு மாடுகளிடையே சேர்க்கை ஏற்படுத்திவிடவே கூடாது. அப்படி நம்முடைய நாட்டுக் காளைகளைப் பயன்படுத்துவது அடியோடு நிறுத்தவேண்டும். நான்கூட இந்த இலாகாவினுடைய இயக்குநர், செயலாளர் இவர்களைப் பார்த்து, நம்முடைய நாட்டு மாடுகளுக்கு பிறந்த காளைகள், கன்றுகள் எல்லாவற்றையும் "கேஸ்ட்டிரேட்" செய்வதற்கு அவைகளை காய் அடிப்பதற்கு முறையான சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படுமா என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், ஐ.சி.டி.பி. திட்டம் அமுலில் இருந்த பகுதிகளிலே இருந்த கன்றுகள் இப்படி முன்பே கேஸ்ட்டிரேட் செய்யப்பட்டுவிட்டன, ஆனால் மற்றப் பகுதிகளிலே அது கையாளப்பட முடியாத ஒரு நிலைமை இருக்கிறது என்றார்கள். நம்முடைய மாடுகளின் விந்து மூலமாகப் பெறுவது, தரம் குறைந்த காளைகளைத்தான் உண்டாக்குமே தவிர, அதைவிட உயர்ந்த காளையை உண்டாக்காது. ஆனால் தொழில் முறைக்கு உம்பளாச்சேரி, கீரங்கேயம் போன்ற பகுதிகளிலேயிருந்து இறக்குமதி செய்யும் காளைகள் பயன்படுகின்றன. எல்லாம் பிறக்கும் பொழுது 'காளை' என்று தெரியாது; சில சமயம் "கிடாரியாக" இருக்குமானால், அது பால் குறைந்த மாடுகளாகத்தான் இருக்கும். ஆக நம் நாட்டிலே முதல் தேவையான பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையிலே அந்த மாடுகள்

இருக்க வேண்டும். பால் பெருக்குத் திட்டம் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே 10 கோடி ரூபாய் அளவிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொல்லி, தமிழக அரசும் "ஒரூர்" பண்ணையிலே ஒரு விரிவான திட்டத்தை உண்டாக்கும் பொருட்டு அங்கே ஒரு மூல பீடத்தை ஏற்படுத்த 40 இலட்சம் ரூபாய் அரசு வழங்கத் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் அப்படி 10 கோடியிலே வருகிற அந்தத் திட்டத்தைக் கூட எற்றுக் கொள்கிற சக்தி, அந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகிற அந்த சக்தி நமக்கு வேண்டுமானால், நம்முடைய கால்நடைகளின் தரத்தை உயர்த்த வேண்டும். அப்பொழுது தான் பாலின் அளவும் உயர முடியும். நம்முடைய நாட்டு பழைய கால்நடைகள் என்று நான் சொல்லுவதற்காக உள்ளபடியே "ஆவின் நிறைவு பற்றி" பக்தியோடு பாடும் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் வருத்தப்படக் கூடாது. காலம் கெட்டுப் போய்விட்டது என்ற அளவிலே வருத்தப்பட்டுப் பயனில்லை; கால்நடைகள் கெட்டுப் போய்விட்டன. ஆகவே, பழைய கால்நடைகளை இன்னும் நாம் காப்பாற்ற முடியும் என்று அவர் எண்ணக் கூடாது. இன்றைக்கு தமிழ் நாட்டிலே கால்நடைகள் கெட்டமாதிரி, சிந்தி கால்நடை கெடவில்லை; இராஜஸ்தானிலே கெடவில்லை, கிர் இனத்து மாடுகள் கெடவில்லை. அவைகளெல்லாம் பால் உற்பத்தியிலே தரம் உயர்ந்திருக்கிறது. மூர்ரே எருமையும் தரம் உயர்ந்திருக்கின்றது. ஆகவே, நம்முடைய நாட்டுக் கால்நடைகள் தான் தரம் குறைந்திருக்கின்றன. வடக்கேயிருக்கும் மாடுகளுக்கு நல்ல தீவனம் கிடைப்பது போன்ற நிலைமை ஒரு காரணமாக இருக்கலாம். அவைகளுக்கிருக்கின்ற தட்பவெட்ப நிலையும், அங்கே கிடைக்கும் புல்லும்—மிகவும் உயர்ந்த வளரக்கூடிய புல்லாக இருப்பதால், சாதகமாக இருக்கலாம். அந்த இடத்து மண்ணும்கூட நம் தமிழ் நாட்டிலே இருக்கும் மண்ணைப்போல் இல்லாமல் புது மண்ணாக இருக்கிறது. விந்தியமலைக்கு அப்பாலிருக்கிற நிலப்பகுதி முழுவதும் ஒரு காலத்தில் கடலுக்கடியில் இருந்த பகுதி. இயற்கையான காரணமாக, நம் கொள்ளுட்டின் புல், பூண்டு, தாவரம் சத்துக் குறைந்து, சாரம் குறைந்ததாகி, நம் கால்நடைத் தரம் குறைந்து, இன்றைய தினம், நம் கால்நடைக் கணக்குள்ள எண்ணிக்கையாக இருக்கிறதே தவிர, பயன்படுகிற வகையிலில்லை. ஆகவே, செயற்கைக் கருவூலத் திட்டத்தைப் பரவலாக்க, ஜெர்சி இனக் காளைகள், அதேபோல மேல் நாட்டுக் காளைகள், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய பிரிசியன் காளைகள் இவற்றின் விந்துகளைப் பயன்படுத்துகிறோம். அதிலேயிருந்து கிடைக்கக்கூடிய விந்துக்கள் முழுவதையும் ஒரு மாட்டிற்கு வீணுக்காமல், நூற்றுக்கணக்கான பசுக்களுக்குப் பயன்படத் தக்க விதத்தில் செய்து, அதிலே 25, 30 பசுக்கள் அந்தப் புதிய இளங்கன்றுகளைப் பெற்றிட ஆற்றல் பெறும். இதை வளர்ப்பதில் தான் கால்நடைத் துறையும்,

அரசும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட இந்த artificial insemination செயற்கை முறைக் கருவூட்டல் திட்டம் மூலம், பெரும் பாலும் சிந்து இனத்திடமிருந்து செயற்கை போதாது என்று, ஜெர்சி இனத்தின் செயற்கை கூடும்படியாகச் செய்ய முடியும் என்று நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அண்மையில் தென்னற்காடு மாவட்டத்தில் Small Farmer's Scheme சிறு விவசாயிகள் திட்டத்தின் அடிப்படையில் Agricultural Refinance Corporation கொடுக்கக்கூடிய கடன் தொகையில் வேறத்தாழ தென்னற்காடு மாவட்டத்தில் ஒரு 200, 300 கிராமங்களில் 1,000, 1,500 கிராமவாசிகளுக்கு மாடுகள் வாங்கித் தரவும், பசுக்கள் வாங்கித் தரவும், அந்தப் பசுக்களை வளர்த்து, பாலைக் கூட்டுறவு முறையிலே அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற ஒரு அமைப்பு மூலமாக விற்பதற்கு ஏற்பாடு செய்ய ஒரு முறையை வகுத்திருக்கிறார்கள். இந்த முறையில் அதிக உயர்ந்த மாடுகளை வாங்கிக் கொடுத்து விட்டு, அதற்குப் பின்னால் அதற்குப் பிறக்கிற கன்றுகள் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்பதற்காக, மேல் நாட்டிலிருந்து நேரடியாக, உயர்ந்த நெம்பர் 1 காளைகளின் விந்தை வரவழைக்க முடியும் என்று கருதி, அப்படி வரவழைக்க மத்தியரசின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. இது நேரடியாகக் கால்நடைத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், இவ்வொரு துறை மூலமாக நடத்தப்பட்டாலும், ஊக்கம் கொடுக்கிறோம். அப்படிச் செய்வதின் மூலமாக நம் பழைய கால்நடை இனங்கள் குறைந்துகொண்டு வருமானால், நாட்டிற்கு நல்லது. நம்முடைய பழைய கால்நடைகளை மதுராந்தகம் பக்கத்தில் காரில் போகும்போது பார்த்திருக்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரைப் பார்த்தால், கால்நடை நன்றாக இருக்கும். பார்வைக்குப் பஞ்சையாகத் தெரியாது. கறப்பது பஞ்சையாக இருக்கலாம். அது வேறு. மதுராந்தகம் பக்கம் பார்த்தால், மாட்டைப் பார்க்கும்போது, உயர்ந்த ஆடு அளவுக்கிருக்கும். ஆடுகளைப் பார்க்கும்போது, நாயளவுக்கு இருக்கும். இந்த அளவுக்குத் தரம் குறைந்து போய் விட்டது. இது திருவண்ணாமலை மாடுகள் என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்லப்படுகிற அந்தப் பகுதி மாடுகள் தரம் குறைந்து போனதை அடியோடு மாற்ற வேண்டுமென்றால், பழைய இனம் மறுபடியும் வளர விடக் கூடாது. புது இனம் உற்பத்தியாக வேண்டும். அதற்கு மக்களிடத்தில் ஒரு தெளிவை உண்டாக்க நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கோழி வளர்ச்சியில் ஏற்கனவே ஏற்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு, இன்றைய தினம் ஒரூர் பண்ணையிலும், கப்பலூரிலும், அதே போல காட்டுப்பாக்கத்திலும், ஒரு மாதத்திற்கு 25 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை வளர்த்து, மக்களுக்கு வழங்கக்கூடிய அளவுக்கு விரைவான திட்டம்

நடைபெறுகிறது. மற்ற கோழி வளர்ச்சி நிலையங்களெல்லாம் 50, 40 தரக்கூடிய நிலையங்கள். ஆனால் இந்தப் பெரிய நிலையங்களில் இன்றைக்கு விஞ்ஞான முறைப்படி ஏறத்தாழ 6 வாரம், 8 வாரம் குஞ்சுகளை வளர்த்து, அவைகளை வழங்குகிறார்கள். அதுவும், சுத்தக் கோழி (பியூர்லைன்), பிரிய இனக் கோழி (ஹைலைன்), என்ற அடிப்படையில் வழங்குகிறார்கள். அந்த பிரிய இனக் கோழி களை வாங்கி வைத்து வளர்ப்போமானால், அது முட்டையிடுகிற வரையில் முட் டையிடுமே தவிர, இனவிருத்தி செய்ய முடியாது. இனவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்துவார்களானால், இனவிருத்தி செய்யப்பட்ட குஞ்சுகள் பாதி உயர்ந்த தரமாகவும், பாதி இருக்கிற தரத்தை விட தாழ்ந்த தரமாகவும் கிடைக்கும். ஆகவே, இந்த லைலைனின் பிரிய வித்துக்கள் இப்போது கூட வழங்கப்படு கின்றன. கம்பு, சோளம் முதலானவற்றை மறுபடியும் அதையே வித்தாக எடுத்துப் பயன்படுத்தினால், அது நல்ல தரமான விளைச்சல் தராது. அதே நிலைமை கோழியிலும் இருக்கிறது. இந்தக் கோழியைப்பற்றி இன்னும் எவ்வ ளவோ செய்திகள் நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தெரிந்துகொள்வார்களானால், பாட்டோடு இந்தக் கருத்தை மக்களுக்கு எடுத்துச்சொல்கிறபோது, மக்கள் பின்பற்றினால் கூட எளிதாகும். நம்முடைய நாட்டுக் கோழிக்கு அடைகாக்கத் தெரியும். மேல்நாட்டுக் கோழிக்கு அடைகாக்கத் தெரியாது. அடைகாக்கத் தெரியாத கோழி முட்டை அதிகமாகவிடும். அடைகாக்கின்ற கோழி, முட்டைகள் சிலவற்றை இட்டு விட்டு, அடைகாத்துக் கொண்டிருக்கும், முட்டையிடாது. அந்தப் பழக்கத்தை நாம் Instinct என்று சொல்லுகிறோம். நம் தாய்மார்கள் பால் கொடுத்துக் குழந்தைகளை வளர்ப்பார்கள், மேல் நாட்டில் பால் கொடுக்க மாட்டார்கள். அது போல கோழியிலும் உண்டு. அதிகத் தாமுள்ள மேல் நாட்டுக் கோழிகளின் வளர்ச்சியை இன்றைய தினம் நம் நாட்டுக் கோழிகளி டத்தில் புகுந்த முடியவில்லை. நான் அந்தத் துறையினரை நம் நாட்டுக் கோழிகளின் தரத்தை மேல்நாட்டு கோழிகளோடு செயற்கை சேர்ப்பு மூலம் உயர்த்த முடியுமா என்று கேட்டேன். அதில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கிறது. கால்நடையில் இருப்பது போல கொஞ்சம் கொஞ்சமாக அந்த உயர்வைக் கொண்டு வந்து சேர்க்கின்ற அமைப்பாக நம்முடைய கோழிகளில்லை. அந்தக் கோழியில் தன்மை பயன்படாது இருக்கின்ற காரணத்தால், அவை களைக் கொண்டு பயன்படுத்த முடியாது என்று சொன்னார்கள். ஆகவே, இந்த சுத்த இனம் என்று வழங்கப்படுகிற, ரெட்லெகான், போந்தா போன்ற இந்த இரண்டு இனங்கள் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இனமாக இருக்கின்றன. பெயர்களை வேண்டுமானால், நான் சரியாகச் சொல்லவில்லை. அந்த இனங்களைப் பரவலாக்க பலவிடங்களில் ஆள் குப்பை கோழிக் கூண்டு திட்டமென்ற திட்டத்தை ஏற்படுத்தி, அந்தக் குப்பை உரமாக மாறுகிறது, கோழிக்குத் தீனியாக மாறுகிறது. அந்த உரத்தின் பணத்தை எடுத்து விடலாம். அந்த கோழியின் குப்பைக்கு ரூபாய் 500 முதல் வைப்பார்களானால், ஒரு மாதத்திற்கு 150 ரூபாய் மிஞ்சும். அந்த அளவுக்கு ஒரு 10 மாதத்தில் ரூபாய் 1500 சம்பாதிக் கின்ற அளவுக்கு ஒரு ஏழைக் குடியானவன், ஒரு சாதாரண நடுத்தர குடும்பம் நடத்துகிறவன், அந்த லாபம் பெறுகிற அளவுக்கு இன்றைய தினம் கோழி வளர்ச்சித் தொழில் உருவாகியிருக்கிறது. அது மட்டுமல்ல. சென்னையைச் சுற்றிலும், படப்பை, தாம்பரம் பகுதியிலும், வேறு சில பகுதிகளிலும் ஏற்படுத் திய வளர்ச்சியின் காரணமாக இன்றைய தினம் 50 ஆயிரம் முட்டை சென்னைக் குக் கிடைக்க முடிகிறது. திருச்சியைச் சுற்றி ஏற்படுத்திய வளர்ச்சியின் காரணமாக ஒரு நாளைக்கு 15,000, 20,000 முட்டை கிடைக்க வழியிருக்கிறது. இன்றைய தினம் கொல்லிப்புற கோழித் திட்டம் நாமக்கல் பகுதியிலும், கூட்டுறவு முறை கோழி வளர்ச்சித் திட்டம் ஈரோடு பகுதியிலும் ஏற்படுத்தி, ஏறத்தாழ ஒரு நாளைக்கு 25 ஆயிரம் முட்டை வரை அவர்கள் அனுப்புவதற்குத் தயாராகி விட்டார்கள். அதைப் போல மதுரை, கப்பலூர், திருமங்கலம் பகுதி களில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மதுரையைச் சுற்றியும், ஒவ்வொரு மாபெ ரும் நகரத்தைச் சுற்றியும், பல வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றுவது போல கோழி வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி, கிராம மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற முயற்சி நடைபெறுகிறது. இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் முட்டைகள் கேரளத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வரவழைக்கப்பட வேண்டிய அவசியத்திலிருக்கிறோம். ஆனால் நாம் தமிழ் நாட்டினுடைய தேவைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், இன்னும் ஐந்து மடங்கு, பத்து மடங்கு தேவை. இந்தப் புள்ளி விவரத்தை இப்போது நான் சொல்லவில்லை. எவ்வளவு தேவைப்படுகிறது என்ற காரணத்தால், கோழி வளர்ப்புத் தொழில் நம்முடைய கிராம மக்களின் நன்மைக்கு, நகர மக்களின் நன்மைக்குப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற காரணத்தால், அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன். அதே போல, திரு. சுவாமிநாதன் அவர்கள் கால்நடை இன்ஷூரன்ஸ் பற்றி அரசு கவனம் செலுத்தவில்லை என்று சொன்னார்கள். கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு தானாக நிறைவேற்ற முடியாது. இதை அகில இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும். செங்கல்பட்டு பகுதியில் ஒரு புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு, இந்தக் கால்நடை இன்ஷூரன்ஸ் நிறை வேற்றப்படுமானால், ஏற்படக் கூடிய நன்மை, தீமை, எவ்வளவு கட்டணம் வசூலிக்க வேண்டுமென்பது போன்ற ஆராய்ச்சி செய்து புள்ளி விவரம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் இதைப் பரிசீலித்து, அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு விடுவார்களானால், தமிழ் நாடு மிக்க மகிழ்ச்சி யோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[27th March 1972

MR. CHAIRMAN : The time is extended.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கால்நடை உதவியாளர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் அனைவரும் இன்றைக்குப் போதுமான பயிற்சி பெற்றவர்களாக இல்லை. ஆனால் அவர்கள் ஆற்றுகிற பணி கடுமையான பணி என்கிற காரணத்தால், அந்தப் பயிற்சி கூட கவனிக்கப்படவில்லை. அவர்களுடைய அனுபவத்தின் காரணமாக அவர்களுக்குப் பயிற்சி இருக்கிறது. அவர்கள் மேலும் உயர்நிலை அடைய வேண்டுமென்று சொன்னால், முதல் தரத்திலே பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு ஓராண்டுக் காலம் பயிற்சியளித்து அவர்களுக்கு 'லீவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்' ஆக பதவி உயர்வு கொடுக்க முடியுமென்று கருதப்படுகிறது. அதைப் போல் கல்வி உதவியாளர்களுக்கு மாதந்தோறும் பயணப்படி தேவையென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பயணப்படி வழங்கப்பட வேண்டுமென்று கால்நடைத் துறை நிதி இலாகாவுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறது. பெரும்பாலும் அந்தப் பயணப்படி வழங்குவதை ஓளவுக்கு ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு ஆடுகள் வளர்ச்சியிலேயும் தமிழ் நாடு அரசு அக்கறை செலுத்தியிருக்கிறது. அதிலும் இரண்டு முக்கியமான கருத்துகள். ஒன்று, செம்மறி ஆடு வளர்ச்சியில் நிறைந்த கம்பளம் தரக்கூடியதாக நல்ல இனமாக இருக்க வேண்டும்; இல்லையானால் தகுந்த அளவு இறைச்சி தரக்கூடிய வளர்ச்சி இருக்க வேண்டும் என்பது குறிகோள் ஆகும். அந்த வகையிலே தமிழ் நாட்டிலே இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரையில் அப்படி ஒன்றிரண்டு ஆடுகள் கொஞ்சம் தரமுள்ளவையாகவும், அதேபோல் சேலம் மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் ஆடுகள் கொஞ்சம் தரமுள்ளவையாகவும் இருக்கின்றன. இந்த நம் நாட்டு இனத்தை மேல் நாடுகளிலுள்ள இனத்தோடு கலப்புரை செய்ய வேண்டும். ஆஸ்திரேலியாவிலுள்ள ஆட்டு இனத்தை நம்முடைய நாட்டில் கலப்பினமாக ஏற்படுத்துவதனால், இதில் வளர்ச்சி உண்டாக்க முடியும் என்று இந்தத் துறை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர மந்தை ஆடுகள் பெரும்பாலும் நம் பண்ணைகளில் இருக்கின்றன. அவையெல்லாம் ஒரு பெரிய வளர்ச்சி பெறவில்லை. அந்த வளர்ச்சி பெறுவதற்கு எந்தெந்த வகையான கலப்பு இனத்தை உருவாக்க முடியுமோ அதை உருவாக்க வேண்டுமென்று இந்தத் துறை இன்றைய தினம் முயற்சி எடுத்து வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகளில் திடீரென்று ஒரு நோய் தோன்றி கால்நடைகளைப் பாதிக்கச் செய்கிறது என்று கேள்விப்பட்டோம். அதனால் உடனடியாக வட ஆற்காடு மாவட்டம் முழுவதும் எந்தெந்தப் பகுதிகளில் அந்த நோய் பரவக் கூடுமோ அந்தந்தப் பகுதிகளில் எல்லாம் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு மிகச் சிறந்த முறையிலே பணியாற்றி அந்த நோய் பரவாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. நோய்த் தடுப்பு முயற்சியில் இந்தத் துறை வெற்றி பெற்றிருப்பதற்கு இது ஒரு அடையாளமாகும். ஆக இப்படி மூன்று வழிகளிலும், கால்நடை தரத்தை உயர்த்த, பசுவின் தரத்தை உயர்த்த, எருமை மாடுகளின் தரத்தை உயர்த்த, கோழி வளர்ச்சித் திட்டத்தை விரிவடையச் செய்ய, ஆடுகள் இன்னும் பெருக, அதே போல் பன்றி வளர்ச்சித் திட்டம் முன்னேற பல வழிகளில் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். நாவலர் அவர்கள் சொன்னதைப் போல், பன்றி என்று சொல்லுல் பெயரளவில் அனைவரும் கூச்சப்படுகிறார்களே தவிர, எடுத்து வைத்தால் உண்பார்கள் என்று சொன்னது அந்த வகையில் உண்மைதான். அப்படி ஒரு மனப்பான்மை நம்முடைய மனதில் நீண்டகாலமாகத் தோற்றுவிக்கப்பட்டுவிட்டதுதான் காரணம். இந்த யார்க்ஷயர் என்ற வெண்பன்றியை வட நாட்டில் ராஜ்கோஷ் என்று அழைக்கிறார்கள். 'ராஜ்கோஷ்' பளிச்சென்று புரியாது என்ற காரணத்தினால், நாங்கள் "மாமிச ராஜா" என்று அழைக்கிறோம். இன்னும் எளிதாகப் புரியட்டும் என்பதற்காகச் சில இடங்களில் வெண்பன்றி என்றே குறிப்பிட்டிருக்கிறோம். உள்ளபடியே இந்தப் பன்றி வளர்கிற வேகம் தான் இந்தியாவின் வறுமையை மாற்றுவதற்கு ஒரு மிகச் சிறந்த உதவியாக இருக்கும்.

நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோதுகூட ஒரு கிராமத்திலேயுள்ள அமெரிக்க வேளாண்மைக் குடிமகனைக் காணச் சென்றபோது பார்த்தேன். அவர் வேளாண்மைக்கு என்று 50 ஏக்கர் வைத்து வேளாண்மை செய்து வருகிறார். இன்னும் 20 ஏக்கர் நிலத்தில் பன்றி வளர்ப்புக்காக பெரிய மூன்று கூண்டுகள் அமைத்து, அதில் 10 நாள் வளர்ந்த பன்றி 500, ஒரு மாதம் வளர்ந்த பன்றி 500, 1½ மாதம் வளர்ந்த பன்றி 500, இரண்டு மாதம் வளர்ந்த பன்றி 500 ஆக இப்படி 10 ரகத்தில், குட்டி போடுகிற நிலையிலுள்ள பன்றிகளையும் சேர்த்து வளர்த்து வருகிறார். அந்தப் பன்றிகள் இருக்கக் கூடிய இடத்திலேயே உணவு செல்லக்கூடிய வகையில் அதற்குத் தேவையான உணவை அரைத்துக் கொண்டு சென்று கொட்டுவதற்காக ட்யூப்களை வைத்து பெரிய இயந்திரத்தை ஓட்டிக்கொண்டிருந்தார். வேளாண்மைத் துறையிலே இத்தனை ஏக்கர் அளவுக்கு வேளாண்மை செய்துகொண்டு இந்தப் பன்றி வளர்ப்பையும் செய்கிறீர்களே, இது எப்படி உங்களுக்குப் பயன் தருகிறது என்று கேட்டதற்கு, "வேளாண்மையிலே கிடைக்கிற வருமானத்தை இரண்டு மடங்காகப் பெருக்குவது இந்தப் பன்றி வளர்ச்சிதான்; தவிர வெறும் வேளாண்மையிலே கிடைக்கிற வருமானம் நல்ல வருமானம் ஆகாது" என்று சொன்னார்கள். மேலும் "50 ஏக்கரிலே கோதுமையாக இருந்தாலும், வேறு எந்தத் தானியமாக இருந்தாலும், முறைப்படி சாகுபடி செய்வது நிம்மதியாக இருந்தாலும், அதில் கிடைக்கிற அந்த வருமானத்தை இரட்டிப்பாக்குவது இந்தப் பன்றி வளர்ப்பு

27th March 1972] [திரு. க. அன்பழகன்]

[திரு. க. அன்பழகன்] [27th March 1972

இந்த எண்ணத்தை நிறைவேற்ற, அதற்காக மேலும் மேலும் முயற்சிகளை எடுத்துக்கொள்ள, அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்பை இத்தத் துறைக்கும் மக்களுக்கும் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4.00 p.m. to-morrow.

The House then adjourned.

VII. *Papers laid on the table of the House.*

A. *Statutory Rules and Orders.*

83. Notification issued with G.O. Ms. No. 2780, Agriculture, dated the 19th October 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

84. Notification issued with G.O. Ms. No. 2951, Agriculture, dated the 10th November 1971, in regard to regulation of trade over the purchase and sale of blackgram in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

B. *Reports, notifications and other papers.*

86. Notification issued with G.O. Ms. No. 109, Agriculture, dated the 17th January 1972, in regard to the delegation of powers to certain officers of the Fisheries Department under section 7 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897).

& 87. Note on Farmers' Co-operative Paper Mills, in English.

& 88. A Review on the working of the Stationery and Printing Department during 1971–72. (English and Tamil).

27th March 1972]

& 89. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour while moving demand for Stationery and Printing. (English and Tamil).

& 90. Labour in Tamil Nadu, 1971–72. (English and Tamil).

& 91. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour while moving the Demand for Grants for the year 1972–73—24. Labour including Factories. (English and Tamil.)

& 92. Third Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation which was presented to the Legislative Assembly on 24th March 1972 in English.

& Laid on the table of the House on 25th March 1972.

[27th March 1972

APPENDIX I

(*Vide* answer to Starred Question No. 310 on page. 2 .)

(அ) புகுமுக வகுப்புத் தேர்வுகளே சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்கள் நடத்தி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் தேர்வு பெற்றவர்களின் சதவீதம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

	1969		1970		1971	
	பட்ட வகுப்புத் தேர்வு முடிவு.	இளநிலை பட்டமளிப்பு விழா.	பட்ட வகுப்புத் தேர்வு முடிவு.	இளநிலை பட்டமளிப்பு விழா.	பட்ட வகுப்புத் தேர்வு முடிவு.	இளநிலை பட்டமளிப்பு விழா.
சென்னை	46.98	41.83	49.50	39.44	45.30	36.81
மதுரை	43.40	14.70	43.00	8.60	42.10	8.50

	1968–69	1969–70	1970–71
அண்ணாமலை	46	33	33

(இ) முந்தின ஆண்டுகளைவிட 1971-ல் குறிப்பிட்ட அளவிற்கு குறைய வில்லை.

(உ) தகுந்த நடவடிக்கையை அவசியம் எனக் கருதிய சமயத்தில் பல்கலைக் கழகங்கள் எடுக்குமென்று எதிர்ப்பார்க்கலாம்.

27th March 1972]

APPENDIX II

(*Vide answer to Starred Question No. 321 on page 22. . .*)

சென்னை மாநகரிலுள்ள அரசு ஸ்டான்லி மருத்துவ மனையை அடுத்துள்ள பள்ளிகளில் முதலாம் வகுப்பிலும், ஆறும் வகுப்பிலும் பயிலும் பள்ளிச் சிறுவர்களை உடல் நல ஆய்வு செய்யும் முன்னேடித் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அத்திட்டத்தின்படி அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியை அடுத்துள்ள பள்ளிகளில் முதலாம் வகுப்பில் பயிலும் 3,500 பள்ளிச் சிறுவர்களையும், ஆறும் வகுப்பில் பயிலும் 1,500 சிறுவர்களையும் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த மருத்துவர்களும், அரசு மருத்துவக் கல்வித்துறையைச் சேர்ந்த உதவி அறுவை சிகிச்சையாளர்களும் உடல் நல ஆய்வு செய்வர்.

பள்ளிச் சிறுர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் உடல் நலக் குறைபாடுடையவர்களாயுள்ளனர், அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளின் தன்மைகள் என்ன, அவற்றைப்போக்க என்ன நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் என்பனபோன்ற செய்திகளை அறிந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு பள்ளிகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளையும் ஆய்வுசெய்ய வழிவகைகளையும், அவற்றிற்கு எவ்வளவு பொருள் செலவாகுமென்றும் அறிவதே இந்த முன்னேடித்திட்டத்தின் நோக்கமாகும்.

முன்னேடித் திட்ட ஆய்வு முடிந்தபின், கிடைத்த அடிப்படை விவரங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படுவான்வேண்டி மக்கள் நல்வாழ்வு இயக்கத்தைச் சேர்ந்த புள்ளி விவரத் தொகுப்பாளருக்குத் தகுந்த அறிவுரைகளுடன் அளிக்கப்படும். "மதிப்பீடு" முடிந்தபின் சென்னை மாநகரில், மேற்கொள்ளப்படும் பொருட்டு முழு விளக்கங்களும், செலவு மதிப்பீடுகளும் கொண்ட ஒரு திட்டத்தை ஒரு குழு தீட்டும்.

[27th March 1972

APPENDIX III

[*Vide* item VI on page 31]

கால்நடை வளர்ப்புத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

''கால்நடை வளர்ப்புப் பணிகள்'' என்ற தலைப்பின்கீழ் அரசுக் கொள்கையின் முக்கியக் கூறுகளை, மேலவையின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் எழுந்துள்ளேன்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியக் குறிக்கோள் கறவை மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் உட்பட கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதாகும். இக்குறிக்கோள் நிறைவேற, கால்நடைகள் இனப் பெருக்கம் செய்வதிலும் அவற்றிற்குத் தீவனமும், இரையும் வழங்குவதிலும் கால்நடைகளைப் பேணுவதிலும் புதிய அறிவியல் முறைகள் பின்பற்றப்படும். மேலும், கால்நடை நோய்களைத் தடுக்கவும் அவற்றிற்கு சிகிச்சை அளிக்கவும், உரிய வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும். இந்த நோக்கத்துடன் பணியாற்றும் கால்நடை வளர்ப்புத்துறை நடவடிக்கைகளின் இறுதிக் குறிக்கோள், நமது மாநிலத்திலுள்ள இழுவை மாடுகளின் ஆற்றலை உயர்த்துவதும், நமது மாநில மக்கள் உடல் நலனும், வலிமையும் உடையவராகத் திகழ அவர்களுக்கு உயரிய சத்துக்களடங்கிய உணவை அளிக்கும் பொருட்டு, பால் பொருட்களின் உற்பத்தி, முட்டை, இறைச்சி, கோழி இறைச்சி, பன்றி இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வழங்குவதுமாகும்.

நமது மாநிலத்தின் பொருளாதாரம் பெருமளவுக்கு வேளாண்மையைச் சார்ந்துள்ளது. வேளாண்மையின் செழிப்பும், கால்நடைச் செல்வத்தின் வளமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். நமது மாநிலத்தின் கால்நடைகளின் தொகை மிகப் பெருமளவில் உள்ளது. கால்நடைகளின் எண்ணிக்கை 108.59 லட்சமாகும். எருமைகளின் தொகை 27.24 லட்சமாகும். செம்மறி ஆடுகளின் தொகை 66.21 லட்சமாகும். வெள்ளாடுகளின் தொகை 37.71 லட்சம். பன்றிகளின் தொகை 4.75 லட்சம். கோழிகளின் தொகை 112.26 லட்சம். இப்புள்ளி விவரங்கள் 1966-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கால்நடைகள் தொகைக் கணிப்பை ஒட்டியதாகும். ஆனால், கால்நடைகள் இவ்வளவு பெருந்தொகையாக இருப்பது கால்நடைகளின் எண்ணிக்கையில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டுகிறதே ஒழிய, கால்நடைகளின் தரத்தில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டவில்லை. நம்மிடம் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில் கால்நடைகள் இருந்தும்கூட, கால்நடைகள் தரத்தை உயர்த்தும் முறையை நாம் முன்னமே அணுகாமல் விட்டுவிட்டதால், கால்நடை உற்பத்திப் பொருள்களை நாம் பயன்படுத்துகின்ற அளவானது தொடர்ந்து கவலைப்படும் வகையில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதாவது, ஆண்டொன்றுக்கு சராசரியாக நாம் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பால் 30 லிட்டர்; முட்டைகளின் எண்ணிக்கை 8; இறைச்சியின் அளவு 2.3 கிலோ கிராம்.

27th March 1972]

நமது கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், அவை மிகுந்த பயன் தரும் வகையில் அவற்றை மேம்படுத்தவும், இத்துறை பல்லாண்டுகளாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க சில திட்டங்கள் பின்வருமாறு :—மையக் கிராமத் திட்டங்கள், செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டங்கள், கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், கோழி வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், முட்டைகள், கோழிகள்—உற்பத்தி விற்பனை மும்முரத் திட்டங்கள், பன்றி வளர்ப்புத் திட்டங்கள், கோமாரி ஒழிப்புத் திட்டம் ஆகியன. அரசு, குறிக்கோள்களை மிக விரைந்து எய்தும் வகையில், வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காகப் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது.

நிர்வாக அமைப்பு.

துறையின் அலுவல்களைப் பெருமளவு பரவலாக்கி, தொடராகவும், ஒரு சீராகவும் கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தி, கால்நடை வளர்ப்புத் துறையின் நடவடிக்கைகள் உழவர்களுடன் நெருங்கிய நிலையில் நன்மை புரியும் வண்ணம், இத்துறை 1—1—1970 முதல் சீரமைக்கப்பட்டுள்ளது.

இத்துறை, அலுவல் அடிப்படையில் பணியாற்றி வந்ததற்கு மாறாக, 1—1—1970 முதல் வட்டார அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியது திருத்தி அமைத்த அமைப்பிற்கிணங்க இம்மாநிலம் ஆறு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரமும் வட்டாரத் துணை இயக்குநர் ஒருவர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இந்த ஆறு வட்டாரங்களின் தலைமையிடங்களாவன :—சென்னை, வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகியனவாகும். சென்னையிலுள்ள வட்டாரத் துணை இயக்குநரைத் தவிர, மற்ற வட்டாரத் துணை இயக்குநர் ஒவ்வொருவருக்கும் உதவியாக வல்லுநர்கள் மூவர் உள்ளனர். கோழிகள் வல்லுநர் ஒருவர், கால்நடைகள் வல்லுநர் ஒருவர், கால்நடை நோய் ஆய்வுப் பணி குறித்த வல்லுநர் ஒருவர்—ஆக ஒரு வட்டாரத்தில் மூன்று வல்லுநர்கள் வீதம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து வட்டாரங்களில், பதினைந்து வல்லுநர்கள் பணியாற்றுகின்றனர். வட்டாரத் துணை இயக்குநரின் கீழ் கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர்கள் 59 பேர் உள்ளனர்; இவர்கள் ஒவ்வொருவரது அதிகார வரம்பும் தோராயமாக வருவாய்க் கோட்டம் ஒன்றின் அதிகார வரம்புக்கு நிகரானதாகும். இந்த உதவி இயக்குநர்கள் கால்நடை நோய்கள் பற்றிய ஆய்வு, அவற்றிற்கு சிகிச்சை அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டிருப்பதோடு, கோழிகள், கால்நடைகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் இவற்றின் வளர்ச்சிப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி, மையக் கிராம வளர்ச்சிப் பணி, மற்றும் எனைய வளர்ச்சிப் பணிகளைச் சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் கால்நடை மருந்தகம் ஒன்றேனும் உள்ளது. இவை கால்நடை உதவி மருத்துவர் இருவரால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒருவர் கால்நடை நோய்க்கு சிகிச்சையளிக்கும் பணியையும், இன்னொருவர் வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்கிறார். ஊராட்சி ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும் கால்நடை வளர்ப்புப் பணியை கால்நடை வளர்ப்பு வளர்ச்சிப் பணி அதிகாரிகள் கவனிக்கின்றார்கள். இவர்கள் ஒரு கிளை நிலையத்திற்கு ஒருவர் வீதம் உள்ளனர். ஒரு கிளை நிலையத்தின் கீழ்

சுமார் ஆறு முதல் பத்து கிராமங்கள் உள்ளன. இத்துறை, திருத்தியமைக்கப்பட்டதற்கு முன்னதாக பல்வேறு அமைப்புகள் மூலம் செய்யப்பட்ட எல்லா வகைப் பணிகளும், அதாவது, மைய கிராமப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி போன்றவை அனைத்தும் தற்போது இந்த வளர்ச்சிப் பணி அதிகாரிகளால் கவனிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் பல்வேறு நிறுவனங்களிலும் பணிபுரிகின்ற கால்நடை மருத்துவ அதிகாரிகள் முதலானோர் எண்ணிக்கை பின்வருமாறு :—

கால்நடை உதவி மருத்துவர் 883 பேர் ; கால்நடை மருத்துவம்—கால்நடை ஆய்வாளர்கள் 87 பேர் ; முதல் நிலை கால்நடை உதவியாளர்கள் 620 பேர் ; இரண்டாம் நிலை கால்நடை உதவியாளர்கள் 2,735 பேர் ; கீழ்க்கண்ட இடங்களில் மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் ஆறு, பண்ணைக் கண்காணிப்பாளர்களின் தலைமையில் அமைந்துள்ளன ; இவற்றில், ஹோசூரில் உள்ள பண்ணை கோழிக்குஞ்சு பொறிக்கும் அதிகாரி–கண்காணிப்பாளர் ஒருவரது பொறுப்பிலுள்ளது.

1. ஹோசூர்—தருமபுரி மாவட்டம்.
2. புதுக்கோட்டை—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, கொருக்கை—தஞ்சாவூர் மாவட்டம்.
4. அபிஷேகப்பட்டி—திருநெல்வேலி மாவட்டம்.
5. உதகமண்டலம்—நீலகிரி மாவட்டம்.
6. செட்டிநாடு—இராமநாதபுரம் மாவட்டம்.

கீழ்க்கண்ட இடங்களில் பண்ணைக் கண்காணிப்பாளர்களின் கீழ் செம்மறியாட்டுப் பண்ணைகள் இரண்டு உள்ளன :—

சின்னசேலம்—தென் ஆர்க்காடு மாவட்டம்.

சாத்தூர்—இராமநாதபுரம் மாவட்டம்.

காட்டுப்பாக்கத்தில் கோழிக்குஞ்சு பொறிக்கும் பணி அதிகாரி–கண்காணிப்பாளரது நிர்வாகத்தின்கீழ் கோழிப்பண்ணை ஒன்று உள்ளது. ஆக மொத்தத்தில் கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின் கீழும், மேற்பார்வையின் கீழும் 9 பெரிய பண்ணைகள் உள்ளன. அவற்றில் ஆறு பண்ணைகள் கால்நடை பண்ணைகள் ; இரண்டு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் ; ஒன்று கோழிப்பண்ணை ஆகும்.

இவை தவிர, மாநிலம் முழுவதற்கும் கோமாரி ஒழிப்புத் திட்டத்தின் பொறுப்பில் கோமாரி நோய் குறித்த அதிகாரி ஒருவர் உள்ளார். மாநிலத்திலுள்ள பல்வேறு கோழிப்பண்ணை பிரிவுகளுக்குத் தேவையான கோழி இரைகள் உற்பத்தி செய்யும் பொறுப்பில் கோழி இரை கலவை அதிகாரி ஒருவர் உள்ளார். பல்வேறு செம்மறி ஆடு–கோழி கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் துணைப்பதிவாளர் ஒருவர் உள்ளார். கால்நடைகள் குறித்த புள்ளி விவரத் தகவல்களைச் சேகரித்து கால்நடை மேம்பாட்டுக்காக, அவற்றை எடுத்துக்காட்டும் பொருட்டு கால்நடை வளர்ப்பு புள்ளிவிவர அதிகாரி ஒருவரும் உள்ளார்.

தற்போது இம் மாநிலத்தில் கால்நடை மருத்துவ மனைகள் 35 உள்ளன ; அவற்றில் சைதாப்பேட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூரிலுள்ள மூன்று கால்நடை மருத்துவ மனைகளும், மருத்துவ ஆய்வுக் கூடங்களுடன் முழுமையான மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன ; இன்னும் கால்நடை மருத்துவ மருந்தகங்கள் 485-ம், தனி மருத்துவமனை ஆய்வு கூடங்கள் 13-ம் இம்மாநிலத்தில் உள்ளன.

துறையின் திட்ட நடவடிக்கைகள் பெருமளவில் உயர்ந்துள்ளதால் துறையின் இயக்குநருக்கு உதவியாக, திட்டமிடுதல், வளர்ச்சிப் பணிகள் குறித்த இணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். திருத்தியமைக்கப்பட்ட பின்னர், துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்க வரைபடம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 1.)

வளர்ச்சித் திட்டம்.

துறையால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான திட்டங்களும் நடவடிக்கைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கால்நடை வளர்ச்சி.—இம் மாநிலத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட இனப் பெருக்கக் கால்நடை இனங்களாவன :—

(1) காங்கேயம்.
(2) உம்பளாச்சேரி.
(3) ஹலிகார்.
(4) ஆலம்பாடி.
(5) பர்கூர்.
(6) புலிக்குளம்.

பர்கூர், புலிக்குளம் இனக் கால்நடைகள், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளன. அவற்றிற்கு இருந்து வரும் தேவையும் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, அவற்றைப் பெருக்குவதற்கு இப்போது ஊக்கமளிக்கப்படவில்லை. கிராமப் பகுதிகளிலுள்ள இனம் தெரியாத கால்நடைகளுடன், தரமான உயர் இனங்களான சிந்தி, தார்பார்கர், கீர், காங்கேயம் ஆகிய இனங்களைச் சேர்ந்த காளைகளைச் சேர்த்து அக் கால்நடைகளின் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றது. காங்கேய இனக் காளை நமது மாநிலத்திற்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்துள்ளது. இந்த இனம் நாடெங்கிலும் புகழை ஈட்டி வருவதோடு, இவற்றிற்கு அதிக தேவையும் உள்ளது. இவ்வினம் நமது மாநிலத்தில் பாதிப் பகுதிகளில் பரந்துள்ளது. நீலகிரி, கோடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளிலும் கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய பால் உற்பத்திப் பகுதிகளிலும் நமது கறவை மாடுகளுடன் வெளிநாட்டு இனக் காளைகளான பிரீசியன், ஜெர்சி ஆகிய காளைகளை சேர்த்து முடிந்த அளவுக்கு கலப்பு இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. உள்ளூர் எருமைகள், முர்ரா என்னும் எருமைகளுடன் சேர்க்கப்பட்டு அவற்றின் மூலம் கலப்பு இனப் பெருக்கம் செய்து உள்ளூர் எருமைகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

உள்ளூர் கால்நடை இனங்களை நம் நாட்டிலேயே உள்ள பொலி காளைகளுடன் சேர்த்தும், வெளிநாட்டு இனப் பெருக்கக் காளைகளுடன் சேர்த்தும் அவற்றின் தரத்தை உயர்த்தும் பொருட்டும், எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கவும் சிறந்த பொலி காளைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டும், இம் மாநிலத்தில் கால்நடைப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. பல்வேறு கால் நடைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அவற்றின் பயன் களும் கீழ் வருமாறு :—

(i) உள் நாட்டினத்தையும், அயலினத்தையும் சேர்ந்த உயர்ந்த பயன் தரக்கூடிய, உயர் இனவகைக் கறவை மாடுகளை அறிமுகப்படுத்துதல்.

(ii) இரட்டைப் பயன் கருதி உள்நாட்டுக் கால்நடைகளைத் தேர்ந் தெடுத்து, வளர்த்து அவற்றை உயர் இனத்தைச் சேர்ந்த ஆண் இனத் துடன் சேரவிட்டு இனப் பெருக்கம் செய்தல்.

(iii) இனப் பெருக்கத்திற்காக நல்ல தரமான பொலிகாளைகளைத் தனியார்களுக்கும், உழவர்களுக்கும், அரசு நிலையங்களுக்கும் அரசுபோன்ற நிலையங்களுக்கும் வழங்குதல்.

(iv) தீவனம், இனப் பெருக்கம் செய்தல், நிர்வாகத் திறமை, தொழில் நுட்ப யுத்திகள் குறித்துக் கால்நடை இனப் பெருக்கம் செய் வோர்க்கு விளக்கப் பிரிவுகளாகப் பணியாற்றுதல்.

(v) மாணவர்களுக்கும் உழவர்களுக்கும் பயிற்சி நிலையமாகப் பணி யாற்றுதல்.

(vi) நல்ல தரமான கால்நடையையும், கோழி இனத்தையும் உற் பத்தி செய்யும் நோக்கத்துடன் கால்நடைகள், செம்மறியாடுகள், கோழி இனங்கள், பன்றிகள் வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்துதல்.

(vii) மேம்பாடடைந்த தரமான புல் நாற்றுக்களைக் கிராமங்களில் உள்ள உழவர்களுக்கு வழங்குதல், தீவன விளக்கப் பாத்திகள் எற் படுத்துதல்.

கால்நடைப் பண்ணைகள் அனைத்திலுமுள்ள தீவனம், தானியங்கள் பயிரி டப்பட்டுள்ள பகுதி, உற்பத்தியான பால் அளவு, இருப்பிலுள்ள கால்நடை களின் எண்ணிக்கை, பண்ணைகளின் வரவு-செலவு ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான பிற்சேர்க்கைகளில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இனப் பெருக்கத்திற்காகப் பல்வேறு கால்நடைப் பண்ணைகளிலிருந்து விற்கப்பட்ட பொலி காளைகளின் எண்ணிக்கையும், அவற்றின் மதிப்பும் பின்வருமாறு :—

	விற்கப்பட்ட பொலிகாளைகளின் எண்ணிக்கை.	மதிப்பு. (ரூபாயில்).
(i) 1966–67	192	1,53,600
(ii) 1967–68	123	98,400
(iii) 1968–69	102	81,600
(iv) 1969–70	74	59,200
(v) 1970–71	62	49,600

ஊக்கமளித்து வளர்க்கும் திட்டம் (Premium Scheme) கைவிடப் பட்டது. அதன் விளைவாக ஊராட்சி ஒன்றியங்களும், கால்நடைச் சொந்தக் காரர்களும், இனப் பெருக்கம் செய்யும் பொலிகாளைகளை பண்ணைகளி லிருந்து வாங்குவதற்கு முன்வரவில்லை. இதன் காரணமாக, இனப் பெருக்கம் செய்யும் பொலிகாளைகள் விற்பனை குறைந்துவிட்டது.

இனப் பெருக்கத்திற்காக, கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத் துவ மனைகள், பண்ணைகள் முதலியவற்றிற்கு மாற்றப்பட்ட கால்நடை களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

	மாற்றப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	மதிப்பு. (ரூபாயில்.)
	(1)	(2)	(3)
(i) 1966–67	350	2,80,000
(ii) 1967–68	140	1,12,000
(iii) 1968–69	213	1,70,400
(iv) 1969–70	170	1,36,000
(v) 1970–71	386	3,08,800

மையக் கிராமத் திட்டம்.

கால்நடை இனப் பெருக்கத்தில் அறிவியல் முறைகளைக் கையாண்டு கால்நடை இனப் பெருக்கம், தீவனம், நிர்வாக முறைகள், நோய்க் கட்டுப்பாடு, விற்பனை போன்றவற்றையும், கால்நடைகளின் நோயற்ற வாழ்வு, திறன், உற்பத்தி ஆகியவற்றையும் மேம்படுத்துவதுதான் மையக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். உற்பத்தித் திறனில் சிறந்தவை யென மெய்ப்பிக்கப்பட்ட நல்லவகைப் பொலிகாளைகள் மையக் கிராம நிலையங்களில் இருக்கின்றன. இக் காளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட விந்து, கருத்தரிப்பதற்காகக் கிராமங்களிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பப் படுகின்றன. மையக் கிராமம் என்பது, இனப் பெருக்க வசதி அமைந்த 10,000 பசுக்கள் அல்லது எருமைகளை உடைய அடுத்தடுத்து இருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கிய ஒருங்கிணைப்புப் பகுதி என்று பொருள்படும். இத்துறை சீரமைக்கப்படுவதற்கு முன்பு, 75 மையக் கிராம வளர்ச்சி வட்டாரங்கள் இருந்தன. நேர்க்கோப்ப ஒவ்வொரு வட்டாரத்திலும் 6 முதல் 10 துணை நிலையங்களாக மொத்தம் 650 நிலையங்கள் இருந்தன. மையக் கிராம நிலையம் ஒவ்வொன்றும், பயிற்சி பெற்ற கால்நடை உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் இருந்தது. மையக் கிராம வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும், பயிற்சி பெற்ற கால் நடை உதவி மருத்துவர் ஒருவரின் பொறுப்பில் இருந்தது. இத்துறை சீரமைக்கப்பட்ட பின்னர், இத்திட்டம் இத்துறையின் பொது நடவடிக்கை களோடு இணைக்கப்பட்டுள்ளது. இத்துறை சீரமைக்கப்பட்ட பின்னரும் இத்திட் டத்தை முனைப்பாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன், முன்பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் 1970-71-ல் 21 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவ மனைகள்—மையக் கிராம நிலையங்கள் தொடங்கப்பட்டன. முன் பிருந்த மையக் கிராமப் பகுதிகளில் உள்ள 56 கால்நடை மருந்தகங்கள்/ கால்நடை மருத்துவமனைகளை விரிவுபடுத்தி அவற்றின் பெயர் கால்நடை

மருந்தகங்கள்—கால்நடை மருத்துவ மனைகள்—மையக் இராம நிலையங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டு அந்த நேரத்தான பணியாளர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர். 1971–72-ல், மேலும் இரு கால்நடை மருந்தகங்கள்—மையக் இராம நிலையங்களாக, திருச்சி மாவட்டத்திலும், மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலும் கூடுதலாகவும் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இம்மாநிலத்தில் மொத்தம் 79 கால்நடை மருத்துவ நிலையங்கள், மையக் இராமப் பணியைக் கவனித்து வருகின்றன.

1970–71-ல் 17,55,879 மாடுகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப்பட்டது. 17,25,388 மாடுகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டன. 50,814 மாடுகள் காயடிக்கப்பட்டன. 2,61,081 கன்றுகள் பிறந்தன. அவைகள் சரிபார்க்கப்பட்டன. 5,32,248 மாடுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டன. இவை பற்றிய விவரங்கள் VI-ஆம் பிற் சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு நாடு முழுவதிலும் கறவை யினங்களை வளர்க்கும் முனைப்புத் திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங் கியது. இத் திட்டத்தின்கீழ், நமது மாநிலத்தில் 1964, 1965-ஆம் ஆண்டுகளில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டன. இனப் பெருக்க வயதடைந் துள்ள ஒரு லட்சம் ஆனினங்கள், எருமைகள் கொண்ட அடைவான பகுதி ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டு கருத்தரிப்பு, நோய்த்தடுப்பு, தீவன மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்த மும்முரமான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. விந்து சேகரிப்பு மத்திய நிலையம் ஒன்றும், செயற்கை முறை கருத்தரிப்பு வட்டார நிலையங்கள் நான்கும் இருந்தன. செயற்கை முறை கருத்தரிப்பு வட்டார நிலையம் ஒவ்வொன்றின் கீழும் செயற்கை முறை கருத்தரிப்பு துணை நிலையங்கள் 25 இருந்தன. இத் திட்டத்தின்கீழ், இனப் பெருக்க வயதடைந்துள்ள ஒவ்வொரு 1,000 பசுக்கள், எருமை களுக்கு ஒரு நிலையம் வீதம் செயற்கை முறை கருத்தரிப்பு துணை நிலையங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. இத்துறை சீரமைக்கப் பட்ட பின்னர், இத் திட்டம், இத் துறையின் பொது நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின்கீழ் தொடங்கப் பட்ட துணை நிலையங்களும், இத்துறைப் பொறுப்பின்கீழ் ஏற்படுத்தப் பட்ட கால்நடை மருந்தகங்களிலும் இத் திட்டப்பணி ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து 1970 அக்டோபர் மாதத்தில் பரிசீலிக்கப்பட்டது. இத் திட்டப் பணியை மும்முரமாக நிறைவேற்றுவது முற்றிலும் அவசிய மென்றும் கருதப்பட்டது. அதன்படி முன்பிருந்த கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டப் பகுதிகளில் 60 கால்நடை மருந்தகங்கள்/கால்நடை மருத்துவமனைகளில் போதிய பணியாளர்களை அமர்த்தி, அவற்றின் பெயர் கால்நடை மருந்தகங்கள்—கால்நடை மருத்துவமனைகள்—மையக் இராம நிலையங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டு தகுந்தவாறு வலுப்படுத்தப் பட்டன.

தீவனத்தர மேம்பாடு.

தீவனத்தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நவீன முறைகளில் தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கும், சுழற்சி முறையில் (rotational) மேய்ச்சல் இருப்பதன் அவசியத்தையும், சிக்கனமாகத் தீவனங்களைப் பயன்படுத்து வது, உபரியாகவுள்ள தீவனங்களைப் பாதுகாப்பது இவற்றின் அவசியம் பற்றி உழவர்களுக்கு உணர்த்தப்பட்டது. மேம்பாடடைந்த டசும்புல் வெளிகள் ஏற்படுத்தப்பட்டன. தீவனத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் போற்றும் அவசியம் பற்றி உழவர்கள் படிப்படியாக உணரத் தலைப்பட்டனர். வெளியார்களிடமிருந்து தீவனம் வாங்கும் செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் கால்நடைப் பண்ணைகளில் அதிகப் பரப்பில் தீவனப் பயிர்களைப் பயிரிட பல்வகையான பாசன வசதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இத்துறை சீரமைக்கப்பட்டதன் விளைவாக, தீவனத்தர மேம்பாட்டுப் பணி வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால், இதுகுறித்து மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, தற்போது கால்நடை வளர்ப்புத் துறைக்கே திரும்ப மாற்றப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில் தீவன விதை உற்பத்திப் பண்ணை ஒன்றை ஏற்படுத்துவதோடு சுமார் ரூ. 3 லட்சம் செலவில் மாநிலம் முழுவதும் தீவனத்தர மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தீவன வாயில்களைப் பெருக்கும் பொருட்டு ஹோசூர், செட்டிநாடு, திருநெல்வேலி, புதுக்கோட்டை, ஓத்தநாடு, சின்னசேலம், சாத்தூர், ஆகிய இடங்களிலுள்ள கால்நடைப் பண்ணைகளில் தூனைக் இணைப்புகள் அமைத்தல், ஏற்கனவேயுள்ள இணைப்புகளை ஆழப்படுத்துதல், நீரில் மூழ்கு நீரை விசையேற்றங்களுக்கு (Submersible pumpsets) வழங்கசெய்தல், புதிய இணைப்புகள் பெட்டுதல், தெளிப்புப் பாசன வசதிக்கு (Sprinkler Irrigation) வகைசெய்தல், டிராக்டர்களுக்கு வகைசெய்தல் முதலிய வற்றுக்காக 1971–72-ல் ரூ. 5,47,000-க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1972–73-ஆம் ஆண்டிற்காக, ரூ. 1,80,000 மொத்தச் செலவில் சாத்தூர், செம்மறியாட்டுப் பண்ணையில் நிலம் பண்படுத்தல், மண்வளப் பாதுகாப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், செட்டிநாடு பண்ணைக்கு டிராக்டர் ஒன்றையும், டர்பைன் பம்புகளையும் வழங்கவும், விசையேற்றங் களுடன் கூடிய மூன்று ஆழமான குழாய்க் இணைப்புகளை இறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், துறையினரின் பிரிவுகளில் கால்நடைகளின் தீவனத் தேவைகளும் பெரு மளவுக்குச் சரிக்கட்ட இயலும்.

கூடுதலாக ரூ. 45 லட்சம் செலவில், ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடை வளர்ச்சிப் பண்ணையில் கால்நடை வளர்ச்சி—தீவனத்தர மேம்பாட்டிற்கான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்படுள்ளது. இத்தொகை தேசியப் பாற் பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் வழங்கப்படும்.

கால்நடை வளர்ப்புப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தீனி தீவனம் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	உற்பத்தி செய்யப் பட்ட தீனி, தீவனத் தின் அளவு. (இலே இராமில்.)
1968–69	1,14,71,805
1969–70	1,32,35,244
1970–71	1,38,53,426
1971–72 (1971 நவம்பர் முடிய).	1,11,36,196

விவரங்கள் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆநிரைக் காப்பகங்கள் திட்டம் (Goshala Development Scheme)

கோயில்கள், மடங்கள், அறைதை இல்லங்கள் போன்ற நிறுவன நிர்வாகங்களின் கீழ் பசுக்களைக் காக்கும் நோக்கத்துடன், இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் அருகிலுள்ள பகுதிகளில் கால்நடை மேம்பாட்டிற்கு வகை செய்கிறது. தொடர் இனச் செலவுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் கொட்டகைகள் கட்டுவதற்குத் தொடரா இனச் செலவினமாக தனி மானிய உதவி ரூ. 5,000 வழங்கப்படுகிறது. 10 மாடுகள் வாங்கினால், 10 பசுக்களும், காளை ஒன்றும் அரசால் வழங்கப்படுகிறது. ஆநிரைக் காப்பகங்கள், 10 ஆண்டுக் காலத்திற்கு மட்டுமே மானியம் பெற தகுதியுடையவையாகும். 1970–71-ல் 20 ஆநிரைக் காப்பகங்கள் இருந்தன. இவை 2,62,811·230 கி. கிராம் அளவு பாலை உற்பத்தி செய்தன.

பால்வற்றிய பசுக்கள் பண்ணை, அலமாதி.

1958-ஆம் ஆண்டில் பால் வற்றிய பசுக்கள் பண்ணை அலமாதியில் அமைக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டில் இப்பண்ணையில் 395 பசுக்கள் இருந்தன, 7,71,850 கி. கிராம் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. மத்திய எருமைப் பண்ணை ஒன்று தொடங்குவதற்காக நிலம் வழங்குமாறு இந்தப் பண்ணையை இந்திய அரசு கேட்டுள்ளது. இதற்கு நமது அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

செம்மறியாடு வளர்ச்சி.

இம்மாநிலத்தில் செம்மறியாடு வளர்ப்பதற்கான நல்ல வாய்ப்பு உள்ளது. 1969–70-ல் உரிவை, நோல் ஆகியவற்றை எற்றுமதி செய்ததன் மூலம் சுமார் ரூ. 4 கோடி அன்னியச் செலாவணியைப் பெற இயன்றது. கீழ்க்கண்ட இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பல்வேறு இனச் செம்மறியாடுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

(i) மேச்சேரி (இறைச்சி வகை)—சேலம் அருகில்.

(ii) மண்டியா (இறைச்சி வகை)—ஒசூர், சின்ன சேலம்.

(iii) மேக்கரிசல் (இறைச்சி வகை)—செட்டிநாடு, புதுக்கோட்டை, சாத்தூர், திருநெல்வேலி.

செம்மறியாடுகள் பெருமளவு இறப்பதைத் தடுக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும், உண்ணிகளையும், பூச்சிகளையும் நீக்குவதற்கான வசதிகள் செம்மறியாட்டு பண்ணையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. செம்மறியாட்டு இனவளர்ச்சி—கம்பளை, நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழும். செம்மறியாட்டு இனவளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பதும் உள்ளன. புதிய முறைகளில் செம்மறியாடுகளை இனப்பெருக்கம் செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

செம்மறியாடுகளின் எண்ணிக்கை சுமார் 66 லட்சமாக இருந்த போதிலும், ஒட்டுண்ணி நோய் காரணமாக உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது. இந்நோய் காரணமாக 60 சதவீத ஆடுகள் இறக்க நேரிடுகின்றன. இந்நோயைத் தடுக்கும் நோக்கத்துடன் 1971–72-ஆம் ஆண்டில், எல்லா ஆடுகளுக்கும் பெருமளவில் ஒரே சமயத்தில் நோய் நீக்க மருந்து கொடுக்கும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக கணிசமான அளவு செம்மறியாடுகள் இறப்பது குறைந்துள்ளது.

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செம்மறியாட்டு இனவளர்ச்சி மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள 39 திட்டங்கள் அனுப்பப் பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் ஆதாயம் குறைந்த உழவர்கள், ஏழை உழவர்கள் ஆகியோரது பொருளாதார நிலைமை பெரிதும் சீர் படுத்தப்படும். ரூ. 4·42 லட்சம் மொத்தச் செலவில் 2,379 செம்மறியாட்டுக் கிடாக்களையும் 81,396 பெண் ஆடுகளையும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றிற்காக, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகமும், அரசும் முறையே ரூ. 3·31 லட்சம், ரூ. 1·12 லட்சம் கடனுதவி வழங்குகின்றன.

பன்றி வளர்ப்பு.

பன்றிகள் பெருமளவில் இனப்பெருக்கம் செய்பவை. இவை குறைந்த கால அளவில் அதிகமாக இனப்பெருக்கம் செய்வதால், இவற்றை விரைவில் பெருக்க இயலும். பன்றி வளர்ப்பதனால் தனிப்பட்ட உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும் தேசியப் பொருளாதாரத்தை உயர்த்தவும் முடியும்.

புரதச் சத்து நிறைந்த பன்றி இறைச்சி குறைந்த விலையில் கிடைக்கிறது. இக்காரியத்திற்காகவும், கட்புல விளக்கத்திற்காகவும் கால்நடைப் பண்ணைகளில் யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் வளர்க்கப் படுகின்றன. துப்புரவான சூழ்நிலைகளில் அறிவியல் முறைகளில் பெருமளவு வெளிநாட்டு யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகளை வளர்ப்பதில் தமிழ் நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை சிறந்த அக்கறை காட்டியுள்ளது. பன்றி இறைச்சியை ஏனைய உணவுப் பொருட்களுடன் ஒப்பிடுகையில், குறைந்த உற்பத்திச் செலவை உடையதாகவும், புரதச் சத்தும், உணவுப் பொருட்களின் பிற தாதுச் சத்துக்களும் நிறைந்ததாகவும் உள்ளது.

மேலும், இதைக் கொண்டு, எளிதில் சுவையான உணவுப் பண்டங்களைத் தயாரிக்க முடிகிறது. அதனால் சரியான முறைகளில் பன்றியை வளர்ப்பது ஆதாயம் தரத்தக்க ஒரு தொழிலாகும். பன்றி இறைச்சியை உட்கொள்ளும் பழக்கம் பொது மக்களுக்குப் பயன்தரக் கூடியதாகும். பன்றி இறைச்சியை உட்கொள்ளும் பழக்கம் விரைவில் பரவி வருகிறது. அதனால் பன்றிஇறைச்சி கழகங்கள் பல, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் விரைவாகப் பரவி வருகின்றன.

கோழி இன வளர்ச்சி.

சத்துணவுத் தரங்களுக்கிணங்க, சரிவிகித உணவுக்கு, நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு குறைந்தது பாதி முட்டை தேவைப்படும். இந்தத் தரம் பின்பற்றப்பட்டால், இம்மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 700 கோடி முட்டைகள் தேவைப்படும். ஆனால், பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுபவை உட்பட, ஆண்டு ஒன்றுக்கு 35 கோடி முட்டைகளே கிடைக்கின்றன. தேவைக்கும், கிடைக்கும் அளவுக்கும் உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளதால் கோழி இன வளர்ச்சித் திட்டங்களை அறிவியல் முறைகளில் மும்முரப்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்துறை. தொடக்கத்தில், கோழி வளர்ச்சி நிலையங்கள், கோழி வளர்ப்பு விளக்கப் பிரிவுகள், மும்முர முட்டை உற்பத்தி—கோழி வளர்ப்பு வட்டாரங்கள் ஆகியவற்றைத் தொடங்கியது. கோழி வளர்ப்பதன் மூலம் தங்களது வருமானத்தைப் பெருக்குவதில் ஏற்படும் பயனை மக்கள் தற்போது உணர்ந்துள்ள காரணத்தால், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நாமக்கல், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெருங்களத்தூர், தாம்பரம், படப்பை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்டப்பட்டு ஆகிய இடங்களிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும், வீரிய இனக் கோழிக் குஞ்சுகளைக் கொண்டு நூற்றுக் கணக்கானவர்கள் கோழிகள் வளர்க்கத் தொடங்கியுள்ளனர். அந்தக் கோழி இனங்களாவன : ஹைலேன், ராணி ஷேவர்ஸ், ஆர்பிங்டார் எகர்ஸ், அஸ்ட்ராலாப்ஸ், அஸ்ட்ரோ ஒயிட், யூனி சிக்ஸ்.

கோழிப்பண்ணையில் கோழிகளை வளர்ப்பதற்குத் தேவைப்படும் கோழிக் குஞ்சுகளை வழங்கும் பொருட்டு, தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காட்டுப்பாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள கப்பலூரிலும் ஆக மூன்று பெரிய அளவிலான கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் திங்கள் ஒன்றுக்கு 20,000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் நிறுவப்பட்டுள்ளன. அவசியமான சாதனங்களையும், இயந்திரங்களையும் வாங்குவதன் மூலம் துறையின் கோழி இரை கலப்புப் பிரிவுகளில் கோழி இரையின் உற்பத்தியைப் பெருக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கோழி வளர்ப்போர் சங்கத்தால், அண்மையில் 1972 மார்ச் 4, 5-ஆம் நாட்களில் கருத்தரங்கு ஒன்றும், பொருட்காட்சி ஒன்றும் ஈரோட்டில் நடத்தப்பட்டன. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் அதில் கலந்து கொண்டு, கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்குப் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்தனர்.

1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில், படப்பை கிராமத்தில், கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது, கோழி வளர்ப்பதால் கிட்டும் நன்மை குறித்து அங்குள்ள கிராம மக்களில் பலருக்கு அறிவுறுத்தப்பட்டது. கோழியினப் பறவைகளைப் பயன் தரத்தக்க விதத்தில் வளர்ப்பதற்கும், அவற்றிற்குக் கொட்டகைகள் போடுவதற்கும், வங்கிகளிலிருந்து கடன்கள் பெறவும், கோழி வளர்ப்போருக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நவீன முறையில் கோழியின வளர்ப்பின் நன்மை குறித்துக் கிராம மக்கள் அறிந்து கொள்வதற்கு இயலும் வகையில் அதைப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்த கிராம வளர்ச்சி முகாம் ஒன்றை, திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்திற்கருகிலுள்ள நட்டாத்தி என்னும் கிராமத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோழியின வளர்ப்போர் சங்கம் ஒன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டப்பட்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இச் சங்கமானது, வங்கிகள் வழங்கிய கடனுதவியுடன் ஏற்கனவே முட்டை உற்பத்தியைத் தொடங்கியது. அவ்விடத்தில் முட்டை விற்பனை நிலையம் ஒன்றும் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளை பிற முக்கிய நகர நிலையங்களில் விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்குரிய செயற் குறிப்புகள் அரசின் ஆலோசனையில் இருந்து வருகின்றன.

கோழியின வளர்ப்பு மும்முரத் திட்டங்களின் கீழ், பொறையாறு விருதுநகர், ஈரோடு ஆகிய ஊர்களில், கோழியின வளர்ப்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோழியின வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்தில் காட்பாடியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஹஸ்தினாபுரம், பெருங்களத்தூர், படப்பை ஆகிய ஊர்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியநாயக்கன் பாளையத்திலும், சேலம் மாவட்டத்தில் ஓமலூரிலும் செயல்பட்டு வருகின்றன. தனியாகக் கோழியின வளர்ப்புப் பிரிவுகளை ஆரம்பிக்க ஆர்வமுள்ளோர், வங்கிகளிலிருந்து கடன் பெறவும் தொழில நுட்ப ஆலோசனைகள் பெறவும் இந்தச் சங்கங்கள் உதவி செய்கிறது. சங்கங்களை அல்லது கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டோர், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து கடன் பெற உதவி செய்யப்பட்டு வருகிறது. கோழியின வளர்ப்பு முறைகள், அவற்றிற்கான இரை, சாதனம், அவற்றை வளர்ப்பதற்கான தொழில் நுட்ப ஆலோசனை, அவற்றிற்கு வரும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான வசதி, வளர்த்த கோழிகள், உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் ஆகியவற்றை விற்பதற்கான வசதி ஆகியவற்றை கோழியின வளர்ப்போர் பெறுவதற்கு, இத் துறை உதவி செய்து வருகிறது. பதப்படுத்தப்பட்ட கோழி இறைச்சியைப் பாதுகாக்க, 526 உறை பதனங்கள் உட்பட, குளிர் சாதன அறைப் பிரிவுகள் அனைத்தையும் உயர் அளவுக்குப் பயன்படுத்துவதற்கும், கோழியின வளர்ச்சிப் பண்ணைகள் 39-ல் கொட்டகை வசதிகள் செய்து கொடுத்தல், நீர் வழங்குதல், விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவை குறித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன. கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	உற்பத்தி செய்யப் பட்ட முட்டைகளின் எண்ணிக்கை.
1968-69 (74 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள்)	32,56,158
1969-70 (,,)	35,48,254
1970-71 (39 கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள்)	33,25,744
(எஞ்சியவை ஆதாயமற்ற காரணத்தால் மூடப்பட்டன.)	
1971-72 (1971 நவம்பர் வரை)	32,09,354

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாளிலிருந்து, 1972 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 2 ஆம் நாள் வரை, தென் வட்டார கால்நடை-கோழியின வளர்ச்சிக் காட்சி ஒன்று, இந்திய அரசினரால், திருச்சியில் நடத்தப்பட்டது. பல லட்சக்கணக்கான மக்களின் கவனத்தை இது ஈர்த்தது தோடு, பரிசுகள் வழங்கியதன் மூலம், கால்நடை. கோழியின வளர்ப்போரிடையே ஆக்கப் பூர்வமான போட்டி ஆர்வத்தை உண்டாக்கியது. வளர்ப்புப் பணியில் கால்நடை, கோழியினம் வளர்ப்போரின் கருத்துக்களையும் அப்பணியில் அவர்கள் பெற்ற அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ள இக்காட்சி யானது வகை செய்தது.

ஏனைய திட்டங்கள் (வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம்).

இம்மாநிலத்தில், கோழியின வளர்ச்சித் தொழிலுக்கான பல்வேறு திட்டங்களுக்கு, வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் நிதி உதவி செய்யவிருக்கிறது. அத் திட்டங்கள் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

(ரூ. இலட்சத்தில்.)

(i) 50 பெரிய அளவுப் பிரிவுகளுடன் கூடிய கோழியின வளர்ப்புத் திட்டம், விருதுநகர்.	11·18
(ii) நீலகிரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள இரண்டு கலப்பின பண்ணைத் திட்டங்கள்.	34·49
(iii) கோழியின வளர்ச்சித் திட்டங்கள் (300 பிரிவுகளுடன் தொடங்குவதற்கு), தீத்தியாபாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்).	18·90

கால்நடைகளுக்கான மருத்துவ உதவி.

கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் என்பது, இத்துறையின் தலையாய நடவடிக்கைகளில் ஒன்றாகும். தற்போது, இம்மாநிலத்தில், 520 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில், கால்நடை மருத்துவ மனைகள் 35, கால்நடை மருந்தகங்கள் 485 ஆகும். வேளாண்மை குறித்த அரசு ஆணைக் குழுவின் (Royal Commission on Agriculture) பரிவுரைகளுக்கிணங்க, 25,000 கால்நடைகளுக்கு, ஒரு உதவி கால்நடை மருத்துவர் தேவையாகும். இந்த வீதத்தில் பார்த்தால், இம்மாநிலம் முழுதுமுள்ள கால்

நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கு 1,000 கால்நடை மருத்துவ வசதி நிலையங்களை நிறுவுவது அவசியமானதாகும். கிடைக்கக்கூடிய நிதி வசதிக்கிணங்க, கால்நடை மருத்துவ வசதி நிலையங்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 520 கால்நடை மருத்துவ வசதி நிலையங்களோடு கால்நடை வளர்ப்பு, வளர்ச்சிப் பணி அதிகாரிகளால் நடத்தப்படும் 1,918 துணை நிலையங்களும் உள்ளன. நீள் தொலைவிலுள்ள கிராமங்களின் கால்நடைகளின் உடனடித் தேவைகளை இந்தத் துணை நிலையங்கள் கவனிக்கின்றன.

மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, கோமாரி நோய் போன்ற கொள்ளை நோய்கள் குறித்து மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோயானது, வட இந்தியாவிலிருந்து வந்த நோயுற்ற கால்நடைகளின் மூலம் இம் மாநிலத்தில் பரவியது. அந்நோயிலிருந்து, இம்மாநிலத்திலுள்ள கால்நடைச் செல்வங்களைப் பாதுகாக்க, இத்திட்டமானது தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு, இந்திய அரசு நிதி உதவி செய்கிறது. இம்மாநிலத்தின் எல்லைகளில் சோதனைச் சாவடிகளுடன் கூடிய நோய்த் தடுப்பு மண்டலம் ஒன்று அமைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்குக் கொண்டு வரப்பட்ட கால்நடைகளுக்கு வெக்கை நோய்த்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. இவ்வாறு ஊசி போடப்பட்டதன் விளைவாக, இம்மாநிலத்திலுள்ள பெரும் பகுதிகளில் இந்நோயானது பரவுவது தடுக்கப்பட்டது. இந்நோய் பரவுவதற்கு வாய்ப்புள்ளதால், 3 சோதனைச் சாவடிகள், 2 கண்காணிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு, 1970-71ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் 2 சோதனைச் சாவடிகள், 2 கண்காணிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு, 1971-72-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது, மொத்தம் 8 சோதனைச் சாவடிகளும், 4 கண்காணிப்புப் பிரிவுகளும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன:—

சோதனைச் சாவடிகள்.

1. திம்பம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. தெப்பக்காடு, நீலகிரி மாவட்டம்.
3. திருவலம், வட ஆர்க்காடு மாவட்டம்.
4. ஒசூர், தருமபுரி மாவட்டம்.
5. திருவொற்றியூர், செங்கல்பட்டு மாவட்டம்.
6. எளாவூர், செங்கல்பட்டு மாவட்டம்.
7. பாகலூர், தருமபுரி மாவட்டம்.
8. சோளிங்கபுரம், வட ஆர்க்காடு மாவட்டம்.

63053

கண்காணிப்புப் பிரிவுகள்.

1. கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.
3. போடிநாயக்கனூர், மதுரை மாவட்டம்.
4. செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம்.

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்ற சமுதாயத்தில் பொருளாதார நிலையில் நலிவுற்றுள்ள ஏழை எளிய மக்களை மேம்படுத்தும் நோக்கோடு, தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், சிறு உழவர்கள் திட்டங்கள் மூன்றும்; சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களில் குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டங்கள் இரண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள், மத்தியத் திட்டங்களின் கீழ் வருகின்றன. திட்டச் செலவின் உச்ச வரம்புக்கு மேல், 100 சதவீத நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கிறது.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனத திட்டங்களை கீழ்க்கண்ட மாவட்டங்களில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள், பால்பண்ணை-கோழிப்பண்ணை வளர்ச்சி குறித்ததாகும்.

(1) தென் ஆர்க்காடு.

(2) மதுரை.

(3) திருநெல்வேலி.

குறைந்த நிலமுள்ள உழவர்கள் (marginal farmers) வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டத்தை, வட ஆர்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், செம்மறி ஆடு, கன்று, வாத்து ஆகியவற்றை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.

கன்று, செம்மறி ஆடு, கோழியினம் ஆகியவற்றை வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று வட ஆர்க்காடு, சேலம் மாவட்டத்திலும் தொடங்கப்பட விருக்கிறது. இத்திட்டமானது மிகக் குறைந்த நிலமுள்ள உழவர்கள் (sub-marginal farmers) வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்குரியதாகும்.

ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ள உழவர்களின், 1,000 குடும்பங்களைப் பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டுவரவும், 4,000 குடும்பங்களைக் கோழியின வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன.

சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம், குறைந்த நிலமுள்ள உழவர்கள்-வேளாண்மைத் தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின்கீழ், பால் பண்ணைக் கால்நடைகள், கோழியினங்கள் ஆகியவற்றை வளர்ப்பதில்

சிறப்புக் கவனம் செலுத்தப்படும். பால் பண்ணை வைத்துள்ள உழவர்கள், கோழியின வளர்ப்போர் ஆகியோருக்கு, கூட்டுறவு வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவற்றிலிருந்து கடன்கள் பெறுவதற்கு வகை செய்யப்படும். மூலதனச் செலவில் 25 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படும்.

திட்ட மதிப்பீடு.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	செலவு. (ரூ. லட்சத்தில்.)
1969–70	28·82
1970–71	31·99
1971–72	62·56 (எதிர்பார்க்கப்படுகிறது).

1972–73-ஆம் ஆண்டிற்கான வளர்ச்சித் திட்டங்களின் பல்வேறு தலைப்புகளின கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. கால்நடை வளர்ப்பு	14·78
2. செம்மறியாடு வளர்ப்பு	0·50
3. கோழி இன வளர்ப்பு	3·99
4. பன்றி வளர்ப்பு	0·97
5. கல்வியும் ஆராய்ச்சியும்	32·93
6. கால்நடை மருத்துவ உதவி	11·38
7. பல்வகை	18·48
மொத்தம் ..	82·98

1972–73-ல் கீழ்க்காணும் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளை விரிவுபடுத்துதல்; டிராக்டர்கள், விசையேற்றங்கள் முதலியன வாங்குதல்.	3·00
2. இரண்டு புதிய கால்நடை மருந்தகம்-மையக் கிராம நிலையங்கள் அமைத்தல்.	0·93

	(ரூபாய் இலட்சத்தில்)
3. செம்மறியாடுகளுக்குப் பரவலாக மருந்து ஊட்டும் திட்டம்.	0·50
4. சாத்தூர் செம்மறியாட்டுப் பண்ணையைச் சேர்ந்த நிலங்களைப் பண்படுத்துதல்.	0·45
5. கப்பலூரில் அதிக அளவில் குஞ்சு பொறிப்பு நிலையம் அமைத்தல்.	0·77
6. கலப்பினக் கோழிக் குஞ்சுகள் வாங்குதல்	1·00
7. சின்ன சேலம் செம்மறியாட்டுப் பண்ணையில் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்று அமைத்தல்.	0·97
8. 10 புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்குதல் ..	1·88
மொத்தம் ..	9·55

கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சித் துறை.

கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறை 6-8-1969-ல் செயலுக்கு வந்தது. பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகிய இரண்டிலும் கல்வித் தரத்தை உயர்த்துதல், கால்நடை மருத்துவம், கால்நடை வளர்ப்பு பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மும்முரப்படுத்துதல், கல்வி, ஆராய்ச்சி, வளர்ச்சிப் பணி ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் ஆகிய வற்றை நோக்கமாகக் கொண்டு இத்துறை தொடங்கப்பட்டது.

கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறைகளின்கீழ் கீழ்க்கண்ட பிரிவுகள் அடங்கும்: —

(1) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

(2) கோழி இன ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(3) செம்மறியாட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம்.

(4) செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

(5) கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிலையம், இராணிப் பேட்டை.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

இக்கல்லூரி 1903-ல் நிறுவப்பட்டது. கல்வித் தரத்தில் இக்கல்லூரி இந்தியாவில் மட்டுமன்றி, வெளி நாட்டிலும், பெரும் புகழ் பெற்றது. 1958-ல் இக்கல்லூரி தெற்கு வட்டார பட்ட மேற்படிப்பு பயிற்சி நிலையமாக உயர்த்தப்பட்டது.

இக்கல்லூரியில், பி.வி.எஸ்சி., எம்.வி.எஸ்சி. பட்டப்படிப்புகள் உள்ளன டாக்டர் பட்டம் பெறுவதற்கான வசதிகளும் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பி.வி.எஸ்சி. பட்ட வகுப்பில், 136 மாணவர்களும், பட்ட மேற்படிப்பு வகுப்பில் 45 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

27th March 1972]

இக்கல்லூரியின் தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

	பி.வி.எஸ்சி.	எம்.வி.எஸ்சி.
ஆண்கள்	781	51
பெண்கள்	12	4

இக்கல்லூரி ஆசிரியர்களில் 18 பேர், Ph.D. டாக்டர் பட்டம் பெறுவதற்காக பதிவு செய்துள்ளார்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும், வெளி நாடுகளிலிருந்து இந்திய அரசின் ஆதரவுடன் வரும் மாணவர்களுக்கும் பி.வி.எஸ்சி. பட்ட வகுப்பில் 16 இடங்களும், எம்.வி.எஸ்சி. பட்ட வகுப்பில் 4 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

தேறியவர்களின் சதவீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	பி.வி.எஸ்சி. தேறியவர்களின் சதவீதம்.	எம்.வி.எஸ்சி. தேறியவர்களின் சதவீதம்.
1967–68	87	76
1968–69	77	79
1969–70	87	69
1970–71	78	79

கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட படிப்புத் தொகையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	இந்திய அரசு படிப்பு உதவித் தொகை (ரூபாயில்)	பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை.	தமிழ்நாடு அரசு படிப்பு உதவித் தொகை. (ரூபாயில்)	பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை.
1966–67 ..	13,526	20	1,73,502	484
1967–68 ..	24,050	45	1,68,969	477
1968–69 ..	35,369	62	1,69,562	465
1969–70 ..	79,398	75	1,67,236	459
1970–71 ..	65,780	99	1,71,856	497
1971–72 ..	85,482	99	1,76,091	399

[27th March 1972

தமிழ்நாடு 1962 கல்விக் கடனுதவி விதிகளின்கீழ் தங்களது கல்வியைத் தொடங்குவதற்கு மாணவர்களுக்குக் கடன்கள் அளிக்கப்பட்டன.

அதன் விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாயில்).	பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
1966–67	1,32,002	142
1967–68	1,55,981	173
1968–69	1,42,378	172
1969–70	1,47,371	168
1970–71	1,50,710	165
1971–72	1,48,841	**163**

இக்கல்லூரியில் 500 மாணவர்கள் தங்கக்கூடிய விடுதி ஒன்று உள்ளது நடப்பாண்டில், சுமார் ரூ. 45,000 செலவில் விரிப்புகளுடன் கூடிய 244 இரும்புக் கட்டில்கள் கூடுதலாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73-ல் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், ரூ. 50,000 செலவில் புறநிலை மாணவர் நிலையம் (Non-Resident Students Centre) ஒன்றைக் கட்டத் திட்டமிட்டுள்ளது. மாணவர்களின் பயனுக்கென ரூ. 64,200 செலவில் புதிய மாணவர்கள் பேருந்து ஒன்று வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் ரூ. 3·4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 100 மாணவர்கள் தங்குவதற்கு வசதியளிக்கப்பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி ஒன்றைத் தனியாகக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், 20 துறைகள் (பிரிவுகள்) உள்ளன. இங்கு பதவித்தரம் உயர்த்தப்பட்ட பேராசிரியர்கள் 17 பேர், ஆராய்ச்சி உதவிப் பேராசிரியர்கள் 22 பேர், 28 விரிவுரையாளர்கள் பிற ஆராய்ச்சி அதிகாரிகள், வல்லுநர்கள் ஆகியோர்களுடன் 121 உதவி விரிவுரையாளர்கள் இருக்கின்றனர்.

கோழி இன அறிவியல், விலங்கியல் மருத்துவ ஆய்வுக்கூடக் கல்வி போன்ற புதிய துறைகள் உருவாக்கப்பட்டன. இவை, 1972–73-ல் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோய்க்குறியியல், உயிரியல் ஆய்வு முறை (Biometry) மரபு வழி இயலில் அடிப்படைக் கல்வி, இறைச்சி நுட்பவியல் தீவனம் செரித்து இரத்தத்தோடு தன்மயமாதல் (Rumen metabolism) கலப்பினப் பெருக்கம், வளர்சிதை மாற்றம் (Endocrinology) ஆகிய புதிய பிரிவுகள் போதிய பணியாளர்களுடனும் கருவிகளுடனும் தொடங்கப்பட்டன.

27th March 1972]

ரூ. 4 லட்சம் செலவில் அமைக்கப்படும் விந்துக்களைக் கெட்டியாக உறைய வைப்பதற்கான ஆய்வுக்கூடம் (Deep Freeze Semen Laboratory) முடியும் தறுவாயில் உள்ளது. இதில் ஹாலந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் (திரவ) நைட்ரஜன் தயாரிக்கும் சாதனம் நிறுவப்படவேண்டியுள்ளது. இச்சாதனத்தின் உதவியுடன், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர் இன பொலிக் காளைகளின் விந்துக்களைச் சேமித்து வைப்பதற்கான விந்து சேமிப்பு நிலையம் ஒன்றை அமைக்க எதுவாகும்.

அரசு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள் தீட்டுவதற்கான ஆராய்ச்சிக் குழு ஒன்றும் இக் கல்லூரியில் உள்ளது. வளர்ச்சிப் பணித்துறை, கல்லூரியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் வளர்ச்சி முடிவுகள் ஆகியவற்றை மக்களுக்குப் புகட்டப்படுகிறது. இத்துறை உழவர்களுக்குப்பயிற்சி அளிக்கிறது. கோழிப்பண்ணை, பாற்பண்ணை ஆகியவற்றை தொடங்க முற்போக்கு உழவர்களுக்கு உதவி புரிகின்றது.

இக்கல்லூரியில் எல்லா வசதிகளுடனும் கூடிய, கால்நடை மருத்துவ மனை ஒன்று உள்ளது. இம்மருத்துவமனையில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. 1972–73-ல் 1·78 லட்சம் செலவில், தீவனச் செரிப்பு மற்றும் தன்மயமாதல் பற்றிய ஆராய்ச்சிக் கூடங்கள் (Metabolism Stalls) கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. மாடு, எருமை போன்ற பெரிய விலங்குகள், நாய், பூனை போன்ற சிறிய விலங்குகள் ஆகியவற்றின் பயனுக்கென புதிய மருத்துவ ஊர்திகள் வாங்குவதற்காக ரூ. 1,01,000-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தலைவரைத் தலைவராகவும், கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறை இயக்குநருடன் 9 உறுப்பினர்கள் அடங்கிய கௌரவப் பார்வையாளர்கள் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவமனைகளைப் பார்வையிட்டு தங்களது கருத்துக்களை அளிக்கவும் இந்த உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்தக்கல்லூரி, 10,000 நூல்களையும், 5,400 பழந் தொகுதிகளையுங் (Back volumes) கொண்ட நல்லதொரு நூல் நிலையத்தைப் பெற்றுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் ரூ. 50,000 செலவில் மேலும் அறிவியல் சஞ்சிகைகளின் தொகுதிகளை வாங்கக் கருதப்பட்டுள்ளது.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வரலாற்றிலேயே முதன் முறையாக, ஆராய்ச்சி மாணவர்களையும், அறிவியலறிஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில் அவர்களது அறிவியற் கட்டுரைகளைக் கொண்ட ஆராய்ச்சி ஏடு ஒன்றை வெளியிடவிருக்கிறது.

[27th March 1972

தேனும்பேட்டை கோழியின ஆராய்ச்சி நிலையம்.

இந்நிலையத்தில் ஏறத்தாழ 7,000 கோழிகள் துப்புரவு நிலையில் வளர்க்கப்படுகின்றன. சென்னை மருத்துவக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட "மேயர்" கோழியினம் அறிமுகப்படுத்தப்பட்டதால், முட்டை உற்பத்தி பெருகியது. கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தியான முட்டைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1969–70	..	..	..	1,32,794
1970–71	..	..	..	1,13,963
1971–72	..	..	..	3,62,308

கோழி இறைச்சி குறித்த அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கு முழு உதவியாக ரூ. 12 லட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அது செயலாற்றப்பட்டு வருகிறது.

செம்மறியாட்டுப் பண்ணை, கூட்டுப்பாக்கம்.

இப் பண்ணையில், மெட்ராஸ் ரெட், மாண்டியா இனம் ஆகிய செம்மறியாடுகளின் இனப்பெருக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவற்றின் மரபியல் வழி செயல் திறன்களும் ஆராயப்படுகின்றன. உள்ளூர் இனவகைகளின் உடல் எடையையும் வளர்ச்சி விதத்தையும், கலப்பு இனப் பெருக்க முறையில் மேம்படுத்த "சௌத்டௌன்", "டார்செட் ஹார்ன்" போன்ற அந்நிய இனவகைகளை இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. நல்ல மரபு வழி செம்மறியாட்டுக் கிடாக்களை வளர்த்து, சுற்று வட்டாரத்திலுள்ள ஆடு வளர்ப்போர்க்கு வழங்குவது இப் பண்ணையின் நோக்கமாகும் தற்போது இப்பண்ணையில், 974 செம்மறியாடுகள் உள்ளன. அவற்றில் 736 மாண்டியா இனம், 231 மெட்ராஸ் ரெட் இனம், ஏழு மாண்டியா-மெட்ராஸ் ரெட் கலப்பினமாகும்.

பன்றி வளர்ப்புப் பற்றிய ஆராய்ச்சிப்பணி, இப்பண்ணையில் நடைபெறுகிறது. பன்றி வளர்ப்பவர்களுக்குப் பங்கிட்டளிப்பதற்கான, உயர்ந்த பன்றி ஏற்றை (boar) உற்பத்தி செய்வதற்காக 100 பெண் பன்றிகள் நிறைந்ததாக இப் பண்ணையை மேம்படுத்துவது நம்முடைய குறிக்கோளாகும்.

இப் பண்ணையில், பின்வரும் ஆராய்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

(i) எருமைகளின் மரபுவழிப் பண்பு பற்றிய ஆய்வுகள்.

(ii) காளைகளின் கால்வழி மரபு பற்றிய சோதனைகள்.

(iii) பன்றிகளின் இறைச்சியின் எடை உற்பத்தியளவில் ஆதாயம் தரத்தக்கதாக உள்ளதா என்பதை குறித்தும், அவற்றின் இறந்த உடல்களின் தனித்தன்மை, மதிப்பு குறித்தும் ஆய்வுகள்.

(இது இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டமாகும். இதற்கு 50 சதவீத உதவி கிடைக்கிறது.)

27th March 1972]

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பாதிச் செலவிற்கு (50 : 50 என்ற அடிப்படையில்) நிதியுதவி பெற்ற மேச்சேரி, மாண்டியா ஆட்டுக்குட்டிகளின் இறைச்சிக் கூறுபாடுகள் பற்றிய ஆய்வுத் திட்டம், சேலம் மாவட்டம், குளத்தூரில் செயற்பட்டு வருகிறது.

செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

தென்னகத்திலேயே, சிறந்த வகைக் கம்பளி உரோமத்தை உற்பத்தி செய்யும் ஒரே ஆராய்ச்சி நிலையம் இதுவேயாகும். நீலகிரியில் வளர்க்கப்படும் செம்மறியாட்டு இனம் இந்தியாவிலேயே சிறந்த வகைக் கம்பளி மயிர் கொண்டவை. 'மெரீனோ' வகைச் செம்மறியாடுகளுக்கு ஈடாக, அவற்றின் தரம் உயர்த்தப்படுகிறது. இந்தப் பகுதியில் கலப்பினச் செம்மறியாடுகளை வளர்ப்பது சிக்கனமானது என்பது கண்டறியப் பட்டுள்ளது. 1972–73-இல் ரூ. 1·5 லட்சம் செலவில் மெரீனோ செம்மறியாடுகளை இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் மேய்ச்சல் தரை நிர்வாகமும், வசதிகள் நிறைந்த கொட்டில்களுக்கான ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படும். கம்பளிப் பகுப்பாய்வ சோதனைக் கூடத்திற்கானப் பணி முன்னேறி வருகிறது. அச்சோதனைக்கூடம் விரைவில் செயற்படும்.

தற்போது, இந்தப் பண்ணையில் 1,585 செம்மறியாடுகள் உள்ளன. இனங்கள் பின்வருமாறு :—

(1) மெரீனோ	..	..	143
(2) நீலகிரி	..	..	32
(3) மெரீனோ கலப்பு	..	..	257
(4) ஏனைய கலப்பினங்கள்	..		853

பி.எல். 480 திட்டங்கள்.

கீழ்க்காணும் திட்டங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பளிப்பு பெற மேலனுப்பப்பட்டுள்ளன:—

(1) ரூ. 5·88 லட்சம் செலவில் சிறந்த முறையில் பலன் தரும் வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரித்தல்.

(2) காளைகளுக்கு ஏற்படும் சிறுநீர் தொடர்பான நோய்க்கான (Haematuria) காரணம், உடற்கூறு பற்றிய ஆராய்ச்சிக்கான ரூ. 4·80 லட்சம் செலவில் திட்டம்.

கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவ நிறுவனம், இராணிப்பேட்டை.

இந்நிறுவனம், உயிரியல் முறையில் 23 வகை மருந்துகளையும், சீரங்கள் (sera), நோய் அறிவதற்குதவும் எதிர்த் தாக்குதல் காட்டும் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. தமிழ்நாடு முழுமைக்கும் நோய்த்தடுப்பு மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. மற்ற மாநிலங்களுக்கு இப் பொருள்களை வழங்குவதன் மூலம், இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 3 லட்சம் ஈட்டுகிறது.

[27th March 1972

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு, மற்ற மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பு, விலைக்கு விற்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு.	நம் மாநிலத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பு.	எனைய மாநிலங்களுக்கு விலைக்கு விற்கபபட்ட பொருட்களின் மதிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1967-68 ..	6,74,877·00	5,26,882·51	74,293·00	6,01,175·51
1968-69 ..	6,49,243·88	5,88,661·21	99,986·89	6,83,648·01
1969-70 ..	7,79,408·00	6,79,072·30	1,37,072·30	8,16,095·25
1970-71 ..	8,21,171·01	8,78,296·19	2,23,834·00	11,02,130·19
1971-72 ..	9,81,780·51	8,08,194·88	1,73,585·63	9,81,780·51

(2/1972 முடிய)

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், புதுமுறை மத்திய ஆய்வுக்கூட மொன்றை ரூ. 15 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவ்வாய்வுக்கூடம் முழுவதும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருக்கும்; பல்வேறு தடுப்பு மருந்து தயாரிக்கும் ஆய்வுக் கூடங்கள் அமைய சாதனங்கள் நிறைந்திருக்கும். இப்பணி இந்த ஆண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு புதிய சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் மிகவும் நவீன, தொழில்நுட்பம் வாய்ந்த சாதனங்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது:—

1. புது மாதிரி மையவிரிப்போக்குடைய நுண்ம உருப்பெருக்கி (Centrifugal Microscope).

2.—70° சென்டிகிரேட் வெப்பநிலையில் உள்ள உறைத்தன்மை அறை.

3. உருத் தலைகீழாக்கப்பட்ட நுண்ம உருப்பெருக்கி. (Inverted Microscope)

4. மிக்க வேகத்தில் சுழலும் கையடக்கமான, வெவ்வேறு எடைச் செறிவுள்ள பொருள்களைப் பிரிக்கும் பொறி (Portable High Speed Centrifuge).

இறக்குமதி செய்வதற்கான உரிமங்கள், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளுக்கு வழங்கல் ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர இயந்திரத்தினால் புட்டிகளைக் கழுவுவதற்கான பொறி, கலக்கும் பொறிகள் முதலிய நவீன சாதனங்களும் இந்த ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன.

27th March 1972]

தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பு (Haemorrhagic Septicaemia) அம்மைப்பால், சப்பை நோய்தடுப்பு (Black Quarter) அம்மைப் பால் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இந்நிறுவனம் எதிர்காலப் பணியாகக் கொண்டுள்ளது.

சிறுநீரக செல்களில் நச்சுக்கிருமிகளை வளரச் செய்யும் புதிய உத்தியைக் கையாண்டு வெக்கை நோய்த் தடுப்பு அம்மைப்பால் தயாரிப்பதில் முனைந்தது இந்நிறுவனம் ஒன்றுதான். மற்ற மாநிலங்களிலிருந்தும், தனிப்பட்ட கால்நடை வளர்ப்போரிடமிருந்தும் தேவைக்கான் கோரிக்கைகள் வருவதால், இந்த அம்மைப்பால் வாணிக முறையில் விற்பனை செய்ய கருதப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய்களுக்குக் காரணமானதொற்று நோய்க்கிருமிகள் பரவுவதைப்பற்றியும் அவை பரவாமல் தடுப்பது பற்றியும் ஆய்வு செய்வதற்கும் அந்த நோய்கள் பெருவாரியாகப் பரவுதலைப்பற்றி ஆய்வு செய்வதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்திய வேளாண்மைக் கழகம் முழு உதவியாக ரூ. 3·58 லட்சம் ஒதுக்கியுள்ளது.

கால்நடைகளின் கோமாரி நோய் ஆராய்ச்சி நிலையமொன்றை எற்காட்டில் நிறுவவும் நாம் கருதியுள்ளோம். கோமாரி நோயை எதிர்க்கும் வலிமையுள்ள மாற்றைக் கண்டுபிடிப்பதற்கான திட்டமொன்று எடின்பரோ பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் இந்தியாவிலேயே முதன் முறையாக நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் பயனுள்ள விளைவுகளை அளித்துள்ளது.

அம்மைப்பால் தயாரிக்கப்படுவது மட்டுமன்றி, மருந்துப் பொருட்களை மேம்படுத்தவும், புதிய நோய்களைத் தடுக்கவும், அந்நோய்களின் உட்கூறுகளை ஆராயவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

துறையின் பிற முக்கியமான மேம்பாடுகள்

(i) புதுமை முறையில் இறைச்சிக் கொட்டில்கள் அமைத்தல்.

மக்கள் நல்வாழ்விற்கான உணவு கிடைக்க வழி செய்யும்பொருட்டு திறமையாகவும், அறிவியல் முறையிலும் விலங்குப் பொருட்களைப் பதப்படுத்தவும், புதுமைமுறை இறைச்சிக் கொட்டில் ஒன்றை சென்னையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கெனச் சுமார் ரூ. 62·25 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ii) காளைகள் இனவழி ஆராய்ச்சி :

ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ரூ. 13·37 லட்சம் செலவில் சிந்தி காளைகளைப் பற்றிய இனவழி. தொடர்பான ஆராய்ச்சிக்கு இந்திய அரசு ஒப்பளித்துள்ளது. காளைகளையும், சிகப்பு சிந்தி இளங்களையும் உற்பத்தி செய்ய இத்திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படும்

(iii) மத்திய எருமைப் பண்ணை, அலமாதி :

செங்கல்பட்டு மாவட்டம் அலமாதியில் ரூ. 82·91 லட்சம் செலவில் மத்திய எருமைப்பண்ணை ஒன்றை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கான நிலங்களும், கட்டிடங்களும் வழங்கப்படுமென்று மாநில அரசு இந்திய அரசுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) தொற்றுத் தடைக்காப்பு நிலையத்தை அமைத்தல் :

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கால்நடைகளை தொற்றுத் தடைக்காப்பில் வைப்பதற்காக, தமிழ்நாட்டில், சென்னைக்கு அருகில் நிலையான தொற்றுத்தடைகாப்பு நிலையமொன்றை அமைக்க, இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் இத்திட்டத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, அதற்காக செங்கல்பட்டு மாவட்டம், சைதாப் பேட்டை வட்டத்தில் பொருத்தமான இடங்களைத் தெரிவித்துள்ளது. இந்திய அரசினிடமிருந்து பதில் கிடைத்தவுடன் இந்த நிலையம் நிறுவப்படும்.

(v) அலமாதியில் கால்நடைத் தீவன ஆராய்ச்சி நிலையமொன்றைத் தொடங்குதல் :

அலமாதியில், ரூ. 14·39 லட்சம் செலவில், கால்நடைத் தீவனம், தீவனப்பயிர் குறித்த விளக்க நிலையமொன்றைத் தொடங்கும் திட்டத்திற்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. இத்தொகை மூன்றாண்டு களுக்காக வழங்கப்படுவதாகும். அலமாதியிலுள்ள நிலங்கள் இந்திய அரசுக்கு மாற்றப்பட்டதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(vi) கால்நடை இறக்குமதி :

கலப்பற்ற ஒரே இனத்தைச் சேர்ந்த கால்நடை, பன்றிகள், கோழிகள், ஆடுகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக, ஆஸ்திரேலியாவி லிருந்து அந்திய வகை எருதுகளையும், ரஷ்ய மெரீனோ ஆடுகளையும், ஹைலின் கோழிகளையும், வெள்ளை யார்க்ஷயர் பன்றிகளையும் இறக்குமதி செய்ய, இந்திய அரசுடன் கலந்தாலோசித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(vii) கோடைக்கானலில் கலப்பு ஜெர்ஸி இன-செம்மறியாட்டுப் பண்ணை ஒன்றை அமைத்தல் :

நியூஜிலாந்து அரசின் உதவியுடன் கோடைக்கானலில் கலப்பு இனப் பண்ணை ஒன்றை அமைக்க இந்திய அரசு கருதியுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தக் காரியத் திற்காக கோடைக்கானலில் தகுந்த மனையொன்றைத் தேர்ந்தெடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(viii) கால்நடை வார விழாக்கள் :

முதன் முறையாக 1971-72-ல் பொங்கல் திருநாளுடன் இணைந்தாற் போல், மாநிலம் முழுவதும் கால்நடை வாரம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. உழவர்களின் நன்மைக்காக, பெருமளவில் பொதுக் கூட்டங்கள், வானொலிப் பேச்சுக்கள், பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டன.

(ix) கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் :

கோழிப்பண்ணை வளர்ச்சியின் வாய்ப்புக் கூறுகளை உறுதிப்படுத்தவும் ஆதாயம் தரத்தக்க விற்பனை வசதிகளுக்கான தேவைகளைக் கருத்திற் கொண்டு, பஞ்சாப் மாநிலத்தில் உள்ளதைப்போன்று, கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம், ஒன்றை இம்மாநிலத்திலும் நிறுவுவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

(x) கால்நடை மேம்பாட்டு வாரியக் கூட்டங்கள் :

1971-72-ல் கால்நடை வளர்ச்சி வாரியத்தின் கூட்டங்கள் புதுக் கோட்டை, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் நடைபெற்றன. இக்கூட்டங் களில் பங்கேற்ற உறுப்பினர்கள் மிகவும் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்தனர். இரண்டுக்குக் குறையாத உறுப்பினர்கள் எந்த நேரத் திலும் பல்வேறு பண்ணைகளுக்குச் சென்று பார்வையிட்டு, அவர்களு டைய கருத்துக்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(xi) தமிழ்நாட்டுச் சமவெளிகளில் மத்திய செம்மறியாடு—கம்பளி, ஆராய்ச்சி நிலையத்தின் நேரிட நிலையமொன்றை நிறுவுதல் :

அந்திய வகை செம்மறியாடு, அவற்றின் கலப்பு இனங்கள் ஆகியவற்றின் தனித் தன்மைகளை ஆராயவும், அவற்றிற்குத் தேவை யான தீவனத் திட்டங்கள், தீவனப் புல் தேவைகள் குறித்து பரிசோதனை கள் நடத்தவும், கோடைக்கானல் மலையிலுள்ள மன்னவனூர் மலைப் பகுதியில், இந்திய அரசு, ஏற்கெனவே மத்திய செம்மறியாடு—கம்பளி ஆராய்ச்சி நிலையமொன்றை நடத்திக்கொண்டிருக்கிறது. சமவெளிகளி லுள்ள செம்மறியாடுகளுக்குப் பயன் தரும் வகையில் அதே பரிசோதனை களை நடத்துவதற்காக அத்தகைய திட்டமொன்றை ரூ. 3·27 லட்சம் செலவில் தமிழ்நாட்டுச் சமவெளிகளில் மேற்கொள்வதிலும் அவர்கள் குறிப்பாக உள்ளனர். அத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தில், தகுந்த நிலம் ஒன்றை தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டுத் திட்டம்.

1972—73-ல் மேற்கண்ட ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

	ரூபாய்.
1 அம்மைப்பாலை அதிக அளவில்தயாரிப்பதற்காக கால் நடை நோய்த்தடுப்பு நிலையத்தை மேம்படுத்துதல்.	1,86,500
2 சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில், கல்வி, ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்குதல்.	2,51,000
3 பரிசோதனை நிலையத்தில் உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.	19,200
4 சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலகத் துக்கு பழந்தொகுப்பு நூல்கள் வாங்குதல்.	50,000
5 கற்பித்தல், ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்க துறைகளை வலுப்படுத்துதல்.	62,100

	ரூபாய்
6 உறைந்த விந்து பயன்படுத்தும் ஆய்வுக்கூடங்களை அமைப்பதற்கான திட்டம்.	42,300
7 எருமை இன மரபியல் ஆராய்ச்சித் திட்டத்திற்காக விலங்குகள் வாங்குதல்.	50,000
8 சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்காக சாதனங்கள் வாங்குதல்.	2,60,000
9 மாதவரம் வட்டாரத்தில் கலப்பு இன மும்முரத் திட்டத்திற்காக ஜீப் ஒன்று வழங்குதல்.	32,300
10 சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் உடல் வளர்ச்சிக்கூறுப் பிரிவுகளைக் கட்டுதல்.	1,00,000
11 சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறு விலங்குகளுக்காக கட்டிடங்கள் கட்டிடுதல்.	40,000
12 கால்நடை மருத்துவக் கல்லூரியில், பிற மாணவர் களுக்கான கூடம் ஒன்றைக் கட்டுதல்.	50,000
13 கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் (தேனும்பேட்டை) புதிய கோழியினங்களை உற்பத்தி செய்யும் திட்டம்.	1,00,000
14 உதகையிலுள்ள செம்மறியாடு ஆராய்ச்சி நிலையத்திற் காக கட்டிடங்கள் கட்டுதல், சாதனங்கள் வாங்குதல்.	1,00,000
மொத்தம் ..	13,43,000

சுருங்கக்கூறின், குறிப்பாக உழவர்களும், பொதுவாக மக்களனை வரும், வளமான வாழ்க்கையைப்பெற, கால்நடை வளர்ப்புத் துறையும் கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறையும் விரைந்து முன்னேறி வருகின்றன.

இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நான் பேரவையை வேண்டிக் கொள்ளுகிறேன்.

இணைப்பு I

மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் மொத்தப் பரப்பளவு, அதில் பயிர் செய்யப்பட்ட பரப்பளவு, உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைத் தீனி, தேவனம் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்ணும், பண்ணையின் பெயரும்.	மொத்தப் பரப்பளவு.	பயிர் செய்யப்பட்ட பரப்பளவு.	உற்பத்தியாக்கப்பட்ட தீனியும், தீவனமும்.			1971–72.	
			1968–69.	1969–70. (இலைசோளம்).	1970–71.	1971–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	
1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் ..	1,646	203	14,78,685	25,62,629	28,65,987	23,68,051	
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை ..	997	463	55,94,108	52,67,718	54,50,103	41,51,823	
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓரத்தநாடு ..	2,092	480	29,74,107	32,37,521	32,93,965	20,36,048	
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு ..	1,907	432	7,00,298	13,81,975	13,58,112	9,04,030	
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அயிலேஷப்பட்டி ..	1,898	240	6,24,607	5,94,013	4,00,564	12,13,977	
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் ..	126	40	..	1,91,388	4,84,705	4,62,267	
	8,666	1,858	1,14,71,805	1,32,25,244	1,88,53,426	1,11,36,196	

இணைப்பு II

மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கிட்டும் பாலின் அளவைக் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டக் காலநடைப் பண்ணையின் பெயர்.	கறக்கப்பட்ட பால்.			
	1968–69.	1969–70.	1970–71.	1971–72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.
	(கிலோகிராமில்.)			
(1)	(2)	(3)	(4)	(5)
1. மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர்	3,74,958	3,39,177	3,76,911	2,50,140
2. மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை ..	2,53,788	2,34 717	2,87,362	1,81,894
3. மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு	4,29,509	3,98,888	3,86,190	2,22,379
4. மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு ..	1,25,407	1,36,083	1,58,781	82,036
5. மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி ..	84,474	92,076	72,808	46,067
6. மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் ..	1,75,478	1,30,181	90,613	66,019

இணைப்பு III

1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று கால்நடை மற்றும் கோழியின் இருப்பு நிலை

பண்ணையின் பெயர்.	வெண்ணிறக் கால்நடை		கறுப்பு நிறக் கால்நடை.		ஆடுகள்.		பன்றிகள்.		கோழிகள்.	
	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை.	இளம் வகை.	வயது வந்தவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்	209	766	..	..	287	663	201	56	27,983	4,045
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை.	192	708	46	178	347	692	43	145	8,021	3,598
3. மாவட்டக் கால்நடை பண்ணை, ஒரத்தநாடு.	150	611	70	290	..	..	87	69	8,675	6,181
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு.	66	284	26	151	158	336	80	57	2,737	993
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை. திருநெல்வேலி,	24	93	32	70	356	770	42	120	1,353	2,522
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்.	54	59	..	..	..	..	..	..	..	..
7. ஆட்டுப் பண்ணை, சின்னசேலம்.	183	161	..	..	550	878	..	..	7,988	6,124
8. ஆட்டுப் பண்ணை, சாத்தூர்.	..	..	..	..	403	541	..	..	721	3,858
9. கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம்.	..	..	..	..	..	..	..	..	10,634	11,265

இணைப்பு IV

மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் குறித்து செலவையும், அவற்றிலிருந்து வந்த வரவையும் காட்டும் விவர அறிக்கை

மாவட்டக் கால்நடைப் பண்ணையின் பெயர்.	1968–69.		1969–70.		1970–71.		1971–72.	
	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	செலவு.	வரவு.	1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை.	
							வரவு.	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.
1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்.	11,04,368	3,44,511	6,94,802	1,82,666	14,46,975	3,69,702	9,41,284	3,51,254
2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை.	8,93,124	2,48,934	6,08,237	1,23,653	12,70,960	3,12,165	6,62,082	2,39,102
3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு.	10,76,311	3,33,420	6,90,086	2,39,254	13,60,670	4,17,043	7,54,019	3,35,300
4. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு.	5,53,379	1,47,813	4,37,767	91,996	8,52,630	1,78,535	3,96,580	1,89,538
5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி.	3,75,791	1,07,834	2,35,804	76,434	4,95,081	1,85,298	1,28,461	94,518
6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்.	2,98,994	1,09,355	2,04,494	72,000	2,55,779	72,970	1,66,675	43,759

குறிப்பு.—மேற்கண்ட புள்ளி விவரங்கள் மூலதனச் செலவு உட்பட அந்தந்தத் தலைப்புகளின் கீழ் இவ்வாண்டின் வரவு–செலவைக் குறிப்பதாகும். இருப்பைக் கணக்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட கணக்கல்ல.

இணைப்பு V.

மையக்கிராமப் பகுதிகளிலும், கால்நடை மருத்துவ வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகள், பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை, அவற்றைச் சரிபார்த்தல் ஆகிய விவரங்களைக் காட்டும் அறிக்கை.

	1970–71
1 1970–71-ஆம் ஆண்டில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகளின் எண்ணிக்கை.	17,55,859
2 1970–71-ஆம் ஆண்டில் பிறந்த கன்றுகளை சரிபார்த்தலை கனின் எண்ணிக்கை.	2,61,081
3 இச்சையூட்டப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை ..	5,3!,248
4 சரிபார்க்கப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை	50,814
5 நோய்த்தடுப்பு ஊசி குத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை	17,25,388

குறிப்பு :—சென்ற ஆண்டில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்த கால்நடைகள் பிறந்த கன்றுகளின் எண்ணிக்கையை 2-வது இனம் குறிப்பிடுகிறது. அவை, கால்நடை வளர்ப்புத் துறையினரால் சரி பார்க்கப்பட்டவைகளாகும்.

இணைப்பு VI

கால்நடை மருத்துவ மனைகளிலும், கால்நடை மருந்தகங்களிலும், செய்கை அளிக்கப்பட்டனை, கொள்ளை நோய்களுக்குச் செய்கையளிக்கப்பட்டனை, தடுப்பூசி போடப்பட்டனை குறித்த விவரங்கள் வருமாறு.

(1)	1968-69. (2)	1969-70. (3)	1970-71. (4)	1971-72. 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை. (5)
1. கொள்ளை நோய்களுக்குச் செய்கை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	593	380	1,021	287
2. நோய்களின் எண்ணிக்கை (அறிவிக்கப்பட்டனை).	10	12	9	10
3. போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை.	55,04,830	35,90,184	40,11,177	26,95,490
4. செய்கை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	16,81,508	19,35,814	19,31,798	12,26,972
5. காயடிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	2,68,521	1,71,840	50,814	1,26,797
6. மருத்துவ பரிசோதனைகளுக்கு வந்த மொத்த நோயுடனின் எண்ணிக்கை.	1,18,687	84,763	1,11,612	59,776

27th March 1972]

POLICY NOTE ON ANIMAL HUSBANDRY.

Thiru Chairman, Sir,

I rise to place the salient features of the Policy under Animal Husbandry before this House.

The main objectives of the Animal Husbandry Department are to raise the productivity of Livestock including Dairy Cattle, Sheep, Piggery and Poultry through scientific breeding, feeding and management and through providing all facilities to prevent and treat the animal diseases. The ultimate aim of the Animal Husbandry activities are to increase the efficiency of the work cattle, to increase the supply of milk and milk products, eggs, mutton, poultry meat and pork, in order to provide food of high nutritive value for the health and well being of the people of our State.

The economy of our State depends to a large extent on Agriculture. The prosperity in Agriculture is closely correlated with the cattle wealth. Our State do have a very large number of cattle population. We have 108.50 lakhs of cattle, 27.24 lakhs of buffaloes, 66.21 lakhs of sheep, 37.71 lakhs of goats, 4.75 lakhs of pigs and 112.26 lakhs of poultry according to the Livestock census of 1966. But this large number of Livestock has registered progress only quantitatively and not qualitatively. Due to the lack of qualitative approach, the per capita consumption of milk, eggs and meat continues to be deplorably low namely, 2.3 kg. of meat, 8 numbers of eggs and 30 litres of milk per annum inspite of the very large number of cattle population.

In order to improve the quality and usefulness of our Livestock, several measures have been undertaken by this department over a long number of years, some of which worthy of mention are the Key Village Scheme, Artificial Insemination Scheme, Intensive Cattle Development Scheme. Intensive Poultry Development Scheme, Intensive Egg and Poultry Production-*cum*

Marketing Scheme, Piggery Scheme and Rinderpest Eradication Scheme. This Government have also formulated several schemes for implementation in the coming year so as to achieve the objectives more rapidly.

Establishment.

With a view to achieve greater decentralisation, cohesion and uniform control and to bring the animal husbandry activities quite near to the agriculturists, this Department has been reorganised from 1st January 1970. The Department underwent a radical and reformatory change in that the Department which was working on a functional basis till then began to work on a territorial basis. According to the reorganised set up, the State was divided into six Regions under six Regional Deputy Directors with Headquarters at Madras, Vellore, Coimbatore, Thanjavur, Madurai and Tirunelveli. Each Regional Deputy Directors except the Regional Deputy Director at Madras, is assisted by three specialists, one for poultry, one for livestock and one for Disease Investigation work. Thus there are 15 specialists in this State. Below the Regional Deputy Directors, there are 59 Assistant Directors of Animal Husbandry whose Jurisdiction roughly corresponds to that of the Revenue Division. These Assistant Directors are not only in charge of the investigation and treatment of diseases but also in charge of poultry, livsetock, sheep and piggery development work, artificial insemination work, key village, extension and other development activities. Each Community Development Block has atleast one Veterinary Dispensary managed by two Veterinary Assistant Surgeons, one for disease treatment work and another for extension work. At the panchayat union and village level, the animal husbandry work is attended to by the Extension Officers of Animal Husbandry, one in charge of a sub-centre having jurisdiction over an area of about 6 to 10 villages. All items of work which were done by the various agencies prior to reorganisation,

such as key village work, artificial insemination work, etc., are now being attended to by these Extension Officers. There are 883 Veterinary Assistant Surgeons, 87 Veterinary and Livestock Inspectors, 620 Livestock Assistants, Grade I and 2,235 Livestock Assistants, Grade II working in the various institutions of the drpartment. There are six District Livestock Farms under six Farm Superintendents in the following places, out of which the Hosur farm is in charge of a Hatchery Officer-cum-Superintendent.

1. Hosur—Dharmapuri district.
2. Pudukòttai—Tiruchirappalli district.
3. Orathanad, Kachenkottai and Korukkai—Thanjavur district.
4. Abishegapatti—Tirunelveli district.
5. Ootacamund—Nilgiris district.
6. Chettinad—Ramanathapuram district.

There are two Sheep Farms under two Farm Superintendents in the following places.

1. Chinnasalem—South Arcot district.
2. Sattur—Ramanathapuram district.

There is *one poultry farm* under the management of one Hatchery Officer-*cum*-Superintendent at Kattupakkam.

So in all, there are nine big farms, six for Livestock, two for sheep and one for poultry under the control and supervision of the Animal Husbandry Department.

Apart from this, there is a Rinderpest Officer in charge of the Rinderpest Eradication scheme for the State, a Feed Mixing Officer in charge of producing poultry feed required for the several poultry units in the State, a Deputy Registrar of Co-operative Societies in charge of the various Sheep and Poultry Co-operative

Societies and an Animal Husbandry Statistician to collect the data and highlight the same for further improvement.

At present there are 35 Veterinary Hospitals three of which at Saidapet, Tirunelveli and Coimbatore have been upgraded into full fledged Hospitals with clinical laboratories, 485 Veterinary Dispensaries and 13 clinical laboratories in the State.

As the plan activities of the Department has increased, the Director has been given the assistance of one Joint Director in planning and Development work. A diagram indicating the administrative set up of the Department after reorganisation is appended. (Appendix I).

DEVELOPMENTAL PROGRAMME.

The significant programmes and activities undertaken by this Department are as given below :—

Livestock Development.—The recognised breeds in this State are—

(*a*) Kangeyam;
(*b*) Umblachery;
(*c*) Hallikar;
(*d*) Alambadi;
(*e*) Bargur and
(*f*) Pulikulam.

The Bargur and Pulikulam breeds are too limited in existence and demand and hence they are not encouraged now. The non-descript cattle in the rural areas are being upgraded by crossing them with bulls of Standard breeds like Sindhi, Tharparkar, Gir and Kangayam. The Kangayam breed which is the pride of our State is very popular and is much in demand. The breed has spread half of the State. In the hill areas of Nilgiris and Kodaikanal and in the milkshed areas of Coimbatore, Madurai and Madras, Cross breeding with bulls of exotic breeds such as Fresian,

Jersey is adopted to the extent possible. In respect of buffaloes, the local buffaloes are being upgraded by crossing them with the murrah buffaloes.

In order to improve the local breeds by grading up with indigenous breed of cattle and cross breeding with exotic breeds, to educate the breeders in the better management of livestock and to produce and supply breeding male stock, the Livestock Farms were started in this State. The utility and the work undertaken in the various Livestock Farms are broadly classified as follows :—

(i) Introduction of pure breed of milch cattle of indigenous breed and exotic breed of high yield.

(ii) Improvement of non-descript local breed of cattle for dual purposes by selective breeding and grading up with high quality male stock.

(iii) Supply of good quality bulls to private breeders, farmers, Government and quasi-Government institutions for breeding purposes.

(iv) Serving as demonstration units for livestock breeders to acquire, the feeding, breeding and management skills and techniques.

(v) Serving as a training centre for students and farmers.

(vi) conducting research on the improvement of cattle, sheep, poultry, pigs with a view to evolve good quality livestock and poultry.

(vii) Supply of improved variety of grass slips to the villagers and the establishment of fodder plots.

The details of the area under cultivation, fodder, grains and milk produced, the stock position of animals, the receipts and expenditure in respect of all the livestock farms are given in Annexure II to V.

The number of bulls sold for breeding purposes and their value from the various Livestock Farms are given below :—

	Number of bulls sold.	*Value in rupees.*
(i) 1966–67	192	1,53,600
(ii) 1967–68	123	98,400
(iii) 1968–69	102	81,600
(iv) 1969–70	74	59,200
(v) 1970–71	62	49,600

The reduction in the number of bulls sold for breeding purposes is due to the discontinuance of the premium scheme as a result the panchayat unions and Livestock owners are not forthcoming for the purchase of breeding bulls from the farms.

The number of cattle transferred to other stations such as Veterinary Dispensaries, Veterinary Hospitals, Farms, etc., for breeding purposes are given below :—

	Number of cattle transferred.	*Value in rupees.*
(i) 1966–67	350	2,80,000
(ii) 1967–68	140	1,12,000
(iii) 1968–69	213	1,70,400
(iv) 1969–70	170	1,36,000
(v) 1970–71	386	3,08,800

Key Village Scheme.—The Scheme contemplates the improvement of general health, efficiency and productivity of cattle by adoption of scientific methods of breeding, feeding and management, disease control and incidentally marketing of the products The good type of bulls whose proved worth in the productivity are stationed in the Key Village Centres and the semen collected transritted to Village Centres for insemination. The term Key Village is defined as a compact area consisting of one or more contiguous villages having a population of 10,000 cows or she buffaloes of breedable age. Before reorganisation there were 75 Key Village Blocks, each block having 6 to 10 sub-centres, as the

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1971–72.

MR. CHAIRMAN : The hon. Member Thiru M. Rajah Iyer will now initiate the discussion on the Final Supplementary Statement of Expenditure for 1971–72.

*திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவரவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய கோரிக்கையின் மீது சில வார்த்தைகளைப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு அவைத் தலைவரவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தக் கூடுதல் செலவில் நமது மாநிலச் சட்டமன்றத்திற்காக ரூபாய் 6,71,200 செலவிட வேண்டியதாக இருக்கிறது என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அதிகப்படியாகச் செலவாவதற்குக் காரணமும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு நமது சட்டமன்றமும் மேலவையும், கூடுதலாகப் பல நாட்கள் கூடுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அங்கத்தினர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்றாகும். காரணம் எவ்வளவு நாட்கள் அதிகமாகக் கூடுகிறோமோ அந்த அளவிற்குத்தக்க அதிகமான அளவிற்குப் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. இப்படிக் கூடுதலான நாட்களுக்கு சட்டமன்ற, சட்டமன்ற பேரவையைக் கூட்டுவதற்கு வழிசெய்த அரசைப் பாராட்டுகிறேன்.

சட்டமன்றம் சில நாட்கள் கூடுதலாகக் கூடுகிறது என்றால், அவர்கள் அதாவது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் சென்னைக்கு வர வேண்டும். வந்தால் அவர்கள் தங்குவதற்கு வசதிகள் இருக்க வேண்டும். தங்குவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அதுபற்றிக் குறையில்லை. ஆனால் சைவ உணவு உண்ண வேண்டுமானால், சட்டமன்ற விடுதியில் வசதி கிடையாது. அசைவ உணவுபற்றிச் சொல்லுவதற்கு எனக்குத் தெரியாது. சைவ உணவு சம்பந்தப்பட்ட வரையில், இப்போதுள்ள முறை மாற்றப்பட வேண்டும். யார் 'காண்ட்ராக்ட்' மூலம் அதிகப் பணம் கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு இந்தச் சைவ உணவு விடுதியினை நடத்துவதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குப் பொருந்தாது என்று கருதுகிறேன். ஒருவர் ரூ. 20 ஆயிரத்திற்குக் 'காண்ட்ராக்ட்' எடுத்தால், அவர் கொடுக்கும் இந்தத் தொகையை நமக்குக் கொடுக்கும் உணவின் தரத்தைக் குறைத்துத் தான் எடுக்க முடியுமே தவிர, வேறு எங்கேயிருந்து அவர் இந்தத் தொகையை ஈடுசெய்ய முடியும்? இப்போது காலியில் முதல் தேவையான காபிக்கே வெளியில் சென்றுதான் சாப்பிடவேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் விடுதியிலிருந்து ஒருவர் காலியில் காலாற நடந்துவருவார்கள். இப்போது பல சட்டமன்ற

உறுப்பினர்களும் காலியில் எழுந்து மௌண்ட் ரோடுக்கு நடந்து செல்லுவதைப் பார்க்கலாம். எனவே இதைக் 'காண்ட்ராக்ட்' க்கு விடாமல் நகரில் யார் சிறந்த உணவு விடுதியை நடத்துகின்றார்களோ, இரண்டு ஸ்டார் ஹோட்டல், மூன்று ஸ்டார் ஹோட்டல் என்று சொல்லுகின்றார்களே அவர்களைக் கூப்பிட்டு, அவர்களுக்கு நாமே பணத்தை மான்யமாகக் கொடுத்து இங்கே சிறந்ததொரு உணவு விடுதியை நடத்துங்கள் என்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த ஒரு அம்சத்தை அடுத்த ஆண்டுக்குள்ளாவது அரசு ஆராய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அந்த விடுதியில் உணவுக்காக உள்ள விடுதி மட்டும் இல்லை. அங்கே ஒரு தால் நிலையமும் வாசக சாலையும் இருக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த இரண்டும் விடுமுறை நாட்களில் மூடிக்கிடக்கின்றன. உணவு விடுதியிலுள்ள வாசக சாலையானது உணவு விடுதி நாட்களிலெல்லாம் திறந்திருந்தால், அங்கத்தினர்கள் அவற்றைப் பெருமளவிற்குப் பயன்படுத்தலாம். அதோடு வேலை நேரமும் காலை 10 மணிலிருந்து மாலை 4 வரை என்று இருக்கிறது. இதற்குப் பதிலாக காலையிலும் மாலையிலுமாக வேலை செய்தால் அங்கத்தினர்கள் இவற்றை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று கருதுகின்றேன். அங்குள்ள வாசகசாலை சிறந்த வாசகசாலைதான். ஆனால் அங்குள்ள புஸ்தகங்களை யாரும் எடுத்துப்படிக்கக்கூடிய நிலையில் இல்லை. சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த சரித்திரப் புத்தகங்கள்தான் அங்கே பெரும்பாலும் இருக்கின்றன என்று சொல்லலாம். இங்குள்ள வாசகசாலைக்கு என்று நல்ல புத்தகங்களை வாங்கும் நோக்கத்தில் இரண்டு பிரதிகள் வாங்கி ஒன்றை இங்குள்ள நூல்நிலையத்தில் வைத்துக்கொண்டு மற்றொன்றைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் உள்ள விடுதியின் வாசகசாலைக்கு அனுப்பினால், பயனுள்ளதாக இருக்கும். மேலும் சட்டமன்ற விடுமுறை நாட்களிலே இந்த வாசகசாலையும் நூல்நிலையமும் திறந்திருந்தால், அங்கத்தினர்கள் இவற்றை நன்கு பயன் படுத்திக்கொள்ள முடியும் என்று கருதுகிறேன்.

கல்விக்கென்று ஒதுக்கியுள்ள துணை மதிப்பீட்டில் தேசிய மாணவர் படை விஸ்தரிப்புக்கு என்று அதிகச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியதொரு குறிப்புக்கண்டு அரசைப் பாராட்டுகிறேன். நாகர்கோவிலில் தேசிய மாணவர் கடற்படைப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்காகவும் அதற்காக இதில் ரூ. 45,000 ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் காண்கிறேன். இது பாராட்டத்தக்கது. கல்லூரிகளில் மட்டுமின்றி உயர்நிலைப் பள்ளிகளிலும் தேசிய மாணவர் படையின் ஜூனியர் யூனிட்டுகள் அமைந்திருக்கின்றன. இதுபற்றி ஒரு குறைபாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன். இங்கே தேசிய மாணவர் படை ஜூனியர் யூனிட்டில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ஒன்பது

மாதங்களுக்கு மட்டும் படியாகக் கொடுக்கப்படுகிறது. இந்த ரூ. 35 என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். இந்தப் படி அவர்களுக்கு உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது போல, இந்த தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் காலையில் அல்லது மாலையில் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் சிறந்த தேகப்பயிற்சியினைப் பெறுகின்றார்கள். இப்படி தேகப்பயிற்சி செய்யும் நாட்களில் அவர்களுக்கு உணவிற்காக ஒரு தொகை கொடுக்கப்படுகிறது. அத்தப் படியானது ஒரு மணி நேரத்திற்கு 19 பைசா என்று இருக்கிறது. இந்தக் காலத்தில் 19 பைசாவிற்கு இரண்டு முழு இட்டிலிகள் கூட கிடைக்காது. எனவே இப்போதுள்ள இந்த 19 பைசா என்பதைச் சற்றுக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்விக்காக ஒதுக்கியிருக்கும் ரூ. 4.48 கோடி முழுவதும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு இப்போது மான்யமாகக் கொடுக்கப்பட இருக்கிறது. இது நல்ல செய்தி. இனி பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலை எப்படியிருந்தாலும் அது 'ஏ' பிரிவு பஞ்சாயத்து யூனியனுனும் சரி, 'டி' பிரிவு பஞ்சாயத்து யூனியனுனும் சரி, நிதி வசதியுள்ளதானுனும் சரி அல்லது 'லிக்' பஞ்சாயத்து யூனியனுனும் சரி, எப்படியிருந்தாலும் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 'எப்ரல் முதல் தேதியன்று உங்களுக்குச் சம்பளம் உண்டு' என்ற செய்தி நல்ல செய்தி என்று, இதற்காக அரசைப் பாராட்டுகிறேன். ரூ. 4.48 கோடி கொடுக்கப்போகிறோம் இப்போது. இதை அவர்கள் முன்பணமாக வைத்துக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கெல்லாம் எப்ரல் முதல் தேதியன்று சம்பளம் கொடுக்கப்போகின்றார்கள் என்பது பாராட்டுக்குரியது. இதே சமயத்தில் வருந்தத்தக்க விஷயத்தையும் கூற விரும்புகிறேன். இது கொள்கையில் ஏற்பட்ட கோளாறு என்று கருதுகிறேன். இப்போது சில நல்ல அரசுப் பள்ளிகளைத் தனியார் கைக்கு மாற்றும் போக்கு இருக்கின்றது. இதைச் சற்று யோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போதுள்ள நிலையில் தனியார் நடத்தும் பள்ளிகள் நன்கு நடைபெறவில்லை என்றால், அவற்றை அரசு மேற்கொள்ளுகிறது. ஆனால் அரசுப் பள்ளிகளைத் தனியாரிடம் ஒப்புவிப்பது என்பது ஏனென்று தெரியவில்லை. இப்படி ஒரு பள்ளி என் ஊருக்குப் பக்கத்திலுள்ள மேழக்கரை என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. தனியார் நிர்வாகத்திற்குச் சென்றபின் சிறப்பாக நடைபெறுகிறது. எந்த விதமான பணக்குறையும் இல்லை. பேரளவிற்குத்தான் அரசுப் பள்ளி என்பது தனியார் பள்ளி என்று மாற்றப்பட்டுள்ளதே தவிர எந்த விதமான குறையும் இல்லை. இப்போது அது மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, ஆசிரியர்கள் பெறும்

சலுகைகளில் அல்லது அவர்களுடைய 'ப்ரிவிலெஜஸ்' என்று சொல்லக் கூடிய சலுகைகளில் எந்தவிதமான குறைபாடும் இல்லாது ஆசிரியர்கள் வாழ்கின்றார்கள். அதேமாதிரி என் மாவட்டத்தில் மிகப் பழமையான கழக உயர்நிலைப் பள்ளி கமுதியில் இருப்பதுதான். அதோடு இராஜபாளையம், திருப்பத்தூர் போன்ற இடங்களிலும் இத்தகைய பழமையான பள்ளிகள் இருந்துவந்திருக்கின்றன. 1920-25 வரையில் பார்த்தால், இந்த மூன்று பள்ளிகள்தான் அப்போது எங்கள் மாவட்டத்தில் கழக உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தன. இப்போது மாவட்டத்திலேயே மொத்தம் 200 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கமுதிப் பள்ளியை அரசின் நிர்வாகத்திலிருந்து தனியார் நிர்வாகத்திற்கு மாற்றின பின் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க விஷயை எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு ஆசிரியர் அரசினுடைய உயர்நிலைப் பள்ளி ஆசிரியராக இருந்தால், அவர் இன்றைய தினம் சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பார். நான் சொல்லும் ஆசிரியர் முழுத் தகுதியும் பெற்ற வணிகக்கலை ஆசிரியர். பி. காம். பட்டம் பெற்று வணிகத்துறை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். (T.T.D.) டிப்ளமோ பெற்றிருக்கிறார். அவருக்குப் பதினைந்து மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. நேற்று எனக்கு அவரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. 'Starving for the past fourteen months' என்று வந்தது. அதையும் மாண்புமிகு அமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன். அவர் ஒரு அரசுத் துறை ஆசிரியராகவில்லாமல், தனியார் துறை ஆசிரியராகவிருப்பதால், சென்ற 14 மாதங்களாகச் சம்பளம்தான் கோரப்படுகிறது. இதை உடனடியாக அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், இது நாம் காட்டும் சலுகையாகாது. அவருக்குச் சேர வேண்டிய சம்பளம். பிற ஆசிரியர்களுக்கெல்லாம் கொடுத்து ஒரு ஆசிரியர்க்கு மட்டும் கிடைக்கவில்லையென்றால், அது நிர்வாகத்தைக் குறைப்படுத்தும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வு ஊதியம் சம்பந்தமாக 1971-72-ஆம் ஆண்டைவிட இந்த ஆண்டு 74.47 இலட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறோம். உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் லோகல் பாடிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் நாம் இம்மாதிரி ஓய்வு ஊதியம் அதிகமாகக் கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி அந்த ஆசிரியர்களுக்கும் அதிக ஓய்வு ஊதியம் கிடைக்கும். ஆனால் நாம் பல ஆண்டுகளாகக் கூறிக்கொண்டிருக்கும் ஒரு விஷயம் கவனிக்கப்படாம விருப்பது துரதிர்ஷ்டவசம்தான். 1-6-1970 என்று தேதி நிர்ணயம் செய்திருப்பதால் பலருக்கு அதிக ஓய்வு ஊதியம் கிடைக்காமல் போகும் நிலைமை ஏற்படுகிறது. மேலும் கல்லூரிகளில் இருக்கும் விரிவுரையாளர்களுக்கும்

இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது இந்த அரசு செய்யும் பல நற்பணிகளில் மிகச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் தாராள ஓய்வு ஊதியம் உதவி பெறும் கல்லூரிகளில் பணி புரிகின்றவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர் அல்லாத இதர சிப்பந்திகளுக்கும் இந்த ஓய்வு ஊதியத் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றே ஒன்று. 1960-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதிக்கு முன்னால் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் ஓய்வு ஊதியம் சம்பந்தமானது. ஓய்வு பெறுவதற்கு முன்னால் ரூபாய் 600 ஊதியம் பெற்றிருந்த தலைமை ஆசிரியர் 1-6-1970-க்கு முன்னால் ஓய்வு பெற்று விட்டார் என்ற காரணத்திற்காக அவருக்கு ஓய்வு ஊதியம் ரூபாய் 35 தான் கொடுக்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியருக்கு ரூபாய் 30 தான். பட்டதாரி ஆசிரியருக்கும் தலைமை ஆசிரியருக்கும் உள்ள வித்தியாசம் ரூபாய் 5 தான். ஒரு நாள் பின்னதாக ஓய்வு பெற்றிருந்தால், அவருக்கு, தலைமை ஆசிரியராகவிருந்தால் ரூபாய் 75-ம் சாதாரண பட்டதாரி ஆசிரியராகவிருந் ரூபாய் 60-ம் கிடைக்கும். நான் சென்ற ஆண்டு பேசும் போது குறிப் பிட்டேன். மைலாப்பூர் பி.எஸ். ஹை ஸ்கூல் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், தென்னிந்திய ஆசிரியர் கழகத்தின் தலைவர், திரு. ஏ. கே. சீதாராமன் ரூபாய் 35-தான் ஓய்வு ஊதியம் பெறுகிறார். இதைப் போன்று பலர் இருக்கிறார்கள். அவர் எழுபது வயதைக் கடந்துவிட்டார். அவருடைய ஓய்வு ஊதியம் ரூபாய் 35-தான் என்ற நிலைமை இருக்கிறது என்று கூறினேன். ஆனால் அவர் இன்று நம்முடன் இல்லை. காலமாகிவிட்டார். எனக்கு இன்று ஒரு கடிதம் வந்திருக் கிறது. அது டி.எஸ். உமாபதி, ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் எழுதியது. மேற்சொன்ன தேதிக்கு முன்னால் ஓய்வு பெற்றதன் விளைவாக ரூபாய் 35 மட்டும் ஓய்வு ஊதியமாகப் பெற்றுக் கொண்டிருப்பவர். அவருக்கு வயது 72. கையால் எழுத முடியவில்லை என்ற காரணத்தால், மன்னிக்க வேண்டும், அச்சடித்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் என்று எழுதியிருக்கிறார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறேன் என்று என் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இம்மாதிரியாக ஓய்வு பெற்ற ஆசிரியர் களுடைய நிலைமையைச் சீர் செய்ய அரசு தகுந்த உடனடியான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—7—1960-க்கு முன்னால் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தலைமை

ஆசிரியர்களுக்கும் இந்தப் புதிய ஓய்வு ஊதியத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்புக்கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். ராமன் நாயர்: தலைவர் அவர்களே, உப மான்யக் கோரிக் கையின் பேரில் சில வார்த்தைகள் சொல்வதற்கு அனுமதி கொடுத்ததற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலைத் தோட்டத் தொழி லாளர்கள் விஷயத்தில் மிகவும் பிற்போக்கான நிலைமை இருந்துகொண்டிருக் கிறது. அவர்களுக்குப் பல நல்ல சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக் கின்றன. ஆனால் அந்தச் சட்டங்களைச் சரியான முறையில் அமுல் படுத்த முடியாத ஒரு நிலை இருந்து வருகிறது. அதற்குக் காரணம், நீலகிரி மாவட் டத்தை எடுத்துக் கொண்டால், சுமார் முக்கால் இலட்சம் தொழிலாளர்கள் இருக்கும் ஒரு இடத்தை எடுத்துக்கொண்டால், சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரிகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், இரண்டே இரண்டு அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறைதான் ஒரு தோட்டத்திற்குச் சென்று, சட்ட பூர்வமாக அங்கு நடைபெற வேண்டிய காரியங்கள் நடைபெறுகின்றனவா என்று பார்க்க முடிகிறது. அப்படிப் பார்த்துவிட்டு, இதன் மேல் நடவடிக்கை எடுக்க சுமார் ஆறு மாத காலம் ஆகின்றது. நடவடிக்கை எடுத்து ஏதாவது ஒரு குறைபாட்டைக் குறித்து கோர்ட்டுக்குச் செல்லும்போது, சுமார் ஆறு மாதம் ஆன பிறகு கோர்ட்டு ரூபாய் 15 அபராதம் போடுகிறது. அதன் பின்னால் ஒரு வருஷத்திற்குப் பின்னால்தான் அந்தத் தோட்டத்திற்குச் சென்று பார்க்கும் நிலையில் அந்த இரண்டு அதிகாரிகளும் இருக்கின்றார்கள். ஆகையினால் அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சட்டங்களைச் சரியானபடி அமுல் நடத்தப் போதுமான அளவுக்கு சுமார் 5,000 தொழிலாளர்களுக்கு ஒரு அதிகாரி என்ற விதத்தில் போட்டு சரியானபடி அமுல் நடத்த எற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் அதிக ஊதியம் பெற்று வந்தார்கள். ஆனால் சில காலமாகப் பக்கத்து மாநிலத்தைவிட குறைந்த அளவுக்குப் பெற்று வருகிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் எந்தக் காலத்திலும் மிகப் பெரிய போராட்டத்தையோ, அல்லது வேலை நிறுத்தத்தையோ, தங்களுடைய கோரிக்கைகளுக்காக, இந்த 25 ஆண்டுகளில் செய்ததில்லை. ஏதோ சங்கம் வைத்திருக்கிறார்களே தவிர, தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட்டங்கள் நடத்தியதில்லை.

அவர்களுக்கு என்ன குறைகள் இருந்தாலும் சரி, நல்ல விதமாகச் சர்க்கார் முன்னிலையில் முதலாளிகளுடனும் சர்க்காருடனும் தொழிற் சங்கங்கள் பேசித்தான் நல்ல ஒரு முடிவு காண்பது வழக்கம். அந்த முடிவைத்தான் மைசூர் மாநிலத்திலும், கேரளாவிலும் கடைபிடித்து வந்தார்கள். இந்த மாநிலத்தில் என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதைத்தான் அண்டை மாநிலங்களில் கடைப் பிடித்து வந்தார்கள். ஆனால் சில காலமாகத் தமிழ் நாட்டுக்கும் இதர இடங்களுக்கும் சேர்ந்து தோட்டத்து முதலாளிகள் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அந்த முதலாளிகள் சங்கம் பக்கத்து மாநிலத்தில் ஒரு வருஷத்திற்கு முன்னதாக ஒரு முடிவெடுத்து அதன் படி தினசரி 28 பைசா அதிகக் கூலிக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அதிலி ருந்து நாமும் இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு தடவை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், அன்றையதினம் அவசர மாகத் தேர்தல் காலத்தில் அதைப்பற்றி பேசியபோது, ஏதோ சர்க்கார் சொல்லி விட்டதன் காரணமாக, நிவாரணமாக ஏதாவது கொடுப்போம் என்ற எண்ணத்தில் ரூபாய் 15 கொடுத்தார்கள். பிறகு முடிவு செய்துகொள்ளலாம் என்று அப்பொழுது சொல்லப்பட்டது. இன்றைக்கும் கூட கோவையில் உதவித் தொழிலாளர் கமிஷனர் அவர்கள் எல்லா தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் முதலாளிகளையும் கூப்பிட்டு வைத்து பேசிக்கொண்டிருக் கிறார்கள். நேற்று தொழிலாளர் அமைச்சர் அவர்களைப் போய்ப் பார்த்த போது சொன்னார்கள், நல்ல விதமாக முடிக்க முடியவில்லையென்றால், உடனடி யாக நல்ல முடிவுக்கு நாம் வருவதற்கு உண்டான முயற்சி எடுப்பதாகச் சொன்னதே பெரிய ஒரு ஆறுதலைக் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல செய்தியாகும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் தொழிலாளர் குறைகளை மட்டும் வற்புறுத்து வதற்குப் பதிலாக வேறு சில எண்ணங்களையும் வேறு சில காரியங்களையும் உள்ளேபோட்டு, தொழிலாளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்த முயற்சி நடைபெறு கிறது. அதையும் நேற்று அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் மிகுந்த குறை வான கூலியை வாங்குகிறவர்கள். அந்த அளவு குறைந்த கூலி வேறு எந்தத் தொழிலாளியும் வாங்குவதில்லை. எட்டு மணி நேரம் காற்றில் பனியில் குளிரில் வேலை செய்து கஷ்டப்படுகிறார்கள். வெளிநாட்டுச் செலாவணியை சம்பா தித்துத் தருகின்ற மிகப் பெரிய கௌரவமான இந்தத் தொழிலில் வேலை செய் கிறவர்களுக்கு மிகக் குறைந்த கூலி. இன்றைக்கு இரண்டு ரூபாய் தொண் ணூற்று ஐந்து பைசா ஒரு காப்பித் தோட்டத் தொழிலாளிக்குக் கொடுக்கப் படுகிறது. அதே சமயத்தில் பக்கத்திலுள்ள தோட்டத்தில் (கேரள தோட்டத் தில்) தொழிலாளிகளுக்கு இதே முதலாளிகள் ரூ. 3.60-க்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான பிரித்துவிடும் கொள்கை இருக்கிறது.

அவர்களைத் தட்டிக் கேட்க முடியாத அளவுக்குச் சூழ்நிலை இருப்பதாக நினைத்துத்தான் அவர்கள் அப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். நாமும் இதைப் பல காலமாகச் கொல்லிக்கொண்டேயிருக்கிறோம். ஆகவே தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் 5 ரூபாய் இல்லாமல் வாழ முடியாது. குறைந்த சம்பளம் ஐந்து ரூபாயாவது கொடுக்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமையும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இதைப் பற்றிக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசனை செய்து முடிவு செய்வதாகச் சொல்லியிருக்கி றார்கள். மாதத்திற்கு 150 ரூபாய் வருமானம் இல்லாமல் வாழ முடியாது தோட்டத் தொழிலாளி. வீடு தருகிறோம், தண்ணீர் கொடுக்கிறோம், விறகு கொடுக்கிறோம் என்று முதலாளிகள் கதை சொல்கிறார்கள். ஆனால் உண்மை யில் விறகு எங்காவது எடுக்கப் போனால், அதற்காகப் பலநாள் சஸ்பெண்ட் செய்து ஹைகோர்ட் வரை முதலாளிகள் போகிறார்கள், வேலையில்லாத சமயத் தில் சர்க்கார் காட்டில் பொறுக்கினால் தான் விறகு உண்டு இப்படிப் பல வித மாகச் சொல்லி முதலாளிகள் ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

ஆகவே தோட்டத் தொழிலாளர்கள் லட்சக் கணக்கில் இருந்தபோதிலும் கூட, அவர்கள் நகரத்திலில்லை, காட்டுக்குள் இருக்கிறார்கள். போராட்டம் எல்லாம் நடத்த முடியாது. அந்த அளவுக்கு அவர்களை விட்டு விடக் கூடாது. தொழிலாளர்களிலேயே மிகத் தாழ்வான நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். எந்தத் தொழிலாளரை எடுத்துக்கொண்டாலும், குறைந்தது மூன்று நான்கு ரூபாய் கூலியாவது கிடைக்கின்றது. இந்தத் தோட்டத் தொழிலாளர் நிலை தான் மிகப்பரிதாபகரமான நிலை. அதைப் போல போனஸ் பிரச்னையில் 8¼ சதவிகிதம் இந்த சர்க்கார் ஒத்துக் கொண்டிருக்கிறது. இதற்கான சட்டத்தை மத்திய சர்க்கார் கொண்டுவர காலமாகும். ஆனால் சட்டம் வருவதற்கு முன்னாலே போனஸ் பிரச்னையினால் தொழில் அமைதிக் குறைவு ஏற்படப்போகிறது. ஆகவே இதற்காக மாநில சர்க்கார் ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டாவது சட்டம் கொண்டுவரும் வரையில், குறைந்த பட்ச போனஸ் 8¼ சதவிகிதம் கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தோட்ட தொழிலாளர்கள் பல பேர் பல காலத்திற்கு முன் மலைப் பிரதேசங்களுக்குக் கங்காணிகளால் கொண்டுபோகப்பட்டார்கள். இப்போது அப்படிப்பட்டவர்கள் 20—30 வருஷம் வேலை செய்த பிறகு, அந்த இடத்தை விட்டு வெளியே போய் வாழ வகை தெரியாதவர்கள். அந்த மலைப் பிரதேசத்தை விட்டு வெளி ஊரே உலகமே தெரியாதவர்கள். அப்படிப்பட்ட வர்களுக்கு ஊரில் வீடு வாசல் கிடையாது. இன்றைய தினம் மலைப் பிரதேசங் களில் சர்க்காருக்குச் சொந்தமான ஏராளமான பூமி இருக்கிறது. முதலாளி

களிடத்திலும் ஏராளமான பூமி இருக்கிறது. அப்படிப் பல ஆண்டுகள் தோட்டத் தொழிலாளியாக வேலைசெய்யாதவர்கள் குடிசை கட்டுக் கொள்ள வாவது 2 சென்ட், 3 சென்ட் நிலம் என்று அவர்களுக்கு பூமியைக் கொடுத் தால், அதை வைத்து தங்களுக்கு ஒரு வீட்டை அமைத்துக்கொண்டு தங்களு டைய வாழ்க்கையை நடத்த மிக வசதியாக இருக்கும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னையில் வேறு சில கஷ்டங்களும் இருக்கின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே கொடுத்துவந்த கூலியைப் பொறுத்த வரையில், பல தடவை, "நாம் ஒரு அக்ரிமண்ட் ஒரு ஒப்பந்தம் செய்து இருக்கிறோம், ஆகவே தொழிலாளர்கள் இப்போது சொல்வதை எந்த விதத்திலும் ஏற்கமுடியாத ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது" என்று பல தடவை அமைச்சர் அவர்களிடத்தில் முதலாளி கள் முறையிட்டிருக்கிறார்கள். உலகத்தில் இருக்கிற பல பெரிய ஒப்பந்தங்கள் மீறப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் மூன்று வருஷத்திற்கு முன்னால் ஒப்பந்தம் செய்தார்கள். இப்படிப்பட்ட விலைவாசிக் கஷ்டம் ஏற்படுமென்று நினைத்து, அதற்குத் தக்க வகையில் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று இன்றைய தினம் மதுரையில் நடந்த ஒரு கூட்டத்தில் மந்திரி அவர்களே பேசியிருக்கிறார்கள். எல்லாத் தொழிற் சங்கங்களும் கையெழுத்துப் போட்டிருக்கின்றன. வருஷத்திற்கு பத்து பைசா அதிகமாக்குவது என்பது அடுத்த 3 வருஷத்திற்கு இந்த விதத்தில் உயர்வு என்று ஒப்பந்தம். அன்றைக்கு இப்போதிருக்கிற நிலைமை யில்லை. அதே முதலாளிகள் பக்கத்திலுள்ள கோளத் தோட்டத் தொழிலாளர் களுக்கு 28 பைசா உயர்வு தருவதாக ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். ஒன்று தமிழகத்தில் செய்திருக்கிற ஒப்பந்தத்திற்கு மாறுக ஒன்றும் செய்துகொள்ள முடியாது என்று சொல்லியிருக்க வேண்டும். அல்லது இங்கே இருப்பவர் களுக்கும் அதே அளவு உயர்வு கொடுக்க வேண்டுமென்ற விதத்தில் முதலாளிகள் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். இதுவெல்லாம் ஆனா ஏமாற்றக்கூடிய வேலை. முதலாளிகளின் மிரட்டுகிற வேலை ஜாஸ்தி. காலை 5 மணியிலிருந்து 9 மணி வரை உழைக்க வேண்டும். அவர்களுக்காகப் போராட நிறைய சக்தி இருக்கிறது. ஆனால் எங்களுக்கு ஆசையில்லை. தொழிலாளர்களுக்காக சங்கம் அமைத்து 30 வருஷமாகப் போராட்டம் நடத்தி, ஒரு காலணா வாங்கியது கிடையாது. போராட்டமில்லாமல் வாங்கியிருக்கிறோம். போராட்டம் என்றால், தொழிலாளிக்கும் கஷ்டம், முதலாளிக்கும் கஷ்டம். போராட்டம் முடிந்தால், அதன் பிறகும் பல காலம் வரை உற்பத்தி பாதிக்கப்படும். மற்றத் தொழிற்சாலை களில் இருப்பதைவிட மிகக் கஷ்டமான நிலையை உண்டு பண்ணும். போராட்ட

காலத்தில் மிகக் கொடூரமான செய்கைகள் ஏற்படக் கூடும் என்பதற்காகத் தான் இதைப்பற்றி நேரடியாகப் பேசி நல்ல முடிவை ஏற்படுத்தித் தர வேண்டு மென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். போராட்டம் ஏற்பட விடக் கூடாது. போராட்டம், போராட்டம் என்று சொல்லிக் கொண்டேயிருக் கிறோம். போராட சக்தி இல்லாதவர்கள் எப்படியாவது இருந்து விட்டு போகட்டும் என்று இல்லாது, சுமுகமான முறையில் அவர்கள் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று சர்க்காரையும் தொழிலாளர் அமைச்சர் அவர் களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாக் காரியங்களிலும் அமைச்சர்கள் தலையிட்டு, பல தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்த்துவைத்துக் கொண்டிருக்கும் போது, இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் குறைகளைக் கவனிக்காமல் விட்டு விட்டால், கஷ்டம் நேரிடும். அவர்களும் இரண்டு லட்சம் பேர்கள் இருக் கிறார்கள். அமைச்சர் அவர்கள் நேற்றைக்கு ஆறுதல் சொன்னார்கள். நல்ல ஒரு முடிவைச் செய்து கொடுப்பதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதைத் தெரிவித்து நேற்றே கடிதம் எழுதியிருக்கிறோம். "உண்ணாவிரதம், சக்தியாக் ரகம் பண்ண வேண்டாம். அமைச்சர் அவர்களே பொறுப்பேற்றுக்கொண்டு, கமிஷனருடன் கலந்து நல்ல முடிவை ஏற்படுத்த வழி வகை செய்வதாக நேரடி யாகச் சொன்னதன் பேரில் எதுவும் செய்யக் கூடாது" என்று நேற்று அவர் களுக்குத் தகவலும் கொடுத்திருக்கிறோம். "என்னவோ மூன்று ரூபாய் கொடுக் கிறோம். இன்னும் 10 பைசா கொடுக்கிறோம்", என்கிறார்கள். நாங்கள் சொல்லுவது 5 ரூபாய்க்குக் குறைவில்லாமல் கொடுக்க வேண்டும். இல்லா விட்டால், வாழ முடியாது. அதுவும் ஞாயிற்றுக் கிழமை வேலை செய்யாது கொடுக்க வேண்டும். ஆகவே, ஞாயிற்றுக் கிழமைக் கூலியையும் சேர்த்து, ஒரு தோட்டத் தொழிலாளிக்குக் குறைந்தது 150 ரூபாய் ஒரு மாதம் இருந்தால் தான், அந்தத் தொழிலாளி வாழ்க்கை நடத்த முடியும். நல்ல விதமாக அதற்கு இந்த சர்க்கார் அவசியம் வழி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. எஸ். ஜெயராம செட்டியார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1971-72ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீட்டின் பேரில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வந்திருக்கிறேன். வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்திற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் ஒரு வாரத்திற்குள் பருத்தியின் விலை மிகவும் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது இரண்டு தினங்களாக மணிலா எண்ணெயின் விலையும் குறைந்துவிட்டது. இன்று காலையில்கூட பத்திரிகையில் பார்த்தால், குண்டூரில் 27 கோடி ரூபாய் மிளகாய் வற்றல் விற்காமல் தேக்கமேற்பட்டு, குவிண்டாலுக்கு 100 ரூபாய் குறைந்துவிட்டதாகக் காணப்படுகிறது. எங்கள்

ஊரிலிருந்து 100 குவிண்டால் வற்றல் மார்க்கெட்டுக்கு வந்ததை மார்க்கெட்டில் வியாபாரிகள் வாங்க மாட்டோமென்று கட்டுப்பாடாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் என்ன செய்வதென்று விருதுநகர் வியாபாரிகள், நான் எங்கள் ஊரின் மார்க்கெட்டிங் கமிட்டியின் தலைவராக இருக்கிற காரணத்தால், கேட்டு எனக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள். ஆதலால் இப்பொழுதெல்லாம் வாணிகப் பொருள்களில் நாட்டம் செலுத்தி சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் போய் நட்டம் ஏற்படுமோ என்று அஞ்சுகிறார்கள். இந்த வியாபாரத்திற்குப் பதிலாக கிராமங்களில் மாடுகளை வாங்கியாவது பிழைக்கலாம் என்ற எண்ணம் வந்துவிட்டது. அதுவும் ட்ராக்டர்கள் மூலமாக உழுவதால், அந்த மாடுகள் கூட தேவையில்லையென்று ஏற்பட்டுவிட்டது. அதனால் கறவை மாடுகளை வாங்கியாவது பால் விற்று பணம் சம்பாதிக்கலாம் என்ற ஒரு எண்ணம் இப்பொழுது வியாபாரிகளிடத்தில் வந்துவிட்டது. ஆதலால் வாணிகப் பொருள்களை நல்ல முறையில் விற்க ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் மத்திய அரசுக்குக் கடிதப் போக்குவரத்து நடத்தி ஒரு ஸ்டெபிலிசேஷன் பிரைஸ் அல்லது 'ஃப்ளோர் பிரைஸ்' என்று நிர்ணயித்தாலொழிய, இந்த விவசாயிகளுக்கு நிம்மதி ஏற்படாது என்று நினைக்கிறேன். ஆகையால் இதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்கு வங்காளத்திலிருந்து வந்திருக்கிற கைதிகளைக் கோயம்புத்தூரிலும், கடலூரிலும் உள்ள சிறைகளில் வைத்திருப்பதற்காக ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு விஷயம். இது போல் மற்றத் திட்டங்களுக்கும் இன்னும் புதுத் திட்டங்களுக்கும் பொதுப் பணித் துறையிலே ஏராளமான ரூபாய்கள் செலவழிப்பதற்கு இந்த இறுதி துணை மதிப்பீட்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விருதுநகரிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள எங்கள் ஊரில் ட்ரங்க் ரோட்டிலிருந்து 3 பர்லாங் தூரத்தில் ஒரு ரோடு இருக்கிறது. இதை முன்பிருந்த பஞ்சாயத்து யூனியன் நல்ல முறையில் செப்பனிட்டு வந்தது. இப்பொழுதிருக்கிற பஞ்சாயத்து யூனியனைக் கேட்டால், "எங்களிடம் பணமில்லை" என்று கூறுகிறார்கள். ஆதலால் இந்த ரோடுகள் பல காலமாகச் செப்பனிடப்படாமலே இருக்கின்றன. ஆசிரியர்களின் குறைகளை ஏப்ரல் மாதத்திற்குள் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சொன்னது போல், இந்த ரோடையும் குறித்த காலத்துக்குள் செப்பனிட்டுத் தருவதற்காக அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு நிவாரணத் தொகை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் பொதுவாக வேளாண்மைத் துறையிலே நாம் நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டுவரப்போகிறோம். இதற்காக ஒரு சட்டத்தையும் கொண்டுவரப் போகிறோம். மத்திய சர்க்காரும் இதில் சேர்ந்து நல்ல சீர்திருத்தத்தைக் கொண்டுவரப்போகிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி மத்திய சர்க்காரே இதை ஏற்றுக்கொள்ளும்போது, மாநிலத்தில் 'அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸ்' (வேளாண்மை வருமான வரி)க்காக ஒரு டிப்பார்ட்மென்ட் அவசியமா? இதை இந்த சர்க்கார் சிந்திக்க வேண்டும். நாமும் இந்தத் துறையைத் தனியாக வைத்துக்கொண்டால், கட்டுப்படியாக இருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

மொத்தத்தில் இந்தத் துணை மதிப்பீட்டில் நல்ல விதமாக விவசாயிகளுக்கு மின்வசதி அளிப்பதற்காக, முன்னேற்றகரமான காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. "வேஸ் அண்டு மீன்ஸ்"இல் (Ways and Means)மாற்றம் இருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதிரித் தொடர்ந்து செலவழித்து நல்ல முன்னேற்றங்களைக் கொண்டுவர வேண்டும். குறிப்பாக விவசாயிகள் நல்வாழ்வு வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மார்க்கெட்டிங் சொசைட்டியின் தலைவராக இருந்தபோது, வியாபாரத்தில் ஏதாவது தேக்கம் ஏற்பட்டுவிட்டது என்று தெரிவித்தால், உடனே ஒரு ஆளை அனுப்பி தேங்கியுள்ள பொருள்கள் விற்பனையாவதற்கு உதவிகள் பல செய்வார்கள். இப்பொழுது அமைச்சராகிவிட்டார். இருந்தாலும், இது போன்ற சமயங்களில் உதவிக்கு வரும்படி இந்த சமயத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உணவு அமைச்சரும் கூட இதற்குத் துணைபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். "ஃபுட் கார்ப்பரேஷன்" என்று சொல்லி நெல்லை மட்டும் வாங்குவதோடு நில்லாமல், மற்றப் பொருள்களையும் அந்த "ஃபுட் கார்ப்பரேஷன்" மூலமாக வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தரதிருஷ்ட வசமாகவோ, அதிருஷ்டவசமாகவோ ஆறு பைலட் சொசைட்டிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. எங்கள் மார்க்கெட்டிங் சொசைட்டியையும் ஒரு பைலட் சொசைட்டியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று விலைவாசிகள் இறங்கிக் கொண்டு போவதைப் பார்த்தால் வாங்குகின்ற பொருள்களுக்கு நட்டம் ஏற்பட்டுவிட்டால், என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த அளவுக்கு இன்று நஷ்டம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. அப்படி நட்டம் ஏற்படாதபடி, வியாபாரிகள் வியாபாரத்தை நல்ல முறையில் நடத்த, அந்த வியாபாரிகளுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையில், அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதி நிலை இறுதி துணை மதிப்பீட்டை மனதார வரவேற்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான இந்த இறுதி துணை மதிப்பீட்டின் பேரில் நடக்கும் விவாதத்தில் என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏறத்தாழ 117 கோடி ரூபாய்க்கு வரவு செலவுக் கணக்குகளை இங்கே முதலமைச்சர் அவர்கள் நேற்று சமர்ப்பித்தார்கள். அதிலே முக்கியமாகத் தமிழகத்திற்கு வேண்டிய இன்றியமையாத சில சீர்திருத்தங்களுக்காக தொகை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. அதிலே பொதுப் பணித் துறையில் ஏறத்தாழ 130 இலட்ச ரூபாய் புதிய பதவிகளுக்காகவும் புதிய பணிகளுக்காகவும் ஒதுக்கியிருப்பதாக இன்றைக்குக் கணக்கிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்ற முறை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட வகையிலே மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களை அவருடைய மேலான கவனத்திற்கு நாங்கள் கொண்டுவந்திருந்தோம். அதாவது, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 9 வட்டங்களில் இரண்டு 'டிவிஷன் என்ஜினியர்கள்' என்ற பெரிய அதிகாரிகளை அரசுத் துறையிலே நியமித்திருக்கிறார்கள். அதிலே ஒருவருக்கு மூன்று தாலுகா வீதமும் மற்றொருவருக்கு 6 தாலுகா வீதமும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இன்னும் ஒரு அதிகாரியை நியமனம் செய்து ஆளுக்கு மூன்று தாலுகா என்ற விதத்தில் பிரித்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தோம். இதை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிக விரைவிலேயே செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

பொதுவாக, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் இரண்டுக்கும் சேர்ந்தோ அல்லது ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியாகவோ ஒரு அதிகாரி இருப்பதுதான் வழக்கமாக இருக்கிறது. ஆனால் பொதுப் பணித் துறையைப் பொறுத்த அளவில், மதுரையையும், திருச்சியையும் சேர்த்து ஒரு சர்க்கிளாகவும், இராமநாதபுரத்தையும், திருநெல்வேலியையும் சேர்த்து ஒரு சர்க்கிளாகவும் அமைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே மற்ற இலாகாக்களில் எப்படி மதுரை-இராமநாதபுரம் ஒரு சர்க்கிளாக இணைந்திருக்கிறதோ, அதைப் போல, பொதுப் பணித்துறையிலும் நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில், மாவட்ட எஸ்.ஈ. திருநெல்வேலியில் இருப்பதற்குப் பதிலாக மதுரையில் இருக்கும்படி செய்ய வேண்டும். மதுரை-திருச்சி என்று உள்ள சர்க்கிளை மதுரை-இராமநாதபுரம் என்று ஒரு தனி சர்க்கிளாக உண்டாக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொன்று முக்கியமாக குறிப்பிடத்தக்கது, மத்திய அரசாங்கத்திற்குத் தர வேண்டிய வட்டித் தொகையைக் காலதாமதமில்லாமல் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ ரூ. 20 கோடி இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கொள்கையளவில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளை, குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் தமிழ் நாட்டு அரசாங்கத்தைவிட சிறந்த அரசாங்கத்தை எங்கேயும் பார்க்க முடியாது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அதை நிறைவேற்றுவதில் தலைசிறந்த மாநிலம் என்று தமிழ்நாடு பெயர் வாங்கியிருக்கிறது. அதற்காக மத்திய அரசு 50 சதவிகிதம் பணம் ஒதுக்கினால், இங்கேயுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவத் துறையில், புதிய மருத்துவ மனைகளைத் தொடங்க வசதியாக இருக்கும்.

அதைப் போலவே, பசுமைப் புரட்சியில் நல்ல மாற்றத்தை இந்த மாநிலம் ஏற்படுத்தியிருக்கிறது. வேறு மாநிலங்களிலிருந்த மூன்பெல்லாம் அரிசி கொண்டுவந்த வழக்கத்தை மாற்றி, திராவிட மூன்னேற்றக் கழகம் பசுமைப் புரட்சி என்ற திட்டத்தைப் புகுத்தி மக்களிடையே புரட்சிகரமான எண்ணங்களைப் புகுத்தி, புதிய உரங்கள், நவீன கருவிகள் ஆகியவற்றை உபயோகப் படுத்தி உற்பத்தியைப் பெருக்கி, மத்திய அரசுக்கு அரிசியை அனுப்பக்கூடிய நிலைமையை நாம் அடைந்திருக்கிறோம்.

அடுத்து, யுத்த நிதியை எடுத்துக்கொண்டால், மற்றெல்லா மாநில முதலமைச்சர்களை விட நமது மாநில முதலமைச்சர் ஒரு அதிகக் குறியை நிர்ணயித்து, அதனைத் திரட்டிக் கொடுப்பதற்கேற்ற முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக மத்திய அரசினுடைய கரத்தை வலுப்படுத்த, குறிக்கோளை நிறைவேற்ற தமிழக அரசு எவ்வளவோ பாடுபட்டுக்கொண்டு வருகிறது. இருந்தாலும் மத்திய அரசு தமிழ் நாட்டின் நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணிக்கிறது என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது. தமிழ் நாட்டு மக்களின் மூலம், அவர்கள், ஒரு வாக்கு சட்ட சபைக்கு என்றும், இன்னொரு வாக்கு பாராளுமன்றத்திற்கும் என்ற அடிப்படையில் அளித்த வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சென்று, அங்கே டெல்லியிலே அமைச்சர்களாக இருக்கக்கூடியவர்கள் தங்கள் நாடு தமிழ் நாடு, என்பதையே மறந்துவிட்ட நிலையில், இந்த மாநிலத்தின் கருத்துக்களையெல்லாம் அங்கே வலியுறுத்தத் தவறிய நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு வேதனையடையாமல் இருக்க முடியாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மற்றும் பல துறைகளுக்குத் தேவையான பணம் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது என்று கூறி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த 1971-72-ஆம் ஆண்டு இறுதி தூணை மதிப்பீடுகளிலேயே முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, ரூ. 116.64 கோடியில் மத்திய அரசுக்கும் ரிசர்வ் பேங்குக்கும் சேர்த்து ரூ. 86.46 கோடி கொடுக்க வேண்டும் என்பது தான். இதை முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள். இந்த மத்திய அரசினிடமிருந்து வாங்கியிருக்கிற கடனையும், ரிசர்வ் பேங்கிலிருந்து வாங்கிக்கொள்கிற பணத்தையும் திருப்பிக்கொடுக்கிற பிரச்னை நமது மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் ஏற்பட்டு வருகிறது. இது ஒரு ஆர்ப்பாக்கியமான நிலை என்பது நாமெல்லோரும் அறிந்த ஒன்றாகும். மைசூர் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. தர்மவீரா அவர்கள் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசும்போது, மத்திய அரசோடு நான் போராடப் போகிறேன் என்று சொல்லி, அதற்குப் பின்னால் அவரை டெல்லிக்கு வரச்செய்து, அங்கு அவர் "நான் அம்மாதிரிச் சொல்லவேயில்லை" என்று மன்னிப்புக் கேட்கின்ற தோரணையில் பேசி, அதற்குப் பின்னாலும், நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே சமயம், பத்திரிகையில் சொல்கிறார்கள், தர்மவீராவின் பதவி நீக்கம் செல்லாது. ஜனாதிபதி ஒருவரைக் கவர்னராக ஐந்தாண்டு காலத்திற்கு நியமிக்கிறார் என்றால், அந்த ஐந்தாண்டுக் காலமும் அவர் பதவியில் இருக்க வேண்டும். இரண்டாண்டுகள் இருந்துவிட்டு, அவரை மத்திய அரசு ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிச் சொன்னாலோ, அல்லது அவரே உடல்நிலை காரணமாக வெளியே போய்விட்டாலோ, அவருக்கு பாக்கி மூன்றாண்டுக் காலத்திற்கும் மத்திய அரசு சம்பளம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர் கோர்ட்டுக்கும் போகலாம் என்கிற அளவுக்கு திரு. தர்மவீராவின் பிரச்னை வந்திருக்கிறது. இது 'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்த மாதிரி இரண்டு கவர்னர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவர் திரு. தர்மவீரா. இன்னொருவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. திரு. தர்மவீரா இன்னும் மூன்றாண்டுக் காலம் நியமனத்தின்படி பதவியில் இருக்கலாம் என்றும், அவர் இதற்காகக் கோர்ட்டுக்குப் போகலாம் என்றும் அது எழுதியிருக்கிறது. அவர் அப்படிக் கோர்ட்டுக்குப் போனால், அது அரசாங்கத்திற்குப் பாதகமாக, ரசாபாசமான செய்தியாகப் போய்விடக் கூடும் என்று கூட செய்தி வந்திருக்கிறது. மாநிலங்கள் ரிசர்வ் பேங்கினிடம் வாங்குகிற ஓவர்டிராப்ட் எவ்வளவு பெரிய பிரச்னையாக மாறியிருக்கிறது என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். அவருக்குப் பதிலாக வந்திருக்கிற சுகாதியா கூட சென்ற திங்கள் மைசூரில் பேசுகிறபோது, இந்தப் பிரச்னை மைசூருக்கு மட்டும் பொருந்துகிற பிரச்னை அல்ல, எல்லா மாநிலங்களுக்குமான பொதுவான பிரச்னை என்று பேசியிருக்கிறார்கள். அதைத்

தான் நானும், இது தமிழ் நாட்டிற்கு மட்டுமான பிரச்னை அல்ல, எல்லா மாநிலங்களுக்குமான பொதுப் பிரச்னை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட மிக முக்கியமான பிரச்னையில், இதுபற்றி மத்திய அரசு மாநில அரசுகளோடு கலந்தாலோசிப்பது மிக அவசியம் என்று தெரிவு படுத்த விரும்புகிறேன்.

என்னென்ன காரணத்தால் எல்லாம் இது மாதிரி மாநிலங்களெல்லாம் மத்திய அரசாங்கத்திடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதைப் பற்றியெல்லாம், மிகத் தெளிவாக, ராஜமன்னார் கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் முக்கியமாக, மூன்று காரியங்களுக்காக மத்திய அரசு மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்றெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிகமாக மைய அரசையே நம்பியிருப்பதற்குரிய மூல காரணங்களில் (1) மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதிகளைத் திரட்டுவதில் உள்ள வாயில்கள் மிகுந்தனற்றதாகவும் பற்றாக்குறையாகவும் உள்ளன; (2) மாநிலங்களுக்கு ஒதுக்கியுள்ள அலுவல்கள் விரிவடைந்து வரும் பொறுப்புக்களைக் கொண்டதாகும். குறிப்பாக பேரார்வத்துடன் வளங்கெழு திட்டங்கள் தீட்டப்படுகிற சந்தர்ப்பங்களில் செலவு பெருகிவரத் தான் செய்யும்; (3) தேசிய நிதித் திட்டம் தயாரிப்பதற்கு முக்கியமான வாயில்கள் அயலநாட்டு உதவியும், பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமுமாகும். இவை இரண்டும் மைய அரசைப் பலப்படுத்துமேயொழிய மாநில அரசு வாயில்களைப் பலப்படுத்தாது. ஆக, இத்தகைய துரதிருஷ்டவசமான நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[Thirumathi Manjubhashini Vice-Chairman in the Chair.]

அது மட்டுமல்ல. மத்திய அரசால் அமைக்கப்பட்ட அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் என்று சொல்லப்படுகிற நிர்வாக சீரமைப்புக் குழுவும், மைய அரசையே பெருமளவுக்கு நம்பியிருப்பதால், மாநில அரசாங்கங்களின் பொறுப்பின்மை வளரவும், திறமையற்ற நிர்வாகம் ஏற்படவும் வழி உண்டாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. மாநிலங்களிலுள்ள அரசாங்கங்கள் சரியான நிர்வாகம் நடத்தாமல் இருப்பதற்குக் கூட மத்திய அரசேதான் காரணம் என்றும் அப்படி இருப்பதானது சரியானதல்ல என்றும் அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதே போல, வரிப் பங்கீட்டைப் பொறுத்த வரையிலும், இன்றைக்கு ஒரு கருத்தினை திரு. அஜித் பிரசாத் ஜெயின் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி வாயில்கள் அதன் நிர்வாகப் பொறுப்புக்களுக்கு இணையாக இருக்க வேண்டும் என்னும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் புறக்கணிக்கப்படுகிறது. இதுபற்றி மத்திய அரசு மாநில அரசுகளுடன் பேச வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தியிருக்கிறார். இதைப்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [28th March 1972

பற்றி திரு. சந்தானம் அவர்கள் கூட சுயராஜ்யா பத்திரிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது :—

"The overdrafts of the State Governments are analogous to deficit financing by the Centre ....."

மத்திய அரசு அதிகமான அளவு நோட்டு அச்சடிப்பதில் ஈடுபடுமேயானால், அது மாநில அரசுகள் ரிசர்வ் பேங்கிடமிருந்து அதிக ஓவர்டிராப்ட்கள் வாங்குவதற்கு வழிகோலுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

". . . and if the latter claims the right of unlimited deficit financing, the States are bound to rebel against the prohibition of overdrafts."

மத்திய அரசு மட்டும் தன்னுல் முடிகிற அளவுக்கு நோட்டை அச்சடித்துவிட்டு, மாநில அரசுகள் ஓவர்டிராப்ட் வாங்கக்கூடாது என்று சொல்லுமானுல், மாநில அரசுகள் மத்திய அரசை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும் என்றும்,

"If deficit financing by the Centre increases prices and forces the State Governments to pay higher dearness allowance or incur more expenditure on its purchases, the responsibility is that of the Centre."

மத்திய அரசு இது மாதிரி அதன் போக்கிற்கு நோட்டு அச்சடித்துக்கொண்டு போகிற காரணத்தால், பணவீக்கம் ஏற்பட்டு, விலைவாசி அதிகரிப்பதன் காரணத்தால், இங்கே உள்ள சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டி நேரிடுவதால், மாநில அரசாங்கத்தின் செலவினங்கள் கிட்டத்தட்ட 7, 8% என்று அதிகரித்துக்கொண்டே போகிற நிலையில் மாநில அரசுக்கு மத்திய அரசின் போக்கினுல் துயரமான நிலை உருவாக்கப்பட்டு வருகிறது என்றும் அதற்கு மத்திய அரசுதான் காரணம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனவே, மத்திய அரசு ஒரு தீர்மானமான முடிவுக்கு வர வேண்டும். மத்திய மாநில அரசுகளின் பொருளாதார உறுதிகளைக் குறித்து மாநில மந்திரிகளுடன் கூட இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்பதை நான் முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இப்படிப்பட்ட நிலைகளை மாநில அரசுகளுடன் பேசி விவாதிப்பதற்கு மத்திய அரசு முன்வருமா என்று கூட சந்தேகப்படும்படியான நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றுல், இந்தப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்தபோது, தேர்தல் முடிவுகள்

28th March 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் நான் டெல்லியில் இருந்துகொண்டு அந்தச் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, அகில இந்திய ரீதியில் 14 மாநிலங்களில் இந்திரா காந்தி அம்மையாருடைய ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையையும் பார்க்கும்போது, இனிமேல் இப்படி மாநிலங்கள் சொல்லக் கூடிய கருத்துக்களையெல்லாம் அவர்கள் கேட்பார்களா என்ற நிலைமை உருவானதை நான் உணர்ந்தேன்.

அது மட்டுமல்ல. அவர்களுடைய மாநிலங்களில் இருப்பவர்களைக் கேட்டால் கூட, அந்த மாநிலங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் ஒருவிதமான மானியமும், வேண்டாதவர்களாக இருந்தால் இன்னொரு மானியமும் கொடுக்கக்கூடிய சூழ்நிலை, கொடுக்கக்கூடிய அவசியம் ஏற்பட்டால், உங்களுக்கு நாங்களும் வேண்டியவர்கள்தான் என்று சொல்லக்கூடிய அவசியம் எப்படி மென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரிடம் இந்த நிலைமை இருக்கிற நேரத்தில், நான் சொல்லிக்கொள்வது மாநில அரசிலும் செலவுகளை ஓளவு கட்டுப்படுத்த வேண்டும். செலவினங்களைப் பொறுத்த வரையில், மற்ற மாநிலங்களைவிட அதிகச் செலவினங்கள் நம்முடைய மாநிலத்தில் ஏற்படுகின்றன. மற்ற மாநிலங்களில் 30% வருகிற வருமானத்தில் செலவு என்றுல், அதைவிட அதிகமான சதவீதம் நம்முடைய மாநிலத்தில் 'அட்மினிஸ்டிரேட்டிவ் எக்ஸ்பெண்டிச்சர்' ஆக இருக்கிறது. ஆகவே மாநிலச் செலவுகளைப் பொறுத்த வரையில் இதற்காக ஒரு தனிக் கமிஷன் போட்டு, ஒரு 'அட்மினிஸ்டிரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன்' போட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் போட்டிருந்தால், இந்தச் செலவுகளை எப்படிச் சிக்கனம் செய்வது என்பதை அந்தக் கமிஷன் முதலாவதாக ஆராய்ச்சி செய்யச் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணங்கள் பல துறைகளில் இருக்கின்றன. வரவேண்டிய பணத்தைச் சிக்கிரமாக வசூல் செய்ய வேண்டிய காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இரண்டாவதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகச் செலவு என்று சொல்லுகிறபோது, ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அண்மையில் ஒரு மாநில அளவில் உள்ள அதிகாரியைப் பார்க்கப் போனேன். இரவு எட்டு மணி இருக்கும். தொலை பேசி மூலம் யாரோ ஒருவர் 'போன்' செய்தார். அந்த சமயத்தில் அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவருடைய பையன் வந்து மதுரையிலிருந்து 'டிரங்க் கால்' வந்திருக்கிறது, உங்களைக் கூப்பிடுகிறார் என்று சொன்னுன். 'சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன், சாப்பிட்டுவிட்டு பேசுகிறேன்' என்று பதில் சொன்னுர். 'போன்' செய்கிறேன் என்று காதில் விழுந்ததால், அது உள்ளூர் என்று தான் நினைத்தேன். திருப்பிப் பேசுகிறபோது மதுரைக்கு

'போன்' செய்தார். 'டிரங்க் கால்' என்றால், சாப்பிட்டுவிட்டுப் பேசினால் ரூ. 7, 8 ஆகுமே உடனே போனில் கேட்போம் என்றில்லாமல், இப்படிச் செய்கிறீர்களே என்று கேட்டால், இப்போது, மதுரை, டில்லி, பம்பாய், போன்ற இடங்களுக்கு 'போன்' செய்ய வேண்டுமென்றால் நேரடியாகவே 'போன்' செய்துகொள்ளலாம். 'டைரக்ட்' கால் என்று இருக்கிறது. எவ்வளவு செலவு செய்தாலும் கேட்க ஆள் இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஒரு அதிகாரிக்கு ரூ. 700 வருமானம் என்றால், கிட்டத்தட்ட போன் சார்ஜ் ரூ. 300, ரூ. 400 என்று குறிப்பிடுகிறார்கள். இதுபற்றி அரசு ஓளவுக்குப் பார்த்து, 'டைரக்ட் கால்' ரூ. 6-க்கு வராதா என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசுக்கு இது சாதாரணச் செலவு என்றாலும், குறிப்பாக எப்படிச் செலவாகிறது என்பதற்குத்தான் சொல்லுகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிடுவது சிறு சேமிப்பு பற்றியது. தற்சமயத்தில் எங்கு பார்த்தாலும், வசூலிக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், சிறு சேமிப்புக்கு எங்கும் வசூல் செய்கிறார்கள். தஞ்சாவூரில் சிறு சேமிப்புக்கு யாரும் பணம் போடுவதில்லை. சிறு சேமிப்பில் தனிப்பட்டவர்களைப் பார்த்து, ரூ. 4,000, ரூ. 5,000 போடச் சொல்லுகிறார்கள். அதில் என்ன வட்டி விகிதம் கொடுக்கப்படுகிறதென்றால், 4 லிருந்து 4½ வரை. தற்சமயத்தில் 12 லிருந்து 24 சதவிகிதத்துக்கு வெளியில் வட்டிக்குப் பணம் கொடுக்க ஆள் இல்லை. இந்த நிலைமையில் சிறு சேமிப்புக்குக் கொடுக்கத் தயாராயில்லை. குறிப்பாக, ஒரு நிலைமையைச் சொல்லுகிறேன். தஞ்சாவூருக்கு இரண்டு நாளைக்கு முன் போயிருந்தபோது, தஞ்சாவூர் தாசில்தார் வந்தார். சிறு சேமிப்புக்குப் பணம் கேட்டார். உங்களுக்கு 'டார்கெட்' ரூ. 5,000 என்று சொன்னார். நான் கேட்டேன். உங்களுக்கு என்ன 'டார்கெட்' என்று எனக்குக் கலெக்டர் டார்கெட் ரூ. 5 லட்சம் என்று நிர்ணயித்திருக்கிறார் என்று சொன்னார். "டார்கெட் என்று சொன்னாலும், அவரிடத்தில் சிறு சேமிப்பு பற்றி என்ன வட்டி விகிதம் என்பதைச் சொல்ல வேண்டும். அதைப் பற்றி ஏதாவது காகிதங்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டேன். எந்தவிதமான 'லிட்டரச்சரும்' இல்லை, வட்டி விகிதம் என்னவென்று தெரியாது, உங்களுக்கு வேண்டுமானால் உங்களுடைய ஆடிட்டரைக் கேட்டுக்கொள்ளுங்கள் என்றார். இவ்வாறு முக்கியமான நேரத்தில், 1½ மணி நேரத்தை, நான் பேச, அவர் பேச கலெக்டரிடம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சிறு சேமிப்பைப் பொறுத்த வரையில், ஏதோ ஒரு காலத்தில் மத்திய சர்க்கார் வசூல் செய்யச் சொல்லி நம்முடைய மாநிலத்திற்கு ஒரு பங்கு கொடுக்கிறார்கள் என்று செய்து வந்தோம். மத்திய சர்க்காருக்கு நாம் செலுத்தியது 4½%. இந்த மாநிலத்தில் எவரும் பணம் கொடுக்கத் தயாராயில்லை. வட்டி விகிதத்தை

உயர்த்தி நல்ல முறையில் சாதாரண மக்கள் கொடுக்கக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கூட மற்ற மாநிலங்களில் மாணவர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் ரூபாய் ஒன்று வீதம் வசூல் செய்கிறார்கள். அதைப் போல் நம்முடைய மாநிலத்திலும் மாணவர்களிடம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வசூல் செய்யலாம். கிராமப்புறங்களில் மாணவர் ஒன்றுக்கு ரூ. 1 அல்லது 2 வசூல் செய்யலாம். அதை விட்டுவிட்டு நகரங்களில் மார்ச் மாதம் 31-ந் தேதி முடிகிறது என்று பார்க்கிறவர்களை ரூ. 4,000, ரூ. 5,000, என்று கணக்குக் கேட்டு, சிறு சேமிப்பு ஒன்றும் இல்லாத நிலைமையில் எவரையும் கட்டாயப்படுத்துவது சரியல்லவென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, ஒன்று மருந்துத் தொழிலைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மருந்துகள் தயார் செய்வதற்கு ஆல்கஹால் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் தற்சமயத்தில் மருந்துத் தொழில் செய்கிற பெரிய நிறுவனங்கள் வேறு மாநிலங்களுக்குப் போகின்றன என்று சொல்லுகிறார்கள். சென்னையில் ஒரு பெரிய நிறுவனம் கிட்டத்தட்ட 200 பேரைக் கொண்டு இவ்வளவு பேக்டரியைத் திருச்சியில் ஆரம்பிக்க இருந்தார்கள். அதற்குள் பங்களூருக்குப் போக நினைக்கிறார்கள். இதற்கு முன்னால் கொடுத்த 32,000 லிட்டர் கொடுக்கிறார்கள். இதனால் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. தம்முடைய தொழிற்சாலைகள் வேறு மாநிலத்திற்குப் போகின்ற நிலைமை உருவாகி வருகிறது என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: அவைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு இறுதி துணை வரவு-செலவு மதிப்பீட்டை வரவேற்றுச் சில வார்த்தைகள் கூறுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்காக ரூ. 448 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் அதில் ரூ. 273 லட்சம் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதி சம்பளம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், நமது மாநிலத்தில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் 1-ம் தேதி சில பஞ்சாயத்து யூனியன்களிலும் இன்னும் சம்பளம் கொடுக்காத நிலை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 2 மாதங்களுக்கு முன்பு புளியங்குடி பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய ஆசிரியர்களும், திருச்செந்தூர் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் தங்களுக்கு 1-ம் தேதி சம்பளம் வரவில்லை என்று முறையிடு செய்து, அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே நமது அரசு பட்ஜெட்டிலே

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1972

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு 1-ம் தேதி சம்பளம் கொடுப்பதற்கு வழி வகைகளைச் செய்த பிறகும், சில பஞ்சாயத்து யூனியன்கள் அதை அமல் நடத்தாமல் ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு வெறுப்பை உண்டு பண்ணக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதையொட்டித்தான் நான் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை எல்லாம் அரசு பள்ளிகளாக மாற்றப்பட வேண்டுமென்று பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்று ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் கையில் இருக்கின்றன. நகர மன்றங்கள் கையில் இருக்கின்றன. எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் அவ்வாறு இருப்பதாக நான் சொல்லவில்லை. நமது மாநிலத்திலுள்ள 375 பஞ்சாயத்து யூனியன்களில் 275 அல்லது 300 பஞ்சாயத்து யூனியன்கள் ஆசிரியர்களைச் சரியாக நடத்தலாம். ஏதோ 75 பஞ்சாயத்து யூனியன்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக ஆசிரியர்களைக் குறைபாடாக நடத்துகிற பொழுது, தொல்லைகள் கொடுக்கிறபோது, அதையெல்லாம் காரணமாகக் கொண்டு, எல்லாப் பகுதியில் உள்ளவர்களும் ஒன்றுகச் சேர்ந்து இயக்க ரீதியாக அமைவதற்குக் காரணமாக அமைகிறது. மேலும் கல்வியின் நலனைக் கருதி, இந்தப் பள்ளிகளை நாம் பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் விடுவதைவிட அரசே நேர்டியாக நடத்துவது மிகச் சிறந்ததாகும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகிற வரையில், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு 1-ம் தேதி சம்பளம் கொடுக்கத் தவறிய பஞ்சாயத்து யூனியன்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அண்மையில் ஆசிரியர்கள் சார்பில் அவர்களுடைய இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசால் ஏற்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நமது அரசும் அதை உணர்ந்து அவர்களுடைய குறைகளை நீக்குகின்ற முறையில் ஒரு கமிஷனை நியமித்து இரண்டு மாதத்திற்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களும் அதை ஏற்றுக் கொண்டு அறிக்கையை எதிர்ப்பார்க்கிறார்கள். அதில் எல்லா ஆசிரியர்கள் சார்பிலும் தாது கோஷ்டியை அழைத்து அவர்களின் குறைகளைக் கேட்க வேண்டுமென்று கொல்லிக்கொள்ளுகிறேன். குறிப்பாக, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் அவர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஆரம்பச் சம்பள விகிதத்தில் வித்தியாசம் ரூ. 50 தான் இருந்தது. அதாவது பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 140, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 90. இப்போது செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு

28th March 1972] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

ரூ. 210, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 275. அதாவது ரூ. 65 அடிப்படைச் சம்பளத்தில் வேறுபாடு. இன்னும் மாற்றித் திருத்தியமைக்கிறபோது, இந்த விகிதத்திலே இப்போது இருக்கக் கூடிய நிலைமையை விட இன்னும் இடைவெளி அதிகப்படாத நிலையில், அவர்களுடைய சம்பளத்தைத் திருத்தியமைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனவே இதுபற்றி ஒரு முடிவு காண்பதற்கு முன்பு, அந்தக் கமிஷன் எல்லாத்தர ஆசிரியர்களும், தாங்களாகவே தூதுகோஷ்டியாக வர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்று ஒவ்வொரு நாள் ஒதுக்கி, எல்லாத் தரப்பு ஆசிரியர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிந்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் பதவிப் பாதுகாப்புத்தான் உயிர்ப் பிரச்சனையாக இருந்து வருகிறது. இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பல சந்தர்ப்பங்களிலே ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இவர்களுக்கென பாதுகாப்புச் சட்டம் ஒன்றை அரசு கொண்டுவரும் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். இப்பிரச்சனை ஆசிரியர்கள் மத்தியில் குழுநிலை ஏற்படுத்துவதால், இதனை விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களில் பலர் பல்கலைக் கழகத்தின் கீழ் நேரடியாக இயங்குகின்றார்கள். பல்கலைக் கழகங்கள் விஷயத்தில் அரசு தலையீடு இல்லாமலிருக்கின்றது. உண்மையிலேயே பல்கலைக் கழகங்கள் சுயாட்சி படைத்தவையாக இயங்குகின்றன. ஆனால் கல்லூரி ஆசிரியர்களுடைய சம்பளம் அனைத்தையும் அரசுதான் மான்யமாகக் கொடுத்து வருகின்றது. எனவே பல்கலைக் கழகங்களிலே இப்போது ட்யூடர்களாக வேலைபார்க்கும் பலர் தகுதி பெற்றிருந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல், என்றைக்கும் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் இருந்துவருகின்றன. இதை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபோது, அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள், இரண்டு ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியாற்றியவர்கள் மூன்றாவது ஆண்டின் தொடக்கத்தில் பதவியிலிருந்து நீக்கப்படாத சூழ்நிலையை உருவாக்குவதாக உறுதியளித்திருக்கின்றார்கள். அதற்கான சட்டம் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதோடு கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசு நேரடியாகச் சம்பளம் கொடுக்கலாம். இது ஒன்றும் அரசுக்குப் பெரும் தொல்லையாக

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1972

இராது என்பது என் கருத்து. இப்போதும் அரசுதான் சம்பளம் கொடுத்து வருகிறது. இதை நாம் 'டீச்சிங் கிராண்ட்' என்று கொடுக்கிறோம். மேலும் மாணவர்களில் இப்போது பி.யு.சி. படிப்பவர்களுக்கு அரசே வேண்டிய கட்டணங்களைக் கொடுத்துவிடுகிறது. பி.யு.சி. படிக்கும் மாணவரொருவருக்கு ஒரு டெர்மிற்கு ரூ. 80 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 240 நிர்வாகம் வசூலிக்கிறது என்றால், அந்தத் தொகையைக் கல்லூரி நிர்வாகத்திற்கு அரசே கொடுத்து விடுகிறது. இது போக இந்த 'டீச்சிங் கிராண்ட்' என்று கொடுக்கும்போது, அந்தக் கல்லூரியின் மொத்த வருமானம்-செலவு இவற்றில் பற்றுக்குறையில் மூன்றில் இரண்டு பங்கை அரசு கொடுக்கிறது. ஆனால் இந்த வரவு-செலவுக் கணக்கினைக் கொடுக்கும்போது கல்லூரி நிர்வாகம் எப்படிக் கணக்குப் போடுகின்றார்கள் என்றால், வரவு-கணக்கில் பி.யு.சி. மாணவரிடம் ஆண்டொன்றுக்கு ரூ. 240 அல்லது டெர்மிற்கு 80 ரூபாய் என்று வாங்கினாலும், 'டெர்ம் ஃபீஸ்' என்று ரூ. 30-ம் மிச்சத்தை வேறு ஏதேதோ கணக்குப்போட்டு ஆண்டொன்றுக்கு ரூ. 90 வீதம் கணக்குக் காண்பிக்கின்றார்கள். ஆனால் வாங்குவது ரூ. 240. இப்படிக் கணக்குக் காண்பிக்கும்போது, ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 150 லிருந்து ரூ. 200 வரையில் நிர்வாகம் லாபம் பெறுகிறது. எனவே பற்றுக் குறையில் மூன்றில் இரண்டு பங்கு என்று கொடுப்பதை மாற்றி, நிர்வாகம் மாணவர்களிடமிருந்து கட்டணமாக என்னென்னவெல்லாம் வசூல் செய்கின்றார்களோ, அவற்றையெல்லாம் வாங்கிக்கொண்டு அரசே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தால், நஷ்டம் ஏதும் ஏற்பட்டுவிடாது என்பது என்னுடைய கருத்து. மற்றொன்று. 'ஸெலக்ஷன் கிரேட்' என்பதை நமது அரசு எல்லா ஆசிரியர்களுக்கும் வழங்கியிருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களுக்கும் சரி, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் சரி, இதை வழங்கியிருக்கிறோம். ஆனால் இது 'க்ராஃப்ட் டீச்சர்ஸ்'க்கு இன்னும் வழங்கப்படவில்லை. மாநில ரீதியில் இதை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற காரணத்தினால், இதில் காலதாமதமாகிறது என்று சொல்லப்படுகிறது. மற்ற ஆசிரியர்களுக்கு எப்படி செவின்யூ டிஸ்ட்ரிக்ட் அடிப்படையில் வழங்கப்படுகிறதோ, அந்த மாதிரி இவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போதுள்ள நிலைமையில் பத்தாண்டு கால ஸர்வீஸ் என்ற கணக்குவைத்து ஸெலக்ஷன் கிரேடு என்று இல்லாமல் மாவட்ட அளவில் கொடுப்பதால் என்ன ஏற்படுகிறது என்றால், சில மாவட்டங்களில் ஏழு ஆண்டுக் காலம் ஸர்வீஸ் பெற்றவர்களுக்கு ஸெலக்ஷன் கிரேடு கிடைத்துவிடுகிறது. ஆனால் வேறு சில மாவட்டங்களிலே 18 வருஷம், 19 வருஷம் ஸர்வீஸ் ஆனவர்களுக்கும் ஸெலக்ஷன் கிரேடு கிடைக்கவில்லை. இத்தகைய வேறுபாடு ஆசிரியர்களுள் கசப்பு உணர்ச்சி ஏற்பட ஏதுவாகிறது. ஆகவே செலக்ஷன் கிரேடு என்றால்—சாதாரணமாக ஸெலக்ஷன் கிரேடு என்றால் பதவி உயர்வில்லை—ஒரு டைம் ஸ்கேலில்

28th March 1972] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

ரூ. 245—450 என்று இருப்பதில் ரூ. 450ஓடு நின்று விடாமல் அதற்குப் பிறகு சம்பளம் உயருவதற்கான வகை செய்யும் விதத்தில், இடையிலே ரூ. 400லிருந்து ரூ. 650 வரையில் போகக் கூடிய ஒரு கிரேடை வைத்திருப்பதாகும். எனவே எல்லா ஆசிரியர்களுக்கும் பத்தாண்டு காலம் ஸர்வீஸ் ஆனவர்கள் என்ற அடிப்படையில் இந்த செலக்ஷன் கிரேட் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதோடு இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது முன்னுள் கழகப் பள்ளிக்கூடங்களை அரசுப் பள்ளிகளாக மாற்றிவிட்டோம். ஆனால் இப்படி இணைக்கப்பட்ட கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை ஒரு தனிப் பிரிவாகவே வைத்துக்கொண்டிருக்கிறோம். இது ஒரு வேண்டாத நிலை என்றே நான் கருதுகிறேன். இந்த நிலை போக்கப்பட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இப்போது மொத்தமே அரசுப் பள்ளிகள் என்று ஆகிவிட்டபிறகு 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்று இரண்டு பிரிவுகளை வைத்திருக்கத் தேவையில்லை. ஆசிரியர்கள் வேலையில் சேர்ந்த நாளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, கழக ஆசிரியர்களுக்கும் முழு இணைப்பு 'கம்ப்ளீட் இண்டெக்ரேஷன்' கொடுத்தால், குறை ஏதும் இருக்கப்போவதில்லை. சில முன்னுள் கழகப் பள்ளி ஆசிரியர்கள், குறிப்பாக ஒரு சில தலைமை ஆசிரியர்கள் தங்கள் பதவி போய்விடுமோ தலைமை ஆசிரியர்கள் பதவி போய் கீழ்ப் பதவிக்கு வரவேண்டி நேர்ந்துவிடுமோ என்று பயந்து, தங்களுக்கு என்று தனியாக இந்தப் பிரிவினை வைத்திருக்க வேண்டுமென்று அன்று கேட்டார்கள். ஆனால் இந்த நிலை எவ்வளவோ சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபற்றிச் சில முன்னுள் கழக ஆசிரியர்கள் உயர்நீதி மன்றத்தில் 'ரிட்' பதிவு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்த 'ரிட்' மனுவில் அவர்கள் சொல்லுவதெல்லாம் இந்த இரண்டு பிரிவும் தேவையில்லை. எல்லா ஆசிரியர்களும் அரசு ஆசிரியர்கள் என்று இருக்கும்போது, வேலையில் சேர்ந்த நாளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு அவர்களுக்கு 'கம்ப்ளீட் இண்டக்ரேஷன்' கொடுத்திருந்தால், தங்களுடைய சீனியாரிட்டிக்குப் பாதுகாப்பிருந்திருக்கும். இப்போது ஸர்வீஸ் ஆனவர்களுக்கு, அவர்கள் 'பி' பிரிவில் வைக்கப்பட்டிருப்பதால், பல சலுகைகள் கிடைக்காமல் போய்விட்டது என்று சொல்லுகின்றார்கள். இதை அரசு சற்று யோசித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பதவி உயர்வினைப் பெற்று தலைமை ஆசிரியர்களாகப் போகின்றவர்களுக்கெல்லாம் சில டிபார்ட்மெண்ட் டெஸ்டுகள் இருக்கின்றன. அதில் தேர்வு பெற்றவர்களே தலைமை ஆசிரியர்களாக வருவதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றார்கள், எனவே அவர்கள் குறைபட்டுக்கொள்ள ஒன்றுமில்லை. மற்ற மற்ற ஆசிரியர்களுக்கு ஸெலக்ஷன் கிரேடு கிடைக்க வேண்டுமென்றால், ஸர்வீஸைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது இந்தப் பிரிவில் சிலர் ஸர்வீஸ் ஆகியிருந்தாலும், பாதிக்கப்படுகின்றார்கள், செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கான ஸ்தானங்களின்

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1972

எண்ணிக்கை குறைவாக இருப்பதால். எனவே ஒரு முழு இணைப்பு கொண்டு வருவதுதான் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வழி, என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். வேறு எந்த முறையில் இதை அணுகினாலும், புதிய பிரச்சினைகள்தான் உருவாகுமே தவிர, இருக்கும் பிரச்சனை தீராது என்று சொல்லிக் கொண்டு இதை ஆராய்வதற்கு சட்ட இலாகா நிபுணத்துவம் கொண்ட ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வித் துறையிலுள்ள அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய உரிய மரியாதையோடு மிகப் பணிவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன், கல்வித் துறையில் உள்ளவர்களுக்குச் சட்ட நுணுக்கம் தெரியாது, தெரிந்திருக்க வாய்ப்பில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். வழக்கு மன்றங்களிலே சொல்லுவார்கள், 'ஆசிரியர்கள் சாட்சியாக வந்தால் அவர்கள் சாட்சி சொல்லும் பக்கம் நிச்சயம் தோல்வியடைந்துவிடும்' என்று. காரணம் அவர்களுக்குச் சட்ட நுணுக்கம் தெரியாது. எனவே இந்தக் 'கம்ப்ளீட் இண்டெக்ரேஷன்' என்ற விஷயத்தில் கல்வியதிகாரிகள் மட்டுமின்றி, கல்வியிலாகாவில் ஈடுபாடுகொண்டுள்ள சட்ட நிபுணத்துவம்கொண்ட அதிகாரிகளைப் போட்டு, இப்பிரச்சனையை அரசு நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இது மிகவும் சட்டச் சிக்கல் நிறைந்த பிரச்சனை. இதை மேலும் நீடிக்கக்கூடாது. 1964-லிலேயே கழகப் பள்ளிகளை அரசு மேற்கொண்டுவிட்டது. ஆனால் இதில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், இன்னும் முழு இணைப்பு கொடுக்காமலிருப்பதால், பல்வேறு வழக்குகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. எனவே தாமதமின்றி இந்த மிக அவசியமான முழு இணைப்பினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த 1971-72-க்கான இறுதித் துணை மதிப்பீட்டை வரவேற்று அமருகின்றேன். வணக்கம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, இந்தக் கூடுதல் செலவினத்திற்கான துணை மான்யக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது வேளாண்மை வரிச் சட்டம் வரும் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வர இருக்கிறது. ஜூன் மாதம் 15-ம் தேதிக்குள் விவசாயிகள் எல்லாரும் தங்களுக்குள்ள நிலங்கள் எவ்வளவு, என்னென்ன பயிரிடுகின்றார்கள், யார் பயிரிடுகின்றார்கள் என்ற விவரங்களையெல்லாம் தெரிவிக்கவேண்டும் என்பது விதியாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இப்போது எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்களில் சிலர் மத்திய அரசில் இப்போது வரும்படி வரிகள் விதிக்கப்படுவோர்களில் அவர்களுக்கு உள்ள நிலங்களுக்காக இந்த வேளாண்மை வரியையும் சேர்த்து புதிய ஒரு முறையைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்று குறிப்பிட்டார்கள்.

28th March 1972] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

இது நாம் அனைவரும் அறிந்ததுதான். இந்த வேளாண்மை வரி சம்பந்தமாக விவசாயிகள் கொடுக்க வேண்டிய விவரங்களைப் பெறுவது மிகக் கஷ்டமாக விருக்கிறது. சமீபத்தில் சில வாரங்களுக்கு முன்னால் பருத்தி 'சிட் பார்ம்' திட்டத்தில் பருத்தி விதை கொடுக்கக்கூடிய நேரத்தில், விவசாயிகள் கர்ணத்திடமிருந்து போதிய சான்றுகள் பெற்று வரவேண்டுமென்று கூறப்பட்டது. அவற்றை வாங்கி வருவதற்கு அந்த விவசாயிகள் இரண்டு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் செலவு செய்து, அவற்றைப் பெற வேண்டியிருக்கிறது. மார்க்கெட்டிங் சொசைட்டிகளில் பருத்தி விதை வாங்கி வைத்திருக்கிறார்கள். சான்றிதழ்கள் பெற்றுத்தான் வரவேண்டுமென்று விவசாய இலாகாவினர் கூறுகிறார்கள். எந்தச் சான்றிதழ் பெறுவதாகவிருந்தாலும், ரெவின்யூ இலாகாவில் ஒவ்வொரு முறையும் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில் விவசாய வருமான வரி சம்பந்தமாக ஒரே நிலம், ஒரே ஆண்டில் என்ன பயிர் செய்யப்பட்டது, எவ்வளவு தடவை பயிர் செய்யப்பட்டது என்று ல்டேண்டர்ட் ஏக்கர் கணக்கில் வைத்திட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த முறையில் கணக்கு வைத்திருப்பது என்பது மிகுந்த கஷ்டமான காரியம். சான்றிதழ்கள் கோரும் நேரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த விவசாயின் நிலத்தில் எந்த ஆண்டில் எந்த ஒரு பருவத்தில் என்னென்ன பயிர், எவ்வளவு பயிர் செய்யப்பட்டது என்று விசாரணை செய்து, ல்டேண்டர்ட் ஏக்கர் முறையில் கணக்கிடுவதில் எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பதை இந்த அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகையினால் இந்தச் சட்டத்தை, மத்திய அரசுச் சட்டமானாலும்கூட, இந்தப் புதிய வரி முறையில் ல்டேண்டர்ட் ஏக்கர் கணக்கு வைக்கப்பட வேண்டுமென்று இருப்பதை மறு பரிசீலனை செய்து சட்டத்தையும் விதி முறைகளையும் எளிதாக்குவது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய தொல்லைகளுக்கு ஆளாகும் அந்தச் சிறிய பெரிய விவசாயிகளை அப்படியே நீடிக்க விடுவது அரசுக்கு நல்ல பெயரைக் கொடுக்காது. நியாயமுமாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். 15 ல்டேண்டர்ட் ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒருவர் நகர்ப் புறத்தில் உள்ளவர்களைப் போல், குறைந்த பட்ச வசதிகளுடன் நல்வாழ்வு பெற்று, அவர்களுடைய பிள்ளை குட்டிகளுக்கு நல்ல படிப்பும், எதிர் காலத்தில் அவர்கள் முன்னுக்கு வர வேண்டுமென்பதற்கும் வசதியிருக்க வேண்டுமென்று நினைக்கும் போது, அவர்களுக்கில்லை என்று தான் சொல்ல வேண்டும். கிராமங்களில் உள்ளவர்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே நம்முடைய அரசு அதை மறு பரிசீலனை செய்து இந்தக் கஷ்டங்களைப் போக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முறையில் விதி முறைகளை மாற்றியமைத்திடல் வேண்டும். விவசாயிகளுக்கு இருக்கின்ற தொல்லைகளைக் களைந்திடுதல் மிகவும் அவசியம்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [28th March 1972

அடுத்தபடியாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செய்திட பல்வேறு இனங்கள் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகள் அனைத்தும் முக்கியமான இனங்கள். அரிஜனங்களுக்கு மனைகள் வழங்குவதற்காக ரூபாய் 15 இலட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. அரிஜனங்களுக்கு நிலம் வழங்கிட 1964-ஆம் ஆண்டிலேயே எங்கள் பக்கத்திலுள்ள கிராமத்தில் மூன்று எக்கருக்குச் சற்று அதிகமான நிலம், சாகுபடிக்குத் தகுதியில்லாத கற்கள் நிறைந்த நிலம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிளான் எல்லாம் தயார் செய்து பகிர்ந்து கொடுக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. அதை சப்-டிவிஷன் செய்து வைப்பதற்காக ரூபாய் 50 செலான் மூலம் டிரஷரியில் செலுத்தி யிருக்கிறார்கள். அதிகாரிகள் சென்று பார்த்துப் பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலைமையில் வைக்கப்பட்டிருந்தது. பல தடவை ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று சொல்லிவிட்டு வந்ததாகவும் எனக்குத் தகவல் சொன்னார்கள். அண்மையில் நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கின்றபோது, இந்த நிலத்தை கர்னம் சொந்தக்காரர் ஒருவர் ராணுவத்தில் வேலை செய்கின்றார் என்ற காரணத்தைக் காட்டி, கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டதென்று தெரியவந்தது. அதைப்பற்றிக் கலெக்டர் அவர்களிடமும் ஜில்லா டெவலப்மெண்ட் கூட்டத் திலும் தெரிவிக்கப்பட்டது. உடனே அவர் அதிகாரிகளைக் கொண்டு கவனிப்ப தாகச் சொன்னார்கள். இந்த நிலம் இன்னமும் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. அந்த நிலத்தில் இப்பொழுது சாகுபடி செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக் கிறார்கள் என்று தெரிகிறது. அதில் சாகுபடி ஏற்படாத வண்ணம், அந்த நிலம் அரிஜனங்களுக்கே போய்ச் சேரும்படி அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'வரையறுத்த பார்வையாளர் வண்ணத் தொலைக்காட்சி சாதனம்' வாங்குவதற்காக ரூபாய் 11 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் 'பர்ச்சேஸ் ஆப் கலர் டெலிவிஷன் எக்குப்மெண்ட்' என்று காட்டப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு பொருள் ரூ. 11 இலட்சத்திற்கு வாங்கப் படுகிறது. அதற்கு விளக்கம் தேவை. வரையறுத்த பார்வையாளர் வண்ணத் தொலை காட்சிச் சாதனம் என்பது விசித்திரமாக விருக்கிறது. அதற்கு விளக்கம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். தமிழ் நாட்டில் குடியானவர்கள் கூட்டுறவுக் காலனி எவ்வளவோ தயாரிக்கக் கட்டணம் ஒரு இலட்சம் ரூபாய் என்று இருக்கிறது. கூட்டுறவு முறையில் குடியானவர்கள் காலனி தொழிற்சாலை என்னும்போது, குடியானவர்கள் என்றால் யாரைக் குறிப்பிடுகிறதென்று தெரியவில்லை. ஒருவர் விவசாயிகளைக் குறிப்பிடுகிறதென்றால், அது பொருத்தமாகவில்லை. ஆலையை அமைப்பதற்கு பிளான், எஸ்டிமேட் போன்ற விஷயங்களுக்கு

28th March 1972] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

அறிக்கை தயாரிப்பதற்கும் ஒரு இலட்சம் ரூபாய் கட்டணமாகச் செலவிட வேண்டிய அவசியம் ஏற்படுமா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். இம்மாதிரி எஸ்டிமேட்டுகள் தயாரிப்பதற்கு அரை சதம், ஒரு சதம் என்று கொடுப்பது வழக்கம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொகை எவ்வாறு, எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சிறு பாசனத் திட்டத்தின் கீழ் பல இனங்கள் இருக்கின்றன. எ.ஆர்.பி. திட்டத்தில் இந்தத் திட்டங்கள் இருக்கின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் கூட 12 இடங்களில் இணறுகள் வெட்ட ஏற்பாடுகள் செய்திருப்பதாகத் தெரி கிறது. அவற்றில் மூன்று இடங்களில் தண்ணீர் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டொரு இடங்களில் தண்ணீர் கிடைப்பது சந்தேகமாக இருக்கிறது என்று தெரிகிறது. காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்புதூர், பொன்னேரி இத்தகைய இடங்களில் நல்ல ஆய்வாளர்களைக் கொண்டு பரிசீலனை செய்து ஆரம்பித்திருக்கலாம். எத்தெத்தப் பகுதியில் நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கும் என்று தகுந்த சாதனங்கள், அதிகாரிகள் இவர்களைக் கொண்டு ஆராய்ந்து தெரிந்து கொண்டு ஆரம்பித்துச் செய்தால், இப்படியான ஏமாற்றம் அளிக்காத ஒரு நிலைமை இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இண்டர்நேஷனல் டெவலப்மெண்ட் அசோசியேஷன் கடன் உதவி நிதியைச் சென்ற ஆண்டிலே பயன்படுத்தாத நிலை இருந்தது என்று நான் சந்தேகப்படு கிறேன். அம்மாதிரி நிதி உதவியைப் பயன்படுத்தி விவசாயத் துறையில் விவசாயிகளுக்கு வேண்டிய பல காரியங்களைச் செய்வதற்கு வசதி இருந்தும், செய்ய இயலாத நிலைமை நம் அரசுக்கு எப்படி வந்தது? கேஷ்-இரெடிட் முறையில் 3½ சதம் வட்டியில் கிடைத்தப் பணத்தைக்கூட பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை இருந்தது என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றித் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீன அரிசி ஆலைகள் பெரும்பாலும் தஞ்சை மாவட்டத்தில் நிறுவப்பட் டிருக்கின்றன. அந்த ஆலைகள் சில ரக அரிசியை மட்டும் உற்பத்தி செய்வதில் அனுகூலமாக இருப்பதாகவும், வேறு சில ரகமான அரிசிகளை உற்பத்தி செய் தால் நஷ்டம் ஏற்படுவதாகவும், அரிசியினுடைய அளவும் குறைவாகத்தான் கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றியெல்லாம் இவ்வாறு பாதக மான விதத்தில் பேசப்படுகிறது. அதற்காகப் பெரும் தொகைகள் முதலீடு செய்யப்படுகின்றன. ஆகவே புதிதாக ஆரம்பிக்கப்படக் கூடிய நவின அரிசி ஆலைகள், அரவை ஆலைகள் என்கு, எந்தப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டாலும்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [28th March 1972

அதனால் அரசுக்கோ நமக்கோ எந்த விதமான நஷ்டமும் ஏற்படாதபடி, நல்ல முறையில் நம் முன்னேற்றத்திற்குத் துணை புரியக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு அமைகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள, வேறு ஆலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால், இதுவரையில் உள்ள ஆலைகள் எந்த அளவு பயன் அளிக்கக் கூடியனவாக இருக்கின்றன என்பதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டுவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபற்றிக் கூறியிருப்பது நல்ல திட்டங்களாகும். இதில் ஆனிறை காப்பகங்கள், கோழிப் பண்ணைகள் இவைகளின் அபிவிருத்தி பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. படித்து விட்டு வேலையில்லாதவர்களுக்கு அரசினரே அரசாங்கத் துறையில் வேலை கொடுக்க வேண்டுமென்ற நியதி இல்லாமல், தொழிற் கல்வி அளித்து இத்தகைய பண்ணைகளைத் தேடிச் செல்லும் வகையில் அவர்களை ஊக்கி, ஆனிறை காப்பகங்கள், கோழிப் பண்ணைகள் போன்றவற்றை நல்ல பயிற்சியுடையவர்களால் நடத்தினால், அதில் நல்ல வருமானம் இருக்கிறது என்ற நம்பிக்கையை உண்டாக்கினால், இந்தத் துறையில் அவர்கள் பங்கு சிறப்பாக இருக்கும். ஆகவே அத்தகைய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டியது அவசியம். படித்தவர்கள் சொம்ப விஞ்ஞான முறையில் இந்த இரண்டு துறையில் ஈடுபட்டால், அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. படிக்காதவர்களுக்கும் விவரம் தெரியாதவர்களுக்கும் நவீன முறைகளைப்பற்றியும் விஞ்ஞான முறைகள் பற்றியும் நோய்வராதபடி காப்பது எவ்வாறு என்பதுபற்றியும் துட்பமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விவரங்களையும் தெளிவாக்கும் விதத்தில் பயிற்சி கொடுத்தால், அவர்கள் இது போன்ற பண்ணைகளை நன்முக நடத்த முடியும். அதைப்பற்றியும் அரசு ஆய்வு செய்ய வேண்டும். அரசு கோழிப் பண்ணைகளுக்கு நாம் சென்றால் உள்ளே நுழையும்போதே காலை அலம்பிக் கொண்டுதான் உள்ளே வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நோய்க் கிருமிகள் உள்ளே சென்று விடக்கூடும் என்பதால் இவ்வாறு சொல்லுகிறார்கள். அத்தகைய விதத்தில் பாதுகாப்புடன் நடந்துகொண்டால் நஷ்டமில்லாமல் நடத்த முடியும். அப்படிப்பட்ட விதத்தில் படித்தவர்களுக்கும் இந்தத் துறையில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்து, அவர்கள் அந்தத் தொழிலை நடத்த முயற்சி செய்வதவசியம் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பேருந்து உரிமை இழப்புத் தொகை சம்பந்தமாக அந்தச் சட்டத்தின் மூலம் பல முயற்சிகள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கெஜட்டில் வருகிறது. இன்னின்ன பேருந்துச் சொந்தக்காரர்களிடமிருந்து இன்னின்ன

28th March 1972]

பொருள்கள் பெறப்பட்டன என்று, சின்னச் சின்ன ஸ்கூரு, நட்டு முதல் எல்லா பொருள்களுக்கும் ஜாபிதா வருகிறது. அவைகளையெல்லாம் மதிப்பீடு செய்வதற்கு வழி வகைகள் என்ன என்பதைப்பற்றி நன்முக யோசிக்க வேண்டும். அண்மையில் நமது அரசியல் சாசனத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு ஆர்ஜிதம் செய்கின்ற சொத்துக்களுக்கு நஷ்டஈடு தரும் விஷயத்திலெல்லாம் பிரச்னைகள் வரும்போது, மார்க்கெட் ரேட் என்றோ, கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்றோ, அந்த உரிமைகளைக் கொண்டாட முடியாது என்றோ அரசுக்கு பல அனுகூலங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட அனுகூலங்கள் நமக்குக் கிடைக்குமென்றால், இந்தப் பேருந்துகளை ஆர்ஜிதம் செய்து, இழப்புத் தொகைகளைக் கொடுக்கும்போது, அரசியல் சாசனத் திருத்தத்தின் அனுகூலங்கள் இந்த அரசுக்குக் கிடைக்கும் என்றால், அந்த வகையிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப்பற்றியும் அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு வட்டியில்லாத உதவித் தொகை ரூ. 10 லட்சத்து 62 ஆயிரம் என்று போடப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனம் வட்டிக்கு கடன் தருகிறது. இது ஒருவேளை தவறுதலோ என்று எண்ணுகிற அளவுக்குச் சரியாக விவரிக்கப்படாமலிருக்கிறது. அந்த ஸ்தாபனத்துக்கு ஏன் வட்டியில்லாமல் கடன் கொடுப்பதற்கு காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, கடந்த சில தினங்களுக்கு முன் பஞ்சாலைத் தொழிலாளருடைய வேலை நிறுத்தத்தின்போது ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த சம்பவத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் அவர்கள் போலீஸ் அதிகாரிகள் தந்த விவரங்களை வைத்து, அவர்கள் அனுப்பிய ரிப்போர்ட்டைத் தெரியப்படுத்துகின்ற வகையில், அங்கே தடியடிப்பிரயோகம் ஒன்றுமே நடக்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் அரசுக்கு அதிகாரிகள் எப்படி விவரங்களைக் கொடுக்கிறார்களோ அதைத்தான் அமைச்சர்கள் அப்படியே தர முடியும். அந்த முறையில்தான் அன்றைக்கு அந்தத் தகவலைத் தந்திருக்கிறார்கள். உண்மைக்கு மாறான தகவலைத் தந்தால், அதைத்தான் நமக்குத் தெரிவிப்பார்கள். அந்த முறையில்தான் அன்றைக்கு அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஊர் திரும்பியபோது எனக்கு விவரங்கள் தரப்பட்டன. அங்கே திராவிட பஞ்சாலை முன்னேற்ற சங்கம் . . .

மிஸ்டர் சேர்மன்: பிரச்னை எழுப்பி ஆயிற்று. பதில் சொல்லியாயிற்று. மீண்டும் அந்தப் பிரச்னையை எழுப்பக் கூடாது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இது போலீசார் உண்மையான தகவலை அனுப்பவில்லை என்பதைப்பற்றியது. திராவிட பஞ்சாலை சங்கம் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் ஐந்தாறு பேர் அடிப்பட்டிருக்கிறார்கள் என்று. உண்மைக்கு மாறான விஷயங்களைப் போலீசார் தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், அதைப்பற்றி நோட்டீஸ் போட அச்சகத்திற்குச் சென்ற நேரத்தில் போலீசார் அச்சிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகப் பொதுக் கூட்டம் போடுவதற்கு சிவகாசிக்குச் சென்று நோட்டீஸை அச்சடித்து வந்திருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் அரசுக்கு அனுப்புகின்ற விவரங்கள், ரிப்போர்ட்டுகள் உண்மைக்கு மாறானவையாக இல்லாதபடி இருக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை ரூ. 116.34 கோடிக்கு அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 29.88 கோடிதான் அங்கத்தினர்களின் ஓட்டுரிமைக்கு உட்பட்டது. மற்றவையெல்லாம் அங்கத்தினர்களின் ஓட்டு இல்லாமலேயே சார்ஜ்ட் அக்கவுண்டில் நமது மாநில அரசின் கணக்கிலிருந்து செலவழிக்க வேண்டிய பணம் அங்கத்தினர்கள் சம்மதம் இல்லாமல் கூட. 1971-72-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணைமதிப்பீட்டில் பெரும்பகுதி நாம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு வேண்டியதாக இருக்கிறது. வாங்கிய கடனையும் அதற்கான வட்டியையும் திருப்பிக் கொடுக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் தற் பொழுது மாநிலத்தில் திட்டமிட்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொண் டிருக்கும்போது, கடன் சுமை அளவுக்கு மீறி ஏறியிருந்தால், மாநில வருவாயின் பெரும்பகுதி கடனுக்காகக் கொடுக்கவே சரியாகப் போகிறது. இந்திய அரசு கூட இம்மாதிரிச் சொல்லத்தான் வெளிநாடுகளில் வாங்கிய கடன்களில் பலவற்றைப் பரவலாக்கிக்கொண்டிருக்கிறது. அதுமாதிரி நாம் வாங்கியிருக்கும் கடனுக்கு ஒவ்வொரு வருடமும் அதிகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதைப் பார்த்தால், அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி மட்டு மல்லாமல், முன்னேற்ற வேலைகளுக்கான நிதிக்குக் கூட பற்றாக்குறை வந்து சேருகிறது. ஆதலால் மாநிலத்தில் அபிவிருத்தி வேலைகள் மிகவும் பாதிக்கப் படுகின்றன. மிக அவசியமான வேலைக்குக்கூடப் போதுமான நிதியில்லை. அதனால் ஒவ்வொரு வருடமும் திருப்பிச் செலுத்த வேண்டி கடன் சுமையைக் குறைப்பதைப்பற்றி மாநில முதலமைச்சர்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்திடம் நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் மீட்டிங்கில் சொல்ல வேண்டும். ரூ. 400 கோடி வருமானத்தில் 86 கோடி திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால், அதைத்

சோமத்தில் வழங்கும் சொற்படி கூறினால் "தோட்டத்திலே பாதி கிணறு" என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு தோட்டத்தை வைத்துக்கொண்டிருப் பவனுக்கு பாதிக் கிணறு இருந்தால், அவன் கதி என்ன? விவசாயம் செய்ய இயலும். இந்த நிலைமையில் ரூ. 400 கோடி வருவாயில் ரூ. 86 கோடி கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால், மாநில அபிவிருத்தி வேலைகள் செய்வதில் மிகவும் கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் வகையை "easy instalment" ஆக ஆக்க வேண்டும். தாங்கக்கூடிய அளவுக்கு மட்டும் ஒரு அரசாங்கத்தின் மீது சுமையை ஏற்ற வேண்டும். மற்ற மாநிலங்களுக்கும் இந்தக் கஷ்டம் இருக்கத்தான் செய்யும். ஆதலால் இது ஒரு பொதுப் பிரச்சினைதான். ஆதலால் மாநில முதலமைச்சர்களும் மாநில நிதி அமைச்சர்களும் சேர்ந்து மத்திய அரசை இதற்கு ஒரு வழிகாண வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வருடம் மட்டும் பங்களா தேசம் சம்பந்தமாகப் பிரத்யேகமாக வசூலிக்கப்பட்ட பணத்தில் ரூ. 41.15 இலட்சம் மத்திய அரசுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த வரியும் வசூலும் இன்னும் எவ்வளவு காலம் நடக்கும் என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம். இன்னும் எத்தனை வருடங்களுக்கு இந்த அதிகப்படியான வரி செலுத்த வேண்டியிருக்கும் என்பதை மத்திய அரசும் தெரிவிக்கவில்லை. மாநில அரசும் தெரிவிக்கவில்லை. இதை மக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டியது அவசியம். ஆதலால் மாநில அரசு மத்திய அரசோடு கலந்து இதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பத்து நாட்களுக்கு முன்னால் மதுரையில் சில விவசாயிகள் பெரும் இளர்ச் சியில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான விவசாயிகள் மதுரைக் கலெக்டர் அலுவலகத் துக்கு ஊர்வலமாகச் சென்றார்கள். "எங்களுக்குத் தெரியாமல் திடீரென்று நிலவரியை அதிகப்படுத்திவிட்டார்கள். அதிகமான நிலவரி கேட்கிறார்கள். இதை நீக்க வேண்டும்" என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காவிரி மணியம் அவர்கள், "அமைச்சர் அவர்களை பார்த்து முறையிட்டிருப்பதாகவும் அதுபற்றி சீக்கிரமே ஒரு அனுகூலமான அறிக்கை வரும்" என்று பத்திரிகைகளில் ஒரு "ஸ்டேட்மென்ட்" கொடுத்திருந்தார்கள். ஆனால் இதுவரை என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது வைகைச் சேனல் (கால்வாய்) என்று கருதுகிறேன். வைகைச் சேனலைப் புதுப்பிக்கின்ற திட்டத்தில் இராமநாதபுரத்திற்கு ஒரு ஜி.ஓ.வும் (G.O. மதுரை மாவட்டத்திற்கு ஒரு ஜி.ஓ.வும் பிறப்பிக்கப்பட்டது. இராமநாதபுரத்

திற்கென்று ப்றப்பிக்கப்பட்ட ஜி.ஓ. வில், எப்பொழுது கால்வாய் புதுப்பிக்கப் படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து புது விகிதாசாரப்படி உயர்ந்த கட்டணம் வசூலிக்கலாம் என்று போடப்பட்டிருந்தது. ஆனால் மதுரைக்குப் போடப்பட்ட ஜி.ஓ. வில் அந்த ஒரு வரி விடப்பட்டுவிட்டது. அதை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைப் போடும்படி சொன்னார்கள். மேலவையில் பேசும்போது, அதற்காக அரசாங்கம் ஒரு உத்திரவு போட்டுவிட்டது என்பதையும் தெரிவித்தேன். ஆதலால் அந்தக் கால்வாய் புதுப்பிக்கப்பட்ட பிறகுதான் மறுபடியும் அந்த வரி வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: பேரவையிலே சொன்னது போதாது. இந்த விஷயம் பத்திரிகைகளில் வரவில்லை. இதற்குப் போதுமான விளம்பரம் செய்யப்பட வில்லை. இது ஒரு கிளர்ச்சி சம்பந்தப்பட்ட விஷயம். இந்த விஷயத்தை நல்லமுறையில் விளம்பரப்படுத்தியிருக்க வேண்டும். இப்பொழுது இந்த அவையில் எடுத்துச் சொல்வதின் வாயிலாக பத்திரிகைகளில் செய்தி வரும் என்று நம்புகிறேன்.

சட்டசபை இடவசதி சம்பந்தமாக ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். இப்பொழுது நடக்கும் சட்டசபை பேரவைக் கட்டிடத்தில் நமது மேலவையை வைத்துக்கொள்ளலாம். சட்ட சபைக்கென்று ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டலாம். செக்கரடேரியட்டுக்குக் கூட கட்டிடம் கட்டுவதாக முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் சொன்னதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். அது எப்பொழுது நடக்குமோ தெரியாது. நமது சட்டசபையில் போதுமான அளவில் விசிட்டர்கள் வந்து உட்கார்ந்து அமைதியாகப் பார்க்கக்கூடிய அளவில் இடவசதியில்லை. சட்டசபைக்கு விசிட்டர்கள் வந்தால் 15 நிமிடத்திலோ ½ மணியிலோ அவர்களை வெளியேற்ற வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களை வெளியேற்றுவிட்டு வேறு சிலரை அனுமதிக்க வேண்டியுள்ளது. ஆதலால் சட்டசபைக்கென்று ஒரு புதிய கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: புதிய கட்டிடம் கட்டுமிடத்தில் நம்முடைய சபைக்கும் ஒரு கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்து தர வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: ஜனநாயகத்தில் சட்டசபை உறுப்பினர்களுக்குத் (பிரதிநிதிகள்) கட்டுப்பட்டவர்கள் மந்திரிகள். சட்டசபை உறுப்பினர்கள் மக்களுக்கு பிரதிநிதிகள். தங்கள் பிரதிநிதிகள் எவ்வாறு தங்கள் தொகுதி மக்களுக்காகச் செயல்படுகிறார்கள் என்று பொது மக்கள் அறிய விரும்பு வார்கள். அவர்களுக்குத் தகுந்த மரியாதை அளித்து போதுமான இடவசதி

செய்து கொடுக்க வேண்டும். அதற்காக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டின் வரலாற்றை அதிகாரபூர்வமாக எழுத டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க ஒரு விஷயம். உண்மையான வரலாறு என்ன என்று பண்டை நூல்களிலிருந்தும், உண்மையான ரிக்கார்டுகளிலிருந்தும் எடுத்து எழுத வேண்டியது மிக அவசியம். அப்படி எழுதும்போது, சுதந்திரப் போராட்டம் எவ்வாறு தமிழ் நாட்டில் நடந்தது என்பதையும் சேர்க்க வேண்டும். அதற்காக டாக்டர் செண்பகலட்சுமி அவர்கள் அரசாங்கச் செலவில் ஒரு வரலாறு எழுத ரிகார்டுகளைத் தயாரித்துள்ளார்கள். தமிழ் நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடந்த வரலாறு பற்றிய ரிக்கார்டுகளையும் அவர்களிடத்திலிருந்து வாங்கி இதில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இங்கே காணப்பட வில்லை. கதர் பற்றிப் பேச வேண்டும் என்றிருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தென்படவில்லை என்றால், வரவில்லையா, அல்லது கண்ணுக்குத் தென்படவில்லையா?

திரு. கே. ராஜாராம்: வந்திருந்தால்தான் தென்பட்டிருப்பாரே. கதர்க் கொள்கையில் இந்த அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கே எதிரான விஷயத்தை அமைச்சரவர்கள் பேரவையில் பேசியதாக அறிந்து வருந்துகிறேன். கதர்த் திட்டத்தில் லாபமில்லை, ஏன்றே அது கைவிடப்படும் என்ற தொனியில், அர்த்தத்தில் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். காரணம், அந்தத் திட்டம், 10, 20 லட்சம் ஜனங்களுக்கு வேலை கொடுக்கும்படியான திட்டம். அத்திட்டம் லாபத்திற்காக நடத்தப்படுகிற திட்டமல்ல. கிராமங்களில் வேலையில்லாமல் கஷ்டப்படுகிற ஏழைகள் நாள் ஒன்றுக்கு 1½ முதல் 2 ரூபாய் வரை சம்பாதிக்க வழி செய்யும் படியான திட்டம் கதர்த் திட்டம். இன்று வரை, அது நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்று வரை குறைவடை யாமல் நன்றாக நடந்து வருகிறது. அப்படியிருக்கும்போது, லாபகரமாக நடக்கவில்லையென்றால், அத்திட்டம் கைவிடப்படும்படி நேரிடும் என்று அதற்த சபையில் பேசியிருப்பது மனதைப் புண்படுத்துகிற வகையில் அமைந்திருக் கிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கை அதுவல்ல என்று நான் நம்புகிறேன். எந்தத் திட்டத்தைக் கைவிட்டாலும் இந்தத் திட்டத்தைக் கை விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக எத்தனை லட்சம் செலவானாலும்

பாவாயில்லே. முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் தொடர்ந்து இத்திட்டம் அமுல் நடத்தப்படும் என்று இதற்கு ஒரு உத்தரவாதத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரிகளைப் பொறுத்த வரையில், மக்களுக்கு எவ்வளவு தாங்குமோ அவ்வளவும் போட்டுவிட்டோம். இன்னும் சொல்லப்போனால் தாங்கக்கூடிய அளவுக்கு மேலேயே போட்டுவிட்டோம். என்றாலும் 'ஸ்டேடிக்' ஆகவும் வைத்துக்கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் செலவு செய்தாக வேண்டும். அதிகரித்துக் கொண்டே போகிறது. புதிய செலவினங்களைச் செய்ய வேண்டுமென்று எதிர்க் கட்சியினரே வற்புறுத்துகிறார்கள். எனவே வருவாயைப் பெருக்குவதற்கு அரசு வழிவகை காணவேண்டும். இப்போது புதிய தொழில்களை அரசாங்கம் ஆரம்பித்து நடத்தி வருகிறது. அந்தத் தொழில்கள் லாபகரமாக நடக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அதிருஷ்டவசமாக, தமிழ் நாட்டில் காடுகள் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் காடுகளை இன்னும் நல்லவிதமாக, அதிகமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். பணம் கொடுக்கக்கூடிய திட்டங்கள் பலவற்றை அங்கே உருவாக்க வேண்டும். இதன் மூலம் வருவாயைப் பெருக்கி லாபம் சம்பாதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப் போலவே, சமவெளிப் பிரதேசங்களில் (ப்ளெயின்ஸில்) எங்கெங்கே தரிசு நிலங்கள் கிடக்கின்றனவோ, அங்கெல்லாம் முந்திரி உற்பத்தியை அபிவிருத்தி செய்து லாபம் சம்பாதிக்க வேண்டும். ஏற்கனவே அரசினிடம் இதுபற்றிய திட்டம் இருக்கிறது. வருவாயைப் பெருக்க இதைச் செய்தால் நன்கு செயல்படலாம். எனவே, மலைக்காடுகளில் பணப் பயிரும், சமவெளிப் பிரதேசங்களில் முந்திரியும் பயிர் செய்து அரசாங்கம் லாபம் சம்பாதிக்கும் எண்ணத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன விஷயமாக, நமது குளங்களுக்குத் தண்ணீர் வரும் வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். வாய்க்கால்களையும் சப்ளை சேனல்களையும் சரியான முறையில் அமைக்க வேண்டும். அடுத்து, வானம் பார்த்த பிரதேசங்களில் நீர்ப்பாசன ஏரிகளில் தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டும். அந்த ஏரிகளுக்கு வரும் சப்ளை சேனல்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதைக் குடி மராமத்துக்கு விடவேண்டாம். அரசாங்கப் பணத்திலேயே அதைச் செய்ய வேண்டும். அதை கிஸ்தி மூலமாக வேண்டுமானாலும் கூட வசூலித்து விடலாம்.

குடி மராமத்தைப் பொறுத்த வரையில், மேலவையில் முன்னரே ஒரு தடவை சொல்லியிருக்கிறேன். இது இப்போது பல இடங்களில் பின்பற்றப்படுவதில்லை. அரசாங்கம் கான்ட்டிரிப்யூஷன் செலுத்தி பி.டபிள்யூ.டி. மூலமாக இதை மேற் கொள்ளலாம். இதை மேற்கூறிய அடிப்படையில் ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தமாதிரி நடவடிக்கை தஞ்சை ஜில்லாவில் விசேஷமாக, ரூ. 10 லட்சம் கொடுக்கப்பட்டு, வாய்க்கால்கள் மராமத்து செய்யப்படுவது கண்டு . . . .

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு, வரப்பு வாய்க்கால்களிலுள்ள ஆக்கிரமிப்பு களையெல்லாம் கண்டிப்பாக அப்புறப்படுத்த வேண்டுமென்ற உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. முன்பெல்லாம் மாவட்ட ஆட்சியாளர்களிடம் இந்த அதிகாரம் இருந்தது. அந்த அதிகாரத்தை இப்போது மாற்றியிருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி. மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதலில் ஏ.ஈ. யிடம் வேண்டுகோள் போடலாம். பிறகு ஈ.ஈ. யிடம் உத்தரவு பெறலாம். டி..ஆர்.ஓ.-க்குப் போகவேண்டிய அவசியமில்லை. ஈ.ஈ.-யின் உத்தரவுக்குப் பிறகு ரிவிஷன் போட வேண்டுமானால், அரசாங்கத்திற்கே நேரடியாகப் போடலாம். காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக இந்த உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன.

திரு. கே. ராஜாராம்: ரொம்ப மகிழ்ச்சி. தஞ்சை ஜில்லாவில் இம்மாதிரிக் கால்வாய்களையெல்லாம் மராமத்து செய்யவும் கூட திட்டத்தில் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதை முன்னாலேயே தெரிந்துகொண்டேன். ஆனால், மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய வானம் பார்த்த குளங்களுக்கு வரும் சப்ளை சேனல்களையும் மராமத்து செய்ய அதே மாதிரி உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட வீணுக்கக் கூடாது. அணை கட்ட வேண்டிய ஆறுகளுக்கெல்லாம் அணைகள் கட்டியாகிவிட்டது. எனவே மழை நீரைத் தான் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும். மழைத் தண்ணீரை எவ்வளவு சேகரிக்க முடியுமோ, அவ்வளவு சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். சப்ளை சேனல்களையெல்லாம் கூட சரியானபடி பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும். அமைச்சரவர்கள் சொன்ன கருத்துக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றபடி அதிகமாகப் பேசவேண்டியதொன்றுமில்லை. எனவே முடித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட 1971-72 ஆம் ஆண்டு இறுதித் தணை

மதிப்பிடுகளையொட்டி எதிர்க் கட்சித் தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பெரும்பாலும் இந்தத் துணை மதிப்பீடு விவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டு இங்கே விவாதிக்கப்பட்ட பல மாணியங்களின் மீதும், கருத்துக்களின் மீதும், பல துறைகளின் மீதும் அவர்கள் எடுத்துச் சொல்லும் தவறியவைகளையெல்லாம் இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமதுடைய உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் ஆசிரியர்களுடைய சங்கங்கள், அவர்களுக்கு இந்த அரசிலே கொடுத்திருக்கிற சலுகைகள், மேலும் நீக்கப்பட வேண்டிய இன்னல்கள், இவையிவையெனக் குறித்தெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவர்களும், நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் ஆசிரியர்களைப்பற்றி எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை எல்லாம் தொடர்ந்து பேட்டபோது, மீண்டும் ஒரு முறை இங்கே கல்வித் துறை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ என்று எண்ணுகிற அளவுக்கு அவ்வளவு எண்ணிறந்த கருத்துக்களை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் இங்கே கல்வி விவாதம் நடைபெற்ற நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தக்க விளக்கங்களை அளித்திருக்கின்றார்கள்.

ஆகவே நான் மேலும் அவைகளைப்பற்றி விளக்கங்களை அளிக்க வேண்டுமென்று எண்ணிட வில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் நாயர் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்னைகளையெல்லாம் எடுத்துக் கூறி, முதலாளிகள் இங்கே ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, வேறு மாநிலத்திலே போய் வேறு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, அதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்னையில் எவ்வளவு பெரிய சிக்கல்களை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கூறினார்கள். அவைகளையும் தொழிலாளர் நல அமைச்சரும் அரசும் நிச்சயமாக ஆராய்ந்து இருக்கின்ற சிக்கல்களை நல்ல முறையில் தீர்ப்பதற்கு வழி வகைகள் மேற்கொள்ளப்படுமென்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நண்பர் திரு. தென்னரசு பேசும்பொழுது, மத்திய மாநில அரசினுடைய உறவு எப்படி இருக்கிறது, எந்த அளவுக்கு அது மேலும் வலுப்பெற வேண்டும் என்பதை எடுத்துக் கூறி மத்திய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிற திட்டங்களை வேறு எந்த மாநிலத்திற்கும் பின் வாங்காத அளவுக்கு நம்முடைய தமிழக மாநிலம் நிறைவேற்றி வருகிறது என்பதற்கான பல ஆதாரங்களை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் குறிப்பாக மார்க்கட்டிங் பெடரேஷனில் உள்ள பிரச்னைகளையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்பு அந்தப் பொறுப்பில் இருந்தாலும், இப்போது

அவர்கள் ஏற்றிருக்கிற பொறுப்புக்கும் அதற்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால், அவைகளையெல்லாம் கவனிப்பதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன என்ற அளவில் அவைகளும் அவர்கள் வாயிலாகக் கவனிக்கப்படும் என்று நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பத்திய அரசுக்கும் நிசர்வ் வங்கிக்கும் நாம் திருப்பித் தரவேண்டிய கடன் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் அந்தக் கடனை நாம் கழித்துப் பார்த்தால், இந்தத் துணை மதிப்பீட்டில் நாம் விவாதிக்க வேண்டிய அளவு உள்ள தொகை குறைவானது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாநிலங்கள் மத்திய அரசுக்குத் திருப்பித் தரவேண்டிய கடன் காரணமாக, அந்தப் பாரு காரணமாக, எவ்வளவு தொல்லைக்கு ஆளாகின்றன என்பதையும், இவைகளை மிகுந்த அனுதாபத்தோடும், அதே நேரத்தில் மாநிலங்கள் தாராளமாக கைகள் கட்டிப்போடப்படாத அளவுக்கு தங்கள் மாநிலத்தில் நல்ல பல திட்டங்களை, வளம் கழுமிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையிலும், இது போன்ற கடன்களை வசூலிப்பதில் நாரிச்சுந்திரன் நாடகத்தில் வருகின்ற நட்சத்திரேயனைப் போல் இல்லாமல் இருந்திட வேண்டுமென்ற கருத்தையும் நாம் பல முறை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். இந்தக் கடன்களை திருப்பித் தருவதிலே தங்களுடைய கருத்தை மைசூர் மாநிலத்தினுடைய அரசுநர் தெரிவித்ததையும், அதனையொட்டி அவர் நடை முறையில் போய் வாதாடினார் என்றும், நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னார்கள். இரண்டு கவர்னர்களைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் எடுகளாஞலும் இதழ்களானாலும் ஆழ்ந்த படிக்கக்கூடியவர்கள். ஏதோ தவறுதலாகச் சொல்லிவிட்டார்கள். அந்த இரண்டு கவர்னர்களில் ஒருவர் திரு. தர்மவீரா அல்ல. ஒருவர் திரு. எஸ். எஸ். தவான், 'டி' 'எச்' என்று பார்க்கும் அவருக்கு தர்மவீரா ஞாபகத்திற்கு வந்திருக்குமென்று நான் கருதுகிறேன். எனென்றால் மத்திய அரசோடு போராடக்கூடிய குணம் வாய்ந்த ஒரு கவர்னரை அவர் முதல் இரண்டு எழுத்துக்கள் உச்சரிக்கப்பட்டதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு நண்பர் திரு. சுவாமிநாதன் இருக்கிறார் என்று நான் அறிவேன். அப்படிப் போராடிய அவர் அங்கே சென்று வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவர் குறிப்பிட்டது திரு. தர்மவீரா அல்ல, திரு. தவான் என்கிற ஒரு கவர்னரும், எஸ். எஸ். அன்சாரி என்கிற மற்றொரு கவர்னரும் தான். அதைப்பற்றி தான் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இது கவர்னருடைய பிரச்னை. அதற்கு மேல்,—அதற்குத் திருத்தம் சொன்னேனே அல்லாமல்—எந்த விளக்கமும் சொல்ல விரும்பவுமில்லை, அது என்னுடைய பொறுப்பும் அல்ல. மாநில அரசு அதிகப் பதிவின் காரணமாக

இன்றைக்கு ஏற்படுகிற சங்கடங்களிலிருந்து காப்பாற்றப்பட்டால்தான், நான் முதலிலே குறிப்பிட்டது போல், மாநிலத்திலே நல்ல திட்டங்களை நாம் நிறை வேற்ற முடியும். 14 மாநிலங்களிலே அபரிமிதமான வெற்றியை இன்றைக்கு மத்திய அரசில் வீற்றிருக்கிற ஆளும் கட்சி பெற்றுவிட்ட காரணத்தால், இனி மேல் வேண்டியவர்களுக்கு மாத்திரம் தான் சலுகைகள் கிடைக்கும், வேண்டாத வர்களுக்குக் கிடைக்காது, ஆகவே நம்முடைய மாநிலமும் வேண்டியவர்கள் பட்டியலில் இருந்தால் தான் ஏதாவது கிடைக்குமென்று திரு. சுவாமிநாதன் சொன்னார்கள். வேண்டியவர்கள் என்பதற்கு நாம் சரியான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வேண்டியவர்கள் என்றால், யார் தேவையென்று வேண்டுகிறார்களோ அவர்கள் எல்லாம் வேண்டியவர்கள் தான். அந்த வேண்டிய வர்களுக்கு மத்திய அரசு தர கடமைப்பட்டிருக்கிறது. நாம் அரசியல் ரீதியில் கட்சி அளவிலே எத்தனையோ உறவு முறைகள், கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், மத்திய அரசோடு மாநில அரசுகள் ஒட்டிச்சென்றதன் காரணமாகத் தேவையான நல்ல பல காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்பதிலே இருவேறு கருத்து இருப்பதாக நான் எண்ணிடவில்லை. 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே இங்கு ஆட்சி அமைந்தபோது கூட, பலர் எதிர்பார்த்தார்கள். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள உறவு சீரழிந்து விடும், குலைந்துவிடும் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால், அப்போது மத்திய அரசிலே ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் இரண்டாக ஆகாமல் ஒன்றாக உறுதியாக இருந்த நேரமாகும். அந்த நேரத்தில்கூட அண்ணா அவர்களுடைய தலைமையில் இங்கே இயங்கிய திராவிட முன்னேற்றக் கழக அரசும் மத்திய அரசும் நிர்வாகத்தில் மாநிலங்களுடைய தேவைகளைப் பெறுவதில் உறவு முறையோடு தான் இருந்து வந்தது. அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு நாங்கள் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது கூட, டில்லியில் உள்ளவர்கள் சந்தேகப் பட்டார்கள். அண்ணா அவர்கள் வைத்திருந்த அந்த உறவு மனப்பான்மை இவர்களுடைய காலத்தில் நீடிக்குமா என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். அந்த நேரத்திலும் அது நீடித்தது. அப்போது காங்கிரஸ் இரண்டாக ஆகாமால் ஒன்றாகவே தான் இருந்தது, அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு கூட. அதற்கு ஒரு ஆண்டுக்குப் பிறகு தான் காங்கிரஸ் இரண்டாக ஆன நிலைமை ஏற்பட்டது அனைவருக்கும் தெரியும். அப்போதும் காங்கிரசுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள், அரசியல் மாச்சரியங்கள், இவைகள் இருந்தாலும் இங்கு இருக்கிற ஆளும் கட்சியும் மத்தியில் இருக்கிற ஆளும் கட்சியும் உறவோடு இருக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர்களாக இருந்தோம். அந்தக் காரணத்தால் தான், அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அவர்களுடைய திருவுருவப்படத்தைத் திறந்து

வைக்க இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் வந்திருந்தபோது, ராஜாஜி மண்டபத்தின் எதிரில் நடைபெற்ற அந்த விழாக் கூட்டத்தில் நான் பேசும்பொழுது, உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று தான் சொன்னேன். அது இன்றளவு நீடித்துக் கொண்டு தான் இருக்கிறது. எப்போதும் நீடிக்க வேண்டுமென்ற எண்ணத் தோடு தான் நாம் செயல்பட்டு வருகிறோம்.

நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். மாநிலங்கள் செலவுகளைக் கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும், நிர்வாக சீர் திருத்தக் குழு அமைக்கப்பட்டதோ இல்லையோ தெரியாது, அதன் மூலமாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். நிர்வாகச் சீர் திருத்தக் குழு அமைக்கப்பட்டு, அதனுடைய பணிகள் செவ்வனே நடைபெற் றுக்கொண்டிருக்கின்றன. விரைவில் அந்தக் குழுவின் பரிந்துரைகள் அறிக்கை மூலமாகக் கிடைக்குமென்று நான் நம்புகிறேன். ஆனால் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் வேலைக் குறைப்புகள் ஏற்பட்டு விடக்கூடாது. ஏனெனில் இன்றைக்கு வேலை வாய்ப்புகளுக்காக படித்தவர்கள் அலைந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில் வாழ்க்கையில் அலைக்கழிந்து கொண் டிருக்கிற இந்த வேளையில் நாம் நிர்வாகத்தில் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று வேலை வாய்ப்புகளைக் குறைக்கிற அளவுக்கு எந்தக் காரியத் தையும் அவசரப்பட்டுச் செய்து விடமுடியாது. ஆனால் எப்படி எப்படி நிர் வாகத் துறையிலே செலவுகள் அதிகமாகின்றன என்பதற்கு ஒரு சிறிய உதார ணத்தை நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னார்கள். ஒரு அதிகாரி என்று சொன்னார்கள். அவர்கள் இந்த மன்றத்தில் பெயரைச் சொல்லாவிட்டாலும், தனியாகச் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். அந்த அதிகாரிக்கு மதுரை யிலிருந்து ஒரு தொலை பேசிச் செய்தி வந்ததாகவும், அவர் சாப்பிட்டுக்கொண்டி ருந்தார், சாப்பாட்டை முடித்துவிட்டுத் தான் பேசுவேன் என்று சொன்ன தாகவும், அதற்குப் பிறகு இவர் 'டிரங்க் கால்' போட்டார் என்றும் குறிப்பிட் டார்கள். உள்ளபடியே சாப்பிடும்போது 'ட்ரங்க் கால்' வருகிறது என்றால், அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமே தவிர, 'சாப்பிடுகிறேன், சிறிது நேரம் கழித்து மீண்டும் கூப்பிடட்டும்' என்றோ, அல்லது 'சாப்பிட்டு விட்டு வந்து நான் மீண்டும் கூப்பிடுகிறேன்' என்றோ சொல்வது வருந்தத் தக்க போக்காகும். 'ட்ரங்க் கால்' என்று வரும்போது, மிக அவசர முக்கி யத்துவம் வாய்ந்த செய்தியும் வரலாம். அல்லது வரும் செய்தியின் அடிப்படை யில் அதை இன்னொரு அதிகாரியிடம் சொல்லி உடனடியாகச் செயல்பட வேண்டிய விஷயங்களாகக்கூட இருக்கலாம். இந்த நேரத்தில் அதிகாரிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு நண்பர் திரு. சுவாமிநாதன்

அவர்கள் எடுத்துக்காட்டிய உதாரணம் மிகமிகப் பொருத்தமானதாகும். இதன் மூலம் இதில் அவர் ஒரு ட்ரங்க் கால் போடும் செலவு, மறுபடியும் இவர் சாப்பிட்டுவிட்டுப் போடும் செலவு இவற்றை யெல்லாம் 'நிர்வாகத்தில் இப்போதுள்ள அமைப்பின் மூலம் ஆகும் செலவுகள்' என்பதைவிட சில அதிகாரிகளுடைய பொறுப்பற்ற தன்மையால் ஏற்படும் செலவு என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே தம்பி திரு. பாலாஜி அவர்கள் பேசிய, பெயர் சொல்லாத அதிகாரிக்கு மட்டுமில்லை, பெயர் சொல்லிச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய பொறுப்பற்ற, பொறுப்புணர்ச்சியற்ற எல்லா அதிகாரிகளுக்கும் இது நல்லதொரு பாடமாக அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன். தொலை பேசி விஷயத்தில் மட்டுமில்லை, எல்லா விஷயங்களிலுமே தாமதம் என்பது நிர்வாகத்தில் அதிகச் செலவைத்தான் உருவாக்குகிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள், 'வர வேண்டிய பாக்கிகளையெல்லாம் வசூலிப்பதில் நாம் இன்னும் தீவிரமாக இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். நாம் இப்பொழுது ரூபாய் நாணூறுகோடி அளவிற்கு நமது மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எட்டியிருக்கிறோம் என்றால், நாம் புதிதாக வரிகளை விதித்தோ அல்லது உள்ள வரிகளைக் கெடுபிடி செய்து வசூலிப்பதன் காரணமாகவோ இந்தத் தொகை வந்துவிட்டதாக அர்த்தமில்லை. கெடுபிடி என்பதற்குப் பதிலாக, முன்பு சற்று சிரத்தைக் குறைவு காரணமாக தொகைகள் வசூலிக்கப்படாமல் இருந்தன. இன்று அவை சிரத்தையோடு, ஊக்கத்தோடு வசூலிக்கப்பட்டு வருகின்றன. மேலும் நாட்டில் வாணிபமும் தொழிலும் விரிவடைந்துள்ள காரணத்தினால், இந்த வருமானம் இன்றைக்குக் கூடுதலாகியிருக்கிறது. வரவேண்டியதை வசூலிப்பதில் முனைப்புக் காண்பிக்க வேண்டும் என்று திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில் ஒரு சிலர் 'மகஜர்' கொண்டுவருகின்றார்கள் 'சற்று இதை வசூலிப்பதை நிறுத்தி வையுங்கள் அல்லது தவணை கொடுங்கள்' என்று. அவர்கள் தங்கள் பருதிகளிலுள்ள பல்வேறு பிரச்சனைகளை எடுத்துக்காண்பித்து, இதை வசூலிக்காமல் நிறுத்தி வையுங்கள் என்று சொல்லும் இந்த முறையிலிடையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட பல்வேறு முறையீடுகளையும் பல கோரிக்கைகளையும் நிறைவேற்றிவைக்க கூடிய அளவிற்கு, நாம் நமது மாநிலத்தில் செலவினங்கள் அதிகமாக ஏற்படக் கூடிய இன்றியமையாததொரு சூழ்நிலைக்கு வந்திருக்கின்றோம்.

அடுத்து, சிறு சேமிப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியவை ஆராயப்படவேண்டிய கருத்துக்கள்தான். உள்ளபடியே இன்றைக்குச் சிறு சேமிப்பு என்று சொல்லும்போது, நமது மாநிலத்தில் நாம்

வசூலிக்கும் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினை மீண்டும் நமது மாநிலத்திற்கே மத்திய அரசினுல் கடனுக அளிக்கப்பட்டு அது சில சூழ்நிலைகளில் ஐந்து சதவிகிதம் வட்டி விகிதத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மீண்டும் மத்திய அரசுக்கே திருப்பித்தர வேண்டும் என்ற சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. நாம் இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கின்றோம், இதில் இன்னும் அதிக விகிதாச்சாரத்தை மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கொண்டிருக்கிறோம். இது மாத்திரமல்ல, இன்றைக்குள்ள இந்தத் தவணைக் காலத்தைக் கூட, இன்றைக்குள்ள இந்த 25 ஆண்டுகாலத் தவணையை நீட்டித்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும்கூடச் சொல்லுவேன், இப்போது இந்தச் சிறு சேமிப்பை மத்திய அரசு கையில் வைத்துக்கொண்டு மாநில அரசை இந்தப் பணிகளைச் செய்யச்சொல்லி மாநில அரசுடைய அதிகாரிகளையெல்லாம் கஷ்டப்படுத்தி, இந்தப் பணிகளை நிறைவேற்றி, இதிலே மத்திய அரசு ஒரு தொகையை எடுத்துக்கொண்டு மிச்சமுள்ளதை மாநில அரசுகளுக்குப் பங்கு போட்டுக்கொடுக்கும் இப்படிப்பட்ட சிரமங்களையெல்லாம் விட்டு விட்டு இந்தச் சிறு சேமிப்பைப் பொறுத்தவரையில், மத்திய அரசு எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளாமல் மாநில அரசுகளுக்கு விட்டுவிடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். ஆகவே இந்த வகையில் மத்திய அரசு இந்தச் சிறு சேமிப்பு விஷயத்தில் மாநிலங்களுக்கே முழு அதிகாரங்களையும் அளித்து விட வேண்டும். நாம் கோரும் பல்வேறு அதிகாரங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேனே தவிர வேறல்ல.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வேளாண்மை வருமான வரியிலுள்ள சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு இப்போதுள்ள பொது வருமான வரியோடு வேளாண்மை வரிகளையும் இணைத்துக்கொள்ளுவது பற்றி நமது அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது. ஏனென்றால் இங்கேயுள்ள நிலங்களின் தரம், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நிலங்களின் தரம், இவைகள் எல்லாம் வேறுபட்டிருக்கின்றன. ஆகவே வேளாண்மை வருமான வரியைப் பொது வருமான வரியோடு இணைக்க முடியாது என்பதை முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது மாநிலத்தின் சார்பிலே மத்திய அரசுக்கு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு சிறு விளக்கம் கோரிப்பெற விரும்புகிறேன். ஏற்கெனவே பல மாநிலங்கள் விவசாய வருமான வரியையும் பொது வருமான வரியையும் ஒன்றாக இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்து, நாம் மட்டும் அதை நமது மாநில வரியாகவே வைத்துக்கொள்ளுகிறோம் என்று

[திரு. கே. ராஜாராம்] [28th March 1972

சொல்லும் நேரத்தில் இவை இரண்டும் இணைக்கப்பட வேண்டுமென்ற ஒரு மத்தியச் சட்டம் வந்தால், அதை நமது அரசு ஏற்றுக்கொள்ளக் கட்டுப்பட்டிருக்கிறதா அல்லது நமது மாநிலத்தின் மீதேயே விவசாய வருமான வரியை வைத்துக்கொள்ளுவோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒரு நெருக்கடி வரும் நேரத்தில் நாம் எல்லாரும் சேர்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். வேளாண்மை வருமான வரியைப் பொறுத்து, வேறு சில சிக்கல்கள் இருப்பதையெல்லாம் திரு. திருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எடுத்துக்கூறினர்கள். அவற்றுக்கெல்லாம் அந்தத் துறையின் அமைச்சர் அவர்களும் நானும் பல்வேறு விளக்கங்களை இந்த மன்றத்தில் எடுத்துக்கூறியிருக்கிறோம். மேலும் தவிர்க்க முடியாத சங்கடங்கள் இருந்தால், அவற்றைச் சீர் தூக்கிப் பார்ப்பதற்கு அரசு தயாராயிருக்கிறது. இன்றைக்கு வேளாண்மை வரி மூலம் கிடைக்கும் தொகை இந்த மாநிலத்தில் அரசின் சார்பிலே செய்கிற பல நல்ல திட்டங்களை உருவாக்குவதற்கு உறுபயனுக இருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை. ஆனால் இதில் சங்கடங்கள் ஏதாவது இருந்தால், அவை சிறிய விவசாயிகளைப் பாதிக்கக்கூடியவையாக ஏதாவது இருந்தால், அவற்றை அரசு யோசிக்கத் தயாராக இருக்கிறது என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஒரு குறைபாட்டையும் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய சொந்த ஊரில் ஸ்ரீவில்லிபுத்தூரில் 1964-ஆம் ஆண்டில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று ஏக்கர் நிலத்தை இப்போது ஒரு இராணுவக் குடும்பத்தினருக்கு மீண்டும் எடுத்துக் கொடுத்திருக்கின்றார்கள் என்றும், இதை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுத்துக்கூறியும், அதிகாரிகள் கவனிக்காமல் இருக்கின்றார்கள் என்றும் சொன்னார்கள். இதுபற்றி உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்து அரசின் சார்பில் ஆவன செய்யப்படும் என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட தனிப் பட்ட குறைபாடுகள் எங்கே இருந்தாலும், அவற்றைத் தயவுசெய்து எழுதி அனுப்புங்கள். அப்படி அனுப்புவீர்களானால், உடனடியாக அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ளும்.

மதுரையைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயிகளுடைய இளர்ச்சி விளம்பரமான அளவிற்கு அதற்கென அளிக்கப்பட்ட நிவாரணம் விளம்பரமாகவில்லை என்று சொன்னார்கள். இப்படித்தான் நிலைமை இருக்கிறது. இளர்ச்சிகள் பற்றி பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகப் போட்டார்கள். ஏதோ மதுரையின் கட்ட பொம்மன் சிலையிலிருந்து பெரியதொரு ஊர்வலம் புறப்படுகிறது என்றெல்லாம் போட்டார்கள். மறுநாள் சட்டப்பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்

28th March 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

காவேரி மணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பை அளித்து, அதன்பேரில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அங்கே அதிகாரிகளால் ஏற்பட்டுவிட்ட தவறுகளை உடனடியாகத் திருத்துவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள். ஆனால் இது பத்திரிக்கையில் அந்தக் இளர்ச்சி விளம்பரமான அளவிற்கு வராத காரணத்தினாலோ என்னவோ தனக்குத் தெரிவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். பத்திரிக்கைகள் இதுபோன்ற இளர்ச்சிகளைப்பற்றி மட்டுமே போட்டால்தான், மறுநாள் பத்திரிக்கைகள் நல்ல வியாபாரமாகும் என்ற எண்ணத்தோடு இல்லாமல், தங்கள் பத்திரிக்கைகளுடைய லாபத்தினை மட்டும் கருதாமல், சற்று நாட்டின் அமைதியையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று நான் மீண்டுமொருமுறை பத்திரிக்கையாளர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். நேற்றுக்கூட பத்திரிக்கையில் ஒரு செய்தி பார்த்தேன். சென்னையிலுள்ள சுதந்திராக் கட்சியிலுள்ள முக்கியமானவர்கள் ஆளுநர் அவர்களுடைய மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்று ஆளுநரைச் சந்தித்து ஒரு மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த மகஜர், மத்திய சர்க்காருடைய வரிகள் குறைக்கப்பட வேண்டும் என்பதற்கான மகஜர். ஆனால் அந்தச் செய்தி ஒரு தமிழ் பத்திரிகையில் வந்ததைப் படித்துப் பார்த்தால், 'மத்திய' என்ற அந்த வார்த்தை எந்த இடத்திலும் வரவில்லை. கெட்டிக்காரத் துணை ஆசிரியர் எந்த இடத்திலும் மத்திய சர்க்கார் என்ற வார்த்தை வராமல், 'சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாகச் சென்று கவர்னரைப் பார்த்தார்கள். அவர்களில் பத்துப் பேர் கவர்னரைச் சந்தித்துப் பேசினர்கள். அவர்கள் இன்றைக்குப் போடப்பட்டுள்ள வரிகள் அதிகமானவை, மக்களைத் துன்புறுத்தக்கூடியவை, ஏற்கெனவே 500 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கும்போது, புதிய வரிகள் போடுவது தகாது' என்றெல்லாம் சொன்னார்கள் என்று போட்டுவிட்டு, கடைசியாக, கவர்னர் 'இதை நான் ராஷ்டிரபதிக்கு அனுப்புகிறேன்' என்று சொல்லுகிறார் என்று போட்டிருக்கிறார்கள். நல்ல வேளை, துணை ஆசிரியர், 'இதை முதலமைச்சருக்கு அனுப்புகிறேன்' என்று கவர்னர் சொன்னதாகப் போடவில்லை. ஊன்றிப் படித்துப் பார்த்தால் தான் கவர்னர் அவர்கள் 'இதை ராஷ்டிரபதிக்கு அனுப்புகிறேன்' என்று சொன்னது புரியும். இப்படி ஊன்றிப் படித்தால்தான், ஓஹோ, சுதந்திராக் கட்சியினர் மத்திய சர்க்கார் வரியைக் கண்டித்துத்தான் ஊர்வலம் சென்றிருக்கின்றார்கள், என்று தெரியவரும். ஏதாவது தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எதிராகக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைப் போடுவதில் இவ்வளவு அக்கறையோடு இருக்கிறது. எந்தப் பத்திரிகை என்று சொல்ல விரும்பவில்லை. பத்திரிகையாளர்கள், நிருபர்கள் அவர்கள் சார்ந்திருக்கின்ற பத்திரிகையை, இன்று காலைப்

பத்திரிகையைத் திரும்பப் படித்துப் பார்த்தால், விஷயம் புரியும். முடியுமானால் நாலாயினம் திருத்தம் போடுவார்கள் என்று கருதுகிறேன். அதைப் போலவே தான் நம்முடைய திரு. ஆறுமுகச்சாமி அவர்கள் பேசுகிறபோது—நாவலர் அவர்கள் ஞாபகப்படுத்தினார்—கிருத்தாவுக்கு வரி போட வேண்டுமென்று வேடிக்கையாகச் சொன்னார். அதைப் பத்திரிக்கையில் போட்டவர்கள் திரு. ஆறுமுகசாமி என்ற உறுப்பினர் சொன்னார் என்று போடவில்லை. ஒரு உறுப்பினர் சொன்னார் என்று போட்டார்கள். யாரோ என்று நினைத்துக்கொண்டு கோட்டுமே, திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் என்று நினைத்துக்கொண்டு திட்டிவிட்டுப் போகட்டுமே என்ற எண்ணத்தில் போடுகிறார்கள். திரு. ஆறுமுகசாமி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி, கொஞ்சம் கடுமையாகக் கண்டித்திருந்தால், அது கொட்டை எழுத்தில் வந்திருக்கும். ஆனால் **கிருதாவுக்கு வரி போட வேண்டுமென்று திரு. ஆறுமுகசாமி வேடிக்கையாகச்** சொன்னதைப் பத்திரிகையில் போடுகின்ற நேரத்தில் ஒரு உறுப்பினர் சட்ட மன்றத்தில் இப்படிப்பட்ட கருத்தைச் சொன்னார் என்று கூறி, அது கேலி செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப் பத்திரிகைகளில் கருத்துக்களை, விஷயங்களைத் திரித்துப் போடுவது நல்லதல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்பதால் எடுத்துக் கூறுகிறேன்.

சட்டசபைக்குப் புதிய கட்டிடங்கள் தேவை என்பதை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். சுதந்திரா கட்சியினுடைய சார்பில் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள்—சுதந்திரா கட்சி சார்பில் என்று சொல்ல உரிமை இருக்கிறது என்று கருதுகிறேன்—ஆகவே சுதந்திரா கட்சி சார்பில் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அதைப்பற்றி முடிவு எடுக்கப்படவில்லை என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். சட்டசபைக்குப் புதிய கட்டிடம் கட்டுகிறோம் என்னும்போது, உள்ளபடியே பொது மக்களிடம் எவ்வளவோ வேலைகள் இருக்கின்றபோது, சட்ட சபைக்குப் புதிய கட்டிடம் தேவைதானா என்கிற கேள்வி எழுப்பும். அதை அரசியலில் யாரும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே சட்டசபைக்குப் புதிய கட்டிடம் கட்டப்படுமா என்ற ஒரு கேள்வி பேரவையில் எழுந்து, நான் பதிலளித்தபோது, "ஒரு யோசனை இருக்கிறது, 4, 5 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன, கிண்டியில் ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது, அதைப்பற்றி முடிவு எதும் எடுக்கப் படவில்லை" என்று சொன்னேன். பேரவையில் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அந்தக் கட்டிடத்தை கிண்டிப் பகுதியில் கட்ட வேண்டுமென்று

யோசனை இருந்தது, அதை அரசு ஆராய்ந்து பார்த்ததா என்று கேட்டார். நல்ல வேளை இந்த கிண்டி யோசனை வந்ததற்கு நன்றி, அதை ஆராய்ந்து பார்த்து வருகிறோம், ஆனால் அதற்கு நாலு கோடி ரூபாய் ஆகும், அமைச்சரவை முடிவு செய்ய இருப்பதாகச் சொன்னேன். அதற்குப் பிறகுகூட நான் பேரவையில் பேசுகிறபோது, அமைச்சரவை முடிவுக்கு முன்னால் அதைப்பற்றிப் பத்திரிகையாளர்கள் கருத்துக்களை வழங்கிடவேண்டும், நாட்டிலே இருக்கின்ற மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் கருத்துக்களை வழங்கிட வேண்டும், பொது மக்கள் கருத்துக்கள், அனைத்தும் வந்து ஆராய்ந்து பார்த்த பிறகுதான், அந்தத் திட்டத்தைப்பற்றி இறுதி முடிவு எடுக்க இருக்கிறோம் என்று கூறினேன். இப்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும் அந்தக் கட்டிடம் எவ்வளவு அவசியம் என்பதைச் சொன்னார்கள். பார்வையாளர்கள் வந்து அமர்ந்து சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகளைப் பார்ப்பதற்குக்கூட வசதிகள் இன்றைக்கு இல்லை. வந்து அமர்ந்து பார்ப்பதற்கு வசதிகள் இல்லை என்பது மட்டுமல்ல, இங்கே வந்து அதிகாரிகளைப் பார்க்கவும், அல்லது அமைச்சர்களைச் சந்திக்கவும் அல்லது அவர்கள் தங்களுடைய தொகுதி விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு எவ்வளவு இடர்பாடுகள் இருக்கின்றன என்பதையும் நன்கு அறிவீர்கள். ஏதோ கடற்கரை ஓரத்தில் நின்று கொண்டு இந்தக் கட்டிடத்தை பார்த்தால் கம்பீரமான கட்டிடமாகத் தோன்றலாம். உள்ளே நுழைந்தால், எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன, எத்தனை அளவுக்கு 'பைல்'கள் குவிந்துகிடக்கின்றன, அலுவலர்கள் நெருக்கடியிலும், புழுக்கத்திலும் திணறிக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியெல்லாம் உள்ளே வந்து பார்த்தால் புரியும். இவைகளையெல்லாம் மனதில் வைத்துத்தான் இறுதி முடிவு எடுக்காமல், அனைவருடைய அபிப்பிராயத்தையும் கலந்து அந்த முடிவு எடுக்கலாம் என்று பேரவையில் நான் அறிவித்தேன். அதற்கிடையில் ஏற்கனவே பெரும் பொறுப்பு வகித்த ஒரு பெரியவர், "இது நாலு கோடி ரூபாய்த் திட்டம், இந்தத் திட்டத்தை ஏன் அவர்கள் கொண்டு வருகிறார்கள் தெரியுமா, காண்ட்ராக்ட் கொடுத்து அந்தப் பணத்தைப் பங்கு போட்டுக்கொள்வதற்கு அந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்" என்று சொல்லுகிறார். நான் பெயரைச் சொல்லாமல் ஒரு பெரியவர் என்று சொன்னேன். வேறு யாரும் தவறுகக் கருதக் கூடாது. முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இதைச் சொல்லியிருக்கிறார். நாலு கோடி ரூபாய்த் திட்டத்தில் காண்ட்ராக்ட் விட்டு மந்திரிகளை பங்கு போட்டுக்கொள்ளத்தான் கிண்டியிலோ அல்லது வேறு இடத்திலோ கட்டிடம் கட்ட இருக்கிறோம் என்று கூறுவது பெரும் பொறுப்பிலிருந்தவருக்கு நிச்சயமாக அழகல்ல. இது, நம்முடைய அரசியலை எங்கே கொண்டு போய்விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள் எண்ணிக்கொள்வார்கள் நாலு கோடி ரூபாயையே இவர்கள் பங்கு

போட்டுக்கொள்வார்கள் என்றால், ஏற்கனவே 40, 50 கோடி ரூபாய் களுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறனவே, அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் இப்படிப் பேசுகிறாரா என்று கேட்கத் தோன்றும். நான் பகவத் கீதையில் கண்ணையா கம்பெனியார் நடத்திய ஒரு நாடகத்தைப் பார்த்திருக்கிறேன் சிறு பிராயத்தில். அந்த நாடகத்தில் ஒரு மன்னன் காரில் வந்து ராணியுடன் இறங்கினன். பிறகு மாடிக்குப் போனன். மன்னனும் மகாராணியும் ஆரஞ்சுப் பழம் சாப்பிட்டார்கள். சாப்பிட்ட பிறகு தோலைக் கீழே எறிகிறார்கள். தெருவிலே போகின்ற ஒரு பாதேசி அந்தத் தோலை எடுத்துத் தின்பான். உடனே ராணிக்குக் கோபம் வரும். நான் சாப்பிட்டு எறிந்த தோலை இவன் தின்பதா என்று கோபம் வரும். உடனே காவலன் வந்து அந்தச் சாதுவை அடிப்பான். சாது சிரிப்பான். சிரித்துக்கொண்டே இருப்பான். மன்னன் கீழே இறங்கி வந்து ஏன் சிரிக்கிறாய் என்று கேட்பான். உடனே சாது சொல்வான். "தோலைத் தின்ற எனக்கே இவ்வளவு அடிகள் என்றால் பழம் சாப்பிட்ட உனக்கு எவ்வளவு அடிகளோ" என்று சொல்வான். அதைப்போல் நாலு கோடி ரூபாய் திட்டத்தில் பங்கு போட்டுக்கொள்ள முன்வந்தால், திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இங்கே அமர்ந்திருந்த நேரத்தில் 50 கோடி, 60 கோடி, 70 கோடி ரூபாய் என்ற அளவுக்குத் திட்டங் கள் போடப்பட்டிருக்கின்றனவே—தோலைத் தின்றவனுக்கே அந்த கதி என்றால் —யாரும் தவறாகக் கருதக்கூடாது—பங்கு போட்டுக்கொண்டதாக நாலு கோடி ரூபாய் திட்டத்திற்கே குற்றச்சாட்டு என்றால்—100 கோடி, 200 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட காலத்தில் என்ன நடந்தது என்று பொது மக்கள் கேட்கமாட்டார்களா? ஆகவேதான் பெரிய பொறுப்பு களில் இருந்தவர்கள், பெரியவர்கள் தவறுகள் இருந்தால், சுட்டிக்காட்ட வேண்டும். எங்கேயாவது குறைபாடுகள் இருந்தால், அவைகளை எடுத்துக் காட்ட வேண்டும். அவைகளை அடக்க உணர்ச்சியையும் கொண்டவர்கள் இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கிறோம் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். அதைத்தான் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன். "ஊழல், ஊழல் என்று பொதுவாக சொல்லிவிட்டுப் போய் விடாதீர்கள். எங்கே இருக்கிறது, என்ன நடக்கிறது, என்ன தவறு என்று சுட்டிக் காட்டுங்கள், அவைகளைக் களைவதற்கு நாங்கள் தயாராகவிருக் கிறோம்" என்று. "அதைச் சொல்ல நீ யார்" என்று நாங்கள் கேட்கவில்லை. ஆகவே நீங்கள் கட்டாயமாகச் சுட்டிக்காட்டுங்கள். அவைகளைக் களைவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர வேறல்ல. ஆகவே பெரிய பொறுப்பில் உள்ளவர்கள் பேசுகிற நேரத்தில், நாட்டின் எதிர் காலத் தையும், மக்களின் நன்மையையும், அரசியலிலே வளர வேண்டிய பண்பையும், அரசியலிலே கடைப் பிடிக்க வேண்டிய இலக்கணத்தையும் மனதிலே வைத்துக்

கொண்டு பேச வேண்டியது பெரும் கடமை என்று எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

தமிழ் நாட்டு வரலாறு டாக்டர் மு. வ. தலைமையில் எழுதப்படுகிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டி, தமிழக வரலாறு சுதந் திரப் போராட்ட வரலாறு வரையில் நீடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் இன்னும் கொஞ்சம் பெரிய மனது வைத்து இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு வரை எழுதலாம் என்று சொன்னார்கள். மொழிப் போராட்டம் என்பது சாதாரணமாகச் சின்ன விஷயமல்ல. ஒரு நாட்டினுடைய வரலாற்றில் எட்டு பேர் மொழிக்காகத் தீக்குளித்தார்கள் என்னும் அளவிற்கு, உலகத்திலே வேறு எங்கும் இவ்வளவு பெரிய தியாகம் செய்தார்கள் என்ற அளவிற்கு வரலாறு கிடையாது. அப்படிப்பட்ட வரலாற்றுக்குரியவர்கள் நாம். ஆகவே தமிழர்களுடைய வரலாறு எழுதப்பட வேண்டுமென்று சொல்லும் போது, சுதந்திரப் போராட்ட வீரர்கள், மற்றும் தமிழ் மொழிக்காக உயிர் நீத்த வர்கள் வரலாறு மட்டுமல்ல, உண்மையான, ஒழுங்கான, செம்மையான, வரிசைப் படுத்தப்பட்ட வரலாறு தமிழர்களுக்கு இல்லை. தமிழ் நாட்டு வரலாறு எழுத வேண்டுமென்று நாம் சொன்னால், எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் இங்கு கேட்பது போல், பத்திரிகையில் சிலர் "தமிழ் நாட்டு வரலாறு, அதைப் படைத்தவர்கள் யார்?" என்று கேட்பார்கள். இராச இராச சோழன் யார் என்று ஒரு மத்திய மந்திரியே கேட்கிறார். இராச இராச சோழனுக்குச் சிலை வைக்கிறார்களே, அவரை எங்கே போய்ப் பார்த்திருக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். அறுபத்திமூன்று நாயன்மார்களையெல்லாம் இவர்கள் போய்ப் பார்த்து விட்டு, அதற்குப் பிறகு, சிலைவைத்த மாதிரி எண்ணிக்கொண்டு இராச இராச சோழனைப் பார்த்தவர்கள் யார், எப்படிச் சிலை வைக்கிறார்கள் என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் உணர்வு அப்படி இன்றைக்கு எள்ளி நகையாடக்கூடிய ஒன்றாக இருக்கிறது. தமிழ் உணர்வு பொது மக்களிடத்தில் எந்த அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. எப்படி வங்கத்தில் வங்க மொழி உணர்வு வளர்ந்திருக்கிறதோ அதே போல் தமிழ் மொழியினுடைய உணர்வு வளர்ந்திருக்கிறது. நாட்டில் மொழி உணர்வு பிக்க மாநிலங்கள் இரண்டு, அவை தமிழகமும் வங்கமும் என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள். வங்கம் மொழி உணர்வின் காரணமாக இடர்பட் டதை மறந்துவிடக் கூடாது. தமிழ் மொழி உணர்விலும் இடர்படுமானால் நிலை மைகளை அந்த இடர்கின்றவர்கள் நிச்சயமாக அனுபவித்தே தீர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தமிழ் மொழி உணர்வுகள் பாழாகி விடக் கூடாது, தமிழ் மொழியின் வரலாறு பாழ்பட்டு விடக்கூடாது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ராம சாமி பெரியார் அவர்கள் தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று

பேசுகிறாரே என்று மனதில் கஷ்டம் ஏற்படாதா? அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இவ்வளவு பெரியவர் எங்களைப் போன்ற சின்னப் பிள்ளைகளைப் பார்த்து பாவிகளே என்று சொல்லக்கூடாது. பெரியார் சொன்னார், நான் கூட ஒரு கூட்டத்தில் சொன்னேன், 'கல் தோன்றி மண் தோன்றாகாலத்தே முன்தோன்றி மூத்த மொழி' என்ற அந்தக் காலம் இருக்கிறதே அது காட்டுமிராண்டிக் காலம். அந்தக் காலத்தில் தமிழ் மொழி தோன்றியிருக்கலாம் என்று சொல்லியிருக்கக்கூடும். இது ஒரு காட்டுமிராண்டி மொழி என்று சொன்னதாக நான் சொல்ல முடியாது. இன்றைக்கு ஒரு நல்ல வளமான நாகரீகம் உருவாகி வருகிறது. ஆகவே காட்டுமிராண்டி மொழி என்று சொன்னாலும், அல்லது இது வளமான மொழி என்று சொன்னாலும் தமிழ் உணர்வுகள் இங்கே மதிக்கப்படாத நேரத்தில், அது நிச்சயமாகக் கண்டிக்கப்படுகின்றது.

இந்த அரசானாலும் அல்லது இந்த அரசைப் பரிபாலித்து வருகிற திராவிட முன்னேற்றக் கழகமானாலும் 1938-ம் ஆண்டிலிருந்து இந்த தமிழ் நாட்டில் பாதுகாக்கப்படுவதற்காக கொடி தூக்கி போரிட்டு இயக்கம் நடத்தியிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்த தானைத் தலைவராகப் பெரியார் அவர்கள் இருந்தார்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அப்படித் தமிழ் காப்பதற்கு பெரியார் அவர்கள் கொடி தூக்கிப் போராடிய அந்த காலத்தில் தமிழுக்கு விரோத சக்திகளாக யார் யார் இருந்தார்கள், என்பதை நாம் யாரும் மறந்துவிடவில்லை. ஆகவே தமிழ் உணர்வு கிள்ளி எறியப்படுமானால், தமிழ் உணர்வு அலட்சியப்படுத்தப் படுமேயானால், அது எதிர்க் கால தமிழகத்தை நிச்சயமாகப் பாதிக்கும். ஆகவே பெரியவர்களாக இருக்கிறவர்கள், நிதானித்து தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சிகளைக் கணக்கில் வைத்துக்கொண்டு அவர்கள் 30 ஆண்டுகளாக இந்த மொழி வளர்ச்சிக்காக நடத்திய போராட்டங்களை யெல்லாம் மறந்து விடாமல், அவர்கள் எச்சரிக்கையாகப் பேச வேண்டுமென்று மிகுந்த பணிவோடு நான் அவர்களை யெல்லாம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: பாவிகள் என்று நான் சொன்னது மொழி சம்பந்தமாக மனதில் கஷ்டப்படாதவர்களைச் சொன்னேனே தவிர, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று அன்பர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கதரைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்

பேரவையில் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். பேரவையில் கதர்த் திட்டத்தைக் கைவிடவேண்டுமென்கிற அளவுக்கு அமைச்சர் சொன்னதாக நான் கருதவில்லை. நான் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன். கதர்த் திட்டத்தில் நாம் இன்னும் முற்போக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கதர்த் திட்டத்தினால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான கிராம மக்கள் பிழைக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்கள் இன்றைக்குக் குறைக்கப்படுகின்றன. முழுமையான, நிறைவான வாழ்வு அவர்களுக்குக் கிடைக்காவிட்டாலும் இன்றைக்கு வாழ்வில் ஓரளவு சங்கடமில்லாத ஒரு நிலையாவது இந்தக் கதர்த் திட்டத்தின் மூலமாக ஒரு பகுதி மக்களுக்குக் கிடைத்து வருகிறது. ஆகவே கதர்த் திட்டம் இன்றைக்குக் கைவிடப்படும் என்று கருதுவதற்கு கிஞ்சித்தும் இடமில்லை என்பதை நான் மிகுந்த உறுதியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றும் பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்னார்கள் ஏதோ ஒரு வரையறுத்த பார்வையாளர் வண்ண தொலைக்காட்சிச் சாதனம் அமைக்க என்று இருக்கிறதே, எதற்காக அதன் பேரில் 11 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அது பொறியியல் இண்டி என்ஜினியரிங் கல்லூரியில் பயிற்சி பெறும் கல்லூரி மாணவர்களுக்காக டெலிவிஷன் பற்றிப் பயிற்சியளிப்பதற்காக வாங்கப் படுகிறதே அல்லாமல், வேறல்ல என்பதை எடுத்துக் கூறி இந்தத் துணை மதிப்பிட்டில் கருத்துரை வழங்கிய அனைவருக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

III. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

85. Notification issued with Roc. No. 152280/69, dated the 29th February 1970, regarding extension of sections 131 and 138 of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Jagathala Town Panchayat in the Nilgiris district. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

86. Tamil Nadu Government's Review on the working of the Tamil Nadu Agro Industries Corporation Limited, for the year ended 31st March 1971 together with the Fifth Annual Report and

[28th March 1972

Statement of Accounts 1970–71. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. Reports, Notifications and Other Papers.

* 93. Policy Note on Animal Husbandry 1972–73. (English and Tamil).

* 94. Note on Agriculture Demands 1972–73. (Tamil).

-* 95. தமிழ் நாட்டின் வேளாண்மை முன்னேற்ற திறப்புக் கூறுகள் 1968-69 முதல் 1971-72 வரை, மற்றும் 1972-73-ன் இலக்கு.

96. Policy Note on Dairy Development Department 1972–73 (English and Tamil).

97. Fifth Report of the Committee on Estimate on Cinchona Department which was presented to the Assembly on the 24th March 1972 in English.

98. Performance Budget 1972–73—Agriculture.

99. Commercial Budget 1972–73—Cinchona Department.

100. Commercial Budget 1972–73—Agricultural Engineering Workshop.

101. Commercial Budget 1972–73—Dairy Development Department.

102. Commercial Budget 1972–73—State Transport.

103. Performance Budget 1972–73—Transport.

104. Sixth Report (Fifth Assembly) of the Committee on Estimates 1971–72 on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Fisheries Department which was presented to the Assembly on the 25th March 1972 in English.

105. Note explaining the activities of Welfare Programmes for Women and Children for 1972–73. (English and Tamil).

& 106. Errata to the Note on Animal Husbandry.

107. Review on the Progress made by the Forest Department. (Tamil).

108. Policy Note on Cinchona Department. (Tamil).

---

* Circulated to all M.L.Cs. on 25th March 1972.

& Laid on the table of the House on 27th March 1972.

THE TAMIL NADU LEGI LATIVE COUNCIL

Wednesday, the 29th March 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWER.

STARRED QUESTIONS.

Huts on the bed of the Vaigai River.

* 301. *Q.*—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru V. THANGAPANDIAN and Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have issued any orders prohibiting the construction of huts on the bed of the Vaigai River following the floods in the river during December 1971?

வைகை நதிப் படுகையில் குடிசைகள்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. வே. தங்கபாண்டியன், திரு திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வைகை நதியில் வெள்ளம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வைகை நதிப் படுகையில் யாரும் குடிசைகள் போடக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

Location of Motels.

* 242 *Q.*—Thirumathi S. MANJUBHASHINI (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Backward Classes be pleased to Stase the details of the places where motels are to be located in this State?

@ Postponed from the list of questions for 25th March 1972.

[29th March 1972

தங்கல் விடுதிகள் அமைத்தல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி திருமதி. எஸ் மஞ்சு பாஷிணி சார்பில் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

சிருலா செல்பவர்களுக்கான தங்கல் விடுதிகள் (Motels) இம் மாநிலத்தில் தொடக்கப்படவிருக்கின்ற இடங்கள் குறித்த விவரங்கள் யாவை?

The Hon. Thiru K. RAJARAM : The matter is under correspondence with Government of India—which will decide the location of Motels in this State—as they will finance the scheme.

Radar Instrument to Direct the speed of Cars

@ * 303 Q.—Thirumathi S. MANJUBHASHINI (on behalf of Thiru V. ISVARMURTHI)—Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that radar speed detection instruments to trap over-speeding are to be introduced by the Police Department in the State ; and

(*b*) if so, the details thereof?

மோட்டார் வண்டிகளின் வேகம் கணக்கிடும் ராடார் கருவி

திருமதி. எஸ். மஞ்சுபாஷணி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் மோட்டார் வண்டிகளின் மிகை வேகத்தைக் கண்டறிய வேகம் கணக்கிடும் ராடார் கருவிகளை காவல்துறை பயன்படுத்த இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) கார்களின் வேகத்தைக் கண்டறிவதற்காக, 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதற் கொண்டு சென்னை மாநகரில் ரேடார் சாதனம் ஒன்று பயன்படுத்தப் படுகிறது. பிற இடங்களில் இச்சாதனத்தைப் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

Termination of services of teachers

@ 330 * *Q.*—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

@ Postponed] from the list of questions for 25th March 1972.

29th March 1972]

(*a*) whether the services of any teachers serving in a High School at Bodinaikanur (Madurai district) have been terminated even when their appeals against the orders of the management are pending with the Director of School Education ; and

(*b*) if so, the action proposed to be taken to enforce the compliance with the Madras Educational Rules by the management?

பள்ளி ஆசிரியர்கள் வேலை நீக்கம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (மதுரை மாவட்டம்) போடிநாயக்கனூரிலுள்ள ஒரு பள்ளி நிர் வாகத்தின் ஆணைக்கு எதிராக கல்வித் துறை இயக்குநருக்குச் செய்து கொண்ட மேல் முறையீட்டின் மீது முடிவெடுக்கப்படாமல் இருக்கும் போதே அப்பள்ளியில் பணிபுரியும் எந்த ஆசிரியர்களேனும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்களா?

(இ) ஆமெனில், அந்த நிர்வாகத்தினர், தமிழ்நாடு கல்வித் துறை விதிகளைப் பின்பற்றும்படிச் செய்ய அதன் மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாகத்தினர் இரு ஆசிரியர்களையும் 21-2-1972 முதல் வேலையில் அமர்த்தியுள்ளனர்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஆசிரியர்கள் யார், யார்? எந்தப்பள்ளி? ஏன் அப்படிச் செய்தார்கள்? எவ்வளவு காலம் அவர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள்? அந்தக்காலத்திற்கு ஊதியம் இல்லாமல் இருந்தார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரை மாவட்டம் போடி நாயக்கனூர் ஜமீன்தாரி கமலம்மாள் உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்த்து வந்த தமிழாசிரியர் திரு. சோமசுந்தரம், பி.டி., ஆசிரியர் வீரபத்திர பிள்ளை ஆகிய இருவரையும் பள்ளி நிர்வாகி வேலை நீக்கம் செய்தார். அவ்விரு ஆசிரியர்களும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு மேல் முறையீடு செய்தனர். ஆசிரியர்கள் பள்ளி நிர்வாகியுடன் செய்துகொள்ளும் ஒப்பந் தத்தின் 10-வது பிரிவின் கீழுள்ள குறிப்பின்படி, ஆசிரியர் செய்த மேல் முறையீட்டின் மீது, இயக்குநர் அல்லது அரசு ஆணையிடும் வரை, ஆசிரி யரைப் பள்ளி நிர்வாகி பணியில் வைத்திருக்க வேண்டும். ஆனால் பள்ளி நிர்வாகி அவ்வாறு செய்யவில்லை. பள்ளி நிர்வாகி அரசுக்கு மேல் முறையீடு செய்தார். அவர்களை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டு மென்று பள்ளி நிர்வாகத்திற்கு அரசு கட்டளையிட்டது. அதன் பேரில் அவர்கள் இருவரையும் வேலையில் அமர்த்திக் கொண்டார்கள். மற்றவை கள் எல்லாம் முறைப்படிதான் ஆராயவேண்டும்.

[29th March 1972

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இம் மாதிரியாக ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்து இருந்தும், ஒரு அப்பீல் பெண்டிங் காக இருந்தும், அந்த நிர்வாகிகள் அவர்களே அந்த அக்ரிமெண்ட்டை மீறி வெளியே அனுப்புவார்களேயானால், அந்த நிர்வாகத்தின் மீது எதேனும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு இடம் இருக்கிறதா? அந்தமாதிரி இப்போதுள்ள நிர்வாகம் லாயக்கற்றது என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதை ஆராய்ந்துதான் பார்க்கவேண்டும். அவர்கள் அரசாங்க உத்திரவை மீறியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்க இயலுமோ, அதை எடுக்க அரசு முயற்சிக்கும்.

Teachers serving in Government (B) Secondary Schools in the Madurai District

* 331 *Q.*—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any teachers serving in Government (B) Secondary Schools in the Madurai district who applied for earned leave on the last working day preceding the mid-term holidays so as to appear for the University examinations, are compelled to convert the entire holidays also into a period of earned leave ; and

(*b*) if so, the reasons therefor?

மதுரை மாவட்டத்திலுள்ள அரசு (B) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல்கலைக் கழகத் தேர்வு எழுதுவதற்காக காலாண்டு விடுமுறை தொடக்க நாளுக்கு முந்திய வேலை நாளில் ஈட்டிய விடுப்பு கோரி விண்ணப்பித்த மதுரை மாவட்டத்திலுள்ள அரசு (B) உயர்நிலைப் பள்ளி களில் பணிபுரியும் எந்த ஆசிரியர்களேனும் மேற்படி காலாண்டு விடுமுறை காலும் முழுவதையும் ஈட்டிய விடுப்பாக மாற்றிக் கொள்ளும்படி வற் புறுத்தப்பட்டாரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செயியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

29th March 1972]

திரு. எம். ராஜா அய்யர் : குறிப்பாக பல்கலைக் கழகத் தேர்வுகள் எழுதும் ஆசிரியர்கள் அநேகமாக அந்தத் தேர்வுகள் கோடை விடுமுறைக்கு முந்தின நாளோ அல்லது தசராவுக்கு முந்தின நாளோ வருகின்றபடியால் தேர்வுக்கு முன்நாள் விடுமுறை எடுத்தால் அந்த வெகேஷன் முழுவதும் விடுமுறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று மதுரை மாவட்டத்திலிருந்து சில புகார்கள் வந்தன. அப்படி எதேனும் விதிமுறை உண்டா? ஒரு நாள் லீவ் கொடுத்தால் போதாதா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : அது பற்றி முறையீடு ஏதாவது தனிப்பட்ட முறையில் வருமேயானால், அது பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

·· If any teacher applies for earned leave for any purpose on the last working day preceding terminal holidays, they have been requested to apply for the leave to which they are eligible for the entire period as per the above rules, since they will rejoin duty only on the re-opening date, after terminal holidays. So the whole period has to be treated as leave to which they are eligible. The question of compulsion in such case does not arise.

திரு எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு இந்த விதியை மறு பரிசீலனை செய்யுமா ? அந்த வெகேஷனுக்கு முதல் நாள் ஒரு நாள் லீவ் எடுக்கும்போது அந்த வெகேஷன் முழு வதும் வர்ன்ட் லீவு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தும் விதியைத் தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றித் தனி யாகப் பரிசீலிக்கலாம்.

Tamil Nadu State Arts and Crafts Teachers' Confereuce

* 332 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu State Arts and Crafts Teachers' Conference held at Madras during March 1971, has passed any resolution and sent it to Tamil Nadu Government ?

(*b* if so, the action taken thereon?

தமிழ்நாடு மாநிலக் கலை, கைத்தொழில் ஆசிரியர் சங்க மாநாடு.

திரு ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலக் கலை, கைத்தொழில் ஆசிரியர் சங்க மாநாடு எதேனும் தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில் அவற்றின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.

திரு ஜி. சுவாமிநாதன் : எந்த வகையான கோரிக்கைகளை அவர்கள் அரசாங்கம் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள்? எந்த விதமான கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் 12 தீர்மானங்களைப்போட்டு அனுப்பி வைத்திருக்கிறார்கள். முதலிலே பாராட்டுத் தீர்மானத்தைப்போட்டுவிட்டு நடுத்தரப் பள்ளிகளில் பகுதிநேர கைத்தொழில் ஆசிரியராகப் பணிபுரிந்து மாதம் ரூ. 30 மட்டும் பெற்றுவருவதை மாற்றி 4-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு முடிய பாடத்திட்டத்திலுள்ளபடி கைத்தொழில் வகுப்பு தொழில் ஆசிரியர்களுக்கே கொடுத்து முழுநேர ஆசிரியராக நியமனம் செய்து அதற்கு ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, 10, 11-ம் வகுப்புக்களுக்கு நீக்கம் செய்த கலை கைத் தொழில் பாடத்தை மீண்டும் அமைத்து அதிகப் பாட வேலை அளிக்கவேண்டுமாய் தமிழகக் கல்வி இலாகாவையும், புதிய பாடக்குழுவையும் கேட்டுக்கொள்வது என்பது, கலை கைத்தொழில் பாடத்தைப் பிற பாடங்களைப்போல முக்கியத்துவம் அளித்து தேர்வுள்ள பாடமாக அமைக்க வேண்டும் என்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுப் புத்தகத்தில் இருக்கும் ஆர்ட்ஸ், கிராப்ட்ஸ் என்ற பகுதியில் மார்க்குகளைக் குறிக்கவும் வழிவகை செய்யவேண்டும் என்ற கோரிக்கை, பள்ளிகளில் கலை கைத்தொழில் பாடம் நன்கு நடைபெறத்தக்க வழிவகைகளைக் கூறவும், நன்கு நடைபெறுகின்றதா என கண்காணிக்கவும் மாவட்டந் தோறும் ஒரு கண்காணிப்பாளர் நியமித்து நல்ல அனுபவமுள்ள கலை, கைத்தொழில் ஆசிரியர்களையே தேர்ந்தெடுத்து அவ்வாறு நியமிக்க வேண்டுமாயும் கேட்டுக்கொண்டுள்ளது. சென்னை மாநில கல்விச் சட்டம் 13இன் படி தகுதியுடைய கைத்தொழில் ஆசிரியர்கள் எப்பள்ளியில் பணிபுரிந்தாலும் ஒரே விதமான சம்பள விகிதம் அளிக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வது, கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் அதிகப்படியான பொதுக்கல்வி, தொழில் கல்வி தகுதி உயர்வாக உள்ளவர்களுக்கு ரூ. 250—10—400 என்ற சம்பள விகிதமும் ஒவ்வொரு பாட உயர் தகுதிக்கும் 2 சம்பள உயர்வும் அளிக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறது. கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் டி.எஸ்.எல்.சி. தேர்வுபெற்று

பணிபுரிபவர்களுக்கு ரூ. 250—10—400 என்ற சம்பள விகிதத்துடன் சிறப்பு ஊதியம் ரூ. 25 வழங்க வேண்டுமாயும் கேட்டுக்கொண்டுள்ளது. கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் பழைய சம்பள விகிதத்தில் கடைசி சம்பளம் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் வாங்கியவர்களுக்கு 15 வருடங்களுக்குமேல் பணியாற்றும் அனைவருக்கும் உடனடியாக செலக்ஷன் கிரேடு வழங்கவேண்டும் என்று கோரியுள்ளது. நெசவாசிரியர்கள் 8 வருடம் தொடர்ந்து பணிபுரிந்தால் டி. எஸ். எல். சி. தேர்வு எழுதலாம் என்ற 22—8—1968-ம் தேதிய அரசாங்க ஆணை எண். எம். எஸ். 2319-ல் 8 ஆண்டு ஊழியக்காலம் என்பதை 5 ஆண்டு ஊழியக்காலமாகக் குறைத்து எம்.இ.ஆர். 13-இல் உள்ளபடி எல்லாக் கலைக் கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் டி.எஸ்.எல்.சி. தேர்வு எழுத அனுமதியளிக்க வேண்டுமென்றும் நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி இவைகளில் சில பள்ளிக்கூடங்களில் கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் வேலை காலியாக இருந்தும், சில ஆண்டுகளாக நியமனம் செய்யப்படாமலிருக்கின்றார்கள். அவ்வாறு கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமலிருக்கும் பள்ளிகளில் உடனே கலை, கைத்தொழில் ஆசிரியர்களை நியமனம்செய்ய வேண்டுமென்றும், தமிழ்நாடு ஆரம்ப செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் திறமையான ஆசிரியர்களுக்கு அரசாங்கம் விருது அளிப்பதைப் போன்று நன்கு பணிபுரியும் கலை, கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் தேசிய விருது வழங்க வேண்டுமென்றும், ஆக இவ்வாறு 12 தீர்மானங்களைப்போட்டு அனுப்பியிருக்கிறது. இதுதான் பரிசிலனையில் இருந்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழில் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 30 தான் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது கிடைக்கக்கூடிய ரூ. 30 சம்பளத்தில் அவர்களாலே வாழ்க்கையை நடத்த முடியவில்லை. ஆகவே, அவர்களை முழு நேர ஆசிரியர்களாக அமர்த்தி நல்ல ஊதியம் அளிக்கின்ற முறையை அரசு ஏற்படுத்துமா என்று முக்கியமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவர்கள் தீர்மானம்போட்டபோது ரூ. 30 ஆக இருந்தது. அது இப்போது ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட அவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது 800 ஆசிரியர்கள் முழுநேர கைத்தொழில் ஆசிரியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இரண்டு மூன்று பள்ளிகளைச் சேர்த்து முழு நேர ஆசிரியர்களாக மாற்றுகின்ற முயற்சி இருக்கிறது. முழுநேர ஆசிரியருக்கு இவ்வளவு பீரியட்கள் என்று இருக்கின்றது. அந்த வகையில் இயக்குநர் அவர்கள் முயற்சி எடுத்து ஆராய்ந்து வருகிறார்கள். அந்த எண்ணத்தில் அடிப்படையில், திட்டமிடப்பட்டு வருகிறது.

[29th March 1972

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, திருத்தியமைக்கப்படும் பாடத்திட்டத்தில் கலை, கைத்தொழில்களுக்கான பீரியட்கள் நான்காக இருந்தது மூன்றுக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதை மறுபடியும் நான்கு பீரியட்களாக ஆக்கவேண்டுமென்று முறையீடு ஏதாவது வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும், கலை, கைத்தொழில் களுக்கான பீரியட்கள் போதுமான அளவுக்கு ஒதுக்கப்படவில்லையென்றால் மாணவர்களுக்கு புத்தகப்படிப்புச் சுமை அதிகமாகிவிடும் என்கிற காரணத்தால், கலை கைத்தொழில்களுக்கு உரிய ஸ்தானத்தை அரசு கொடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒவ்வொரு பாடத்திற்கும் இவ்வளவு பீரியட்கள் ஒதுக்க வேண்டுமென்று வல்லுநர்கள் ஆராய்ந்து பிறகு முடிவெடுக்கிறார்கள். எனவே, இது வல்லுநர்களால் முடிவு செய்யப்படவேண்டிய ஒன்று. நாமாக ஒன்றும் செய்ய முடியாது. அடுத்து, இவர்கள் மற்றொரு கோரிக்கை யையும் வைத்திருக்கிறார்கள். அதுவும் ஆராயப்பட வேண்டும். இதை பரீட்சைக்கு உரியதாக ஆக்கி நேரில் எண்கள் வாங்கவேண்டுமென்று சொல்லக்கூடியபடி ஆக்கினால் தான், அப்படி பீரியட்கள் ஒதுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இவற்றையும் ஆராய்ந்து ஒரு சீரான நிலையை எற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Graduate Teachers with B.T. Qualification.

* 333 Q.—THIRU C. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that there are many Graduate Teachers with B.T. qualification working in aided High Schools in Secondary Grade post for want of vacancies of B.T. posts in the Higher Standards ; and

(b) if so, whether the Government will consider payment to them in the scale of B.T. Assistants as in the case of Tamil Pandits with first grade qualification working in Secondary Grade vacancies ?

பி.டி. கல்வித் தகுதி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்.

(அ) அரசு மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிக்களில் மேல் வகுப்புக்கான பி.டி. ஆசிரியர் பதவிகள் காலியில்லாததால், பி.டி. கல்வித் தகுதி பெற்ற பல பட்டதாரி ஆசிரியர்கள் இடை நிலை ஆசிரியர் பதவிகளில் பணி புரிந்து வருவது உண்மையா ?

29th March 1972]

(இ) ஆமெனில், காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியர் பதவிகளில் பணி புரியும் முதல் நிலை கல்வித் தகுதி பெற்ற தமிழ்ப் பண்டிதர் களுக்கு கொடுப்பது போல், இந்த பி.டி. ஆசிரியர்களுக்கும் பி.டி., ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் சம்பளம் கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் 85 பி.டி. ஆசிரியர்கள் இடை நிலை ஆசிரியர் பதவியில் வேலை பார்க்கின்றனர். 4 பி.டி. ஆசிரியர்கள் நடுத்தரப் பள்ளிகளில் வேலை செய்கின்றனர்.

(இ) இல்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அந்த ஆசிரியர்கள் மொத்தமே 100 பேர்களுக்குள் தான் இருக்கிறார்கள். அவர்கள் பி.டி., தகுதி பெற்றும் கூட மேல் வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுக்க வசதி இல்லாத காரணத்தால், அந்த விதமான உயர்ந்த ஊதியத்தை அவர்களால் பெற முடியவில்லை. நூற்றுக்கும், குறைவாகவே அவர்கள் இருக்கிற காரணத்தால், தமிழாசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போலவே இவர்களுக்கும் சலுகைகள் கொப்ப தி பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் படித்து பி.டி. பட்டம் பெற்று விடுகிறார்கள். அதே சமயம் பி.டி. படித்து வெளியேயும் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதைக் கவனிக்க வேண்டும். இந்த வகையான செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு பதவி, பணம் ஒதுக்கீடு பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. முதல் சலுகை இவர்களுக்குத்தான் தரப்படவேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே பி.டி. தகுதி பெற்றிருந்தால், அவர்களுக்கு முதலில் சலுகை அளிக்க வேண்டும். அவர் களுக்குத் தந்து விட்டு பிறகு வெளியிலே உள்ளவர்களைச் சேர்க்கலாம். முதலில் பி.டி. தகுதி பெற்ற, இடைநிலை ஆசிரியர் பதவிகளில் பணிபுரிந்து வருகின்ற ஆசிரியகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அதற்குப பிறகு இந்த பிரச்சினைகளை யெல்லாம எடுத்துக் கொள்ளலாம். நிலை தகுதிபெற்றவர்கள் இரண்டாவது நிலையிலும் இரண்டாவது நிலைதகுதி பெற்றவர்கள்மூன்றுவது நிலையிலும் வேலைபார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் அத்தனை பேரையும் அந்தந்த நிலைகளுக்கு ஈர்த்துக் கொள்ளுகிற நிலை இன்னும் ஏற்படவில்லை. 2 ஆயிரம் ஆசிரியர்கள் இப்படியிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் நிதிதான் அடிப்படைக் காரணம். நிதி வசதி ஏற்படுமானால் இந்த மாற்றங்களை முறைப்படி மேற்கொள்ளலாம் தகுதியுள்ளவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைகள் அளிக்கப்பட வேண்டும் என்பது உண்மைதான். இது பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

[29th March 1972

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, வருடத்திற்கு எத்தனை ஆசிரியர்கள் இப்படி பி.டி-க்கு தங்களைத்தாங்களே தகுதி உடையவர்களாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள் இது மாதிரி மொத்தம் எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுக்கணக்கில் அப்படிச் சொல்வதற்கு இப்போது புகலல்கள் இல்லை. மொத்தம் 85 பி. டி. ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இம்மாதிரி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தங்களை பி.டி. ஆசிரியர்களாக டயர்த்திக் கொள்ளும்போது அவர்களுடைய வயது வரம்பிற்கும் மேலாகி விடுகிறது. ஆகவே, அரசினர் பள்ளிகளிலும், பி. கிரேடு பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் இத்தகைய ஆசிரியர்களை நியமிக்க வயதைப் பொறுத்த வரையில் விதி விலக்கு அளித்து, அவர்களை பி.டி. ஆசிரியர்களாக நியமிக்கும் சலுகை நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தொடர்ந்து ஆசிரியர்களாக இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட விதிவிலக்கு அளிப்பதில் கடுவேறும் இருக்காது என்று கருதுகிறேன். அதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கலாம்.

State Harijan Welfare Committe.

*334 Q.—THIRUMATHI S. MANJUBHASHINI (on behalf of THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether any Harijan Welfare Committee for the State has been constituted ;

(b) if so, the details thereof ; and

(c) the functions of the Committee ?

மாநில அரிசன நலக்குழு.

திருமதி. எஸ். மஞ்சுபாஷிணி (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : சார்பில்) மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநில அரிசன நலக் குழு ஏதாவது அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அக்குழுவின் அலுவல்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) and (உ) மாநில அரிசன நலக்குழுவின் அமைப்பும் அதன் கடமையும் அடங்கிய அறிக்கை *ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix I on page 287.

29th March 1972]

MR. CHAIRMAN : Questions 285 to 289 are post-poned. Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

POINT OF INFORMATION re ANSWERING OF QUESTIONS

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஒரு "பாயிண்ட் ஆப் இன்பார்மேஷன்". கேள்விகளைப் பொறுத்த வரையில் சில சமயங்களில் 5, 10 கேள்விகள் என்று வருகின்றன. நேற்றைக்கு ஐந்து கேள்விகள் தான் போடப்பட்டிருந்தன. இன்றைக்கு பத்துக் கேள்விகள் தான் பதிலளிக்கப்பட்டன. 3¼ மணிக்கெல்லாம் கேள்வி நேரம் முடிந்துவிட்டது. ஆகவே, கேள்விகளை அதிகமாகப் போட்டு நான்கு மணி வரையிலுமாவது வருகிற மாதிரி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Answers are not ready.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கேள்விகள் அனுப்பி ஆறு மாதம், எட்டு மாதமாகியும் கூட பதிலளிக்கப்படுவதில்லை. இந்தக் காலதாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : நான் வந்தவுடனேயே இதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நான் வந்தபோது 289 கேள்விகள் பாக்கியிருந்தன. எந்தெந்த மந்திரியினுடைய இலாக்கா என்று பார்த்து, அவர்களுக்கெல்லாம் "உங்களுடைய டிபார்ட்மெண்டில இவ்வளவு கேள்விகள் பதிலளிக்கப்படவேண்டும். தயவு செய்து டிபார்ட்மெண்டை துரிதப்படுத்துங்கள்" என்று லெட்டர் எழுதினேன். அப்படியும், கேள்விகள் வரவில்லை என்று சொன்னால், "ஆன்சர்" தயாராக இல்லை என்று அர்த்தம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அது ஒரு புறமிருக்க அன்றைய கேள்விகளுக்கு அன்றன்றைக்கே பதில் சொல்லிவிடும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒருக்கால குறிப்பிட்ட அமைச்சர் வர முடியவில்லை என்று சொன்னால், அதை முதலிலேயே கேள்வித்தாளில் அச்சுப் போட்டு வராமல் நிறுத்திக் கொள்வது நல்லதல்லவா என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : ஆமாம். இன்றைக்கு அமைச்சர் வரவில்லையென்றால் அதை நேற்றைக்கே தெரிவித்தால், அதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் 2½ மணிக்கு இங்கே நான் உட்கார்ந்த பிறகுதான் மினிஸ்டர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள் "போஸ்ட்போன்" பண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை.

[29th March 1972

III GOVERNMENT MOTIONS

(1) ELECTION OF NINE MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் : " தமிழ் நாடு சட்ட மன்ற விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் நிச்சயிக்கக் கூடிய ஒரு நாளன்று 1972-73 ஆம் நிதியாண்டுக்கான உரிமை பற்றிய குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

MR. CHAIRMAN : The question is—

"That, with reference to rule 156 of the Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman, to elect nine Members to be members of the Committee of Privileges for the financial year 1972–73 ".

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with regulation 2(1) framed for conducting elections in accordance with the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of nine members to the Committee of Privileges for the financial year 1972–73 :—

Time and date for the receipt of nominations : 5-00 p.m. on 3—4—1972.

Time and date for the scrutiny of nominations : 6-00 p.m. on 3—4—1972.

Time and date for withdrawal of nominations : 5-00 p.m. on 4—4—1972.

Nomination forms can be had from the Secretary. There will be an election, if the number of candidates nominated exceeds nine. The date and time of the poll, if any, will be intimated later.

(2) ELECTION OF SIX MEMBERS TO THE HOUSE COMMITTEE.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் : " தமிழ் நாடு சட்ட மன்ற விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி 1972-73 ஆம் நிதியாண்டுக்குரிய சபைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும் ".

29th March 1972]

MR. CHAIRMAN : The question is—

"That with reference to rule 173 of the Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect six Members to be Members of the House Committee for the financial year 1972–73. :—

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with regulation 2(1) framed for conducting elections in accordance with the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of six Members to the House Committee for the financial year 1972–73.

Time and date for the receipt of nominations : 5-00 p.m. on 3—4—1972.

Time and date for the scrutiny of nominations : 6-00 p.m. on 3—4—1972.

Time and date for the withdrawal of nominations : 5-00 p.m. on 4—4—1972.

Nomination forms can be had from the Secretary. There will be election, if the number of candidates nominated exceeds six. The date and time of the poll, if any, will be intimated later.

(3) DISCUSSION ON THE POLICY NOTES ON COMMUNITY DEVELOPMENT PROJECTS, NATIONAL EXTENSION SERVICE AND LOCAL DEVELOPMENT WORKS AND PUBLIC WORKS GRANTS-IN-AID.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Education will move the motion standing in his name.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : " சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி—உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகள், பொதுப் பணிகளுக்கான மானிய உதவி ஆகியவற்றின் மீதான கொள்கைக் குறிப்புகள்* விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

Mr. Chairman ; Motion moved " That the Policy Notes on Community Development Projects, National Extension Service and Local Development Works and Public Works Grants-in-aid, laid on the table of the House be taken into consideration ".

* Printed as Appendix II on pages 268 297.

3 20. p.m.

[29th March 1972

மிஸ்டர் சேர்மன் : இன்று சபை 5½ மணிக்கு முடிவடைய வேண்டும். ஆகவே பேசுகிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிஷத்திற்குள் பேச வேண்டும். அதற்கு மேல் நேரத்தை நீடித்துக் கொண்டு, மேல் அடுக்கும் துரிதப்படுத்திய நிலையை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. மு. ராமலிங்கம் : தலைவர் அவர்களே, "சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் தேசிய வளர்ச்சிப் பணிகள், உள்ளாட்சிப் பணிகள்" பற்றிய அரசின் கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்லுகிற வாய்ப்பு தந்திருப்பதற்கு முதலிலேயே தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடந்த காலத்தில் இருந்த குறைபாடுகள் எல்லாம் நீங்கப்பெற்று, ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்துக்கு நிலைக்களனாக இருக்கிற கிராமங்கள், அதாவது ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள், வளர்ச்சி மையங்கள் எல்லாம் செயல்பட்டு கிராமங்களினுடைய அடிப்படையில் தேவைகள் எல்லாம் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டு, நல்ல முன்னேற்றமான நிலையில் மக்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் திட்டங்களுக்கு இந்த உள்ளாட்சி மன்ற நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்காக நான் நிர்வாகத்தைப் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தக் குறிப்பில் 12,642 கிராமப் பஞ்சாயத்துக்களும், 600 பேரூராட்சி மன்றங்களும், 374 நகராட்சி மன்றங்களும், 12 டவுன்ஷிப்புகளும், எப்படிப் பரிபாலிக்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கங்கள் எல்லாம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. நான் இந்தக் கருத்துரையைச் சொல்லுகிற சந்தர்ப்பத்தில் இன்னும் மிகத் திறமையான முறையில் திறம்பட இந்த நிர்வாகம் நடைபெற்று வருவதற்காக நடைமுறையில் இருக்கிற சில சிக்கல்களைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனென்றால் கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வெறும் ஐந்து ஊராட்சி உறுப்பினர்களைக் கொண்ட 100 விடுகளுக்குக் குறைவாக இருக்கிற முடுக்கன்துரை ஊராட்சி கிராமப் பஞ்சாயத்து, பவானிசாகர் யூனியனில் இருக்கிறது. அதே போல் 7, 8 மைல் பரப்பு அளவிலும் இருக்கிறது. 30, 35 சின்னச் சின்ன கிராமங்களை ஒன்று சேர்த்திருக்கிற கெட்டிச் செவியூர் என்பதும் ஒரு கிராமப் பஞ்சாயத்தாக இருக்கின்றது. அல்வாறு இருப்பதால், எந்த வகையான முன்னேற்றமான காரியங்களையும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமாக அலுவலகம் இல்லாத காரணத்தால், அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்களின் அலுவலகங்கள் எல்லாம் தலைவர்களின் வீட்டில் உள்ளன. அந்தத் தலைவர்களில் சிலர் வீட்டிலும் அலுவலகங்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். சில வசதி படைத்தவர்கள் தங்களின் தோட்டத்தில் பஞ்சாயத்து அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள். அந்த நிலைமை, நிர்வாகத்திறகு ஏற்ப ஒரு மரபுவழி, சிறப்பாக அமையாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு

29th March 1972] [திரு. மு. இராமலிங்கம்]

கிறேன். எனவே திட்டமிட்டு படிப்படியாக ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு ரூ. மூவாயிரம், நாலாயிரம் என்று இந்தக் கிராமப் பஞ்சாயத்துகளுக்குச் சொந்த அலுவலகங்களைப் பொதுவான இடத்தில் அமைத்துக் கொடுப்பது இந்த நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வழி கோலும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல், பேரூராட்சி மன்றங்கள் 600 இருக்கின்றன என்றாலும், இப்போது நான் குறிப்பிட்டது போல் 5,000 மக்கள் தொகையும் ரூ. 10,000 வருமானமுமுள்ள எந்த இடத்தையும் பேரூராட்சி மன்றம் என்று அறிவிக்கின்ற நிலைமையிருக்கிறது. இப்படி இருக்கிற பேரூராட்சி மன்றங்கள் எல்லாம் இன்னும் கொஞ்ச காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்று நகராட்சி மன்றங்களாக வளர வேண்டிய நிலைமை இருப்பதால், நடைமுறையில் நாம் பரிசீலித்துப் பார்க்கும்பொழுது, கோவை மாவட்டத்தில் பவானி, புஞ்சைபுளியம்பட்டி போன்ற பேரூராட்சி மன்றங்கள் நீங்கலாக மற்ற பேரூராட்சி மன்றங்கள் எல்லாம் கிராமங்களை இணைத்த நகரங்களாக இருக்கின்றன. பேரூராட்சி மன்றங்களுக்கு அவ்வாறு நிலைமை இல்லாமல், 8, 9 மைல் பரப்பு அளவில் இருக்கிறது. 35, 40 கிராமங்களை உள்ளடக்கியிருக்கின்றன. அப்படிப் பேரூராட்சி மன்றங்கள் இருப்பதால், பல்வேறு வகையான நிர்வாகச் சிக்கல்கள், கோளாறுகள் ஏற்படும். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்திலிருக்கிற அந்தியூர் பேரூராட்சி மன்றத்தில் அவ்வாறிருந்த நிலைமையை மாற்றியமைக்கிற நிலையினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அது அந்தியூர் பேரூராட்சி மன்றம் என்றும் சின்னத்தம்பி பாளையம், மைக்கேல் பாளையம் என்று இரண்டு மைனர் பஞ்சாயத்துக்களாகவும் பிரிக்கப்பட்டது. அதேபோல் மற்றொரு தாலுகா தலைநகரம், அவிநாசி பேரூராட்சி மன்றம், தனியாக பேரூராட்சி மன்றமாக இயங்குகிற அளவுக்கு வருமானமும் மக்கள் தொகையும் இருந்தும் இந்த அவிநாசி பேரூராட்சி பல்வேறு கிராமங்களை உள்ளடக்கியிருக்கிறது. அவ்வாறில்லாமல் இந்தக் கிராமங்களையெல்லாம் நீக்கி கிராமம் இணையாத நகரமாகும்படி பேரூராட்சி மன்றத்தை நாம் மாற்றினால், அது நிர்வாகத்திற்கு மிகுந்த வாய்ப்புடையதாக இருக்கும். இப்படிப்பட்ட கிராமங்களைச் சேர்த்து அமைக்கின்ற பேரூராட்சி மன்றங்கள் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்திச் செல்ல முடியாத நிலை இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவென்றால் ஒரு ஊர், குறிப்பாக சாவக்கட்டுபாளையம், எம்மான் பூண்டி, பொலவபாளையம், தத்தனூர் ஆகிய 3 பஞ்சாயத்துக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்துகளிலும் இந்த மூன்று பஞ்சாயத்துகளும் ஒரு ஊரைத் துண்டு துண்டாகக் கூறுபோட்டுக்கொண்டிருக்கிற நிலைமையில் அதில் இரண்டு பஞ்சாயத்துகள் கோபித் தாலுகாவிலும் தத்தனூர் அவினாசி தாலுகாவிலும் இருக்கிற இந்த நிலைமை இருப்பதும், சாவக்கட்டுப் பாளையம் தனியாக ஒரு டவுன் பஞ்சாயத்தாக இயங்கக்கூடிய அளவுக்கு மக்கள் தொகையும் வருமானமும் இருக்கின்ற ஊராக இருந்தாலும் கடந்த காலத்தில் ஏறபட்ட பல்வேறு

3 20. p.m.

[29th March 1972

மிஸ்டர் சேர்மன் : இன்று சபை 5½ மணிக்கு முடிவடைய வேண்டும். ஆகவே பேசுகிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிஷத்திற்குள் பேச வேண்டும். அதற்கு மேல் நேரத்தை எடுத்துக் கொண்டு, மெல் அடிக்கும் நிலையை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. மு. ராமலிங்கம் : தலைவர் அவர்களே, "சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் தேசிய விரிவாக்கப் பணிகள், உள்ளாட்சிப் பணிகள்" பற்றிய அரசின் கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்லுகிற வாய்ப்பு தந்திருப்பதற்கு முதலிலேயே தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடந்த காலத்தில் இருந்த குறைபாடுகள் எல்லாம் நீங்கப்பெற்று, ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்துக்கு நிலைக்களனாக இருக்கிற கிராமங்கள், அதாவது ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி நிறுவனங்கள் எல்லாம் செயல்பட்டு கிராமங்களினுடைய அடிப்படையான தேவைகள் எல்லாம் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டு, நல்ல முன்னேற்றமான நிலையில் மக்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் இங்கே, இந்த உள்ளாட்சி மன்ற நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்காக நான் நிர்வாகத்தைப் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தக் குறிப்பில் 12,642 கிராமப் பஞ்சாயத்துக்களும், 600 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 12 டவுன்ஷிப்புகளும், எப்படிப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன என்பது பற்றிய விளக்கங்கள் எல்லாம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. நான் இந்தக் கருத்துரையைச் சொல்லுகிற சந்தர்ப்பத்தில் இன்னும் மிகத் நிறைமையான முறையில் திறம்பட இந்த நிர்வாகம் நடைபெற்று வருவதற்காக நடைமுறையில் இருக்கிற சில குறைகளைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனென்றால் கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வெறும் ஐந்து ஊராட்சி உறுப்பினர்களைக் கொண்ட 100 விடுகளுக்குக் குறைவாக இருக்கிற முடுக்கன்துரை ஊராட்சி கிராமப் பஞ்சாயத்து, பவானிசாகர் யூனியனில் இருக்கிறது. அதே போல் 7, 8 மைல் பரப்பு அளவிலும் இருக்கிறது. 30, 35 சின்னச் சின்ன கிராமங்களை ஒன்று சேர்த்திருக்கிற கெட்டிச் செவியூர் என்பதும் ஒரு கிராமப் பஞ்சாயத்தாக இருக்கின்றது. அல்வாறு இருப்பதால், எந்த வகையான முன்னேற்றமான காரியங்களையும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமாக அலுவலகம் இல்லாத காரணத்தால், அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்களின் அலுவலகங்கள் எல்லாம் தலைவர்களின் வீட்டில் உள்ளன. அந்தத் தலைவர்களில் சிலர் வீட்டிலும் அலுவலகங்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். சில வசதி படைத்தவர்கள் தங்களின் தோட்டத்தில் பஞ்சாயத்து அலுவலகங்களை ஏற்படுத்திருக்கிறார்கள். அந்த நிலைமை, நிர்வாகத்திற்கு ஏற்ப ஒரு மரபுவழி, சிறப்பாக அமையாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு

29th March 1972] [திரு. மு. இராமலிங்கம்]

கிறேன். எனவே திட்டமிட்டு படிப்படியாக ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு ரூ. மூவாயிரம், நாலாயிரம் என்று இந்தக் கிராமப் பஞ்சாயத்துகளுக்குச் சொந்த அலுவலகங்களோ பொதுவான இடத்தில் அமைத்துக் கொடுப்பது இந்த நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வழி கோலும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல், பேரூராட்சி மன்றங்கள் 600 இருக்கின்றன என்றாலும், இப்போது நான் குறிப்பிட்டது போல் 5,000 மக்கள் தொகையும் ரூ. 10,000 வருமானமுமுள்ள எந்த இடத்தையும் பேரூராட்சி மன்றம் என்று அறிவிக்கின்ற நிலைமையிருக்கிறது. இப்படி இருக்கிற, பேரூராட்சி மன்றங்கள் எல்லாம் இன்னும் கொஞ்ச காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்று நகராட்சி மன்றங்களாக வளர வேண்டிய நிலைமை இருப்பதால், நடைமுறையில் நாம் பரிசீலித்துப் பார்க்கும்பொழுது, கோவை மாவட்டத்தில் பவானி, புஞ்சைபுளியம்பட்டி போன்ற பேரூராட்சி மன்றங்கள் மற்ற பேரூராட்சி மன்றங்கள் எல்லாம் கிராமங்களே இணைத்து நகரங்களாக இருக்கின்றன. பேரூராட்சி மன்றங்களுக்கு அவ்வாறு நிலைமை இல்லாமல், 8, 9 மைல் பரப்பு அளவில் இருக்கிறது. 35, 40 கிராமங்களே உள்ளடக்கியிருக்கின்றன. அப்படிப் பேரூராட்சி மன்றங்கள் இருப்பதால், பல்வேறு வகையான நிர்வாகச் சிக்கல்கள், கோளாறுகள் ஏற்படும். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்திலிருக்கிற அந்தியூர் பேரூராட்சி மன்றத்தில் அவ்வாறிருந்த நிலைமையை மாற்றியமைக்கிற நிலையினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அது அந்தியூர் பேரூராட்சி மன்றம் என்றும் சின்னத்தம்பி பாளையம், மைக்கேல் பாளையம் என்று இரண்டு மைனர் பஞ்சாயத்துக்களாகவும் பிரிக்கப்பட்டது. அதேபோல் மற்றொரு தாலுகா தலைநகரம், அவினாசி பேரூராட்சி மன்றம், தனியாக பேரூராட்சி மன்றமாக இயங்குகிற அளவுக்கு வருமானமும் மக்கள் தொகையும் இருந்தும் இந்த அவினாசி பேரூராட்சி பல்வேறு கிராமங்களே உள்ளடக்கியிருக்கிறது. அவ்வாறில்லாமல் இந்தக் கிராமங்களையெல்லாம் நீக்கி கிராமம் இணையாத நகரமாகும்படி பேரூராட்சி மன்றத்தை நாம் மாற்றினால், அது நிர்வாகத்திற்கு மிகுந்த வாய்ப்புடையதாக இருக்கும். இப்படிப்பட்ட கிராமங்களைச் சேர்த்து அமைக்கின்ற பேரூராட்சி மன்றங்கள் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்திச் செல்ல முடியாத நிலை இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவென்றால் ஒரு ஊர், குறிப்பாக சாவக்கட்டுபாளையம், எம்மான் பூண்டி, பொலவபாளையம், தத்தனூர் ஆகிய 3 பஞ்சாயத்துக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்துகளிலும் இந்த மூன்று பஞ்சாயத்துகளும் ஒரு ஊரைத் துண்டு துண்டாகக் கூறுபோட்டுக்கொண்டிருக்கிற நிலைமையில் அதில் இரண்டு பஞ்சாயத்துகள் கோபித் தாலுகாவிலும் தத்தனூர் அவினாசி தாலுகாவிலும் இருக்கிற இந்த நிலைமை இருப்பதும், சாவக்கட்டுப் பாளையம் தனியாக ஒரு டவுன் பஞ்சாயத்தாக இயங்கக்கூடிய அளவுக்கு மக்கள் தொகையும் வருமானமும் இருக்கின்ற ஊராக இருந்தாலும் கடந்த காலத்தில் எறபட்ட பல்வேறு

அரசியல் நோக்கங்களால் அந்த சாவக்கட்டு பாளையமானது மூன்று பஞ்சாயத்துகளுடன் இணைக்கப்பட்டு பிரிக்கப்பட்டு சீரழிந்திருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோல் நம்பியூரில் இருக்கிற தம்மம்பாளையம், வரப்பாளையம், அஞ்சனூர், வேமாண்டாம்பாளையம் பஞ்சாயத்துக்களில் மூன்று பஞ்சாயத்துகள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். அதே போல் பேரூராட்சி மன்றங்கள் அல்லாமல் பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டால், சில யூனியன்கள் ரூ. 10 லட்சம், ரூ. 15 லட்சம் பொது நிதி வசதியுடைய யூனியன்களாக இருக்கின்றன. சில யூனியன்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருக்கிறது. அண்மையில் கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் நகராட்சி மன்றமாக ஆக்கப்பட்டது. தற்சமயத்தில் சத்தியமங்கலத்தைச் சுற்றியிருக்கிற பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன், நம்பியூர் பஞ்சாயத்து யூனியன், சத்தியமங்கலம் பஞ்சாயத்து யூனியன், கோபி பஞ்சாயத்து யூனியன், தூக்கநாயக்கன் பாளையம் பஞ்சாயத்து யூனியன் இவைகள தனித்தனியாக எல்லைகளைப் பிரிசீலனை செய்து பிரிக்கப்பட்டன. பிரிக்கிற நேரத்தில் ரூ. 9 அல்லது 10 லட்சம் பொது நிதியிருக்கிற கோபி யூனியனில் மேலும் அதிகப்படியான வருமானமுள்ள பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டன. ஏற்கனவே அதிக வருமானமுள்ள பஞ்சாயத்து யூனியனுக்கு மேலும் அதிகமான வருமானம் வரக்கூடிய நிலைமையில், ஏற்கனவே குறைந்த வருமானம் பெற்ற பவானிசாகர் போன்ற யூனியன் மேலும் குறைந்த வருமானம் கிடைக்கப்பெறுகிற அளவில் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் நாடு முழுவதும் இருக்கிற நிலைமையை மாற்றி, பெரிய யூனியன்களைச் சிறிதாக்குகிற வகையில் அரசு திட்டமாக ஏற்கவேண்டும். அதைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லது மேலவை உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்படுகிற நிலைமை மாற்றப்பட்டு, அரசாகவே பரிசீலனை செய்து கொள்கை அளவில் இந்த மாதிரி வருமானம் சீராக வருகிற அளவில் யூனியன்களின் எல்லை நிர்ணயம் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும். டவுன் பஞ்சாயத்துகளும் மறு பரிசீலனை செய்யப்பட்டு, கிராமப் பஞ்சாயத்துகளும் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட வேண்டுகிறேன். இன்று அரசு எடுத்திருக்கிற எனைய அபிவிருத்தி முயற்சி மலைக்கத்தக்க அளவுக்கு இருக்கிறது என்பதை மறைக்க முடியாது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புஞ்சைப் புளியம்பட்டியில் ரூ. 30 லட்சம் செலவில் குடி தண்ணீர்த் திட்டமொன்றைத் தொடங்கி வைத்தார்கள். அதே போல் ரூ. 20 லட்சத்தில் பவானிசாகர் குடி தண்ணீர்த் திட்டத்தையும், ரூ. 25 லட்சம் செலவில் காங்கேயம் குடி தண்ணீர்த் திட்டத்தையும் கோவை மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் இதில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, பவானி ஆற்றிலிருந்து புஞ்சைபுளியம்பட்டிக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தில் நீரை "மெயின் குழாய்" மூலம் கொண்டுவரும் போது, இடையிலுள்ள சிறு பஞ்சாயத்துக்களுக்கும் அதிலிருந்து நீர் வழங்கினால்,

அச்சிறு கிராமங்களும் குடி நீர் பெற முடியும். எனவே இடையிலுள்ள சிறு கிராமங்களையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு இப்படிப்பட்ட கிராமங்களுக்கு இதனால் ஏற்படும் செலவினை ஏற்றுக் கொள்ளத்தக்க அளவிற்கு வருமானம் இல்லாத காரணத்தினால், இந்தக் கிராமங்கள் இத்திட்டத்தின் பயனைப் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கிராமங்களும் இத்திட்டத்தின் பயனை அனுபவிக்கத்தக்க அளவிற்குத் திட்டம் தீட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக பவானி ஆற்றிலிருந்து புஞ்சைப்புளியம்பட்டிக்கு வரும் மெயின் குழாயிலிருந்து வழியிலுள்ள கிராமங்களுக்கு இரண்டொரு லன் எடுத்து தண்ணீர் எடுத்துக்கொள்ள அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோவை நகரின் குடி நீர் தேவையைப் பொறுத்த வரையில், விரிவான முறையில் இப்போது நெல்லித் துறை குடி நீர்த்திட்டம் பற்றிய பரிசீலனை இருக்கிறது. கோவை மக்களுக்கு நெல்லித்துறைத் திட்டம் அல்லது சிறுவாணித் திட்டம் தான் நிரந்தரமான பரிகாரமாக இருக்கும். இந்தத் துறையில் நமது மாநிலத்தின் "வாட்டர் போர்டு" மிகச் சிறப்பான பணியாற்றிவருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதில் ஒன்றைச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது அண்மையில் வறட்சி ஏற்பட்டபோது, வறட்சி நிவாரண வேலைகளாக ஒவ்வொரு பகுதிக்கும் ரூ. 80 ஆயிரம், ரூ. 82 ஆயிரம் என்ற அளவிற்கு நிதி ஒதுக்கி, கிணறுகளைத் தோண்டுவதற்காகக் கொடுத்திருக்கின்றார்கள். அதிலுள்ள ஒரு விதி, இப்பணத்தைக் கிணறுகள் தோண்டுவதற்குத் தான் உபயோகிக்க வேண்டும் என்பதாகும். பல இடங்களிலே ரூ. 40 அல்லது ரூ. 45 ஆயிரம் என்று செலவிட்டும், நீர் வராத காரணத்தினால், முழுமையாகக் கிணறு வெட்டப்படாமல் நின்றிருக்கின்றது. இந்த முறையில் கொடுக்கப்பட்ட தொகையில் பெரும்பகுதி செலவழிக்கப்படாமலிருக்கிறது. இப்போது புதிதாக வெட்டப்பட்ட தண்ணீருள்ள கிணறுகளிலிருந்து மேற்படி அந்தக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வழங்கிட மேற்படி திட்டத்தொகையை, மாற்றி திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஊருக்கு சிறு குழாய் பதித்து மேற்படி கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து தந்திட, மேற்படி செலவழிக்கப்படாமலுள்ள தொகையினை உபயோகித்து மெயின் குழாயிலிருந்து ஒரு பர்லாங்கு அல்லது இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு சிறு குழாய்கள் போட்டு அந்த நீரின் உதவியால் இத்தகைய கிராமங்களுக்கு கிணற்றுக்குப் பதிலாக இப்படி ஒரு குடி நீர் திட்டத்தை அமைத்தால், அந்த கிராமம் பலன் பெறும். எனவே இதற்கு அந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க விதத்தில் உத்திரவுகளைத் திருத்திக்கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் நமது நாட்டில் இன்றைய தினம் தமிழகத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. இவைகளில் மொத்தமாக 1971-ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலுள்ள புள்ளிவிவரப்படி 3,177 தொடக்கப் எலிமெண்டரி பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் பெரும்பாலான

[திரு. மு. இராமனாதன்] [29th March 1972

பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாமலிருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சி முடிந்து கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக வேலையின்றி இருக்கிறார்கள். கோவையில் மட்டும் 150க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள். எனவே இப்படி வேலையின்றி இருக்கும் இந்த ஆசிரியர்களுக்கு வேலையளிக்கும் வகையில் இந்த 3,177 பள்ளிகளில் எங்கெங்கே இப்படிப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றார்களோ, அங்கேயெல்லாம் இவர்களை நியமிக்க அரசு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

*திரு. ஏ. பி. ஜனார்த்தனம் : தலைவர் அவர்களே, இரண்டு பெரிய இலாக்காக்களை எடுத்துக் கொண்டு, எதையும் தாங்கும் இதயம் மட்டுமல்ல, எதையும் தாங்கும் தோள்களும் உண்டு என்று மெய்ப்பித்து வரும் நாவலர் அவர்களுக்கு என் பாராட்டுதல்களை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முப்பது ஆண்டு காலத்திற்கு முன்பு எந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டாலும் Rural Economics என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள், கிராமியப் பொருளாதாரம் என்று, அது பற்றி

"Dynasty after dynasty tumbles down. Revolution succeeds revolution; but the average community remains the same".

என்று ஆஸ்கார் லூயிஸ் என்ற மேநாட்டு அறிஞர் சொன்னது போல, எந்த மன்னர் வந்தாலும், எத்தகைய புரட்சி வந்தாலும், கிராம வாழ்க்கை ஒரே சீராக, பெரும் சகதியில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்றிருந்த நிலை மாறி, கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி, "ப்ளாக் டெவலப்மெண்ட்" என்ற பெயராலும், "கம்யூனிடி டெவலப்மெண்ட்" "நேஷனல் எக்டென்ஷன் ஸர்வீஸ்" என்ற பெயராலும் இந்தியாவிலுள்ள கிராமங்களுக்குப் புத்துயிர் ஊட்டி, இன்றைக்கு கிராம மக்களுடைய வாழ்வில் பெரும் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். மேலும் பழைய ஏற்பாடுகளைத் தகர்க்கவும், புதிய ஏற்பாடுகளை முறைகளைப் புகுத்தவும் குடும்ப நலத்திட்டம் முதற் கொண்டு, மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற புதிய விதி முறைகளையும், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அமைப்புகளையும் ஏற்படுத்த ஆயிரக்கணக்கானவர்கள் அரும்பாடு பட்டு வந்திருக்கின்றார்கள். இதில் ஓரளவு பலனைக் காண்கிறோமே தவிர, நாம் விரும்பிய அளவிற்குப் பலன் கிடைக்கிறதா என்றால், இல்லை யென்று தான் சொல்ல வேண்டும். காரணம் நமது மக்களுள் "விவிக் ஸென்ஸ்", அதாவது மக்களின் அன்றாட வாழ்வினை யொட்டிய பிரச்சினைகளிலுள்ள ஈடுபாடு சற்று தேக்க நிலையில் இருப்பது பொதுவாக நமது நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தாலும் இந்த ஈடுபாடு தேக்க நிலையில் இருக்கிறது. மற்ற நாடுகளில் காணப்படும் பலன்களை இன்னும் நாம் ஈர்க்கவில்லை, நுகரவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எதோ இது "நம்

29th March 1972] [திரு. ஏ. பி. ஜனார்த்தனம்]

தலைவிதி, நாம் இப்படித்தான் வாழ வேண்டும், யார் ஆண்டால் என்ன, நமக்கு என்று உலக வாழ்வில் ஒரு இடம் இருக்கிறது, எப்படியோ வாழ்வைக் கழித்து விட்டு அடுத்த உலகத்திற்குப் போவோம்" என்ற எண்ணம்தான் நமது மக்களில் பெரும்பாலானவர்கள் மத்தியில் வெகுகாலமாக இருந்து வந்தது. இந்த எண்ணத்தை உடைக்க வேண்டும், மக்களை முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட வேண்டும் என்று கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளாக நமது நாட்டில் பல பெரியவர்கள் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். காந்தியடிகள் முதற் கொண்டு, பல பெரியவர்கள் சமுதாயத் துறையில் மக்கள் முன்னேற்றம் காண வேண்டுமென்று பாடுபட்டிருக்கின்றார்கள். எஸ்ப். எல். ப்ரெயின் என்ற ஆங்கிலேயர் எழுதியுள்ள "ஸாகரடீஸ் ஆஃப் இண்டியன் வில்லேஜ்" (Socrates of Indian Village) என்ற நூலை நான் படித்திருக்கிறேன். அந்தக் காலத்திலே மிகமிக முற்போக்கான கருத்துக்களைக் கொண்ட ஸாக்ரட்டீஸ் எப்படி எது ஒன்றையும் கேள்விகள் கேட்டு, துருவித் துருவிக் கேள்விகளைக் கேட்டு, தக்க விளக்கங்கள் பெற்று ஒன்றை ஏற்றுக்கொண்டாரோ அது போன்றே இந்திய மக்களுடைய வாழ்வு முறைகள் பற்றி இவர் பல கேள்விகளைக் கேட்டு ஆராய்ந்து, இவர்கள் எப்படி எப்படியெல்லாம் முன்னேற்றம் காண வேண்டும் என்றெல்லாம் எழுதியிருக்கின்றார். மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக, நமது மக்கள் அப்படிப்பட்ட விழிப்புணர்ச்சிக்கு ஆளாகி வருகின்றார்கள். இதை ஓரளவிற்குப் பாராட்டத்தான்வேண்டும். இன்னும் வேகமாக இப்படிப்பட்ட முறைகளை நாம் கையாள வேண்டிய அவசியத்திலிருக்கின்றோம். கிராம வாழ்வு சிக்கல் மிக்கது. அவர்கள் சில உறுதியான மாற்ற முடியாத நம்பிக்கைகளையும் எண்ணங்களையும் கொண்டவர்கள். அவர்களிடையே புதியதொரு விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவது என்பது எளிதல்ல. ஆனாலும் அப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டுவந்துதான் ஆக வேண்டுமென்ற நிலையில், அவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தாமல் பக்குவமாக, ஆனால் உறுதியாக, அவர்களுடைய எண்ணங்களையும் வாழ்க்கை அமைப்பின் போக்குகளையும் மாற்ற வேண்டும். இவை அனைத்தையும் சமுதாய நலனுக்கான திட்டங்களை உள்ளாட்சித் துறை என்ற அமைப்பின் மூலம் முறையாகச் செயல்படுத்துவதன்மூலம் நாம் பெறமுடியும். இன்றைய தினம் அரசு இதற்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி எவ்வளவோ பேரை இப்படிப்பட்ட பணிகளுக்காக கிராமங்களுக்கு அனுப்பியிருக்கும் நேரத்தில் அவர்கள் அதிக ஊக்கத்தோடு பாடுபட வேண்டியது மிகமிக அவசியமாகும். இதில் அரசுத் துறையிலிருந்து வருபவர்களோடு, கிராமத்திலுள்ள மக்களுடைய ஒத்துழைப்பும் அதிகமாகத் தேவைப்படுகிறது. நான்கைந்து நாட்களுக்கு முன்பு "ஹிந்து" பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்துப் பார்த்தேன். இங்கிலாந்து நாட்டில், சண்டை நேரிட்டபோது, மக்களுக்குக் கொடுக்க வேண்டியதைவிட அதிகமாக சர்க்கரையை "ரேஷனில்" கொடுத்துவிட்டார்கள், அதை மீண்டும் திருப்பிக் கொடுத்துவிட மக்கள் வேண்டும் என்று அரசு அறிக்கை விட்டது; அதை என்று, வாங்கிய சர்க்கரையைத் திருப்பித்தருவதற்கு ஏற்று,

ஏராளமான மக்கள் "க்யூ" வரிசையில் நின்றுகொண்டிருந்தார்கள் என்பதுதான் அந்தச் செய்தி. நல்ல எண்ணத்தோடு நெஞ்சுறுதியோடு நாமும் அப்படிச் செயல்பட்டால், அத்தகைய தொரு நிலையை நாமும் அடைய முடியும் என்பதில் பஞ்சமே இல்லை. இப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு உள்ளாட்சித் துறைதான் பெரிதும் பயன்படும். இத்துறைதான் நமக்குப் பயிற்சிப் பள்ளியாக இருந்திருக்கிறது. பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் இந்த உள்ளாட்சித் துறையிலே முதலில் காலடி வைத்துத்தான், பிறகு உச்ச நிலைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இதைப்பற்றி எண்ணுப்போது, உள்ளாட்சித்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த பல பெருந்தலைவர்களுடைய பெயர்கள் கவனத்திற்கு வருகின்றன. வெள்ளுடை வேந்தர் ஸர். தியாக ராஜர் போன்றவர் சென்னையில் தலைவராக இருந்திருக்கின்றார். பெரியார் ராமசாமி அவர்கள் ஈரோடு நகர மன்றத்தின் தலைவராக இருந்திருக்கின்றார். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சேலம் மாநகராட்சியின் தலைவராக இருந்திருக்கின்றார். என் இவர்களைக் குறிப்பிடுகின்றேன் என்றால், நல்ல பயிற்சிகள் இவர்களுக்கு அங்கே கிடைத்தன. தென்னாற்காடு ஜம்புலிங்கம், பன்னீர் செல்வம், மதுரை சௌந்திர பாண்டியன் இவர்களுடைய பெயர்களை நாம் என்றைக்கும் மறக்க முடியாது. இப்படிப்பட்ட பெரியவர்கள் அளித்த பிச்சையைத்தான் நாம் இன்றைக்கு அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்.

மிஸ்டர் சேர்மன்: நாம் அறுவடை செய்யவில்லை. வேறு யாரோ அறுவடை செய்திருக்கிறார்கள்.

திரு. எ. பி. ஜனார்த்தனம்: காங்கிரஸில் நல்ல நிர்வாகஸ்தர்கள் இல்லையா என்றால் இருந்திருக்கின்றார்கள். காங்கிரஸில் குறிப்பாக இரண்டு பேர் என்றைக்கும் நன்றிக்குரியவர்களாக இருக்கின்றார்கள். ஒருவர் எங்களுக்கு ஜென்மப் பகைவர் போலக் காட்சியளித்த காலம் சென்ற சத்தியமூர்த்தி அவர்கள். "தென்னாற்காடு இராவணனை ஒழித்து விடுவேன், தஞ்சை கும்பகர்ணனை ஒழித்து விடுவேன்" என்றெல்லாம் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் காங்கிரசில் அவர் இருந்திருந்தாலும், பூண்டி நீர்த்தேக்கத்தினை ஏற்படுத்துவதற்காக அவர் செய்த சேவைகளை நன்றியுள்ள எவரும் மறக்க முடியாது. சேலம் மாவட்டத்திற்குச் சென்றால், நாச்சியப்ப கௌண்டர் அவர்கள் ஆற்றிய பணியினை யாரும் எண்ணமலிருக்க முடியாது.

3-40 p.m. எனக்குப் பத்து நிமிஷமே தந்திருப்பதால், அந்த நேரத்திற்குள் ஒரு இரண்டு மூன்று கருத்தை மட்டும் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன். வேலை நேரங்களில் டாக்டர்கள் போன்றவர்கள் தங்களுடைய சிட்டில் அவசியம் இருத்தல் வேண்டும். உயிர் போகின்ற நிலையில் பல நோயாளிகள் கட்டை வண்டிகளில் படுத்துக் கொண்டு வந்து பார்த்தால், மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லையென்றால், அவர்கள் எவ்வளவு அவதிப் படுவார்கள்? நிச்சயமாக டாக்டர்கள் இருந்தே தீர வேண்டும். எனக்கு

ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு கௌன்சிலர் இருந்தார். 25 ஆண்டுக் காலம் கௌன்சிலராகவே இருந்தார். தினமும் காலை 5½ மணிக்கு எழுந்துகொண்டு பல்குச்சி ஒன்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விடுவார். 8½ மணிவரையில் தன்னுடைய வார்டை சுற்றிப் பார்த்துவிட்டு வருவார். தன்னுடைய வார்டை கண்ணுடிபோல் வைத்துக் கொண்டிருந்தார். அத்தகைய தகுதியை எல்லோரும் பெற வேண்டும்.

கடைசியாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிறிய விழாக்களுக்கெல்லாம் மந்திரிகளை அழைத்து நச்சு செய்யக் கூடாது. நீங்கள் வந்தால்தான் எங்கள் ஊரிலே மின்சார விளக்குகள் ஏற்றமுடியும், நீங்கள் வந்தால்தான் எங்கள் ஊரிலே மேல் தொட்டி திறக்க முடியும் என்றெல்லாம் செல்லக் கூடாது. ஒரு நேரத்தில் என்னைப் பார்த்து ஒருவர் நீங்கள் வந்தால்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொன்னார். அது கூடாது. அந்த நிலைமைகள் மாற வேண்டும். ஆகவே அமைச்சர்கள் ஓரளவு இயங்க நாம் உதவியாக இருக்க வேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் திருவரும்பூரில் ஒரு நிகழ்ச்சியில் எடுத்துச் சொன்னார்கள், "இவ்வளவு எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி.க்கள் இருக்கிறார்களே, அவர்களில் ஒருவரை அழைத்து இந்த நிகழ்ச்சியை நடத்தியிருக்கக் கூடாதா, என்னை என் இதற்கு வரும்படி அழைக்கின்றீர்கள்?" என்று. அத்தகைய முறையில் நாம் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, எனக்கு வாய்ப்பு வரும்போது மற்றவற்றை எடுத்துச் சொல்லுகிறேன் என்று கூறி, இந்த நல்ல முயற்சிகளுக்கெல்லாம் திட்டமிட்ட டாக்டர் நாவலர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நிறுத்திக் கொள்கிறேன்.

*திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டம், தேசிய வளர்ச்சிப் பணி ஆகியவை குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன் பேசிய நண்பர்கள் நம் முடைய தமிழ் நாட்டில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன்களுடைய நடைமுறை களைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் ஒவ்வொரு பகுதிக்கு ஒரு விஸ்தரிப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பள்ளித் துணை தணிகையாளர் என்ற பெயரில் ஒவ்வொரு தாலுக்காவிலும் அல்லது ஒவ்வொரு பிர்க்காவிலும் கல்விக்கென்று ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அதே நேரத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கல்விப் பணிக்காக ஒரு விஸ்தரிப்பு அதிகாரி நியமிக்கப் பட்டிருக்கிறார். ஆனால் இந்த இரண்டு பேரும் கல்விப் பணியை ஒருமித்த, ஒருங்கிணைந்த முறையில் செய்கின்றார்களா என்றால், நிச்சயமாக இல்லை. "டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்" ஒரு முறையிலும், பஞ்சாயத்து யூனியன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரி ஒரு முறையிலுமாக பணி புரிந்து

[திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [29th March 1972

வருவது நன்கு பிரதிபலிக்கிறது. ஆகையினால் இருவரும் ஒருமித்து காரியம் செய்யவில்லை யென்று தெரிவித்துக் கொளகிறேன். ஒரு எம்.எல்.ஏ.வுக்கு ஒரு தணிக்கையாளர் என்று இருந்தால், அவருக்கு மூன்று நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் அடங்கிய பகுதி வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்களிடமும், அதிகாரிகளிடமும் கலந்துகொண்டு செயல்பட முடியவில்லை. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த ஆண்டில் அதிகப்படியான வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று பல ஆசிரியர்களுக்கு வேலை யளித்து உத்திரவு பிறப்பிட்டது. இந்த ஆசிரியர்களை நியமிப்பதில் சில சங்கடங்கள் இருப்பதாகச் சொல்லி, அவர்களுக்கு இன்னும் நியமன உத்திரவு போடப்படாமலிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில் கல்விப் பணிகளை நிர்வாகிப்பதற்கென ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியில் கல்வி சம்பந்தமான அனைத்து விஷயங்களும் வந்து, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பள்ளித்துணை தணிக்கையாளர் இவர்கள் ஒன்று சேர்ந்து தீர்மானம் செய்ய வேண்டும். ஆகவேதான் துணைத் தணிக்கையாளர்கள் ஆசிரியர்களை நியமித்து அரசு போட்ட உத்திரவைப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. ஆகவே இந்த மாதிரியான சங்கடங்களைப் போக்குவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். நான் இவற்றையெல்லாம் அனுபவ பூர்வ மாகச் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப்பற்றிக் கூற விரும்பு கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு பகுதி சாலை, பஞ்சாயத்துகளுக்கு ஒரு பகுதி சாலை என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. மூன்றுமைல், நான்கு மைல்களுக்கு அப்பால் உள்ள ரோடுகளாகவிருந்தால், பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொள்ளலாம். சில இடங்களில் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் சென்று எங்கள் பஞ்சாயத்தில் நிதி வசதி இல்லை, பராமரிக்க முடியவில்லை, அந்த ரோட்டை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அப்படியே எடுத்துக் கொள்ளவும் செய்கின்றார்கள். அந்தச் சாலைகளையெல்லாம் சரியாகப் பரா மரிக்கின்றார்களா என்றால், முழுமையாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் பல சர்வீஸ் போகின்ற ரோடுகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். எனென்றால், பஸ்கள் போகும்போது அந்த ரோடுகள் மிகவும் பாழடைந்து விடுகின்றன. அவை களைத் திருப்பவும் சீர் செய்து கொடுக்க பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் களால் முடியவில்லை. பட்ஜெட் உரையில் முதலமைச்சர் அவர்கள் குறிப் பிட்டிருந்தார்கள், 1,000 மைல்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று. கிராமங்களில் போக்குவரத்து வசதி சரியாக இருக்க வேண்டுமானால், பஸ் போகும் சாலைகளையெல்லாம் அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, கிராம நல ஊழியர்கள் என்று பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்றார்கள். அந்தக் கிராம நல ஊழியர்கள் வேளாண்மைத் துறைக்காக இருக்கின்றார்கள். அவர்கள் சுமார் பத்து மைல் பரப்பள

29th March 1972] [திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

வுக்குச் சுற்றி வேலை செய்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படு கின்ற பணி என்னவென்றால், அரசு எற்றையெல்லாம் முக்கியமாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறதோ அவையெல்லாம் கொடுக்கப்படு கின்றன. நான் பஞ்சாயத்து யூனிய ங்களில் பெற்ற அனுபவத்தின் மூலமாகச் சொல்கிறேன். எல்லா வேலைகளையுமே, சிறு சேமிப்பிலிருந்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்வரை, மற்றும் விஸ்தரிப்பு அதிகாரிகளால் இடப் படுகின்ற அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கி றார்கள். வேளாண்மைத் துறைக்கு இரண்டு விஸ்தரிப்பு அதிகாரிகள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் எங்கள் பகுதியில் இருக்கின்றார்கள். ஒரு சில இடங்களில் பஞ்சாயத்து யூனியன் டெப்போக்களை இரண்டாகப் பிரித்து இரண்டு இடங்களில் வைத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங் களில் ஒரே இடத்தில் வைத்திருக்கிறார்கள். இரண்டு பேரும் அங்கேயே இருக்கிறார்கள். இந்த விஸ்தரிப்பு அதிகாரிகள் தங்களுடைய அலுவலகங் களைக் கிராமப்புறங்களில் வைத்துக்கொண்டால், பொதுமக்களுக்குப் பெரிதும் வசதியாகவிருக்கும். அவர்கள் எந்தப் பணியைச் செய்ய வேண்டு மென்று அரசும் பொதுமக்களும் நினைக்கின்றார்களோ, அதைச் செய் வதற்கு அவர்கள் தங்களுடைய அலுவலகங்களை கிராமங்களில் வைத்துக் கொண்டால்தான் முடியும் என்பதை மறுபடியும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் உள்ளவர்கள் நகரத்திற்குச் சென்று, பஞ்சாயத்து யூனியன் விஸ்தரிப்பு அதிகாரியைச் காண வேண்டு மென்றால், அவர்கள் இடைக்காத நிலை எற்படுகின்றபோது, அவர்கள் மிகுந்த வேதனை அடைகிறார்கள். இது நாங்கள் அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை என்று கூறிக்கொள்கிறேன். நகரப்புறங்களில்தான் சர்க்கார் அலுவலகங்கள் இருக்க வேண்டுமென்ற முறையை மாற்றி, கிராமப்புறங்களிலும் அந்த அலுவலகங்கள் பரவ வேண்டிய அவசியத்தை அரசு அறிய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். ஆசிரியர்களைப் பற்றி எனக்கு முன் பேசிய பலர் குறிப்பிட்டார்கள். உடற் பயிற்சி ஆசிரியர்களைப்பற்றி நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர் களைப் பற்றி ஒரே ஒரு விஷயம் மட்டும் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் பகுதி நேர ஆசிரியர்களாக இவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். ஒரு பள்ளி உயர்தர ஆரம்பப் பள்ளியாகவிருந்தால், இரண்டு மூன்று பள்ளிகளுக்குச் சேர்ந்து ஒரு ஆசிரியர் போடுவது என்ற முறை இருக்கிறது. அந்தப் பகுதிநேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது 300, 400 பிள்ளைகளுக்கு மேல் உள்ள பள்ளிகள் உயர்தர ஆரம்பப் பள்ளிகளாக்கப்பட்டு அங்கு பி.டி. (B. T.) பட்டம்பெற்ற ஆசிரியர் ஒருவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டு வருகிறார். பி.டி. பயிற்சி பெற்றவரைத் தலைமை ஆசிரியராகப் போட்டு வருகிறார்கள். சில பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் உயர்தரப் பள்ளி அளவுக்கு வந்திருக்கின் றன. அங்கும் பி.டி. பயிற்சி பெற்றவர்களைத் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை என்

[திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [29th March 1972

சொல்கிறேன் என்றால், இந்தப் பள்ளிகளில் படித்துவிட்டு உயர்நிலைப் படிப்புக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செல்கின்றபோது, அங்கு இந்த மாணவர்களைத் தயக்கமின்றி, பி.டி.. பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர் கொண்ட பள்ளியிலிருந்து வந்த மாணவர்கள் என்ற ஒரு நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்க உதவும். ஆகவே, அங்கும் பி.டி. ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாகப் போடுவது நல்லது, அதைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் எல்லாம் ஈரோடு மருத்துவமனையை தலைமை மருத்துவ மனையாக மாற்றியிருக்கின்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்தோம். அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், ஈரோடு நகரத்தில் ரொம்பவும் சிரம மாக இருக்கிறது. ஈரோடு நகரசபை அதற்கான ஏற்பாடுகளை முடிந்த வரை செய்து வருகிறது. இருந்தாலும், இருக்கின்ற குடி தண்ணீர் நிலைமை போதவில்லை. குடி தண்ணீர் வசதிக்காக மக்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு பெரிய திட்டத்தைத் தயாரித்து நிறைவேற்ற நகரசபை தயாராக இருக்கிறது. அதை உடனடியாகத் தயாரித்து வளர்ந்து வரும் நகரமாகிய ஈரோடுக்கு சிறந்த முறையில் குடி தண்ணீர் வசதி செயது தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3-50 p.m.

பஞ்சாயத்து யூனியனைப்பற்றி இரண்டொன்று சொல்ல வேண்டியது முக்கியமான கடமை. நாங்கள் எல்லாம் இப்போது பஞ்சாயத்து யூனியனில் இல்லை. இருந்தாலும் கடந்த கால அனுபவத்திலிருந்து சொல்லுகிறோம். பஞ்சாயத்து யூனியன் தலைவரைப் பொறுத்தவரையில், அவர்கள் விரும்புகிறபடி நல்ல காரியங்களைச் செய்யப் போதுமான அதிகாரம் இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். பெரும் பான்மையான மக்களுடைய பிரதிநிதியாக இருக்கிற யூனியன் தலைவருக்கு அந்த ஆசிரியர் நன்றாக இருந்தாலும் சரி, தவறு செய்திருக்க மாட்டார் என்றே வைத்துக்கொள்வோம்—ஒரு ஆசிரியரை மாறுதல் செய்யக் கூட பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அதிகாரமில்லை என்பதை அரசு தெரிந்திருக்கும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிற தலைவருக்கு அந்த அதிகாரம் கிடையாது. கம்ஷனருக்குத்தான் அந்தக் காரியத்தைச் செய்ய அதிகாரம் இருக்கிறது. இந்த நிலையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் முழுமை யாகச் செயல்பட முடியுமா என்பதை அரசு யோசிக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரங்கள் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வி. வெங்கா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமுதாய வளர்ச்சி குறித்தும் ஊராட்சி ஒன்றியப் பணி குறித்தும் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லுவதற்கு அனுமதி வழங்கியதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரசு ஏற்பட்ட காலத்திலிருந்து தமிழகம் வளர வேண்டுமென்று பலதரப்பட்ட பணிகளை ஆற்றிவந்த போதிலும்,

29th March 1972] [திரு. வி. வெங்கா]

இந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்பட்ட பிறகுதான், அரசு கிராம வளர்ச்சித் துறையில் என்னென்ன அபிவிருத்தி செய்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு வந்தார்கள். அரசுத் துறை யின் சார்பாகச் செய்த நேரத்திலெல்லாம் எந்த நோக்கத்திற்காக அரசு திட்டங்களைத் தீட்டியதோ, அந்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் அவற்றின் பயன் முழுமையாக கிராமங்களில் இருக்கிற சாதாரண மக்க களுக்கு, பாமர மக்களுக்கு, போய்ச் சேரவில்லை. ஆனால், ஒன்றியங்கள் வந்த பிறகு, அரசு எந்தக் காரத்தில் திட்டங்களை உருவாக்குகிறதோ, அந்தத் திட்டங்களின் பயன் முழு அளவில் இடையில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படாமல் கிராமத்தில் இருக்கிற சாதாரண விவசாயிகளுக்கு சென்றடைந்தது என்று நான் நினைக்கிற நேரத்தில், அந்தத் துறைதான் உள்ளபடியே 10 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் கண்ணுக்குத் தெரிந்த அளவில் நல்ல வளர்ச்சியை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தது என்று எடுத்துச் சொல்வதில் பெருமையடைகிறேன். அதோடு மட்டுமல்ல, முடிவுரையில் கூட அமைச்சர் அவர்கள் "தமிழ்நாட்டில் ஏற்பட்ட விவசாயப் பசுமைப் புரட்சிக்கு ஊராட்சி ஒன்றியங்கள்தான் மிகவும் முக்கியமாக அமைந்துள்ளன" என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விவசாயத் துறையானது ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக இருந்த துறைதான். ஆனால் ஊராட்சி ஒன்றியங்களோடு இணைக்கப்பட்ட பிறகு தான், தமிழகத்தில் தன்னிறைவைப் பெறக்கூடிய பசுமைப் புரட்சி உண்டாகியது என்பதில் உள்ளபடியே பெருமையடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். அரசுத் துறையில் இருக்கிறவர்கள் அதிகார மட்டத்தில் உள்ள குறைகளைத் திருத்திக்கொள்ளாத காரணத்தால், பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதைத்தான் மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள், ஓஸ் கட்டியைத் திட்டமாகக் கொடுக்கிறோம், அது யாரிடம் போய்ச் சேர வேண்டுமோ அவர்களிடம் அது போய்ச் சேருகின்ற நேரத்தில் அது ஒரு சொட்டுத் தண்ணீராகப் போய்ச் சேருகிறது என்று சொன்னார் கள். ஆனால் இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், அதிகாரிகளும், ஒன்றுகச் செயல்பட வேண்டிய காரணத் தால், சிறு சிறு தவறு ஏற்பட்டால் கூட, அந்த மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரி களை அணுகி செயலாற்றுகிறார்கள். இதில் சில குறைகள் ஏற்படுகின்றன, சில சமயங்களில் இதில் தவறுகள் ஏற்படலாம் அறியாமலே கூட. எனவே இந்தத் துறை மேலும் வளர வேண்டிய துறையே தவிர, இன்றைய தினம் மற்றவர்கள் சொல்வது போன்று லாயக்கற்ற துறை என்று முடிவுகட்டுவதற்குரிய துறை அல்ல. இந்தத் துறையால் மட்டும் தான் இந்த வளர்ச்சியை நாம் கண்ணால் காண இயலுமே தவிர, வேறு எந்த வகையிலும் முடியாது. ஆகவே இதை மேலும் மேலும் எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்வதில் நம் கவனம் எல்லாம் இருக்க வேண்டும். ஆனால் இந்நிலைமைக்கு மாறாக இன்றைய தினம் வருவாய்த் துறையோடு இது இணைந்திருப்பதால் இந்தச் சமுதாய வளர்ச்சித் துறையானது மாற்றாந்தாய் மனப்போக்கில் தான் காணப்படுகிறது. இந்தச் சமுதாயத் துறையில் இருக்கிறவர்களுக்கு உரிய மரியாதைகள் இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை.

[திரு. வி. வெங்கா] [29th March 1972

ரெவின்யூ துறையில் என்ன சொல்லுகிறார்களோ அதைக் கேட்டுக் கொண்டு இவர்கள் வாய் மூடி மௌனமாக இருக்கின்ற பரிதாப நிலை இருக்கிறது. குறிப்பாக ஊராட்சி மன்றங்கள் கிராமப்புறங்களை உள்ளடக்கிய பகுதியாகும். வீட்டு வரி, செஸ் என்று இதிலிருந்துதான் பஞ்சாயத்துக்கு வருமானம் வருகிறது. ஆனால் இன்றைய தினம் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், செஸ் வருமானம் எந்த அளவு பாக்கியிருக்கிறது என்று ரெவின்யூ துறையைக் கேட்கிற நேரத்தில், கோடிக்கணக்கான ரூபாய் பாக்கியாக இருக்கிறது. நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பல பஞ்சாயத்துகள் வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். உண்மை நிலை அது தான். பல டவுன் பஞ்சாயத்துகள் தாங்கள் வைத்திருக்கின்ற விளக்கு களுக்குக் கூட ஆறுயிரம், ஏழாயிரம் ரூபாய் மின்சாரக் கட்டணத்தைக் கட்டாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. இதற்கு என்ன காரணம், உள்ளபடியே வருமானம் இல்லையா என்று பார்த்தால், வரியை வசூலிக்க வேண்டிய ரெவின்யூ அதிகாரிகள் நல்ல முறையில் வசூலிக்காத காரணத்தால், அந்த பஞ்சாயத்துக்களுக்கு வரவேண்டிய செஸ் பணமும் அதற்குரிய ஈட்டு மானியமும் கிடைக்கவில்லை என்று நாம் பார்க்கிறோம். அதோடு மட்டு மல்ல, பஞ்சாயத்துச் சட்டத்தில் இருக்கிறது சூசிப் பட்டா என்று. அதற் காகக் குறிப்பிட்ட பணத்தை வசூலிக்கிறார்கள். அப்படி வசூலிப்பது முழுவதும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்குச் செல்ல வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. எந்த ஊர். டி. ஒ. வாவது கலெக்டராவது இது வரையில் ஒரு 10—15 ஆண்டுகளில் அந்தத் தொகையைப் பஞ்சா யத்துகளுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பல முறை கேட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக் கிறேன் என்று சொல்லுகிறார்கள். ஏதாவது பரிகாரம் ஏற்பட்டதா என்றால், நிச்சயமாக இல்லை. அதே மாதிரியாக, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். அதற்கு அபராதத் தீர்வை வசூலிக்கிறார் கள். ரெவின்யூ துறை இதை வசூல் செய்து பஞ்சாயத்துக்களிடத்தில் கொடுக்க வேண்டும். ஆனால் இந்த 10—15 ஆண்டுகளில் எங்கேயும் அப்படிக் கொடுக்கவில்லை. ஊராட்சி மன்றங்கள் இந்த 4—5 ஆண்டுக் காலத்தில் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியை அடைந்து வந்திருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்றும் ஏறத்தாழ 18 ஆயிரம். 21 ஆயிரம் பள்ளிக்கள் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்றன என்றால், அதில் ஏழாயிரம் பள்ளிக்கூடங்கள் கட்டிடம் இல்லாமல் இருக்கின் கின்றன. நாலாயிரம் ரூபாய் ஊராட்சி ஒன்றியம் தந்தால் தான், நிரந்தரக் கட்டிடம் கிடைக்கும். இதற்காக அரசு அளிக்கும் தொகையை இப்போது உயர்த்தியிருக்கிறார்கள். 4,000 ரூபாயி லிருந்து 8,000 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் கட்டிடங்களுக்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகி, பணம் பெற்று, கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்ற திட்டம் 1971-72-ல் செய்ய வேண்டுமென்று ஒரு நல்ல திட்டம் போடப்பட்டிருக் கிறது. எனவே அரசிலுள்ள பஞ்சாயத்துக்களுக்குப் பணம் வரவில்லை

29th March 1972] [திரு. வி. வெங்கா]

யென்றாலும், வேறு துறையிலிருந்து அந்தப் பணத்தைப் பெற்று மிக வேகமாக ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சியடையச் செய்வோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1968-ஆம் ஆண்டிலே மேல் நிலைத் தொட்டிகள் ஏறக்குறைய 2,500 தான் இருந்திருக்கின்றன. மூன்றுண்டு காலத்தில், 1971லே 4,700 மேல் நிலைத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். இந்த மூன் றுண்டு காலத்திலே 50 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உள்ளபடியே இந்த அரசு கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள் நகரத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அதைப் பெற வேண்டும் என்றும், கிராமத்திலுள்ள மக்கள் வசதியோடு இருந்தால் தான் கிராமத்திலுள்ளவர்கள் நகரங்களுக்கு வராமல் அந்த கிராமங் களிலே இருப்பார்கள் என்றும், இதுபோன்ற வேலையைச் செய்திருக்கிறார் கள். அது மட்டுமல்லாமல், இன்றைய தினம் இணைப்புச் சாலைகளுக்கு அதிகமான தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே நபர் ஒன்றுக்கு 18 பைசா என்று இருந்தது போதாது என்று நம்முடைய அரசானது மூன்று ரகங்களாகப் பிரித்து, மலைப் பாங்கு, மணற் பாங்கு என்று பிரித்து சாதாரணமாக இவ்வளவு தொகை என்று பிரித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் பல கிராமங்களுக்கு உள்ள படியே சில வசதிகள் இல்லை என்பதை ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், அரசும் இதை உணர்ந்திருக்கிறது. அதற்காக முடிந்த அளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அடுத்து, மேலும் இணைப்புச் சாலைகளை நாங்கள் எடுத்துக்கொண்டு அவற்றையெல்லாம் செம்மையாக வைத்துக்கொள்ளப் போகிறோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இன்றைய தினம் சிறு பாசனத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கென்று குறிப்பிட்ட தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஐந்தாண்டு காலத்துக்கு ஒரு முறை மராமத்து செய்ய வேண்டும் என்று "சைக்கிள் ஷிஸ்டம்" போட்டிருக் கிறார்கள். கரைகளை வலுவாக்குவதற்காகத்தான் அந்தப் பணம் ஒதுக்கப் படுகிறது. சிறு பாசனம் எப்பொழுதோ சேர, சோழ, பாண்டியர் காலத்திலே ஏற்பட்டது. ஆனால் இதுவரையில் "டிசில்ட்"—தூர் எடுக்கப் படவில்லை என்று சொல்லப்படுகிறது. காலப் போக்கில் வண்டலும், மணலும் போய் நீர்கொள்ளளவு தூர்ந்துவிட்டிருக்கிற காரணத்தால், கிராமத்தில் சொல்லக்கூடிய 4 மாதம் ஏரி, 6 மாதம் ஏரி, இருபோக ஏரி ஆகிய இவைகளெல்லாம் இன்றைய தினம் தூர்ந்து போய்விட்ட காரணத் தால், கலங்கல் எவ்வளவு சென்றாலும் நான்கு மாதங்கள் பாய வேண்டியது இரண்டு மாதம்தான் பாய்கிறது. இவற்றை ஒரே காலத்திலே முழுவதுமாகச் சீர் செய்துவிட முடியாது. அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய ஒரு வேலை இது. எனவே வருஷத்துக்கு இவ்வளவு என்று செலவு செய்து, இவைகளைத் தூர் எடுக்க இந்த அரசு முன்வர வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 4-00 p.m.

இன்றைய தினம் நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திராவில் ஜில்லா பரிஷத் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பு உள்ளபடியே நல்ல முறையில் இயங்கிவருகிறது என்று சொல்லுகிறார்கள்.

அங்கே உள்ள அமைப்புக்கும் இங்கே இருக்கிற அமைப்புக்கும் சிறு வேறுபாடுதான் இருக்கிறது. இங்கே கலெக்டருக்குத்தான் முழு அதிகாரம். ஆனால் அங்கே ஜில்லா பரிஷத் தலைவருக்குத்தான் முழு அதிகாரம் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குப் பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த முறையை இங்கே கொண்டு வருவார்களேயானால், நிச்சயமாக அது ஒரு நல்ல முறையாக இருக்கும்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கிராமத்திலே ஊராட்சித் தலைவர்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கக் கூடிய முறை இருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களே ஊராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய முறை இருக்கிறது. இதை மாற்றி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பொது மக்களே தேர்ந்தெடுக்கக் கூடிய அளவுக்கு வரக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதை அடுத்த தேர்தல்களிலிருந்தாவது அமல்படுத்த வேண்டுமென்று கோரி இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கோரிக்கை மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 9,93,87,400 கேட்டிருக்கிறார்கள். அதன் விளக்கத்திலே நான் சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். சாதாரணமாக பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில், இன்று தன்னாட்சி பெற்றது என்று அந்தச் சமுதாய நலத்திட்டத்திலே கூறியிருக்கிறார்கள். தன்னாட்சி என்றால் என்னவென்றே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நிலையிலே பஞ்சாயத்துக் கூட்டமன்றங்கள் அந்தப் பகுதி மக்களிடத்திலே எந்தவிதமான அதிகாரமோ வாய்ப்போ இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது. நண்பர்கள் பலர் இந்த அறிக்கையை ஆதரித்துப் பேசியபோதிலும், அதில் பல குறைகளைத்தான் கூறினார்கள். அந்தக் குறைகளை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக ரெவின்யூ இலாகாவின் மேலாதிக்கமானது பஞ்சாயத்துக் கூட்டமன்றத்திலே வேரூன்றி வளர்ந்து வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று பலமுறை கேட்டும் கூட அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. இந்த நிலையை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசியல் கண்ணோட்டங்கள் இந்தக் கூட்டமன்றங்களிலே வெகுவாகப் புகுந்துவிட்டன. பொதுவாக அரசியலில் உள்ளவர்கள் கூட்டமன்ற நிர்வாகத்தின் பொறுப்புக்களில் தலையிடுகிறார்கள். இன்று பஞ்சாயத்து யூனியனின் நிர்வாகப் பொறுப்பில், ஆசிரியர் மாற்றத்திற்கு ஒரு கமிட்டியைப் போட்டு, ஆர்.டி.ஓ.-வைத் தலைவராகவும், தொகுதி எம்.எல்.ஏ.-வை ஒரு உறுப்பினராகவும், சேர்மனை ஒரு உறுப்பினராகவும் போட்டு அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடிய நிலைமை புகுந்து விட்டது. இதையெல்லாம் போக்க வேண்டும். கடந்த காலத்தில், இந்தச் சட்டமன்றத்திலே எம்.எல்.ஏ.க்கள் கேட்டார்கள். பஞ்சாயத்து சேர்மனுக்கு ஜீப் இருக்கிறது, எழுத எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், பலவிதமான வசதிகள் இருக்கின்றன, ஆனால் பல இலட்சக்கணக்கான

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பல கஷ்டங்களை அனுபவித்து இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம், எங்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லையென்று கூறினார்கள். அப்பொழுதே நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருந்த போது, ஆளும் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்திருக்கிறார்கள். " எம்.எல்.ஏ.க்கள் கூட்டமன்றங்களுக்குச் செல்லும் போது, எம்.எல்.ஏ. ஆக இருந்தாலும், கூட்டமன்ற சேர்மனுக்குக் கீழே தான் பணியாற்ற வேண்டும். எம்.எல்.ஏ. என்ற எண்ணத்திலே இருந்தால், இப்போழுது இந்தச் சட்டத்தைத் திருத்திவிடக் கூடும். ஆனால் எல்லா உறுப்பினர்களும் வேண்டாமென்று கேட்டுக்கொண்டபடியால், நான் அடிபணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மனநிலை இருக்குமானால், இந்த சபை வேலைக்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக பாதகமே விளையும் " என்று கூறி அறிவுரை வழங்கினர். இன்று நாளாவட்டத்தில் பார்ப்போமானால், ஆசிரியர் டிரான்ஸ்ஃபருக்கு பஞ்சாயத்து நிர்வாகத்திலே ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டிக்கு ஆர்.டி.ஓ. தலைவராகவும், எம்.எல்.ஏ. ஒரு உறுப்பினராகவும். கூட்டமன்ற சேர்மன் ஒரு உறுப்பினராகவும், ஆபீஸர் ஒரு உறுப்பினராகவும் இருந்து, அங்கு நல்ல பாலிடிக்ஸ் நடைபெறுகிறது. ஆசிரியர்கள் "டிரான்ஸ்பர் டைம்" வந்து விட்டால், பாதிப்பேர் சேர்மனைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். பாதிப்பேர் எம்.எல்.ஏ.க்களைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். அப்படியே ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட்டு இந்த மன்றத்தின் நிர்வாகம் பின்னடைந்து சீர்குலைந்த நிலைமையைக் காணலாம். ஆகையினால் இந்தப் பொறுப்புக்களை மாற்றி அவர்கள் ஒரு தன்னாட்சியை நிறைவேற்ற, பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் நல்லவிதமாக வாழ வேண்டுமென்றால், அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளிலே பிறர் தலையிடுவதைத் தடுப்பது தலையாய கடமை. இந்த அமைச்சரவை மாநிலத்திற்குத் தன்னாட்சி வேண்டுமென்று கேட்கிறது. சாதாரணமாக பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்திலே, இந்த மாதிரி சிறு விஷயத்திலே கூட கூட்டமன்றங்களுக்கு அதிகாரங்கள் இல்லாமல் செய்வது மிகவும் அநீதியான செயலாகும். இந்த அமைச்சரவை இதைக் கவனிக்க வேண்டும். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் ஆதிக்கத்தை ஒழிப்பதோடு, இந்தப் பஞ்சாயத்து யூனியனில் எம்.எல்.ஏ.க்கள் தலையிடக்கூடிய ஒரு வாய்ப்பு இல்லாமல் தன்னாட்சியாக நடைபெற வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டமன்றங்களிலே இருக்கக்கூடிய கமிஷனர்களுக்கு கெஜட் பதிவு உடையவர்களாக பதவி உயர்வு அளிக்கவேண்டும். இதனால் பல கஷ்டங்கள் வருகின்றன. உதாரணமாக முதல் உதவி நிலையம் என்று வைத்திருக்கிறார்கள். இதில் உள்ள டாக்டர்கள் எல்லாம் ஆரம்பத்தில் பஞ்சாயத்துக் கூட்டமன்றத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு இயங்கிக்கொண்டு வந்தார்கள். இந்த டாக்டர்கள் ஒன்று கூடி "நாங்கள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற கெஜட் பதிவு பெற்றவர்கள். இந்த கூட்டமன்ற கமிஷனர் கெஜட் பதிவு இல்லாதவர். ஆகையினால் அவருக்குக் கீழே வேலை செய்ய முடியாது" என்று சொன்ன ஒரே காரணத்திற்காக இன்றைய தினம் ஹெல்த் சென்டர்கள் தனியாக இயங்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி

அங்கே உள்ள அமைப்புக்கும் இங்கே இருக்கிற அமைப்புக்கும் சிறு வேறுபாடுதான் இருக்கிறது. இங்கே கலெக்டருக்குத்தான் முழு அதிகாரம். ஆனால் அங்கே ஒில்லா பரிஷத் தலைவருக்குத்தான் முழு அதிகாரம் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குப் பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த முறையை இங்கே கொண்டு வருவார்களேயானால், நிச்சயமாக அது ஒரு நல்ல முறையாக இருக்கும்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கிராமத்திலே ஊராட்சித் தலைவர்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கக் கூடிய முறை இருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களே ஊராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய முறை இருக்கிறது. இதை மாற்றி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களேப் பொது மக்களே தேர்ந்தெடுக்கக் கூடிய அளவுக்கு வரக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதை அடுத்த தேர்தல்களிலிருந்தாவது அமல்படுத்த வேண்டுமென்று கோரி இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கோரிக்கை மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 9,93,87,400 கேட்டிருக்கிறார்கள். அதன் விளக்கத்திலே நான் சில வார்த்தைகளேக் கூற ஆசைப்படுகிறேன். சாதாரணமாக பஞ்சாயத்து யூனியனேப் பொறுத்தவரையில், இன்று தன்னாட்சி பெற்றது என்று அந்தச் சமுதாய நலத்திட்டத்திலே கூறியிருக்கிறார்கள். தன்னாட்சி என்றால் என்னவென்றே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லே. இந்த நிலையிலே பஞ்சாயத்துக் கூட்டமன்றங்கள் அந்தப் பகுதி மக்களிடத்திலே எந்தவிதமான அதிகாரமோ வாய்ப்போ இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது. நண்பர்கள் பலர் இந்த அறிக்கையை ஆதரித்துப் பேசியபோதிலும், அதில் பல குறைகளேத்தான் கூறினர்கள். அந்தக் குறைகளே அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக ரெவின்யூ இலாகாவின் மேலாதிக்கமானது பஞ்சாயத்துக் கூட்டமன்றத்திலே வேரூன்றி வளர்ந்து வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று பலமுறை கேட்டும் கூட அரசாங்கம் செவி சாய்க்கவில்லே. இந்த நிலேயை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசியல் கண்ணோட்டங்கள் இந்தக் கூட்டமன்றங்களிலே வெகுவாகப் புகுந்துவிட்டன. பொதுவாக அரசியலில் உள்ளவர்கள் கூட்டமன்ற நிர்வாகத்தின் பொறுப்புக்களில் தலேயிடுகிறார்கள். இன்று பஞ்சாயத்து யூனியனின் நிர்வாகப் பொறுப்பில், ஆசிரியர் மாற்றத்திற்கு ஒரு கமிட்டியைப் போட்டு, ஆர்.டி.ஒ.-வைத் தலேவராகவும், தொகுதி எம்.எல்.ஏ.-வை ஒரு உறுப்பினராகவும், சேர்மனே ஒரு உறுப்பினராகவும் போட்டு அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடிய நிலேமை புகுந்து விட்டது. இதையெல்லாம் போக்க வேண்டும். கடந்த காலத்தில், இந்தச் சட்டமன்றத்திலே எம்.எல்.ஏ.க்கள் கேட்டார்கள். பஞ்சாயத்து சேர்மனுக்கு ஜீப் இருக்கிறது, எழுத எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், பலவிதமான வசதிகள் இருக்கின்றன, ஆனால் பல இலட்சக்கணக்கான

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் பல கஷ்டங்களே அனுபவித்து இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம், எங்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லேயென்று கூறினர்கள். அப்பொழுதே நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருந்த போது, ஆளும் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்திருக்கிறார்கள். "எம்.எல்.ஏ.க்கள் கூட்டமன்றங்களுக்குச் செல்லும் போது, எம்.எல்.ஏ. ஆக இருந்தாலும், கூட்டமன்ற சேர்மனுக்குக் கீழே தான் பணியாற்ற வேண்டும். எம்.எல்.ஏ. என்ற எண்ணத்திலே இருந்தால், இப்போழுது இந்தச் சட்டத்தைத் திருத்திவிடக் கூடும். ஆனால் எல்லா உறுப்பினர்களும் வேண்டாமென்று கேட்டுக்கொண்டபடியால், நான் அடிபணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மனநிலே இருக்குமானால், இந்த சபை வேலேக்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக பாதகமே விளேயும்" என்று கூறி அறிவுரை வழங்கினர். இன்று நாளாவட்டத்தில் பார்ப்போமானால், ஆசிரியர் டிரான்ஸ்ஃபருக்கு பஞ்சாயத்து நிர்வாகத்திலே ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டிக்கு ஆர்.டி.ஒ. தலேவராகவும், எம்.எல்.ஏ. ஒரு உறுப்பினராகவும். கூட்டமன்ற சேர்மன் ஒரு உறுப்பினராகவும், ஆணேயாளர் ஒரு உறுப்பினராகவும் இருந்து, அங்கு நல்ல பாலிடிக்ஸ் நடைபெறுகிறது. ஆசிரியர்கள் "டிரான்ஸ்பர் டைம்" வந்து விட்டால், பாதிப்பேர் சேர்மனேப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். பாதிப்பேர் எம்.எல்.ஏ.க்களேப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். அப்படியே ஒருவருக் கொருவர் தகராறு ஏற்பட்டு இந்த மன்றத்தின் நிர்வாகம் பின்னடைந்து சீர்குலேந்த நிலேமையைக் காணலாம். ஆகையினால் இந்தப் பொறுப்புக்களே மாற்றி அவர்கள் ஒரு தன்னாட்சியை நிறைவேற்ற, பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் நல்லவிதமாக வாழ வேண்டுமென்றால், அதற்காகக் கொடுக்கப் பட்டுள்ள வேலேகளிலே பிறர் தலேயிடுவதைத் தடுப்பது தலேயாய கடமை. இந்த அமைச்சரவை மாநிலத்திற்குத் தன்னாட்சி வேண்டுமென்று கேட்கிறது. சாதாரணமாக பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்திலே, இந்த மாதிரி சிறு விஷயத்திலே கூட கூட்டமன்றங்களுக்கு அதிகாரங்கள் இல்லாமல் செய்வது மிகவும் அநீதியான செயலாகும். இந்த அமைச்சரவை இதைக் கவனிக்க வேண்டும். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் ஆதிக்கத்தை ஒழிப்பதோடு, இந்தப் பஞ்சாயத்து யூனியனில் எம்.எல்.ஏ.க்கள் தலேயிடக்கூடிய ஒரு வாய்ப்பு இல்லாமல் தன்னாட்சியாக நடைபெற வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டமன்றங்களிலே இருக்கக்கூடிய கமிஷனர்களுக்கு கெஜட் பதிவு உடையவர்களாக பதவி உயர்வு அளிக்கவேண்டும். இதனால் பல கஷ்டங்கள் வருகின்றன. உதாரணமாக முதல் உதவி நிலேயம் என்று வைத்திருக்கிறார்கள். இதில் உள்ள டாக்டர்கள் எல்லாம் ஆரம்பத்தில் பஞ்சாயத்துக் கூட்டமன்றத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு இயங்கிக்கொண்டு வந்தார்கள். இந்த டாக்டர்கள் ஒன்று கூடி "நாங்கள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற கெஜட் பதிவு பெற்றவர்கள். இந்த கூட்டமன்ற கமிஷனர் கெஜட் பதிவு இல்லாதவர். ஆகையினால் அவருக்குக் கீழே வேலே செய்ய முடியாது" என்று சொன்ன ஒரே காரணத்திற்காக இன்றைய தினம் ஹெல்த் சென்டர்கள் தனியாக இயங்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி

கிராமத்திலே கூட்டுமன்றத்தினுடைய தொடர்பு இல்லாமல் வெல்த் சென்டர்கள் தனித்து இயங்குனால, ஒரு வளர்ச்சியான நிலையை அடைய முடியாது. இதிலுள்ள சிக்கல்களைப் போக்குவதற்காக, ஆணையாளர் பதவியை கெஜட் பதவி ஆக்கிவிடலாம். பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, திட்டமிட்டு, பல காரியங்களைச் செய்யக் கூடிய தலைமைப் பொறுப்பில் இருக்கக்கூடிய அவரை கெஜட் அதிகாரியாக மாற்றுவதில் தவறு இருக்க முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுமன்ற ஈ. ஓ.க்கள் எல்லாம் வேலைத் திட்ட வாய்ப்புக்களை உணர்ந்து தீர்மானம் பண்ணக்கூடிய, நிறைவேற்றக் கூடிய வாய்ப்புக்கள் எப்படி எப்படி இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். வேலைகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக ஒரு சிறு கருத்தைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ரோடுகள் போடுவதற்காக மானியத் தொகைகள், மதிப்பீடுகளை ஒப்புக்கொண்டு செயல்படும்போது, ஒரு ஆயிரம், ஆயிரத்து ஐந்நூறு என்று கப்பி போட, மண் வெட்டிப் போட ஒதுக்கப்படுமேயானால், அந்தத் தொகை செலவழிக்கப் பட்டதா, செலவழிக்கப்படவில்லையா என்று கூட சேர்மன் கவுன்சிலுக்குத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் இல்லாமலிருக்கிறது. சில இடங்களிலே செலவு செய்யாமலும் இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையைப் போக்குவதற்காக 15 நாட்களுக்கு ஒரு முறையாவது அங்கு செய்யப்பட்ட வேலைகள், செய்ய வேண்டிய வேலைகள்பற்றி ஒரு ஆய்வுக் கமிஷன் மூலமாக சேர்மனுக்குக் கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டுமென்ற நிலை ஏற்படுத்தினால இந்தச் சிறு தவறுகள் போக வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுமன்றங்களில் உள்ள ஆசிரியர்கள், பணியாளர்கள் முதலியவர்களுக்கு உண்டான கமிட்டி கலைக்கப்பட வேண்டும். இந்தக் கமிட்டியைக் கலைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். மணி : இந்தக் கமிட்டி எப்போது போடப்பட்டது என்பதை அங்கத்தினர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

திரு. என். சுந்தரேசத் தேவர் : எப்போதாக இருந்தாலும் சரி. ஆரம்பக் காலத்தில் பஞ்சாயத்துகள் வளர்ச்சி வேகமாக இருந்து வந்தது. அந்த வளர்ச்சி தொடர்ந்து இருக்கும் என்று நம்பினோம். நல்ல வளர்ச்சி அடைந்த அது இப்போது மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. மோசமான சூழ்நிலை எப்போது ஏற்பட்டது ? அந்தக் கமிட்டி எப்போது போடப்பட்டது என்று நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டார்கள். அந்தக் கமிட்டி காங்கிரஸ் காலத்தில்தான் போடப்பட்டது. யார் போட்டார்கள், எப்போது போட்டார்கள் என்பதைப் பற்றிக் கவலையில்லை. இப்போது அந்தக் கமிட்டியால் கஷ்டம் ஏற்படு

கிறது. அதை நிவர்த்திக்க வேண்டும். இப்போது நீங்கள் ஆட்சியில் இருக்கிற காரணத்தால் அரசாங்கம் உங்களிடத்தில் இருப்பதால் அதை நீங்களே செய்தால் நல்லது. கமிட்டி எப்போது போடப்பட்டது என்பது பிரச்னையல்ல.

ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்தில் உள்ளதுபோல கல்வித் துறையில் டிவிஷன் என்ற அளவில் இருப்பதைப் போல, பஞ்சாயத்து யூனியன்களில் எஞ்சினீயரிங் செக்ஷன் இருக்கிறது. ஹைவேஸ் டிபார்ட்மெண்டில், எ.ஈ.தான் பொறியாளருக்கு பிறகு பதவிக்கு வருகிறார்கள். முன்பெல்லாம் ஒரு காலத்தில் எல்.டி.ஓஸ். என்று இருந்தார்கள். நல்ல விதமாக இயங்கிக்கொண்டிருந்தது. ஆசிரியர்களுக்கெல்லாம் ஒய்வு கொடுத்தால், பஞ்சாயத்து யூனியனில் வேலையில் அமர்த்துவார்கள். இப்படியெல்லாம் நியமனம் செய்ய முடிந்தது. விசேஷமாக நியமனம் செய்வதில்லை. அதை விட இப்போது பெரிய கஷ்டம் என்னவென்றால், டைரக்டர்கள் இருந்தால், அவர்களும் அரசாங்க வேலைகளைச் செய்யும்படியான நிலைமை இருக்கிறது. இப்போ தெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களில் பஞ்சாயத்து யூனியன் வேலை குறைந்துபோய், சர்க்கார் வேலை அதிகமாக நடக்கிறது. எனவே, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு எ.ஈ. என்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஸூரல் வொர்க்ஸ் பிளாக்குக்கும் ஒரு எ.ஈ. இருந்தால், வேலைகள் சரியாக நடக்க வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்று எடுத்துக் கொண்டால், டி.ஈ.ஓ.வைப் பொறுத்த வரையில், அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளைத்தான் அதிகம் கவனிக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை சரிவரக் கவனிப்பதில்லை. எனவே, வட்டாரத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் அமர்த்தலாம்.

அடுத்தபடியாக பட்டுக்கோட்டையில் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த பழைய கட்டிடங்களையெல்லாம் புதுப்பிக்கின்ற அல்லது புதிய கட்டிடங்களைக் கட்டுகின்ற திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 1960-க்கு முன்னால் கட்டிட வசதியில்லை. மோசமாக இருந்தது. இப்போது புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். ஆர். டி. ஓ. ஆபீஸில் இடவசதி இல்லை. புதிதாகக் கட்டிடம் கட்ட திட்டமிருக்கிறது என்று அறிகிறேன். அதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளையெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் செப்பனிடுவதற்கு, பராமரிப்பதற்கு மானியம் கிடைக்காத காரணத்தால், இந்தச் சாலைகள் சீரழிந்த நிலையில் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க, தகுந்த பராமரிப்புக்கு வழிவகை செய்ய வேண்டும். கப்பி ரோடுகள் போக்குவரத்துக்குப் பிரயோசனமில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, சேனல் கரையை எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் தான் போட முடியும். பி.டபிள்யூ.டி. தான் அதை

[திரு. என். சுந்தரத் தேவர்] [29th March 1972

பராமரிக்க வேண்டுமென்ற காரணத்தால், அவற்றைச் சரிவரச் செப்பனிட முடியவில்லே. ஆகவே, பஞ்சாயத்துக்கள் இவற்றைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

கிராம நல ஊழியர்களுக்கு வீட்டு வசதிகள் இல்லே. அவர்கள் தான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் போன்ற அடிப்படையான வேலேகளேச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட முன்னேற்றகரமான வேலேகளேச் செய்கிற அவர்களுக்கு வீட்டு வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் நகரங்களிலிருந்து 10, 12 மணிக்கு வருகிறார்கள். கிராமங்களுக்கு எப்போதாவது இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை போகிறார்கள். அவர்களுக்கு அங்கேயே வீட்டைக் கட்டிக் கொடுத்தால், அவர்கள் திறம்பட வேலே செய்ய முடியும். கிராமப் பணித் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்கள் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம். அரசாங்க மானியத்தோடு அப்படிச் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால், பல கிராமங்களில் குடி நீர் வசதியில்லே. இதற்காகக் கிணறுகளேக் வெட்டினுல், தண்ணீர் வருவதில்லே அல்லது அந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. உபயோகப்படுத்த முடிவதில்லே. எங்கள் யூனியனில் 70 ஆயிரம் கிணறுகள் இருக்கின்றன. ஆனுல் அவற்றில் 10 சதவீதம் கூட குடிநீராக உபயோகப்படவில்லே. இந்த நிலேயைப் போக்க வேண்டும். அதற்கு, பக்கத்து கிராமத்தில் நல்ல தண்ணீர் இருந்தால், அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்யலாம் என்று சொன்னுல், அது முடிவதில்லே. காரணம், பஞ்சாயத்துத் துறையில், ஒரு கிராமத்திற்கு என்று ஒதுக்குகிற தொகையை அந்த கிராமத்திற்கே தான் பயன்படுத்த வேண்டும். பக்கத்து கிராமத்திற்கும் சேர்த்துத் திட்டத்தைப் போட முடியாது. எனவே, பிளாக்குகள் அளவில் இதனேக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல் நிலேத் தொட்டி என்று சொன்னுல், அதற்குப் பணம் ஒதுக்குகிற போது தொட்டிக்கு என்று ஒரு இனமாகவும், கிணறு என்று ஒரு இனமாகவும் பணம் ஒதுக்குகிறார்கள். இப்படி இரண்டு இனத்தையும் பிரித்துக் காட்டுகிறார்கள். அது தேவை இல்லே. குடிநீர் வசதி என்று ஒரே இனமாக எடுத்துக் கொண்டு அதற்குப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லிங்க் ரோடு என்று எடுத்துக் கொண்டால், அதற்கு 40 பைசா என்று போட்டிருக்கிறார்கள். இந்த 40 பைசா என்பது 1960-வது வருஷத்திலிருந்தே இருக்கிறது. 12 வருஷங்களுக்குப் பிறகும் அது மாற்றப்படவில்லே. இப்போது அறிக்கையில் 18 பைசா என்று போட்டிருக்கிறார்கள். அது தவறு என்று கருதுகிறேன். புரியவில்லே. அமைச்சர் அவர்கள் அது சரி என்றுல், விளக்கம் கொடுக்க வேண்டும். இந்த 40 பைசாவை 60 பைசாவாக, 100 பைசாவாக உயர்த்த வேண்டும் என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு செலவு, எப்படி எறு அரசாங்கம் கவனித்து அத் தொகையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

29th March 1972]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலேவரவர்களே, தலேக்கு 40 காசு என்ற அடிப்படையில், இது தரப்படுகிறது. இப்போது அதை மாற்றி 18 பைசா என்று ஒரு அளவு வைத்திருக்கிறார்கள். ஹரிஜன் ஒன்றியத்திலுள்ள சாலேகள் அமைப்புக்கு தலேக்கு 18 பைசா என்ற அளவினே வைத்திருக்கிறார்கள். மற்ற வகைகளில் சாதாரண சாலேகளுக்கு ரூ. 600 என்றும், சதுப்பு நிலத்திற்கு ரூ. 800 என்றும் மலேப்பாங்கான இடங்களுக்கு ரூ. 1,600 என்றும் இந்த உத்தரவைப் பிறப்பித்து விட்டு, தலேச் சுமைக்கு 18 பைசா என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். இது முன்பிருந்த 40 பைசா அளவுக்குக் குறைந்தது என்று சொல்ல முடியாது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலேவரவர்களே, 18 பைசா என்பது குறைவாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. அதை வேறு இனத்தில் காட்டுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் கூறினுர்கள். இப்போது இருப்பதே மிகவும் குறைச்சல் ரேட்டு. அதை மேலும் குறைத்துவிட்டால் நல்ல சாலேப் பராமரிப்பு செய்ய முடியாது. இன்னும் மோசமான நிலேயைத்தான் அது உருவாக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை கூட்டுமன்றத்தின் பொறுப்பில் இருக்கவேண்டும். வேளாண்மைத் துறையில் இன்றைய தினம் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசினர். அதற்குக் காரணம் பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களின் உண்மையான ஒத்துழைப்புத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் மேலும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. தீவிரமான விவ 4-20 p.m.
சாயத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேரும். நல்ல காரியங்களேச் செய்கிறேரும். அரசாங்கம் பசுமைப் புரட்சியைக் கண்ட பிறகு, அந்த இலாகாவிலிருந்து பஞ்சாயத்து யூனியனுடைய நிர்வாகத்தைப் பிரித்து விடலாம் என்று ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இருந்த இடத்தில் நிர்வாகம் பண்ணக்கூடிய ஒரு ஆசை இருக்கிறது. கல்வித் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் ஏற்பட்டிருக்கிறது உன்னத மான விஷயம். கல்வித் துறையில் ஆரம்பக் கல்வி லோகல் போர்ட்ஸ் இடம் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. இன்றைக்கும் பள்ளிக் கூடம் இல்லாத இடத்தில் பள்ளிகளேக் கட்டி, 96 சதவீதம் மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் சேர்ந்தார்கள் என்றால், பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிற நிலேமையில், இந்தக் கல்விப் பொறுப்பைப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தின் பொறுப்பில் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வட்டாரங்களில் கால்நடை மருந்தகங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. குறைந்தது ஒரு வட்டாரத்திற்கு 5 கால்நடை மருந்தகங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. என். சந்தரத் தேவர்] [29th March 1972

"டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்" பற்றியெல்லாம் சொன்னார்கள். கல்வியில் மாறுதல் செய்வது நல்லது. ஆரம்பக் கல்வி, 1 முதல் 5 வகுப்பு வரை கற்றுக் கொடுப்பதில், ஸ்லேட் புத்தகம் வாங்கிக் கொடுக்கிற விஷயத்தில் இவ்வளவு பெரிய டாம்பீகம் தேவையில்லை. பரிசீலனை செய்து, இதைப் பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கவேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பள்ளிகள் கட்டிடம் கட்டுவதற்கு "கிராண்டு" ஆரம்பக் காலத்திலே கொடுக்கவேண்டும். மார்ச் மாதத்தில் தான் கிராண்டு வருகிறது. வந்த வுடன் மார்ச்சு மாதத்திற்குள் அதை முடிக்க வேண்டுமென்று சொன்னால் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆரம்பத்திலேயே கொடுத்தால், அது யூனியன்களுக்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, கிராம வேலை வாய்ப்புத் திட்டம் என்று ஒரு பெரிய திட்டம் போடப்பட்டிருக்கிறது. ரூ. 1¼ லட்சம் மத்திய சர்க்கார் மானியம் வழங்கி மாநில சர்க்கார் இயங்கிய போதிலும்கூட பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் நல்லவிதமாக இயங்க வேண்டுமென்றுதான் வட்டாரத் திற்குக் கொடுக்கப்பட்டது. ரூபாய் இரண்டரை லட்சத்திற்கு வேலைவாய்ப்புத் திட்டம் அளிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சா யத்து யூனியனில் ரூபாய் இரண்டரை லட்சம் என்றால், ஒரு எஞ்ஜி னியரின் ஒர்க்லோடு ரூபாய் இரண்டரை லட்சம். கிராமங்களில் அலைந்து திரிந்து கஷ்டமான வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால், இதற்கென ஒரு தனிப்பிரிவாக ஒரு பொறியாளர், 4 மேஸ்திரிகள் ஒரு யூனியனுக்குக் கொடுக்க வேண்டும். இப்போது ஒரு ஓவர்சியர், 3 மேஸ்திரிகள்தான் இருக்கிறார்கள். ஆகவே ஒரு பொறியாளர் போடுவது மிக அவசியம்.

பஞ்சாயத்து யூனியனில் எல்லாக் கட்சிக்காரர்களும் அங்கம் வகிக் கிறார்கள். இந்தப் பஞ்சாயத்தில் என்ன வேலை எடுத்துக் கொள்ளுவது என்று தீர்மானிக்க பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அதிகாரம் கிடையாது. இதற்கு ஆர். டி. ஓ. நிலைமையில் எம். எல். ஏ., எம்.பி. போன்றவர்கள் வேலை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டுமென்று ஒரு கமிட்டி போட்டால், எப்படி இயங்க முடியும்? நடக்கக்கூடியதைச் சொல்லுகிறேன். பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கமிட்டி போட்டால், சாதாரணமாக ஒரு எம். எல். ஏ. இருக்கவில்லையென்றால், கடைசி மாதத்தில் கிராண்ட் earn பண்ணி துரிதமாக வேலை செய்ய அந்த நிலையில் உள்ளவர்களுக்குத்தான் தெரியும். ஒரு மாதத்திற்கு, ஒரு எம். எல். ஏ., இல்லையென்றால் அந்தக் கமிட்டி வேலை செய்ய முடியாது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் வேலை செய்ய முடியாத நிலை யூனியன் செய்யக்கூடிய வேலைக்கு யூனியன் கவுன்சில் பொறுப்பாளியாக இருக்கலாம். எம். எல். ஏ. தேவையில்லை.

திரு சி. வி. ராஜகோபால்: கிராண்டு கொடுப்பதால், அதில் எம்.எல்.ஏ., எம். பி., இருப்பது தவறு, இருக்க வேண்டாம், வேறு யாரிடமாவது ஒப்படைக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயும். தருவது கிராண்டு.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊர் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சித் திட்டம் சம்பந்தமாக, அதில் நெருங்கிய அனுபவமுள்ள பல அங்கத்தினர்கள் இங்கே தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதை நான் திரும்பச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்கள் சொன்ன விஷயங்களையெல்லாம் அரசு கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற் கென்று ஒரு தனித் துறை ஏற்பட வேண்டுமென்ற பேச்சுகள் கடந்த சில வருஷங்களாகவே மும்முரமாக இருந்துகொண்டிருக்கின்றன. அமைச் சர்களும் தாங்கள் செல்லுகிற பல இடங்களில், இதைச் சார்ந்தவர்கள் தனித் துறை அவசியம் வேண்டுமென்று கேட்கும்போதெல்லாம், பரிசீலனை யில் இருக்கிறது என்று பதிலளித்து வந்திருக்கிறார்கள். இப்போதும் பரிசீலனையில் இருப்பதாகவே நான் கருதுகிறேன். அது நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருப்பது அவசியமா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அவர்கள் சொல்லக்கூடியது இந்த நிர்வாகத்திலுள்ள கஷ்டங்களுக்குக் காரணம் தனித்துறையில்லாததுதான் என்று நான் கருது கிறேன். அவர்கள் கூறியதுபோல், வருவாய்த் துறையின் ஆதிக்கத்தில் தான் இந்தத் துறை இருந்துகொண்டு வருகிறது என்பது நூற்றுக்கு நூறு உண்மை. வருவாய்த் துறை இந்தத் துறையை ஆட்டிப் படைக்கிறது என்று சொன்னால், அது மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்தத் துறையில் உள்ள பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக அனுபவம் உள்ள வர்கள் இந்த வகையில் தான் இந்தத் துறை செயல்பட்டு வருகிறது என்ற கருத்துடன் தான் இருப்பார்கள். இந்தத் துறை தனியாக வளருவதற்கு வாய்ப்பு அளிக்காததால், இந்தத் துறை இதே மாதிரிக் கஷ்டத்தோடு இருந்துகொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த கன்சல்டேடிவ் கமிட்டி ஆண்டுக்கு ஒரு முறை, இரண்டு முறை சென்னையில் கூடுகிறது. அது ஒரு கோடிட்ட வரையறைக்குள் இருந்து பணி யாற்றுகிற கமிட்டியே தவிர, புதிய கருத்துக்கள் என்ன என்று தெளிவாக வரையறுக்கக்கூடிய கமிட்டி அல்ல. அரசாங்கத்தின் கருத்தில் இருக்கக் கூடிய வருங்கால வாய்ப்புகள் பற்றி இதில் சொல்லப்பட்டிருக்கிறது. வருங்கால வாய்ப்பு நிலைகளில் சொல்லப்பட்ட இடத்தில் கூட

"தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை செயற்படுத்துவதில் காணப் படும் குறைகளைக் களைய, சட்டத்தையே மிகவும் விரிவான முறையில் பரிசீலனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இறுதி வடிவம் பெற்ற சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுக் காலப்போக்கில் சட்டப் பேரவை முன்னர் வைக்கப்படும்."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து

"ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கல்வித் தொடர்பான நிதி யமைப்புக்களை ஆய்வு செய்ய அரசால் நியமிக்கப்பட்ட ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு, பல்வேறு பரிந்துரைகளை செய் துள்ளது. அவை அரசின் ஆய்வில் உள்ளன. ஊராட்சி

ஒன்றியக் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கென ஒரு திருத்தப் பட்ட முறையானது உருவாக்கப்பட்டு வருகிறது. இம்முறை முழு வடிவம் பெற்று எற்றுக்கொள்ளப்பட்டவுடன் இரண்டாம் ஊதியக் குழுவினால் ஏற்பட்ட கூடுதல் செலவிற்கு ஒரு தீர்வு கிடைக்கும்.",

என்று வருங்கால வாய்ப்பு நிலைகள்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனித் துறை ஏற்படுவதற்கான முயற்சி வருங்கால வாய்ப்பு நிலைகளில் கூட சொல்லப்படவில்லையே என்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. சொல்லாவிட்டாலும் கூட, இப்போது சொல்ல வந்தது போல், இதற்காக ஒரு தனித் துறை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை விரைவில் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தத் துறை ஏற்பட்ட காலத்திலிருந்து பலவிதமான மாறுதல்களை அது அடைந்திருக்கிறது. நமது நாட்டிலேயுள்ள ஜனங்களிலே 100-க்கு 80 பேர் கிராமப் பகுதிகளில்தான் வாழ்கின்றார்கள். எனவே கிராம இராஜ்யமாக அமைய வேண்டும் என்று விரும்பிய வகையில் இத்துறை பணியாற்ற வேண்டும். ஆனால் இது அதிகார மூள்ள ஒரு ஸ்தாபனமாக செயல்படவில்லை. மாறுக அது நமது பரிதாபத் திற்குரியதாகவும், அனுதாபத்திற்குரியதாகவும்தான் செயல்பட்டு வருகிறது. பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து ஒன்றியங்களும் இப்படித்தான் செயல் பட்டு வருகின்றன என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எனவே முதலமைச்சர் அவர்களும் இத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும் இதற்கென தனித் துறை ஒன்றினை ஏற்படுத்தி, இதைத் தனியாக நிர்வகித்து வருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போதுள்ள முறையில் ஒரு சிலர் இதில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலை இருக்கிறது. உத்தியோகப் பற்றற்றவர்கள் மட்டு மில்லாமல் அதிகாரிகளும் கூட கூடியவரையில் தவறுகள் இழைக்காமல் இருக்கக்கூடிய முறையில் தான் இத்துறை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இப்போதுள்ள நிலையில் இது திருப்திகரமாக இல்லை. இவற்றை மேற்பார்வையிடுவதற்காக வரும் வேறு இலாக்கா அதிகாரிகளுடைய விருப்பு-வெறுப்புகளுக்கு இவை ஆட்பட்டுத்தான் செயல்பட வேண்டி யிருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் தனியானதொரு இலாகாவை ஏற்படுத்தி அதன் கீழ் செயல்படும்படி செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

4·30 p.m.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திரு. எஸ். கே. டே அவர்களைப்பற்றி நமக்குத் தெரியும். அவர் மத்திய அரசில் சமுதாய நலத் திட்ட அமைச்சராகப் பணியாற்றி இத்துறையில் ஒரு தனி உத்வேகத்தையே உண்டாக்கியவர் என்பதும் நமக்குத் தெரியும். அவர் 1971 அக்டோபர் மாதம் காந்தியடிகளுடைய பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட இருக்கும் நேரத்தில், காந்தியடி களின் மனதில் உருவான ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண் ணத்தின் அடிப்படையில், "அன்றும் இன்றும்" என்று ஒரு தலையங் கத்தை எழுதியிருக்கின்றார்கள். அகில இந்திய பஞ்சாயத்து சார்பில் வெளியிடப்படும் சென்ற அக்டோபர் மாத இதழில் இதை எழுதியிருக் கின்றார்கள் திரு. எஸ். கே. டே அதில்,

" இந்திய மக்கள் தொகையிலே 82 சதவிகிதத்தினரும், ஆட்சியின ரால் அதுவரை மறக்கப்பட்ட கிராமாந்திரங்களில் வசிப்பவருமான கிராம மக்களுக்குப் பல தலைமுறைகளாக இவர்களுக்குள் ஒடுங்கிக் கிடந்த குரல் ஒலிக்கும் சக்தியைக் கொடுத்தோம்.

ஆனால் நெடுங்கால விளைவுகளின் காரணமாக பலவீனமாக்கப்பட்ட வர்கள் அவர்கள் இருந்த இடத்திலேயே தேங்கியிருக்கவேண்டிய தாயிற்று "

என்றும், மேலும்

"மாநிலங்களிலுள்ள அதிகாரத் தலைமைகள் தங்களுக்கிருக்கும் அதி காரங்களையும் விசேஷ உரிமைகளையும் விட்டுப்பிரிய முன் வர வில்லை. ஏனெனில் இவர்கள் இந்த அதிகாரங்களையும் உரிமை களையும் பல நூற்றாண்டுகளாக தங்களிடையே நெருங்கிய பாது காப்பு விஷயமாகக் கருதிக்கொண்டு, தங்களிடமே வைத்துக் கொண்டிருந்தனர். இந்தத் துறைகளைப் பலகாலம் ஆண்டு வந்தவர்களில் சிலர் இந்த நிறுவனங்களை தங்கள் கொடும் வைரிகளாகக் கருதினர்"

என்றும், இந்தத் துறைபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பிறகு அவர்,

"பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் காலமான அந்த நொடியி லேயே பெருமளவிற்கு இந்தத் துறையின் மீது தங்கள் கண்ட னத்தைத் துவக்கிவிட்டார்கள் இவர்கள்" என்றெல்லாம் எழுதி.

யிருக்கின்றார்கள் திரு. எஸ். கே. டே. அவர்கள். பிறகு அவர்,

"நடைமுறைத் திட்டங்களையோ திட்டங்களில் ஈடுபட்டவர்களையோ அல்லது நிறுவனங்களையோ கைவிடுவதற்கு இல்லாது போயிற்று. என் என்றால் அவைகள் பலவீனமாக இருந்தாலும் கூட வேர்பாய்ச்சி நிலை பெற்றுவிட்டன. ஆனாலும் அவைகள் ஒரே சீரான போஷாக்கின்றி பட்டினியாகவும் இருக்க நேரிட்டது. உயிர்த் துடிப்புக் காட்டிய சிலவும் நாளடைவில் சாதாரணமாக நட மாடும் அளவிற்குக் குறைக்கப்பட்டன. கிராமங்களுக்கு எவை எவை செய்யப்பட்டனவோ அவை நகரங்களுக்கும் நல்லவை என்று கொள்ளப்பட்டது. கிராமங்களிலிருந்து ஆட்களும் பொருட்களும் வெளியேறி நகரங்களை நாடியதால் நகரங்களில் சேரிகள் அதி கரித்தன. இந்த நிலவரத்தில் மேற்கண்ட திட்டம் சீரமைப்புச் செய்தாக வேண்டிய நிலை ஏற்பட்டது....."

என்று குறிப்பிட்டிருக்கின்றார். இவர் மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் உள்ளவர்கள் இப்படி ஒரு வேதனையான போக்கில் பேசுகின்றார்கள், எழுதுகின்றார்கள். மக்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்ட பல்வேறு வல்லுனர்கள் எல்லாம்கூட இதுபோன்ற அபிப்பிராயத்தைத்

கூறிக்கொண்டு வருகின்றார்கள். எனவே இந்தத் துறை நல்ல முறையில் செயல்படுவதற்கு பஞ்சாயத்து மட்டத்திலிருந்து மாநில அமைப்பு வரையில் ஒரு தனித் துறையாக இயங்க வேண்டியது மிகமிக அவசியம். அப்போதுதான் இதற்கான முன்னேற்றத்தை நாம் காண முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டில் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்ட விவரங்கள் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே வேளாண்மைக்காக என்று ரூ. 85 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை உள்ள 374 பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் பங்கிட்டளித்தால், ஒவ்வொன்றுக்கும் ரூ. 22,227 கிடைக்கிறது. அடுத்து கால்நடை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 23 25 லட்சத்தைப் பங்கிட்டால், ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ரூ. 6,220 தான் கிடைக்கிறது. சராசரியைச் சொல்லுகிறேன். இணைப்புச் சாலைகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் ரூ. 110 லட்சத்தைப் பங்கிட்டால், ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 29,412-ம், மீன்வளத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதைப் பங்கிட்டால் ரூ. 1,246-ம் இப்படி மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 469·91 லட்சத்தை ஊராட்சி ஒன்றியங்களிடையே பங்குபோட்டுக் கொடுத்தால், ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 1·25 லட்சம் தான் கிடைக்கிறது. இதை அந்த ஒன்றியத்திலுள்ள கிராமங்களிடையே செலவழிக்கும்போது, சுமார் 80 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட வட்டாரத்திற்கு ரூ. 15 ஆயிரம் அல்லது ரூ. 20 ஆயிரம் என்றுதான் வரும். விவசாயத்தைப் பொறுத்தவரையில், ஒரு வட்டாரத்திற்கு ரூ. 22,227 என்றால், ஒரு விவசாயக் குடும்பத்திற்கு ரூ. 2·50 வருகிறது. எனவே அதிகமாக ஒதுக்கி அதிகத தொகையைச் செலவழிக்கக்கூடிய வழி முறைகளைக் கண்டுபிடித்தாக வேண்டும் இத் துறையில். இவ்வளவு செலவழிக்கிறோம் என்று புள்ளிவிவரங்களைக் கொடுத்துவிட்டு, கடைசியில் சொல்லுகின்றார்கள், "ஊர்ப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறதென்பதை மேற்காட்டியுள்ள புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1972-73-ஆம் ஆண்டிற்கு, சென்ற ஆண்டைவிட அநேகமாக எல்லாத் தலைப்பின் கீழும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்றும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா விஷயங்களையும் சொல்லிவிட்டு, இந்த நான்கு வரிகளைப் பின்னால் போட்டிருக்க வேண்டும். ஆகவேதான் இதைத் துருவிப் பார்த்து ஆராய்பவர்களுக்கு இது சிறு தொகை என்று படுகிறது. ஆனால் இவற்றை மொத்தமாக எடுத்துக்கொண்டு பார்க்கும் போது, விவசாயம், கால்நடை வளர்ச்சிக்காக என்று பெரிதாகத் தெரியலாம். ஆனால் தனித்தனியாகப் பார்க்கும்போது, இந்தத் தொகைகள் மிகமிகக் குறைவாக இருக்கின்றன. இத் தொகைகளை அந்தந்த வட்டாரத்திற்கேற்ற வகையில் மாற்றிக்கொள்ளத்தக்க விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும்கூட, உள்ள தொகை போதும் என்று சொல்ல முடியாது. இதை அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள் கௌன்ஸிலில் தீர்மானங்கள் போட்டு அனுப்புகிறோம். தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அதற்கு மாவட்ட அளவிலுள்ள அதிகாரிகள் என்ன மதிப்பளிக்கின்றார்கள் என்று பார்த்தால், ஒன்றியங்கள் போட்டு அனுப்பும் தீர்மானத்தை

யாரும் மதிப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன் சேர்மன், சட்ட மன்ற அங்கத்தினர்கள் என்று எல்லோரும் சேர்ந்து விவாதம் செய்து ஒரு முடிவிற்கு வருகின்றார்கள். அரசுக்கு "இது யூனியன் கௌன்ஸிலில் விவாதம் செய்து தீர்மானிக்கப்பட்ட விஷயம்" என்று அனுப்புகின்றார்கள். ஆனால் அவை மதிக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. "எவ்வளவு தீர்மானம் வேண்டுமானாலும் போட்டு அனுப்புங்கள், காரியம் என்னவோ ஆகப்போவதில்லை" என்று சர்வ சாதாரணமாகச் சொல்லுகின்றார்கள். எனவே இவற்றையெல்லாம் யோசித்து, அது பொறுப்புள்ள கௌன்ஸிலாகச் செயல்பட வேண்டும், அதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டு சமுதாய நலத் திட்டம், பஞ்சாயத்து நிர்வாகம் போன்ற இவற்றை உள்ளடக்கிய விஷயங்களை நமது மேலவையில் விவாதிப்பதற்கு எடுத்துக் கொண்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற ஆண்டு இந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. அரசாங்க நிர்வாகத்தின் பெரும் பங்கை, அதிலுள்ள பெரும் பொறுப்பை கிராமப் பஞ்சாயத்துக்களும், நகரப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், நகராட்சி மன்றங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டின் மொத்த ஜனத்தொகையில் எண்பது சதவிகிதத்தினர் இந்த நிர்வாகங்களின் கீழ்தான் வருகின்றார்கள். எனவே மேலெழுந்தவாரியாக இதைப் பரிசீலிப்பது என்பது சரியில்லை என்றே கருதுகிறேன். மிக்க அக்கறையோடு, ஆழ்ந்த பரிசீலனையோடு கவனிக்கப்பட வேண்டியதொரு துறையிது. கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக கிராமப் பகுதிகளில் இத்துறை ஆற்றிய பணிகளால் கிராம மக்களிடையே நல்லதொரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கான காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் இப்போது அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மூலமுதற் காரணமான அண்ணல் காந்தியடிகளை இப்போது நாம் மனத்தில்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். கிராமப் பணிகளுக்கான திட்டம் பற்றி ஆலோசிக்கும்போது, எந்த நோக்கத்திற்காக இவை முதலில் ஆரம்பிக்கப்பட்டன என்பதையெல்லாம் நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

1958-ஆம் வருஷம் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து சென்ற வருஷம் வரையில் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக, அவர்கள் வரி போட்டு வசூல் பண்ணிய வகையில் மட்டும் 42·03 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு உதவியிருக்கின்றார்கள். அரசாங்கத்தின் சுமையை எவ்வளவு தாங்குகிறார்கள் என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். ஒரு வருஷத்தில் 77·14 கோடி ரூபாய் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களான பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக செலவு செய்யப்படுகிறது. இந்தத் தொகை மாநில அரசாங்கத்தின் பட்ஜெட்டில் 1/5 பங்கு என்பதை அறிய

4-40 p.m.

[திரு. கே. ராஜாராம்] [29th March 1972

வேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நிதி சம்பந்தமாக இந்த நிலைமை. இதைத் தவிர கடந்த பத்து ஆண்டுகளுக்குள் 42 கோடி ரூபாய் வீட்டு வரி, வண்டி வரி போன்ற வரிகள் மூலமாக வசூல் செய்யும் நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்றால், அது பாராட்டத்தக்கது. இப்படி ரூபாய், அணா, பைசா கணக்கில் வராமல் சேவைகளின் மூலமாக, கிராமங்களில் மக்களுக்குப் பணி செய்வதன் மூலமாக, உழைப்பின் மூலமாகக் கிடைத்திருக்கும் மதிப்பு அதைவிடப் பன்மடங்கு. இவ்வளவு பெரிய காரியத்தை நம்முடைய மாநிலத்தில் நாம் செய்துகொண்டு வருகிறோம் என்றால், இந்த ஒத்துழைப்பு தான் காரணம். மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் இந்த கிராம வளர்ச்சி சம்பந்தமாக நமது பணிகளையும் திட்டங்களையும் பற்றியும் செயல்முறைகளைப்பற்றியும் தெரிந்துகொள்ள நம்முடைய மாநிலத்திற்கு வந்து அறிந்து செல்கிறார்கள். அந்த நிலைமைக்கு நாம் இந்தத் திட்டங்களை செவ்வனே செய்து வருகிறோம். அப்படி நடந்துகொண்டு வரும் இத்திட்டங்களுக்கு அரசாங்கம் மேலும் ஊக்கம் கொடுக்க வேண்டியது அவசியம்.

ஆனால் இந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவாக இருப்பது கண்டு நான் வருந்துகிறேன். சமூகக் கல்விக்காக அந்த 1969–70-ல் ரூ. 10·92 இலட்சம், 1970–71 கணக்குப்படி இப்படி ஆண்டு ரூ. 8·8 இலட்சம், 1971–72-ல் ரூ. 5·16 இலட்சமாக வருடத்துக்கு வருடம் குறைந்து, இப்பொழுது ரூ. 5·97 இலட்சமாக இருக்கிறது. ஆக சமூகக் கல்வித் திட்டத்திற்கு 1969–71-ல் இருந்ததைவிட மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக மகளிர், குழந்தைகள் விஷயம். ஜனத்தொகையில் பாதிக்குமேல் பெண்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. சமுதாய வளர்ச்சி என்று சொன்னால், முதலில் பெண்களைத்தான் கவனிக்கவேண்டும். இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு, அநேகமாக கிராமங்களில் பெண்கள் சமூகத்தில் மாற்றமில்லாத கிராமமே இல்லையென்று சொல்லும் அளவுக்கு உயர்வு அடைந்து விட்டது. இந்தத் திட்டத்திற்கும் இந்த ஆண்டு மிகவும் குறைந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1970–71-ல் ரூ. 14·20 இலட்சம் கொடுத்ததற்கு மேல் அதிகப்படுத்தவில்லையே என்ற குறைதான். இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கலாம். 1971–72-ல் ரூ. 20 இலட்சம் கொடுக்கப்பட்டிருந்தது. 1972–73-ம் வருஷத்திட்டத்தில் ரூ. 17·9 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நடப்பு ஆண்டிலிருந்ததை விட மூன்று இலட்சம் குறைத்திருக்கிறார்கள். அதைக் குறைத்திருக்க வேண்டாம், இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கலாம்.

அதே போல், இணைப்புச் சாலைகளுக்குக் கொடுத்திருக்கும் தொகை போதாது. மோட்டார் வாகனங்களுக்கு பத்து சதம் அதிகமாக வரி போடப்பட்டிருக்கிறது. அந்த வரியின் மூலமாக வரும் தொகையைப் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் இணைப்பு சாலைகளுக்கு ஒதுக்கு வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையில் சொல்லப் பட்டது. ஆகவே சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் அதிகமாக்க

29th March 1972] [திரு. கே. ராஜாராம்]

கொடுக்கப்படுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் அது காணப்படவில்லை. அதே ரூ. 110 இலட்சம்தான் போடப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய வரியின் மூலமாக வரும் தொகை பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுக்கப்படும் என்று கூறப்பட்ட சமிக்ஞை இதில் நிறைவேற்றப் படவில்லை. சொன்னபடி அதைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தில் ஆரம்பக் கல்வி சம்பந்தமாக நியமித்த கமிட்டியின் சிபார்சுகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் நிதி விஷயத்தில் அதை மனதில் வைத்துக் கொண்டு செய்யவில்லை என்று தோன்றுகிறது. லோகல் செஸ் சர்சார்ஜ் ரூபாய்க்கு இரண்டரை ரூபாய் போட முடிவு செய்திருப்பதாக வரவு-செலவு திட்டத்தில் சொல்லப் பட்டது. அந்தக் கமிட்டியின் சிபார்சின் மற்றொரு பகுதி :

"We recommend that the entire collections of land revenue exclusive of charges for irrigation should be pooled and distributed among the various Panchayat Unions in the State on the basis of the population. We also recommend that in addition to the funds so made available, a per capita grant of Rs. 2·50 should be made available to the Panchayat Unions."

இரண்டரை ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் லோகல் செஸ் சார்ஜையும் அரசாங்கம் கூட்டலாம் என்று சொல்லியிருக்கிறது. இவற்றை எல்லாம் விட பஞ்சாயத்து யூனியன்களே அவற்றைப் போட்டு வசூல் செய்துகொள்ளலாம் என்று சொல்லியிருக்கலாம். அரசாங்கம் கொடுக்க வேண்டும் எனபதற்கு வழி சொன்னதாகத் தெரியவில்லை. ஒரு தலைக்கு இரண்டரை ரூபாய் வீதம் போட்டுக் கொடுக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பஞ்சாயத்து யூனியன்களை ஏ, பி, சி, டி என்று பிரித்திருப்பதை மறு பரிசீலனை செய்யவேண்டும். ஒரு சமயம் அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பேசுகிறபோது பரிசீலனை செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நல்ல நிலைமையில் இருக்கின்ற சில பஞ்சாயத்து யூனியன்களுக்கூட பி, சி, டி என்ற நிலைமையில் வைக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் குறைந்த வருமானமுள்ள சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாகச் சர்க்கார் மான்யம் பெறும் படியான தகுதியில்லை. ஆகையினால் அவைகளையெல்லாம் திருத்தியமைக்கவேண்டும். இந்த ரிப்போர்ட்டில் ஆறு விதமாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆறு விதமோ, நான்கு விதமோ, அரசாங்கம் எப்படி முடிவு எடுக்கிறதோ அது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில், கண்டிப்பாக மீண்டும் புனர் பரிசீலனை செய்யவேண்டும். ஒரு குழு அமைத்து, இந்தப் பஞ்சாயத்து யூனியன்களையெல்லாம் தரம் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [29th March 1972

சில கிராமப் பஞ்சாயத்துகளை நகரப் பஞ்சாயத்துகளாக மாற்றும் போது, பெரிய தவறுகள் எற்படுகின்றன. மூன்று, நான்கு மைல் களுக்கு அப்பால் இருந்து வருகின்ற கிராமங்கள் அப்படியே கிராமப் பஞ்சாயத்துகளாக இருந்து வருகின்றன. திடீரென்று ஒரு நாள் 10,000 ஜனத்தொகையைத் தாண்டிவிட்டது. ஆகவே நகரப் பஞ் சாயத்தாக மாற்ற வேண்டுமென்று கோட்டையிலே உட்கார்ந்து கொண்டு உத்திரவு போடப்பட்டு அப்படியே மாற்றப்படுகிறது. ஒரு டெவலெட் டுக்கும் இன்னொரு டெவலெப்டுக்கும் நான்கு மைல் தூரம் இருந்தும் அவற்றை இணைத்துப் போட்டு நகரப் பஞ்சாயத்துகளாக்கும் நிலைமை இருக் கிறது. நகரப் பஞ்சாயத்து என்று சொல்லி, தூரத்தில் உள்ளவர்களை எல்லாம் போட்டியில் நிறுத்தக் கூடாது. அதனால் ஏற்படும் அசௌ கரியம் ஒருபுறமிருக்க ஜனங்களுக்குள் மாச்சர்யம், சண்டை, அந்த ஊருக்கு இரண்டு பேர், இந்த ஊருக்கு மூன்று பேர், பெரிய ஊர்க் காரர்கள் மெஜாரிட்டி, சிறிய கிராமங்களுக்கு கவனம் செலுத்தப்பட வில்லை என்று இப்படி எல்லாம் குரல்கள் வினவுகின்றன. இதனால் 1-50 p m சிறிய கிராமங்கள் கவனமிழந்த நிலைமைக்கு ஆளாக்கப்படும். அந் தந்த கிராமங்களின் நிலைமையை ஆராய்ந்து செய்ய வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்குகள் பற்றி அந்த ரிப்போர்ட்டில் கொடுத்திருக்கும் யோசனை களைப் படித்துப் பார்க்கும் போதே நமக்கு சொல்லத் தெரிகிறதாக இருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களில் எது எப்படி இருந்தா லும், சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் அந்தக் கணக்குகளை வைத்துக்கொள்ளவேண்டும்.

"Some of the major irregularities relating to the need of funds noticed in the Panchayats and Panchyat Unions are defective budgeting over estimates which exceeds the budget provision incurring expenditure on inadmissible improvements."

என்று சொல்லி ஐந்தாறு இடங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டிய மிக முக்கியமான அம்சமாகும். பஞ்சாயத்து யூனியன்களில் இந்தத் தவறுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்த ரிப்போர்ட்டில் அச் சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களை இதைப் படித்துப் பார்த்துக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். "ஸ்டேட் லெவல் கன்சல்டேடிவ் கமிட்டி" என்று பல வருஷங்களாக நடை பெற்று வருகிறது. இதில் கலந்துகொள்ள பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதிகள் வந்து கொண்டிருந்தார்கள். கடந்த சில ஆண்டுகளாக இந்த "கன்சல்டேடிவ் கமிட்டி" நடைபெறவில்லை. அதைப் பற்றி அது நல்லதா கெட்டதா என்று எதையும் நான் சொல்ல விரும்ப வில்லை. ஸ்டேட் லெவலில் "கன்சல்டேஷன்" இருக்க வேண்டும். அது போதுமான பிரதிநிதித்துவம் உள்ள கமிட்டி என்றும் அந்தக் கமிட்டியினால் எல்லாக் குறைகளும் தீர்ந்துவிடும் என்றும் சொல்லுவதற் கில்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட "கன்சல்டேஷன்" அவசியம். அதைவிட விரிவான முறையில் ஒரு வருஷத்திற்கு அல்லது இரண்டு

29th March 1972] [திரு. கே. ராஜாராம்]

வருஷத்திற்கு ஒரு முறையாவது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை, ஸ்தலஸ்தாபன அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் சந் தித்துப் பேச வேண்டியது அவசியம். வளர்ந்து வரும் சமுதாயத்தில் போன வருஷம் நல்லது என்று நினைத்த ஒன்றை இந்த வருஷம் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. பஞ்சாயத்து, பஞ் சாயத்து யூனியன் குறைகளைப் பற்றி, இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, முடிந்தால் வருஷத்திற்கு ஒருமுறை முதலமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட ஆர்.டி.எல்.வ., சமுதாய வளர்ச்சி அமைச்சர் அவர்களும் ஒரு மூன்று நாட்களாவது அவர்களுடன் பேசி, குறைகளைத் தெரிந்து எவ்வளவு முடியுமோ அந்த அளவு அவர்கள் குறைகளைக் களைய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காகத்தான் மாநிலப் பஞ் சாயத்து யூனியன் என்ற அமைப்பை நான் பல வருஷங்களுக்கு முன் ஆரம்பித்து நடத்தி வந்தேன். பல மாநாடுகள் கூட்டினேன். இப் போதுள்ள அமைச்சர்களும் வந்தார்கள். நான் அதன் பொறுப்பி லிருந்து விலகிய பிறகு அது செயல்படாமல் நின்று விட்டது. மீண்டும் அதை இயக்க வேண்டும். இப்படி அரசாங்கமே ஒரு மாநாட்டைக் கூட்டலாம். இந்த 374 பஞ்சாயத்துத் தலைவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு, அவைகளை முடிந்த அளவு நிறைவேற்றி வைப்பது நலம் என்று கருதுகிறேன். பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களை வரச் சொல்லி, பஞ்சா யத்து யூனியன் நிலைகளை பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்த பரிகாரங்கள் தேடப்பட வேண்டும். அரசாங்கத்தின் புள்ளி விவரப்படி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 18,616. உயர் தொடக்கப் பள்ளிகள் 3,177. இவை போக இன்னும் அவர்களுடைய சாதனைகள், ரோடுகள், சமுதாய வளர்ச்சிகள், பெண்கள் சம்பந்தமான அபிவிருத்தி, எல்லாவற்றுக்கும் மேலாக குடும்பக் கட்டுப் பாடு பஞ்சாயத்துச் சட்டம்—1958-ஆம் வருஷத்திய சட்டத்தில் அதன் பரியாம்பிளிலேயே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பஞ்சாயத்து ஒன்றியங் களின் பொறுப்பில் இருக்கும் என்று வைத்து விட்டார்கள். அவ்வளவு பொறுப்பையும் பஞ் ாயத்து யூனியனிடம் அளித்து விட்ட பிறகு, அதற்கான நிதி வசதியையும் அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு மதிய உணவு விஷயத்திலும் ஆசிரியர்களுக்கு வேலையைக் குறைத்தால் நலம். "கேர்" உதவி பெற்று நடத்தி வரும் மைய சமையல் அறைத் திட்டம் என்று போடப்பட்டிருக்கிறது. 30 பள்ளிகளுக்கு, அதாவது பல பள்ளிகளைச் சேர்த்து ஒரு இடத்தில் சமையல் செய்து ஒரு கேந்திரமான இடத்தில் தயாரித்து, அந்த மோட்டார் வாகனத்தில் கொண்டு சென்று, ஆசிரியர் களுக்குத் தொந்தரவு தராமல், சாப்பாட்டைத் தரும் ஏற்பாடானது பாராட்டுக்குரிய விஷயமாகும். இதை மேலும் விரிவு படுத்தி எவ்வளவு சீக்கிரமாக மாநிலம் பூராவும் அமலுக்குக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசன குளங்களை பரிபாலிக்கும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். 24,000 குளங்கள் ஒப்ப டைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்காக ஒதுக்கியிருக்கும் தொகை

மிகவும் சொல்லப் [illegible]. இது பேதாது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு முன்பு ரூபாய் பத்தாயிரம் ஒதுக்கினோம். இப்போது ரூ. 15 ஆயிரம் தொடுத் தாலும் ஒன்றுக்கும் மாறாது என்று சொல்ல வேண்டும். கனம் திரு. [illegible] பற்றி [illegible] காட்டினார். [illegible] மராமத்து [illegible] ஒதுக்க வேண்டும். [illegible] பஞ்சாயத்தில் [illegible] தெளிக்கச் சொல்ல [illegible] மராமத்து [illegible] சரி செய்ய [illegible] போட்டு, [illegible] ஒழுங்காகச் [illegible] குளங்களை [illegible] வேண்டுமென்ன [illegible] தண்ணீர் [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி விஷயத்தில் இப்போது [illegible] யூனியனின் [illegible] பள்ளிகளைக் கவனிக்க [illegible]. ஒருவர் பஞ்சாயத்து யூனியன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரி மற்றொருவர் "டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்". கல்விக் [illegible] யாக அவர் போகிறார். [illegible] அதிகாரிகள் [illegible]. [illegible] ரிக்கார்ட்டு [illegible] யூனியன் [illegible] களுக்குள் [illegible] வருவதற்குக் [illegible] சேர்மனுகள் [illegible] கிறது என்று [illegible] தனியாக [illegible] யத்தின் சார்பாக [illegible] அதை மட்டும் [illegible] பாதுகாக்கும் [illegible] "டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்" [illegible] இன்னும் [illegible] மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துச் சட்டத்தை நாம் நிறைவேற்றி 14 ஆண்டு காலம் ஆகிறது. 1958-லிருந்து இதுவரை பல விதமான உத்தரவுகள் போட்டிருக்கிறோம். திருத்தங்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி மீண்டும் இப் பாதுள்ள நிலவரத்திற்குத் தக்கபடி என்னென்ன சீர்திருத்தம் செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய ஒரு குழுவை அரசாங்கம்

நியமித்து, உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகப் பற்றற்றவர்களை யும் போட்டு—1957-ல் white paper ஒன்று, ஒரு சிபாரிசைத் தந்தார்கள். அதே மாதிரியாக இப்போதும்—ஆறு மாதம் ஒரு வருஷத் திற்குள் பரிசீலனை செய்து இந்தச் சட்டத்திற்குப் பதிலாக வேறு சட்டம் கொண்டு வரலாமா அல்லது திருத்தங்கள் செய்யலாமா எனறதைப் பரிசீலித்து அரசுக்கு அறிவிக்க ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் ஏற்பட்டு 14 வருஷங்கள் ஆகிவிட்டதால், அதில் பல குறைகள் இருக்கின்றன. 5-00 p.m.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத்தேவர் சில விஷயங்களைச் சொன்னார். அவற்றையெல்லாம் திருத்தியமைப்பதற்கு முடியுமா என்பதையும் அந்தக் குழுவிலே பரிசீலிப்பதற்கு ஆலோசிக்கலாமென்று அரசாங்கத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக பஞ்சாயத்து நிலையம் அவர்கள் சொன்ன மாதிரி உண்மையான ஸ்தல ஸ்தாபன தன்னுட்சியாக அமைய வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தன்னுட்சியில் பிறர் குறுக்கிடாமல் சொமப் பஞ்சாயத்து நிர்வாகங்கள் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் திரு. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊர் வளர்ச்சி, நகராட்சி வளர்ச்சி, கூட்டுறவு வளர்ச்சி பற்றி இங்கே எடுத்துக்கொண்ட கொள்கை விளக்கக்குறிப்பின் மீது விவாதத் திலே கலந்துகொண்டு உறுப்பினர்கள் பலரும் சிறிய கருத்துக்கள் பலவற்றை மொழிந்திருக்கிறார்கள். இந்தத் துறை மேலும் மேலும் வளர வேண்டும் என்பதற்காகப் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக அவர்களுக்கு முதலிலேயே நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறை இப்போது இன்றியமையாத துறை என்பதையும் இந்தத் துறை மூலமாக ஆக்கப்படுகின்ற பணிகள் எல்லாம் நாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாது தேவைப்படு கின்றவை என்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆகவே ஊர் வளர்ச்சி மூலமாக, நகராட்சி வளர்ச்சியின் மூலமாக சமுதாயம் எவ்வளவுக்கெவ்வளவு வசதிகளையும், வாய்ப்புகளையும், நலன்களையும், பலன்களையும் பெறுகின்றனவோ அதைப் பொறுத்துதான் வளர்ந்தாக முடியும் என்பதை நாம் நன்றாகக் காணுகிறோம். ஆகவேதான் இந்தத் துறை மிகமிக இன்றியமையாத ஒரு துறையாக இருப்பது மட்டுமல்லாமல் எல்லாத் துறைகளையும் தழுவிச் செல்ல வேண்டிய துறையாகவும் எல்லாத் துறைகளையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு துறையாகவும் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், பொது மக்களுடைய ஒத்துழைப்போடும் இயங்க வேண்டியிருக்கிறது. இந்தத் துறைக்குத்தான் பொது மக்களோடு மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு என்று நான் சொல்வேனேயானால், அது மிகையாகாது. அது மட்டுமல்லாமல், வேறு பல துறைகளைக் கூட தனித் தனியாக வைத்து அதனுடைய முழுத் தன்மையையும் இயக்குவித்து விடலாம். என்றாலும் இந்தத் துறையில் அந்தந்தத் துறைகள் தங்கள்

தங்கள் பகுதிகளைத் தனியாக எடுத்துவிடுவார்களேயானால், பிறகு இப்படி ஒரு துறை இருப்பதாகவே யார் கண்ணுக்கும் தெரியாது. எனென்றால் எல்லாத் துறைகளையும் சேர்த்து இழையோடத்தக்க அளவுக்கு இந்த உள்ளாட்சித் துறை அமைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாகக் காணலாம். இந்தத் துறையைப் பொறுத்த வரையில், மானியக் கோரிக்கையாக ரூ. 4,69,29,500-ஐ நாம் பெற்றிருக்கிறோம் என்றாலும், அத்தோடு இந்தத் துறைக்கு செலவு அமைந்துவிடுவதில்லை. ஆக இந்தத் துறையின் மூலமாக நடக்கும் அத்தகைய பணிகளைப் பொறுத்துத்தான், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கல்வித் துறை ஆகிய துறைகளும் உள்ளன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டதைப் போல, இந்தத் துறையை இயக்குவிப்பதற்கு ஏறக்குறைய 14 கோடி ரூபாய் மானியமாகப் பெற்றிருக்கிறோம் என்றாலும், எல்லா வகையான தன்மைகளையும் எடுத்துப் பார்ப்பீர்களேயானால், பொது நிர்வாகம், கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், வேளாண்மை, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், பாசனம் பொதுப் பணிகள், மூலதனச் செலவு, கடன்கள் ஆகிய இத்தனையும் இணங்கிய வகையில் அந்தத் துறைகள் தனித்தனியாகத் திட்டமிட்டு அதற்காகத் தொகை ஒதுக்கினாலும், இந்த உள்ளாட்சி மன்றத்தின் கரங்கள் பட்டுத்தான் அவைகள் மக்களுக்குச் சேரவேண்டியதாக இருக்கின்றன. அந்த வகையிலே பார்த்தால் இந்த ஆண்டு 72 கோடியே 95 இலட்சம் ரூபாய் திட்டங்கள் இந்தத் துறையின் மூலமாகத்தான் நாட்டிலே பரவ வேண்டியதாக அமைந்திருக்கும் தன்மையைக் காணுகிறோம்.

ஊராட்சி மன்றங்கள், 12,642 ஆகவும், பேரூராட்சி மன்றங்கள் 600 ஆகவும், ஊராட்சி ஒன்றியங்கள் 374 ஆகவும், ஊராட்சி நகரியங்கள் 12 ஆகவும், நகராட்சிகள் 83 ஆகவும், நகர் நகரியங்கள் 8 ஆகவும், மாநகராட்சிகள் 2 ஆகவும் தமிழகத்தின் அமைப்பு அமைந்திருக்கிறது. ஆனாலும் தொன்றுதொட்டே ஒரு பரவலான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம் என்ற பெருமையையும் மகிழ்ச்சியையும் கொள்ளலாம். வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழகத்தில் மக்களுக்கான வசதிகளும் வாய்ப்புகளும் தொன்று தொட்டே கிடைக்கப்பெற்று, தமிழகம் ஒரு பரவலான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. திட்டமிட்டுப் பணிகள் ஆற்றத் தொடங்கிய காலத்திலிருந்து வளர்ச்சி நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. அப்பணிகள் மேலும் சீராக நடைபெறுகிற முறையிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகக் காணலாம். இந்த வகையிலே பார்ப்பீர்களேயானால், வேறு பல மாநிலங்களை எடுத்துக்கொண்டால் பம்பாய் மிக நன்றாக வளர்ந்த நகரமாகும். பூனா நன்றாக வளர்ந்த நகரமாகும். மற்றவைகள் எல்லாம் மிக வளர்ச்சி அடையாத சாதாரணப் பகுதிகளையாகும். வங்காளத்தில்கூட கல்கத்தா ஒரு வளர்ந்த நகரம். இந்நகரங்களைத் தாண்டி 30 மைல் உள்ளே சென்றீர்களேயானால், மற்றவைகள் எல்லாம் வளர்ச்சி அடையாத சிற்றூர் பகுதியாக இருக்கும் தன்மையைக் காணலாம். மைசூரை எடுத்துக்கொண்டாலும், மைசூர், பேங்களூர், மங்களூர் இப்படி நான்கைந்து நகரங்கள்தான் வளர்ச்சியடைந்துள்ளன.

மற்றவை எல்லாம் சாதாரணமே. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் மாவட்டத் தலைநகரங்கள், வளர்ச்சியுற்ற பெரு நகர்களாகவும், பல்வேறு நகராட்சி மன்றங்களாகவும் இருப்பதைப் பார்க்கலாம். சென்னை அடுத்தபடி மதுரை, அடுத்தபடி கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை, கடலூர், திருநெல்வேலி என்று இப்படிப் பரவலான வளர்ச்சியைத் தமிழகம் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்லாமல் பரவலான வளர்ச்சியையும் வசதியையும் பெறத்தக்க அளவில், அந்த அளவுக்கு அதனைப் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்திருப்பதை மிகச் சிறப்பாக காணலாம். குறிப்பாக வசதிகள் வாய்ப்புக்கள் அடிப்படையில் வைத்துக் கணக்கிட்டு, இன்ன மக்கள் தொகைக்கு இன்ன வசதிகள் வாய்ப்புக்கள், இன்ன வகையில் பெற்றிருக்க வேண்டும் என்ற கணக்கின் அடிப்படையில் பார்க்கின்றபோது, உத்திரப் பிரதேசத்தில் 8 கோடி மக்கள் இருக்கிறார்கள். அது தமிழகத்தை விட இரண்டு மூன்று மடங்கு பெரியது. தமிழ் நாட்டில் மக்கள் தொகை 4 கோடியே 10 இலட்சம். ஆனால் இலக்கண அடிப்படையில் வளர்ந்து வரும் நகரங்களைப் பார்த்தால், உத்திரப்பிரதேசத்தில் 293 தான் அமைகின்றன. மஹாராஷ்டிரத்தில் 299 நகரங்கள் வருகின்றன. குஜராத்தில் 217 வருகின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், 443 நகரங்கள் என்று வருகின்றன. இந்த இலக்கணத்தின் கீழ் உத்திரப் பிரதேசம் இரண்டு மடங்கு பெரியதாக இருந்தாலும், 8 கோடி மக்களுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் கொடுக்கின்ற அளவுக்குத் தன்னைத்தானே வளர்த்துக்கொண்டிருக்கின்ற நகரங்கள் 293 தான். ஆனால் தமிழகத்தில் 443 வருகிறது என்று பரவலான வளர்ச்சியைத் திட்டமிட்டுப் பெற்றிருப்பதை காண்கிறோம். ஆகவே ஊராட்சி ஒன்றிய அமைப்பு அமைந்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியது போல், 13, 14 ஆண்டுகள் ஆகிவிட்டதால், அதை மறுபடியும் ரெவ்யூ என்று சொல்லத் தக்க அளவுக்கு மீண்டும் பரிசீலனை செய்து, அரசு அந்த அமைப்பின் குறைபாடுகளை நீக்கி, நிறைபாடுகளை நிரப்ப முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எந்த வகையிலும் ஏற்கெனவே டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஊராட்சி ஒன்றியமாக அமைந்ததன் மூலமாக, உறுதியான வளர்ச்சியை நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை, மறைப்பதற்குமில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலே அக்கறை செலுத்தியிருந்ததைவிட இப்பொழுது ஒவ்வோரு மாவட்டமும் 40, 45, 30, 35 ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிந்திருக்கிறபோது அக்கறையும் ஆர்வமும் அதிலே செலுத்துகின்ற கவனிப்பும் அதிகமாக இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஏற்கெனவே இருந்த ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஜில்லா போர்ட் பிரசிடென்ட்டாக இருந்த அவருடைய இரு கண்கள் மட்டும் அந்த மாவட்டத்தைப் பார்க்கும்; அவருடைய இரு காதுகள் மட்டும் அந்த மாவட்டத்தின் குறைகளைக் கேட்கும். இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் 80 கண்களாவது பார்க்கும், 80 காதுகளாவது கேட்கத்தக்க அளவுக்கு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் டிஸ்ட்ரிக்ட் போர்டாக இருந்த காலத்திலே டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரசிடென்ட் அவர்கள் இருக்கிற ஊர் வரையிலும்தான் தார் ரோடு இருக்கும். சில இடங்களில் டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரசிடென்ட் வீட்டுக்கு அப்பால் கூட போகாமல் அவர்கள் வீட்டுவரையிலும்தான் ரோடு போகும். அந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [29th March 1972

அளவுக்கு இருந்த நிலைமை மாறி, பரவலான வளர்ச்சி பெற வேண்டுமென்ற துடிப்புணர்ச்சியும், போட்டா போட்டி உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது இன்று. அதிலுள்ள சிலபல குறைபாடுகளை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் குறிப்பிட்டார்கள். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று மற்ற உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று அதை ஆராய்ந்து வழி வகைகளைக் காண வேண்டுமென்று ஒரு குழுவிடத்திலே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஆக இது ஒரே துறையாக இருக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். வேறு சில உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அப்படிப் பரவலாக ஒரு தன்மை இருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில், பல்வேறு துறைகளை அணைத்துச் செல்லவேண்டிய அளவுக்கு இந்தத் துறையின் அமைப்பே இருக்கிறது. மற்றத் துறைகள் எல்லாம் தனித்தனியாக இயங்குகின்ற வாய்ப்பு இருக்கும் போது, இந்தத் துறையில் மட்டும் என் முடியாது என்று நமக்கு நாமே ஒரு கேள்வியை எழுப்பிப் பார்ப்போமானால், எல்லாத் துறைகளையும் போல் இந்தத் துறையை இயக்க முடியாதகுழ்நிலை இந்தத் துறையைப் பொறுத்த வரையில் இருக்கிறது. கல்வித் துறையை தனியாக இயக்கிவிடலாம். வேறு எந்தத் துறையையும் தனியாக இயக்கிவிடலாம். இந்தத் துறையை பெருமளவுக்குத் தனியாக இயக்க முடியாது. ஆனால் கூடுமான வரையில் எந்தெந்த அளவுக்கு இயக்கலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்துக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எல்லாத் திட்டத்தையும் அமைப்பதாக இருந்தாலும், அவற்றிற்கு முதுகெலும்பாக இருப்பது வருவாய்த் துறையாக இருக்கிறது. ஒரு காலத்தில் வருவாய்த் துறை என்று பேர் வைத்திருந்தால்கூட அந்தப் பெயரையே மாற்ற வேண்டிய அளவுக்கு, அதனுடைய அட்மினிஸ்ட்ரேட்டர் என்ற அளவுக்கு மாவட்டத்தின்கீழ் ஆட்சி நடைபெறுகிறது என்று ஏற்றுக்கொள்ளும்படி இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வந்திருக்கிறார். எந்தப் பணி எந்தத் துறையில் இயங்கினாலும், அது வருவாய்த் துறையை மையமாக வைத்துத்தான் நடைபெற வேண்டிய அளவுக்கு அமைந்திருக்கிறது. ஆகவே வேறுபல துறைகளில் என்ன நடந்தாலும், அந்த முழுத்தன்மையும் இந்தத் துறையைச் சேர்ந்தவர் களிடம் தான் இருக்க வேண்டும். குறைபாடுகள் இருந்தாலும் நீக்கி விட்டு இதன்கீழ்தான் நடைபெற வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது. வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் இந்தத் துறையைச் சேர்ந்த ஆர்.டி.ஓ. வுக்கோ அல்லது ஆட்சித் தலைவருக்கோ கட்டுப்பட்டுத்தான் நடைபெறவேண்டிய நிலை இருக்கிறது. இவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பிந்துரை ஆலோசனை அளிக்க வேண்டி யவர்களாக இருக்கிறார்கள். அந்த அளவில் பார்க்கிறபோது எந்தத் துறையும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் இயங்கவேண்டும். பல்வேறு துறையில் நடைபெறுகின்ற காரியங்களில் பெருமையும் இவர்களையே சாரும். துதேசமயம், மாவட்டத்தின், சிற்றூரில் இருக்கிற கர்ணம், பட்டா மணியம்

5-10 பி.ப.

29th March 1972] [டாக்டர் இரா.நெடுஞ்செழியன்]

போன்றவர்களின் ஒத்துழைப்பும் ஊராட்சி மன்றங்கள் இன்னும் பல்வேறு வளர்ச்சித்திட்ட அலுவலர்களின் ஒத்துழைப்பும் இவர்களுக்குத் தேவைப் படுகிறது. அத்தலைவரின்கீழ்தான் நமது அமைப்புகள் பலவும் இருக்கின்றன. முன்பெல்லாம் தாசில்தார் பி.டி.ஓ. ஆகலாம், பி.டி.ஓ. தாசில்தாராகலாம் என்ற நிலைமை இருந்தது. இப்போது அந்தத் தன்மைகள் எல்லாம் ஆணையாளரிடம் தான் இருக்கிறது. இப்போது சொல்கின்ற ஒரே ஒரு குறைபாடுகூட, ஆர்.டி.ஓ. வேண்டாம் என்பதுதான். அவருடைய ஆதிக்கமும் சேர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இருக்க வேண்டும் என்பதுதான். ஆக, ஆர்.டி.ஓ-வுக்குப் பதிலாக இந்தத்துறை வலிமை பெற்று ரெவின்யூத் துறையைச் சேர்ந்தவர்களே வலிமைபெற வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. ஓரளவுக்கு நானும் அந்த வகைக் கருத்தை உடையவன்தான். அது சீர்தூக்கிப்பார்க்கவேண்டிய ஒன்று என்ற அடிப்படையில் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். ஆக, எந்த அதிகாரத்தை எந்த அளவுக்குக் கொடுக்கலாம் என்று ஆராயும்படி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்து பரிந்துரைகளைக்கொடுப்பதற்கு முன்னால் மற்றவைகளையும் பல விஷயங்களையும் பற்றி ஆலோசிக்கலாம் என்று கருதுகிறேன். இந்தத் துறையைப்பொறுத்த வரையில், அதிகமான வசதிகளைச் செய்துதர அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. 1972-இல் 95 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெறுகின்றதென்றால், இந்தத் துறை நேரடியாகச் செய்யாவிட்டாலும், பல்வேறு துறைகளில் செய்யப்படுகிற பெருமை அத்தனையும் இதற்கே போய்ச் சேருகிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் ஓரளவுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகள் செய்த காரியங்கள் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்றன என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள முடியும். 1966-67-இல் உணவு உற்பத்தி 54 லட்சம் டன். ஆனால் அது 73 லட்சம் டன்னாக உயர்வதற்கு ஊராட்சி மன்றங்கள் ஒன்றியங்களின் ஒத்துழைப்பேதான் காரணம். வேறுபல துறைகளின் மூலமாகக் கொடுக்கப்பட்ட ஒத்துழைப்பும் இதற்குக் காரணம். அந்த வகையில் பெரும் நிர்வாகச் செலவு மற்றைய வகைகளுக்கும் ஏற்பட்டு வருகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவுகளையெல்லாம் நீக்கிவிட்டுப்பார்த்தாலும், அதிகமாகப் பணத்தைச் செலவழிக்கின்ற வகைகளைச் செய்திருக்கிறார்கள். 1966-67-இல் per block provision ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூ. 6,91,000, 1969-70-இல் ரூ. 9,70,000, 1971-72-இல் ரூ. 11,70,000. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை எடுத்துக்கொண்டால், ரூ. 12,40,000 என்று இருப்பது நமக்கு இருக்கிற நிதி வசதியில், கூடியவரையில் நிதி வசதியைப் பெருக்குகின்ற அடிப்படையில் செய்து வருகிறோம் என்பதைக் காட்டுகின்றது. ஆனால் இது போதுமா என்று கேட்டால், போதாது. இன்னும் அதிகம் வேண்டும் தான். கிடைக்குமா என்றால் கிடைப்பதில்லை. எனவே அதைப் பெருக்குகிற முயற்சிகளிலே நாம் ஈடுபட்டு வருகிறோம்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில், நாம் செலவழிக்கவிருப்பது ரூ. 14 கோடியே 90 லட்சம். இதில் ஊராட்சி ஒன்றியங்களுக்குமாத்திரம் ரூ. 3,14,000. மற்றப்படி, அரசே கல்வித் துறையின் மூலமாக ஒரு பெரிய தொகையைச் செலவழிக்கிறது என்பதைப் பார்க்கலாம். 1966-67-இல் மொத்தம் ரூ. பதினைந்து கோடியே தொண்ணூற்று மூன்று லட்சம் இதிலே ஊராட்சியின் பங்கு மூன்று கோடியே பதினைந்து லட்சம் ரூபாய். 1969-70-இல் ரூ. 25 கோடி. ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு ரூ. 3,14,00,000. இந்தத் தன்மைகளைப்பார்த்தால் 1966-67-இல் ரூ. 14 கோடியாக இருந்தது, ரூ. 37 கோடிக்கு வளர்ந்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் செலவு மூன்று கோடியிலிருந்து 5 கோடியே 75 லட்சத்திற்குப்போயிருக்கிறது. போதுமா என்று கேட்டால் போதாது. இப்போதுகூட 22 ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு ஓரளவுக்குக் கட்டிடங்கள் பெற்றிருக்கிறோம். இன்னும் 7 ஆயிரம் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். ஓரளவுக்குக் கட்டியிருக்கிறோம். அறவே இல்லை என்று சொல்லிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு வெங்கா அவர்கள் குறிப்பிட்டதுபோல, 7 ஆயிரம் பள்ளிகளும் மரத்தடியில்தான் நடக்கின்றன என்ற முடிவுக்குவர வேண்டிய அவசியமில்லை. கட்டிடங்களிலில்லாவிட்டாலும் கூட, கூரைக்கட்டிடங்களில் இருக்கின்றன. மரத்தடியினும் பணியாற்றவேண்டியவர்கள் இருக்கிறார்கள். ஆனால், எல்லோருமே மரத்தடியில் பணியாற்றிக்கொண்டிருக்கவில்லை. எனவே, இதற்காகத்தான் கிட்டத்தட்ட ரூ. 8 கோடிக்குக் கட்டிடங்கள் கட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது. இவற்றைக் கட்டுவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் கடன் கேட்டோம். அதற்கு அவர்கள் அரசாங்கத்திற்குக் கடன்கொடுக்க மாட்டோம், தனித்தனியாகத்தான் தர முடியும் என்று கூறிவிட்டார்கள். ஊராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தொடர்பு வைத்துக்கொள்ளுவது சரியா என்று சொல்லி, இதற்காக ஒரு தனி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி டி.ஆர்.டி. அவர்களைப் பொறுப்பாளராக அமைத்து, அந்த அமைப்புக்கு ரூ. 8 கோடி தருவார்களேயானால், அந்த வகையில் 7 ஆயிரம் பள்ளிக் கட்டிடங்கள் கட்டலாம் என்று சிந்தித்தோம்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எல்.ஐ.சி.-யிடம் வாங்கக் கூடிய அந்தத் தொகைக்கு எத்தனை சதவிகிதம் வட்டி ? எத்தனை தவணைகளில் திருப்பித்தர வேண்டும்.?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த விவரக் குறிப்புகள் தற்போது இல்லை. குறைந்த வட்டிவிகிதத்தில் தான் அது இருக்கும் என்று கருதுகிறேன். அப்படிக் கேட்டிருக்கிறோம். தருவதற்கு அவர்கள் இசைவார்களேயானால், ஏழாயிரம் கட்டிடங்களையும் கட்டலாம். இல்லாவிட்டால், ஆண்டு ஒன்றிற்கு ஆயிரம் பள்ளிகள் வீதம் ஊராட்சி ஒன்றியங்களின்மூலம் தான் கட்டப்படவேண்டியிருக்கும். ரூ. 12 ஆயிரம் தருவது என்று சொன்னால், அரசாங்கம் ரூ. 4 ஆயிரம் தரும், மீதம் ரூ. 8 ஆயிரத்தை பொதுமக்களிடமிருந்தும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் திரட்டிக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையை இந்த அரசு எடுத்திருக்கிறது. இந்த முறையில்தான் இந்த ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

வரிப்பங்கீட்டைப்பற்றிக் கூறும்போதும், நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மகளிர் பகுதி வளர்ச்சிக்காக அதிகம் ஒதுக்கப்பட வேண்டும், அது குறைவாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். அப்படிச் சென்ற ஆண்டைவிட குறைவாக இருப்பதற்குக் காரணம் உண்டு. வளர்ச்சி குறைந்துவிட்டது என்று அதற்குப் பொருள் அல்ல. 1971-72-ஆம் ஆண்டில் 104 மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் 8-க்கு ஒவ்வொரு மன்றத்திற்கும் சமையலறை போன்றவற்றை அமைப்பதற்காக ஒவ்வொரு பிளாக்கிற்கும் பணம் ஒதுக்கப்பட்டது. அந்த முறையில் ரூ. 2 லட்சம் அதிகம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மன்றத்திற்கும் சமையலறை அமைக்க, மற்றும் சாதனங்கள் வாங்கப்பட்டன. எனவே, அந்தத் துறையைப் பொறுத்தும், வளர்ச்சியில் எந்தவிதமான குறைவும் எற்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மற்றப்படி, குடிநீர் வசதியைப் பொறுத்த வரையில், பல்வேறு இடங்களில் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு 1972-73-க்குள்ளாக எல்லா ஊர்களும் குடிநீர் வசதிபெற்றுத்தீர வேண்டும் என்ற முயற்சியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதித் திட்டத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் இதற்காக ஒரு வாரியம் அல்லது அதுபோன்ற ஒரு நிறுவனம் அமைத்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்ற திட்டமும் அரசாங்கத்திடம் இருந்து வருகிறது.

ஒரு இடத்தில் குடிநீர்த்திட்டம் எற்படுத்தி வருகிற வழியில் இருக்கிற சிற்றூர்களில் குடிநீர் வழங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராமநாதன் குறிப்பிட்டார்கள். அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் குடிநீர் வாரியம் ஒரு திட்டத்தைத்தீட்டி வருகிறது. அதனுடைய மொத்தச் செலவைக் கூட ஊராட்சி மன்றங்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும். 20 மைலுக்கு அப்பால் இருந்தால் ஒரு ஊராட்சி மன்றம் செலவை ஏற்றுக் கொள்ள முடியாது. பல ஊராட்சி மன்றங்களுக்குப் பயன்படத்தக்க அளவுக்கு ஒரு கூட்டுத்திட்டமாகக் கொண்டு வரவேண்டிய அள்வில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. "யூனிசெப்" அவர்களுடன் உடன்பாடு செய்த காரணத்தால், 8,850 தூலைக் கிணறுகள் போடுவதற்கு உடன்பாடு செய்து, ஆண்டுக்கு 1,770 தூலைக் கிணறுகள் போடுவது என்று சென்ற ஆண்டு துவங்க இருந்தோம். ஆனால், அதற்கான கருவிகள் வந்து சேரவில்லை. இந்த ஆண்டு ஆரம்பித்து 1977-க்குள் ஐந்து ஆண்டுகளில் 8,850 தூலைக் கிணறுகளை கிட்டத்தட்ட 200 அடி, 300 அடி பாறைகளாக உள்ள பகுதியிலும், அதே போன்று காலரா போன்ற தொத்து நோய் பரவுகிற பகுதிகளிலும், மேல் நிலையில் இருக்கிற தண்ணீரை உபயோகிப்பதால் தொடர்ந்து தொத்து நோய் பரவுவதற்குள்ள நீர் பாங்களை விட்டுவிட்டு, அவற்றிற்குக்கீழ் 200 அடி 300 அடி மட்டத்திலிருந்து தூய்மையான நீரைக்கொண்டுவர வேண்டும் என்று யூனிசெப் உதவியின் அடிப்படையில் தூலைக் கிணறுகளை எற்படுத்த 4,5 யூனிட்டுகளாகப் பிரித்து அந்த வேலைகளும் முறைப்படி நடந்துகொண்டிருக்கின்றன. 5-20 p.m.

ஊராட்சி ஒன்றியங்கள் திருத்தியமைத்தல் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். 14 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம். பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதுதான். உத்திரமேரூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் 76 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. போரூரில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [29th March 1972

ஊராட்சி மன்றங்கள். சில இடங்களில் 55, 60 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. உடனடியாகவும் மாற்ற முடியாது. காரணம் சமுதாய நலத்திட்டத்திற்கு மத்திய அரசைக் கேட்காமல், அதன் சம்மதத்தைப் பெறுமல் எண்ணிக்கையைப் பெருக்கக்கூடாது. ஏனென்றால், அவர்களுடைய தொகை அளவுக்கு அடுத்த ஒரு ஆண்டுக்காலத்தில் கொடுக்கிறது முடிந்துவிடும். நாம் பெரிய ஊராட்சி மன்றங்களை எந்த அளவுக்கு மாற்றமுடியும், செலவு ஏற்படும் என்று கண்டு, ஓரளவுக்குப் பணியாற்றுகிற அளவுக்குப் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. நிர்வாகச் சீர்திருத்தக்குழு ஆராய்ந்து அதனுடைய பரிந்துரையின் பேரில் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஓரளவுக்கு ஊராட்சி மன்றங்களைப் பிரித்தால் இரண்டு பங்கு வருமானம் வரக்கூடும். அரசாங்கம் கொடுக்கின்ற மானியமும் இரண்டு பங்காகும். அதன்மூலம் ஏற்படுகிற வாய்ப்புவசதிகள்அதிகமாகும்.

அடுத்து, குடிநீருக்குப் பிறகு இணைப்பு சாலைகளை அதிகமாக்கவேண்டுமென்ற முயற்சியில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது. குடிநீருக்கு அடுத்த புடியான சலுகை கிராம மக்கள் மகிழ்ச்சி அடைவதற்கு இணைப்பு சாலைகள்தான். தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் வேறு பல வசதிகளைப் பெறுவதற்கும் இணைப்பு சாலை, குடி நீர் ஆகியவைதான் முக்கியம். விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய உணவுப் பண்டங்களை விரைவாக அகற்றவும் வாணிபத்திற்கு விரைவாக எடுத்துச் செல்லவும், அதனால் அவர்களுடைய காலம் வீணாவது போன்ற கஷ்டங்களைத் தவிர்க்கவும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த வேண்டிய முயற்சியின் அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான 1,000 மைலைப் பெருவழித் துறையினர் எடுத்துக்கொள்வது என்ற திட்டம் இந்த ஆண்டு தீட்டப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் நிதியிலிருந்து ஒரு ஆயிரம் மைலை எடுத்துக்கொள்ளுகிற சூழ்நிலை ஏற்படலாம், அவைகளைச் செம்மைப் படுத்தலாம். இப்போது ரூ. 1-50 வரையிலும் வரி வாங்கிக்கொள்ளலாம் என்பதை ரூ. 2-50 வரை வாங்கிக்கொள்ளலாம் என்று போட்டிருக்கிறோம். அந்த வகையில்கூட பெரும்பாலான மன்றங்கள் ரூ. 1 என்ற அளவில்தான் வசூலிக்கின்றன. 4, 6 ஊராட்சி ஒன்றியங்கள் 25 காசுதான் வசூலிக்கின்றன. 7, 8தான் ரூ. 1-50 அளவுக்குப் போயிருக்கிறார்கள். மற்றவர்கள் ரூ. 1-20, ரூ. 1-10 அநேகம்பேர் ரூ. 1, சிலர் 75 காசுதான் வசூலிக்கிறார்கள். ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வசூலிக்கும் தொகை உயர்ந்தால், நாம் கொடுக்கும் மானியத்தின் பெர்சன்டேஜை உயர்த்தலாம். இப்போது ஒரே மாதிரியான பெர்சன்டேஜ் தரப்படுகிறது. அவைகளை உயர்த்தினால் தான் அதற்குச் சமமாகத் தருவார்கள் என்று எண்ணுகிறார்கள். ரூ. 1½ உயர்த்தினால் என்னுடைய பெர்சன்ட்டேஜ் எவ்வளவு உயரும் என்ற அளவுக்கு, "இன்சன்டிவ்" தருகிறமாதிரிச் செய்யலாமா என்ற யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ரூ. 1½ லிருந்து ரூ. 2½ ஆக்குவது இணைப்புச் சாலைகளுக்குத் தான் என்று இருந்தாலும், மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலம் அக்கறை வரவேண்டும். ரூ. 1½யை ரூ. 2½ஆக உயர்த்தி, அதன்மூலம்வருகிற அதிகத் தொகையை இணைப்புச் சாலைகளுக்கு மட்டுமே செலவழிப்போம் என்ற குறிப்பை உணர்த்தி, பொதுமக்களிடம் வசூலிக்கலாம் என்ற அளவுக்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம்.

29th March 1972] [டாக்டர் இ. நெடுஞ்செழியன்]

ஊராட்சி ஒன்றியங்களைப்பொறுத்த வரையில் தேர்தல் பற்றிக் குறிப்பிட்டார்கள். எற்கெனவே நேரடியாகத் தேர்தலை ஊராட்சி மன்றத்திற்கும் பேரூராட்சி மன்றத்திற்கும் இந்தத் தடவை வைத்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற நிர்வாகத்தில் உள்ளவர்கள் சொல்லுகிற அளவில் ஓரளவு செம்மையாக நடைபெறுகிறது என்று குறிப்புக்கள் தந்திருக்கிறார்கள். எதோ ஒன்றிரண்டு இருந்தாலும், நீக்குவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது. ஏற்கெனவே எந்தக் காரணமும் இல்லாமல், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து இறக்க முடியும். ஊராட்சி மன்றத் தலைவர்கள் இவர்கள் நயமில் இருக்கும்படி இருந்தது. எப்போதும் இவர்கள் அன்பைப் பெற்றுத்தான் உட்கார முடியும். மக்கள் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர்தான் வீற்றிருக்கலாம் என்ற நிலைமை. தவறு இருந்தால், சுட்டிக்காட்டி இழே இறக்க வழிவகை இருக்கிறது. பன்னிரண்டாயிரத்துச் சில்லறை ஊராட்சி மன்றங்கள் இருந்தாலும்கூட, இப்படித் தகராறு விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலவற்றில்தான் இருக்கிறது. மற்றவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. இந்த அனுபவத்தை வைத்து, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் அடுத்த தடவை யோசிக்கும் பொழுது மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லாம். அதன் மூலம் ஆட்களைத் தூக்குவது என்ற நிலைமை இருந்தால் அச்சம், தாட்சண்யம் முதலியவைகளுக்குக் கட்டுப்படாத அளவுக்கு வழிவகை ஏற்படும். அதுவும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று என்று கூறிக்கொள்கிறேன்.

கன்சல்டேடிவ் கமிட்டியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு ஆண்டுகளாக நடைபெறவில்லை. அது நடைபெற்றிருக்க வேண்டியதுதான். அது பலர் யோசனை சொல்ல உதவும். அந்த யோசனைகளைச் சரியான முறையில் அமர்ந்து சிந்தித்தால் நல்ல பலனும் தரலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாக ஞாபகம். சென்ற ஆண்டு நடைபெறவில்லை. புதுப்பிக்க வேண்டிய அவசியமிருந்தால், விரைவில் கூட்டி அதனுடைய கருத்துக்களை ஆராயலாம் என்று இருக்கிறோம். நிர்வாகச் சீர்திருத்தக் குழு தன்னுடைய அறிக்கையைக் கொடுத்த பிறகு, அந்த அறிக்கையைப்பற்றி அரசு சம்பந்தப்பட்டவர்களின் யோசனைகளைப் பெறவேண்டும் என்று இருக்கிறது. குறைந்தது 30 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களைக் கூப்பிட்டு விவாதம் செய்து, ஆணையாளர்களில் ஒரு 30 பேரை அழைத்து, விவாதம் செய்து பிறகு, இரண்டு பேரையும் சேர்த்து வைத்து விவாதித்து, அரசின் அபிப்பிராயத்தைக் கேட்டு, சரியான முறையைக் கொண்டு வருவோமே யானால் நல்ல சூழ்நிலைகள் ஏற்படக் கூடும். அந்தக் கமிட்டி சென்ற ஒரு ஆண்டுக்காலம் செயல்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றுதான். அதற்கென்று ஒரு நாள் குறித்து, பிறகு அது ஒத்திப்போடப் பட்டது. விரைவில் கூட்டி அதற்குத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அது இயங்குவதற்கு வேண்டிய வழிவகை காண தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

பள்ளிகளைப் பற்றிச் சொன்னார்கள், அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். ஓரளவுக்கு எல்லாப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வருவதால் ஏற்படுகிற தன்மை, இடர்ப்பாடுகள் இருக்கின்றன. பொதுமக்களுக்கு அக்கறையற்றுப் போகுமோ என்ற

அச்சம் வருகிறது. பெரிய உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் நாங்கள் கொடுக்கவில்லை. கல்லூரிகளை அரசாங்கம் நேரடியாகக் கவனிக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆங்காங்கு இருப்பதன் மூலம் தங்கள் தங்கள் பள்ளிகளைச் சிறப்பாக அமைக்க வேண்டுமென்ற அக்கறை வருகிறது. ஊரில் இருக்கிற பெரியோர்கள் கட்டிடக்குழு அமைத்து, பணம் திரட்டி விருப்பத்திற்கேற்ப, புகழ், கலை, ஆர்வத்தோடு பணியாற்ற வருகிறார்கள். அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் ஆர்வம் இருக்காது, பங்குபோடத் தான் ஆள் வருவார்கள். பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை எடுத்துக் கொண்டால், 10, 12 ஆண்டுக்காலமாகக் கிட்டத்தட்ட ரூ. 16 கோடி அளவுக்கு பொது மக்கள் பள்ளிகளுக்கு, நிலக்கொடை, கட்டிடக் கொடை, பொருள் கொடை, கருவிக் கொடைகள் வழங்கி வருகிறார்கள். அதையும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் மாத்திரம் செய்வதில்லை. பல்வேறு விதமான பணியாளர் கள் வேலை செய்கிறார்கள். அதிகாரிகள் தான் மாறுகிறார்கள். மற்றத் துறைகளைப் பொறுத்த மட்டில், அதிகாரிகள் தான் மாற்றத்துக்கான உத்திரவுகளைப் பிறப்பிக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், இதற்கென ஒருகுழுவினை அமைத்து அது இந்தப் பணியைச் செய்வது என்று இருக்கிறது. உறுப் பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டால், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டால், ஆசிரியர்களை மாற்றுவது பற்றி யோசனை செய்து, மாவட்ட அளவில் அதிகாரிகளையே இதற்குப் பொறுப்பாக இருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்யலாம். இப்போது சிலர் சொல்லு கின்றார்கள், ஆசிரியர்கள் சிலருடைய விருப்பு வெறுப்புகளுக்குள்ளாகி, திடீரென்று ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டு இவர் மாற்றப்படும் காரணத்தினால் ஒன்றும் அறியாத அப்பாவி ஆசிரியர் ஒருவரை வேறு இடத்திற்குத் தூக்கிப்போடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று. இப்படி திடீர்திடீர் என்று மாற்றங்கள் செயல்படும் காரணத்தினால் ஆசிரியர்களிடமிருந்து ஏராளமான முறையீடுகள் வருகின்றன. ஆசிரியர் களை மாற்றுவது என்று சொல்லும்போது, நியாயத்தின் அடிப்படையில் செய்தால், அதற்காக யாரும் குற்றங்குறை காணப்போவதில்லை. ஆசிரியர் களைப்பொறுத்தவரையில், இவர்களை மற்ற மற்ற அதிகாரிகளைப் போல மூன்று ஆண்டுக்காலத்திற்கு மேலே ஒரு இடத்தில் இருக்கக் கூடாது என்று சொல்லுவதற்கு நியாயமில்லையென்றே கருதுகிறேன். ஒரு போலீஸ் அதிகாரியையோ அல்லது ஒரு நீதிபதியையோ மூன்றுண்டு காலத்தில் மாற்றுவது என்ற நியதியில் நியாயம் இருக்கிறது. காரணம் அங்கே பழக்கம் ஏற்பட்டுவிட்டால், அவர்களுக்கு பந்தமும் பாசமும் ஏற்பட்டு விடக்கூடும் அதற்கு இரையாகிவிடக்கூடும் என்ற காரணத்தினால், மாற்றம் வேண்டும் என்ற முறை உள்ளது. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அப்படியொன்றும் தேவையில்லையென்று கருதுகிறேன். என் இதைச் சொல்லுகிறேன் என்றால், தனியார் பள்ளி களிலோ அல்லது கல்லூரிகளிலோ ஆசிரியர்கள் 30 ஆண்டுக்காலம் 35 ஆண்டுக்காலம் அந்த ஊரிலேயே இருந்து ஓய்வும் பெறுகின்றார் கள். அந்தப் பள்ளிகள் அல்லது கல்லூரிகள் கெடாது இருக்கும்

5.30 பி.ப.

போது, அரசுப் பள்ளிகளில் மட்டும் அடிக்கடி மாற்றப்பட வேண்டுமென்ற அவசியமில்லை என்றே கருதுகிறேன். வேண்டு மானால் பிரமோஷன் வரும் காலத்திலோ அல்லது கணவன் மனைவியை இணைப்பதற்காகவோ மாற்றலாம், அல்லது ஒரு குறிப்பிட்ட ஆசிரியரால் அந்தப் பள்ளி நிர்வாகத்திற்குத் தொல்லை கள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால் மாற்றலாம். ஆக விருப்பு-வெறுப்புகளின் அடிப்படையில் மாற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டுமானால், மாற்றங்களை முறையாக நடை முறைப்படுத்த வேண்டு மானால், அவைகளை அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்க வேண்டும். இதை நானும் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றேன். இதில் ஊராட்சி மன்றத் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து முடிவெடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறேன்.

மேலும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மதிய உணவு பற்றிக் குறிப்பிட்டார்கள். இதை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று அடிக்கடி சொல்லுகின்றார்கள். அதாவது "கேர்" நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகளைப் பொறுத்த மட்டில் "கேர்" நிர்வாகத்தின் ஆதாவுகொண்டு கிட்டத்தட்ட 96,97 மைய உணவு நிலையங்கள் அமைவதற்கான கூறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. இது அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விஸ்தரிக் கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இப்போது இந்தக் "கேர்" நிறுவனத்தார் செய்துகொண்டு போகும் வேகத்தைப் பார்த்தால், அதாவது ஆண்டொன்றுக்கு முப்பது மைய உணவு நிலையங்களை ஏற்படுத்துவது என்ற ஏற்பாட்டின்படி, பார்த்தால், எல்லா ஒன்றியங் களுக்கும் விஸ்தரிப்பதற்குப் பத்தாண்டு காலம் ஆகலாம் போலிருக் கிறது. இதைவிட ஆண்டொன்றுக்கு 60 மைய நிலையங்களை ஏற்படுத்துவது என்ற திட்டத்தில் அவர்கள் செயல்பட்டால் சற்று உதவியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே இதை "கேர்" நிறுவனத்தார் செய்துகொண்டிருக்கிறார்கள். தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடுங்கி பார்ப்பது போலாகும். நான்கூட நினைத்தேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டொன்றுக்கு 10 மைய நிலையங்களை ஏற்படுத்தலாம் என்று. ஆனால் அவர்களிடம் சொல்லும்போது, அவர்கள் ஒரே சமயத்தில் அதிகாரிகளையும் மெஷினரி களையும் பல மாவட்டங்களுக்கும் அனுப்புவது இயலாது, எனவே செங்கற்பட்டு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் என்று இங்கிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு மாவட்டமாக முடித்துக்கொண்டு போகலாம் என்று சொல்லுகின்றார்கள். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாண்புமிகு அங்கத்தினர்கள் உணர்ந்து இப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பல்வேறு குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [29th March 1972

இவற்றை மனத்தில்கொண்டு இவற்றைக் களைவதற்கான நட வடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறி, இந்தத் துறை மூலம் நல்ல பல பணிகளை நிறைவேற்றி மக்கள் நிம்மதி பெறவும், அவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கான எண்ணங்கள் நிறைவு செய்யப்படவும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கை யிலுள்ள இடர்பாடுகளைக் களையவும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும். அவற்றுக்கு உங்கள் நல்லாதரவைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டி என்னுரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

Mr. Chairman : The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

5-35 p.m. The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

87. Notification issued with G.O. Ms. No. 3738, Revenue, dated the 15th November 1971, making the Tamil Nadu Sales Tax (Surcharge) Rules, 1971. [*Laid on the table of the House under section 7(3) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971).*]

88. Notification issued with G.O.Ms. No. 2952, Agriculture, dated the 10th November 1971, in regard to establishment of a regulated market at Kavoundapadi in Coimbatore district. [*Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).*]

B. Reports, Notifications and other Papers.

109. Notification issued with G.O. Ms. No. 318, Labour, dated the 17th March 1971, in regard to an amendment to the Tamil Nadu Payment of Wages Rules, 1937.

*110. Booklet containing Progress Report for 1971 and Prospects for 1972 of the Tamil Nadu Agro Industries Corporation (English).

111. Note on Fisheries Demand 1972–73 in Tamil.

112. Seventh Report (Fifth Assembly) of the Committe on Estimates 1971–72 on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Community DevelopmentProgramme which was presented to the Assembly on the 27th March 1972.

113. A Review on the Nationalised Transport in Tamil Nadu 1971–72 (English and Tamil).

*Circulated to all M.L.Cs. on 28th March 1972.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 334 on page 220].

1947-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந்தேதியில் அரசு நிரந்தர ஆணை எண் 2628-ல் மாநில அளவில் நியமிக்கப்பட்ட அரிசன நலக்குழுவை அரசு நிரந்தர ஆணை எண் 1329 (சமூகநலம்) நாள் 18-11-1971-ல் திருத்தி அமைக்கப் பட்டிருக்கிறது.

அரிசன நல அமைச்சர் இக்குழுவின் தலைவராகவும், அலுவலர் அல்லாத 28 உறுப்பினர்களும் மேலே குறிக்கப்பட்டுள்ள அலுவலால் வந்த உறுப்பினர்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

(1) செயலாளர் (சமூக நலத்துறை).
(2) துணைச் செயலாளர், சமூக நலம் (அ.ந.) துறை.
(3) அரிசனநல இயக்குநர், சென்னை-5.
(4) பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை.
(5) கூட்டுறவுப்பதிவாளர், சென்னை.
(6) ஊரக வளர்ச்சி இயக்குநர்.
(7) பால் உற்பத்திக் கால்நடை மேம்பாட்டு ஆணையாளர், சென்னை.
(8) காவல் துறைத் தலைமை அதிகாரி.
(9) மண்டல பிற்பட்டோர் நல இயக்குநர்.
(10) மாவட்ட நல அதிகாரிகள்.

மாநில அரிசன நலக்குழுவிலிருக்கும் உறுப்பினர்கள் மாவட்ட அரிசன நல குழுவின் பதவி வழி உறுப்பினர்களாகும். இக்குழுவின் காலவரை யறை 3 ஆண்டுகளாகும். இக்குழு ஆண்டொன்றுக்கு இரண்டு முறை கூடுகிறது. அதாவது நிதியாண்டின் முதல் பகுதியிலும் இரண்டாம் பகுதியிலும் ஆகும்.

இக்குழுவின் கடமைகள்.

அரிசன நல முன்னேற்றத்திற்காக அரசு எடுத்துக்கொள்ளும் எல்லா விதமான செயல்களிலும் ஆலோசனை கூறுவதோடு வழி காட்டவும் செய்கிறது. பலவிதமான அரிசன நல முன்னேற்ற திட்டங்களை செயல் படுத்துவது பற்றியும் மாநிலஅரிசன நல குழுவில் உள்ள அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும் அலுவலரால் உறுப்பினர்களும் கூறுகின்ற அபிப்ராயங்களை அரசு பரிசீலனை செய்து தேவைப்படும்போது ஆணை பிறப்பிக்கின்றது.

APPENDIX II.

[*Vide* item III (3) on page 223].

கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணிகள்—உள்ளூர் பணிகள்

1. முன்னுரை.

முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற இரண்டு நிலைகளில் சமுதாய வளர்ச்சித் திட்ட வேலைகள் செயற்படுத்தப்படுவது நன்கு தெரிந்ததே. முதல் நிலை வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 12 லட்சம் மைய உதவி பெறத் தகுதி பெற்றது. ஐந்தாண்டுகள் முடிவுற்ற பின்னர், முதல் நிலை வட்டாரங்கள் ஒவ்வொன்றும், இரண்டாம் நிலை வட்டாரமாகி, ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதியுதவியைப் பெறுகிறது. 10 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் ஒவ்வொரு வட்டாரமும் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரமாகக் கருதப்படுகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள், சமுதாய வளர்ச்சித் திட்ட அமைப்பிலிருந்து உதவி பெறத் தகுதியுடையனவல்ல. இம் மாநிலத்தில் முதல் நிலை வட்டாரம் இல்லை. 1972-73 ஆண்டில், இரண்டாம் நிலை வட்டாரங்கள் 88-ம், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் 286-ம் இருக்கும்.

வட்டாரங்களெல்லாம் சமுதாய வளர்ச்சி வட்டாரங்களாக இருப்பினும் அல்லது சமுதாய வளர்ச்சி நிலையைக் (இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள்) கடந்த வட்டாரங்களாக இருப்பினும் இவற்றினிடையே வளர்ச்சியைப் பேணுவதற்காக வட்டாரங்களுக்கென நிதி ஒதுக்குவதில் சரிசமமான ஒரு போக்கையே இவ்வரசு கையாண்டு வருகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த ஊராட்சி வளர்ச்சித் திட்ட வேலைகளுக்கென செலவிடப்பட்ட தொகையானது, சமுதாய வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்கென, பல்வேறு வளர்ச்சித் திட்ட வேலைகளில் செலவிடப்பட்ட தொகைகளானவை, அதனதன் வளர்ச்சித் தலைப்புகளுக்குக் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வோராண்டும் பெரும்பாலான வட்டாரங்கள் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களாகி வருகின்றன. எனவே, "சமுதாய வளர்ச்சித் திட்டத்தில்" பற்று வைக்கப்படும் செலவினம் சீராகக் குறைந்த வண்ணமுள்ளது. ஓராண்டுக் காலத்திற்குரிய பணிகளை நோக்கும்போது, 374 வட்டாரங்கள் முழுவதிலும் எல்லா தலைப்புகளுக்குமான மொத்தச் செலவைப் பரிசீலனை செய்ய வேண்டுவது அவசியமாகும்.

12,642 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகள், மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கென 1972-73-ஆம் ஆண்டில் பல்வேறு வரவு-செலவுத் திட்டத் தலைப்புகளில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 77,14 கோடியிலிருந்து ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயற்படுகிறதென்பது தெளிவாகும். இக்குறிப்புரையுடன், சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊர் வளர்ச்சிக்குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்துக் காட்டுகின்றது. 1971-72-ஆம் ஆண்டில் நடைபெற்ற கணிசமான பற்றிய ஆயவும், 1972-73-ம் ஆண்டின் திட்டவேலைகளும் இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

2. ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகம்.

(அ) அமைப்பு.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் உள்ள ஊர்ப்பகுதிகள் அனைத்திலும் 1958-ம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது நடைமுறையிலுள்ளது. ஜாகீர்தாரர்கள் செய்து கொண்ட முறையீட்டின் பேரில், உயர்நீதி மன்றம் பிறப்பித்த தடையாணையினால், ஜாகீர் பகுதிகளை ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின் கீழ், அரசு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை தலால், கல்ராயன் குன்றுகள் பகுதியில் ஊராட்சிகள் சட்டத்தை நடை முறைப்படுத்த முடியவில்லை. ஜாகீர் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டு, இப்பகுதிக்கும் இச்சட்டமானது விரிவு படுத்தப்படும். தமிழ் நாடு முழுவதிலுமுள்ள 12,642 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் ஆகியவை 374 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கியுள்ளன.

(அ) அலுவலர்க் குடியிருப்புகள்.

படிப்படியாகச் செயற்படுத்தப்படும் திட்ட வேலையின்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர், வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊர் நிலை பணியாளர்களுக்கு அலுவலர்க் குடியிருப்புகளை, அரசு அளிக்கிறது. முன்பிருந்த தேசிய நெருக்கடி நிலை காரணமாக இத்திட்ட வேலை நிறுத்தப் பட்டது. ஆனால் 1970-71 ஆம் ஆண்டில் இத்திட்ட வேலையின் ஒரு பகுதி மீண்டும் தொடங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலர் குடியிருப்புகளும், நீலகிரி, செங்கை நீங்கலாக உள்ள எனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஊர் நிலைப் பணியாளர்களுக்கென 2 குடியிருப்புக்களும் கட்ட ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், 180 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அலுவலர்களுக்கென குடியிருப்புகள் இன்னும் கட்டப்பட வேண்டியுள்ளன. பெருவாரியான ஊராட்சி ஒன்றியங்களில் தனியார் மூலம் கிடைக்கும் குடியிருப்பு வசதி குறைவாயுள்ளமையாலும், சில ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலர்களுக்குக் குடியிருப்புக்கள் கட்டுவது இன்றியமையாததாய் உள்ளமையாலும், 1972-73-ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில், 13 அலுவலர்க் குடியிருப்புக்களும் மாவட்டத்திற்கு இரண்டாக ஊர் நலப்பணியாளர்களுக்கென 26 அலுவலர் குடியிருப்புகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை திட்டத்தில் இதற்கென ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

(அ) நிர்வாக அமைப்பு வளர்ச்சி.

நிர்வாகத்தின் அமைப்பும் முறையும், அரசின் ஆய்வில் தொடர்ந்து இருந்த வண்ணமுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) ஒருங்கிணைந்த, திறமையான நிர்வாக அமைப்பாக இயங்குவதற்கென, வட்டாரத்தின் அமைப்பை அரசு திருத்தியமைத்துள்ளது. இதன்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 6 பிரிவுகள் செயற்படும். உற்பத்திப்பிரிவு, கல்விப் பிரிவு, கூட்டுறவுப் பிரிவு, பணிகள் பிரிவு, ஊராட்சி நிர்வாகப் பிரிவு, பொதுப் பிரிவு ஆகியவை இந்த ஆறு பிரிவுகளாம். ஒவ்வொரு பிரிவின் தலைவரே அப்பிரிவின் முறையான நிர்வாகத்திற்கும், அப்பிரிவின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுதற்கும் பொறுப்புள்ளவராகிறார். வேளாண்மை வளர்ச்சி அலுவலருக்கு, ஒன்றிய வேளாண்மை அலுவலர் என்று புதிய பதவிப்பெயர் அளிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட வேலைகளும் பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன. இவர்களைத் திறமையாக மேற்பார்வையிடவும், அலுவலர்களின் தலைவர் என்ற முறையில், ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கரங்களை பலப்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

(ஆ) வெளியிலிருந்து 150 பேர்களை தேர்ந்தெடுத்து, அவர்களை ஊர்ப்பணியாளர்களாக நியமிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவர்கள் "பயிற்சிபெற்றுக் காத்திருப்பவர்"களாக வைக்கப்படுவார்கள். இவர்களுக்கு ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படும். ஓராண்டு பட்டப்பயிற்சிக்கு நிலையான ஊர் நல உதவியாளர்கள் அனுப்பப்படும்போது எழும் காலியிடங்களில், இவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்படுவார்கள். நிலையான ஊர் நல உதவியாளர்கள் வேறு பணிகளுக்கென அனுப்பப்படும்போது, வட்டாரங்களின் பணிகள் தடையுறுவதைத் தவிர்க்கவே இவ்வாறு செய்யப்படுகிறது.

(ஆ) பயிற்சித் திட்டம்.

ஊர் வளர்ச்சி இயக்கம் ஒரு பயிற்சிப் பிரிவைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஊராட்சி நிறுவனங்களுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பல்வேறு வளர்ச்சித் துறையைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்கள், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன :—

1. சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம்.

2. தொழிற்கூடப் பிரிவு அமைந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள்.

29th March 1972]

சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம், பவானிசாகர்.

இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன :—

(அ) ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கான பயிற்சி.—ஊராட்சி நிறுவனங்களின் பின்னணி, அவற்றின் செயல்முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரின் பங்கு பற்றி விளக்கும் முறையில் 10 நாட்களுக்கு இப்பயிற்சி நடைபெறும்.

(ஆ) பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள். வளர்ச்சி அலுவலர்களுக்குரிய பயிற்சி.—இது ஊராட்சிக் கொள்கையைப்பற்றி அரசு அலுவலர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்து, ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியைக் காணும் வழிவகைகளைக் கற்பிக்கும் 15 நாள் பயிற்சியாகும்.

(இ) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய வேலைப் பயிற்சி.—தங்களுடைய பணிகளில் பயிற்சிபெற வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு இரண்டு தினங்களுக்கு இப்பயிற்சியளிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பணிகளுக்குரிய பயிற்சிகள்.—தேசிய சேவைப் படை அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட பணிக்கெனப் பயிற்சியளித்தல், சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் போன்றவைகட்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஊர் விரிவாக்க நிலையங்கள்.—இம்மாநிலத்தில் ஐந்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன :—

1. டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).
2. பவானிசாகர் (கோயம்பத்தூர் மாவட்டம்).
3. பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).
4. ச. வி. நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்).
5. கிருட்டிணகிரி (தர்மபுரி மாவட்டம்).

இந்நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன :—

முன்சேவைப் பயிற்சி.—ஊர்நல உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, இந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஈராண்டு பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கட்கு விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்வதைக் கற்றுத்தருதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு பயிற்சி நிலையத்துடனும் ஒரு பண்ணையும் பால் பண்ணை அலகும் இணைக்கப்பட்டுள்ளன.

தேர்தெடுக்கப்பட்ட ஊர்நல உதவியாளர்களுக்கு வேளாண்மையில் ஓராண்டுத் தீவிரப் பயிற்சி.—ஊர்நல உதவியாளர்களின் திறமையை, சிறப்பாக வேளாண்மைத் துறையில் மேம்படுத்துதற்கென, வேளாண்மை வளர்ச்சிப் பட்டச் சான்றிதழ்ப் பயிற்சி ஓராண்டிற்குத் தரப்படுகிறது. அனுபவம் பெற்ற ஊர் நல உதவியாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது வரை 715 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

தொழிற் கூடங்கள்.—ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திலும், தற்போது தொழிற் கூடக் கிளைகள் இணைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற் கூடக் கிளையிலும் 10 பேர்களுக்குத் தச்சுப் தொழிலிலும், 10 பேர்களுக்குக் கருமார்த் தொழிலிலும் ஓராண்டிற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

1970-71-ஆம் ஆண்டில், மூன்று தொழிற் கூடக் கிளைகள் "உற்பத்தி-பயிற்சி நிலையங்க"ளாக உயர்த்தப்பட்டுள்ளன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

பட்டுக்கோட்டை, டி. கல்லுப்பட்டி, பவானிசாகர் ஆகிய இடங்களிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களைச் சார்ந்த தொழிற்கூடங்களின் நிலைகள் 1970–71-இல் உயர்த்தப்பட்டன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

குறிப்பிட்ட பணிகளுக்கான கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்களும் நடத்தப்படுகின்றன.—(அ) மகளிர் நலத் துறையைச் சார்ந்த பால சேவிகைகளுக்கும், மகளிர் இணைப் பணியாளர்களுக்கும், ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

(ஆ) சீரணித் தொண்டர்கள் இந்நிலையங்களில் 14 நாட்களுக்கு பயிற்சி பெறுகின்றனர்.

(இ) இளைஞர் அணியினைச் சார்ந்த தொண்டர்களுக்கும், ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

பல்வேறு நிலையங்களிலுள்ள வட்டார அலுவலர்களும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ள அலுவல் சார்பற்றவர்களும், தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு நிறைவேற்ற இப்பயிற்சித் திட்டங்கள் பெருந்துணை புரிந்துள்ளன.

(இ) கருத்துரைக் குழுக்கள்.

நிர்வாகம்.—பணிகள், உற்பத்தித் திட்ட வேலைகள், நலப் பணிகள் பற்றிய மாநில அளவிலான மூன்று கருத்துரைக் குழுக்கள் ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்னைகளை ஆய்வு செய்கின்றன. திட்டங்களைச் செயற்படுத்தும்போது, அதன் செயல் வேகத்தைத் தடுக்கும் நடைமுறைப் பிரச்னைகளுக்குக் கருத்துரைக் குழுக்கள் தந்த ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காண்பப்படுகின்றன.

(ஈ) பொருளாதார, உடலுழைப்புச் சாதனைகள்.

இக்கோரிக்கையில் மட்டும் 1970–71-க்கான செலவினம் ரூ. 689·83 இலட்சமாகும். 1971–72-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 1,028·32 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது. 1972–73-க்காகக் கோரப்படும் தொகை ரூ. 993·87 இலட்சமாகும்.

எல்லா ஊராட்சி ஒன்றியங்களும், உள்ளூர் "செஸ்" மேல் வரியை விதித்துள்ளன. இதிலிருந்து 1971–72 இல் கிடைத்த வருவாய் ரூ. 402·00 இலட்சமாகும். உள்ளூர் "செஸ்" மேல்வரியை, ஊராட்சி ஒன்றியங்கள் விதிப்பதனால், அதற்கென இணை மானியத்தை, "செஸ்" யம், அரசிடமிருந்து பெறமுடியும். 1970–71 இல் மேல் வரி இணை மானியமாக ரூ. 343·29 இலட்சத்தை அரசு அளித்துள்ளது. 1971–72-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 401·00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1972–73-க்கான நிதிநிலை மதிப்பீடு ரூ. 401·00 இலட்சமாகும். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கேளிக்கை வரி, காட்சி வரி மீது, மேல் வரி விதித்துள்ளன. இந்த வகையில் 1971–72-க்கான வருவாய் ரூ. 111·56 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1971-ம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று இருந்தவாறு, சில வேலைத் திட்டங்கள் பற்றிச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) வருமாறு :—

	1968	1969	1970	1971
இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டர்)	28,824	30,334	30,550	31,957
மேல்நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை)	2,506	2,817	3,447	4,420
இணறுகள் எண்ணிக்கை	52,126	54,768	60,049	69,329
ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள தொடக்கப்பள்ளிகள் (எண்ணிக்கை)	18,220	18,272	18,531	18,616
ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள உயர்தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை)	3,252	3,246	3,207	3,177
சொந்த கட்டிடங்கள் உள்ள பள்ளிகள்	11,619	12,386	13,109	14,926

வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களை கீழ்கண்ட புள்ளி விவர அறிக்கை காட்டுகிறது :—

திட்ட வேலையின் பெயர்.	1968–69 (செலவுக் கணக்கு).	1969–70 (செலவுக் கணக்கு).	1970–71 (செலவுக் கணக்கு).	1971–72 (திருத்திய மதிப்பீடு).	1972–73 (நிதிநிலை மதிப்பீடு).
	(ரூபாய் இலட்சங்களில்.)				
வேளாண்மை	83·75	74·93	82·89	85·00	85·00
கால் நடை வளர்ச்சி	21·90	23·35	23·26	23·25	23·25
மீன் வளம்	3·66	2·53	3·55	4·93	4·66
இணைப்புச் சாலைகள்	67·63	93·82	1,09·09	1,10·00	1,10·00
குடிநீர் வழங்கல்	1,46·01	1,42·83	1,48·17	1,45·70	1,46·00
பள்ளிக் கட்டிடங்கள்	33·64	48·71	53·82	52·60	52·60
சமூகக் கல்வி	12·13	18·88	16·36	15·00	15·50
மகளிர், குழந்தைகள் நலம்	6·67	14·93	14·29	20·00	17·90
கிராமக் கலை கைவினை, தொழில்கள் திட்ட வேலைகள்	11·40	16·00	16·03	15·00	15·00

ஊர்ப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறதென்பதை மேற்காட்டியுள்ள புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1972–73 ஆம் ஆண்டிற்கு, சென்ற ஆண்டை விட அதிகமாக எல்லாத் தலைப்பின் கீழும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. பணிகள் குறித்த திட்ட வேலைகள்.

(அ) ஊர்ப் பணிகளுக்குரிய திட்ட வேலைகள்.

ஊர்ப் பணிகள் மானியங்களில் கிடைக்கும் நிதிகளை, குடி நீர் வழங்கல் இணைப்புச் சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டல் ஆகிய வற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன. 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளைய நிலவரப்படி, செய்துதரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரங்கள் வருமாறு :—

1. மேல் நிலை நீர்த் தொட்டிகள்	4,420
2. கிணறுகள்	69,329
3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டர்).	31,957
4. பள்ளிக் கட்டிடங்கள் (கட்டப்பட்டவை)	18,616

1972-73-க்கான நிதி நிலை மதிப்பீட்டில், ஊர்ப்பணிகள் திட்ட வேலைகளுக்கென ரூ. 308.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள விதிகளின்படி ரொக்கமாக நன்கொடையளித்தல், பொருட்கள் அளித்தல் அல்லது உடலுழைப்பு நல்கல் போன்ற முறைகளில் பொது மக்கள் பங்கு பெறுவது, இத்திட்ட வேலையின் ஒரு முக்கிய கொள்கையாகும்.

அரிசனங்கள், மீனவர்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினருக்கென்றே மேற்கொள்ளப்படும் ஊர்ப்பணிகளுக்கு மக்கள் நன்கொடைத் தொகை செலுத்த வேண்டுவதில்லை. இது போன்றோர்வு சாலைகளில், குடிநீர் பணிகளுக்கென 15 சதவீதமும், இதரப் பகுதிகளில் 10 சதவீதமும் அரிசன நலத்துறை திலிருந்து நன்கொடையாக அளிக்கப்படுகிறது. இவ்வாறு மானியத் அரிசனங்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினரின் நலமைக்கென செய்யப்படும் பணிகளுக்கென்றே ஒதுக்கப்படுகிறது. 20 சதவீதத் தொகை.

(ஆ) சாலைகளைப் பேணுதல்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பேணுதற் கென, "உள்ளூர்ச் சாலைகள் மானியம்" என்றதொரு மானியம் ஒன்றி யங்களுக்கு அளிக்கப்படுகிறது. இச் சாலைகள் மானியமானது ஓளொன்றிற்கு 18 காசுகள் என்ற வீதத்திலும்,

ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்படும் சாலையானது சாதாரணமானதா, கூடற்கலைப் பகுதிகளில் அல்லது கழிமுகப் பகுதிகளில் அமைந்ததாவா, அல்லது மலைப்பாதைகளா என்று வகைப்படுத்தப்பட்டு அந்த அடிப்படையில் ஒவ்வொரு மைலுக்கும் ரூ. 600, ரூ. 800 அல்லது ரூ. 1,100 என்ற வகையில் வழங்கப்படுகிறது. 1972–73 ஆம் ஆண்டில் திறனில மதிப்பீட்டில் ரூ. 119.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி பகுதிகளில் புழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. இதற்கென 1972–73 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) சிறிய நீர்ப்பாசனம்.

இம்மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து, ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1972–73 ஆம் ஆண்டில் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 67.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) கிராமக் கலைகள் கைவினைப் பொருட்கள், தொழில் திட்டவேலைகள்.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படுகின்றன. இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் பட்ட கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைப் பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் பிரிவிற்கு மாற்றப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள் மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற் குரிய, விதி, வரம்புகள் ஆகியவை கதர் வாரியத்தால் உரு வாக்கப்பட்டு வருகின்றன.

ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்பினை பெருக்குவதற்கென, கீழ்க் கண்ட இடங்களில் கதர் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன;—

வேலைத் திட்டங்களின் பெயர்.	நிலையம் உள்ள இடம்.
1. நூற்பு நெசவிற்கான மூன்று கதர் தொழிற்பேட்டைகள்.	திருப்பூர், பெருமாநல்லூர், சூலூர்.
2. கதர் தையல் பூப்பின்னல் தொழில்.	திருப்பூர்.
3. கதர் தொழிற்பேட்டைகள் ...	இடையன்வலசு (ஒட்டன் சத்திரம் வட்டாரம், மதுரை மாவட்டம்).

மேற்கண்ட பேட்டைகளோடு கூட, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகளிலுள்ள நிதிகளிலிருந்து ஐந்து கிராமத் தொழில் பேட்டைகள், மூன்று கிராமத் தொழில் திட்ட வேலைப்பகுதிகளில் நிறுவுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐந்து கிராமத் தொழில் பேட்டைகளில் இரண்டு பேட்டைகள் ஸ்ரீபெரும்புதூர் திட்டப்பகுதிகளில் சிறு வாணிகம் செய்பவர்களின் நன்மைக்கென நிறுவப்பட விருக்கிறது. விசைத் தறிகளுக்கான இரண்டு கிராமத் தொழிற் பேட்டைகள் ஓமலூர் திட்டப் பகுதியிலும், சலகண்டபுரத்தில் ஒன்றும் தாரமங்கலத்தில் ஒன்றுமாக நிறுவப்படும். பல்வேறுவகைப்பட்ட கிராமத் தொழில்களுக் கேற்ற கொட்டகைகளை அமைப்பதற்குரிய கிராமத் தொழில் பேட்டையொன்றை நாங்குநேரித் திட்டப் பகுதியிலுள்ள வள்ளியூரில் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1972–73 ஆம் ஆண்டில், எல்லா தொழிற்பேட்டைகளும் செயலிற்கு வரும்.

கிராமக் கலைகள், கைவினைப்பொருட்கள் தொழில் திட்டத்தில் 1972–73 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழிற்பிரிவு களின் செயல் திறனை, கீழ்கண்ட அட்டவணை ஒருமுகமாக விளக்கும்:—

	பிரிவுகளின் பெயர்.	மொத்த பிரிவுகள்.	ஆதாயத்தில் இயங்குபவை.	இழப்பில் இயங்குபவை.
	(1)	(2)	(3)	(4)
1.	தச்சு	96	91	5
2.	கருமார்	25	23	2
3.	தச்சு, கருமார்	39	35	4
4.	பழப் பாதுகாப்பு ..	3	3	..
5.	மணி வெண்கலப்பிரிவு ..	1	1	..
6.	தையற் பிரிவு	1	1	..
7.	திருகாணிப் பிரிவு ..	1	1	..
8.	சாக்கட்டிப் பிரிவு ..	1	1	..
9.	அழகான மரப் பொம்மைகள்.	1	1	..
10.	பொது வசதிப் பட்டரை	4	4	..
11.	சுண்ணாம்புப் பிரிவு ..	1	1	..
12.	பித்தளை பொருட்கள் உற்பத்தி.	1	..	1
13.	பிரம்பு உற்பத்தி நிலையம்	1	1	..
14.	பிரம்பு, மூங்கில் பிரிவு ..	1	1	..
15.	நெட்டிப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு.	1	1	..

பேரூராட்சி பகுதிகளில் புழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகள் அமைக்கப் பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. இதற்கென 1972–73 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) சிறிய நீர்ப்பாசனம்.

இம்மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து, ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1972–73 ஆம் ஆண்டில் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 67.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) கிராமக் கலைகள் கைவினைப் பொருட்கள், தொழில் திட்டவேலைகள்.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படுகின்றன. இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் பட்ட கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைப் பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் பிரிவிற்கு மாற்றப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள் மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற் குரிய, விதி, வரம்புகள் ஆகியவை கதர் வாரியத்தால் உரு வாக்கப்பட்டு வருகின்றன.

ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்பினை பெருக்குவதற்கென, கீழ்க் கண்ட இடங்களில் கதர் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன;—

வேலைத் திட்டங்களின் பெயர்.	நிலையம் உள்ள இடம்.
1. நூற்பு நெசவிற்கான மூன்று கதர் தொழிற்பேட்டைகள்.	திருப்பூர், பெருமாநல்லூர், சூலூர்.
2. கதர் தையல் பூப்பின்னல் தொழில்.	திருப்பூர்.
3. கதர் தொழிற்பேட்டைகள் ...	இடையன்வலசு (ஒட்டன் சத்திரம் வட்டாரம், மதுரை மாவட்டம்).

மேற்கண்ட பேட்டைகளோடு கூட, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகளிலுள்ள நிதிகளிலிருந்து ஐந்து கிராமத் தொழில் பேட்டைகள், மூன்று கிராமத் தொழில் திட்ட வேலைப்பகுதிகளில் நிறுவுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐந்து கிராமத் தொழில் பேட்டைகளில் இரண்டு பேட்டைகள் ஸ்ரீபெரும்புதூர் திட்டப்பகுதிகளில் சிறு வாணிகம் செய்பவர்களின் நன்மைக்கென நிறுவப்பட விருக்கிறது. விசைத் தறிகளுக்கான இரண்டு கிராமத் தொழிற் பேட்டைகள் ஓமலூர் திட்டப் பகுதியிலும், சலகண்டபுரத்தில் ஒன்றும் தாரமங்கலத்தில் ஒன்றுமாக நிறுவப்படும். பல்வேறுவகைப்பட்ட கிராமத் தொழில்களுக் கேற்ற கொட்டகைகளை அமைப்பதற்குரிய கிராமத் தொழில் பேட்டையொன்றை நாங்குநேரித் திட்டப் பகுதியிலுள்ள வள்ளியூரில் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1972–73 ஆம் ஆண்டில், எல்லா தொழிற்பேட்டைகளும் செயலிற்கு வரும்.

கிராமக் கலைகள், கைவினைப்பொருட்கள் தொழில் திட்டத்தில் 1972–73 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழிற்பிரிவு களின் செயல் திறனை, கீழ்கண்ட அட்டவணை ஒருமுகமாக விளக்கும்:—

பிரிவுகளின் பெயர்.	மொத்த பிரிவுகள்.	ஆதாயத்தில் இயங்குபவை.	இழப்பில் இயங்குபவை.
(1)	(2)	(3)	(4)
1. தச்சு	96	91	5
2. கருமார்	25	23	2
3. தச்சு, கருமார்	39	35	4
4. பழப் பாதுகாப்பு ..	3	3	..
5. மணி வெண்கலப்பிரிவு ..	1	1	..
6. தையற் பிரிவு	1	1	..
7. திருகாணிப் பிரிவு ..	1	1	..
8. சாக்கட்டிப் பிரிவு ..	1	1	..
9. அழகான மரப் பொம்மைகள்.	1	1	..
10. பொது வசதிப் பட்டரை	4	4	..
11. சுண்ணும்புப் பிரிவு ..	1	1	..
12. பித்தளை பொருட்கள் உற்பத்தி.	1	..	1
13. பிரம்பு உற்பத்தி நிலையம்	1	1	..
14. பிரம்பு, மூங்கில் பிரிவு ..	1	1	..
15. நெட்டிப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு.	1	1	..

நாட்டம் செலுத்துவதும், தனியார் தொடக்கப்பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும், 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (e) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 27,800 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 21,900 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாக உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க. உயர்தொடக்கப் பள்ளிகளில் 1,23,100 ஆசிரியர்கள் பணியாற்றி 43,62,200 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

ஆண்டுக்காண்டு தொடக்கக் கல்விக்காகும் செலவு படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து அறியலாம் :—

1970–71	.. .. ..	ரூ. 27.42 கோடி
1971–72	.. .. ..	ரூ. 32.53 கோடி
1972–73	.. .. ..	ரூ. 37.70 கோடி

1972–73 ஆம் ஆண்டில், தொடக்கக் கல்விக்குரிய 85 சத வீதமான ரூ. 32 கோடியை அரசு மானியங்கள் வாயிலாக ஏற்றுக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 5.70 கோடியை சுமார் 15 சத வீதம் ஊராட்சி ஒன்றியங்கள ஏற்றுக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களால் தொடக்கக் கல்விக்கென உள்ளூரிலேயே திரட்டப்பெறும் நிதிகளும் கீழ்க்கண்டவாறு உயர்ந்து வந்துள்ளன :—

1970–71	.. .. ..	ரூ. 392 இலட்சம்
1971–72	.. .. ..	ரூ. 414 இலட்சம்
1972–73	.. .. ..	ரூ. 570 இலட்சம்

பள்ளிக் கட்டடங்கள்.—21,900 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 14,930 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன. சுமார் 900 இலிருந்து 1,000 பள்ளிக் கட்டடங்கள் வரை ஆண்டு தோறும் கட்டப்படுகின்றனவென்று கடந்த கால சாதனைகளிலிருந்து தெரிந்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்படும் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களை அரசு உயர்த்தியுள்ளது. தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-லிருந்து ரூ. 8,000-க்கும் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 13,000 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-உம், உயர்தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 6,000-உம் குறைந்த அளவில் நன்கொடையாக திரட்டப்பட வேண்டும்.

இம்மாநிலத்திலுள்ள தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு, பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ஒரு விரிவான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்திற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கென இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகும் ஒரு கோரிக்கை உள்ளது. 1972-73-ஆம் ஆண்டு தொடங்கி, மூன்றாண்டு காலத்தில் ரூ. 13.85 கோடி செலவில் 7,377 தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள், 1,112 உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எதிர் நோக்கிய சட்டப் பூர்வமான தடங்கல்களைத் தகர்க்க, இது மேலும் ஆய்வு செய்யப் படுகிறது.

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து ஊராட்சிப் பகுதியில் பள்ளிக் கட்டடங்கள் கட்ட, ரூ. 35 இலட்சம் காலாவதியாகாத ஒதுக்கீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களிடையே பகிர்ந்தளிப்பதற்கென, இத்தொகை ஊர் வளர்ச்சி இயக்குநரிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தொடக்கப் பள்ளி, உயர்தொடக்கப்பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கெனவே பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், இயன்றால் 1971-72 நிதியாண்டிற்குள் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பள்ளிக் கட்டடமாவது புதிதாகப் பள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட வேண்டும். மாநில பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைத்த உதவியினால், சிறப்பு நல நிதியைக் கொண்டு இப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டது என்ற சொற்கள் கொண்ட ஒரு கல் அக்கட்டடத்தின் ஒரு முக்கிய இடத்தில் பொருத்தப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

ஆசிரியைக் குடியிருப்புகள்.—ஊர்ப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குத் தகுந்த போதுமான இருப்பிட வசதி அளிக்க வேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. இதற்கென 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,568 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக் குழு.—கல்விக்குரிய ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக் குழு விரிவாக ஆய்ந்தது. பல்வேறு மானியங்களை ஒன்று திரட்டி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப்பதும், நில வருவாய் வசூலை ஆசிரியர்கள் சம்பளத்துடன் இணைப்பதும், விரும்பத்தக்க பயனைத் தரவில்லையென்று ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. ஆசிரியர்களுக்கு ஊதியமளிப்பதில் பின்பற்றப்படும் தற்போதைய முறைகளை மாற்றியமைக்கும் வகையில் இக்குழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. பரிந்துரைகள்மீது முடிவெடுப்பது ஒருபுறமிருக்க, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும், உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசினரால் 1972 சலவரித் தொடக்கம், ஒவ்வொரு திங்களும் முதல் நாளன்றே ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்று அரசு முற்றக்கட்டமாக ஆணையிட்டுள்ளது. பரிந்துரைகள் மீது அரசு ஒரு முடிவெடுக்குமென்பது எதிர்பார்க்கப்படுகிறது.

மதிய உணவுத் திட்டம்.—பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதில் எனைய மாநிலங்களைவிட தமிழ்நாடு முன்னணியிலுள்ளது. ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால் அவற்றின் துணை கொண்டு இம்மதிய உணவுத் திட்டத்தை, சீராகச் செயற்படுத்த முடிகிறது. இத் திட்டத்தினைக் கொண்டு உணவளிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள எல்லா தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயலிலுள்ளது. அரிசன நலப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் உட்பட மொத்தமாகப் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 18 இலட்சமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக்குழு செயற்படுகிறது. தொடர்புள்ள ஊராட்சித் தலைவர் இக்குழுவின் தலைவராகவும், தலைமையாசிரியர் செயலராகவும் பணியாற்றுகின்றனர். 1972-73 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 205.48 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பூலாங்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சேக்காடு எனும் ஊரில் "கேர்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1967-68-இல் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கப் பெற்ற மையச் சமையற்கூடத் திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்துள்ளது. சேக்காட்டில் அமைந்துள்ள மையச் சமையற்கூடத் திட்டம் வெற்றிகரமாக இயங்கியதைக் கண்ட "கேர்" நிறுவனம், மேலும் 30 நிலையங்களை 1969-இல் திறக்க முன் வந்துள்ளது. அரசு இவ்வுதவியை ஏற்றுக் கொண்டு, 1969-70-இல் 30 நிலையங்களைத் திறக்க ஆணை பிறப்பித்துள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் மேலும் 30 நிலையங்களை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் இன்னும் 30 மையச் சமையற்கூடங்களைத் திறக்க, அரசு தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. மதிய உணவுத் திட்டவேலைகளுக்குரிய பொருட்களைச் சேகரித்து வைப்பதற்கென 10 மண்டலக் கிடங்குகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் 6 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை மேற்கொள்ளப்பட்டு விரைவில் நிறைவேற்றப்படும்.

(ஆ) நலப் பணிகள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட பல நோக்கப் பிரிவாகும். சமூதாயத்திற்குத் தடுப்பு சிகிச்சையளிப்பதிலும், நோய்ச் சிகிச்சையளிப்பதிலும், அக்கறை கொண்டு மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். ஒரு வட்டாரத்திற்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் வீதம் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 188 நிலையங்கள் செயற்பட்டன. 1966—69ல் 129 நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டன.

ஒப்பளிக்கப்பட்ட 381 நிலையங்களில், 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றளவில் இயங்கி வருகின்றன.

தாய்சேய் நல நிலையங்கள்.—தாய்—சேய்நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத் திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில்,

மொத்தச் செலவில் 2/3 பங்கை, அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களின் 10-க்கும் மேற்பட தாய்சேய் நல நிலையங்களைப் படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய் சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,819 ஆகும்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருத்தகங்களை நிர்வகிப்பதற்காகும் செலவினங்களுக்கு, ஊராட்சி ஒன்றியக்குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம், அது ஆண்டொன்றுக்கு ரூ. 5.400-க்கு மேற்படாமல், நிதியுதவியைப்பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது.

குடும்ப நலத்திட்டம்.—குடும்ப நலத்திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்பநல வேலைத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. இவ்வட்டாரங்கள் அனைத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வோர் ஆண்டும், குடும்பநலத் திட்டப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1974-ஆம் ஆண்டில், பிறப்புத்தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது. வெவ்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே, பல்வேறு நலத்திட்ட முறைகளிலும், திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுகின்றன. குடும்ப நலத்திட்டத்தின்கீழ், ஊராட்சிகளால் ஊக்கு விக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10-ஐ ஈட்டு மானியமாகப் பெற ஊராட்சிகள் தகுதி யுடையவை. அறுவை சிகிச்சை செய்துகொள்ளச் செல்பவரின் போக்கு வரத்துச் செலவுக்கும், ஒன்றியப் பகுதிகளில், குடும்ப நலத்திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஏற்படும் செலவிற்குமாகவே இத்தொகை அளிக்கப் படுகிறது.

(இ) சமூகக் கல்வி.

1969—70 ஆம் ஆண்டு முதல் சமூகக்கல்வி வேலைத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :—

1. சமூகக் கல்வி நிலையங்கள்.
2. வானொலிப் பெட்டிகள்.
3. தகவல் நிலையங்கள்.
4. பள்ளி வேலைகள்.
5. விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, விழாக் கூட்டங்கள்.
6. தேசிய நாட்களைக் கொண்டாடுதல்.
7. பலவகை.

1972–73 ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்கள் வருமாறு :—

1. சமூகக் கல்வி நிலையங்கள்.
2. கிராம நூலகங்கள்.
3. விளையாட்டுப் பந்தயங்கள்.
4. தகவல் நிலையங்கள்.

தற்போது 12,900 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர், நடைமுறையைத் தகவல்களின்மீது விருப்பப்படி விவாதிக்கும் ஒரு நிலையமாக, இவை அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூரில் உள்ள ஆசிரியர்கள் அல்லது இதர கல்வி அறிவு பெற்றவர்கள், இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் செயல் திறமிக்க திட்டமொன்று தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டு விட்டதனால், இத்திட்ட வேலைகள் தற்போது சிற்றூர்களுக்குக்கூட விரிவாக்கப்படுகின்றன. இதுவரை 33,315 வானொலிப் பெட்டிகள் ஊர்ப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஈர்க்குவிப்பதற்கும், ஆக்கப்பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, விவாதிக்கும் குழுக்களாகச் செயற்படுகின்றன. இதுவரை 6,000 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்குவிப்பதற்கென, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிறந்த வானொலி மன்றங்களுக்கு "டிரான்சிஸ்டர்"; வானொலிப் பெட்டிகள், சுழற் கேடயங்கள் ஆகியவை ஆண்டுதோறும் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன. மாநில அளவிலான சிறந்த கிராம வானொலி மன்றத்துக்கும் சுழற் கேடயம் பரிசாக அளிக்கப்படுகிறது. தவிர, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் "வானொலிக்கதிர்" என்னும் சிற்றேடொன்று, திங்கள்தோறும், நன்கு செயல்படும் வானொலி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய தகவல் நிலையங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஊர்ப்புறத் திட்டங்கள், வேளாண்மை, திட்டப் பணிகள் போன்றவை தொடர்பான திரைப் படங்களைத் திரையிடும் பொறுப்பினை 54 திரைப்படப் பிரிவுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. சமுதாய வளர்ச்சி, வேளாண்மை, சமூகநலம் பற்றிய சிறிய திரைப்படங்கள், இத்திரைப் படப் பிரிவுகள் மூலமாகத் திரையிடத் தயாரிக்கப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில் இளைஞர்களின் நடவடிக்கைகள் பற்றிய, சிறிய திரைப்படமொன்றைத் தயாரிக்க ரூ. 50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையான வளர்ச்சிப் பணிகள் பற்றிய அறிவையும் செய்தியையும் உட்புற கிராமங்களிடையே வாழும் மக்களிடையே பரப்பி, அவர்களையும் நாட்டை உருவாக்கும் இப்பணியில் பங்கு பெறத் தூண்ட, மேற்சொன்ன நடவடிக்கைகள் பெரிதும் துணை புரிந்துள்ளன.

(ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்துக்கு, குறைந்த எண்ணிக்கையாக 30 மன்றங்களாக, ஊர்ப்புறங்கள் அனைத்திலும் மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. மனப்போக்கு மாறுதற்குரிய முக்கிய அங்கமாக இம்மன்றங்கள் செயற்படுகின்றன. இம்மன்றங்களில், குடும்ப வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக் கருத்தடைச் சாதனங்களைக் கையாள வேண்டுமென்றும், கிரமமான காலங்களில் உதவுதற்கெனச் செமிக்க வேண்டுமென்றும், மூட நம்பிக்கைகள், சாதி உணர்வுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும், மகளிர் அறிவுறுத்தப்பட்டு, பின்பற்ற வேண்டப்படுகின்றனர். மூன்னேற்றமான வாழ்க்கை முறையைக் கற்று, பின்பற்றப் பழகும், 2-3 இலட்சம் கிராம மகளிர் பங்குபெறும், 13,124 மகளிர் மன்றங்கள் உள்ளன. இந்த 13,124 மகளிர் மன்றங்களில் 10,082 மன்றங்களுக்கு 50 சதவிகிதம் அரசு நன்கொடை மூலம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மகளிர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 359 மகளிர்கேட்பு மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு, வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம்மன்றங்களுக்கு, மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுதற்கெனட ரூ. 4,000 அளிக்கப்படுகிறது.

7. சிறப்புத் திட்ட வேலைகள்.

(அ) கிராம ஆள்வலத் திட்டம்.

1961–62 ஆம் ஆண்டிலிருந்து, இம்மாநிலத்தில், கிராம ஆள்வலத் திட்டம் செயற்பட்டு வருகிறது. சமுதாய சொத்துக்களை உருவாக்கி, அதன் மூலம் வளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேளாண்மை வேலை இல்லாக் காலங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், கிராமப் பகுதிகளில் கிராம ஆள்வலத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை விருத்தி செய்தல், சிறிய சாலைகளை அமைத்தல், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களைப் பயன்படுத்தல், சமுதாயக் இணறுகளைத் தோண்டுதல், விறகு களுக்காகப் பயன்படும் மரங்களை வளர்த்தல், சிறிய கழிவுநீர்ப் பாதைகளை அமைத்தல், செம்மைப்படுத்தல் போன்றவை, கிராம ஆள்வலத் திட்ட வேலைகளில் அடங்குவனவாகும். இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில், 72 வட்டாரங்களில் இத்திட்டம் செயற்படுகிறது. சுமார் ரூ. 4

இலட்சம் வரை முதலீடு செய்து, சுமார் 4 முதல் 5 ஆண்டுகளாக இத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றிய வட்டாரங்களை, இத்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, அவ்விடங்களில், பின்தங்கிய வட்டாரங்கள் சேர்க்கப்படவேண்டுமென்பது தற்போதைய கொள்கையாகும். 1969–70 ஆம் ஆண்டில் 42 பழைய வட்டாரங்கள் நீக்கப்பட்டு, 42 புதிய வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. 1970–71-ல் மேலும் 24 வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் 24 புதிய வட்டாரங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1972–73-ல் 5 வட்டாரங்கள் நீக்கப்பட்டு, 5 புதிய வட்டாரங்கள் இணைக்கப் பெறும்.

இத்திட்டத்தின் நிதி, திட்ட சாதனைகளைப் பற்றிய விவரங்கள் பின் மாறு :—

ஆண்டு.	செய்யப்பட்ட செலவு (ரூ. இலட்சத்தில்.)	ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு. (வேலை நாட்கள் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
1966—67	52.43	17.26
1967—68	40.70	15.72
1968—69	50.89	18.49
1969—70	40.65	14.94
1970—71	50.00	17.66

1972–73 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில், இத்திட்ட வேலைகளுக்கென ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) சத்துணவுத் திட்டம்.

யூனிசெஃப் நிறுவனம், மாநில அரசு அதிகாரிகளின் உதவியுடன், 1962–63 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் முதல் முறையாகச் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பெற்றது. நல்ல உடல் நலத்துடன் வாழ, உள்ளூரிலேயே சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை உட்கொள்ள வேண்டியதின் அவசியத்தை ஊர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதே இத்திட்டத்தின் பரந்த நோக்கமாகும். இம்மாநிலத்திலுள்ள 7 ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களே இத்திட்டத்தை நிறைவேற்ற முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வட்டாரங்களில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்ணுற்ற பின்னர், சுய தேவைகளை, அவசியம் எழும்போதெல்லாம் வேளாண்மை மானியத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய அடிப்படையில் இத்திட்டம், 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், இவ்வட்டாரங்களிடமே ஒப்படைக்கப்பட்டன. 1966–67-இல் இரண்டாவது கட்டமாகத் தொடங்கப்பெற்ற இரண்டு வட்டாரங்கள், 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளில், ஐந்தாண்டுகளுக்குரிய செயல்களை முடித்துள்ளன. இத் திட்ட வேலைகள் வருங்காலத்தில் நிறைவேற்றப்படுவதற்கென ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்

படும். 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளோடு, சாத்தூர் அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய வட்டாரங்கள் திட்ட வேலைகளை முடித்துள்ள போதிலும், யூனிசெஃப், மாநில அரசு ஆகியவற்றின் நிதியுதவியுடன் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. மேலும் விரிவாக்கப்பட்ட இந்த கால எல்லையில் இந்த வட்டாரங்கள், மத்திய அரசிலிருந்து வந்த உதவியும் பெறத் தகுதி யுடையவையல்ல. கீழ்க்கண்ட வட்டாரங்களில், அவற்றிற்கு எதிரே குறித்துள்ள ஆண்டுகள் தொடக்கத்திலிருந்து, இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

வட்டாரம்.	தொடங்கப்பட்ட ஆண்டு.
1. எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்)	1969—70
2. திருவரங்குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)	1969—70
3. கொடைக்கானல் (மதுரை மாவட்டம்) ..	1969—70
4. மோகனூர் (சேலம் மாவட்டம்)	1969—70
5. ஆலங்காயம் (வட ஆர்க்காடு மாவட்டம்) ..	1969—70
6. அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்) ..	1969—70
7. போகலூர் (இராமநாதபுரம் மாவட்டம்) ..	1970—71
8. அரூர் (தர்மபுரி மாவட்டம்)	1970—71
9. குறிஞ்சிப்பாடி (தென் ஆர்க்காடு மாவட்டம்)	1970—71
10. மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) ..	1970—71
11. கீரப்பாளையம் (தென் ஆர்க்காடு மாவட்டம்)	1970—71
12. கமுதி (இராமநாதபுரம் மாவட்டம்) ..	1970—71
13. மணச்சநல்லூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)	1971—7
14. காடையாம்பட்டி (சேலம் மாவட்டம்) ..	1971—7
15. வில்லிவாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்) ..	1971—7
16. திருப்போரூர் (செங்கற்பட்டு மாவட்டம்) ..	1971—7

சத்துணவுத் திட்டத்தை 1972–73 இல் விரிவாக்க 6 வட்டாரங்களை இந்திய அரசு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கியுள்ளது. 1966–67-ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் நான்காம் திட்டச் சத்துணவுத் திட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 34,000 வீதம் ஐந்தாண்டுகளுக்கு மைய அரசின் சிறப்பு உதவியைப் பெறும். இத்தோடு மாநில அரசின் நன்கொடையாக ரூ. 51,000 "யூனிசெஃப்" உதவி ஆகியவையும் சேரும்.

1972–73 ஆம் ஆண்டிற்கு சத்துணவுத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 18·00 இலட்சமாகும்.

(இ) கிராமத் தொழில்கள் திட்டம்.

1962–63-ஆம் ஆண்டில், ஸ்ரீபெரும்புதூர், ஓம்ஹூர், நாங்குனேரி ஆகிய இடங்களில், இந்திய அரசினரால் கிராமத் தொழில்கள் திட்டம் நிறுவப்பட்டன. கிராமத் தொழில் திட்டம் பகுதிகளில் தகுதியான நடைமுறைகளை அறிந்து கொள்ளுதற்கென முன்னோடியாக இத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. உள்ளூர் கைவினைஞர்களுக்கும், உழவர்களுக்கும்

தொழில் செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்காகப் பொது வசதிப் பணி நிலையங்கள் நடத்துதல், உள்ளூர் மக்களின் தேவையையொட்டிப் பொருள்களைத் தயாரிப்பதற்காக, அரசுத் துறையிலுல் கண்காணிக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல் ஆகியவை இவற்றின் தொடக்க காலப் பணிகளாம். எதற்காக இவை தோற்றுவிக்கப்பட்டனவோ, அப் பணிகளை இவை செய்து முடித்துவிட்டதாலும் அரசு கண்காணிப்பில் உள்ள 16 பொது வசதிப் பணி நிலையங்களை, வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களுக்கு அளிப்பதற்கென அரசு முடிவு செய்தது. இதுவரை 5 பொது வசதிப்பணி நிலையங்கள், வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொதுவசதிப் பொறியியல் பட்டறையில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சிப் பிரிவு தவி, மாநிலத்திலுள்ள எல்லாப் பயிற்சிப் பிரிவுகளும் மூடப்பட்டுவிட்டன, கிராமத் தொழில்கள் நிபுட்ட எஞ்ஜின்' களுடன் தொடர்புகொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள கிராமக் கூலி, கைவினைப் பொருள்கள், தொழில் நிட்டத்திலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி, முதலாவது திட்டப் பகுதியில் இரண்டும், மூன்றாவது பகுதியில் இரண்டும், நாங்குநேரியில் ஒன்றுமாக, ஐந்து கிராமத் தொழில்பேட்டைகளைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. தனியார்கள் தொழில்களைத் தொடங்குவதற்குப் போதிய வசதிகளை அளிப்பதற்கே இவை நிறுவப்படுகின்றன. திட்டப் பகுதியிலுள்ள தனிப்பட்ட தொழில் அதிபர்களுக்கு, 1969 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து ரூ. 5,000 வரை ஒவ்வொரு பிரிவும் கடன் வசதி பெற ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வழிவகை செய்துள்ளது. இப்போது செயல்படும் மூன்று திட்டங்களையும் மாவட்ட முழுவதற்கும் விரிவாக்கி, 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் தொடங்கும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் இரண்டு கிராமத் தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்க இருப்பதாக, இந்திய அரசு தெரிவித்துள்ளது.

(ஈ) குழந்தைகள் நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

குழந்தைகள் நலனிலுள்ள எல்லா வகைகளையும் தழுவி, குழந்தைகள் அனைவருக்கும், சிறப்பாக 0-முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் (மகப்பேறுக்கு முந்தைய காலம் உட்பட) நன்மை பயக்கும் ஒரு செயல் விளக்கத் திட்டம், இம் மாநிலத்திலுள்ள பூவிருந்தவல்லி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முழு உதவி அடிப்படையில், இத் திட்டத்தை இந்திய அரசு ஊக்குவித்துள்ளது. தானே முன்வந்து பணியாற்றும் கிராம நிறுவனங்களும், உள்ளாட்சிகளும் நல்கும் மனமுவந்த ஒத்துழைப்பு, அயராத தொண்டுள்ளத்தின் கூட்டுறவுடன், குறைந்த செலவில் குழந்தைகளுக்கு நிறைந்த பயன் அளிக்க முடியும் என்பதே இத் திட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும். இத் திட்டத்தில் 50 குழந்தைகள் காப்பகங்கள், 20 குழந்தைகள் ஒய்வு நிலையங்கள் இருக்கின்றன. குழந்தைகள் வளர்ச்சியில் பயிற்சி பெற்ற ஒரு பாலசேவிகாவும் ஒரு ஆயாவும் குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றையும் நிர்வகிக்கிறார்கள். குழந்தைகள் காப்பகங்களின் சராசரி எண்ணிக்கை 40. குழந்தைகள் ஒய்வு நிலையங்கள் 10. இத் திட்டத்திற்கு 1968-இல்

ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 1972-73-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 3·00 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.

சேலம் மாவட்டத்தில் கொல்லி மலையில் ஒன்றும் வர்க்காட்டில் ஒன்றுமாக இரண்டு பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் இந்த அரசினரால் செயல்படுத்தப்படுகின்றன. இந்த வட்டாரங்களில் செயற் படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும், பழங்குடி மக்களின் நல்வாழ்வுக் காகவே நடத்தப்படுவனவாகும். போக்குவரத்து, குடிநீர் வழங்கல், ஆகிய ஈரம்சங்களையொட்டி, இப் பகுதியின் தேவைகள் விரிவான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நல்வாழ்வுக் காகச் செய்யப்படும் பணிகளுக்கு நன்கொடைகள் எதுவும் திரட்டப்படுவ தில்லை. எல்லா பணிகளும் உள்ளூர் நிலைமைக்கேற்ப வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 1972-73 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப் பீட்டில் ரூ. 15·91 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஊ) இளைஞர் மன்றங்கள்.

இளைஞர் மன்றங்களுக்குச் "செயலாக்கப் பரிசுகள் அளிக்கும்" இந்திய அரசின் திட்டமானது 1970-71 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. கிராம இளைஞர்கள், தனித்தனியாகவும், ஒரு தொகுதியாகவும் செயல்படுவதை ஊக்குவிப்பது, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாக எப்போதும் கருதப்பட்டு வந்துள்ளது. கிராமப் பகுதிகளி லுள்ள இளைஞர்களின் நடவடிக்கைகள், இளைஞர் மன்றங்களைச் சார்ந்தே நடைபெறுகின்றன. இதில், பொருளாதாரத் திட்டங்கள், சமூக, கலாச்சாரப் பணிகள், உடல் வளர்ச்சிப் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும். இளைஞர் மன்றங்கள் பொருளாதார நடவடிக்கை களில் முனைப்பாக ஈடுபடுவதற்கு இத் திட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. நற்பணி புரிந்த மன்றங்களுக்குச் செயலாக்கப் பரிசுகள் அளிக்கப் படுகின்றன. மன்றங்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுகள், பொருளா தார நடவடிக்கைகளை மேலும் வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். இளைஞர் மன்றங்கள், இன்ன நிலையங்களென வரையறுக்கப்பட்டிருப் பதையொட்டி, மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு செயலாக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அ. தரம். **A** இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000.

ஆ. தரம். **B** இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 600.

இ. தரம். **C** இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 400.

வட்டார, மாவட்ட, மாநில அளவில் ஆய்வுக் குழுக்கள் மூலம் இளைஞர் மன்றங்களின் முந்தைய ஆண்டுத் திட்டங்கள் குறித்து நடத்திய ஆய்வின்

அடிப்படையில், பரிசளிக்கத் தகுந்த மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 1970–71-ஆம் ஆண்டில், A தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்கள், B தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்கள், C தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்களுக்கு ரூ. 30,000 வரைப் பரிசுகள் வழங்கப்பட்டன.

1971–72-ஆம் ஆண்டில், ஆய்வுக் குழுவால் தெரிந்தெடுக்கப்படும் இளைஞர் மன்றங்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக, இந்திய அரசு ரூ. 75,000 ஒதுக்கியுள்ளது. 1972–73-ஆம் ஆண்டிற்கு, இதே அளவுத் தொகை பரிசாக வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

8. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன், முன்னிலைப்பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளித்தலும் –குழந்தைகள் காப்பகங்கள்கட்டுதலும்.

மாநிலத்திலுள்ள 47 வட்டாரங்களில் 1,000 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. காப்பகம் ஒவ்வொன்றிலும் முன்னிலைப் பள்ளிக் குழந்தைகள் (3—5 வயதுள்ள) கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் கொண்ட 120 பேர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கப்படுகிறது. இதனால் நாளொன்றுக்கு 120,000 பேர்கள் பலன் பெறுகின்றனர். "கேர்" நிறுவன ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. புரதமும் இதரச் சத்துக்களும் அடங்கியுள்ள உணவுகள் போதிய அளவு குழந்தைகளுக்குக் கிடைக்காததன் காரணமாக, அவர்களுக்கு உடல் நலக் குறைவுடன், நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு, பிற்காலத்தில் அவர்களின் அறிவு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கெனவே ஆண்டில் 300 நாட்களுக்குக் குழந்தைகள் காப்பகங்களில் உணவளிக்கப்படுகிறது.

ஆயிரம் குழந்தைகள் காப்பகங்களில், இதுவரை 928 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் கிட்டத்தட்ட 85,570 பேர்கள் உணவு பெற்று பயனடைகின்றனர். மீதமுள்ள 72 நிலையங்கள் விரைவில் தொடங்கப் பெற்று, குறியீட்டு எல்லையான 1,20,000 பேர்கள் பயனடைவர்.

ஆயிரம் குழந்தைகள் காப்பகக் கட்டடங்களில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் 115 கட்டடங்கள் கட்டுவதற்கென, ஆரம்பக் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் கட்டுவதற்கான இரண்டாவது கட்டமாக மகளிர் நல இயக்குநரால் 225 மனைகள் தெரிந்தெடுக்கப்பட்டு, "கேர்" நிறுவனத்தாரின் ஒப்புதலுக்கென அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையங்களை நிர்வகிக்க, வட்டாரங்களிலுள்ள கிராம சேவிகைகளுக்குப் போதிய பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. "கேர்" நிறுவனம் அளிக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு பல்வகை உணவுகளைத் தயாரித்தல், பாதுகாத்தல் மற்றும் சமைக்கும்போதும், பறிமாறும்போதும் துப்புரவைக் கடைப்பிடித்தல் போன்றவற்றிற்குத் தேவையான சிறப்புப்

பயிற்சிகள், டி. கல்லுப் பட்டியிலும், பவானி சாகரிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையத்திலும் அளிக்கப்படுகின்றன. பயிற்சிபெற்ற கிராம சேவிகைகள், பால சேவிகைகளுக்கும், ஆயாக்களுக்கும், 4 நாட்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட வடிவில் ஒவ்வொரு காப்பகமும் ரூ. 7,000 செலவில் கட்டப்படுகிறது. "கேர்" நிறுவனம் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உதவிப் பணமாக ரூ. 6,500 தருகிறது. மிகுதியுள்ள தொகை மக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்படும்.

1972–73-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 15·40 இலட்சமாகும்.

9. சீரணி

சீரணியானது மக்களிடையே ஒரு புதிய சமுதாய எழுச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்று, நான்கு ஆண்டுகளாகச் சமூகத் தொண்டாற்றி வருகிறது. சீரணி உறுப்பினர்கள், தாங்கள் ஓய்வு நேரங்களில் சமூக நலனுக்கான வகையில் தொண்டாற்றுவோராவர். பள்ளிக்கூடங்கள் கட்டுதல், குவங்கள் தூர்வை எடுத்தல், பாதைகள் போடுதல் போன்ற பொது மக்களுக்குப் பயனளிக்கும் வேலைகளில் சீரணியினர் செயல்படுகின்றனர். குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு, சத்தூட்டப் பெற்ற ரொட்டிகளை வழங்குவதில் சீரணியினர் பங்கேற்கின்றனர். இத்திட்டத்தால் சுமார் 40,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். சென்னை நகரில் உள்ள முக்கிய பேருந்து நிலைகளில், பயணிகளை வரிசைப்படுத்தி, ஒழுங்கேற்படுத்தும் பணிகளையும், இவர்கள் செய்து வருகின்றனர்.

தமிழகம் முழுவதிலும் தற்போது 44,524 சீரணித் தொண்டர்கள் உள்ளனர். கிராமங்களின் இன்றியமையாத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஓராண்டுத் திட்டமொன்று தீட்டப்பெற்று சீரணியினரின் மூலமாக நிறைவேற்றப்பட இருக்கிறது. 1971-72-ஆம் ஆண்டுக்கென, சீரணியினரின் செயல் திட்டத்திற்கென, ரூ. 10 இலட்சம் மாநிலம் முழுவதற்குமாக ஒதுக்கப்பட்டது. மக்களிடையே அறியாமையை விரட்டி, அறிவொளி பரப்பும் முதியோர் சமூகக் கல்வி நிலையங்களாகச் செயல்படும் 534 சீரணி அறிவகங்கள், சீரணித் திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதிலும் இருக்கின்றன. 1970-71 ஆம் ஆண்டிற்கு சீரணி அறிவகங்களை நடத்துவதற்கென ரூ. 49,000-ம் மாவட்ட தலைமையிடத்தில் நடத்தும் சீரணித் தொண்டர்களின் பயிற்சிக்கென 1970-71-ல் ரூ. 2,79,000-ம் செலவழிக்கப்பட்டுள்ளன.

மையத் திட்டத்தின் கீழ், சீரணியினருக்கு, திருந்திய வேளாண்மை முறை, கால்நடை வளர்ச்சி, கிராமத் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளல் ஆகியவை குறித்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில், 12 நாட்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

1967ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் முதல், டிசம்பர் 31-ஆம் நாள் முடிய உள்ள காலத்தில், இவ்வணியினர் எடுத்து முடித்துள்ள பணிகள் வருமாறு :—	1971 ஆண்டு
1. கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள்	1,147
2. வரிகள் கால்வாய்கள் தூர் எடுத்தல்	1,356
3. இணைப்புச் சாலைகள் அமைத்தல்	942
4. தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கல்	500 எக்கர்கள்.
5. வெள்ளை பூசப்பட்ட பள்ளிகள்	13,523
6. பூச்சி மருந்தடித்தல்	1,500 எக்கர்கள்.
7. பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்ப் பலகைகள்	2,562
8. காய்கறித் தோட்டங்கள்	3,248
9. இதர பணிகள். (வீதிகளைச் சுத்தம் செய்தது, பள்ளிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தியது, பள்ளிச் சுவர்களில் திருக்குறள் எழுதியது).	11,032
10. நாளொன்றிற்கு ஒரு முறையாவது கோதுமை உணவைக் கொள்ளவேண்டுமென்று தூண்டியதின் விளைவாக அப்பழக்கத்தை மேற்கொண்ட மக்கள் ..	702,146
11. நடைபெற்றுள்ள வேலைகளின் மதிப்பு ..	ரூபாய். 1,14,97,606
12. அரசினர் செலவு	44,25,822

10. இராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம்.

ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கென 1970-71 ஆம் ஆண்டில் இவ்வரசு சிறப்பு ஊர்ப்பணிகள் திட்ட வேலைகளைத் துவக்கியது. இணைப்புச் சாலைகளமைத்தல், தாய்சேய் நல விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், குடிநீர் வினியோகத்தை விரிவாக்கல் ஆகிய பணிகள் இச் சிறப்புத் திட்டத்தில் அடங்குவனவாம். இத் திட்ட வேலைகளுக்கென, 1970-71ஆம் ஆண்டில் நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்துடன் மேற்சொன்ன சிறப்புத் திட்டம் இணைக்கப்பட்டுவிட்டது.

29th March 1972]

மாநிலத்திலுள்ள மாவட்டம் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவாக 1,000 பேர்களுக்கு வேலையளிக்க "கிராம வேலை வாய்ப்பு விரைவுத்திட்டம்" ஒன்றினை மைய அரசு வகுத்துள்ளது. உடலுழைப்பும், உற்பத்தியும் இரண்டறக் கலந்து பல்வகைப்பட்ட கிராமத் திட்டங்கள் வாயிலாகக் கூடுதலான வேலை வாய்ப்புகளை உண்டாக்கும் வகையில், இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்ட வேலைகளில் நிறைவேற்றப்படும் பணிகளாவன :—

(அ) பெருந் திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளை நிலங்களாக்கல், ஊராட்சி நிலங்களைத் திருத்துதல் போன்றவை.

(இ) கழிவு நீர்வசதி, கணைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நிலஅடி நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்கள் அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண்வளப் பாதுகாப்பு அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

இது நூற்றுக்கு நூறு மைய அரசு உதவித் திட்டமாகும். நான்காம் திட்டக்காலத்தில் எஞ்சி நிற்கும் ஆண்டுகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 வட்டாரங்கள் வீதம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் முறையே 9, 4, 16 வட்டாரங்களே உள்ளமையால், இத்திட்டம் இம்மாவட்டங்களிலுள்ள வட்டாரங்கள் அனைத்திலுமே செயற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு, இம் மாநிலத்திலுள்ள 374 மொத்த வட்டாரங்களில் 229 வட்டாரங்களில் இத்திட்டம் தற்போது செயற்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்கள் அனைத்திற்கும் வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 1.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனிர்க்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள வட்டாரங்களைக் கருத்திற் கொள்ளாமல், ஏனைய மாவட்ட முழுமைக்கும் ஒரு மாவட்டத்திற்கு ரூ. 12.50 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டில் உழைப்பாளிகளுக்கென 80 சதவீதம், பொருட்களுக்கும் கருவிகளுக்குமென 17 சதவீதம், மற்றும் அலுவலர்களுக்கென 3 சதவீதம் பங்கிடப்பட்டுள்ளது.

அந்தந்தப் பகுதியில் நிலவும் ஊதிய விகிதத்தைக் கருத்திற்கொண்டு, ஓர் உழைப்பாளிக்கு திங்களொன்றிற்கு 25 நாட்கள் வேலைக்கு ரூ. 100 வரை உயர் அளவாக ஊதியம் அளிக்கப்படுகிறது. எனவே, ஊதிய விகிதத்தைப் பெறுவதற்கு போதுமான அளவில் உழைப்பாளிகள் எற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஐராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகைகள், வேறு திட்டங்களுக்குச் செலவழிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கென "உள்ளூர் வைப்பு நிதி கணக்கு—4" (அதாவது விரைவுத் திட்டக் கணக்கு) என்ற கணக்கொன்று தனியே தொடங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென உள்ளூர் வைப்பு நிதி கணக்கு—4-இல் ரூ. 10,000க்கு, ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டியபடி, இத் தொகையை ரூ. 30,000-க்கு உயர்த்தி, தற்போது ஆணைகள் வெளி யிடப்பட்டுள்ளன.

இந்திய அரசின்படி, இத்திட்டமானது நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய ஆண்டுகளிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். மாவட்டத் திட்டங்களை இந்திய அரசு கோரியுள்ளது. எனவே ஐராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டாரங் களில் நிலையான, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய திட்டங்களை பட்டார வாரியாக 1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளுக்கு விரிவாக உருவாக்கி அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் கள். 1—4—1972 முதற்கொண்டு இவற்றை நிறைவேற்ற, அவை இந்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்படும்.

1972-73 நிதிநிலை மதிப்பீட்டில் இத் திட்டத்திற்கென ரூ. 295 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. வருங்கால வாய்ப்பு நிலைகள்.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைச் செயல்படுத்து வதில் காணப்படும் குறைகளைக் களைய, சட்டத்தையே மிகவும் விரிவான முறையில் பரிசீலனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இறுதி வடிவம் பெற்ற சட்டவரைவு தயாரிக்கப்பட்டுக் காலப்போக்கில் சட்டப் பேரவை முன்னர் வைக்கப்படும்.

வருவாய்த் துறை நிர்வாகத்தை, திருத்தியமைக்கும் பிரச்னையை நிர்வாகச் சீர்திருத்தக் குழு தற்போது ஆய்வு செய்து வருவதால், வட்டாரங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் பிரச்னையும் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைக்கு விடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கல்வித் தொடர்பான நிதியமைப்புக்களை ஆய்வு செய்ய அரசால் நியமிக்கப்பட்ட ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு, பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவை அரசின் ஆய்வில் உள்ளன. ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கென, ஒரு திருத்தப்பட்ட முறையானது உருவாக்கப்பட்டு வருகிறது. இம்முறை முழுவடிவம் பெற்று, ஏற்றுக்கொள்ளப்பட்டபுடன், இரண்டாம் ஊதியக் குழுவினால் ஏற்பட்ட கூடுதல் செலவிற்கு ஒரு தீர்வு கிடைக்கும். இவை பற்றி முடிவெடுப்பது ஒருபுறமிருக்க, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு (முன்கடன் மானியம் வாயிலாக) திங்களின் முதல் நாளன்றே தவறாது ஊதியமளிக்க வகை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஐராமக் குடிநீர் வினியோகம்.—முதற்கட்டமாக ஊர்கள் அனைத்திலும் குடிநீர் வழங்கல் திட்டத்தை கொணர்தற்கென, கீழ்க்கண்ட பணிகளுக்கு நிதியுதவியளிக்கக் கோரி, இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்தை, தமிழ் நாடு குடிநீர் வழங்கல் "வாட்டர் வாரியம்" அணுகியுள்ளது:—

(அ) குடிநீர் வழங்குவதற்குரிய ஆதாரங்கள் இல்லா ஊர்கள், சிற்றூர்கள்.

(ஆ) நோய் பரவும் பகுதிகளில் உள்ள ஊர்கள், சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கல். முதல் இனத்திற்கு ரூ. 3·01 கோடியும், இரண்டாம் இனத்திற்கு ரூ. 5.03 கோடியும் செலவாகும்.

ஊர்ப்புறச் சாலைகள்—கிராமச் சாலைகளைப் பொறுத்த வரையில், இம் மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களின் தேவைகளை நிறைவு செய்ய, விரைவுப் பெருந் திட்டமொன்றை வகுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. எல்லாக் காலநிலைகளிலும் பயன்படத்தக்க சாலைகளை அமைத்தல், மேற்பரப்பு சரியாக இல்லாத தற்போதைய சாலைகளை மேம்படுத்தித் தரம் உயர்த்தல், தற்போது ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சரளைக் கல் பரவிய சாலைகளில் உள்ள குறைபாடுகளை நீக்குதல் ஆகியவை இப்பெருந் திட்டத்தின் நோக்கமாகும். சரளைக்கல் பரவுதல், தார் போடுதல், குறுக்கு வடிகால்களை அமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பணிகளையும் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றக் கருதப்படுகிறது.

பள்ளிக் கட்டடங்கள்.—தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் இருக்க வேண்டுமென்பதற்காக, இக்குறிப்புரையில் ஏற்கெனவே கூறியுள்ளபடி சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென அரசு அளித்த மானியம் ஒரு கோடி ரூபாயாகும். தனிர ஆயுள் காப்புறுதிக் கழகமும் அணுகப் பட்டுள்ளது.

ஊர்ப்புற மின்வசதி.—நம் நாட்டில் ஊர்ப் புறங்களுக்கு மின் வசதி யளிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தற்போதுள்ள திட்டத் தின்படி, எஞ்சியுள்ள ஊர்கள், சிற்றூர்களுக்கு 1972-73-க்குள்ளும், அரிசனக் குடியிருப்புக்களுக்கு 1973-74-க்குள்ளும் மின்வசதியளிக்கப் பட்டுவிடும்.

ஊர்ப்புற வேலை வாய்ப்பு.—ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சிறப்பு முயற்சிகள், 1971-72-ஆம் ஆண்டில் மேற்கொண்டமை காணலாம். ஐராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், ஐராம ஆள் வலுத் திட்டம், இராமநாதபுரம் தர்மபுரி மாவட்டங்களுக்குரிய வறட்சிப் பகுதிகளுக்கானத் திட்ட வேலைகள், மற்றும் நடுத்தர, சிறிய உழவர்களுக்குப் பயனளிக்கும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் ஆகியன மேலும் வலுப்படுத்தப்பெற்று, வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவதுடன், நிலையான சொத்துக்களையும் உருவாக்கியுள்ளன.

மண்டலத் திட்டம்.—பல்வேறு மண்டலங்களின் வளர்ச்சியைச் சமநிலையில் ஏற்படுத்த, வளர்ச்சிக்குரிய பகுதிகளைக் கண்டெடுத்து, குறிப்பாக ஊர்ப்புற, நகர்ப்புற வளர்ச்சிக்கான ஆக்க வேலைகளை மேற்கொள்வதே மண்டலத் திட்டத்தின் நோக்கமாகும். நிலவியல், பொருளாதார, சமூக மக்கள் தொகை முதலிய பண்புகளைக் கொண்டு, மாநிலம் முழுவதும் வளம் பெறக்கூடிய வகையில் அமைந்திட்ட மண்டலங்களாக, மாநிலம் முழுவதுக்கும் வகுக்கப்பட்டுள்ளன. இம்மண்டலத் திட்டங்கள் 1972-73 ஆம் ஆண்டுக்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றன. வளர்ச்சி நிலையங்களில் முன்னோடி ஆய்வுத் திட்டம், இந்திய அரசின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. அதன் நோக்கம், மண்டலங்களின் சமநிலையான வளர்ச்சியை, உறுதியான கோட்பாடுகளை யொட்டி உண்டாக்குவதும், வளர்ச்சி நிலையங்களை, உரிய வகையில் கண்டெடுத்து, எற்ற வழிமுறையில் அவற்றை உருவாக்குவதுமேயாகும்.

முடிவுரை.—மேற்கூறியவற்றுல், முதலாவதாக, இந்த அரசு ஊர் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றுவதிலும், அதே நேரத்தில், ஊர்ப்புற மக்களின் வேலை வாய்ப்புக்கள் பற்றிய சிக்கலைத் தீர்த்து, பல்வேறு மண்டலங்களின் சமநிலை வளர்ச்சிக்கு அடிகோலுவதிலும் ஆர்வம் கொண்டுள்ளமை விளங்கும்.

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பெற்ற பின்பு, உள்ளூர் தலைவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற பல்வேறு பொறுப்புக்களை அதிக ஆர்வமும் அக்கறையும் கொண்டு நிறைவேற்றுவதை எங்கும் காணமுடிகிறது. ஊர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியில் அரசையும் மக்களையும் நெருங்கிய தொடர்புளவர்களாக்கியுள்ளமை, ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் நிலைபெற்ற சாதனையாகும். மேலும், பங்குமைப் புரட்சியை உருவாக்கவும், இது உதவியுள்ளது. குறிப்பாக, ஊர் மக்களின் மன நிலையில் அமைதியான புதிய மாறுதலை உண்டாக்கி தங்கள் வளர்ச்சிக்குத் தாங்களே பாடுபடும் உணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்த்து, அதன் விளைவாக, பல்வேறு சமூகத் தீமைகளை அழித்துக் கொள்ள வழி வகுத்து, சிறந்த சாதனைகளைக் காண்பதும் முடிந்தது.

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை

கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்

உதவி மானியங்கள் ரூ. 4,69,29,500

கொள்கை விளக்கக் குறிப்பு.

இந்த 1972–73-க்குரிய ரூ. 4,69,29,500-க்கான கூட்டு மானியக் கோரிக்கையாகும். இக் கோரிக்கை, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், செண்ணை மாநகராட்சி, மதுரை மாநகர நகராட்சிக் கழகம், குடிசை மாற்று வசதி வாரியம் திட்டங்களுக்கு நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டம்; குடிசைப் பகுதிகளை மாற்றி அவற்றை நகர்ப்புறங்களிலும் ஊர்ப்புறங்களிலும் பெருகியுள்ள வாழ்க்கை வசதிகளுக்கும் நல்ல வசதி ஏற்படுத்தும் திட்டம்; நிலமைகளுக்கும் ஏற்ப உள்ளாட்சி மன்றங்களில் சாலைப் போக்குவரத்துத்தினைப் பேணி மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் தொடர்புடையன.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாலை வசதி.

ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பேரூராட்சிகளுக்கும், கீழ்க்கண்ட திட்டங்களுக்காக உதவி மானியங்கள் வழங்க இக் கோரிக்கையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது :—

1. ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகள் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் உள்ளூர்ச் சாலை மானியம் எழுத்தாழ் ரூ. 119 இலட்சங்கள்.
2. பேரூராட்சிகளில் தாழ்படியுள்ள சாலைகள் போடுவதற்காக வருடாந்திர பாதி மானியம்.
3. மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கைக் கேடுகளால் சேதமுற்ற ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் சாலைகள், பாலங்கள் இவற்றைச் சீரமைத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு சீரமைப்பு மானியம், மேற்சொன்ன சேதங்களின் அளவிற்கு ஏற்ப.

பேரூராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் போக்குவரத்து வசதிப் பராமரிப்புக்காக இம் மானியங்கள் வழங்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களின் இணைப்பு சாலைகள்

கிராமப் பணித் திட்டத்தின்கீழ் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்காக, இணைப்புச் சாலைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இரண்டாம் நிலை கடந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு, இணைப்புச் சாலைகளுக்காக, 1971–72-ல் ரூ. 72·16 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1972–73ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 83·90 இலட்சங்கள் ஆகும்.

நகராட்சி சாலைகளும் பாலங்களும்

நகராட்சிகளுக்கு அவற்றின் மேற்பார்வையில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு மானியங்கள் வழங்கி வருகிறது. மக்கள் நெரிசல் அதிகமாயுள்ள பகுதிகளில் பொதுமக்களின் உடல் நலத்தைக் கருதி நகராட்சி நகர்ச் சாலைகளில் தூசுபடியா மேற்பரப்பை அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி வழங்குவதென்பது, அரசு கொள்கையாகும்.

ஒவ்வொரு நகராட்சிக்கும் சாலைகளில் தூசிபடியா மேற்பரப்பை அமைக்கும் திட்டத்துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஓராண்டில், இத் திட்டத்தில் நந்து இரண்டு வேலைகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளலாம். நகராட்சிகளில் சாலைகள் மேற்பரப்பைத் தூசிபடியாமல் அமைக்கும் வேலைக்கென, அரசு, அவ்வேலையின் செலவில் பாதியை மானியமாக வழங்குகிறது. செலவின் மறுபாதியை, தொடர்புடைய நகராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும் அல்லது இதற்கென அரசிடமிருந்து கடன் பெற்று அச்செலவை சரிகட்ட வேண்டும். 1972–73-ல் இந்தக் கோரிக்கையில் சாலைகளின் மேற்பரப்பைத் தூசிபடியாமல் அமைப்பதற்கென, நகராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்காக, ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோரிக்கை 47-இன் கீழ், சாலை வேலைகளுக்காகவும், பால வேலைகளுக்காகவும் நகராட்சிகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காக 1972–73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 13,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பான நோவுகளில் நகராட்சிப் பகுதிகளுக்குள் பாலங்கள் கட்ட, நகராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. இக் கொள்கையை ஒட்டி 1972–73ஆம் ஆண்டுக்கு, இக் கோரிக்கையில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

குன்னூர், உதகமண்டலம் நகராட்சிகளுக்கும் கோடைக்கானல் நகரியத்திற்கும் சாலைகள் பேணத் தொடர் மானியங்கள் வழங்கவும் ஸ்ரீரங்கம் நகராட்சிக்கு முன்னாள் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகம் தரவேண்டிய சங்க இழப்பீட்டுக்கான மானியம் வழங்கவும் ரூ. 25,300 ஒதுக்கப்பட்டுள்ளது. பெருமழை, வெள்ளம் ஆகியவை காரணமாக சேதமுற்ற சாலைகளைச் செப்பனிடுவதற்குத் தேவைப்படும்போது, போதிய மானியங்கள் வழங்கப்படுகின்றன.

1968–69ஆம் ஆண்டிலிருந்து, இம் மாநிலத்தில் உள்ள எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் சாலைப் பராமரிப்புக்காக, அரசு, அதற்கென அமைந்த ஒரு வருடாந்திர மானியம் வழங்கி வருவது இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். இவ்வகையில் 1972–73ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10 இலட்சமாகும்.

சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும், அதற்கு அரசு கணிசமான நிதி வழங்கி வந்துள்ளது. 1971–72-இல் (திட்டத்திற்குட்பட்ட, திட்டத்திற்குட்படாத) மானியமாக ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 29,94,000 மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் உள்ள எல்லாப் பெருஞ் சாலைகளையும், இப்போது நெடுஞ்சாலைகள் துறை பேணி வருகிறது. நெடுஞ்சாலைகள் நீங்கலாக மாநகரில் பேருந்துகள் ஓடும் சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு உதவி அளித்து வந்துள்ளது. சென்னை மாநகராட்சி ஆணையாளர் வேண்டியுள்ளவாறு, சென்ற ஆண்டுகள் போலவே, பேருந்துகள் ஓடும் சில முக்கியமான சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்காக, மாநகராட்சிக்கு மானியமும் கடனும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்ணம்மாபேட்டை, கெங்கு ரெட்டி சாலை, தெற்கு கடற்கரை சாலை ஆகிய மூன்று இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக நிதி உதவி அளிக்க 1972–73ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடையாற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள் ("டேர்ன்புல்" சாலைப் பாலமும், "எல்ஃபின்ஸ்டன்" பாலச் சீரமைப்பும்) கட்டுவதற்கும், கூவம் ஆற்றின் குறுக்கே நுங்கம்பாக்கத்தில் உள்ள "மன்ரோ" பாலத்தையும் "காண்ட்ஸ்" சாலை "குக்ஸ்" சாலை ஆகியவற்றில் உள்ள பாலங்களையும் அகலப்படுத்துவதற்கும், உதவி அளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை நீங்கலாக, சாலைப் பணிகளுக்கான சாதனங்கள் வாங்கவும், தெரு விளக்குகள் அமைப்பை மேம்படுத்தவும், கடனுதவி செய்யவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

"சென்டேஜ்" கட்டணங்கள்

தொழிலாளர் அரசாங்கக் கரப்புறுதிக் கழகத்தின் கட்டடங்களைப் பொதுப் பணித்துறை கட்டுவதற்காக, அக் கழகம் சென்டேஜ் கட்டணம் செலுத்த, உதவி மானியமாக ரூ. 5,100 ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் திட்டங்கள்

நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காக, உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கும், இக்கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன இதற்காக 1972–73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 7·78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் அவற்றின் நீர்வழங்கு, கழிவு நீர் அகற்றும் திட்டங்களை நிறைவேற்ற, கடன்கள் வழங்கப்படுகின்றன. பெரும்பாலும், இத்திட்டங்களை அரசின் கடன், மானிய உதவி கொண்டும், ஓரளவு நீர் வழங்கு வடிகால் கணக்குச் சேமிப்பைக் கொண்டும், உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றுகின்றன. அரசு, சாதாரணமாக, இத்திட்டங்களின் ஆய்வுக்காகவோ, தற்போதுள்ள நீர் வழங்கு வடிகல் திட்டங்களின் பராமரிப்புக்காகவோ, கடனோ மானியமோ அளிப்பதில்லை. உள்ளாட்சி மன்றங்கள் செயல்படுத்தும் நீர் வழங்குத் திட்டங்கள், வணிக நோக்குடன் தன்னுதரிப்பு அடிப்படையில் இருக்க வேண்டுமென வலியுறுத்தப் படுகிறது. அவ்வாறிருந்தால், இத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு, இவற்றைப் பேணி வருவதற்கான ஆண்டுச் செலவுகளையும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான ஆண்டுத் தொகையையும் ஈடு கட்டுவதுடன், எதிர்காலத்தில் இத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு ஒரு வைப்பு நிதியை எழுப்புவதற்கும் அவைகளால் இயலும். 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்ட "தமிழ்நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்" இம்மாநிலம் முழுவதும், குடிநீர் வழங்கவும், கழிவு நீர் அகற்றவும் பொறுப் பேற்றுக்கொண்டுள்ளது.

ரூ. 3,177·62 இலட்சம் நிர்ணயித்த செலவில் 101 நீர் வழங்கு திட்டங்களையும், ரூ. 1,100·22 இலட்சம் நிர்ணயித்த செலவில் 12 வடிகால் திட்டங்களையும் இம்மாநிலம் முழுமையும் சட்டப்படியான நீர் வழங்குவடிகால் வாரியம் தற்போது நிறைவேற்றி வருகிறது. குடிநீர்த் திட்டங்கள் 72 நகராட்சிகளிலும், 12 நகரியங்களிலும் 10,000-த்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 26 ஊராட்சிகளிலும் உள்ளன. 15 நகராட்சிகளிலும், 30 ஊராட்சிகளிலும் நீர் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் ஆயுள் ஈட்டுறுதிக் கழகக் கடன் உதவி கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 14 நகராட்சிகளிலும், 5 நகரியங்களிலும், 2 ஊராட்சிகளிலும் கழிவு நீர் அகற்றும் பகுதித் திட்டங்கள் உட்படக் கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் உள்ளன. 7 நகராட்சிகளில் கழிவு நீர் அகற்றும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1972–73 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள், மானியங்கள் வழங்குவதற்காக அரசின் பங்காக ரூ. 3,38·35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70 ஆம்

[29th March 1972

ஆண்டிலிருந்து இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் பல்வேறுபட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டங்களை நிறைவேற்றக் கடனுதவி செய்து வருகிறது. ஒவ்வொரு திட்டத்துக்கும் ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவினத்தில் 2/3 பங்கை ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனாக வழங்குகிறது.

இதுவரையில், 53 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், ரூ. 824·48 இலட்சங்கள் கடனுதவி அளித்துள்ளது.

29th March 1972]

குடிசை மேம்பாடு/குடிசை மாற்றும் திட்டம்

நகர்ப்பகுதிகளில் பெரிய வீடுகள் வாடகைக்கு எடுக்கப் போதிய வருமானம் இல்லாது, மிகக் குறைந்த வருமானம் உள்ள பலர் குடிசைப் பகுதிக்குக் குடிப்புகுந்துள்ளனர். தூரத்தைக் கருதியோ, விரைவான போக்குவரத்து வசதியின்மையாலோ வேலை செய்யும் இடத்துக்கு அருகிலேயே தங்கள் இருப்பிடங்களைச் சிலர் அமைத்துக் கொள்ள நேரிடுகிறது. இம்மட்டத்தில் உள்ளோர் பெரும்பாலும் வீடுகளில் வெலை செய்வோர், பால் வணிகர், நாள்தோறும் ஊதியம் பெறும் உழைப்பாளர்கள், கீழ்த் தொழிலாளிகள், துப்புரவு செய்வோர், சிறு கடை வைத்திருப்பவர்கள், தொழிற்சாலைகளில் பணி புரிவோர் ஆகியோராவர். காலியுள்ள இடங்களில் அவர்கள் அமைத்துக் கொண்ட வாழும் இடங்கள் நெரிசலானதும், காற்று சரிவரப் புகாததும் சுகாதாரம் இல்லாததும் ஆன குடிசைப் பகுதிகள் நிறைந்தனவாகும். இப்பகுதிகளின் வளர்ச்சி ஒழுங்கில்லாமல் இருந்து வருகிறது. மக்கள் நெரிசல் இவ்விடங்களில் அதிகமாக இருப்பதுடன் அங்குள்ள சுகாதார நிலை பிரமிக்கத்தக்க வகையில் மோசமாக உள்ளது.

குடிசை மேம்பாடு/குடிசை மாற்றும் திட்டம் 1956–57ஆம் ஆண்டில் சென்னை நகரில் புதிதாக அமுலுக்கு வந்தது: பின்னர், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வெளியூர்ப் பகுதிகட்கு விரிவு படுத்தப்பட்டது. முதலில் சென்னை நகர அபிவிருத்திப் பொறுப்புக் குழுவும் சென்னை மாநகராட்சியும் குடிசை மாற்று வேலையைச் செய்து வந்தன. 1961ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அவ் வேலைகளை அது ஏற்றுக் கொண்டது. இத்திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகள் இரண்டு வகைகளில் நிறைவேற்றப்பட்டன. 800 சதுர அடி முதல் 1,000 சதுர அடிவரை உள்ள மேம்பாடுற்ற திறந்த வெளி மனைகளில் 300 சதுர அடி உயர்த்தப்பட்ட அடித்தளம் அமைக்கப்பட்டு, அத்துடன் ரூ. 252 பெறுமான குடிசை அமைப்புப் பொருள்களும் தன்னுதவி அடிப்படையில் குடிசை போட்டுக் கொள்வதற்காக ரூ. 32·50 ரொக்க மானியமும் வழங்கப்பட்டன. வாரியம் ஒவ்வொரு மனையிலும் ஒரு குளியல் அறையும் நீராடிக்கழிப்பிடத்தையும் அமைத்துப் பேணிவருகிறது. தெரு விளக்கு, சாலைகள், நீர் வழங்கு வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப் படுகின்றன. குடிசைகளை மேம்படுத்துவதில் இது ஒரு முறையாகும். மற்றொரு முறை இடத்துக்கு ஏற்றபடி

உறைவிடங்களையும் ஒரு மாடி அல்லது பல மாடிக் கட்டடங்களையும் கட்டுவதன்மூலம், மேம்பாடு செய்வதாகும். கட்டப்பட்ட ஒவ்வோர் உறைவிடத்திலும், 120 ச. அடி பரப்பளவுக்குத் தாழ்வாரமும், 84 ச. அடி கொண்ட சமையல் அறையும், 16 ச. அடி கொண்ட குளியல் அறையும், 12 ச. அடி உள்ள கழிப்பிடமும் அமையும்.

இத்திட்டத்துக்கு 1969ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை கிடைத்து வந்த உதவி முறை வருமாறு :— இந்திய அரசிடமிருந்து திட்டத்துக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் கடன்; திட்டச் செலவில் 37½ சதவீதம் இந்திய அரசிடமிருந்து மேலுதவி; திட்டச் செலவில் 12½ சதவீதம் மாநில அரசிடமிருந்து மேலுதவி.

மாநில அரசுகளுக்கு 1—4—1969 முதல், இந்திய அரசு வட்டாரக் கடனுகவும், வட்டார மானியமாகவும் உதவியை வழங்கி வருகிறது. எனவே, தனியாக ஒரு திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை.

குடிசை மாற்றம் பற்றிய பிரச்சனையை மிக விரைவாகத் தீர்ப்பதற்காக 1970ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் "தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்" என்ற சட்டப்படியான ஓர் அமைப்பை அரசு உருவாக்கியது. சென்னை நகரிலுள்ள எல்லாக் குடிசைப் பகுதிகளையும் ஏழு ஆண்டுகட்குள் காலி செய்துவிட வேண்டுமென்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னை நகரில் இப்பணி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. வெளியூர்ப் பகுதிகளில் இப்பணியை தமிழ் நாட்டு வீட்டு வசதி வாரியம் செய்து வருகிறது. சென்னை நகரில் 118 குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்றுப் பணி செய்ய மூன்றாண்டுத் திட்டத்தை "தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்" தயாரித்துள்ளது.

1970–71ஆம் ஆண்டு குடிசை மாற்றுப் பணிக்காக மாநிலம் முழுமைக்கும் ரூ. 96·67 இலட்சம் செல வாயிற்று. இவ்வாண்டு இப்பணிக்காக டிசம்பர் 1971 வரை செலவாகியுள்ள தொகை ரூ. 174·22 இலட்சம் ஆகும். 1971–72ஆம் ஆண்டில் வெளியூர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இப்பணிக்காக ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

சென்னை நகரில் ஏறத்தாழ 1,000 குடிசைப்பகுதிகள் உள்ளன. இதுவரை 601 குடிசைப் பகுதிகள் நில அளவை (சர்வே) செய்யப்பட்டுள்ளன. இன்னும் 400 குடிசைப் பகுதிகளை நில அளவை செய்ய வேண்டியுள்ளது. 150,000 குடும்பங்கள் குடிசைப்பகுதிகளில் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மற்ற விவரங்கள் பின்வருமாறு :—

மேற்பார்வை செய்யப்பட்டுள்ள குடும்பங்கள்	87,394
இன்னும் மேற்பார்வை செய்யப்பட வேண்டிய குடும்பங்கள்	63,696

குடிசை மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்னால், 7,384 குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ளது. குடிசை மாற்று வாரியத்திடமுள்ள மேம்பாடுற்ற திறந்த வெளி மனைகள் 8,446 ஆகும். அத்துடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட தீப்பிடிக்காத குடியிருப்புகள் 1,820-ம் தற்காலிகக் குடியிருப்புகள் 630-ம் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1971–72-ல் குடிசை மாற்றுத் திட்டத்துக்காக சென்னை நகரில் ரூ. 3·65 கோடியும் வெளியூர்ப் பகுதிகளில் ரூ. 0·35 கோடியும் அரசு வழங்கியுள்ளது. இதுவரை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 1,981 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. இன்னும், இந்த ஆண்டில் 68 திட்டங்கள் வாயிலாக, 4,956 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1972–73ஆம் ஆண்டுக்காக அரசு குடிசைப் பகுதிகளை மாற்றும் பணிக்காக நகர்ப்பகுதிகளுக்கு ரூ. 365·00 இலட்சமும், வெளியூர்ப் பகுதிகளுக்காக ரூ. 35·00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 4·00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. 1972–73ஆம் ஆண்டில், சென்னை நகரில் ஏறத்தாழ 8,000 குடியிருப்புகள் கட்டப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 1

இணைப்பு வெளியீட்டின் நோக்கம்

மாநில அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் ஊராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள் அனைத்தையும் ஒரே வெளியீட்டில் தொகுத்துக் காட்டுவதே, இந்த இணைப்பு வெளியீட்டின் நோக்கமாகும்.

2. இம் மாநிலத்தில் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் சொல்லியுள்ளவாறு, ஆற்றவேண்டிய கடமைகளையும், விருப்பிற்கிணங்கச் செய்யும் தகையுடை அலுவல்களையும் செய்து வருகின்றன. இவை தவிர, ஊராட்சி ஒன்றியங்களிடம் சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதும் சட்டமுறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுகிற திட்டங்கள் பலதரப்பட்டவையாக இருப்பதால், அவற்றிற்கு ஆகும் செலவு " 19. பொது நிர்வாகம் " " 28 கல்வி " "29 மருத்துவம்" "30. பொதுச்சுகாதாரம்", "31. வேளாண்மை" "33. விலங்கின வளர்ப்பு", " 37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியவை ", " 39. பல்வகை ", " 44. பாசனம் ", " 50. பொதுப்பணிகள் ", " 71. பல்வகை ", " 103. மூலதனச் செலவு ", " கடன்கள், முன்பணங்கள் முதலியன " போன்ற பல்வேறு தலைப்புகளில் காட்டப்படுகின்றன. எனவே, ஊராட்சி நிறுவனங்களில் நோக்கினையும் பரப்பினையும் எதிரொலித்துக் காட்டுகிற நிதி மதிப்பீடுகள், பொது வரவு-செலவுத் திட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரித்தெடுத்து தொகுக்கப்பட வேண்டும். இந்த வெளியீடு ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் அல்லது அவற்றின் மூலமாகவும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளின் அளவையும், அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளையும் தொகுத்து அளிக்கிறது. 1966–67 ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் இந்த வெளியீட்டைக் கொண்டு வருகிறது.

பிரிவு 2

ஊராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி பற்றிய நிதி ஒதுக்கீடு சம்பந்தமாய் மாநில வரவு-செலவுத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

157/11—13

ஊராட்சி நிர்வாகத்திற்கும் ஊரக வளர்ச்சிக்கும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து எவ்வாறு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை காட்டுவதற்காக, பல்வேறு திட்டங்களும் எந்தெந்த கணக்குத் தலைப்புகளின் கீழ் காட்டப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி பட்டியலும், 1971–72, 1972–73-ம் ஆண்டுகளில் அவற்றிற்காக ஒதுக்கியுள்ள தொகைகளும் கீழே 1-வது விவர அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. பொருத்தமான கணக்குத் தலைப்புகள் அனைத்தும் இப்பிரிவிலே தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. மாநில வரவு-செலவுத் திட்டத்தில் இவை எந்த வரிசையில் அமைந்துள்ளனவோ அதே வரிசை முறையில் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான வரவு-செலவுத் திட்டத்தில் Schematic Budget (3-வது பிரிவில் உள்ளவாறு) அடங்கியுள்ளவை, ஊராட்சி ஒன்றியங்களில் திட்டவாரியான வரவு-செலவுத் திட்டத் திற்குப் புறம்பானவை (இவற்றில் பணியாளர் செலவு அடங்கும்—கீழே II-A விவர அறிக்கையைக் காணவும்), ஊரக வளர்ச்சியுடன் பிணைந்துள்ள வேளையத் திட்டங்கள் கீழே II-B விவர அறிக்கையைக் காணவும் ஆகியவை பற்றிய நிதி ஒதுக்கங்கள் எனப் பொதுவாக வகைப்படுத்தலாம். மானியக் கோரிக்கை வாரியாகவும், திட்டங்கள் வாரியாகவும் செலவினங்களைக் கட்டுப் படுத்தும் அதிகாரிகள் வாரியாகவும் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை முறையே விவர அறிக்கைகள் II–C, II–D, II–E ஆகியவற்றில் காணலாம். இந்தத் திட்டச் செலவீடுகளில் சில திட்ட வேலைகளுக்கு மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கிறது. மற்ற வற்றிற்கு அந்த உதவி இல்லை. மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்ட வேலைகள் பற்றிய நிதிப் புள்ளி விவரங்கள் 5-வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

விவர அறிக்கை 1.

ஊராட்சி வளர்ச்சி திட்ட வாரியான வரவு-செலவு திட்டத்தில் (Schematic Budget) சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள்.

ரெவின்யூ வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டு விவரம்.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது), 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தில் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
IX. (a) நிலவரி—சாதாரண நில வரி கழிக்கவும்—(i) உள்ளாட்சி மன்றங்கள் சார்பில் வசூலிக்கப்பட்ட நில மேல் வரி, மற்ற மேல் வரிகள் ஆகியவற்றை அந்த உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்த தொகை.	5,40·00	5,40·00	5,40·00	தல தீர்வை வரியும் சர் சார்ஜும் (ஒப்படை நிலவரி).
XIV. முத்திரைத் தாள்கள்—A. நீதித் துறை சார்பற்றவை—b. கழிக்கவும்—சொத்து மாற்றத்தின் மேல் உள்ளாட்சி மன்றங்கள் விதிக்கும் தீர்வை மூலம் இடைக்கும் நிகர வசூல்களை அவற்றிற்குக் கொடுத்தல். (நகராட்சிப் பகுதிகளும் அடங்கும்).	5,50·00	5,00·00	5,00·00	முத்திரைத்தாள் தீர்வை சர்சார்ஜ் (ஒப்படை நிலவரி).

செலவுகளின் திட்ட மதிப்பீட்டு விவரம்.

39. பல்வகை—சமூக வளர்ச்சி நிறுவனங்கள்—g. உதவி மானியத் தொகைகள் நன்கொடைகள் முதலியன—A. மகளிர் நலத்துறை—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—(1) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் மகளிர்-சிறுவர் நல மானியம் (II-ம் நிலை வட்டாரங்கள்).	9·00	8·00	7·00	மகளிர் சிறுவர் நல மானியம் (II-ம் நிலை வட்டாரங்கள்).
39. பல்வகை—சமூக வளர்ச்சி நிறுவனங்கள்—g. உதவி மானியத் தொகைகள் நன்கொடைகள் முதலியன—A. மகளிர் நலத் துறை—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—(2) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்—மகளிர் சிறுவர் நல மானியம் (II-ம் நிலைக்குப் பிற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு).	8·00	12·00	10·90	மகளிர் சிறுவர் நல மானியம் (II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்கள்).
38. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—B. ஊராட்சி நிறுவனங்களுக்குக் கல்வி மானியங்கள்.	8,57·12	10,68·00	12,19·94	கல்வி மானியம்.
38. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—C. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிலவரி ஒப்படை.	2,65·00	2,62·80	2,65·00	நிலவரி ஒப்படை.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது), 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்)			
28. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள—D. துணைக்கல்வி மானியம்.	3,38·00	3,28·11	3,38·00	துணைக் கல்வி மானியம்.
*28. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—E. தனி அகவிலைப்படி மானியம்.	11,50·00	5,20·46	1,74·00	தனி அகவிலைப்படி மானியம்.
28. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—H. ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த மொத்த ஒதுக்கீடு.	2,11·57	..	..	ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த மொத்த ஒதுக்கீடு.
*28. கல்வி—C. தொடக்கக் கல்வி—1. தொடக்கக் கல்விக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—J. ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன் பணமான மானியங்கள்.	..	7,73·00	12,00·00	ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொடக்கக் கல்விக்காக முன் பணமான மானியங்கள்.
28. கல்வி—F. பொது—X. பல்வகை——A. பொது—II. தொடக்கக் கல்வி மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கல்—W. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—V. பல்வகை—E.	1,98·00	1,98·00	2,05·48	நண்பகல் உணவு மானியம்.
28. கல்வி—Y. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—III. தொடக்க நிலை—(ii) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—A. (6—11) வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்தல்.	14·38	16·75	3·37	தொடக்கக் கல்வியின்மீதும் திட்டச் செலவு.
*28. கல்வி—Y. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—III. தொடக்க நிலை—(iii) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—B. (11—14) வயதுத் தொகுதியை சார்ந்த மாணவர்களை மேர்கொண்டும் பள்ளிகளில் சேர்த்தல்.	2·99	2·83	0·99	தொடக்கக் கல்வியின்மீதும் திட்டச் செலவு.
28. கல்வி—Y. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—III. தொடக்க நிலை—(ii). உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள்—F. II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்குக் கல்வி மானியங்கள்.	34·30	34·30	40·06	பள்ளிக் கட்டிடங்கள்—II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்கு மானியம்.

* நகராட்சிப் பகுதிகளும் அடங்குகிற ஒருங்கிணைந்த தலைப்புகள்.

எண்ணும் தலைப்பும்.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
*29. மருத்துவம்—H. உதவி மானியத் தொகைகள் நன்கொடைகள் முதலியன —I. சுகாதாரப் பணிகள்— குடும்பநலத் திட்ட இயக்குநரின்கீழ் உள்ள திட்டங்கள்—A. மருத்துவக் காரியங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள்—பராமரிப்பு மானியங்கள்— மருத்துவ மனைகளையும் மருந்தகங்களையும் பராமரித்தல்.	7·60	8·00	8·00	மருந்தகங்களுக்குப் பராமரிப்பு மானியம்.
*30. பொதுச் சுகாதாரம்—B. பொதுச் சுகாதார காரியங்களுக்காக மானியங்கள் —2. பல்வகை மானியங்கள்— மற்ற மானியங்கள்.	14·60	18·30	15·29	பேறுகால நிலையங்களுக்காக பராமரிப்பு மானியங்கள்.
30. பொதுச் சுகாதாரம்—F. வளர்ச்சி வேலைகள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்— E. குழாய் மூலம் நீர் வழங்குவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்.	68·70	79·70	80·00	எல்லா வட்டாரங்களுக்கும் குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டங்களுக்கு மானியங்கள்.
30. பொதுச் சுகாதாரம்—F. வளர்ச்சி வேலைகள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்— —F. II-ம் நிலைக்கு பிறப்பட்ட வட்டாரங்களில் சாதாரணக் கிணறு வேலைகள்.	26·24	32·80	38·13	II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்களுக்கு சாதாரணக் கிணறு வேலைகளுக்கு மானியம்.
30. பொதுச் சுகாதாரம்—F. வளர்ச்சி வேலைகள்— நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்— G. —II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களில் பற்றுக்குறைப் பகுதிகளில் கிணறு வேலைகள்.		8·20	12·20	II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்களில் பற்றுக் குறை பகுதிகளில் கிணறு வேலைகளுக்கு மானியம்.
30. பொதுச் சுகாதாரம்—F. வளர்ச்சி வேலைகள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—H. சர்வதேச சிறுவர் அவசர நிதி நிறுவனத்தின் உதவியுடன் விரிவான முறையில் அமைக்கப்படும் குழாய்க் கிணறுகள் திட்டம்.	55·00	3·50	†	குழாய்க் கிணறுகள் திட்டம்.
31. வேளாண்மை—O. வளர்ச்சித் திட்டங்கள் —நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—O. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள், (II-ம் நிலை வட்டாரங்கள்).	19·24	29·24	20·17	வேளாண்மைத் திட்டங்களுக்காக II-ம் நிலை வட்டாரங்களுக்கு மானியங்கள்.
31. வேளாண்மை—O. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்ட	55·76	55·76	64·83	வேளாண்மைத் திட்டங்களுக்காக II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்

* நகராட்சிப் பகுதிகளும் அடங்குகிற ஒருங்கிணைந்த தலைப்புகள்.

† தமிழ்நாடு நீர் வழங்கல்—வடிகால் வாரியத்திற்கு மாற்றப்பட்டது.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் லட்சத்தில்)		
டங்கள்—P. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் (II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்கள்).				டாரங்களுக்கு மானியங்கள்.
31. வேளாண்மை—மீனளம்—O. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—IX. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்.	4·65	4·93	4·66	எல்லா வட்டாரங்களுக்கும் மீனளத் திட்டங்களுக்கு மானியங்கள்.
33. விலங்கின வளர்ப்பு—J. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—(i) கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநரின் கீழ் உள்ள திட்டங்கள் F.—II-ம் நிலைக்கும் பிற்பட்ட வட்டாரங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்.	15·25	*	*	II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்களுக்காக விலங்கின வளர்ப்புக்கு மானியம்.

[25th March 1972

33. விலங்கின வளர்ப்பு—j. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—(iii) ஊரக வளர்ச்சி நெறியாளரின் கீழ் உள்ளத் திட்டங்கள்—IIம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள். — 15·25 17·73 II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்களுக்காக விலங்கின வளர்ப்புக்கு மானியம்.

37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(a) விலங்கின வளர்ப்பு. 8·00 8·00 5·52 II-ம் நிலை வட்டாரங்களுக்கு விலங்கின வளர்ப்பு மானியம்.

37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(b) கல்வி. 18·30 18·30 12·54 II-ம் நிலை வட்டாரங்களுக்கு பள்ளிக் கட்டிட மானியம்.

37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(c) சமூகக் கல்வி. 5.16 5·16 5·97 II-ம் நிலை வட்டாரங்களுக்கு சமூகக் கல்வி மானியம்.

25th March 1972]

APPENDIX

127/12—14

** 33. j. I. (iii) என்னும் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

" 33 j. I. (i)F . என்னும் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971–72.	திருத்த மதிப்பீடு 1971–72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972–73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(d) சாலைகள்.	37·84	37·84	26·10	II-ம் நிலை வட்டாரங்களுக்கு இணைப்புச்சாலைகளுக்கு மானியங்கள்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(f) II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்கு மானியங்கள்—சமூகக் கல்வி—சமூகக் கல்வி மானியங்கள்.	9·84	9·84	9·53	II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்கு சமூகக் கல்வி மானியம்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—B. தல மேம்பாட்டுப் பணிகள்—கிராமப் பகுதியில் நீர் வழங்கல்—ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்—சாதாரணக் கிணறு வேலைகள்.	13·76	17·20	11·87	II-ம் நிலை வட்டாரங்களுக்கு சாதாரணக் கிணறு வேலைகளுக்கு மானியம்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—B. உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—கிராமப் பகுதியில் நீர் வழங்கல்—ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்—பாதகமான பருவ நிலையில் கிணறுகளை ஆழத் தோண்டுதல்.	0·001	0·001	0·001	பாதகமான பருவ நிலையில் கிணறுகளை ஆழத் தோண்டுதல்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—B. உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—கிராமப் பகுதியில் நீர் வழங்கல்—ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்—II-ம் நிலை வட்டாரங்களில் பற்றுக்குறைப் பகுதிகளில் கிணறு வேலைகள்.	0·001	4·30	3·80	II-ம் நிலை வட்டாரங்களில் பற்றுக்குறைப் பகுதிகளில் கிணறு வேலைகள்.
44. பாசனம் நீர் வழி கரை உயர்த்து வடிகால் வேலைகள் (வாணிக சம்மந்தமில்லாதவை) A. பாசன வேலைகள்—II. வருவாய்த் துறை—(ii) பல்வகைச் செலவு—I. சிறு நீர்ப் பாசனம்—உதவி மானியங்கள்.	57·62	76·30	67·62	பாசன மானியம்.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1772-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மாணியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
50. பொதுப் பணிகள்—உதவி மாணியங்கள்—I. உதவி மாணியங்கள்—C. கிராமச் சாலைகளுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மாணியங்கள்—(i) ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலைகள் மாணியம்.	1,19·32	1,19·32	1,19·32	சாலைப் பராமரிப்பு மாணியம்.
50. பொதுப் பணிகள்—உதவி மாணியங்கள்—n. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—IV. II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்கு உதவி மாணியங்கள்—(i) சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—சாலைகள்.	72·16	72·16	83·90	II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களில் இணைப்புச் சாலைகளுக்கு மாணியம்.
71. பல்வகை—f. உதவி மாணியங்கள், உதவித் தொகை முதலியவை—O. ஊராட்சி ஒன்றியங்களுக்கு வீட்டு வரி இணை மாணியங்கள்.	1,50·00	1,32·38	1,47·78	கிராம வீட்டுவரி இணை மாணியம்.
1. பல்வகை—f. உதவி மாணியங்கள், உதவித் தொகைகள் முதலியவை—O. ஊராட்சி ஒன்றியங்களுக்கு தல தீர்வை வரி சர்சார்ஜ் இணை மாணியம்.	4,01·00	4,01·00	4,01·00	தல தீர்வை வரி சர்சார்ஜ் இணை மாணியம்.
76. வேனய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்—மற்ற வரிகள், தீர்வைகள் ஆகிய வற்றின் நிகர வசூலை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்தல்—b. (i) கேளிக்கை வரி (நகராட்சிப் பகுதிகளும் அடங்கும்).	7,15·02	7,41·29	7,41·29	கேளிக்கை வரி.
மொத்தம்—I. ..	60,63·42	61,63·02	64,06·99	

விவர அறிக்கை II-A.

பணியாளர் செலவு உட்பட ஊரக வளர்ச்சித் திட்டவாரியான 1. வரவு செலவு திட்டத்தில் வராத வேலைகள்

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971–72.	திருத்த மதிப்பீடு 1971–72.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1972—73.	நிர்வாக முறையில் மாணியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
28. கல்வி—Y. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள வேலை திட்டங்கள் —1. மாநிலத் திட்டங்கள்—III. தொடக்கக் கல்வி—(iii) உள்ளாட்சி மன்றங்களுக்கு மாணியங்கள்—C. கிராமப் பகுதிகளில் ஆதிரியைகளுக்கு குடியிருப்புக்கள் கட்டிக்கொடுத்தல்.	5·00	5·00	5·00	ஆதிரியை குடியிருப்புக்கள்.
30. பொதுச் சுகாதாரம்—a. பொதுச் சுகாதாரப் பணியாளர்—G. ஆரம்ப சுகாதார நிலையங்கள்.	1,37·15	1,45·38	1,55·86	ஆரம்ப சுகாதார நிலையங்கள்—பணியாளர் செலவுகள்.
30. பொதுச் சுகாதாரம்—f. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—நான்காவது ஐந்தாவது திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—A. பொதுச் சுகாதார பணியாளர்—VI. ஆரம்ப சுகாதார நிலையங்கள்.	30·61	29·96	31·23	
35. தொழில்கள்—J. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள்—II. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—தொழில்கள்—(1) கிராமத் தொழில்களை மேன்மேலும் வளர்ப்பதற்கான முன்னேடித் திட்டம்	23·35	23·31	23·99	ஊரகத் தொழில் முன்னேடி திட்டம்.
35. தொழில்கள்—கதர் தொழில் வளர்ச்சி—I. உதவி மானியத் தொகைகள் நன்கொடைகள் முதலியன—(4) கிராமக் கலைகள்—கைப்பணிகள் தொழில்கள் ஆகியவற்றை II-ம் நிலைக்கு பிற்பட்ட வட்டாரங்களில் வளர்ப்பதற்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்.	9·84	9·84	11·44	ஊரகக் கலைகள் கைப்பணிகள்—தொழில்கள் திட்டங்களுக்காக (II-ம் நிலைக்குப் பிற்பட்ட வட்டாரங்களுக்கு) மானியம்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—". சாதாரணமானவை—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—வட்டத் தலைமையிடங்கள்—(i) A. பணியாளர்களின் செலவு.	5,84·01	5,19·09	5,18·75	பணியாளர் செலவு.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—I. சதாரணமானவை—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—வட்டத் தலைமையிடங்கள்—(ii)—ஊராட்சி வாலெஞ்டி பராமரிப்பு நிறுவனம்.	11·01	11·26	10·91	ஊராட்சி வாலெஞ்டி பராமரிப்பு நிறுவனம் பணியாளர் செலவு.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாகம் முறையில் மானியத் திட்டத்தின் பெயர்
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—I. சாதாரணமானவை—B. ஊரக வேலை வாய்ப்புக் கான விரைவுத் திட்டம்.	..	2,95.00	2,95·00	ஊரக வேலை வாய்ப்புகான விரைவுத் திட்டம்.
37. சமுதாய வளர்ச்சி திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள் I. மாநிலத் திட்டங்கள்—A. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—(e) கிராமக் கலைகள், கைப்பணிகள், தொழில்கள்.	5·16	5·16	3·56	கிராம கலைகள், பணிகள், தொழில்கள், இத் திட்டங்களுக்காக II-ம் நிலை வட்டாரங்களுக்கு மானியங்கள்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சி பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலுள்ள திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள் C—கிராம வேலைத் திட்டங்கள்—மனித ஆற்றலைப் பயன்படுத்தும் செலவு.	32·11	50·00	4·000	கிராமங்களில் மனித ஆற்றலை பயன்படுத்தும் திட்டங்கள்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—I. மாநிலத் திட்டங்கள்—D. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் முந்நிலைப் பள்ளிக் குழந்தைகட்கு உணவளித்தலும், குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.	13·76	13·70	15·40	"கேர்" நிறுவனத்தின் உதவியுடன் முந்நிலைப் பள்ளி குழந்தைகட்கு உணவளித்த குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—II. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—B. சர்வதேச சிறுவர் அவசர நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல் முறை ஊட்டச் சத்துத் திட்டம்.	11·03	16·00	18·00	செயல் முறை ஊட்டச் சத்துத் திட்டம்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப் பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—II. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—C. சம்மேளனங்கள்.	0·26	0·26	0·26	சம்மேளனங்கள்.
37. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய விரிவாக்கப்பணி, உள்ளூர் வளர்ச்சிப் பணிகள்—II. வளர்ச்சித் திட்டங்கள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்—II. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—B. இளைஞர் மன்றங்களுக்கு ஊக்குவிக்கும் மானியம்.	0·001	0·75	0·75	இளைஞர் மன்றங்களுக்கு ஊக்குவிக்கும் மானியம்.

கணக்குத் தலைப்பு.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானியத் திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்)			
50. பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்—1. உதவி மானியங்கள்—C. கிராமச் சாலைகளுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் (i) பேரூராட்சிப் பகுதிகளில் புழுதியற்ற மேற் பரப்புடைய சாலைகள் அமைக்க பாதி மானியம்.	7·00	7·00	7·00	பேரூராட்சிப் பகுதியில் புழுதியற்ற மேற் பரப்புடைய சாலைகள் அமைக்கப்படும் செலவில் பாதி மானியம்
50. பொதுப் பணிகள்—உதவிமானியங்கள்—I உதவி மானியங்கள்—C. கிராமச் சாலைகளுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் (iii) ஊராட்சி ஒன்றியங்களுக்கு புயலிலால் பாதிக்கப்பட்ட சாலை, கட்டிடங்கள் பழுதுபார்க்க சிறப்பு மானியம்.	0·001	6·12	0·001	புயலிலால் பாதிக்கப்பட்ட சாலை முதலியவைகளுக்கு சிறப்பு மானியம.
71. பலவகை—f. உதவி மானியங்கள் உதவித் தொகைகள் முதலியவை—ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சிறப்பு உதவி மானியங்கள்.	1·00	1·00	1·00	ஊராட்சி ஒன்றியக் கணக்குகளில் பற்றுக்குறைய சரிக்கட்ட தனிப் பட்ட மானியங்கள்.
மொத்தம்—VII-A	8,71·29	11,38·83	11,38·15	

விவர அறிக்கை II B.

ஊரக வளர்ச்சியுடன் பிணைந்துள்ள எனைய திட்டங்கள்.

கணக்குத் தலைப்பு.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்தியது) 1971-72.	திருத்த மதிப்பீடு 1971-72.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73.	நிர்வாக முறையில் மானிய திட்டத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
19. பொது நிர்வாகம்—C. தலைமைச் செயலகமும் அத்துடன் இணைந்த அலுவலகங்களும்—J. சிவில் தலைமைச் செயலகம்—X. ஊரக வளர்ச்சி இயக்கம்.	14·00	14·10	13·76	ஊரக வளர்ச்சி இயக்கத்தின் செலவினம்.
19. பொது நிர்வாகம்—C. தலைமைச் செயலகமும் அத்துடன் இணைந்த அலுவலகங்களும்—J. சிவில் தலைமைச் செயலகம்—ZA. ஊராட்சி தேர்தல்கள்.	0·77	2·43	0·36	ஊராட்சித் தேர்தல்களுக்கான செலவினம்.
@ Printed as Appendix IV on pages . . . .

[30th March 1972

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இவைகள் தயாரிக்கப்பட்டு, மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுமா? சென்னையில் டெலிவிஷன் வருவதற்கு அறிகுறி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டுக்கு விரைவில் டெலிவிஷன் அனுமதி தருவதாக மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

Chloride Factory.

* 336 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Chloride Factory in Madurai District; and

(*b*) if so, the details thereof?

குளோரைடு தொழிற்சாலை

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில் குளோரைடு தொழிற்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான அனுமதிக் கடிதம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையைக் கூட்டுத் துறையில் அமைப்பதற்காகத் தனியாக ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் தக்கதோர் இடத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும். இத் திட்டத்திற்கான மதிப்பிட்டுச் செலவு ரூ. 70 லட்சமாகும்.

30th March 1972]

Rubber Factory

* 337 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU M. SANKARALINGAM PILLAI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been received from the people of Kanyakumari District requesting for the establishment of a Rubber Factory in the Public Sector in that District; and

(*b*) if so, the steps taken thereon?

ரப்பர் தொழிற்சாலை

திரு. க. அறிவழகன் (திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுத் துறையில் ஓர் ரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று அம்மாவட்ட மக்களிடமிருந்து முறையீடு வந்ததுண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

UNSTARRED QUESTIONS.

Voters List.

* 12 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of copies of Voters List sold constituency wise during the General Elections, 1971; and

(*b*) the proceeds received on this account?

A.—(*a*) and (*b*)—

A statement * is placed on the Table of the House.

Regional Agricultural Research Station, Aduthurai

* 13 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of posts in the Aduthurai Agricultural Research Station, Thanjavur district?

* Printed as Appendix V on pages . . . .

The details of posts in the Regional Agricultural Research Station, Aduthurai are as below :—

Serial number and designation of post.	*Number of post.*	*Scale of pay.*
		Rs.
1 Crop Specialist ..	1	800—40—1000—50—1250
2 Assistant Agronomist ..	1	600—40—1000
3 Assistant Crop Specialist (Paddy)	1	600—40—1000
4 Assistant Entomologist	1	600—40—1000
5 Assistant Plant Pathologist	1	600—40—1000
6 Assistant Agricultural Chemist	1	600—40—1000
7 Assistant Agricul ural Chemist [Pesticides testing Laboratory]	1	600—40—1000
8 Deputy Agricultural Officers ..	9	375—15—495—20—575—25—650
9 Agricultural Assistants ..	12	200—5—250—10—300
10 Office Superintendent ..	1	350—15—500—20—600
11 Office Assistant	1	250—10—400
12 Junior Assistant	1	200—5—250—10—30
13 Store Keeper—Grade I ..	1	200—5—250—10—300 [plus Special pay
14 Typist	1	200—5—250—10—300 [plus Special pay
15 Laboratory Attenders ..	5	140—3—155—4—175—5—290
16 Last Grade Government Servants	3	130—3—160—4—180—5—195
17 Junior Tractor Driver ..	1	200—5—250—10—300
18 Pump attendant	1	140—3—155—4—175—5—210
19 Provincialised Mazdoors ..	6	As per local market rate fixed by the Collector from tonax to time.
20 Regular Mazdoors and Watchman.	35	Do

MR. CHAIRMAN : Questions are over.

(NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. ANNOUNCEMENTS.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation Bill, 1972 and the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972.

(2) MESSAGES FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Appropriation Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972) and the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

III. GOVERNMENT MOTIONS.

(1) NOMINATION OF FIVE MEMBERS TO SERVE ON THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION OF THE ASSEMBLY.

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister will move the Motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கவலர் அவர்களே, கிழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"1972-73-ம் நிதியாண்டுக்குரிய சட்டப் போவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கிழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது :

1. திரு. கே. அறிவழகன்.
2. புலவர் ஓ. அறிவுடை நம்பி.
3. திரு. எஸ். டி. ஆதித்தன்.
4. திரு. எஸ். ஜெயராம செட்டியார்.
5. திரு. வி. சுவ்வாமூர்த்தி".

[30th March 1972

MR. CHAIRMAN : The question is—

" That this House nominates the following five Members to serve on the Committee on Subordinate Legislation of the Legislative Assembly for the financial year 1972-73—

1. Thiru K. Arivazhagan.
2. Pulavar O. Arivudai Nambi.
3. Thiru S. T. Adityan.
4. Thiru S. Jayarama Reddiar.
5. Thiru V. Isvarmurti ".

The motion was put and carried.

(2) NOMINATION OF FIVE MEMBERS TO SERVE ON THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS OF THE ASSEMELY.

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister will move the motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"1972-73 ஆம் ஆண்டுக்குரிய சட்டப் போவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் :

1. திரு. கே. எஸ். மணி.
2. திரு. டி. கே. பொன்னுவேலு.
3. திரு. ஏ. பி. ஜனர்த்தனம்.
4. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு.
5. திரு. கே. ராஜாராம்".

MR. CHAIRMAN : The question is—

" That the following five Members of the Council be selected to serve on the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1972-73 :—

1. Thiru K. S. Mani.
2. Thiru T. K. Ponnuvelu.
3. Thiru A. P. Janardhanam.

30th March 1972]

4. Thiru R. Krishnaswamy Naidu.
5. Thiru K. Rajaram ".

The motion was put and carried.

(3) NOMINATION OF FIVE MEMBERS TO SERVE ON THE COMMITTEE ON ESTIMATES OF THE ASSEMBLY.

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister will now move the motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"1972-73 ஆம் ஆண்டுக்குரிய சட்டப் போவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :

1. திரு. வி. வெங்கா.
2. திரு. ஜி. பாராங்குசம்.
3. திரு. எம். இராமநாதன்.
4. திரு. ஜி. சுவாமிநாதன்.
5. திரு. என். சுந்தரேசத் தேவர்."

MR. CHAIRMAN : The question is—

" That the following five Members of the Council be selected to serve on the Committee on Estimates of the Legislative Assembly for the year 1972-73—

1. Thiru V. Venga.
2. Thiru G. Parangusam.
3. Thiru M. Ramanathan.
4. Thiru G. Swaminathan.
5. Thiru N. Sundaresa Thevar ".

The motion was put and carried.

(4) CHANGE IN THE ORDER OF BUSINESS.

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister will now move the motion.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 21 (3) விதியின் கீழ், நிகழ்ச்சி நிரலில் உள்ள அரசு சட்ட முன் வடிவுகளின் 1 ஆம் எண் இனத்துக்கு முன்பாக 2 ஆம் எண் இன சட்ட முன் வடிவு, அதாவது, தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு எண் (2) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1972) மன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item No. 2 under Government Bills on the Agenda, that is, the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972), be taken up before item No. 1".

The motion was put and carried.

VI. GOVERNMENT BILLS.

(1) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு (எண் 2) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1972) பரிவுரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

@ Printed as Appendix VI on pages . . . .

THE TAMIL NADU APPROPRIATION BILL, 1972 (L. A. BILL NO. 11 OF 1972)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1972) பரிவுரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Appropriation Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

THIRU G. VASANTHA PAI : Honourable Chairman, Sir, this Government on 3rd January 1970, after a preliminary study of the Treasury and Budget procedures existing in the Government of Tamil Nadu through certain business Consultants, came to the conclusion that there was need or scope for simplifying the remittances and payment procedures, improving the accuracy of basic data, designing a system of reporting actuals against the Budget Heads promptly and frequently highlighting the significant variances and providing a basis for more effective control by means of the Budget, and providing for an important basis for preparation of Budget Estimates. Accordingly, this Government called for a Study Team of the Administrative Staff College of India, Hyderabad, and asked them to undertake a study of the Treasury and Budget procedures. Thereafter, on 17th November 1971, as a sequel to the suggestions made by the Administrative Staff College of India at Hyderabad in its report on Treasury and Budget Procedures, the Government sanctioned in G.O. No. 1125, the establishment of a Central Budget Data Processing Centre at Madras on 2nd February 1972, with a view to modernising the system of budgeting and appropriation control. The data processing system envisaged the receipt of daily statement of transactions with necessary codes from all the Treasuries and Sub-Treasuries in the State. The problems connected with the implementation of the new system were discussed also at the Conference of the Treasury Officers on the 16th and 17th December 1971. Sir, the result of all this processing of data and the implementation of such processing through electronic and the implementation of such processing through electronic computers has caused very great concern not only among the employees of the Accountant-General's Office in Madras and else-

@ Printed as Appendix VII on pages

[Thiru G. Vasantha Pai] [30th March 1972

where in Tamil Nadu and other States but also now, it has been a matter of concern for the Madras Port Trust and the Bank employees, who feel their employment potential will cease to be of any material sizability due to the implementation of these electronic devices in paces where they could well be avoided. Sir, my respectful submission to the Government would be that as early as in 1967, when the Life Insurance Corporation of India wanted to bring electronic computers to the Corporation, there was a furore by the employees of the Life Insurance Corporation and in this House and also the then Honourable the Chief Minister, Dr. C. N. Annadurai gave an assurance in the House as well as elsewhere that the policy of the Government was not to bring in computerisation and thereby cause any alarm to the Clerical staff or Managerial staff employed in several public as well as private sector undertakings and this Government would not go in for computers where human hands could be availed of. Sir, if I remember aright, your Honourable self as well as Ma. Po. Si.—and I was one of the speakers in the Life Insurance Corporation—gave them then the assurance that this Government would see that this would not come to take away the need for human workers and manual workers. Computers will not take their place in a country like India where we have enough manpower. Now the present Data Processing Centre which is envisaged by the Government for budgetary as well as appropriation measures, as a prelude to the Budget and bringing this Data Processing up-to-date, for the purpose of making an actual Budget necessary, involves in it that several hands which are working in the Accountant-General's Office in the Accounts Department will be found to be surplus and they will be either retrenched from their present jobs and found some other suitable employment elsewhere. Sir, this also reduces the employment potential in the Accountant-General's Office because as against 2,000 now working, only 720 will be required for the actual audit and for the purpose of computing this material which comes from the various treasuries and for processing them and 1,200 odd hands would be thrown out of employment. The Accountant-General's Office stands in danger of being reduced in strength and the employment potential in that office would be considerably less. This has been agitating the minds of the employees and we to-day even see a strike and a fast in front of the Accountant-General's Office and a vehement appeal being made to the Chief Minister of the State and the Government to give up this Data Processing

30th March 1972] [Thiru G. Vasantha Pai]

Centre and employment of electronic computers for a matter where human hands can well find a good enough substitute. My submission is that in a country, which is so thickly populated, this idea of importing IBM from America and trying to find suitable substitute for manual labour which is available in large numbers would mean hardship and lack of employment opportunities for several Graduates who will find themselves unable to be absorbed in Offices like that of the Accountant-General. The Government can avoid this especially when we have got enough hands and if the Government find it difficult to cope with the work and if they find that with the employed potential, they are not able to cope with the work, they can employ additional hands for that purpose without importing this IBM Machine. That would be my earnest submission. I request the Government to consider this and give up the idea of having Data Processing System through electronic computers. Sir, we can understand the computers being used in Space Research, in Aeroplanes and in Railways. But I feel that these electronic devices should not be used in processes where human hands are available in large numbers. I would request the Government not to bring in this measure for the purpose of substituting manual work with electronic computer. Sir, a question was asked 'Why not the Government use, instead of having so many Legislators and Ministers, the electronics and get rid of them? This question was put to me by the workers who eke out their livelihood . . . .

THIRU G. SWAMINATHAN: May I know from the hon. Member whether the electronics are elected and whether the computers can be elected instead of Legislators and Ministers?

THIRU G. VASANTHA PAI: Sir, the question posed to me was " why not the work of the Legislators and the Hon. Ministers be done by the computers instead of electing Legislators to the Assembly or Council? " I am not saying that computers can be elected. This was the question posed to me by certain members of the staff of the Accountant-General's Office and Madras Port Trust Office, who came to see me. They asked me, 'How would you feel if your work were done by a Computer? ' That was the question posed to me. I am only mentioned this to indicate the strength of the feeling that exists among the persons, who came to represent their case in this behalf. I am referring to this only for this reason, Sir. When we have got enough labour potential, it is not necessary. In America, even for carrying baggages

[Thiru G. Vasantha Pai] [30th March 1972

from Airport Terminal to the bus, they charge 5 dollars, because there is dearth of human hands. But in a country with a population of 150 million, computers are not necessary for the purpose of data processing, for the purpose of bringing up-to-date the accounts of the Treasuries, etc., which can easily be done by human hands. The hon. Member, Thiru Swaminathan misunderstood me when I referred to the question posed by the workers. In fact, this question was posed to me by the employees of the Accountant-General's Office as well as Madras Port Trust who were really feeling that there was imminent danger to their employment, if this was introduced in their departments. I have said enough on this point. I would make a fervent appeal to the Government that if the object of introducing this Data processing System is to make the work more efficient and more up-to-date, then this could be achieved by employing more employees and the work could be brought more up-to-date by giving some incentive to the employees. Now eight months' Estimates are prepared and eight months' actuals are brought before the Legislature. If the Government feel that eleven months' actuals should be brought before the Legislature, this could be done by employing a larger number of clerks and also departmental people for that purpose instead of bringing computers. Sir, I think this was my main object of my requesting you to permit me to speak on this occasion. If I have carried conviction to the Ministry that in the present context of things when we have a country which is largely over-populated nothing should be done which would affect the employment potential and avenues open to human agencies. I think I have done.

Thank you.

*திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1972-73-க்கான நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது பொது விவாதத்தில் சொல்ல இயலாத சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காவல் துறைக்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிறப்பாக சேவை செய்யக் கூடிய துறைக்கு மேலும் பணம் ஒதுக்கினாலும் தகும் என்று கருதுகிறேன். அவர்களின் பணி கஷ்டமான பணி, பொறுப்பான பணி. அவர்கள் பணியைப் பொறுத்தே, சமுதாயத்தில் நேர்மையும் நீதியும் மக்கள் பயமின்றி வாழ்வதும் இருக்கிறது. அவர்களது சேவையைப் பாராட்டி ஓரிரு வார்த்தைகள் மாத்திரம் கூற விரும்புகிறேன். இராமேஸ்வரம் தீவில் ஒரு சிறிய காவல் நிலையம் இருக்கிறது. அதில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் சில காவலரும் மாத்திரம் இருக்கிறார்கள். இராமேஸ்வரம் ஒரு முக்கியமான பகுதியாகும். நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து யாத்திரிகர்கள் வருகிறார்கள். அந்த யாத்திரிகர்கள் அந்த வட்டார மொழி

30th March 1972] [திரு. எம். ராஜா அய்யர்]

தெரியாதவர்கள். அந்த ஊரை அறியாதவர்கள். ஏதோ இராமேஸ்வரம் என்றால், அங்கே கோவில் இருக்கிறது, அங்கே சென்றால் நம் பாவம் எல்லாம் விமோசனம் ஆகிவிடும் என்ற ஒரே எண்ணத்தில் வருகிறார்கள். அவர்கள் ரயிலிலிருந்து இறங்கியவுடன் அவர்கள் மேல் பாய்ந்து அவர்களுக்குத் தொல்லை கொடுத்து இந்த ஊருக்கு ஏன் வந்தோம் என்று வருத்தப்படுவதற்கான வகையில் நடந்துகொள்ள அங்கே கூட்டங்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் அவர்களுக்குத் திட்டமிட்டு இன்னல்களை விளைவித்து அங்கே வாழ்ந்து வருகின்றனர். எங்கள் ஊரைப்பற்றி இப்படிப் பேச வருத்தப் படுகிறேன். ஒரு யாத்திரிகரை வரவேற்று ஒரு நண்பனைத் திருப்பி அனுப்பு என்பது கோஷம். அந்த வாசகத்திற்கு நேர்மாறாக அங்கே ஒரு நண்பனை வரவேற்கிறோம். ஒரு விரோதியைத்தான் திருப்பி அனுப்புகிறோம். ஏன் இந்த ஊருக்கு வந்தோம் என்று வருத்தப்பட்டுச் செல்லுகிறார்கள். அங்கே காவல் புரிவதற்கு மேலும் கான்ஸ்டபிள்ஸ் தேவை என்று கருதுகிறேன். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஒரு சில காவலர்கள் மட்டும் போதாது. அதில் ஒரு வேடிக்கை. அங்கே வருகிறவர்கள் எல்லாம் கோவிலை உத்தேசித்து வருகிறார்கள். அங்கே கோவிலில் ஒரு தலைமைக் காவலரும் நாலு கான்ஸ்டபிள்களும் இருக்கிறார்கள். இந்த ஐவருடைய சம்பளமும் கோவில் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. இது கோவிலின் இன்றியமையாத பணி என்று கருதுவதற்கு இல்லை. அங்கே அமைதி காப்பதும் யாத்திரிகர்களைப் பாதுகாப்பதும், பொருள்கள் பத்திரமாக இருப்பதும் அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். அது நமது அரசின் கடமையே தவிர; காவலர்களின் சம்பளம் கோவில் சொத்திலிருந்து ஏன் கொடுக்க வேண்டும் என்று புரியவில்லை. அவர்கள் சம்பளம் மாதம் 500 ரூபாய் தானே என்று முதலில் கோவில் நிர்வாகம் ஏற்றுக்கொண்டு விட்டது. இப்போது சம்பளம் திருத்தியமைக்கப்பட்ட பிறகு, மாதத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆண்டுதோறும் 24 ஆயிரம் ரூபாய் காவல் துறையினருக்கு இராமேஸ்வரம் தேவஸ்தானம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பணத்தை அரசு ஏற்றுக்கொள்ளுவதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தக் கோவிலிலேயே போலீஸ் அவுட்போஸ்ட் ஒன்று வைக்க வேண்டும். மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் ஒரு புற நகர் காவல் நிலையம் இருக்கிறது. மதுரைக்கு வருகின்ற யாத்திரிகர்கள் உல்லாசப் பயணிகள் கோவிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு, நல்ல நினைவோடு மேலும் மக்கள் இங்கு வர வேண்டுமென்று திரும்பிச் செல்லுகிறார்கள். அந்த அளவு காவலரும் பணி புரிகிறார்கள். எப்படி மதுரைக் கோவிலில் ஒரு அவுட்போஸ்டை அமைத்திருக்கிறோமோ, அந்த மாதிரி இராமேஸ்வரம் கோவிலிலும் ஒரு அவுட்போஸ்டை அமைத்துத் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது அந்த தேவஸ்தானத்தின்

பொறுப்பாக இருக்கலாகாது என்பதை நான் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, இன்று காலை என்னைச் சந்தித்த ஒரு அங்கஹீனரைப் பொறுத்த ஒரு விஷயம். அவர் இரண்டு கால்களும் இல்லாதவர்; செயற்கைக் கால்களை உடையவர். மரக் கால்களைப் பொறுத்திக்கொண்டவர். அவர் என்னுடைய சுற்றத்தாரும் கூட. அவர் இன்று காலை மிகவும் கஷ்டத்துடன் என்னை வந்தடைந்தார். நாளையுடன் அவர் பல்லவா பஸ்களில் ஆல்பத்திரிக்குச செல்லக்கூடிய 'ஃப்ரீ பாஸ்' என்று அனுமதி முடிவடைகின்றது, இன்னும் புதுப்பிக்கப்படவில்லை என்று கூறினார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துக் கூறும்போது, ஏதோ நிர்வாக மாற்றத்தினால் சிறிது காலதாமதம் ஆகும் என்று சொன்னார். நமக்கே இன்று காலைதான் அனுமதி வந்திருக்கிறது. 'நீங்கள் சோழா டிரான்ஸ்போர்ட் கார்பொரேஷனில் செல்லலாம்' என்று இன்று காலையில்தான் சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நமக்கே வந்திருக்கிறது. இந்தப் பல்லவா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் பல நாட்களாகப் போய்க்கொண்டிருக்கிறோம். அது சரியான செயல் அல்ல என்பது பின்னர்தான் தெரிகிறது. இரண்டு மாதங்கள் கழித்து, "நீங்கள் இந்த பல்லவா டிரான்ஸ்போர்ட்டில் செல்லலாம்; உங்களை நாங்கள் வரவேற்கிறோம்" என்று அவர்களிடமிருந்து கடிதம் வந்தது. முன்பு இருந்தது அரசுப் போக்குவரத்து டிபார்ட்மென்ட்டிலிருந்து வந்த "ஃப்ரீ பாஸ்" ஆகும். அதை வைத்துக்கொண்டு பல்லவா டிரான்ஸ்போர்ட்டில் போய்க்கொண்டு வந்தோம். இந்தக் கடிதம் வந்ததற்குப் பிறகுதான் நாம் செய்தது சரியல்ல என்று நமக்கே புரிந்தது. ஆகையினால் நமக்கே இன்றுதான் அனுமதி வரும்போது அங்கஹீனம் உடையவருக்கு நாளைக்குள் சென்றுவிடும் என்று சொல்வதற்கில்லை. இந்தப் புதிய கார்ப்பரேஷன் துரிதமாகக் கவனிக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். ரயில்வேயில் இப்படிக் கால்களை இழந்தவர்களுக்கு இந்த மாதிரி "ஃப்ரீ பாஸ்" ரயில்வே சிப்பந்திகளுக்குக் கொடுத்து அவர்களை அழைத்துக் கொண்டுபோவதற்கும் "ஃப்ரீ பாஸ்" கொடுக்கிறார்கள். ஏனென்றால் இந்த அங்கஹீனமாக இருப்பவர்கள் பலர் தாங்களாக ஏறிவர முடியாது. அவர்களுக்குக் கூட உதவியாக 'எஸ்கார்ட்' ஒத்தாசை யாக இருந்தால்தான், அவர்கள் வேறு இடங்களுக்குத் தனியே கொண்டு செல்ல முடியும். ஆகையினால் அந்த எண்ணத்தையும் இந்த பல்லவா, பாண்டியா, சேரா, சோழா டிரான்ஸ்போர்ட்களிலும் யோசிக்க வேண்டுமென்று கருதுகிறேன். அவர்களுக்காக இப்படி இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கு தனித மாக பாஸ்கள் வழங்கப்பட வேண்டும். நானே அந்த "பாஸ்" விலாவதி யாகின்றபடியால், வேகமாகக் கொடுக்க வேண்டும். இயலுமேயானால் அவர் களுக்கு எஸ்கார்ட்டும் ஃப்ரீயாகச் செல்லலாம் என்று இந்த பல்லவா டிரான்ஸ்

போர்ட் செல்லுமேயானால், அது நல்ல அனுதாபத்தோடு நம்முடைய வேலையை ஆரம்பித்தாகும் என்று கருதுகிறேன்;

கல்வியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். அன்று நான் பேசின பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1-வது, 2-வது, 3-வது வகுப்புகளுக்கு நம்முடைய தமிழ் நாடு பாடபுத்தக வெளியீட்டார்கள் வெளியிட்டிருக்கக் கூடிய அந்த அழகான புத்தகங்களைக் காண்பித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் டில்லியில் அந்தப் புத்தகங்களைப் பார்த்ததாகவும் அங்கு நம்முடைய புகழ் பரவி நிற்கின்றது என்றும் பெருமையோடு எடுத்துக் கூறினார்கள். பெருமைப்படத்தக்க அளவில் சில புத்தகங்களைப்பற்றி நாம் சொல்லுவது வழக்கம். இங்கிலாந்திலே பாருங்கள் என்ன அழகாக வண்ணப்படங்கள் போட்டு நேர்த்தியாக அச்சடித்து சிறு குழந்தைகளும் எடுத்துப் படிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று. நம்முடைய புத்தகங்களையெல்லாம் குழந்தைகள் எடுத்துக் கிழிக்குமே தவிர, படித்துக் கிழிக்காது என்று நாம் வேடிக்கையாகச் சொல்வது வழக்கம். இப்பொழுது வெளி வந்திருக்கக்கூடிய புத்தகங்களைப் பார்க்கும்போது, மிக அழகான புத்தகங்களாக இருக்கின்றன. அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதைத் தொடர்ந்து பல வழிகளில் அம்மாதிரியான புத்தகங்கள் வரும் என்று கருதுகிறேன். இந்தப் புத்தகங்களை எழுதுவதோடு மட்டும், அதை அச்சடித்து வெளியிடுவதோடு மட்டும் அந்தக் கழகத்தின் பணி முடிந்து விடாது என்று கருதுகிறேன். அது அதனுடைய பணியில் இரண்டு பாகம் தானே தவிர, மூன்றாவது முக்கியமான பாகமான அந்தப் புத்தகங்களை வினியோகிக்க வேண்டியதும் அதனுடைய பொறுப்பாகும். சென்னையில் இதை நேரிடையாக வினியோகிக்கிறோம். ஆனால் பிற இடங்களில், மாவட்டங்களில், 24 வளர்ச்சி மாவட்டங்களில் ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தலைமை விற்பனையாளரை 'டென்டர்' மூலமாகத் தேர்ந்தெடுத்து அவருக்கு மொத்தமாகக் கொடுத்து அவர் மூலமாகச் சில்லரை வியாபாரிகளுக்கு அனுப்புகிறோம். இந்த முறை உடனே கைவிடப்பட வேண்டும். சென்னைக்கு எது நல்லதோ அதுதான் திருநெல்வேலிக்கும், மதுரைக்கும், இராமநாதபுரத்திற்கும் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னைக்கு நாம் எப்படி நேரிடையாக வினியோகிக்கிறோமோ அதே மாதிரியாகப் பிற நகரங்களுக்கும் மக்கள் விரும்புகின்ற வகையில் சில்லரையில் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். அந்தப் புத்தகங்களைப் பிரசுரிப்பது மாத்திரம் நம் கடமையல்ல; அதை வினியோகிப்பதும் நம் கடமை. ஆகையினால் பெரிய தொரு சென்ட்ரல் டிப்போ ஒன்று ஆரம்பிக்க வேண்டும். இந்தப் புத்தகங்களை யெல்லாம் அவர்கள் ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு, யார் யார் பணம் கொடுக் கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நேரடியாகக் கொடுத்துவிட வேண்டும். இந்தப் புத்தகங்களையெல்லாம் தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளில் இருக்கக் கூடிய எல்லா வியாபாரிகளிடமும், கடைத்தெருக்களிலும், கடைகளிலும் கிடைக்கும்

3 p.m.

[திரு. எம். ராஜா அய்யர்] [30th March 1972

பொறுப்பாக இருக்கலாகாது என்பதை நான் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, இன்று காலை என்னைச் சந்தித்த ஒரு அங்கஹீனரைப் பொறுத்த ஒரு விஷயம். அவர் இரண்டு கால்களும் இல்லாதவர்; செயற்கைக் கால்களை உடையவர். மரக் கால்களைப் பொறுத்திக்கொண்டவர். அவர் என்னுடைய சுற்றத்தாரும் கூட. அவர் இன்று காலை மிகவும் கஷ்டத்துடன் என்னை வந்தடைந்தார். நாளையுடன் அவர் பல்லவா பஸ்களில் ஆஸ்பத்திரிக்குச் செல்லக்கூடிய 'ஃப்ரீ பாஸ்' எல்லை அனுமதி முடிவடைகின்றது, இன்னும் புதுப்பிக்கப்படவில்லை என்று கூறினார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துக் கூறும்போது, ஏதோ நிர்வாக மாற்றத்தினால் சிறிது காலதாமதம் ஆகும் என்று சொன்னார். நமக்கே இன்று காலைதான் அனுமதி வந்திருக்கிறது. 'நீங்கள் சோழா டிரான்ஸ்போர்ட் கார்பொரேஷனில் செல்லலாம்' என்று இன்று காலையில்தான் சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நமக்கே வந்திருக்கிறது. இந்தப் பல்லவா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் பல நாட்களாகப் போய்க்கொண்டிருக்கிறோம். அது சரியான செயல் அல்ல என்பது பின்னர்தான் தெரிகிறது. இரண்டு மாதங்கள் கழித்து, "நீங்கள் இந்த பல்லவா டிரான்ஸ்போர்ட்டில் செல்லலாம்; உங்களை நாங்கள் வரவேற்கிறோம்" என்று அவர்களிடமிருந்து கடிதம் வந்தது. முன்பு இருந்தது அரசுப் போக்குவரத்து டிபார்ட்மென்ட்டிலிருந்து வந்த "ஃப்ரீ பாஸ்" ஆகும். அதை வைத்துக்கொண்டு பல்லவா டிரான்ஸ்போர்ட்டில் போய்க்கொண்டு வந்தோம். இந்தக் கடிதம் வந்ததற்குப் பிறகுதான் நாம் செய்தது சரியல்ல என்று நமக்கே புரிந்தது. ஆகையினால் நமக்கே இன்றுதான் அனுமதி வரும்போது அங்கஹீனம் உடையவருக்கு நாமாக்குள் சென்றுவிடும் என்று சொல்வதற்கில்லை. இந்தப் புதிய கார்ப்பரேஷன் துரிதமாகக் கவனிக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். ரயில்வேயில் இப்படிக் கால்களை இழந்தவர்களுக்கு இந்த மாதிரி "ஃப்ரீ பாஸ்" ரயில்வே சிப்பந்திகளுக்குக் கொடுத்து அவர்களை அழைத்துக் கொண்டுபோவதற்கும் "ஃப்ரீ பாஸ்" கொடுக்கிறார்கள். ஏனென்றால் இந்த அங்கஹீனமாக இருப்பவர்கள் பலர் தாங்களாக ஏறிவர முடியாது. அவர்களுக்குக் கூட உதவியாக 'எஸ்கார்ட்' ஒத்தாசை யாக இருந்தால்தான், அவர்கள் வேறு இடங்களுக்குத் தனியே தொண்டு செல்ல முடியும். ஆகையினால் அந்த எண்ணத்தையும் இந்த பல்லவா, பாண்டியா, சேரா, சோழா டிரான்ஸ்போர்ட்களிலும் யோசிக்க வேண்டுமென்று கருதுகிறேன். அவர்களுக்காக இப்படி இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கு தனித மாக பாஸ்கள் வழங்கப்பட வேண்டும். நானே அந்த "பாஸ்" வாலாஜி பாகின்றபடியால், வேகமாகக் கொடுக்க வேண்டும். இயலுமேயானால் அவர் களுக்கு எஸ்கார்ட்டும் ஃப்ரீயாகச் செல்லலாம் என்று இந்த பல்லவா டிரான்ஸ்

30th March 1972] [திரு. எம். ராஜா அய்யர்]

போர்ட் செல்லுமேயானால், அது நல்ல அனுதாபத்தோடு நம்முடைய வேலையை ஆரம்பித்ததாகும் என்று கருதுகிறேன்;

கல்வியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். அன்று நான் பேசின பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1-வது, 2-வது, 3-வது வகுப்புகளுக்கு நம்முடைய தமிழ் நாடு பாடபுத்தக வெளியீட்டார்கள் வெளியிட்டிருக்கக் கூடிய அந்த அழகான புத்தகங்களைக் காண்பித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்ரீ. சுவாமிநாதன் அவர்கள் டில்லியில் அந்தப் புத்தகங்களைப் பார்த்ததாகவும் அங்கு நம்முடைய புகழ் பரவி நிற்கின்றது என்றும் பெருமையோடு எடுத்துக் கூறினார்கள். பெருமைப்படத்தக்க அளவில் சில புத்தகங்களைப்பற்றி நாம் சொல்லுவது வழக்கம். இங்கிலாந்திலே பாருங்கள் என்ன அழகாக வண்ணப்படங்கள் போட்டு நேர்த்தியாக அச்சடித்து சிறு குழந்தைகளும் எடுத்துப் படிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று. நம்முடைய புத்தகங்களையெல்லாம் குழந்தைகள் எடுத்துக் கிழிக்குமே தவிர, படித்துக் கிழிக்காது என்று நாம் வேடிக்கையாகச் சொல்வது வழக்கம். இப்பொழுது வெளி வந்திருக்கக்கூடிய புத்தகங்களைப் பார்க்கும்போது, மிக அழகான புத்தகங்களாக இருக்கின்றன. அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதைத் தொடர்ந்து பல வழிகளில் அம்மாதிரியான புத்தகங்கள் வரும் என்று கருதுகிறேன். இந்தப் புத்தகங்களை எழுதுவதோடு மட்டும், அதை அச்சடித்து வெளியிடுவதோடு மட்டும் அந்தக் கழகத்தின் பணி முடிந்து விடாது என்று கருதுகிறேன். அது அதனுடைய பணியில் இரண்டு பாகம் தானே தவிர, மூன்றாவது முக்கியமான பாகமான அந்தப் புத்தகங்களை வினியோகிக்க வேண்டியதும் அதனுடைய பொறுப்பாகும். சென்னையில் இதை நேரிடையாக வினியோகிக்கிறோம். ஆனால் பிற இடங்களில், மாவட்டங்களில், 24 வளர்ச்சி மாவட்டங்களில் ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தலைமை விற்பனையாளரை 'டென்டர்' மூலமாகத் தேர்ந் தெடுத்து அவருக்கு மொத்தமாகக் கொடுத்து அவர் மூலமாகச் சில்லரை வியாபாரிகளுக்கு அனுப்புகிறோம். இந்த முறை உடனே கைவிடப்பட வேண்டும். சென்னைக்கு எது நல்லதோ அதுதான் திருநெல்வேலிக்கும், மதுரைக்கும், இராம நாதபுரத்திற்கும் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னைக்கு நாம் எப்படி நேரிடையாக வினியோகிக்கிறோமோ அதே மாதிரியாகப் பிற நகரங்களுக்கும் மக்கள் விரும்புகின்ற வகையில் சில்லரையில் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். அந்தப் புத்தகங்களைப் பிரசுரிப்பது மாத்திரம் நம் கடமையல்ல; அதை வினியோகிப்பதும் நம் கடமை. ஆகையினால் பெரிய தொரு சென்ட்ரல் டிப்போ ஒன்று ஆரம்பிக்க வேண்டும். இந்தப் புத்தகங்களை யெல்லாம் அவர்கள் ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு, யார் யார் பணம் கொடுக் கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நேரடியாகக் கொடுத்துவிட வேண்டும். இந்தப் புத்தகங்களையெல்லாம் தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளில் இருக்கக் கூடிய எல்லா வியாபாரிகளிடமும், கடைத்தெருக்களிலும், கடைகளிலும் கிடைக்கும்

4-30 p.m.

[திரு. எம். ராஜா அய்யர்] [30th March 1972

படியாக, குழந்தைகள் எங்கே சென்றாலும் தமிழ் நாடு பாடப்புத்தக வெளியீட்டுக் கழகப் புத்தகங்கள் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைமை ஏற்பட வேண்டும். நடுவில் இருக்கக் கூடிய கான்ட்ராக்டர்ஸ், ஹோல்சேலர்ஸ், ஆகியவர்களையெல்லாம் ஒழித்துவிட வேண்டும். அப்பொழுது தான் நாம் நம் புத்தகங்களின் விநியோகம் வேகமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றுமொரு தீர்க்கப்படாத ஆசிரியர் குறையை இன்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றி நான் முன் குறிப்பிட இயலவில்லை. நம் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றில் என்ஜினியரிங் பாடத் திட்டம் அமுலில் இருக்கிறது. என்ஜினியரிங் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அதற்கு போதகர்களாக சீனியர் மெக்கானிக்குகள் இருக்கிறார்கள். இந்த என்ஜினியரிங் பாடத் திட்டத்தைப் புகுத்தும்போது, சீனியர் மெக்கானிக்காக இருப்பதற்கு "ஃபர்ஸ்ட் ஃபார்ம்" தகுதி இருக்க வேண்டும். மேலும், ஐந்து வருடங்கள் தொழிலாளியாக இருந்திருக்க வேண்டுமென்று சொன்னோம். 25 வருடங்களுக்கு முன்னால் இந்தத் துறையானது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட போது வைத்த தகுதியாகும் அது. இப்பொழுது இந்தத் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படித்தவர்கள் இருக்கிறார்கள். நம் உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாம் அதை ஆரம்பித்த பிறகு, தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் டெக்னிக்கல் இன்ஸ்ட்டியூட் மூலமுடுக்குகளில் எல்லாம் ஆரம்பித்தோம். இரண்டாண்டுகள் பயிற்சி பெற்று டிராஃப்ட்ஸ்மேன் சர்டிபிகேட்டுடன் வெளியே வருகிறார்கள். அவர்களை நியமிப்பதென்றால், அவர்களைத் தகுதியற்றவர்கள் என்று குறைகூறி, ஆண்டு தோறும் கடைசி நாளில், அதாவது மார்ச் 31-ந் தேதி, அவர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான யோக்கியதையிலிருந்து விதிவிலக்கு அதாவது Exemption from the prescribed qualification—வேண்டிய தகுதிகளிலிருந்து எக்செம்ப்ஷன் கோர வேண்டியதாக இருக்கிறது. இந்த அவல நிலை சென்ற 14 ஆண்டுகளாகச் சில ஆசிரியர்களுக்குத் திரும்பத் திரும்ப ஏற்படுகிறது. சில சீனியர் மெக்கானிக்குகள் அவர்கள் பெறும் சம்பள விகிதத்தில் உச்ச கட்டத்தை அடைய முடியாமல், எக்செம்ப்ஷனைப் பெற்று ஆரம்பச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல், அந்தத் துறையில் வைத்துக்கொள்வதற்கும் இலாகாவினுடைய எக்செம்ப்ஷனைப் பெற்றுத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. அது நேர்மைக்கும் நீதிக்கும் பொருந்தாது. இந்த நிலை சென்ற பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. இருந்தும் இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. இந்தத் துறை 20 ஆண்டுகளுக்கு முன்னால் வரும்போது, "ஃபர்ஸ்ட் ஃபார்ம்" போதும் என்று சொன்னோம். ஒர்க்ஷாப்பில் ஐந்தாண்டு காலம் மெஷினைத் திருப்பியிருந்தால் போதும் என்று சொன்னோம். இப்பொழுது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் "டிராஃப்ட்ஸ்மேன்" சர்டிபிகேட்டுடன்

30th March 1972] [திரு. எம். ராஜா அய்யர்]

வெளியே வருகிறார்கள். இவை போதுமான தகுதி என்று ஏற்றுக்கொள்வதில் என் காலதாமதம் இன்னும் இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு இந்தத் தகுதி ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதி என்று வேகமாக உத்திரவிட்டு, அடுத்த ஆண்டிலாவது அவர்கள் ஊதிய உயர்வு பெறுவதற்கு அரசு சிக்கிரமாக ஆணையிட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். தனியார் பள்ளிகளின் நிதியையெல்லாம் 'தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனில்' தான் போட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதனுடைய நோக்கம், தனியார் பள்ளிகளின் நிதியெல்லாம் நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு உபயோகப்பட வேண்டுமென்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இது போற்றத்தக்க நல்ல நோக்கம்தான். இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கக்கூடிய பள்ளிகளில் ஒரு இலட்சம் ரூபாய் முதல் நிதி திரட்ட வேண்டியிருக்கிறது. பழைய பள்ளிகளில் 35 ஆயிரம், 70 ஆயிரம் ரூபாய் என்று நிதி திரட்ட வேண்டியிருக்கிறது. அரசாங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி இருக்கிறது. அதில் ஏன் இப்பணத்தைப் போடக்கூடாது? அதில் போட்டால் கூட ஒரு சதவீதம், 1½ சதவீதம் அந்தப் பள்ளிக்கு வட்டி அதிகமாக கிடைக்கும். ஒரு இலட்சம் ரூபாயைத் தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட்டில் போட்டால் மாக்ஸிமம் ரேட் ஆஃப் இன்டரஸ்ட் Maximum rate of interest `7¼% தான் கிடைக்க முடியும். அங்கு 7,250 ரூபாய் வட்டியாகப் பெற முடிகிறது. ஆனால் கூட்டுறவு மத்திய வங்கியில் 8¼% கொடுக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் அதிக வட்டியாகக் கிடைக்கும். பள்ளிச் செலவிற்கு அதிகப் பணம் கிடைக்கும். அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக அரசு செலவழிக்கும் பணமானது குறையும். மற்றத் துறைகளிலெல்லாம் கூட்டுறவு வங்கியில் பணம் போடும்போது, ஏன் இந்தத் துறையில் மட்டும் தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனில்தான் போட வேண்டுமென்ற கட்டுப்பாடு? அந்தக் கட்டுப் பாட்டைக் கொஞ்சம் தளர்த்தி, கூட்டுறவு வங்கிகளிலும் போடலாம் என்று அரசு ஏற்றுக்கொண்டு ஒரு உத்திரவைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மீசோதா மீது சென்னை நகரத்தைப்பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்த ஆண்டு ஜனவரித் திங்களில் நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் சென்னை நகரத்தைச் சுத்தப்படுத்துகிற ஒரு இயக்கத்தைத் துவக்கி ஒரு இடத்திலே அமைச்சரே கூட சுத்தப்படுத்தினார்கள். பத்திரிகைகளிலே பார்த்தோம். அப்படி அமைச்சரே இந்த

[திரு. ஜி. சுவாமிநாதன்] [30th March 1972

நகரத்தைச் சுத்தப்படுத்துகிற வகையில் காரியத்தை ஆரம்பித்திருப்பதால், சென்னை நகரம் மிக உயர்ந்த அளவில் சுத்தமானதாக, தூய்மையானதாக ஆகி விடும் என்று எண்ணிய பல்லாயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன். ஆனால், கடந்த நான்கைந்து மாதங்களில்—அதுவும் இந்த இயக்கம் ஆரம்பித்த பிறகு, சென்னை நகரத்தில் எங்கே பார்த்தாலும், கொசுத்தொல்லை அதிகமாக இருப்பதைப் பார்க்கிறோம். அதுவும், குறிப்பாக, டி.நகர், பழைய மாம்பலம் போன்ற பகுதிகளில், இரவில் கீபேனைப் போட்டுப் படுத்தாலும் கூட கொசுக்களை ஓட்ட முடியாதபடி, ஒவ்வொரு கொசுவும் பெரிய அளவில் வளர்ந்திருப்பதைப் பலர் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். புரசைவாக்கம் பகுதி கொசு இல்லாத பகுதி என்று சொல்வார்கள். அந்தப் பகுதிகளில் எல்லாம் கூட கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதுவும் இந்த இயக்கம் ஆரம்பித்த பிறகு, மிகவும் அதிகமாக இருக்கிறது, சென்னை அசுத்தமாக இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

சென்னையிலுள்ள ரோடுகளை எடுத்துக்கொண்டால் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. ரோடுகளை ஒருவர் மாற்றி ஒருவர் தோண்டிக் கொண்டே இருக்கிறார்கள். இதைப்பற்றிப் பேரவையில்கூட சொன்னார்கள் என்று நினைக்கிறேன். ரோடைச் செப்பனிடுகிறார்கள், ஆனால் ஒரு மாதம் கழித்துப் பார்த்தால் பல இடங்களில் தோண்டிவிடுகிறார்கள். எக்மோரில் அசோக் ஹோட்டலுக்குப் போகிற ரோடு எனக்குத் தெரிந்து 6, 7 மாதமாகப் போட்டார்கள். நல்ல முறையில் இருந்தது. ஆனால் இரண்டு மாதம் கழித்துப் பார்க்கிறபோது, பல இடங்களில் தோண்டியிருக்கிறார்கள். தோண்டிஞல், அந்த இடத்தைச் சரியான முறையில் மூடுவதில்லை. அதே மாதிரி புரசவாக்கத்தில் ஒரு ரோடு. மந்திரி அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர் அந்த வழியாகத் தான் அவருடைய வீட்டிற்குப் போகிறார். இதையெல்லாம் நகரம் சுத்தமாக இல்லையென்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது. ஜார்ஜ் டவுனை எடுத்துக்கொண்டாலும் கூட, அந்தப் பக்கம் போகிறபோது காரில் செல்ல முடியாத நிலையில் மாடுகள் தொல்லை அதிகமாக இருக்கிறது. சாபீபத்தில் கேள்விப்பட்டேன், நகரத்தில் சுற்றித்திரிகிற மாடுகளை நகரத்திற்கப்பால் அனுப்ப வேண்டுமென்று. இப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூட தெரிவித்திருக்கிறார்கள். அப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால், நகரம் சுத்தமாகக் காட்சியளிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மிக முக்கியமான இன்னென்று, நகரத்திலுள்ள காற்றின் தூய்மை கெட்டுக் கொண்டே வருகிறது என்ற பிரச்னை. இது பல மாதமாக, பல்லாண்டுகளாகக் கூட பேரவையிலும் கூட பேசப்பட்டுவரக் கூடிய பிரச்னையாகும். சென்னையில்

30th March 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

நகரின் தூய்மை கெட்டு விட்டது என்று சொல்கிறபோது, மற்ற மற்ற நகரங்களைக் குறித்து—கல்கத்தாவைப் போல, பம்பாயைப் போல—அங்கே உள்ள சுற்றுச்சூழ்நிலைமைகளைப்பற்றிச் சொல்லும்போது, அந்த நகரங்களின் தரத்தை விட இது அவ்வளவு கெட்டிருக்காது என்ற நினைப்பு எனக்கு ஏற்பட்டதுண்டு. ஆனால், இதுபற்றி ஆராய்ச்சி நடத்திய நிபுணர் குழுவினர் இங்கு வந்து ஆராய்ச்சி செய்து, சென்னையிலே நகரின் தூய்மை எவ்வளவு கெட்டிருக்கிறது என்று கூறியிருப்பது அதிர்ச்சியை யளிக்கிறது. சென்னையிலே அனல் மின்சார நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன. ஒன்று எண்ணூரில், மற்றொன்று இன்னொரு இடத்தில். இவைகள் காற்றின் தூய்மையைக் கெடுக்கின்றன. அதைத் தவிர நகரில் ஓடுகின்ற பல்கள். 50 ஆயிரம் கார்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று போக்குவரத்து அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அவற்றை நல்ல முறையில் இயக்க முடியும் என்றும் கூட சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த பஸ்களிலிருந்து வருகின்ற புகை மட்டும் எந்த அளவுக்கு காற்றின் தூய்மையைக் கெடுக்கிறது என்று பார்க்கிறபோது, ஒரு திடுக்கிடக்கூடிய நிலைமையை உணருகிறோம். உலகத்திலுள்ள நகரங்களிலுள்ள அசுத்தக் காற்றின் அளவைப் பார்க்கும்போது, காற்றின் அசுத்தத்தின் அளவைப் பார்க்கும்போது, சிகாகோ, நியூயார்க் போன்ற நகரங்களை விட ஐந்து மடங்கு காற்றின் அசுத்தம் அதிகமாக இருக்கிறது என்ற தீர்ப்பை அவர்கள் அளித்திருப்பதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

எந்த அளவுக்கு காற்றின் தூய்மை கெட்டு வந்திருக்கிறது என்று பார்க்கிற போது, உடனடியாகச் சரிப் படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்காக குழு ஒன்று போட்டிருக்கிறோம் என்று கூட சொன்னார்கள். எனவே தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், 25 லட்சம் மக்கள் இங்கே வாழ்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த 25 லட்சம் மக்களில் கிட்டத்தட்ட 43% அல்லது 10 லட்சம் மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குடிசைப் பகுதிகளைச் சென்று பார்க்கும்போது, அங்கெல்லாம் கழிவிடங்கள்—லெட்ரின்கள் கூட இல்லாத நிலையையும் காட்டியிருக்கிறார்கள். 4.40 p.m.

அது மட்டுமல்ல. சென்னையிலுள்ள வீடுகளைப் பார்க்கும்போது, 25 லட்சம் பேர்களுக்கு 1½ லட்சம் வீடுகள்தான் இருக்கின்றன. கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர்கள் ப்ளாட்பாரங்களில், தெருவோரங்களில் தூங்கவேண்டிய நிலைமை இருக்கிறது.

சென்னை நகரத்தைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் காட்டியிருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் விரைவில் அமுல்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [30th March 1972

படுத்தப்பட வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் இன்னும் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே போகப்படுமானால், 1991-ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள மக்கள் தொகை 50 லட்சமாக ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். இத்திட்டம் செயல்படவில்லையானால், டெல்லியிலேயெல்லாம் இருப்பதைப் போல, "ரிவால்விங் ஃபண்ட்" என்று வைத்து அந்த அடிப்படையில் காரியங்களைச் செய்யலாம். அந்த அடிப்படையில் தான் டெல்லி நகரம் ரூ. 5 கோடி முதலீடு போட்டு ஆரம்பித்து, படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய தினம் உலகத்திலேயே ஒரு பெரிய நகரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. எனவே புறநகர்த் திட்டம் இல்லையென்றால் இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புறநகர்த் திட்டம் உருவானதால் தான், பாம்பே போன்ற நகரங்கள் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இப்படி இல்லாவிட்டால் டவுன் பிளானிங் செக்ஷன், வீட்டு வசதி வாரியம் என்று பல நிறுவனங்கள் ஏற்பட்டு ஒன்றிற்கொன்று தொடர்பு இல்லாமலேயே போய்விடும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தைச் செய்துகொண்டு போகிற காரணத்தால் சென்னை நகரம் சரியான முறையில் திருத்தியமைக்கப்படவில்லை. எனவே நல்லதொரு வளர்ச்சித் திட்டத்தை அரசு மேற்கொண்டு சென்னை நகரத்தைத் தாய்மையான நல்ல நகரமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். அய்யாசாமி: தலைவரவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இந்த அப்ரோப்ரையேஷன் பில்லின் மீது ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் அரசின் சார்பில் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்துகொண்டிருக்கின்றன. அங்கு பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரும் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த வேலை தேடித் தரும் ஸ்தாபனம் உண்மையாகவே யாருக்காவது வேலை தேடித் தருகிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இதை நான் ஏன் கூறுகிறேன் என்று சொன்னால், பதிவு செய்து வைத்துக்கொண்டு வருவதோடு இடையிடையே மூன்று மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்துக்கொண்டும் வர வேண்டுமென்ற நிலைமை வேறு இருக்கிறது. ஆனால் பதிவு செய்து 5, 6 ஆண்டுகளுக்குப்பிறகும் வேலை கிடைப்பதில்லை.

இன்னும் சாதாரண ஏழை எளியவர்களாக இருக்கக்கூடியவர்கள் ஏதாவது சின்னஞ்சிறு வேலைக்கு, பஞ்சாயத்து யூனியன் போன்ற இடங்களுக்கு இண்டர்வியு கார்டு அனுப்பப்பட்டு, செல்லுகிற இடங்களுக்கு ஒரு தடவை

30th March 1972] [திரு. எம். அய்யாசாமி]

செல்லுகிறார்கள், இரண்டு தடவை செல்லுகிறார்கள். மூன்றாவது தடவையாவது வேலை கிடைக்கும் என்று சென்றாலும், கிடைப்பதில்லை. ஐந்து பேர்களுக்கு வேலை என்றால் 25 பேருக்குக் கார்டு அனுப்புகிறார்கள். அவர்கள் வெகு தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து பெரும் பணத்தைச் செலவு செய்து கொண்டு அவர்கள் சொல்லுகிற இடத்திற்குப் போட்டிக்குச் சென்று பணத்தை செலவிட்டுவிட்டு வீணுகத் திரும்பிவருவதுதான் மிச்சமாக இருக்கிறது. இங்கிருந்து கார்டு எடுத்துச் செல்லுபவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. அங்கே சிற்சில ஆட்களை குறித்து வைத்துக் கொண்டு வேலைதேடித் தரும் ஸ்தாபனத்திற்குத் தகவல் கொடுக்கிறார்கள். குறிப்பிட்ட ஆள் வரவில்லையென்றால், 'இன்டர்வியு' நடத்துவதில்லை. இப்படிப் பெரும்பாலும் தமிழ் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேலை தேடித்தரும் ஸ்தாபனம் உண்மையாக வேலை தேடித் தருவதற்குச் செயல்பட வேண்டுமென்றால், பதிவு செய்து வைத்திருப்பவர்களுக்கு சீனியாரிட்டிப்படி யாவது 1, 2 தடவை சென்று திரும்பினாலும், மூன்றாவது தடவை செல்லும் போது, உறுதியாக வேலை கிடைக்கத் தகுந்த நிலைமையை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்பொழுது, சென்னை நகரத்தில் கொசுத் தொல்லையைப்பற்றிக் கூறினார்கள். உண்மையிலேயே மதுரையைப் பொறுத்த வரையில், அங்கு கொசுத் தொல்லை இருப்பதில்லை. மழை காலங்களிலும் குளிர் காலத்திலும் ஆண்டுதோறும் 2, 3 மாதங்கள் கொசுத் தொல்லை ஏற்படுவதுண்டு. ஆனால் அந்த சீசன் மாறியதும் கொசு மறைந்துவிடும். இப்போது ஆறு மாத காலமாக எங்கிருந்து கொசு வந்ததோ தெரியவில்லை, மதுரையில் பரவலாக எல்லா இடங்களிலும் திலியாகக் கொசுக்கள் இருக்கின்றன. இதற்கு முன்னால் பார்க்காத அளவுக்கு ஒவ்வொரு கொசுவும் 'ஈ' அளவு பருமன் இருக்கிறது. அந்தக் கொசுவை உண்மையிலேயே ஒழிப்பதற்கு அரசாங்கம் நல்ல ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். மாநகராட்சி மூலமாவது அல்லது நேரடியாகவோ செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில், நான் ஒரு விஷயத்தை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மருத்துவக் கல்வி மாத்திரம் அல்ல. அது போன்ற புரொபஷனல் காலேஜஸ், தொழில் துறைக் கல்வி நிறுவனங்களில் எல்லாவற்றிலும் கடந்த ஆண்டு முதல் வெளிநாட்டு மாணவர்களுக்கு இடம் அளிப்பதில்லையென்ற திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன். வெளிநாட்டு மாணவர்களுக்கு நம்முடைய தொழில் கல்லூரிகளில் இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லைதான். ஆனால் வெளி நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஏன் இடம் கொடுக்கக் கூடாது

[திரு. எம். அய்யாசாமி] [30th March 1972

என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணமாக மலேயியா, இலங்கை போன்ற இடங்களில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் பரம்பரையைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சொந்தக்காரர்கள், உற்றார் உறவினர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒரு தலைமுறை, இரண்டு தலைமுறைக்கு முன்பு சென்றவர்கள் அங்கே இருக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்கு இங்கே தொடர்பு இருக்கிறது. இங்கே இருக்கிறவர்களுக்கு அங்கே தொடர்பு இருக்கிறது. இந்த நிலைமையில் மலேயியாவிலும், இலங்கையிலும் இருக்கிறவர்கள் அங்கிருந்து இங்கு வந்து ஏதாவது கற்றுக்கொண்டு போனால், தங்கள் வாழ்க்கைக்கு வசதி ஏற்படுமோ என்று கருதி தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், அவர்கள் வெளிநாட்டு மாணவர்கள் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதனால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆனால் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். வெளிநாட்டு மாணவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை நாம் ஒதுக்கிவிட்டாலும் என் இங்கு வந்து படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால், மருத்துவக் கல்வி, என்ஜினியரிங் கல்வி, விவசாயக் கல்வி, கால்நடைத் துறைக் கல்வி, ஆகியவற்றில் எல்லாம் தமிழ் நாட்டின் கல்வி முறை மிகச் சிறப்பானதாக இருக்கிறது என்று வெளிநாடுகளிலெல்லாம் ஓளவுக்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் தமிழ் நாட்டில் வந்து படிக்க வேண்டுமென்று தமிழ் குடியைச் சேர்ந்தவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே தமிழர்கள், அவர்கள் எங்கு இருப்பவர்களானாலும், தமிழர்கள்தான். தமிழர் என்ற உணர்வோடு, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்பவர்கள். நாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற வேண்டும் என்றும், தமிழ் மொழி உலகெங்கும் பரவ வேண்டுமென்றும் விரும்புகிறபோது நல்ல தமிழ் குடி மக்கள் எங்கிருந்தாலும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மறந்து விடுகிறோம். தமிழ் குடியைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் இருந்தாலும்கூட, அவர்களுக்கு இங்கே தொழிற் துறைக் கல்வி படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைச் சொல்லும் பொழுது, "அவர்கள் இங்கே படிக்கிறார்கள், ஏராளமான பணத்தை அரசாங்கம் இங்கே செலவிடுகிறார்கள், ஆனால் அவர்களெல்லாம் இங்கு படித்துவிட்டு வெளி நாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே அவர்களுடைய சேவை நம் நாட்டுக்குக் கிடைக்கவில்லை, அவர்களுக்குச் செலவழிக்கிற பணம் வீணாகப்போகிறது", என்று கூடச் சொல்லலாம். ஆனால் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் உள்ளவர்களை இங்கே செலவு செய்து படிக்க வைக்கிறோம். படித்துப் பட்டம் பெறுகிறார்கள். திறமைசாலிகளாக மாறுகிறார்கள். ஆனால் இவர்கள் இந்த நாட்டைவிட்டு அமெரிக்கா செல்லுகிறார்கள்; மேற்கு ஜெர்மனி செல்லுகிறார்கள்; ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பணி செய்கிறார்கள்; வெளி

30th March 1972] [திரு. எம். அய்யாசாமி]

நாடுகளுக்கும் செல்லுகிறார்கள். அவர்களுடைய சேவை இந்த நாட்டுக்குப் பயன்படவில்லை. அங்கே சென்று நல்லவிதமாக வருமானம் தேடி வாழ்கிறார்கள். அவர்களைத் தடுப்பதில்லை. அதைப் போலவே, இந்த நாட்டின் புகழ் மலேசியாவிலும் வேறு நாடுகளிலும் பரவுவதை என் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழ் குடியைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி இவைகளிலெல்லாம் இடம் அளிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மருத்துவக் கல்லூரியைப் பற்றிச் சொல்லும்பொழுது, என்னுடைய சமூகத்தைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டில் எனக்குத் தெரிய 7 பேர் மனுச் செய்தார்கள். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள். ஒரு D, இரண்டு D, D+ வாங்கியவர்கள். முழுத் தகுதியும் பெற்றவர்கள். அவர்களில் யாருக்குமே கிடைக்கவில்லை, ஒரு பெண்ணைத் தவிர. தமிழ்நாட்டில் 1,100 இடங்களுக்குத் தேர்வு நடைபெறும் மருத்துவத்தையே பரம்பரைத் தொழிலாகக் கொண்ட சமூகத்தினருக்கு ஒரே ஒரு இடம் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு 1 அல்லது 2 சதவிகிதம் இடங்களை மருத்துவக் கல்லூரியில் ஒதுக்க வேண்டுமென்று பலமுறை இந்த மன்றத்தின் முன் எடுத்துக் கூறியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். அது ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று இதுவரையில் தெரியவில்லை. இனியாவது, இந்த ஆண்டிலாவது மருத்துவக் கல்லூரி, வேறு தொழில் துறை கல்லூரிகளில் எல்லாம் பின்தங்கிய நிலையிலுள்ள சலவையாளர்களுக்கும் மருத்துவர்களுக்கும் 1 அல்லது 2 சதவிகிதம் ஆவது இடத்தை ஒதுக்கி வைத்து வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 5-00 p.m.

நேற்றைய தினம் இன்னும் ஒரு வருந்தத்தக்க செய்தியைக் கேள்விப் பட்டேன். இந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு டாக்டர், எம்.பி.பி.எஸ் படித்தவர், எம்.எஸ். படித்திருக்கிறார். 20 ஆண்டுக் காலம் சர்க்கார் உத்தியோகத்தில் டாக்டராகப் பணியாற்றியிருக்கிறார். அவர் பெயர் ப்ரமோஷன் லிஸ்டில் 5-வது இடத்தைப் பெற்றிருந்தது. அப்படி ப்ரமோஷன் வரீங்கிய நேரத்தில் நான்கு பேர் வரை வழங்கப்பட்டு ஐந்தாவது இடம் வரும்பொழுது அவருக்கு வழங்கப் படாமல் ஆறாவது இடத்தில் உள்ளவருக்கு வழங்கப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அது வேதனைக்குரிய செய்தி. அதைக் கேட்கும்பொழுது அதற்குச் சரியான பொருத்தமான காரணங்களைச் சொல்ல முடியாத நிலைமையில் இதையே சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவர் மருத்துவச்

[திரு. எம் அய்யாசாமி] [30th March 1972

சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால் இப்படிப்பட்ட அநீதி இழைக்கப் பட்டிருந்தால்,—அப்படி நான் எண்ணவில்லை, ஆனால் இதனால் அப்படி நேர்ந்திருந்தால்—இது சரியானதுதானு என்று அரசாங்கம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத் தினர் பாதிக்கப்பட்ட அந்த அதிகாரியின் பெயரைக் குறிப்பிட்டால், நல்லதாக இருக்கும்.

திரு. எம். அய்யாசாமி: தலைவரவர்களே, நானேக்குப் பெயரைக் குறித்துக் கொடுக்கிறேன். இந்தத் தகவலைச் சொன்னவர் பொறுப்பானவர். வழியில் போகின்றவர் சொன்ன தகவல் இல்லை. பெயர் தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அந்த டாக்டர் எந்தத் துறையில் பணியாற்றுகின்றார் என்பதை யாவது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவார்களா?

திரு. எம். அய்யாசாமி: தலைவரவர்களே, மருத்துவத் துறையில்தான் அவர் பணியாற்றிக்கொண்டு வருகின்றார். மாவட்ட மருத்துவ அதிகாரிகள் என்று சொல்லப்படும் டி.எம்.ஓ. லைலக்ஷனில் இவர் பெயர் ஐந்தாவதாக இருந்தது. ஆனால் ஒன்றிலிருந்து நான்குவரை ப்ரமோஷன் கொடுத்துவிட்டு, ஐந்து விடப் பட்டு, ஆறுவது பெயருடையவருக்கு ப்ரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். பின்தங்கியோர் நலக் குழுகூட உத்தியோகத் துறை யில் இவர்கள் பின்தங்கியிருக்கிறார்கள் என்று சுட்டிக்காண்பித்திருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சமூகத்தினருக்கு முறையான அளவிற்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு துறைகளைப் பற்றி நான் ஏற்கெ னவே விரிவாக எடுத்துக்கூறியிருக்கின்றேன்.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மருத்துவ அதிகாரியின் பெயரைக் குறிப்பிடும்படி கேட்டால், தெரியாது என்கிறார். உறுப்பினர் அவர்கள் குறிப் பிடுவது, கும்பகோணத்தில் பணியாற்றும் டாக்டர் கல்யாணம் என்பவரைப் பற்றி என்று கருதுகிறேன். அவருக்குத் தற்போது 'ப்ரமோஷன்' கொடுத்தாகி விட்டது என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முதலில் அவரது 'ஃபைல் கள்' சரியாகவும் திருப்தியாகவும் இல்லை. பின்னர் அவரது நீண்டகாலப் பணி யைக் கருதி 'ப்ரமோஷன்' கொடுத்திருக்கிறோம். ப்ரமோஷன் என்று கொடுக்கும்போது, 'ஃபைல்கள்' சரியில்லை என்று இருந்தால், முதல் லிஸ்டில் அப்படிப்பட்டவர்களுக்குப் 'ப்ரமோஷன்' கொடுக்கப்படுவதில்லை. ஆனால்

30th March 1972] [திரு. க. அன்பழகன்]

அதற்குப் பிறகு அவர்கள் இரண்டாவது லிஸ்டில் அவர்களுக்கு 'சீனியாரிடி' பிரகாரம் பார்த்து, 'ப்ரமோஷன்' கொடுக்கப்படுகிறது. இரண்டாவது 'கேடிகரி' (category) யிலும் கொடுக்க முடியாத நிலையில் சிலர் இருப்பார் களானால் அவர்கள் கைவிடப்பட்டும் இருக்கின்றார்கள். ஆனால் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். அய்யாசாமி: தலைவரவர்களே, அவருக்குப் 'ப்ரமோஷன்' கொடுக்கப் பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பின்தங்கியோருக்கும் 'ஷெட்யூல்' வகுப்பினருக்குள்ள சலுகை களைக் கொடுக்கவேண்டுமென்று அடிக்கடி நான் இந்த மன்றத்தில் வேண்டிக் கொண்டு வருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன் னார்கள், 'பிற்பட்டோர் நலக் குழுவினரின் அறிக்கை வரட்டும், இதுபற்றி யோசிக்கலாம்' என்று. பின்தங்கியோர் (ஷெட்யூல்டு வகுப்பினர்) பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால்தான் மத்திய அரசின் அனுமதி வேண்டுமே தவிர, அவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை மாதில அளவில் பின்தங்கியோர் சமுதாயமான எங்கள் சமுதாயத்தினருக்குக் கொடுப்பதில் கஷ்டமிருக்காது என்று எண்ணுகிறேன். எனவே இதுபற்றிப் பரிசீலனை செய்து இதை விரைவில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்டதொரு அறிக்கையை வரவு-செலவுத் திட்டத்திலேயே எதிர்பார்த்தேன். ஆனால் வர வில்லை. எனவே இப்போதாவது இதை விரைவில் அரசு பரிசீலனை செய்து, இந்தச் சலுகைகளை இந்தச் சமுதாயத்தினருக்கு அளிக்க வேண்டு மென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த 'அப்ரோபிரியேஷன் பில்' லில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் அபிப்பிராயங்களை மிகக் கண்ணிய மான முறையில் எடுத்துவைத்திருக்கிறார்கள். இப்போது நான் பேச வேண்டிய சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது, மிகவேதனைக் குரியதாக இருக்கிறது. நாமெல்லாம் இங்கே உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறோம். என்ன கேட்கிறோம், நாலரை கோடி மக்களுள்ள எங்களுக்குப் பணம் போதவில்லை, எங்களுக்குப் பணம் தாருங்கள், கொஞ்சம் கூடுதலான அதிகாரங்களையும் தாருங்கள். நீங்களே அதிகாரங்கள் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு எங்களை அடக்கிக் கொண்டே போனால், எங்கள் வாழ்வு மங்கலாவது மட்டுமில்லை, எப்படி ஒரு

மாட்டைத் துரத்திக்கொண்டே போனால், அது ஓடிக்கொண்டே போய், மேலே ஓடுவதற்கு இடமே இல்லை, சுவர்தான் முட்டுகிறது என்ற நிலை ஏற்பட்டு அது எப்படித் திரும்பி அடிக்கும் ஆள்மீதே பாய்ந்துவிடுமோ, அத்தமாதிரி நிலைகள் எல்லாம் கதைகளில் இருக்கின்றன என்பதற்காக நான் மத்திய அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வளவும் சொல்லுவதற்குக் காரணம், பக்கத்திலுள்ள ஐலண்டு கிரௌண்டு இருக்கிறதே, அது சென்னையிலுள்ள 25 லட்சம் மக்களுக்கு வேண்டிய கடற்காற்றைக் கடலிலிருந்து நகருக்குள் வீசுவதற்கு உதவியாக இருக்கிறது. சென்னையிலுள்ள மக்கள் எப்படி காற்று இல்லாமல் புழுக்கத்தில் வாழ்கின்றார்கள் என்பது நமக்குத் தெரியும். வசதியுள்ளவர்கள் மின்சார விசிறி வைத்துக் கொள்ள முடியும், ஆனால் சாதாரண மானவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் இந்த இயற்கைக் காற்றைத்தான் நம்பியிருக்க வேண்டும். அதற்கு இந்த ஐலண்டு கிரௌண்டு உதவியாக இருக்கிறது. ஆனால் இந்த ஐலண்டு கிரௌண்டில்தான் மத்திய அரசு பெரும் பெரும் கட்டிடங்களை கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். மத்திய சர்க்காரை சென்னையிலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு வேண்டிய சுகாதாரமான காற்று வீசுவதற்குத் தடையில்லாமல் இருக்கும் இந்த ஐலண்டு கிரௌண்டில் தயவுசெய்து கட்டிடங்களைக் கட்ட வேண்டாம் என்று வணங்கிப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசுக்கு தமிழகம் என்ன, இந்தியாவிலேயே ஏராளமான பெரிய இடங்கள் இருக்கின்றன. எனவே இங்கே கட்ட வேண்டாம், இப்படிக் கட்ட வேண்டாம் என்று இந்த அவையும் பேரவையும் பணிவாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட பணிவோடு, வினயத்தோடு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியும், 'ஓஹோ, முடியாது' என்று கட்டிக்கொண்டே போகிறார்கள். நமது அரசாங்கம் சொல்லுகிறது என்றால், இந்தத் தமிழ் நாட்டின் 4½ கோடி மக்கள் சொல்லுகின்றார்கள் என்றுதான் அர்த்தம். வேறு என்ன அர்த்தம்? இது மட்டும்தானே என்றால், இன்னும் ஒன்றைச் செய்கின்றார்கள். தமிழ்நாட்டில் பல ஆண்டுக் காலமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று கடன்கள் கொடுத்து, இப்போது விவசாயம் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. பசுமைப் புரட்சி என்று சொல்லுவதில் நாம் முன்னேற்றம் அடைந்துவிட்டோம். ஆனால் என்ன நோக்கத்தோடு என்று நமக்குத் தெரியவில்லை. இந்தக் கூட்டுறவு பாங்கிகளையெல்லாம் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இது திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. மனிதனுடைய உருவம் என்றால், தலை இருக்கிறது, கண் இருக்கின்றது, மூக்கு இருக்கிறது, காது இருக்கிறது. இவ்வளவும் இருந்தால்தான், மனிதன் மனிதனாக இயங்க முடியும். ஆனால் காதை ஒரு பக்கம், கையை ஒரு பக்கம் என்று அங்கம் அங்கமாகப் பிய்த்து எடுத்து

விட்டால், பிறகு மனிதன் என்று சொல்லுவதற்கு அங்கே என்ன இருக்கிறது என்று கேட்பதில் குற்றம் என்ன? இதைத் தானே தமிழகத்திலுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கேட்கின்றார்கள். நாம் சொல்லுகிறோம், 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று. இதை வெளிப்படையாக, மனமாறச் சொல்லிய பிறகும்கூட, மத்தியில் அமைச்சராக உள்ள மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மிக உயர்ந்த நோக்கங்களைக் கொண்டவர், பண்புடையவர் அவர்களுக்கு ஏதோ மத்தியிலே பெரியதொரு வேலை கிடைத்துவிட்டது என்பதற்காகவா இப்படிப் பேசுவது? நாலரைக்கோடி மக்கள் சார்பிலே 1,400 மைலுக்கு அப்பால் இருந்துகொண்டு அவர்கள் கேட்பது என்ன? 'மத்திய சர்க்காரோடு ஒத்துப்போகப் போகின்றீர்களா அல்லது போரிடப் போகின்றீர்களா?' என்று. மத்திய சர்க்காரோடு ஒத்துப் போகிறோமா அல்லது போராடப் போகிறோமா என்று நோக்கம் என்ன? சர்க்காரோடு ஒத்துப் போகிறோமா அல்லது போராடப் போகிறோமா என்று தூண்டுவது போல் அல்லவா இருக்கிறது. இது எவ்வளவு வேதனையான விஷயம். திரு. சி. சுப்பிரமணியம் படித்தவர், அவரை எவ்வளவு பெரிய உயரமான இடத்தில் வைத்திருக்கிறோம். அவ்வளவு பெரிய இடத்தில் இருக்கும் திரு. சி. சுப்பிரமணியம் இவ்வளவு தாழ்ந்த நிலைக்கு இறங்குவது தமிழ் மக்களைப் புண்படுத்துவதாக இருக்கிறதே தவிர, வேறல்ல. பெரிய அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர், படித்தவர், பண்புடையவர் இவர் இப்படிப் பேசுவது அழகல்ல. சிந்திக்க வேண்டும். நமக்கு எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. இராச இராச சோழன் சிலையைத் தஞ்சைக் கோவிலில் வைக்க வேண்டுமென்று எவ்வளவோ கேட்கிறோம். இது மிகச் சின்ன விஷயம். கோடிக்கணக்கான ரூபாய் செலவு, அதனால் அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லியிருந்தால், மிகப் பெருந்தன்மையாகப் பாராட்டியிருப்போம். நாம் சொல்கிறோம், ஏராளமான செலவில் இங்கே நம்முடைய மண்ணில் அவர்கள் கட்டடங்கள் கட்ட வேண்டாம் என்று. அதைச் சொல்ல உரிமையில்லையென்று சொல்கிறார்கள். தஞ்சாவூர் கோவிலைக் கட்டி, வாரி இறைத்த ஒரு பெரும் தலைவனுக்கு ஒரு சின்னச் சிலையை வைப்பதற்குக்கூட அனுமதி கிடையாது என்று சொல்கிறார்கள். ரிசர்வ் பேங்க் என்றால் அரை அணைதான், ஒரு அணை கிடையாது என்று திட்டம் போடுகிறார்கள். அதிகாரங்கள் அதிகமாகக் குவிந்து கிடக்கின்ற காரணத்தால், இப்படிச் செய்கிறார்கள். அதைக் கொஞ்சம் பிரித்து எங்களிடம் கொடுத்தால்தான், எங்கள் நாட்டு மக்களை நல்ல முறையில் வாழ வைக்க முடியும். ஒரு வயிறுக்கு ஒரு கவளச் சோறுவது போட வேண்டுமானால், அதற்கு நாங்கள்தான் முயற்சி எடுத்தாக வேண்டும். அதற்குத்தான் தாராளமான அதிகாரிகள் வேண்டுமென்று நாங்கள் கேட்பது.

[திரு. சி. வி. ராஜகோபால்] [30th March 1972

கோவையிலிருந்து 1,400 மைல்களுக்கு அப்பாலுள்ள டெல்லிக்குச் சென்று மந்திரி சபையில் அமைச்சராகி, தமிழ் நாட்டு மக்களோடு தான் சேர்ந்தவர் என்பதை மறந்து விட்டு, நம்மையெல்லாம் காட்டிக்கொடுப்பது அவருக்கும் அவருடைய பதவிக்கும் அழகல்ல என்பதை இந்த அவையின் சார்பில் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் உறுதியாகச் சொல்கிறேன், மத்திய சர்க்காருடன் உறவு என்றைக்கும் உண்டு. மத்திய சர்க்காருடைய நிலை உயர்ந்தால் எங்களுடைய, மாநில சர்க்காருடைய நிலை உயரும் என்பதைப் பன்னிப் பன்னி பல தடவை இந்த அவையிலும், பேரவையிலும் மற்றும் வெளியிலும் டாக்டர் கலைஞர் அவர்கள் மிக ஆணித்தரமாகக் கூறியிருப்பதை நான் இந்த அவையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றை மிகத் தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன். சட்ட சபை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ஏதோ கொஞ்சம் பலமாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் உடையவர்களாக நம்முடைய ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜானி அவர்கள் எடுத்துக் கூறினர். நாங்கள் தங்கியிருக்கும் விடுதியில் உண்மையிலேயே தரமில்லாத சாப்பாடு கிடைப்பதாக யாரும் கூற முடியாது. அங்கே சாப்பாடு தான் சாப்பிடுகிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அங்கு குடிப்பதற்குக்கூட கார்ப்பரேஷன் தண்ணீர் கிடைப்பதில்லை. குடிப்பதற்குக்கூட கிணற்றுத் தண்ணீர்தான் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக ஒரு முறை இந்த அவையில் கூறினர். உண்மையாக உங்களுக்கு வயிறார நல்ல உணவாவது தருவோம் என்று சொன்னார்கள். அங்கே சைவர்கள்தான் ஓட்டல் வைத்திருக்கிறார்கள். இரண்டு முஸ்லீம்கள், அவர்களும் சைவர்கள் ஓட்டலில் சாப்பிடுகிறார்கள், அல்லது வெளியே சென்று சாப்பிடுகிறார்கள். நான் கூட வெளியே சென்று சாப்பிடுகிறேன். பரிபூர்ணமாக முப்பது நாட்களும் சாப்பிடுகிறேன் என்று சொல்ல முடியாது. இந்தச் சாப்பாட்டு விஷயத்தில் கொஞ்சம் சீர்திருத்தம் வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். வி. லட்சுமணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 1972-73-ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் நிலவி வரும் விவசாயிகளுடைய நிலைமையைப் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். கோவை மாவட்டத்தில் சென்ற சில தினங்களாகத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்

30th March 1972] [திரு. எஸ். வி. லட்சுமணன்]

தியதை அனைவரும் அறிவர். அந்தப் போராட்டத்திற்கு முன்பு அந்த மாவட்டத்தில் விவசாய விளைச்சல் ஓரளவு நன்றாக இருந்தது. அந்தப் போராட்ட காலத்தில், பருத்தி போன்ற விளை பொருள்களுக்கு விலையே கிடையாது என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இன்றையதினம் அங்கு பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தப் போராட்டத்திற்கு முன்பு பருத்தி பொதி ஒன்றுக்கு ரூபாய் 450 என்ற அளவில் இருந்தது. இந்தப் போராட்டம் நடந்த காலத்தில் நூல் ஆலைகள் மூடப்பட்டுக் கிடந்தன. அதன் காரணமாக பருத்தி வாங்குவோரற்ற நிலைமை இருந்தது. இன்றையதினம் மில்கள் திறக்கப்பட்டு ஓடினாலும்கூட, திருப்பூர் மார்க்கெட்டிலும் கோவை போன்ற இடங்களிலும் பருத்திக்கு நல்ல கிராக்கி இல்லாத நிலை நீடித்தே வருகிறது. இந்த மாதத்தில்தான் விவசாயிகள் நிலவள வங்கிகளில் தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பிக் கட்ட வேண்டும். தரிசும் சர்க்கார் கடன்கள், கிஸ்தி முதலியவற்றைக் கட்ட வேண்டிய காலம் இந்த மாதம். இந்த நேரத்தில் விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை இருந்தால்தான், அவற்றையெல்லாம் கட்ட முடியும். டெல்லியிலே இருக்கிற மத்திய சர்க்கார்கூட இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையில்லாத சூழ்நிலையில், இறக்குமதியைக்கூட நிறுத்தினால் என்ன என்று நேற்றையதினமோ அதற்கு முன்தினமோ பத்திரிகையில் படித்த ஞாபகம். கோவை ஜில்லாவில், அதுவும் குறிப்பாக பல்லடம், அவிநாசி, உடுமலைப்பேட்டை போன்ற தாலுக்காக்களில் அதிகமாகப் பருத்தி விவசாயத்தை நம்பித்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மழை சரியாக இல்லாத அந்தப் பிராந்தியங்களில் வேறு வெள்ளாமை செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இரண்டு மாதங்களில் இந்த நிலைமை அபிவிருத்தியடையுமென்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இருந்தாலும்கூட, அண்மையில் கட்டவேண்டிய நிலவள வங்கிக் கடன்களைச் சற்றுக் காலம் தாழ்த்திப் போடுவது ஒரு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மே மாதம் முதல்தேதி நில வள வங்கிகளின் கடன்களைத் திருப்பிக் கட்ட வேண்டும். இது மிகவும் அவசியமாக கோவை, பல்லடம், அவிநாசி, உடுமலைப்பேட்டை பகுதிகளுக்குச் செய்யப்பட வேண்டும். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டுதான் சர்க்கார் கடன்கள், சர்க்கார் கிஸ்தி முதலியவற்றைக் கட்டுவது வழக்கம்.

அடுத்தபடியாக, நில வள வங்கிகள் மூலமாகச் சிறு விவசாயிகளுக்கு அதிகச் 5-30 p.m. சலுகைகள் அளிக்க வேண்டுமென்று பல சர்க்குலர்கள் வருகின்றன. ஒரு சர்க் குலரில் வருவாய் என்றும் மற்றொன்றில் ஏக்கரேஜ் என்றும் இருக்கிறது. விஸ்தீர்ணம் என்று கூறுகின்ற நேரத்தில், 4.75 ஏக்கர் என்று சொல்லப்பட்டி

[திரு. எஸ். வி. லட்சுமணன்] [30th March 1972

ருக்கிறது. நஞ்சையா, புஞ்சையா அல்லது தோட்ட நிலமா என்று குறிப்பிடப் படவில்லை. அதைப்பற்றி விளக்கமான ஒரு சர்க்குலர் அனுப்பினால், நில வள வங்கிகளுக்கும் விவசாயிகளுக்கும் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த நிலையில் புதுச் சட்டம் வந்ததால், பொது முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற காரணத்தைக் காட்டி, கோவை போன்ற ஜில்லாக்களுக்கு சர்க்காலிருந்து விசேஷ அதிகாரிகளை, எஞ்சினியர்களை அனுப்பி பூமியின் தரம், இணறுகள், அதற்கான வாய்ப்பு ஆகியவற்றைக் கண்டறிய ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக 'வாட்டர் டைரக்டொரேட்' பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் கூட இந்தத் துணை மானியத்தில் (Tools and Implements) வாங்க நிதி ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக் குரிய விஷயமாகும். ஆனால் இந்த இரண்டு ஆண்டுகளுக்கு அந்த நிலவள வங்கிகள் கடன் கொடுக்குமா என்று சிந்தித்துப்பார்த்தால், என்னைப் பொறுத்த வரையில், சிறு விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது என்று தான் கருதுகிறேன். விவசாயிகளுக்குப் புதிய இணறுகள் தோண்டவும் பழைய இணறுகளை ஆழப்படுத்தவும் கடன் கொடுக்க முடியாத சூழ்நிலை. ட்ராக்டர் வாங்கக் கடன் கொடுக்கலாம். (ரிக்ளமேஷன்) நிலத்தைப் பண்படுத்துவதற்கு, அதுவும் ஆயக்கட்டுப் பிரதேசமாக இருந்தால், கடன் கிடைக்கும். வானம் பார்த்த பூமியாக இருந்தால் அங்கு குடியானவர்களுக்குக் கடன் கிடைக்காத சூழ்நிலை காணப்படுகிறது. இந்த நிலவள வங்கிகள் தங்கள் பணிகளைக் கடந்த காலத்தில் செய்தமாதிரி, இன்று சிறப்பாகச் செய்ய முடியுமா என்றால், நிச்சயமாகச் செய்ய முடியாது என்ற நிலைமையே இருக்கிறது. உதாரணமாக ஒரு நில வள வங்கியில் சென்ற 1971-ம் வருஷம் நவம்பர் இரண்டாம் தேதிக்கு முன்பே எங்கள் பகுதியிலிருந்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு லோன் கொடுக்க அப்பிளிகேஷன் எல்லாம் தயாரித்து, தக்க முறையில் மேலதிகாரி களுக்கு அனுப்பி, மத்திய வங்கியின் அனுமதி எல்லாம் பெற்றும் கூட, நாலைய தினம் வரை கடன் கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அதிகாரிகளை அணுகிக் கேட்டால், "புதுச் சட்டம் வந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த 'வாட்டர் டைரக்டொரேட்' 'நோ அப்ஜக்ஷன்' சர்ட்டிபிகேட் கொடுத்தால் தான், லோன் கொடுக்க முடியும். இல்லாவிட்டால் முடியாது", என்று சொல் வது வருத்தமாக இருக்கிறது. பரம்பரையாகச் செய்து வந்த தொழிலைப் பாதிக்கின்ற அளவில் புதுச் சட்டம் அமைந்திருக்கிறது என்று நினைக்கும் போது, அதில் பல குறைகள் இருக்கின்றன. அவை களையப்பட வேண்டும். 1971 நவம்பர் மாதம் இரண்டாம் தேதிக்கு முன்னால் கேட்கப்பட்ட கடன்களைக் கொடுத்து, சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவி செய்து, சர்க்கார் அவர் களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வாட்டர் டைரக்டொரேட், எங்கள் ஜில்லா

30th March 1972] [திரு. எஸ். வி. லட்சுமணன்]

வைப் பொறுத்த வரையில், (மாதா மாதம் சில பகுதிகளைப் பரிசீலித்துக் கொண்டு வருவதாகத் தெரிகிறது.) எங்கள் ஜில்லாவுக்கு வருவதற்கு இன்னும் இரண்டு ஆண்டு ஆகலாம். அதற்கிடையில் பல்லடம் போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் புதுக் கிணறும் வெட்ட முடியாமல், பழைய கிணறுகளை ஆழப்படுத் தவும் முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த விவசாயிகள் பெரும் தன்பத்தில் தள்ளப்படுவார்கள். அவர்கள் வாழ முடியாத நிலை. மிகுந்த கஷ்டத்தோடும் கவலையோடும் இந்த விவசாயிகள் தங்கள் நிலையை எண்ணிக்கொண்டிருக் கள். அவர்களுக்கு தக்க வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் விவசாயிகளுக்கு பல தொல்லைகள் இருக்கின்றன. இன்று சர்க்கார் கடன்களை உடனடியாக வசூலிக்க வேண்டு மென்று சில அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கைகள் கூட எடுக்கிறார்கள். அதைப் பற்றி அதிகாரிகளை ஒன்றும் குறை சொல்லுவதற்கில்லை. சர்க்கார் எப்படி அவர்களுக்கு தாக்கீது கொடுக்கின்றதோ, அதன்படி அதிகாரிகள் காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அனுகூலமான சூழ்நிலை இல்லாத நிலை இருக்கிறது. விவசாய வரி, மின்சாரக் கட்டணம் என்று விவசாயி கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. கோவை ஜில்லாவில் நடந்த சம்பவம் எல்லோருக்கும் தெரியும். சில நாட்களுக்கு முன்னால் மின்சார வரி உயர்வினால் போராட்டங்கள் நடத்தி, அதன் காரணமாக, பெருமாநல்லூரில் மூன்று பேர் இறந்தார்கள். இன்னும் பல புரட்சிகரமான விஷயங்களை, இந்த மின்சார வரி உயர்வு ஏற்படுத்தும் என்று அஞ்சுகிறேன். கோவை ஜில்லாவில் குறிப்பாக பல்லடம், அவினாசி போன்ற இடங்களில் கிணறுகளில் மின்சாரம் அதிகமான அளவு உபயோகப்படுத்துகிறார்கள். அந்தப் பகுதிகளுக்காவது மின்சார வரி உயர்வு இல்லாமலிருந்தால், நலமாக இருக்கும். ஓரளவு விவசாயிகள் சமாதானம் அடைவார்கள் என்று கருதுகிறேன். அத்தோடு ஜப்தி செய்வது போன்ற நடவடிக்கைகள் வெகு கொடுமையான முறையில் நடைபெறுகின்றன. இதெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். பருத்தி விற்காத நிலையில், விவசாய விளை பொருள்களின் விலை குறைந்திருக்கிற இந்த நேரத்தில், இது கொடுமையான காரியம். விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட நிர்பந்தத்தை ஏற்படுத்தக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நொய்யல் ஆற்றில் முன்பெல்லாம் ஆண்டுதோறும் தண்ணீர் வரும். வருஷத்தில் 50 நாள் வெள்ளம் வரும். 32 அணைகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். சென்ற 10 ஆண்டுக் காலமாக வருஷத்தில் இரண்டு நாள், மூன்று நாள் தான் தண்ணீர் வருகிறது. மழையுள்ள காலங்களில் ஓரளவு தண்ணீர் கிடைக்கும். கோவை, குறிச்சி, குனியமுத்தூர், சிங்காநல்லூர், பள்ளபாளையம்,

சூளூர் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. அந்தச் சூழ்நிலையில் அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் குறைந்த அளவு தண்ணீருள்ள கிணற்றை வைத்துக் கொண்டு வேளாண்மை செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் கூட, இன்றைக்குப் பார்க்கும்போது, இந்த சிங்கநல்லூர் குளத்திலிருந்து பாசன வசதி பெறுகின்ற விவசாயிகளுக்கு நிலத்தீர்வையில்லை. அங்கு நிலவரி கிடையாது. விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சிங்கநல்லூரிலிருந்து மேலேயிருக்கின்ற பல்வேறு பிரதேசங்களை எடுத்துப் பார்த்தால், அங்கே யிருக்கின்ற விவசாயிகளுக்கு கிஸ்தி இல்லாமலிருந்தும்போது, கீழேயுள்ள பகுதியில் இருக்கிறது. சிறுவாணியிலிருந்து வருகிற தண்ணீர் சிங்கநல்லூருக்கு ஓளவிற்குக் கிடைக்கக் கூடும். அப்படியிருந்தும் சிங்கநல்லூரில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கிஸ்தி இல்லாமலிருக்கும்போது, கீழேயுள்ள பகுதியில் இருக்கின்ற பாசன வசதியே இல்லாத விவசாயிகளுக்கு நீர்த்தீர்வையே இருக்கக் கூடாது. தயவுசெய்து இதை சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் மத்தியில் பாசன வசதியுள்ளவர்களுக்கு கிஸ்தியில்லை, தண்ணீர் வசதியில்லாத நமக்கு வரி இருக்கிறதே என்று பல பேர் பல சந்தர்ப்பங்களில் பேசிக் குறைப்பட்டுக்கொள்ளுகிறார்கள். இதைக் கவனிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

5-30 p.m.

அடுத்து, குடி தண்ணீர்ப் பிரச்னை. கோவை, சிங்கநல்லூரை நினைக்கும் போது, கஷ்டமாக இருக்கும். எப்போதும் தண்ணீர் கிடைக்காத நிலைமை. பங்கீடுமுறை. அத்தோடு வருஷா வருஷம் கோடை காலம் வரும்போது, எப்படியாவது தண்ணீர் கொண்டுவரவேண்டும், இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று அங்கே பொறுப்புள்ளவர்களும் சர்க்காரில் உள்ளவர்களும் எண்ணுவது வழக்கம். அதே மாதிரி ஆண்டு தோறும் நிலைமை எழும், பிறகு போய்விடும். சிறுவாணித் தண்ணீர் ஒன்றினால்மட்டும் கோவை குடி தண்ணீர்ப் பிரச்னை தீராது. வளர்ந்து வருகின்ற நகரங்களாகிய கோவை, சிங்கநல்லூர் பிரதேசங்களுக்குச் சிறுவாணித் தண்ணீர் ஒரு பக்கம் கிடைத்தபோதிலும், அதற்குப் பதிலாக மேட்டூர், நெல்லித்துறை வழியாக பவானி நீர் கோவைக்கும் சிங்கநல்லூருக்கும் கிடைக்கச் செய்தால் தான், குடிநீர் பிரச்னைக்கு நிரந்தரப் பரிகாரம் கண்டவர்களாக ஆவோம். அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருப்பதாகக் கூடச் சொல்லுகிறார்கள். அந்த வாரியத் தலைவர் அவர்கள் கூட சூளூர், பல்லடம் போன்ற பகுதிகளுக்கு வந்து பார்த்துப் போனார்கள். ஆனால் இதுவரையில் ஒன்றும் நடைபெறவில்லை. சீக்கிரம் நடைபெறுமென்று எதிர்பார்க்கிறோம். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இந்தக் கோவை குடி தண்ணீர்ப் பிரச்னை

எடுத்துக்கொண்டு, தனி முயற்சி செய்தால்தான், பல்லாண்டு காலமாக நோவையிலும் சிங்கநல்லூரிலும் இருக்கின்ற குடி தண்ணீர்ப் பிரச்னை தீரும், மக்களும் நல்ல விதத்தில் வாழ முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சூளூர் பிரச்னையைப்பற்றி ஓரிரு வார்த்தைகள். சூளூர் பகுதியிலே இராமச்சந்திரபுரம் குளம் என்று இருக்கிறது. அந்தக் குளத்தைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதிலே பஞ்சாயத்து யூனியனில் அந்தக் குளத்தைக் குளமாக்கலாம் என்று யோசனை செய்தார்கள். முன்பு குட்டையாக ஆக்க வேண்டுமென்று இருந்தது. குளம் என்று ஆக்க வேண்டுமென்று பஞ்சாயத்துத் தலைவர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த நபர்களும் முயற்சி செய்தார்கள். ஆனால் ஒரு முடிவும் ஏற்படவில்லை. குளம் கட்டுவதிலே ஆட்சேபணை ஏற்பட்டது. அதனால் விட்டுவிட்டார்கள். குளமும் இல்லாமல், குட்டையும் இல்லாமல், அந்தப் பகுதியில் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. அதற்கு மேல் பகுதியில் உள்ள ஓடையில் குட்டை அமைத்திருக்கிறார்கள். கரைகளை அமைத்துப் படிகளை அமைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே முன்பெல்லாம் தண்ணீர் கிடையாது. இப்பொழுது நல்ல தண்ணீர் வந்திருக்கிறது. அந்தப் பகுதியிலேயுள்ள மக்கள் சிறப்பாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இராமச்சந்திரபுரப் பகுதியில் முன்பிருந்த நிலையை விட மோசமான நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே இராமச்சந்திரபுரத்துக் குளத்தை உடனடியாக குளமாகச் செய்யுங்கள். அப்படியில்லாமல் குட்டையாக ஆக்கினால், அப்பகுதியிலுள்ள விவசாயப் பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி கிடைக்கும் வாய்ப்பு நின்றுவிடும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்குரிய நிதியொதுக்கல் மசோதாவின் பேரிலே இந்த விவாதத்தில் கலந்து கொண்டு சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் பின்தங்கிய மக்கள், அரிசனங்கள், மலைவாழ்ப் பகுதியினர், பிற்படுத்தப் பட்டோருக்கு எல்லாம் பல வசதிகளைக் கடந்த பல ஆண்டுகளாகத் தமிழக அரசு அளித்து வருகிறது. அந்தப் பொறுப்பு மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. தாழ்த்தப்பட்டவர்களில் பலர் கிருத்துவ இனத்திற்கு மதம்மாறியவர்கள் இருக்கிறார்கள். இது நம் எல்லோருக்கும் தெரியும், தெரியாத உண்மையல்ல. அப்படி மாறிய அரிசனங்கள் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டவர்கள் என்ற முறையில் கொடுக்கப்பட்டு வரும் உதவி அவர்களுக்குக் கிடைக்காமல் இருந்துகொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு முன்னும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் கூட இந்தப் பிரச்சினைபற்றி ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்றத்திலே பேசப்பட்டு வந்திருக்கிறது. அப்பொழுதும் அதனுடைய உண்மைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு . . .

மாண்புமிகு திரு. க. ராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்க வர்களாகத் தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறினால், அவர்களை ஒரு தலைமுறைக்குப் பின்தங்கியவர்களாக ஏற்றுக்கொண்டு, அதற்காக உபகாரச் சம்பளம், மற்றச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவர்களை அரிசனங்கள் பட்டியலிலே வைத்துக்கொள்வதற்கு அரசியல் சட்டத்தில் இடமில்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தலைமுறைக்கு என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் எத்தனை வருடங்கள் என்று எனக்குப் புரியவில்லை. அப்படி எடுத்துக்கொண்டாலும், தமிழ் நாடு சம்பந்தப்பட்டமட்டிலே, புதிதாக மதம் மாறியவர்கள் என்று பார்க்கும்போது, பல வருடங்களுக்கு முன்னிலிருந்து கணக்கிட்டாலும், நூற்றுக்கு ஒருவர் கூட இந்த வரிசையில் வர முடியாது. ஆகையினால் அரசியல் சாசனம் சம்பந்தப்பட்டமட்டிலே, மத்திய சர்க்கார் அதை ஒப்புக்கொள்ளாது என்ற காரணத்தாலே பார்த்தால், அவர்கள் உதவி பெறுவதற்கு வாய்ப்பில்லை என்பது நித்தியக் கண்டம் பூர்ண ஆயுசு என்றுதான் தோன்றுகிறது. அவர்களுடைய நல்வாழ்வுக்கு உதவ அரசியல் சட்டம் இடம் கொடுக்கவில்லை யென்றே வேறு காரணங்கள் தடையாக இருக்கின்றன என்றே நாம் கருதி, அப்படியே விட்டுவிடாமல், அவர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களை, அவர் களுடைய ஏழ்மை நிலையை மனதிலே கொண்டு, மேலும் தொடர்ந்து மத்திய சர்க்காரை வற்புறுத்தி, அதற்குச் சட்டபூர்வமான திருத்தங்களைக் கொண்டு வரும்படியான ஏற்பாட்டைச் செய்து, அவர்களுடைய நல்வாழ்வுக்குத் துணை புரிவது மிக அவசியம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

நம்முடைய தமிழ் நாடு சம்பந்தப்பட்டமட்டிலே காட்டுவளம் கடந்த பல ஆண்டுகளாக மிகமிகக் குறைந்து வருகிறது. எங்கள் பகுதியிலே ஸ்ரீவில்லி புத்தூரில் நான்கைந்து ஆண்டுகளாக மழையே இல்லை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள ஃபாரஸ்டில் மரங்களை வெட்டுவது குத்தகைக்கு விடப்படுகிறது. அதற்குக் காரணம், ஓரளவுக்கு அதிகமாக உள்ள மரங்களை வெட்டாமல் காலம் கடந்துகொண்டே போகுமானால் அம்மரங்கள் களவு போகாமல் தடுப்பது கஷ்டம்; வருமானம் குறைந்துவிடும்

அவர்கள்தான் இந்த நிவாரண நிதியை அளித்துக் காப்பாற்றினர். அதே போல் எங்கேயாவது தொழிற்சாலைகள் எப்பொழுதாவது மூடப்படுமானால் அப்படி மூடிக்கிடக்கின்றபோது, அவர்களுக்கு unemployment dole கொடுக்கும்படி பாதிக்கப்படுகின்ற நேரத்தில் நிவாரணச் சலுகை தரத்தக்க வகையில் நிரந்தரமாக ஒரு திட்டத்தை உருவாக்க முடியுமா என்று ஆராய்ந்து, அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்வேன். அதே போல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதிக்குத் தந்து கோவைப் பகுதிப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு நல்லவகையில் செய்திருப்பது போல் மேலும் சென்காட்டை—பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் பஞ்சாலைத் தொழி லாளர்களுக்கும் இந்த நிவாரண நிதி கொடுப்பதற்கான நிலைமையை ஏற்படு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கவனப்படுத்திக்கொள்ள விரும்பு கிறேன். மத்திய அரசினுடைய பொதுத் துறை தொழில்களான நெய்வேலி நிலக்கரி சுரங்கம், ஆவடி டேங்க் பேக்டரி போன்ற பொதுத் துறைத் தொழிற் சாலைகளை இங்கே நடத்தி வருகின்றபோது, அவற்றில் தொழில் தகராறுகள் எழுந்தால், அவற்றில் தீர்வு காண்பதற்கு இங்கே உள்ளவர்கள் டெல்லிக்கு அலைந்து, இன்னும் பல்வேறு காரணங்களால் தாமதமாகின்ற நிலைமை இருந்து வருகிறது. எனவே பொதுத் துறை தொழில்களின் நிர்வாகப் பொறுப்பில் தமிழக அரசுக்கு நேரடியான பாகத்தை, பங்கை அளித்து விடுவதன் மூலமாக அந்தத் துறை தொழில்களில் ஈடுபட்டு, தொழிலாளர்களின்மீது நல்ல நோக்க முள்ள இந்த அரசு பிரச்னைகளுக்குத் தக்க பரிகாரம் காணத்தக்க வகையில் மத்திய அரசினுடைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் போனஸ் சட்டத்தில் குறை இருப்பதாக நிரம்ப நாளாகச் சொல்கிறார்கள். குறைந்த பட்ச போனஸ் 8.33 சத விதம் வேண்டு மென்று தொழிலாளர்கள் மிகவும் வலுவாக போராட்டங்களும், ஆர்ப்பாட் டங்களும், கிளர்ச்சிகளும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். தொழிலாளர் முன் னேற்ற சங்கப் போர்வையின் மூலமாக நாடெங்கிலும் ஊர்வலங்கள்—பொதுக் கூட்டங்கள் நடத்தி தீர்மானங்கள் தந்தி மூலம் கொடுக்கப்பட்டன. தமிழக அரசுக்கும் அப்படிக் கொடுக்கப்பட்ட தந்தியின் நகல் தரப்பட்டது. அதே போல் நம்முடைய மாநில அரசு நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் மூலமாக அவர்கள் டெல்லிக்குச் சென்று வலியுறுத்தி எடுத்துச் சொல்லி, குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவிதம் கொடுக்க வேண்டும் என்று பாட் டாளிகளின் கூட்டாளிகளான இந்த அரசினுடைய கருத்தைச் சொல்லி வந்தார் கள். இருந்தாலும், மத்தியிலிருந்து அதற்கு எந்த விதப் பரிகாரமும் இதுவரை

அறிவிக்கப்படவில்லை. இந்த ஏப்ரல் மாதத்திற்குள் மிக சிக்கிரமாக இந்தச் சட்டம் திருத்தப்படாவிட்டால், தொழில்துறை போனஸ் பிரச்சினைகள், தகராறுகள் இந்த ஆண்டும் கூட அதிகமாகி, தொழில் அமைதி கெட்டுவிடுவதற்கான நிலைமை இருப்பதை மத்திய அரசு அறிந்துகொண்டு, திருத்தத்தைச் செய்து, உடனடியான பரிகாரம் காண ஆவன செய்வதவசியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் உயர்ந்த பட்ச போனஸ் 20 சதவிகிதம் என்று சட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். போனஸ்-க்கு உச்சவரம்பு விதிக்கலாமா? மிச்சமிருக்கிறதல்லவா உச்சவரம்பு விதிக்கலாம். தொழிலாளர்கள் மிச்சமே இல்லாதவர்கள், தொடர்ந்து தரித்திரத்தில் இருக்கின்றவர்கள், அவர்களுக்கு உச்சவரம்பு வேண்டாம் என்று கேட்டு வருகிறோம். அதற்கும் மத்திய அரசுக்கே அதிகாரம் இருப்பதால், அதில் உடனடிப் பரிகாரம் காணவிட்டால், தொழிலாளர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆட்படுத்தப்படுவார்கள் என்ற எண்ணத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், பெரும் இயந்திரத் தொழில், பழமையான இயந்திரத் தொழில் பஞ்சாலைத் தொழில். அந்தத் தொழில் மூலம் பஞ்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு மட்டும் வாழ்வு கிடைக்கவில்லை. நெசவாளர்களுக்கும் நல்வாழ்வு அளிக்கும் வகையில் அந்தத் தொழில் அமைந்திருக்கிறது. தமிழகத்தில் உள்ள 205 பஞ்சாலைகளில் மிகவும் குறைந்த அளவு உள்ளவற்றைத் தவிர பாக்கி அத்தனையும் நூற்பு ஆலைகள் தான். நூல்களை நூற்க முடியுமே தவிர, நெசவு செய்ய முடியாது. நூற்ற நூல்கள் வடமாநிலங்களுக்கு விற்கப்பட்டு, அங்கே அவைகள் துணிகளாகி மீண்டும் இங்கே துணிச் சந்தைக்கு நம்முடைய தமிழகத்திற்கு வருகின்றன. அந்த நிலைமை நீடித்தால், இந்தத் தொழில் அடிக்கடி சோதனைக்கு ஆட்படுத்தப்படும். எனவே ஒரு நூல்-இண்டியா கமிஷன், அகில இந்திய அடிப்படையில் ஒரு கமிஷன் அமைத்து பஞ்சாலைத் தொழில்களின் உடனடிப் பிரச்னைகள் என்ன, நிரந்தரமான பிரச்னைகள் என்ன என்று ஆராயவும் இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய பஞ்சாலைகள் தொடர்ந்து நடக்கவும், அவை நிலை பெறவும், அதிலே குறிப்பாகத் தமிழ் நாட்டில் இருக்கின்ற 205 நூற்பு ஆலைகள் எப்பொழுதுமே மூடி விடாமல் நிரந்தரமாக நிலைபெற்று நடக்கின்ற வகையில் அந்தக் கமிஷனின் பணிகள் அமைய வேண்டும் என்ற என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த பத்து தினங்களாகத் தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழிலாளர்களில் மூன்று இலட்சம் பேர் மனம் கொதித்து வேதனையோடு இருக்கிறார்கள். என்ன காரணம்? அவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியம் சம்பளம் என்ற முறையில்

மட்டும் கொடுப்பதல்ல. அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி என்ற இரண்டு கணக்கிலும் கொடுக்கிறார்கள். பஞ்சப்படி என்னும்போது பஞ்சம் சில இடங்களில் வரும். பின் போகும். ஆனால் பஞ்சப்படி என்பது இங்கே நிரந்தரமாக, காலமெல்லாம் இருக்கிறது. நாடு சுதந்திரமடைந்து 25 ஆண்டுகளான பின்னரும் இந்த பஞ்சப்படி நிலையாக இருந்து வருகிறது. வாழ்க்கைச் செலவு புள்ளி கணக்கிடப்பட்டு அதன்படி பஞ்சப்படி கொடுக்கப் படுகிறது. தமிழ் நாட்டினுடைய அரசு விற்பனை நிலைமை என்ன, என்னென்ன மார்க்கெட் நிலைமை இருக்கிறது, என்னென்ன விவரங்கள் கிடைத்திருக்கின்றன என்று கணக்கெடுத்து, இது தான் வாழ்க்கைச் செலவுப் புள்ளி என்று மாநில அரசு தந்து விட முடியாது. சிம்லாவிலே மத்திய அரசினுடைய ஸ்தாபனம் சொல்வதையொட்டி இந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி அமைய வேண்டியதாக இருக்கின்றது. இம்மாதம் 38 புள்ளிகள் குறைந்திருக்கிறதே, ஏன் குறைந்தது, எதனால் குறைந்தது, இந்த மாதச் சம்பளத்தில் ரூபாய் பத்திலிருந்து இருபத்தி ஐந்து வரையில் குறையுமே என்கின்ற வேதனை தொழிலாளர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிறது. நான் இத்தனையும் இங்கே குறிப்பிடுகின்றதற்குக் காரணம், மத்திய அரசு. அதன் ஸ்தாபனம் சிம்லாவிலே இருப்பது. இதிலும் அதனுடைய அதிகாரம் அங்கேயே நீடித்திருப்பது அவசியமில்லை. அப்படிப் பட்ட பிரச்சினைகளில் அதிகாரங்கள் பாவலாகுகின்ற முறை அழுல் செய்யப்பட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டு விடுகிறபோதும் இப்படித்தான். இங்கே அப்படி மூடப்பட்டுவிட்டால் இந்த அரசுக்கு இருக்கின்ற அக்கறையும், இந்த அரசில் அமைந்திருக்கிற அமைச்சர்களுக்கு இருக்கின்ற அக்கறையும், டாக்டர் முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையும் எவரும் கேட்பதற்கு முன்னமேயே உடனடியாகத் தொழிற்சாலைகளை நாம் எடுத்துக்கொண்டால் என்ன என்று நினைக்கும் அளவுக்கு இருக்கிறது. அப்படி நினைத்ததன்படி சதர்ன் ஸ்பின்னர்ஸ்ல்ஸ் இந்த அரசின் சார்பில் எற்று நடத்தப்பட்டது. டெக்ஸ்டூல் தொழிற்சாலைக்குப் பரிகாரம் காணப்படவுள்ளது. மூடப்பட்ட பஞ்சாலைகளில் ஐந்து பஞ்சாலைகளை ஏற்கனவே அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது. இரண்டு பஞ்சாலைகளை அண்மையில் எற்றுக்கொள்வதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்றுக்கொண்ட ஐந்து பஞ்சாலைகளுக்கு மத்திய அரசு தரவேண்டிய பாக்கிப் பணத்தை உடனடியாகத் தராததால், இப்படிப்பட்ட காரியங்களில் அரசுக்கு இருக்கின்ற உற்சாகம் குறைகிறது என்பது மட்டுமல்ல, அந்த அதிகாரத்தையும் மாநிலத்திற்கு வழங்கிட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்தத் தொழிற்சாலையையும் மூடிவிட்டால், அதை ஏற்றுக்கொண்டு நடத்துகின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கவேண்டும்.

[திரு. காட்டூர் கோபால்] [30th March 1972

தொழிற்சாலைகள் எல் மூடப்படுகின்றன என்ற நிலைமையைப் பார்த்தால், பற்றாக்குறை ஏற்படுவதற்கு கொண்ட யார் யாருக்கோ எல்லாம் கேசென்ஸ் கொடுத்து விடுவதும் ஒரு காரணமாகும். தொழிற்சாலைகளுக்கு கேசென்ஸ் வழங்குகின்ற அதிகாரம் டெல்லியிலே இருக்கிறது. அது மாநில அரசுக்கு வரவேண்டும். அப்படி வந்து, யாருக்கு கேசென்ஸ் வழங்க வேண்டும் என்று ஆராய்ந்து பார்த்துக்கொடுத்தால், இப்படி மூடுகிற நிலைமை ஏற்படாது. அப்படி விட்டாலும் அதை எற்றுக்கொள்ளத்தக்க வகையில் இந்த மாநில அரசு இருக்கிறது.

கோவையில் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டப்பட்டுள்ளது. அது கட்டப் படுகிறபோது, மத்திய சர்க்கார் அனுமதி பெற்றுத் தான் கட்டினோம். மத்திய சர்க்காரும் இ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனும் மருத்துவமனை கட்டுகிறபோது, படுக்கைகள் அமைக்கிறபோது, ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஆயிரம் இன் வொர்ன் பாலிதாயர்களுக்கு பதினொன்று படுக்கைகள் வீதம் மருத்துவ மனை கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். 500 படுக்கைகளோடு அந்த மருத்துவ மனை கட்டப்பட்டது. இன்றைய தினம் அந்த மருத்துவ மனை இருக்கிறது. அதே படுக்கைகள் 500-ம் இருக்கின்றன. ஆனால் அது உபயோகப்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை. டில்லியில் இருக்கிற அதிகாரி கார்ப்பொரேஷனும் அந்த மருத்துவ மனை அமைக்கப்பட்டதற்குப் பின்னர் ஆயிரம் பேர்களுக்கு நாலு படுக்கைகளை வீதம் இருந்தால் போதும், அதற்கு மேல் உபயோகப்படுத்தக் கூடாது என்று கட்டுப்பாடு போட்டுவிட்டது. இதை ஆட்சேபித்து 500 தான் இருக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் கேட்டார்கள். நம் அரசின் சார்பி லும் இந்த இ.எஸ்.ஐ. ஆய்வுக் குழுவின் சார்பிலும் மாநிலத் தொழிலாளர் நல அமைச்சராக அன்றையதினம் இருந்த திரு. வேழவேந்தன் அவர்களும் அந்தக் குழுவிலுள்ள நாமும் டெல்லிக்குச் சென்று இதற்கு ஒரு பரிகாரம் கேட்டு மாதங்கள் பலவாகிவிட்டன. ஆனால் இன்னமும் கட்டப்பட்ட மருத்துவ மனை யில் இருக்கிற படுக்கைகள் அத்தனையையும் உபயோகிக்கலாம் என்ற அனுமதி கொடுக்கப்படவில்லை என்பதை நான் இப்போது தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே தான், மாநிலத்திற்கு உரிய முழுமையான அதிகாரங்கள் இன்று அவசி யம் என்பதோடு, இந்த இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனில் கட்டப்பட்ட மருத்துவ மனையில் இருக்கிற 500 படுக்கைகளையும் உபயோகத்திற்குக் கொண்டு வரவேண் டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன். மதுரை இ.எஸ்.ஐ. மருத்துவ மனையும் இதே விதத அடிப்படையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றொன்று, தொழிலதிகாரிகளின் அலுவலகங்களும் தொழிலாளர் துணை ஆணையாளர் அலுவலகமும் தொழில் நீதி மன்றமும் கோவையைப்

30th March 1972] [திரு. காட்டூர் கோபால்]

பொறுத்தவரை நாலு கல் தொலைவில் தனித்தனியாக இருக்கின்றன. இந்தத் தொழிலதிகாரிகளுடைய அனைத்து அலுவலகங்களும் தொழில் நீதிமன்றமும் ஒரே காம்பவுண்டில் ஒரே கட்டிடத்தில் அமைகிற வாய்ப்பு கோவையிலும் அதைப் போல மதுரையிலும், திருச்சியிலும், சென்னையிலும் அமைந்தால் வேலைவெறு அவசியமானதாகும். இவைகள் தொழிற்துறை சம்பந்தப்பட்ட இலாக்காக்கள். லேபர் ஆபிசர் ஒன்று, இரண்டு, மூன்று, இவர்களின் அலு வலகங்களும் துணைத் தொழிலாளர் ஆணையாளர் அலுவலகமும், அதைப் போல தொழிற்சாலை ஆய்வாளர் போன்ற அதிகாரிகள், இப்படி தொழிலாளர் சம்பந் தப்பட்ட அனைத்து அதிகாரிகள் அலுவலகங்களும் ஒரே இடத்தில் நல்ல வகை யில் அமைக்கப்படுவதற்கான வழி ஏற்படுவது அவசியம் என்று கருதுகிறேன். இதைப்பற்றிப் பேசுகிற நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறபோது தான் மற்றொன்றையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் நல்ல திட்டங் களைத் தீட்டி நிர்மாணப் பணிகள் நடந்து வருகின்றன. நீண்டகாலம் தீர் மானிப்பதுகளில் வேலை செய்து வரும் பாட்டாளிகளுக்கு இந்த ஐந்தாண்டு களாக ஆறாண்டுகளாகத் தான் நம்பிக்கை பிறந்திருக்கிறது, நமக்கும் வாழ்வு கிடைக்கும் என்று. உதாரணத்திற்கு, மின்வாரியத்தில் பணியாற்றுகிற 34 ஆயிரம் தினக்கூலித் தொழிலாளர்கள் இப்போதுதான் நமக்கு வேலையே போய் விடாது, எப்படியும் வேலை இருந்து கொண்டு இருக்கும் என்று நிம்மதியோடு இருக்கிறார்கள். அவர்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருபவர் களுக்கு வேலை நிரந்தரம் ஏற்படுகிற வகையில் நல்ல பலன்கள் கிடைக்கின்ற விதத்திலும் பரிகாரம் கிடைக்கவேண்டும். அவையெல்லாம் இப்போது தான் இந்த தொழிலாளர் அரசினால்தான் ஏற்படக்கூடும், அதைப் போல, சாலை போக்குவரத்துத் தொழிலாளர்கள் 17 ஆயிரம் பேர் இப்படிப்பட்ட நல்ல வசதி களைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு சேலத்தைச் சேர்ந்த அவர்களே, சாதாரணமாக இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது விவாதம் நடைபெறுவது வழக்கமில்லை. ஆனால் இன்று என்னவோ வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசு வது போலவே சபையில் பேச்சுக்கள் நடந்திருக்கின்றன.

மிஸ்டர் சேர்மன்: உறுப்பினர்கள் பேசியாகிவிட்டது. அமைச்சர் பதில் சொன்ன பிறகு, யாரும் கேள்வி கேட்கக்கூடாது.

திரு. கே. ராஜாராம்: சில சமயங்களில் விளக்கம் கேட்பதும் அமைச்சரின் பதிலும் அரசாங்கத்திற்கு அந்தத் துறைக்கு நன்மையாகவே இருக்கும். விளக் கம்கூட கேட்க வேண்டாம் என்று தடை செய்து விடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[30th March 1972

Mr. CHAIRMAN : The discussion on an Appropriation Bill should be confined to the items of grants included in the Bill and not be in the nature of a general discussion of the Budget dealing with all matters of administration.

திரு. கே. ராஜாராம் : அப்படியே எற்றுக்கொள்ளுகிறேன். மிக விரிவாகவும் எல்லைக்குப் போய்விடுகிறது. ஆகிய எல்லாத் துறைகளையும் இந்த 'அப்ரோபிரியேஷன் பில்' 'கவர்' பண்ணுகிறது. இந்த வளைத்தின் கீழ் பேச முடியாததே இல்லை என்று சொல்லக் கூடிய அளவு இடம் கொடுத்து விடும் என்பதையும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

தொழிற் கொள்கை சம்பந்தமாக நான் தொழிலமைச்சரிடம் ஒரு வேண்டுகோள் விட்டேன். பொதுவாக மற்ற மாநிலங்களில் இருப்பது போன்று புதிய தொழில்கள ஆரம்பிப்பதற்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லினேன். கொடுத்திருக்கிறோம் என்று கூறி பிரகாட் என்ற அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே நான் விளக்கிக் கூறிவிட்டேன். இப்போது அவர் இல்லாவிட்டாலும், நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் முன்னால் அமர்ந்துள்ளார். எட்டு மாவட்டங்களில் அதாவது தென்னாற்காடு, வட ஆர்காடு, இராமநாதபுரம், மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் மட்டும் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு விற்பனை வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலம், கோவை, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்கள் அதிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றன. என் இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இன்னின்ன ஜில்லாக்கள் 'பாக்வேர்ட் டிஸ்ட்ரிக்ட்' என்று எந்த புள்ளிவிவரத்தை வைத்துச் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. செங்கற்பட்டு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், தூந்தல்லியிலிருந்து செயிண்ட் தாமஸ் மவுண்ட் வரைதான் தொழிற்சாலைகள் உள்ளன, மற்ற இடங்களில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை. இந்த ஜில்லாவை அந்தச் சலுகையிலிருந்து ஒதுக்குவது நல்லதல்ல. திருநெல்வேலியையும் ஒரு தொழில் முன்னேற்றமுள்ள மாவட்டம் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. க. ராசாராம் : டி.வி.எஸ். கம்பெனிகள் பாடியில் செங்கற்பட்டுக்குள்தான் இருக்கின்றன.

திரு. கே. ராஜாராம் : இந்தப் பகுதிகளைச் சென்னை ஜில்லாவில் சேர்த்துக் கொண்டால் கூட பாவமில்லை. விரிச்சலுகை கொடுப்பதனால் அரசாங்கத்திற்கு ஒரு இழப்பு இல்லை. கடனுதவி கொடுக்கலாம். முதலில் 5 வருடங்களுக்கு விற்பனை வரி வாங்க வேண்டியதில்லை. உற்பத்தி ஆரம்பித்த பிறகு ஐந்து

30th March 1972] [திரு. கே. ராஜாராம்]

ஆண்டுகளுக்குப் பின்னால் தவணை முறையில் கடனை பாவித்து திருப்பி வாங்கு கிறோம். இந்தச் சலுகையை எல்லா இடங்களுக்கும் கிடைக்கச் செய்யலாம் என்பதைத் தான் கூற விரும்புகிறேன். சென்னையிலோ கோவையிலோ தொழில் அபிவிருத்தி அடைந்த ஜில்லாக்களிலோ இந்தத் தொழிற் சலுகை இல்லை யென்று சொல்வதைவிட அங்கே தொழில்களுக்கு லீசென்ஸ் கொடுக்காமலே நீறுத்திவிடலாம். கொடுத்துவிட்டு இந்தச் சலுகை இல்லையென்று சொல்வது சரியல்ல. எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும், அவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் இந்த விற்பனை வரிச்சலுகை தருவதில் அரசாங்கத்துக்கு இழப்பு ஒன்றுமில்லை. 8 மாவட்டங்களுக்குக் கொடுத்த மாதிரி எல்லா மாவட்டங்களுக்கும் விற்பனை வரியில் சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 'அசட்ஸ்' இலும் செஸ்ட்ரிக்ஷன் என்று சொல்லும்போது அவர்களுடைய மொத்த நிலையான அசட்ஸ் அல்லது மொத்துக்களில் 8 சதவீதத்திற்கு மேல் விற்பனை வரி போகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இரண்டு இலட்சம் போட்டு ஒரு சிறு தொழிலை ஆரம்பித்தால், உற்பத்திப் பொருள் 4 இலட்சத்துக்குக் கூட ஆகும். ஆகவே பிக்செட் அசட்ஸில் 8 சதவிகிதம் என்பது போதாது. அதைத் தளர்த்த வேண்டும். அதை அரசு ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

6-20 p.m.

இன்று ஒரு செய்தியை நான் வானொலியில் கேட்டேன். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. 'ரூரல் எம்பிளாய்மெண்ட் ஸ்கீம்' இந்த தேசத்திலேயே மகாராஷ்டிரத்தில்தான் முதல் முதலாக அமுலாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நமது வரவு-செலவுத் திட்டத்தில் 'ரூரல் எம்பிளாய்மெண்ட் ஸ்கீம்' கொண்டு வந்துவிட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் படித்தார்கள். மஹாராஷ்டிரத்தில் மட்டும் 'ரூரல் எம்பிளாய்மெண்ட் ஸ்கீம்' அமுலாக்கப்பட்டிருக்கிறது என்று வானொலியில் சொன்னது என் என்று எனக்குப் புரியவில்லை. நம் மாநிலத்தில் அமுலாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரியாதா, ஆல் இந்தியா ரேடியோவுக்குத் தெரியாதா, அல்லது அந்தத் திட்டம் வேறு என்று அறிய விரும்புகிறேன். Maharashtra is the first State to implement Rural Employment Scheme". என்று சொல்லுகிறார்கள். ஆகவே நாமும் அம்மாதிரி 'ரூரல் எம்பிளாய்மெண்ட் ஸ்கீம்' கொண்டுவருவதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வேறு, அது வேறு என்று அறிய விரும்புகிறேன்.

அரசியல் நியாகிகள் விஷயத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய தாராள மனப்பான்மையை நாம் ஒன்றும் குறைத்து மதிக்கவில்லை. அவர்கள் நல்ல முறையில் நடந்திருக்கிறார்கள். ஆனால் சில பேர்களுடைய

[திரு. கே. ராஜாராம்] [30th March 1972

மனக்கஷ்டத்தை முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வரிசையில் வரக்கூடியவர்கள் மாதிலம் பூராவும் 50, 60 பேர்தான் இருப்பார்கள். இந்த 50, 60 பேர்களும் உண்மையிலேயே சிறைக்குச் சென்றவர்கள். ஆனால் ரிக்கார்ட் இல்லை. ரிக்கார்டுகளே பரித்துவிட்டதாகச் சிறை அதிகாரிகள் சொல்லுகிறார்கள். மேலும் இவர்கள் ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் எனப் பல்வேறு வகைகளில் சிறையில் இருந்திருக்கிறார்கள். யாராவது ஒரு பொறுப்பான அதிகாரியைப் போட்டு, அவர்களை நன்றாக விசாரித்து, அவர்களுக்கும் மாதம் 50 ரூபாய் பென்ஷன் கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும். இதைப் பெரிய காரியமாகச் செய்யவேண்டும். இப்படிப் பெறுகிறவர்கள் 50, 60 பேர்தான் இருப்பார்கள். வருடாயிரம் பேருக்குக் கொடுக்கும்பொழுது இந்த 50 பேருக்கு மட்டும் இல்லையென்று கூற வேண்டியதில்லை. அதையும் பார்த்து அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக இன்று எனக்கு விருதுநகரிலிருந்து ஒரு தபால் வந்திருக்கிறது. பழங்கால தேசபக்தர் திரு. ஆர். டி. பி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் ஏப்ரல் 15-ம் தேதியிலிருந்து இறுதிவரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அந்தத் தபாலில் சொல்லப்பட்டிருக்கிறது. மதுவிலக்கு ரத்தானது ரத்தாகிவிட்டது. இதற்காக ஒருவர், அதுவும் பழம்பெரும் தேசபக்தர் மதுவிலக்கு ரத்தானதை ரத்து செய்யவேண்டுமென்று சொல்லி உண்ணாவிரதம் இருந்து மடிவது நமக்கு நல்லதல்ல. இந்த உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அந்த முறையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக அவர் உடனே ஒரு தேர்தல் நடத்தி, மக்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். மதுவிலக்கு ரத்து செய்ததை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி உண்ணாவிரதம் இருக்கப்போவதாக எழுதியிருக்கிறார்கள். அதற்காக யாரை யாவது அனுப்பியோ அல்லது முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்றோ அவரைத் திருப்தி செய்து இதற்காக இந்த உண்ணாவிரதம் வேண்டாம் என்று நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாம்பலம் பக்கத்தில் குருத்துவாரத்திற்குப் பின்னால் பெரிய உயர்மட்ட குடி தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டுள்ளது. அதைச் சுற்றிலும் எங்கும் ஆபாசமான நிலையில் 'ப்ரைவேஸ்' தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. இது போக குடிசைவாழ் மக்கள் வெளியே போகாமல் அங்கேயே இருக்கிறார்கள். இந்த இடத்தைச் சுகாதாரமான இடமாக மாற்றி, குடி தண்ணீர் தேக்குவதற்கு முன்னால், சுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆபாசமான இடத்தில் தண்ணீர்த் தொட்டி கட்டுவதினால் சுகாதாரம் கெடாமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

30th March 1972] [திரு. கே. ராஜாராம்]

அடுத்து, காவிரி நீர்த் தகராறு விஷயம். இதற்காக ஏதோ கோர்ட்டுக்குப் போனது போய்விட்டோம். மத்திய அரசின் சார்பாக மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களும், நமது மாநில பொதுப் பணித் துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்களும் அடுத்த மாநில முதலமைச்சர் அவர்களும் முன்னாலே இங்கே பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதில் நீர்வு காணுமல்தான் கோர்ட்டுக்குப் போய்விட்டோம். இப்பொழுது மத்திய அரசைச் சேர்ந்தவர்களே அந்த மாநிலத்திலும் அரசாங்கம் அமைத்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுதாவது திரு. கே. எல். ராவ் அவர்கள் முயற்சி செய்து, போன கேசை நிறுத்தி, மீண்டும் சுமுகமான நீர்வு ஏற்படுத்த வேண்டியது மிகமிக அவசியம். கோர்ட்டில் கேஸ் இருப்பதால் பேச வேண்டியதில்லை என்றுதான் இருந்தேன். ஆனால் பத்து நாட்களாகப் பத்திரிகையில் வரக்கூடிய செய்திகள் தமிழ் நாட்டைச் சேர்ந்த எவருக்கும் எரிச்சல் உண்டு பண்ணுது இருக்காது. இந்தத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய மத்திய அரசு அதற்காக 10 கோடி, 20 கோடி என்று தொகை ஒதுக்கியிருப்பதாகப் பத்திரிக்கையில் வருவது 'ஒட்டகக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. அதாவது காவிரிக்குக் குறுக்கே அணை கட்டக் கூடாது என்பது விவகாரம். அந்த அணையை மத்திய அரசின் பிளானிங் கமிஷனில் கிளியரன்ஸ்கூட வாங்காமல் கட்டுகிறார்கள். அப்படியிருக்கும்போது, அதற்காக மத்திய அரசிலிருந்து தொகை ஒதுக்குகிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்தால், அதைத் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக அணை கட்டுவதற்காக மத்திய அரசிலிருந்து கொடுக்கும் நிதியை நிறுத்த வேண்டுமென்று இந்த இரண்டு சட்டசபைகளின் சார்பிலும் எல்லோரும் வலியுறுத்தி மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அதே நேரத்தில் இதில் ஒரு தீர்வு காண மீண்டும் டாக்டர் கே. எல். ராவ் அவர்களின் ஒத்துழைப்பைக் கோர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு நற்கருத்துக்கள் பலவற்றை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டு அவைகளில் வைக்கப்பட்ட நிதி அறிக்கை, இங்கு பேசிய உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டதைப் போல, சமதர்மத் திட்டங்களை வேகமாக நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படக் கூடிய வகையில் அமைந்துள்ளது

[டாக்டர் மு. கருணாநிதி] [30th March 1972

என்பதையும் நாம் நடத்துகின்ற சோஷலிச இலட்சியப் பயணத்தில் இவைகள் சில கட்டங்களாக அமைந்திருக்கின்றன என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இந்த அரசு உருவாக்கப்பட்ட காலம் தொட்டு இது வரையில் இந்த அரசு வகுத்துள்ள திட்டங்கள் எதுவானாலும், அவைகள் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற மக்களுடைய எதிர்கால வாழ்வினை மையமாக வைத்து வகுக்கப்படுகின்றன, நிறைவேற்றப்படுகின்றன என்பதனை நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது சொல் அளவிலே இல்லாமல் செயல் அளவிலே காட்டப்பட்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் நாட்டு மக்களும் நன்றாக அறிவார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையிலேகூட, ஏற்கெனவே நம்முடைய சரித்திரத்திலேயே ஓர் அங்கமாக முன்பு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்ட். **ஏக்கர்** என்ற அளவுக்கு மாற்றியது மாத்திரமல்லாமல், குடும்பத்திலே 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர்வரை அனுமதித்தார்கள் என்று இருந்ததைக் கூட இப்போது 60-லுக் குறைத்து 40 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற அளவிலே வரையறுத்து அறிவித்திருக்கின்றோம். விதிவிலக்குகளில் ஒளிந்துகொண்டு தப்பித்துவிட்ட பல நிலப்பிரபுக்களிடமிருந்து எழை எளிய மக்களுக்கு நிலங்கள் விவசாயத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் ஏற்கெனவே சில விதிவிலக்குகளை அகற்றி மேய்ச்சல் காடுகள், கரும்புத் தோட்டங்கள் இவைகளை உச்சவரம்புக்கு உள்ளாகியதோடு மாத்திரமல்லாமல், அறக்கட்டளைகளின் பேரில் ஏராளமான நிலங்களை மறைத்து வைத்து உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டவர்களை வெளியிலே காட்டுகின்ற வகையில் அறக்கட்டளைக்குரிய விதிவிலக்குகளை ரத்து செய்வதற்கான சட்டத்தை நாம் விரைவில் நிறைவேற்ற இருக்கிறோம்.

1937-ஆம் ஆண்டு, ராஜாஜி அவர்களுடைய காலத்திலே, விவசாயிகளுக்கான கடன் நிவாரணச் சட்டம் ஒன்று வந்தது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில்
6-30 விவசாயிகளுக்கு மாத்திரமல்லாமல் தொழிலாளிகள், உழைப்பாளர்கள், அரசு
p.m. அலுவலாளர்கள் இவர்களுக்கும் கடன் நிவாரணச் சட்டம் தேவை என்ற அளவுக்கு நாம் அறிவித்து அதையும் விரைவிலேயே நிறைவேற்றவிருக்கின்றோம். இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தையும் குத்தகைதாரர்களுடைய கடன் நிவாரணச் சட்டத்தையும் ஒன்றுக்கி குட்டையைக் குழப்பிக்கொண்டு சில பேர்கள் குறிப்பாக கடன் நிவாரணச் சட்டத்தின் ஆரம்ப கர்த்தாவான ராஜாஜி அவர்களே கூட சில தவறான கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்தது தர்மமான சட்டம் என்றும் இப்போது கொண்டுவரப்பட்டிருப்பது அதர்மமான சட்டம் என்றும் குறை கூறியிருக்கிறார்கள். குத்தகை

30th March 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

காரர்களுடைய கடன் நிவாரணத்துக்காக இந்த அரசு ஏற்படுத்தியிருக்கின்ற திட்டம் பல்லாயிரக்கணக்கான குத்தகைதாரர்களுக்கு மகிழ்ச்சியைத் தரவல்லது என்பதை மாற்றுக் கட்சியிலே இருக்கின்றவர்களும், குறிப்பாக முன்பு பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுடைய, தொழிலாளர்களுடைய குடியிருப்பு மனைகளை தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம், ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்த மாக்குகின்ற அந்தத் திட்டமும் இப்போது நிறைவேற்றப்பட்டு ஆறு ஆயிரத் துக்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனை சொந்த மாக ஆக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணி அதிகாரிகள் மட்டத்தில் தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஏற்கனவே பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியதன் மூலமாகவும் பேருந் துகளுக்கு உச்சவரம்பு நிர்ணயித்ததன் மூலமாகவும், 50-க்கு மேற்பட்ட பேருந்துகளைக்கொண்ட நிறுவனங்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்குவது என்கிற திட்டத்தின் மூலமாகவும் இந்த அரசு சமதர்ம சமுதாயத்திற்கு வழி வகுத்திருக்கிறது. அதன் தொடர்பாக புதிய கார்ப்பரேஷன்கள், வாரியங்கள் அமைக்கப்பட்டு அவைகள் இன்றைக்கு நல்ல முறையிலே நடைபெறத் தொடங்கியிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

சமுதாயத்தில் எல்லா வகையிலும் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழ் வதற்கு வழியில்லாமல் வாடிக்கொண்டிருக்கின்ற, பிச்சை எடுக்கின்ற நிலையிலே உள்ள மக்களுக்கு வாழ வழிவகுப்பதற்காக மறுவாழ்வுத்திட்டம் ஒன்றினை இந்த அரசு அறிமுகப்படுத்தி, அந்தப் பணிகள் செம்மையாக நடைபெற்று வருகின்றன என்பதையும் அனைவரும் நன்றாக அறிவார்கள்.

ஆகவே, சமுதாயத்திலே பின்தங்கியிருக்கின்ற, தாழ்ந்த நிலையிலே இருக் கின்ற, வாழ வகையற்றிருக்கின்ற மக்களை அடிப்படையாக வைத்துத் தீட்டப் படுகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் நிதி ஒதுக்கிட்டு, உங்க ளுடைய சம்மதத்தைப் பெறவேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடு விவாதத்திலே காலையிலே நான் சட்டப் பேரவையிலே அறிவித்திருக்கின்ற சில மகிழ்ச்சிகரமான செய்திகளை இங்கே அறிவிப்பது சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன். வாகனங்களுக்கு பத்து சதம் சர் சார்ஜ் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருந்தது. கடந்த சில நாட்க ளாக லாரிச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய சங்கத்தின் சார்பிலே என்னைச் சந்தித்து அந்த சர்சார்ஜ் குறைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்

[டாக்டர் மு. கருணாநிதி] [30th March 1972

கள். அறவே நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகூட இருக்கிறது. ஆனால் மக்களுக்கு நன்மைகள் பலவற்றைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்ற இந்த அரசு இது போன்ற சில தாங்கக்கூடிய வரிகளின் மூலமாகத்தான் வருமானம் பெற்று அந்த நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் அதை அறவே நீக்குவதாக இல்லை என்றும், லாரிகளைப் பொறுத்த வரையிலே மாத்திரம் பத்து சதவிகிதம் என்பதைக் குறைத்து ஐந்து சதவிகிதம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. காலையிலே பேரவையிலே இதை எடுத்துக்கூறியிருக்கின்றேன். இந்தப் பத்து சத விகித சர்சார்ஜில் ஸ்கூட்டர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அலுவலர் ஓய்வு பெற்றவர் மினிமம் பென்ஷன் ரூ. 30 ஆக இருந்ததை பலரும் கூறினார்கள். அவர்கள் சில அமைப்புகளை வைத்துக்கொண்டு ரூ. 50 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். 50 ஆக ஆக்கவேண்டுமென்ற ஆர்வம் அதிகம் அரசுக்கு இருந்தாலும் கஜானா இடம் தராத காரணத்தால், மூப்பது ரூபாயை நாற்பது ரூபாய் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்கள் தியாகிகளிடம் மேலும் கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய விடுதலைக்காக பாடுபட்ட தமிழ்நாட்டு தியாகிகளுக்கு இந்த அரசு ஆண்டு ஒன்றுக்குக் கிட்டத்தட்ட ரூ. 50 லட்சம் செலவிடுகின்ற அளவுக்கு மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது, 5 அல்லது 6 பேர்களுக்குத்தான் அப்போதிருந்த அரசு மானியம் கொடுத்து. அந்த அரசு தொடர்ந்திருந்திருந்தால் கொடுத்திருக்கக்கூடும். திட்டம் அந்தக் காலத்திலேதான் ஆரம்பமானது. ஆனால், இந்த அரசு முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு—அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட எண்ணுமல் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இது வரையிலே ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட தியாகிகளுக்கு அந்த மானியத் தொகையை வழங்கி வருகின்றோம். இப்போது இன்னும் சிலர் விட்டுவிடப்பட்டிருக்கிறார்கள், அவர்களும் சேர்க்கப்பட வேண்டும். அத்தோடு இந்த 50 பேர்களையும் கவனியுங்கள் என்றுதான் அவர்கள் கேட்கின்றார்கள். அவர்கள் யார், யார் என்று வெளியே சொன்னால் நன்றாக இருக்காது. சொல்ல வேண்டிவரும் நிலை ஏற்பட்டால் . . . . .

திரு. கே. ராஜாராம்: வேண்டாம் வேண்டாம். அதையெல்லாம் சொல்ல வேண்டாம்.

30th March 1972]

* 343 *Q.*—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Rajput Association, Tamil Nadu, has sought reservation of seats in professional colleges in this State; and

(*b*) if so, the details thereof ?

தமிழ்நாடு ராஜபுத்திரர்கள் சங்கம்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள தொழிற் படிப்புக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கக்கோரி தமிழ்நாடு ராஜபுத்திரர்கள் சங்கம் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சங்கத்தின் கோரிக்கை தொழில் கல்லூரிகளில் தனியாக இடம் ஒதுக்குவது பற்றியதல்ல. ஆனால், அதன் விண்ணப்பம், தொழில் கல்லூரிகளில் ஆங்கிலம் மூலம் பயிலும் மாணவர்களுடன் தமிழ் மூலம் பயிலும் மாணவர்களின் நிலையை ஒப்பு நோக்குதல் குறித்து அரசின் கொள்கை பற்றியதாகும்.

[3rd April 1972

M.Sc., Post-Graduate Course.

* 344 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU SAW. GANESAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) the mode of selection of students for admission to the M.Sc., post-graduate course;

(*b*) whether it is a fact that the students who secured university ranks in B.Sc., were not able to get seats;

(*c*) whether it is a fact that the candidates who passed the examinations with ranks and applied for the seat have not been sent even interview cards; and

(*d*) if so, the reasons therefor?

எம். எஸ்ஸி. மேற்பட்டப் படிப்பு

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு (திரு. சா. கணேசன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எம். எஸ்ஸி. மேற்பட்டப் படிப்புக்கு மாணுக்கர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு என்ன வழிமுறை கையாளப்படுகிறது?

(இ) பல்கலைக் கழக முன்னிலை வரிசையில் விசேட பி. எஸ்சி. தேறிய மாணுக்கர்கட்கு இடம் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(உ) முன்னிலை வரிசையில் தேறிய விண்ணப்பித்துக் கொண்டவர்கட்கு பேட்டிகாண சிட்டு அனுப்பப்படவில்லை என்பது உண்மையா?

(எ) அங்ஙனமாயின், காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இப்பொருள் பல்கலைக் கழகங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது.

(இ), (உ) & (எ) மதுரைப் பல்கலைக் கழக முன்னிலை வரிசையில் விசேட பி.எஸ்ஸி. தேறிய மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்பது உண்மையல்ல. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் எம். எஸ்ஸி. மேற்பட்ட படிப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள தனி வேந்தரால் நியமிக்கப்படும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களை இக்குழு பேட்டி காண்பதில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து தகவல்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

3rd April 1972]

Intermediate Course in Colleges

* 345 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether there is any proposal to revive the Intermediate Course in Colleges; and

(*b*) if so, the reason therefor and from when the proposal is to be implemented?

கல்லூரிகளில் இண்டர்மீடியட் வகுப்பு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் இண்டர்மீடியட் வகுப்பைத் திரும்பக் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன? இச்செயற்குறிப்பு எப்போது முதல் செயல்படுத்தப்பட விருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பொருள் பல்கலைக் கழகங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவையாகும். எனினும், அரசு இதைப் பல்கலைக் கழகங்களுடன் கலந்ததில் இப்பொருள் அவைகளுடைய கவனத்தில் இருப்பதாக அறிவித்துள்ளன.

Tender Notices of the Public Works Department.

* @ *Q.*—285.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU M. ARUMUGASWAMI): Will the Hon. the Chief Minister be pleased to state the basis on which the Public Works Department tender notices are given for publication in (i) Tamil and (ii) English newspapers?

பொதுப் பணித் துறையின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பொதுப் பணித் துறையின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள்—

(1) தமிழ்ச் செய்தித் தாள்களிலும்

@ Postponed from the list of Questions for 29th March 1972.

(2) ஆங்கிலச் செய்தித் தாள்களிலும் வெளியிடப்படுவதற்கு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் அல்லது ஆங்கிலச் செய்தித் தாள் ஒன்றுக்கு விளம்பரம் கொடுக்கப்பட வேண்டுமா அல்லது இரண்டிற்குமே கொடுக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்யும்போது கீழ்க்காணும் காரணங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன—

(1) பணியின் அளவு ;

(2) பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அனுப்புவதற்குத் தகுதியுள்ள ஒப்பந்தக் காரர்களின் வகை;

(3) பணி நிறைவேறும் இடத்தில் செய்தித் தாள்களில் செல்லிதழ் எண் ணிக்கையும், பணியை நிறைவேற்ற முன்வரக்கூடிய ஒப்பந்தக்காரர்கள் அதனைப் படிப்பதற்கான வாய்ப்புகளும் :

(4) செய்தித்தாள்களால் விதிக்கப்படும் விளம்பரக் கட்டண விதங்கள் பிற செய்தித் தாள்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவும் இத்துறைக்கு ஆதாய மாகவும் உள்ளனவா ?

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் பெரும்பாலும் தற்போது 'தமிழரசு'க்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றன.

Staff for the Enforcement of Excise Laws in this State.

* @ 286 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon the Chief Minister be pleased to state :

(a) the details of the staff employed for the enforcement of excise laws in this State; and

(b) the expenditure incurred for the employment of staff district-wise.

மாநிலத்தில் ஆயத்தீர்வைச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்கான பணியாளர்கள்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் ஆயத்தீர்வைச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் விவரங்கள் யாவை ?

@ Postponed from the list of Question for 29th March 1972.

(இ) இப்பணியாளர்களுக்காக மாவட்ட வாரியாகச் செலவிடப்பட்ட தொகை யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைமுன் ஒரு விவர அறிக்கை (b) வைக்கப்பட்டுள்ளது.

Home Guards

* @ 287 Q.—THIRU S. A. RAJAMANICKAM (on behalf of THIRU S. S. THENNARASU) : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) the functions of Home Guards ;

(b) the cities in which they have been formed ; and

(c) the persons in the Home Guard Force to whom cars have been provided ?

ஊர்க்காவல் படையினர்

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊர்க்காவல் (Home Guard) படையினரின் பணிகள் என்னென்ன ?

(இ) அந்தப் படை எந்தெந்த பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அப்படையில் உள்ளவர்களில், யார் யாருக்கு கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ), (இ) & (உ) விவர அறிக்கை (c) ஒன்று சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

State Raffle Tickets

* @ 288 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that privately organised syndicates are being run on State Raffle Tickets ; and

(b) if so, whether there is any proposal to ban such activities?

@ Postponed from the list of Questions for 29th March 1972.
(b) Printed as Appendix I on pages 43–45.
(c) Printed as Appendix II on pages 45–47.

[3rd April 1972

மாநிலப் பரிசுச் சீட்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறித்து, தனியார் விற்பனைக் கூட்டணிகள் இயங்கி வருகின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அத்தகைய நடவடிக்கைகளைத் தடை செய்யும் செயற் குறிப்பு எதுவும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) அத்தகைய நடவடிக்கைகளைத் தடை செய்யும் செயற்குறிப்பு ஏதுமில்லை. ஆனால், கூட்டமைப்புகள், குழுக்கள் முதலியவை மூலமாகபரிசுச் சீட்டுகளை விற்க அரசு அனுமதிக்கவில்லை என்றும், அவற்றின் மூலமாக அந்தப் பரிசுச் சீட்டுகளை வாங்குபவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலேயே வாங்கு கின்றனர் என்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து பத்திரிக்கைக் குறிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

Ulakkaruvi Waterfalls Scheme

* @ 289 Q.—THIRU K. RAMAKRISHNA ACHARI AND THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there is any proposal to implement Ulakkaruvi Waterfalls Scheme for the supply of drinking water to Thovala Panchayat Union Area permanently in Kanyakumari District; and

(*b*) if so, the details thereof?

உலக்கருவி நீர் வீழ்ச்சித் திட்டம்

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி & திரு. எம். சங்கரம் பிள்ளை: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குமரி மாவட்டம் தோவாளை பஞ்சாயத்து ஒன்றியப்பின் பகுதிக்கு நிரந்தரமாக குடி தண்ணீர் வினியோகம் செய்ய உலக்கருவி நீர் வீழ்ச்சித் திட்டம் செயல்பட செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

@ Postponed from the list of Questions for 29th March 1972.

3rd April 1972]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) அகஸ்தீஸ்வரம் தோவாளை தாலுக்காக்களில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் ஆய்வுக் காக ரூ. 26,000-க்கான ஆய்வு மதிப்பீடுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் உலக்கருவி அல்லது மற்ற எந்த நீர் நிலைகளில் தலைமை நீர் ஊற்று நிலையம் அமைக்கப்படவேண்டும் என்பது ஆய்வு வேலைகளுக்குப் பின்புதான் நிர்மானிக்கப்படவேண்டும்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: தலைவர் அவர்களே, இந்த ஆய்வு வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த ஆய்வு வேலைகள் ஏப்ரல் மாதத் துக்குள் துவங்கப்பட்டு, 4, 5 மாதங்களில் முடிவுறும்.

Lorry Accident at Courtallam

* 346 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether there was any lorry accident involving the death of two persons on the spot besides serious injuries to several others at Courtallam on 22nd August 1971;

(*b*) whether it was due to any violation of Motor Vehicles Rules; and

(*c*) if so, what are the steps proposed to be taken to prevent such violations in future?

குற்றாலத்தில் லாரி விபத்து

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றாலத்தில், 22—8—1971-ஆம் நாள் விபத்து நடந்த இடத்திலேயே இரண்டு பேர் மரணமடைந்தும், பலருக்குக் கடும் காயம் ஏற்படுத்தியும் லாரி விபத்து ஏதேனும் ஏற்பட்டதா?

(இ) மோட்டார் வண்டி விதிகளை மீறியதால் இவ்விபத்து ஏற்பட்டதா?

(உ) ஆமெனில், வருங்காலத்தில் இத்தகைய சட்ட மீறல்களைத் தடுப்பதற்கு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இத்தகைய மீறுதல்களைத் தவிர்க்க மோட்டார் வண்டிகள் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

Car Accidents

* 347 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that Tamil Nadu has recorded the highest toll in India of persons fatally knocked down and injured in car accidents during 1968; and

(*b*) if so, the reason therefor ?

கார் விபத்துகள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-ஆம் ஆண்டில் இந்தியாவில் கார் விபத்துகளினால் மரண மடைந்தோர், காயமடைந்தோர் தமிழ் நாட்டில் தான் அதிகம் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Bus Service between the States of Tamil Nadu and Kerala.

* 348 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that the Governments of Tamil Nadu and Kerala have agreed to operate bus service between the two States; and

(*b*) if so, the details thereof ?

தமிழ்நாடு கேரள மாநிலங்களிடையே பேருந்து போக்குவரத்து

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு, கேரள மாநில அரசுகள், இரு மாநிலங்களுக்கிடையே பேருந்து போக்குவரத்து நடத்த ஒப்புக்கொண்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) விவரங்கள் முடிவு செய்யப்படவில்லை.

Car and Motor Cycle Races.

* 349 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state whether permission is given by the Police for (i) car and (ii) motor cycle races at Sholavaram near Madras every season ?

மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் பந்தயங்கள்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னைக்கு அருகிலுள்ள சோழவரத்தில் ஒவ்வோர் ஆண்டும் நடக்கும் (1) மோட்டார் கார், (2) மோட்டார் சைக்கிள் பந்தயங்களுக்கு காவல்துறை அனுமதி அளிக்கின்றதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1939-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 120-வது பிரிவின்கீழ் சோழவரத்தில் ஒவ்வொரு ஆண்டும் பந்தயம் நடத்த அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

Idols of the Kailasanathar Temple in Chingikulam village.

* 350 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a number of idols of the Kailasanathar Temple in Chingikulam village in Nanguneri taluk, Tirunelveli district, have been missing from August 1971; and

(*b*) if so, the details thereof ?

சிங்கிகுளம் கிராமம், கைலாசநாதர் கோவில் சிலைகள்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சிங்கிகுளம் கிராமத்திலுள்ள கைலாசநாதர் கோவிலில் கடவுளர் சிலைகள் பல 1971 ஆகஸ்டிலிருந்து காணுமற்போயுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 6—8—1971 அன்று இரவு, சிங்கிகுளம் கைலாசநாதர் கோயிலிலுள்ள மூன்று செப்புச் சிலைகள் களவாடப்பட்டன. அவற்றுள் இரண்டு மீட்கப்பட்டன.

Naganathar Swami Temple Tank, Nainarkovil.

* 351 Q.—THIRU S. A. RAJAMANICKAM (on behalf of THIRU S. S. THENNARASU) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any complaint has been received that the Naganathar Swami Temple Tank, Nainarkovil (Paramakudi Taluk) has not been repaired;

(b) if so, when it will be repaired; and

(c) if not, whether the Government will look into the matter?

நயினார்கோயில் நாகநாதர் சுவாமி தெப்பக்குளம்

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நயினார்கோயில் (பரமக்குடி வட்டம்) நாகநாதர் சுவாமியின் தெப்பக்குளம் மராமத்து செய்யாதிருப்பது குறித்து புகார் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மராமத்து செய்யப்படும் ?

(உ) இல்லையெனில், அதுபற்றி அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

(உ) தெப்பக்குளம் 1963-ம் ஆண்டு மராமத்து செய்யப்பட்டு தற்போதும் நல்ல நிலையில் இருப்பதால் மராமத்துபற்றிய பிரச்சினை எழவில்லை.

Thirukkovil Journal.

* 352 Q.—THIRU S. T. ADITYAN (on behalf of PULAVAR O. ARIVUDAINAMBI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) the number of copies of the journal the "Thirukkovil" printed by the Hindu Religious and Charitable Endowments (Administration) Department;

(b) the benefit derived by the Department therefrom ; and

(c) the profit derived by the sale of this Journal?

"திருக்கோவில்" இதழ்

திரு. எஸ். டி. ஆதித்தன் (புலவர் ஓ. அறிவுடை நம்பி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அற[லையத் துறையால் நடத்தப்பெறும் "திருக்கோவில்" இதழ் எத்தனை படிகள் அச்சிடப்படுகின்றன ?

(இ) அதனால் இத்துறை பெறும் ஆக்கம் என்ன ?

(உ) இதன் மூலம் பெறும் இலாபம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 4,000 படிகள்.

(இ) இவ்விதழின் மூலம் தமிழகத்துக்குரிய சைவ-வைணவ சமய சம்பந்தமான கருத்துக்கள், அவ்வத்துறையில் தேர்ச்சிபெற்ற சிறந்த அறிஞர் பெருமக்களைக்கொண்டு விளக்கப்பெற்று வருகின்றது.

(உ) இவ்விதழ் இலாபத்தைக் கருதி நடத்தப்படவில்லை. எனினும் நட்டமில்லாமல் நடைபெறுகின்றது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. GOVERNMENT BUSINESS.

CONSIDERATION OF REPORT ON THE RULES OF PROCEDURE OF THE LEGISLATIVE COUNCIL.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Education and Local Administration will now move the motion standing in his name.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொறுக்குக்குழு திருத்தியுள்ள, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நடைமுறை விதிகளைப்* பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நான் முன் மொழிகிறேன்.

தற்போது செயலிலுள்ள நடைமுறை விதிகள், இந்திய அரசியல் அமைப்பின் 208-வது பிரிவின் கீழ், 1954-ல் முதற்கண் வகுக்கப்பட்டவையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். 1961-ல் இவ்விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. மீண்டும் 1966-ல் பணச்சட்ட முன்வடிவை மறுக்கும் அதிகாரம் மேலவைக்கு உண்டா என்றோர் ஐயம் தோன்றிற்று. அக்கருத்தினை ஆராய வேண்டிப் பொறுக்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பொறுக்குக் குழு அளித்த பரிவுரைகளின் மேல், சட்டமன்ற மேலவை நடைமுறை விதிகளில் புதிய அத்தியாயமொன்று சேர்க்கப்பட்டது. அவ்வத்தியாயத்தில் பணச் சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரை மேலவை பின்பற்றவேண்டிய விரிவான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கிணங்க பணச்சட்ட முன் வடிவின் இரண்டாவது வாசிப்பின்போது, மேலவை பரிவுரைகளை மட்டுமே கூறும். அச்சட்டமுன்வடிவுக்கு மேலவையில் மூன்றாவது வாசிப்பு எதுவும் இராது. ஆனால், மேலவையில் பரிவுரைகள் செய்யப்பட்டிருப்பின், பரிவுரைகளுடனும், பரிவுரைகள் இல்லையெனில், அவ்வாறேயும் அச்சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்படும்.

1968 ஆகஸ்டில், மேலவை பொறுக்குக் குழு ஒன்றை நியமித்து இதன் விதிகள் அனைத்தையும் பரிசீலனை செய்து அறிக்கை ஒன்றை அளிக்குமாறு கேட்டுக்கொண்டது. பல்வேறு காரணங்களால், அக்குழு கூடுவதற்கும், அறிக்கை ஒன்றை அளிப்பதற்கும் இயலாமல் போயிற்று. அக் குழு 20—4—1970-க்குப் பின்னர் புதிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் துணை கொண்டு அவ்விதிகள் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது. எனவே, அக்கருத்து பற்றி ஆராய்ந்து, தேவையான மாறுதல்கள் இன்னவென்று பரிவுரைகள் செய்தற்பொருட்டு, 28—7—1971-ல் பொறுக்குக் குழு

Report ou Scient Committee printed as Appendix III on pages 47–54.

ஒன்று நியமிக்கப்பட்டது. அதற்கிணங்க, அக்குழு, செயலில் உள்ள விதிகள் அனைத்தையும் விரிவாக ஆராய்ந்தது. தேவையான இடங்களில் சில விதிகளைத் திருத்தியது. சில புதிய விதிகளையும் சேர்க்க பரிந்துரை செய்துள்ளது. குழுவின் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் கையில் உள்ளது. உறுப்பினர்கள் அறிக்கையினை முற்றும் படித்திருப்பர் என நம்புகிறேன். இங்கே, தற்பொழுது பொறுக்குக் குழு பரிந்துரைத்துள்ள மாற்றங்கள் அனைத்தையும் நான் விரிவாக விளக்கி உரைக்கத் தேவையில்லை. ஆயினும், பொறுக்குக் குழு பரிந்துரைத்த சில முக்கியமான திருத்தங்களை மட்டும், நான் இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விழைகிறேன்.

'அரசுச் சார்பற்ற அலுவல்' இனி 'தனிப்பட்ட உறுப்பினரது அலுவல்' என்று அழைக்கப்படும்.

புதிய விதிகள், அரசியலமைப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவுகளை ஏற்று இசைவளித்தல் தொடர்பாக மேலவை பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்குகின்றன. துறைகளின் கொள்கைக் குறிப்புகள் பற்றி விவாதிப்பதற்கும் இவ்விதிகளில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

'மேலவையில் அமைப்பு எல்லை' என்ற சொற்றொடருக்குரிய பொருள் விளக்கம் மேலவையால் முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தபோதும், அது இதுகாறும் விதிகளில் சேர்க்கப்படாதிருந்தது. இப்பொருள் விளக்கம் தற்போது விதிகளுள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது, மேலவையின் ஒரு கூட்டத்தொடர் தள்ளிவைக்கப்படும் நாளன்று விடையளிக்கப்படாமல் உள்ள வினாக்கள் அனைத்தும் காலங்கடந்தன ஆகிவிடுகின்றன. இனி, ஒரு கூட்டத்தொடர் தள்ளிவைக்கப்படும் நாளன்று, விடையளிக்கப்படாமல் உள்ள வினாக்களும், முடிக்கப்பெறாமல் உள்ள தனித் தீர்மானங்களும் காலங்கடந்து விடாதவாறு, இவ்விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

வினாக்களைப் பொறுத்தவரை, துறைகட்கு அனுப்பப்பட்ட வினாக்களைத் துறைகள் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அவை அவற்றுக்கான விடைகளை மேலவைக்கு அனுப்பிவைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தக் காலக்கெடு நடைமுறையில் சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. எனவே, வினா அனுமதிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர், கடையாக, 42-ம் நாளன்று, அனுமதிக்கப்பட்ட வினாக்கள் வினாப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் படுமாறு, விதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், வினா அனுமதிக்கப்பட்டு, துறைக்குத் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்கும் கூடுதலாக, எந்த வினாவும் விடையளிக்கப் படாமலிராது என்பது உறுதிப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1972

குறுகிய கால வினாக்கள் தொடர்பாகப் புதிய விதியொன்று சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விதியின்படி, சட்ட மன்ற மேலவை கூடும் நாளுக்கு 10 நாட்கள் முன்னதாகவே அவ்வினாக்களுக்கான அறிவிப்புகள் கொடுக்கப்படவேண்டும். போலும் இவ்விதிக்கிணங்க, உறுப்பினர் ஒருவர் ஒரு வினாவுக்கான அறிவிப்பை மட்டுமே கொடுக்கமுடியும்.

8-10 p.m. தற்போது, வினா ஒன்றில் குறிப்பிட்டுள்ள பொருள்பற்றி அரை மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு, மேலவைத்தலைவரின் அனுமதியை வினாவுக்கு விடை யளிக்கப்பட்ட நாளன்றே பெறவேண்டும். ஆனால், புது விதிகளில், அறிவிப்புக் கொடுக்கப்படும் நாளுக்கு முன்னர் ஐந்து நாட்களுக்குள் விடையளிக்கப்பட்ட வினாவுக்கு அளிக்கப்படும் நாளுக்கு முன்னர் ஐந்து நாட்களுக்குக் விடையளிக்கப்பட்ட வினாவொன்றின் பொருளைக் குறித்து அரை மணிநேர விவாதம் நடத்த வகை செய்யப்பட்டுள்ளது.

அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள்பற்றி அமைச்சரது நாட்டத்தை ஈர்க்கும் ஓர் உறுப்பினர், விளக்கம் பெறும் முறையில் அல்லது தெளிவு பெறும் வகையில் இரு வினாக்களுக்கு மேற்படாமல் வினா விடுக்க அனுமதிக்கப்படுவர். அவ்வாறு ஒரே நாளில் இரு பொருள்கள் பற்றி அமைச்சர்களது நாட்டத்தை ஈர்விக்கலாம். இந்த வகையில் விதிகள் தற்போது திருத்தப்பட்டுள்ளன.

ஒரு பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களாக இராத மேலவை உறுப்பினர்கள், தாங்கள் விரும்பினால், அக்குழுவின் விவாதங்கள் நடைபெறுகையில் குழுக் கூட்டத்தில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளலாம். ஆனால், அவ்விவாதத்தில் பங்குகொள்ள அவர்கட்கு உரிமையில்லை. இதற்கு உறுப்பினர்களை அனுமதித்து, விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

பணம் பற்றியதல்லாத சட்ட முன்வடிவுகளில், இரண்டு அவைகட்கும், இடையே கருத்து வேற்றுமை ஏற்படும் சட்டமுன்வடிவுகளைப் பொறுத்தவரை, அரசியலமைப்பிற்கிணங்கப் பின்பற்றப்பட வேண்டிய முழு நடைமுறையினையும் தற்போதுள்ள விதிகள் குறிப்பிடவில்லை. புதிய விதிகளில் இதற்கான நடைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, இத்தகைய சட்ட முன்வடிவுகள் இருமுறை சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

பணச்சட்ட முன்வடிவு திருப்பியனுப்பப்படுமுன்னர், அதனைக் குறித்து விவாதிக்க உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்ற கருத்து உள்ளதால், எல்லாப் பகுதிகளையும், பரிவுரைகள் எவையுமிருப்பின், அவற்றையும் பரிசீலனை செய்யுமின்னர் "சட்ட முன்வடிவு திருப்பி அனுப்பப்படலாம்"

3rd April 1972] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்றொரு தீர்மானத்தை முன் மொழிவதற்கு இதன்கண் விதித் துறைகள் செய்யப்பட்டுள்ளன.

மேலவை விதிகளில் மாறுதல்கள் செய்யப் பரிவுரைகள் அளிக்கும் பொருட்டு, தற்போது ஒரு தனிக்குழு மட்டுமே அவ்வப்போது அமைக்கப்படுகிறது. ஆனால், மேலவை விதிகள் பற்றிய நிலைக்குழு ஒன்றை அமைப்பதற்குப் புதிய விதிகள் வகை செய்கின்றன.

புதிய விதிகளில் குறிப்பிடத்தக்க மற்றொரு சேர்க்கை, இன்னும் நாள் குறிப்பிடப்படாத தீர்மானங்களுக்கு வகை செய்யப்பட்டிருப்பதாகும். மேலவைத் தலைவரது இசைவுடன் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஒன்றின் மீது, பொதுமக்களுக்கு அக்கறையுள்ள பொதுவான பொருள்கள் பற்றி விவாதம் செய்ய இந்த விதி இடமளிக்கிறது. தீர்மானங்களின் வாயிலாக மட்டுமே விவாதிக்கப்படக்கூடிய பொருள்கள் பற்றி விவாதிப்பது அவசியம் என நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தது. இந்த நீண்ட நாள் தேவையை இது நிறைவு செய்யும் என்று நம்பப்படுகிறது.

மேற்சொன்னவை தவிர, வேறு பல மாறுதல்களையும் பொறுக்குக்குழு தெரிவித்துள்ளது. அவற்றை எல்லாம் இங்கு நான் விரிவாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

இந்த அளவுடன் என் உரையை முடித்துக்கொண்டு இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Rules of Procedure of the Legislative Council, as amended by the Select Committee, be taken into consideration."

திரு. ஜீ. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தமிழக மேலவையின் நடைமுறை விதிகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தெளிவாக இங்கே எடுத்துக் கூறினர்கள். இந்தத் தமிழக மேலவைக்கான பொறுக்குக் குழு 12 நாட்கள் இந்த விதிமுறைகளைப்பற்றி ஆராய்ந்தது தங்களுக்குத் தெரியும். அந்த 12 நாட்களுக்குள்ளாக இவ்வளவு விதிமுறைகளையும் மாற்றியமைக்க இயலுமா என்று நினைத்தவர்களிலே எதிர்க் கட்சித் தலைவரும், நானும் உண்டு. திரு. தாமோதரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால் 12 நாட்களுக்குள்ளாகவே மிகச் சிறந்த முறையிலே ஒரு மாறுதல் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை, நான் அதிலே ஒரு உறுப்பினராக இருந்தும் கூட, அதை உங்களுடைய அனுமதியோடு சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்த 12 நாட்களிலே கிட்டத்தட்ட 8 நாட்கள்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [3rd April 1972

செல்லையிலே இந்தக் குழு கூடியது. 4 நாட்கள் செப்டம்பர் மாதத்தில் இந்தக் குழு உதக மண்டலத்திலே கூடியது உங்களுக்குத் தெரியும். அதுவும் செப்டம்பர் மாதத்தில் இங்கெல்லாம் வெய்யிலாக இருக்கிற நேரத்திலே உதகமண்டலத்திலே இக்கூட்டத்தை நடத்தினால் இன்னும் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்து இதையெல்லாம் தீர்மானங்களாகப் பார்க்கலாம் என்பதற்காகத்தான் உதகையிலே கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால் நாங்கள் எல்லாம் செப்டம்பர் மாதத்திலே உதகைக்குப் போகிறபோது, அங்கு எதிர்பாராத விதமாக மழையும் குளிரும் சொம்ப அதிகமாகி, செய்யக்கூடிய வேலைகளும் குறைந்து விட்டன என்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன். ஒருவேளை சென்னையிலே இக்குழு கூடியிருந்தால் 12 நாட்கள் என்பதற்குப் பதிலாக 10 நாட்களிலே கூட இந்த விதிமுறைகளிலே மாறுதல்கள் வந்திருக்கும். இந்த மாறுதல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, நம்முடைய மேலவைக் காரியாலயத்திற்கு எங்களுடைய பாராட்டுதலைச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். காரணம், இந்த விதி முறைகளிலே முன்பு இருந்த விதிமுறைகள் என்னென்ன, தற்போது மாறுதலுக்குரிய விதிமுறைகள் என்னென்ன என்பதை நம்முடைய காரியாலயத்தாரும் மேலவைச் செயலாளர் அவர்களும் சிறந்த முறையில் அச்சிட்டு, எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுத்திராது போனால், இதை இவ்வளவு சீக்கிரமாக முடித்திருக்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம். அடுத்தபடியாக, அதைப் பொறுத்த வரையிலே, இவ்வளவு விஷயங்களை விரைவாக முடித்ததற்கு, மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் எனக் கருதுகிறேன். எனென்றால் இதைப் பற்றிய பிரச்சினைகள் எழுந்தபோது, மாண்புமிகு கல்வியமைச்சர் ஒரு பக்கத்திலேயும் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் ஒரு பக்கத்திலேயும் இருந்து, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு வேண்டிய காரணை காரியங்களை நாங்கள் சொல்ல, அவர்கள் எந்தெந்த விதங்களிலே அரசாங்கத்தில் ஒரு வேளை சங்கடமாக இருக்கும் என்ற நினைப்பு ஏற்படுகிற நேரத்தில் அதற்குரிய காரணை காரியங்களை அவர்கள் சொல்ல சில சமயங்களில் விவாதங்கள் சூடாக இருக்கிறபோது, தாங்கள் தலையிட்டு அதைச் சமாதான முறையில் முடிவுக்குக் கொண்டு வந்தீர்கள். அவ்வாறில்லாவிட்டால் நாட்கள் அதிகமாகும் நிலைமை ஏற்பட்டிருக்கும். அதற்காக உங்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு விஷயங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கேள்வியைப் பொறுத்து, நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 7 நாட்களுக்குள்ளே கேள்வி அனுமதிக்கப்பட்டு 14 நாட்களுக்குள்ளே அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட வேண்டும் என்பது தற்போதுள்ள விதிமுறைகளிலே இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்று குறிப்பிட்டார்கள். இப்படியிருந்தாலும் நான் மேலவை உறுப்பினராகவந்த இந்த நான்காண்டு காலத்திலே சில கேள்விகளுக்கு 1½ ஆண்டு, 2½ ஆண்டு வரையிலே பதிலே வரவில்லை என்பதை நான் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக அரசாங்கத்தில் சில சமயங்களிலே சங்கடமாக இருக்கக் கூடிய—என்று நான் கருதுகிற—சில கேள்விகளுக்கு மிகக் காலதாமதம் ஆகித்தான், பதில் சொல்லப்பட்டது. ஒரிரு உதாரணங்களைக்கூடச் சொல்லுவேன். வைத்தியக் கல்லூரி தேர்வு முறையைப் பற்றி 1970 ஜனவரியிலே என்று நினைக்கிறேன். அப்பொழுது கேட்ட கேள்விக்கு 1971-வது வருடம் சூன் மாதத்திலே பதில் அளிக்கப்பட்டது. 1970-லே என்ன தேர்வு என்று நான் கேட்கப் போக 1971 வரையிலே எல்லா மாறுதல்களையும் செய்துவிட்டு, இந்தத் தேர்வுமுறையை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்னொன்றுகூட, தஞ்சையிலே உள்ள ஆட்சியாளர் அலுவலகத்திலே கட்டுக்கோப்பு என்று சொல்லக்கூடிய பைல்கள் திருட்டுப் போய் அந்த பைல்களை எல்லாம் பழைய பேப்பர் கடைக்காரனிடம் கொண்டுபோய் விற்றுவிட்டார்கள். இதுபற்றி நான் முதன் முதலில் இந்த அவையிலே உறுப்பினராக இருந்தபோது கேட்ட கேள்விக்கு கிட்டத்தட்ட 1½ ஆண்டுக் காலத்திற்குப் பிறகுதான் பதில் வந்தது. அந்த பதில் வருகிறபோதுகூட, உங்களுக்கும் தெரியும், இப்பொழுதும் கூட தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக என்ன பதில் வருகிறது என்றால், இப்படிப்பட்ட சம்பவம் உண்டா என்று கேட்டால், அது இல்லை. எனவே அடுத்த கேள்வி ஏதாவது கேட்கிறபோது, விஷயத்திற்கு இடமில்லை என்பதாக இரண்டே வார்த்தைகளிலே கேள்வி கேட்பதற்குள், அதற்குப் பதிலும் வந்துவிடுகிறது. அதற்குப் பின்னால் உள்ள உறுப்பினர்கள் அந்தக் கேள்வியை ஏதாவது மறுமுறையும் கேட்டுக் கொண்டிருந்தால்தான், அதற்குள்ள பதில்கள் வருகின்றன என்பதையும் இன்னும் நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆக இப்போதுள்ள நிலைமை என்னவென்றால், 15 நாட்களுக்குள்ளாக இந்தக் கேள்விகளுக்குப் பதில்கள் வர வேண்டுமென்று சொல்கிறபோது, பாராளுமன்றத்திலே 14 நாட்களுக்குள்ளாக கேள்வி பதில்கள் வந்துவிடுகின்றன. ஆனால் நம்முடைய மன்றத்திலே, தற்சமயம் இருந்த பழைய விதிமுறைகளை மாற்றி, 42 நாட்கள் என்று போட்டிருக்கிறோம். ஆகவே, 'ரெட்ராஸ்பெக்ட்' என்ற முறையிலேதான் இப்போதுகூட செய்திருக்கிறோம். 14 நாட்கள் என்பது 42 நாட்கள் ஆகியிருக்கின்றது. 42 நாட்களுக்குள் விடை கிடைக்கவில்லையென்றால், மேலவைத் தலைவர் 15 நாட்கள் நீடித்துக்கொடுக்கலாம் என்று 2 மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பாராளுமன்றத்திலே இருப்பதைப் போல, 6 வாரம் அதற்கு மேல் 2 வாரம் அவகாசம் கொடுத்திருந்தாலும், எவ்வளவு விரைவான முறையிலே அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக பதிலளித்தால்தான், உறுப்பினர்கள் சரியான

3rd April 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

3.30 p.m.

முறையிலே இயங்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் ஒன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கேள்வி கேட்கப்படுகிறபோது, நான் 2, 3 நாட்களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலேயும் எடுத்துச்சொன்னேன். 10 நிமிடம் நான் தாமதமாக வந்தபோது, இந்தக் கேள்வி நேரமே முடிந்துவிட்டது என்றார்கள். சாதாரணமாக கேள்வி நேரம் 3 லிருந்து 4 வரை ஒரு மணி நேரம் இருக்க வேண்டும் என்பது முறை. ஆகவே, 10 நிமிஷத்திலே கேள்விகள் முடிந்துவிடுவதும், 15 நிமிடங்களிலே முடிவடைவதும், சில நேரங்களில் 8 கேள்விகள் தான் இருப்பதுமான நிலைமை, சரியான நிலைமை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஒன்று. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையிலே, அமைச்சர் அவர்களின் பெயரிட்டு, இந்த அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டுமென்று வருகிற கேள்வியிலே, அந்த அமைச்சர்கள் இந்த மன்றதுக்கு வராமல்—ஒரு முறை அல்ல, 2 முறை அல்ல, 3 முறை கூட கேள்விகள் தள்ளிக் கொண்டே போகின்றன. அமைச்சர்கள் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியவில்லையென்றால், அந்தக் கேள்விகளை இதிலே சேர்க்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, சேர்த்த பிறகு அமைச்சர்கள் வேறு இடங்களுக்குச் செல்லாமல், இந்த மன்றத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, இங்கே வர வேண்டுமென்று நான் மீண்டும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றம் நடப்பது கிட்டத்தட்ட ஒரு ஆண்டிலே, 3 அல்லது 4 மாதங்கள் தான். அதுவும் இந்த மன்றம் 3 மாதத்துக்குக் குறைவாக நடக்கிறது. ஆகவே, வெளியேயுள்ள நிகழ்ச்சிகளை விட, இந்த மன்றத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியம் என்று கருதி, அமைச்சர்கள் எல்லாம் கேள்வி போடப்பட்டதற்கு பதிலளிப்பதற்கு அவைக்கு வர வேண்டும் என்று நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் சரியான முறையிலே செயலாற்ற முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டசபையிலிருக்கும் ஓரிரு குறைபாடுகள்பற்றி நான் தங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குறுகிய கால வினாக்களுக்கு 15 நாட்கள் என்பதை 7 நாட்களாக மாற்றியிருக்கிறார்கள். ஆனால், நட்சத்திரக் குறியுள்ள சாதாரண வினாக்களுக்குக் கால அளவு ஏதும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சாதாரண நட்சத்திரக் குறியிட்ட வினாக்களுக்கும், இதற்கும் 2 மாதங்களுக்குள்ளாக, 6 வாரம் அல்லது 8 வாரத்துக்குள்ளாக பதிலளிக்க வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் காலக் கெடு முடிந்த வினாக்கள் பற்றி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தக் காலக்கெடு வினாக்களுக்கு முடிகிற காரணத்தாலே, ஃபைல்களை ஒரு முறை திருப்பிப் பார்த்து அவர்கள் ஒரு நம்பர் கொடுக்க, நாங்கள் ஒரு நம்பர் கொடுக்க, எந்த நம்பரிலே எந்தக் கேள்வி

வந்தது என்று தெரியாமல் திண்டாடுகிற நிலைமை பல சமயங்களிலே எனக்கு ஏற்பட்டதுண்டு. கிட்டத்தட்ட 6 மாதம், ஒரு ஆண்டுக்குப் பிறகு, இந்தக் கேள்வி வருகிறபோது, இந்தக் கேள்வியை நாம் போட்டோமா அல்லது வேறு யாராவது போட்டு நம்முடையது என்ற பெயரிலே சொல்லி விட்டாரா என்கிற நிலைமை ஏற்படக்கூடிய ஞாபக மறதி கூட ஏற்படுவதுண்டு. தனிப்பட்ட முறையிலே, ஃபைலிங் லிஸ்டத்தை வைத்துக் கொண்டாலொழிய, இந்தக் கேள்விகளுக்குச் சரியான முறையிலே தொடர் வினாக்களை நாம் போட முடியாத நிலைமை ஏற்படும். எனவே, இதை மாற்றியமைப்பது இப்போது மிகச் சிறந்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன்: அதே கேள்வி வரும்போது, நம்பர் வேறே வருகிறது. சப்ஜெக்டைப் படித்தீர்களேயானால், தெரிந்து போகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: கிட்டத்தட்ட 200, 300 விஷயங்களைப் பற்றியும் ஒரு விஷயத்தைப் பற்றியே பல கேள்விகளும் கொடுத்திருக்கிறபோது, நடைமுறையிலே சங்கடமாக இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலைமையில்லை என்று வந்தபோது, மிகவும் சுலபமான முறையிலே ஆகிவிட்டது என்பதோடு, இந்த மேலவை டிபார்ட்மெண்ட், இந்தக் கவுன்சில் டிபார்ட்டுமெண்டுக்குக்கூட நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஒரு கேள்விக்கு, 3 மாதத்துக்கு, 6 மாதத்துக்கு ஒரு முறை அனுப்பவேண்டிய சங்கடங்கள் இவர்களுக்கு ஏற்படலாம். இன்னும் பல விஷயங்களுக்குப் போகாமல், ஓரிரண்டு விஷயங்களைப் பற்றி மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசுத் துறை நிறுவனங்களுக்கு ஒரு குழு அமைக்க வேண்டுமென்று நான் குழுவிலேயே சொன்னேன். Committee on Public undertakings என்பதாக ஒன்று நிறுவப்படவேண்டுமென்று. ஏனென்றால், அரசுத் துறையைப் பொறுத்த வரையிலே, ஆட்சி மட்டுமல்லாமல் வணிகத் துறையையும் நாம் சரியான முறையிலே செய்வதும், செய்யாமல் இருப்பதும் உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும். ஆகவே, இதைப்பற்றிச் சரியான முறையிலே பரிசீலிக்க இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் குழு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று நான் கோரினேன். அதே போல பாராளுமன்றத்திலே ஒரு குழு செயல்படுகிறது. ஆனால், பேரவையிலே அதுபோன்ற குழு இல்லாத காரணத்தாலே, மேலவையிலேயும் இதற்குத் தேவையில்லையென்று எடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதுபோல குழு மேலவையிலும், பேரவையிலும் அமைக்கப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேலவை நேரத்தைப் பொறுத்த வரையிலே, இதை மாற்றலாம் என்பதாக அபிப்பிராயம் இருப்பதைப் போல் அறிகிறேன். தற்சமயம் மேலவை 4 மணிக்குச் சாதாரணமாக ஆரம்பித்து, 7 மணி வரையிலே நடைபெற்று வருகிறது. ஆனால், பேரவையைப் பொறுத்த வரையிலே, காலையிலே 9 மணிக்கு ஆரம்பித்து 1 மணி, சமயத்திலே 1½ மணி, சமயத்திலே 2 மணிவரை ஆகி, அங்கேயிருந்து விடுதிக்கு மிகவும் சோர்வோடு பேரவை உறுப்பினர்கள் எல்லாம் திரும்பி வருகிற காட்சியைப் பார்க்கிறபோது, காலை 10 மணிக்கு இந்த மேலவையை வைத்தால், அமைச்சர்களும் 10 மணிக்கு வரலாம். 9-க்கு வருகிறவர்கள் 10 மணிக்குமேல் வரலாம் என்று தோன்றுகிறது. அவர்களுக்குப் பெரும் கூட்டங்கள் வீட்டிலே காத்திருக்கின்றன. அவர்களுக்கும் சரியான பைசல் செய்ய முடியாத கஷ்டம். ஆகவே, 10 மணிக்கு வந்து 3 மணி நேரம் மேலவை இருக்கின்ற காரணத்தாலே, 1 மணிக்கு முடித்து விட்டு, திரும்பி 3 மணிக்கு அவர்கள் அங்கே பேரவையை ஆரம்பித்தால், சாப்பாட்டுக்குக்கூட கஷ்டமில்லை. 7 மணி, 8 மணி, 9 மணிக்குக்கூட நாம் முடிக்கலாம் என்ற நிலையிலே மாற்றலாம் என்பதை என்னுடைய அபிப்பிராயமாகச் சொல்கிறேன். அது என்னுடைய உடன்பாடான அபிப்பிராயம். சில உறுப்பினர்கள் அந்த அபிப்பிராயத்திற்கு உடன்பாடாக இல்லாமல் இருக்கக்கூடும். ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே, அது உடன்பாடான அபிப்பிராயம். அதைச் செய்யலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதற்கே இன்னொரு காரணம் மேலவையைப் பொறுத்த வரையிலே, சாதாரணமாக முக்கியமான நிகழ்ச்சிகள் இங்கே நடைபெறுவதில்லை. சொல்ல வேண்டிய முக்கியமான செய்திகளையெல்லாம் பேரவையிலேயே சொல்லியாகி விடுகின்றன. அண்மையிலே, பங்களாதேஷ்பற்றியும் இராச இராசசோழன் சிலை பற்றியும் நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேரவையிலே சொன்ன முக்கிய விஷயங்களை இங்கே சொல்ல விட்டு விட்டார்கள் என்பதைப் பற்றிச் சொல்லி நாங்கள் கேள்வி போடுகிற போது கூட அந்தக் கேள்வி முக்கியமாக இருந்தாலும், முனைப்பான கேள்வியாக இருந்தாலும், அங்கே பதில் சொல்லிவிட்டு அட்ஜோர்ன்மெண்டு மோஷன் முக்கியமாக இருந்தாலும் அதற்கும் அங்கே பதில் சொல்லிவிட்டு கவன ஈர்ப்புத் தீர்மானம் முக்கியமானதாக இருந்தாலும் அதற்கும் அங்கே பதில் சொல்லிவிட்டு இங்கே வருகிறபோது, குறிப்பாக கேள்வி கேட்டால் பத்திரிகைக்காரர்கள் சாதாரணமாக ஒரு உறுப்பினர் கேள்வி கேட்டார் என்று போட்டு விடுகிறார்கள். ஆகவே பத்திரிகையிலே மேலவைபற்றி எந்த விதமான செய்தியும் வராத ஒரு துர்ப்பாக்கியம் ஏற்படுகிறது. அந்த துர்ப்பாக்கியமே கூட காலையிலே 10 மணியிலேயிருந்து 1 மணிக்கு வைத்தால் முக்கியமான விஷயங்கள் இங்கே சொல்லப்படுகிறபோது—சொல்லப்படும் என்று நினைக்கிறேன்.—அவை பத்திரிகையிலே

வர வாய்ப்பாக இருக்கும். சாதாரணமாக மணி பிற்பகல் தனிப பாக்கி மகோதாக்களை இந்த அவையிலே கொண்டுவரலாம். பல முக்கியமான விஷயங்களை அரசாங்கம் அனௌன்ஸ்மெண்ட்ஸ் என்று விவகளோ அல்லது விளக்கங்களோ இந்த அவையிலே சொல்லலாம். அப்படி ஓரளவுக்கு மேலவை பொறுத்த விஷயம் கூட பத்திரிகையிலே வருவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு இறுதியாக ஒரே ஒரு குறையை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னொரு விஷயம் கூடச் சொல்லுகிறேன். பட்ஜெட்டைப் பொறுத்த வரையிலே, இரு அவைகளைத் தனித்தனியாகக் கூட்டி அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறார்களென்றால், இங்கே மற்ற அமைச்சர்கள், முக்கியமான அமைச்சர்கள் சொல்லலாம். அதற்குள்ள பாரம்பரியத்தைக் காப்பாற்றலாம் என்பதைக்கூட வைத்துக் கொள்ளலாம்.

கடைசியாக ஒரு குறையைச் சொல்ல விரும்புகிறேன். தம்முடைய மேலவை—கவுன்சில் டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையிலே நாங்கள் பேசுகிற பேச்சினுடைய குறிப்புகள் சரியான முறையிலே எழுதப்படுவதில்லையென்பதை, தலைவரவர்களே, உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக நான் பேசிய குறிப்புகள் என்னிடம் மூட்டை போல் சுமந்திருக்கின்றன. அவற்றைத் திருத்துவதென்பது இயலாத காரியமாகவே ஆகிவிட்டது. ஏனென்றால், பேச்சைத் திருத்தியனுப்ப வேண்டுமென்று நினைப்பவர்களிலே நான் ஒருவன், பின்னாலே தவறுதல்கள் இருக்கக் கூடாதென்பதற்காக. ஆனால் இப்பொழுதெல்லாம் நானே அவற்றைப்பற்றிய குறிப்புகளை எடுத்து வைத்துக்கொண்டு மறுபடியும் என்னுடைய எழுத்தரிடம் சொல்லி, அவரே அதைத் தமிழிலே எழுதி டைப் அடித்துக் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனக்கு மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களுக்கும் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் நண்பர் அவர்கள் கேட்டார்கள். என்னுடைய பேச்சு எப்படியிருந்தது என்று கேட்டார்கள். மிக நன்றாகப் பேசினீர்கள் என்று சொன்னேன். அடுத்த நாள் அவர்கள் சொன்னார்கள், அந்தக் குறிப்புகளை எடுத்து கையிலே வைத்துக் கொண்டு, "இந்தப் பேச்சின் குறிப்புகளைப் பார்க்கும்போது சொம்ப அபசகுனமாக இருக்கிறது, நீங்கள் நன்றாகப் பேசினீர்கள் என்று சொன்னீர்களே" என்று "அது உங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் அபசகுனமாக இருக்கிறது" என்று நான் சொன்னேன். ஆகவே இந்தக் குறிப்புகள் எடுக்கும் முறையைப் பற்றிய வரையிலே சரியான நிரந்தரமானவர்களை இந்தத் துறையிலே போட்டு எங்களது தொல்லைகளை ஓரளவிற்கு, தலைவரவர்களே, தாங்கள் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[3rd April 1972

3-30 p.m. THIRU G. VASANTHA PAI : Sir, on this important matter I thought we should be given another opportunity to discuss this and this should really be adjourned to the next Session of this House. Sir, Thiru G. Swaminathan and several Members of the House have had the opportunity of going into these rules in a detailed fashion because they were Members of the Select Committee. Those Members who were not in the Committee have had no opportunity to go through these rules and the rules have got the *sanction* of the Constitution also under Article 208. Sir, it is my request that the Hon. the Minister for Education who has moved this motion will kindly agree to have this taken up in the next session so that we could have a more detailed discussion on the Rules of Procedure which affect our day-to-day routine in this House. That is my first request, Sir. Secondly, Sir, on the merits of the rules themselves, I feel that there are certain things which have to be looked into, before this House accepts the Report of the Select Committee on the Rules of Procedure laid before the House. Sir, my respectful submission is, under rule 157 on a motion of privilege together with a brief statement that is to be given, the sole authority to judge whether there is a question of privilege should be the Chairman and no notice should be given either to the Leader of the House or to the Secretary in this behalf. The matter of privilege is one of the House and I feel that the sole person who should judge, whether the question of privilege is there or not, should be the Chairman with absolute discretion and there should be no sort of interference or discussion with subordinate officers or the Leader of the House in this behalf because it may be that we raise the matter of privilege against the Government or against any Member of the House and the matter of privilege being a matter for the whole House, I feel that the sole person should be the Chairman and not any other person including a representative of the Government or a Secretary who is subordinate Officer of the staff. Sir, I request that this rule should be suitably amended. And also rules 158 and 161 give two opportunities for cutting down the privilege motion that may be brought before the House. Under rule 158, " If the Chairman is of opinion that the matter which the member proposes to raise does involve a question of privilege of the House, he may consent to the matter being

3rd April 1972] [Thiru G. Vasantha Pai]

raised ". Even after consenting to it, under rule 161, when a Member has, with the consent of the Chairman, raised a matter of privilege, the Chairman shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein. Therefore, there are three places where the Chairman himself exercises his discretion in three different ways; first is when the motion comes before the Chairman, it says that, for the leave of House—in the previous Rules as well as now—the Chairman shall decide under Rule 157 whether the motion should be placed before the House and the consent of the Chairman should be obtained. Under Rule 158, the Chairman decides whether question of privilege is involved in it or not. Under Rule 161, the right of the Member to move the motion is further curtailed because the Chairman decides whether a *prima facie* case is made out or not. My submission is that a privilege motion should not be taken through all these stages and the Chairman should be the sole arbiter in this matter and he should decide whether the motion is a breach of privilege or not, *prima facie*, and once it comes before the House, there sholud be a motion before the House and then a discussion and then a decision whether the matter should go to the Privileges Committee or not. My respectful submission is that the way in which these Rules 157, 158, 159 and 161 have been drafted—makes the privilege motion a very thin affair so that the real crux of it is not gone into before the House and, Sir, this is the one way by which we keep discipline in the House. We make the Minister answerable to the Members of the House and answerable to the House itself and so this privilege motion should be given all the sanctity it deserves in this House and the sole arbiter in this matter should be the Chairman and not even the Leader of the House nor the Secretary who is a subordinate Officer and who is in no way concerned with the motion except that he is an Administrative Officer of the Council. My request is that the notice to the Secretary should altogether be ruled out and he should really not know of it till the Chairman has ruled whether the Member should be given permission to move the privilege motion or not. Till then even the Secretary and the subordinate staff should not know that the privilege motion has been brought before the House. Otherwise, we may not be in a position to hold the Government answerable to the statements made in the House.

[Thiru G. Vasantha Pai] [3rd April 1972

The Government are answerable for various statements made before the House and also to Members of the House, if they commit any breach of privilege. Sir, this is an important matter and I request that these rules should be suitably amended.

Then, Sir, on the matter of Committees, I wish to make one submission. There are 65 members in the House. There are as many as 7 or 8 Committees. I do not see the reason why every member should be voted upon. Because, if the name of a member is to be voted, the party in power naturally will have a larger number of persons on the Committees. Why should not all the 65 members be put on all these 7 or 8 Committees? Why should not a member of the House be put in at least one Committee. This does not happen here, Sir. There are many members who are excluded from these Committees altogether and this becomes a monopoly of a few persons who are either in the representative majority party or minority group in the Council. My respectful request is that without the voting being there for membership, the Chairman, the Leader of the House and the Leader of the Opposition should join together and see that each and every Member of the House is given representation at least in one Committee or the other of the House, so that there is no necessity for a person to go and canvass or ask his name to be nominated to these Committees. My submission is that these Committees are part and parcel of the House and no portion of its membership should be excluded from these Committees. So, I request that these rules relating to several Committees—Rules 156 to 181—should also be suitably amended, so that there is representation for all the members of the House at least in one of the Committees. That is my submission on the first and preliminary glance of this very big Report which has been placed before this House. Sir, I reiterate my request that this may be taken up at the next Session so that we may have a fuller discussion on these very valuable rules which affect our rights and privileges.

MR. CHAIRMAN : The hon. Member has gone through the Report. Still he says that he is badly in need of time to go through all the pages of the Report. As a historian I am able to go through nearly 200 pages in a day. The hon. Member, being an eminent lawyer, might have gone through the Report.

THIRU G. VASANTHA PAI : I have no doubt I have gone through the Report. I only request that we may be given some more time to think over the Report and make our own submissions.

3rd April 1972]

MR. CHAIRMAN : The hon. Member should know that the Report was circulated on the 26th March 1972, nine days before.

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, தற்போது விவாதத்திலிருக்கும் சட்டமன்ற மேலவையின் விதிகள் சம்பந்தமான அறிக்கை தயாரிப்பதற்கு, அதனுடைய 'ட்ராப்ட்' தயாரிப்பதற்கு நமது கவுன்சில் செகரடரி அவர்களும் அவருக்குக் கீழே உள்ள உதவியாளர்களும் சூபரின்டெண்டண்டுகளும் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. ஏனென்றால், இது ஏதோ ஏற்கனவேயுள்ள நமது கவுன்சில் ரூல்களை மட்டும் வைத்துக் கொண்டு நமது விதிகளை இந்த வருஷம் தயாரிக்கவில்லை. அசெம்பிளி ரூல்களையும் பார்க்க வேண்டியிருந்ததோடு பிற மாநிலங்களிலுள்ள விதிகளையும் ராஜ்ய சபா லோக் சபா விதிகளையும் ஒருங்கே வைத்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தோம். இதிலே சில விதிகளை கல்வித் துறை அமைச்சரவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அப்படியல்லாமல், அவற்றிற்கெல்லாம் சம்மதம் கொடுத்தது பாராட்டுதற்குரிய ஒரு விஷயம். உதாரணமாக கவுன்சில் அல்லது அசெம்பிளி கூட்டத்தொடரை முடித்து 'புரோரோக் செய்துவிட்டால், கேள்விகள் சாதாரணமாக இப்போது 'லேப்ஸ்' ஆகிவிடுகின்றன. மீண்டும் எல்லாக் கேள்விகளையும் நாம் உயிர்ப்பித்து புதிய கேள்விகள் எழுதிக்கொடுத்துக்கொண்டிருந்தோம். அந்த மாதிரி 'லேப்ஸ்' ஆகக் கூடாது என்று அந்தக் குழுக் கூட்டத்தில் நான் வற்புறுத்தினேன். பொதுவாக, கவுன்சில் காரியாலயம் சார்பாக, காரியதரிசி அவர்கள், அது 'லேப்ஸ்' ஆகத்தான் வேண்டும், இல்லாவிட்டால் பழைய கேள்விகள் நிறைய வந்துகொண்டேயிருக்கும். கேள்விக்கு சம்பந்தமான காலம் தீர்ந்த பிற்பாடும் கூட பழைய கேள்விகள் வந்துகொண்டேயிருக்கும். ஆகவே அங்கத்தினர்களுக்கு அந்த உரிமையை எடுத்து விட்டால் அந்தக் கேள்விகளை விட்டு விட்டு வேறு புதிய கேள்விகளைப் போடுவார்கள். எனவே, ஏன் புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள். அப்படியிருந்தும், குழு அங்கத்தினர்கள் வற்புறுத்தியதின் காரணமாக, அமைச்சரவர்கள் ஒப்புக்கொண்டு, அவை காலாவதியாக வேண்டியதில்லை, புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை, புரோரோகேஷன் ஆனபின்னரும் கூட கேள்விகள் உயிரோடு இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அத்தோடு, இப்போது கன்வென்ஷன் மாதிரி வைத்துக்கொண்டிருக்கிறோம். பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருக்கிறபோது, அடுத்த சபையில், பேரவையில் மான்யக் கோரிக்கைகளின் பேரில் விவாதம் நடத்திக்கொண்டிருக்கிறபோது, இந்தச் சபையில் வேலை இடையாது. அந்தச் சமயத்தில் இந்தச் சபையிலும் வேலை இருக்க வேண்டுமென்று முடிவு செய்து ஒரு இரண்டு

[Thiru G. Vasantha Pai] [3rd April 1972

The Government are answerable for various statements made before the House and also to Members of the House, if they commit any breach of privilege. Sir, this is an important matter and I request that these rules should be suitably amended.

Then, Sir, on the matter of Committees, I wish to make one submission. There are 65 members in the House. There are as many as 7 or 8 Committees. I do not see the reason why every member should be voted upon. Because, if the name of a member is to be voted, the party in power naturally will have a larger number of persons on the Committees. Why should not all the 65 members be put on all these 7 or 8 Committees? Why should not a member of the House be put in at least one Committee. This does not happen here, Sir. There are many members who are excluded from these Committees altogether and this becomes a monopoly of a few persons who are either in the representative majority party or minority group in the Council. My respectful request is that without the voting being there for membership, the Chairman, the Leader of the House and the Leader of the Opposition should join together and see that each and every Member of the House is given representation at least in one Committee or the other of the House, so that there is no necessity for a person to go and canvass or ask his name to be nominated to these Committees. My submission is that these Committees are part and parcel of the House and no portion of its membership should be excluded from these Committees. So, I request that these rules relating to several Committees—Rules 156 to 181—should also be suitably amended, so that there is representation for all the members of the House at least in one of the Committees. That is my submission on the first and preliminary glance of this very big Report which has been placed before this House. Sir, I reiterate my request that this may be taken up at the next Session so that we may have a fuller discussion on these very valuable rules which affect our rights and privileges.

MR. CHAIRMAN : The hon. Member has gone through the Report. Still he says that he is badly in need of time to go through all the pages of the Report. As a historian I am able to go through nearly 200 pages in a day. The hon. Member, being an eminent lawyer, might have gone through the Report.

THIRU G. VASANTHA PAI : I have no doubt I have gone through the Report. I only request that we may be given some more time to think over the Report and make our own submissions.

3rd April 1972]

MR. CHAIRMAN : The hon. Member should know that the Report was circulated on the 26th March 1972, nine days before.

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, தற்போது விவாதத்திலிருக்கும் சட்டமன்ற மேலவையின் விதிகள் சம்பந்தமான அறிக்கை தயாரிப்பதற்கு, அதனுடைய 'ட்ராப்ட்' தயாரிப்பதற்கு நமது கவுன்சில் செகரடரி அவர்களும் அவருக்குக் கீழே உள்ள உதவியாளர்களும் சூபரின்டெண்டண்டுகளும் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. ஏனென்றால், இது ஏதோ ஏற்கனவேயுள்ள நமது கவுன்சில் ரூல்களை மட்டும் வைத்துக் கொண்டு நமது விதிகளை இந்த வருஷம் தயாரிக்கவில்லை. அசெம்பிளி ரூல்களையும் பார்க்க வேண்டியிருந்ததோடு பிற மாநிலங்களிலுள்ள விதிகளையும் ராஜ்ய சபா லோக் சபா விதிகளையும் ஒருங்கே வைத்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தோம். இதிலே சில விதிகளை கல்வித் துறை அமைச்சரவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அப்படியல்லாமல், அவற்றிற்கெல்லாம் சம்மதம் கொடுத்தது பாராட்டுதற்குரிய ஒரு விஷயம். உதாரணமாக கவுன்சில் அல்லது அசெம்பிளி கூட்டத்தொடரை முடித்து 'புரோரோக்' செய்துவிட்டால், கேள்விகள் சாதாரணமாக இப்போது 'லேப்ஸ்' ஆகிவிடுகின்றன. மீண்டும் எல்லாக் கேள்விகளையும் நாம் உயிர்ப்பித்து புதிய கேள்விகள் எழுதிக்கொடுத்துக்கொண்டிருந்தோம். அந்த மாதிரி 'லேப்ஸ்' ஆகக் கூடாது என்று அந்தக் குழுக் கூட்டத்தில் நான் வற்புறுத்தினேன். பொதுவாக, கவுன்சில் காரியாலயம் சார்பாக, காரியதரிசி அவர்கள், அது 'லேப்ஸ்' ஆகத்தான் வேண்டும், இல்லாவிட்டால் பழைய கேள்விகள் நிறைய வந்துகொண்டேயிருக்கும். கேள்விக்கு சம்பந்தமான காலம் தீர்ந்த பிற்பாடும் கூட பழைய கேள்விகள் வந்துகொண்டேயிருக்கும். ஆகவே அங்கத்தினர்களுக்கு அந்த உரிமையை எடுத்து விட்டால் அந்தக் கேள்விகளை விட்டு விட்டு வேறு புதிய கேள்விகளைப் போடுவார்கள். எனவே, என் புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள். அப்படியிருந்தும், குழு அங்கத்தினர்கள் வற்புறுத்தியதில் காரணமாக, அமைச்சரவர்கள் ஒப்புக்கொண்டு, அவை காலாவதியாக வேண்டியதில்லை, புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை, புரோரோகேஷன் ஆனபின்னரும் கூட கேள்விகள் உயிரோடு இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அத்தோடு, இப்போது கன்வென்ஷன் மாதிரி வைத்துக்கொண்டிருக்கிறோம். பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருக்கிறபோது, அடுத்த சபையில், பேரவையில் மான்யக் கோரிக்கைகளின் பேரில் விவாதம் நடத்திக்கொண்டிருக்கிறபோது, இந்தச் சபையில் வேலை கிடையாது. அந்தச் சமயத்தில் இந்தச் சபையிலும் வேலை இருக்க வேண்டுமென்று முடிவு செய்து ஒரு இரண்டு

ஆண்டுகளுக்கு முன்னால் அமைச்சர் அவர்களும், முதலமைச்சரவர்களும் இங்கே ஒரு விவாதம் நடத்த ஒப்புக்கொண்டார்கள். அதன் பேரில் 'பாலிசி நோட்' என்று ஒவ்வொரு டிமாண்ட்டின் பேரிலும் அந்தச் சபையில் வைக்கின்ற நோட்டை எடுத்துக்கொண்டு, 5 அல்லது 6 முக்கியமான இலாக்காக் களைப்பற்றி மட்டும் சபை விவாதிப்பது என்று ஒப்புக் கொண்டார்கள். இன்று விதிகளில் இல்லை, சட்டத்தில் இல்லை. எனவே இதைச் சட்டப் பூர்வமானதாக, அங்கீகரித்த ஒன்றாக ஆக்க வேண்டுமென்று சொன்னேன். அதையும் அரசாங் கம் ஒப்புக்கொண்டது. கல்வி அமைச்சரவர்களும் ஒப்புக்கொண்டார்கள்.

10 p.m. உறுப்பினர்களின் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்று கூறி, சரி என்று ஒப்புக் கொண்டார்கள். ஆகவே, அது ஒரு சட்டபூர்வ உரிமையாக கவன் சிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின்போது எந்தெந்த பாலிசி நோட்டின் பேரில் விவாதம் செய்வது என்று 'பிசினஸ் அட்வைசரி கமிட்டி' முடிவு செய்கிறது. அவர்கள், இந்த வருஷம் எந்தெந்த இலாக்காக்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்து அப்படி எடுத்துக் கொள்கிறார்கள்.

அத்தோடு, ஏற்கனவே உள்ள விதிகளில் கவர்னருடைய உரையின் பேரில் விவாதம் இந்தச் சபையில் நடக்கும்போது, வேறெந்தவிதமான விஷயத்தையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று இருக்கிறது. வேறெந்த விவாதமும் இந்த விஷயத்தின் பேரில் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இருந்தது. அதையும் மாற்றியிருக்கிறோம். மற்ற சாதாரண நேரங்களில் எப்படி ஒத்திவைப்புத் தீர் மானங்கள் கொடுக்கலாம் என்று இருக்கிறதோ, அதே மாதிரி கவர்னர் உரை யின் மீது விவாதம் நடக்கும்போது கூட முக்கியமான காரியங்களையும் அலுவல் களையும் ஒத்தி வைத்துவிட்டு அட்ஜர்ன்மெண்ட் மோஷனையோ, தீர்மானத் தையோ விவாதித்துவிட்டு, பிறகு அவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்ற விதியைச் சேர்த்திருக்கிறோம். இவையெல்லாம் நல்ல மாறுதல்கள், முக்கியமான மாறுதல்கள் என்று சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு விதி. கேள்விகள் எழுதியனுப்பினால், சேர்மன் அவர்கள் அதை அங்கீகரிக்கும் வரையில் என்ன எழுதி அனுப்பினோம் என்று விளம்பரம் கொடுக்கக்கூடாது என்ற விதியைச் சேர்த்திருக்கிறார்கள். இது ஏற்கனவே விதிகளில் ஸ்பெசிபிக்காக இருக்கிறது, கன்வென்ஷனாக இருக் கிறது. விதிகளில் சேர்த்திருக்கிறோம். அடிப்படையில் இதில் எனக்கு மனதில் கொஞ்சம் திருப்தி இல்லை. ஏனென்றால், எதாவது ஒரு ஊரில் ஒரு தகராறோ, ஏதோ நடந்துவிடுகிறது. அதைப்பற்றி நமது அங்கத்தினர் ஏன் கேள்வி கேட்கக்கூடாது என்று ஒருவர் கேட்கிறார். அதற்கு, "நான் கேள்வி எழுதி அனுப்பியிருக்கிறேன்" என்று சொல்வது கூட பத்திரிக்கையில் வந்துவிட்டால்

அது கவருனதாக ஆகிவிடும். அந்த மெம்பரின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம். கேள்வி கேட்டால், சேர்மன் அவர்கள் அந்தக் கேள்வியை அங்கீகரிக்கும் வரையில் விளம்பரம் கொடுக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. பொதுவாக பொது ஜனங்களின் பிரதிநிதியாக இருக்கிறவர்களுக்கு ஊரில் நடக்கிற காரியங்கள் பற்றிக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டிய அவசிய மும், அதைச் சொல்ல வேண்டிய அவசியமும் இருக்கிறது. அப்படி இருக்கும் போது, அதைப் பத்திரிகையில் போடக் கூடாது என்று இருக்கிற விதி அவசியம் தானு என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். பொதுக்குழுக் கூட்டத்தில் அதை எவ்வளவோ ஆட்சேபித்தேன். ஆனால் அதைக் குழு ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த விதி இருக்கத் தான் செய்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, கேள்வி போட்டதைப் பற்றித் தெரிவிப்பது தவறல்ல. எந்த முறையில் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தான் வெளியிடக் கூடாது என்று கருதுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: சில வசம்புகளை மாற்றியிருக்கின்றோம். அதைப் போலவே இதுவும் அறவே தேவை யில்லை என்பது தான் என்னுடைய அபிப்பி ராயம்.

அடுத்தபடியாக, 'கால் அட்டென்ஷன்' நோடீஸ் இந்தச் சபையில் வந்து கொண்டிருக்கிறது. கேள்விகள் முடிந்தவுடன் அங்கத்தினர்கள் அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதற்கு ஏதாவது முக்கியமான விஷயம் கொண்டு வருகிறார்கள். அதன் பேரில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்குப் பதில் கொடுக்கிறார்கள். அமைச்சர்கள் பதிலளித்தவுடன், இப்போது உள்ள விதிகளின்படி விளக்கங்கள் கேட்கக்கூடாது. அமைச்சர் சொன்னதோடு சரி. அத்தோடு விட்டுவிட வேண்டும் என்று தான் இருந்தது. ஆனால், இப்போது அமைச்சரின் பதிலுக்குப் பிறகு உறுப்பினர் விளக்கம் கேட்கும் முறையில் இரண்டொரு கேள்விகள் கேட்கலாம் என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கமிட்டிகள் போடுவதுபற்றி திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள். ஒரு நாள் தொழிலாளர் அமைச்சர் அவர்களுடன் விவாதித்த போது எடுத்துச் சொன்னேன். பார்லிமெண்டில் உள்ளது போல இங்கேயும் நமது மாநிலத்திலும் விதி இருக்கவேண்டும் என்று சொன்னேன். தொழி லமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் கொள்கை ரீதியில், அது நல்ல யோசனை தான், அதைப் பற்றி நாங்கள் தெரிந்து முடிவு செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படித் தெரிந்து முடிவு செய்து அப்படி ஒரு கமிட்டி போட்டால், அரசாங்கத்திற்குப் பொறுப்பு கொஞ்சம் குறையும். அங்கத்தி னர்கள் பேரில் அந்தப் பொறுப்பை சுமத்துவதாகவும் ஆகும். ஆகவே,

அங்கத்தினர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக அரசு நடைபெற அரசுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இது போக, விதி 59 (7) இல் உள்ள உப-விதிக்கு ஒரு பிரோவிசோ விட்டுப் போயிருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானம் போன்ற தீர்மானங்களிலும்கூட அந்த புரோவிசோ இருக்கிறது. அதன் மூலம் அவைத் தலைவருக்கு ஒரு அதிகாரம் கொடுக்கிறோம். குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றி இங்கே பேசும் போது கோர்ட்டில் உள்ள நடவடிக்கைகளையோ, டிரிப்யூனலுக்கு முன்னால் உள்ள நடவடிக்கைகளைப் பற்றியோ விவாதிக்க அனுமதிக்கக் கூடாது, அங்கத்தினர்கள் பேசக்கூடாது. ஆனால், தலைவருக்கு, ஒரு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் பார்த்து இதை இங்கே விவாதிப்பதால் விசாரணை பாதிக்கப்படாது, விசாரணைக்கு பங்கமேதும் ஏற்படாது என்று அவர் நினைத்தால், ப்ரோஜிஜர் போன்றவற்றை விவாதிக்க அனுமதிக்கலாம். அந்தப் 'பிரோவிசோ' தான் இந்த அதிகாரத்தைக் கொடுக்கிறது. அந்தப் புரோவிசோ இந்த விதி 59-க்கு மட்டும் போட விட்டுப் போயிருக்கிறது. மற்றவைகளுக்கெல்லாம் போட்டிருக்கிறார்கள். இதற்கும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதைப் பற்றி விவரமாகப் பிறகு பேசுகிறேன்.

பொதுவாக, இவைகளையெல்லாம் சொல்லி நம்முடைய கவுன்சில் காரியாலயம் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மேலவையினுடைய சட்ட திட்ட விதி முறைகள் திருத்தப் பெற்று இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பொறுக்குக் குழு பல தடவை கூடி எல்லாத் தரப்பினைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதில் அடங்கியிருந்து விதிகளை மிக விரிவாக ஆராய்ந்து அறிந்து, மற்றைய மாநிலங்களுடைய சட்ட திட்ட விதிமுறைகளையெல்லாம் கூட தருவி ஆராய்ந்து, பாராளுமன்றத்தினுடைய விதிமுறைகளையெல்லாம் கூட ஆராய்ந்து, ஓரளவிற்கு செம்மைப்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் இன்று இங்கே திருத்தங்களெல்லாம் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஏதாவது திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்காக தனியாக ஒரு பொறுக்குக் குழு அமைத்து அதற்குப் பிறகு அதை திருத்த வேண்டுமென்ற முறை இருந்தது. இப்போது நாம் ஒரு நிலையான குழுவை ஏற்படுத்துவதன் மூலம் அவ்வப்போது தங்களுடைய கருத்தைத் தெரிவித்து இந்தக் குழுவினர் ஆராய்ந்து அப்போதே கூட திருத்துவதற்கு வாய்ப்பாக இப்போது புதிதாக இந்த விதிமுறைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே ஒரு 5 ஆண்டு காலம், 6 ஆண்டு காலம் 10 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை பொறுக்குக் குழு அமைத்து அந்தக் குழுவினர் ஆராய வேண்டுமென்ற நிலையிலிருந்து, இப்போது நிலையான குழு ஏற்படுத்தியுள்ளதன் மூலமாக பல கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து; தக்க முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பும் வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தது அவருடைய பல அரிய கருத்துக்களை, யோசனைகளை எடுத்துச் சொல்லி, விதி முறைகளைச் செம்மைப்படுத்த உறுதுணையாக இருந்தார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இருந்தார்கள். மற்றைய உறுப்பினர்களும் இருந்தார்கள். கேள்வி கேட்பதற்கு இருக்கிற நேரத்தையும் அதற்கு விடை வரவேண்டிய தன்மைகள்பற்றியும் சொன்னார்கள். ஏற்கெனவே இருந்தது நடைமுறைக்குப் பொருந்தி வராமல் இருந்தது. 14 நாட்களுக்குள்ளாகக் கேள்விக்குப் பதில் வரவேண்டுமென்று போட்டு வைத்திருந்தாலும் கூட, நடைமுறையில் பார்க்கிறபோது, சில பல கேள்விகளுக்கு உடனடியாக பதில்கிடைக்கின்ற நிலைமைகள் இருந்தன. சில கேள்விகளுக்கு விடை திரட்டுவதற்கு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று புள்ளிவிவரங்களைத் திரட்ட வேண்டுமென்றால், 15, 20 நாட்களுக்குள் முடிகின்ற மாதிரி அமையவில்லை. சாதாரணமாக இந்த ஆண்டு எவ்வளவு பணம் இணைகள் வெட்ட கொடுக்கப்பட்டன, எவ்வளவு இணைகள் வெட்டப் பட்டன, எவ்வளவு இணைகள் வெட்டப்படாமல் உள்ளன என்று ஒரு கேள்வி 3.50 p.m. கேட்டு விடுவார்களானால், அதை எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி, கோட்டாட்சித் தலைவர்களுக்கு அனுப்பி, பிறகு ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர்களுக்கு அனுப்பி வெட்டப்பட்ட இணைகளை ஆராய்ந்து, வெட்டப்படாமல் இருக்கிற இணைகளை ஆராய்ந்து, வெட்டப்படுவதற்கு இடம் கிடைக்காத காரணத்தினால் வெட்டப்படவில்லையா என்பதனை ஆராய்ந்து, இப்படி புள்ளி விவரங்களையெல்லாம் திரட்டிச் சேகரிக்க வேண்டுமென்றால் பல மாதங்கள் ஆகும். இப்படிச் சில பல கேள்விகளுக்கு உடனடியாக விடைகள் வருவதில்லை. ஆனால் நாங்களே வற்புறுத்த வேண்டிய அளவிற்கு காலத் தாழ்வோடு பல கேள்விகள் வரவேண்டிய சூழ்நிலைமை இருந்தது. அதனால்தான் 14 நாட்கள் என்று போட்டு வைத்திருந்தாலும், நடைமுறையில் பார்க்கிற போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி, சில கேள்விகளுக்குப் பதில் வந்து இங்கே வருவதற்கு ஒரு ஆண்டுக் காலம் கூட ஆகிவிட்டது. இப்போது திட்டவட்டமாக, தெளிவாக அவர்கள் விடைகள் அனுப்புவதற்கு ஏற்ற வகையில் அதிகபட்சமாக 42 நாட்கள் என்று இடம் கொடுத்து, பல்வேறு வகைகளில் செல்லவும் முயற்சி எடுக்கவும் இடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக, எப்படியும் பதில் வர வேண்டுமென்பதற்காக, இட்டத்தட்ட 42 நாட்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1972

கொடுத்து கட்டாயம் வந்து தீர வேண்டுமென்று வற்புறுத்த நமக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. குறைந்த நாட்களைக் கொடுத்து வாவில்லியென்றவுடனே, காலம் கடந்து விட்ட பிறகு தலைக்கு மேலே போன தண்ணீர் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன என்கிற அளவிற்கு 14 நாட்கள் தாண்டி விட்ட பிறகு இரண்டு மாதமானால் என்ன, 6 மாதமானால் என்ன, அல்லது ஒரு ஆண்டு ஆனால் என்ன என்ற போக்கு இருக்கின்ற காரணத்தினால், அதைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு வாய்ப்பு இருக்கத்தக்க அளவிற்கு நாட்கள் இருக்க வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து 42 நாட்கள் என்று வைத்தோம். இதை நடைமுறைப்படுத்திப் பார்ப்போம். இதில் மறுபடியும் ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால், அதை மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சுருக்கெழுத்தாளர்கள் குறிப்பு எடுப்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நமக்கு தமிழ் ரிப்போர்ட்டர்கள் நிரந்தரமாக இல்லாத காரணத்தினால், சில பல இடர்ப்பாடுகளெல்லாம் ஏற்படுகின்றன. அவ்வப்போது வைப்பதனால், உறுப்பினர்கள் பேசுகிற வேகத்தில் அவர்கள் எடுப்பதில் சில பல சிரமங்கள் இருக்கக் கூடும். இந்தத் தொடரைப் பொறுத்த வரையில், ரிப்போர்ட்டிங்கை நேர்மைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதை மேலும் கவனித்து, அதில் கவனம் செலுத்தி, செம்மைப்படுத்த வேறு என்ன நடைமுறைகளைக் கையாளலாம் என்று கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி' அமைக்க வேண்டுமென்ற கருத்தை இந்த விதிபற்றி வரையறுக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் குறிப்பிட்டார்கள். அதை வைத்தால் இரு அவைகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்க வேண்டும். அந்த வகையில் நாம் மட்டும் போட்டுவிட்டு, பேரவையில் போடாமலிருந்தால், பொருத்தமாக இருக்காது. ஆகவேதான், பேரவையில் இந்தக் கருத்தை வைத்து பேரவையில் ஏற்றுக்கொள்கிற நிலைமை இருந்தால், மேலவை விதிமுறைகளைத் திருத்துகிற சூழ்நிலை வருகிறபோது, அதை மாற்றிக்கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். போதுமான கால அளவு இல்லாத காரணத்தினால், இதைப் படித்து மேலும் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பில்லையென்று குறிப்பிட்டார்கள். மறுபடியும் படித்து மேலும் திருத்த வேண்டிய கருத்துக்கள் இருக்குமானால், 'ஸ்டாண்டிங் கமிட்டி' அமைக்கும்போது, அதில் இப்படிப்பட்ட

3rd April 1972] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திருத்தங்களை எடுத்துச் சொல்வார்களானால், அதைப்பற்றிக் கூட நிலைக் குழு ஆராய்ந்து பார்த்து தேவையான திருத்தங்களை நடைமுறையில் கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் காலத் தாழ்வு ஆகுமானால், இந்தச் சட்ட திட்டங்கள் உடனடியாக நடைமுறைக்கு வராமல் போய்விடும். இப்போது நிறைவேற்றினால், அடுத்த கூட்டவை நடைமுறைக்கு வந்ததாகும், அந்தப் பலன் ஏற்படக் கூடும்.

பிரிவிலேஜ் மோஷனைப்பற்றியும், உரிமைப்பற்றிய பிரச்சினைபற்றியும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்த பிரிவிலேஜ் நோட்டீஸ் அவைத் தலைவருக்கும், செயலாளருக்கும் அவை முன்னவருக்கும் தர வேண்டுமென்று இருக்கிறது. இதை முடிவு செய்யவேண்டிய முழு உரிமையும் சேர்மனைத்தான் சார்ந்தது. உரிமைப் பிரச்னை இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்து முடிவு கட்டி அதை ஏற்றுக்கொள்வதற்கும், தள்ளுவதற்கும் முழு உரிமை நீதிபதி மாதிரி உள்ள தலைவர்களுக்குத்தான் இருக்கிறது. ஆனால் செயலாளருக்கு ஒன்று கொடுக்க வேண்டும், அவை முன்னவருக்கு ஒன்று கொடுக்க வேண்டுமென்று கூறுவதற்குக் காரணமே, அவை முன்னவர் கட்சி மாச்சரியங்கள் எதுவுமில்லாமல் அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்குக் கடப்பாடு உடையவர் என்பது இலக்கணமாகும். அவையில் இருக்கிற எந்த உறுப்பினருக்கும் எந்த உரிமையிலாவது பங்கம் ஏற்பட்டாலும் கூட, முன்னணியில் இருந்து அந்த உரிமை பாதிக்கப்படாமல் காப்பாற்றுகிற பொறுப்பு அவை முன்னவருக்கு இருக்கிறது. ஆகவே இதிலும் அவர் நாட்டம் செலுத்த வேண்டும்; கவனம் செலுத்த வேண்டுமென்பது முக்கியம். செயலாளருக்குத் தர வேண்டுமென்று சொல்வதற்குக் காரணமே இப்படிப்பட்ட பிரச்னை வருகிற போது, தலைவர்களுக்குப் பல்வேறு நிலைமைகளை, சட்ட நுணுக்கங்களை, விதிமுறைகளை, மற்றவைகளை எடுத்துச் சொல்லவேண்டிய பொறுப்பு செயலாளருக்கு வருகிறது. இதன் முன் பின் தன்மைகள் என்ன, வேறு பாராளுமன்றத்தில் நிலைமைகள் என்ன, மேல் பார்லிமெண்டரி பிராக்டிஸ், பாராளுமன்றத்தில் நிலைமைகள் என்ன, ஏற்கெனவே இது பற்றிய பிரச்னைகள் எப்படி, இது உரிமைப் பிரச்னைக்கு வருமா வராதா என்ற இந்த கருத்துக்களையெல்லாம் எடுத்து மாண்புமிகு மேலவைத் தலைவருக்கு உறுதுணையாக இருக்கிற வகையில், முடிவெடுத்து தீர்ப்பளிக்கின்ற வகையில் இருக்கிற சாதக பாதகங்கள் என்ன, எந்தெந்த வழக்குகளில் என்ன நிலைமைகள் ஏற்பட்டன என்று எடுத்துக் காட்டவேண்டிய பொறுப்பு செயலாளருக்கு இருக்கிற காரணத்தினால்தான் அவருக்கும் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறதே தவிர இதைப்பற்றி முடிவு கட்டுகிற, தன்னுடைய கருத்தை, கவனத்தைச் செலுத்துகிற பொறுப்பு எதுவும் செயலாளருக்கு அமையவில்லை. அவர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1972

மேலவைத் தலைவருக்கு உறுதுணையாக இருக்கவேண்டியவர். இதுபற்றி பல வேறு பிரச்னைகளை ஆராய்ந்து அதனைத் தலைவரிடத்தில் அளிக்க வேண்டும். தீர்ப்பளிக்க வேண்டியவர் தலைவர். அதற்காகத்தான் செயலாளரிடத்தில் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதே தவிர, அங்கத்தினர்களின் உரிமை எதுவும் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படாது. எடுத்த எடுப்பில் கொண்டு வரவேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் அவைத் தலைவரவர்கள். அதை ஆராய்ந்து, பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா என்று கண்டறிந்து தீர்ப்பளிக்க வேண்டியவர் அவர்கள். மேலவைத் தலைவரவர்களே நேரடியாக பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம், அல்லது அவர்கள் தானே தீர்ப்பளிக்கலாம், அல்லது கமிட்டிக்கு அனுப்பி அதனுடைய யோசனையைக் கேட்டு அதற்குப் பிறகு தீர்ப்பளிக்கின்ற அளவிற்கு தலைவர் வரலாம், அல்லது உறுப்பினர்களே கொண்டு வந்து முன்மொழிந்து பேசுகிற நிலைமை இருக்கலாம். காரணம் இந்த அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு முன்னவருக்கு இருக்கிற காரணத்தினால், இது பற்றிய விவரங்களை செயலாளர் தலைவரவர்களுக்குக் கூற வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால் அவை முன்னவருக்கும் செயலாளருக்கும் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றிருக்கின்றதே தவிர, தலைவரவர்களுடைய உரிமையையோ அல்லது அவர்களுடைய அதிகார வரம்பையோ குறைப்பதற்காக அல்ல என்று குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் இந்த அவை கூடும் நேரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அண்மையில் இதுபற்றிக் கூட விவாதிக்கப்பட்டது. இங்கே உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களை நாங்களே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அடுத்த முறை நடைமுறைப்படுத்திப் பார்க்கலாமா என்று இருக்கிறோம். அது எங்களுக்கும் வாய்ப்பாக இருக்கும். மேலவையை 10 மணியிலிருந்து 1 மணி வரை நடத்தி, பேரவையை மாலை 4 மணியிலிருந்து தொடங்கினால் இரவு எவ்வளவு நேரம் போனாலும் இழுத்துக் கொண்டு போகலாம். இல்லாவிட்டால் பேரவை 9 மணிக்குத் துவங்கி ஒவ்வொரு நாளும் 2½ மணி, 3 மணி, 3½ மணி என்று முடிப்பும் போது அதை முடித்து விட்டு எங்களால் இங்கு உடனே வர முடியாத நிலைமை ஏற்படுகிறது. எப்படியும் மேலவையை 10 மணிக்குத் துவக்கினால், 1 மணிக்கு முடித்து விடலாம். பிறகு 4 மணிக்குப் பேரவையை வைத்துக் கொண்டால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நடத்த வாய்ப்பு இருக்கக் கூடும். இதை அடுத்த தடவை ஆரம்பித்தலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

3rd April 1972] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதுமட்டுமல்லாமல், பேரவையில் ஒன்று நிறைவேறி, இங்கே மேலவைக்கு வருகின்றபோது, அடுத்தடுத்து வருகின்ற வாய்ப்புகூட ஏற்படுகிறது. அடுத்த தடவை அந்த அவையின் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலேயும், இந்த அவையின் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலேயும் அது பற்றி ஆராய்ந்து, அடுத்தது ஷார்ட் டர்மாக இருக்கிற காரணத்தால், 10 நாட்கள், 8 நாட்கள் நடைபெறுகிறபோது பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்திப் பார்ப்போம். அதிலே பலனிருக்குமானால், தொடர்ந்து நடத்தலாம் என்ற நிலைமை இருக்கிறது.

இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: திருத்தங்களை நான் பிரேரேபிக்கவில்லையே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆகவே இந்தக் கருத்துக்களைப் பொறுத்த வரையிலேயும், நிலைக் குழு ஒன்றை நாம் ஏற்படுத்துவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகள், மற்ற பிரச்சினைகளை அதில் ஆராயலாம்.

இந்தக் கேள்வியைப் பொருத்து வெளியே சொல்லக்கூடாது என்ற அளவுக்கு, கேள்வியோ அல்லது கொடுக்கப்பட்டிருக்கிற நோட்டிசோ அதன் உள்ளே இருக்கிற கருத்துக்கள் என்ன என்ற விவரமோ தெரிவிக்கக்கூடாது என்ற தன்மையில் இப்பொழுதே போட்டிருக்கிறோம். இதுபற்றிய கேள்வி கேட்டிருக்கிறது என்று அட்மிட் ஆனதற்குப் பிறகு வேண்டுமானால் சொல்லலாம் என்று இருக்கிறதே தவிர, உள்ளே இருக்கிறது என்ன என்று சொல்லக் கூடாது. அப்படி இன்ன கேள்வி கேட்டிருக்கிறோம், இன்னதுதான் என்று சொல்லிவிட்டால், நாங்கள் போகிற இடங்களிலே பத்திரிகை நிருபர்களும் எங்களைக் கேட்டு நாங்கள் அங்கேயே பதில் சொல்லிவிடுவோமானால், அதுவே உரிமைப் பிரச்சினை ஆகி, இந்த அவையிலே சொல்ல வேண்டிய பதிலை எப்படி தஞ்சாவூரிலே சொன்னீர்கள், திருச்சியிலே எப்படிச் சொன்னீர்கள் என்ற அளவுக்கு வந்துவிடும். ஆகவே எந்தக் கேள்வியின் உள்ளே இருக்கிற ஷரத்துக்களையும் வெளியே சொல்லக்கூடாது. அப்படிச் சொல்லக் கூடாது என்றால், தலைப்பை மட்டும் சொல்வதால் எந்தப் பலனும் ஏற்படாது. அப்படி ஒரு சட்டம் இருந்தால்கூட, இங்கே வருகின்ற மரபினையொட்டி காப்பாற்றப் படவேண்டிய சூழ்நிலையை உறுப்பினர்கள் அனைவரும் மேற்கொள்வோமேயானால் தான், அது முறைப்படி இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு ஒரு தடவைதான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாம், என்று இருப்பதை இரண்டு கொண்டு வரலாம் என்று வைத்திருக்கிறோம். ஒருவருக்குப் பதிலாக, ஒருவர் வராவிட்டால், இன்னொருவருக்கு உரிமை தந்து, அவர் வராதவருக்குப் பதிலாகக் கொண்டுவரலாம் என்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [3rd April 1972

வைத்திருக்கிறோம். ஏனென்றால் இங்கே விஷயத்தையெல்லாம் தயார் செய்து கொண்டு வந்து, எதிர்பாராமல் உறுப்பினர் வராவிட்டால், அவர் 'ஆதனை சேஷன்' கொடுப்பாரானால் அவருக்குப் பதிலாக இன்னொரு உறுப்பினர் அந்தப் பிரச்சினையை எழுப்பலாம் என்று நடைமுறை சங்கடங்களைத் தீர்ப்பதற்காக விதிமுறைகள் எல்லாம் திருத்தப்பட்டிருக்கின்றன. இன்னமும்கூட தேவையான அளவுக்குச் செம்மைப்படுத்திக் கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான் இந்தக் குழுவினரே திருத்தி ஆராய இதற்கொரு நிலையான குழு அமைத்து விடலாம் என்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் சொன்னதுபோல், எல்லா அங்கத்தினர்களும் இடம்பெறத்தக்க அளவுக்கு இந்தக் குழுக்கள் இருக்க வேண்டுமென்றார்கள். பொதுவாக அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய கருத்துத்தான். பல உறுப்பினர்களும் பாவலாக இருக்க வேண்டுமென்ற முறையில்தான் ஓரளவிற்குப் பேசித் தீர்க்கவேண்டிய அளவிலே இருக்கிறோம். ஆனால் சட்ட திட்டத்தினுடைய அடிப்படையிலே வரும்போது, ஒற்றை மாற்று ஓட்டு முறையிலே இன்னின்ன இடங்கள் பெற வேண்டும் என்று வைத்திருக்கிறோம். கூடுமான அளவு பாவலாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருக்கிற 7 கமிட்டியையும் 64 பேருக்கும் பிரித்துக் கொடுப்பது என்கிற முறையிலே கவனிக்க முடியாது. ஆனால் அவர்கள் சொல்கிற கருத்துப்படி பொதுவாக பாவலாகக் கொண்டு வருவதற்கான கருத்தின் அடிப்படையில் இந்த அவையினுடைய கொறடா அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து, கலந்து பேசி முடிவு செய்தாலும், நாங்களெல்லாம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கலாம். அந்த முறையிலே பாவலாக எல்லா உறுப்பினர்களும் ஏதாவது ஒரு குழுவிலே எப்படியாவது இடம் பெறத்தக்க அளவிலே சுற்றிலே இருப்பதுதான் மிக மிக நல்லது. அந்த அளவிலே பேசித் தீர்த்துக்கொள்கிற ஒரு மாபை நீண்டகாலமாக உள்ளதை ஒட்டி, ஒட்டு எடுக்கவோ அல்லது தேர்வு நடத்துகிற அளவுக்குக் கொண்டு போகாமல் பாவலாக இருக்கவேண்டும் என்று அந்தக் கருத்தை 4-00 p.m. வைத்திருக்கிறோம். அதை நடைமுறையிலே கடைப்பிடிக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டால், அந்த அளவுக்கு இந்தச் சட்ட திட்டங்கள் ஓரளவுக்கு இந்த அவையைச் செம்மையாக நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த வகையிலே இந்த விதித் திருத்தங்களை இப்போது ஏற்றுக்கொள்ளும்படியாக இந்த மேலவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That the Rules of Procedure of the Legislative Council, as amended by the Select Committee, be taken into consideration."

3rd April 1972]

The motion was put and carried and the Rules of Procedure of the Legislative Council, as amended by the Select Committee, were taken into consideration.

Rules 1 to 58 were put and carried.

Rule 59.

MR. CHAIRMAN: There is an amendment to Rule 59 given notice of by the hon. the Leader of the Opposition. He may move it.

THIRU K. RAJARAM: Sir, I move—

"Add the following proviso to item (vii) of rule 59—

'Provided that the Chairman may in his discretion allow such matter to be raised in the House if it is concerned with the procedure or subject or stage of enquiry before the tribunal or Commission or Court of enquiry and the Chairman is satisfied that it is not likely to prejudice the consideration of such matter by such tribunal, statutory authority, commission or court of enquiry'."

Thiru T. K. Subbiah seconded the amendment.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, சாதாரணமாக அமைச்சர் அவர்களே பிரேரேபித்திருக்க வேண்டிய ஒரு திருத்தம் இது. ஏனென்றால் ஒத்திவைப்புத் தீர்மானம், புதிதாகச் சேர்ந்துள்ள

'No Day yet—Named-Motion

இவைகளிலெல்லாம் சம்பந்தப்பட்ட விஷயம் கோர்ட்டிலோ அல்லது ஒரு விசாரணை மன்றத்திலோ இருக்கும் பட்சத்தில் அதை அனுமதிக்கக்கூடாது, ஆனால் மேலவைத் தலைவர் அவர்கள் விரும்பினால், அது கோர்ட்டிலுள்ள விஷயத்தை எவ்விதமும் பாதிக்காது என்று எண்ணினால், அவர்கள் அதை அனுமதிக்கலாம் என்ற அர்த்தத்தில்

"Provided that the Chairman may in his discretion allow such matter to be raised in the House if it is concerned with the procedure or subject or stage of enquiry before the tribunal or Commission or Court of enquiry and if the Chairman is satisfied that it is not likely to prejudice the consideration of such matter by such tribunal, statutory authority, Commission or Court of enquiry". என்று போட்டிருக்கிறோம்.

[திரு. கே. ராஜாராம்] [3rd April 1972

அட்ஜர்ன்மென்ட்—ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும்—தலைவருக்கு இந்த மாதிரி அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றோம். அதேமாதிரி மற்ற தீர்மானங்களுக்கும் கடைசியில் இந்த மாதிரி ஒரு ப்ரோவிசோ சேர்த்திருக்கின்றோம். ஆனால் " One hour debate " (ஒரு மணி நேர விவாத தீர்மானம்) என்று கூறக்கூடிய இந்த விதியில் மட்டும் தலைவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வில்லை. அது எப்படியோ விட்டுப்போயிருக்கிறது. ஆகையினால் அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இதைப் பிரேரேபிக்கிறேன்.

திரு. டி. கே. சுப்பையா : நான் இதை வழிமொழிகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது விடுபட்ட ஒரு திருத்தந்தான். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதை நிலைக் குழுவுக்கு விட்டு, நிலைக் குழு இதை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். ஏனென்றால் இது விடுபட்ட ஒன்றுதான். இதைச் சேர்த்துக்கொள்வதிலே தவறு எதுவும் இல்லை, ஆகவே இதை ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறி, நிலைக் குழுவுக்கு விட்டு கொண்டு வரலாம் என்று கூறுகிறேன்.

MR. CHAIRMAN : Is the hon. the Leader of the Opposition pressing his amendment ?

THIRU K. RAJARAM : In view of what the Hon. the Minister for Education and Local Administration has said, I am not pressing my amendment.

The amendment was, by leave, withdrawn.

Rule 59 was put and carried.

Rules 60 to 82 were put and carried.

Rule 83.

MR. CHAIRMAN : There is an amendment to rule 83 given notice of by the hon. the Leader of the Opposition. It is negative in character.

3rd April 1972]

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். இதைப் பற்றி நான் சொல்லக்கூட அனுமதிக்காமல், " Negative in character " என்று சொல்வதால் கொஞ்சம் தெரிந்துகொள்ளலாம் என்று இருக்கிறேன். எனென்றால் இனிமேல், இந்தத் தவறுகள் செய்யாமலிருப்பதற்கு விவரம் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : பாசிடிவாக இருக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம் : இதுமாதிரி ஒரு விதியை விட்டுவிட வேண்டுமென்று சொல்கிறேன். " Amendment is negative in character " என்றால், வற்புறுத்தப் போவதில்லையே. விஷயத்தை விளக்கி முடிவும் சொல்லத்தானே வேண்டியிருக்கிறது.

MR. CHAIRMAN : Yes, he may proceed.

திரு. கே. ராஜாராம் : I move—" Delete sub-rule (4) (e) of rule 83 " தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் எதற்காக நான் கொடுத்திருக்கிறேன் என்றால், சபையின் கவனத்திற்கு முக்கியமாகக் கொண்டு வர வேண்டும் என்றுதான். புதிதாக ஒன்றுமில்லை. ஒரு சில தவறு . . .

THIRU C. SWAMINATHAN : A copy of the amendment has not been given to us. May I know the contents of amendment ?

திரு. கே. ராஜாராம் : விதி 83-ல்

" No debate shall be admissible on a point of order but the Chairman may, if he thinks fit, hear Members before giving his decision ". என்று இருக்கிறது. இதிலே 4-வது உப விதியில்

" A Member shall not raise a point of order to ask for information; or to explain his position; ...or which may be hypothetical; (*e*) that the division bells did not ring or were not heard. " என்று இருக்கிறது. அப்பொழுது திடீரென்று ஒருவர் எழுந்து " பாயின்ட் ஆஃப் ஆர்டர் " என்று சொல்லி தடை பண்ணக்கூடாது. சபையின் நடைமுறைக்கு இடைஞ்சல் பண்ணக்கூடாது என்று போட்டிருக்கிறது.

".Which may be hypothetical " —இது எல்லாம் இருக்கக்கூடாது.

[திரு. கே. ராஜாராம்] [3rd April 1972

இன்னும் ஒன்று. "that the division bells did not ring or were not heard." என்று இருக்கிறது. அதை விட்டுவிடவேண்டும் என்று கூறுகிறேன். இப்பொழுது மணி அடிக்கிறது. "எலக்ட்ரிசிடி பேயில்யர்" என்று வைத்துக்கொள்வோம். இந்த மணி பாத்ரூமிலோ அல்லது கேப்ரரியிலோ உட்கார்ந்திருக்கிறவர்களுக்குக் கேட்கவில்லை. கொஞ்சம் நேரம் கழித்து வந்து அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி, டிவிஷன் பெல் எனக்குக் கேட்கவில்லை, மணி அடிக்கவில்லை, அதனாலே கார முடியவில்லை, ஓட்டெடுப்பில் கலந்துகொள்ள முடியவில்லை என்று சொல்லி, உண்மையிலேயே அந்த டிவிஷன் பெல் கேட்காததனாலே வரமுடியவில்லை என்ற ஒரு குறையை எடுத்துச் சொல்லக் கூடாது என்று விதியிலே இருந்தால், சரியா? எடுத்துச் சொல்லக்கூட அனுமதிக்கக் கூடாதா?

"He should not say that the division bells did not ring or were not heard"

என்று இருக்கிறது. "பாயின்ட் ஆஃப் ஆர்டர்" என்று "செய்ஸ்" பண்ணி இதைச் சொல்லக் கூடாது என்று இருக்கிறது. ஆகையினாலே இது தேவையில்லை. உள்ளே நடந்ததை சபையிலே எடுத்துச்சொல்லக் கூட ஒரு மெம்பருக்கு உரிமையில்லையென்றால், அது சரியாக இருக்காது. இதைக் கொஞ்சம் சரி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படித்தானே ஒழிய, வேறு ஒன்றுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், நான் பார்த்ததில், இது லோக் சபா, ராஜ்ய சபா, பிரிட்டிஷ் பார்லிமென்டரி மாபைத் தொடர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. ஏதோ காரணத்துக்காக இருப்பது போல் தெரிகின்றது.

திரு. கே. ராஜாராம்: எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தத்தைப் பொறுத்த வரையில், இதில் இப்போதிருக்கிற விதிகளின்படியே, எந்தவிதமான நெருக்கடியான நிலைமையும் ஏற்படப் போவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல், லோக் சபையிலும், மற்ற மாநிலங்களிலும், ராஜ்ய சபையிலும் இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது. அப்படி ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காகத் தான், அந்தக் குறைகளை நீக்கும் விதத்தில் அதில் ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் பெரிய இடர்ப்பாடு ஒன்றும் வரவில்லை. மற்றும் பாராளு

-10 .m.

3rd April 1972] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மன்ற லோக் சபையில் இப்போதிருக்கிற விதிகளை உருவாக்கியதில், இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டதில்லை. இப்படியே இருப்பதால், ஒன்றும் நகராறு ஏற்படாது. அப்படி ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டால், அதைத் தீர்த்துக் கொள்கிற பண்பு இருப்பதால், இதைப் பொறுத்த வரையிலும், இப்படியே இதை விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன்.

MR. CHAIRMAN: Is the hon. Member pressing his amendment?

THIRU K. RAJARAM: Sir, I am not pressing my amendment.

The amendment was, by leave, withdrawn.

Rule 83 was put and carried.

Rules 84 to 214 were put and carried.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "பொறுக்குக் குழு திருத்தியுள்ள தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை நடைமுறை விதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு" கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Rules of Procedure of the Legislative Council, as amended by the Select Committee, be approved".

* **திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, இந்த விதிகளை இதுவரையில் தமிழில் அச்சடிப்பது வழக்கமாக இல்லை. ஆங்கிலத்தில் இருப்பது மட்டும் போதாது, தமிழிலும் விதிகளின் நகலை நல்ல முறையில் பிரசுரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, நான் முதலில் சொல்ல விட்டுப்போன விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக அங்கத்தினர்கள் கேள்வி நேரத்தில், புதிதாக ஒரு விதியைச் சேர்க்க வேண்டும். கேள்வி நேரத்தில், பதில் சரியாகக் கிடைக்காவிட்டால், பிறகு அதைப்பற்றிக் கேள்வி கேட்க மாட்டார்கள். அமைச்சரின் பதில் திருப்திகரமாக இல்லையென்றால், ஒரு அங்கத்தினர், கேள்வி கேட்கிற அங்கத்தினரே அரை மணி நேரம் விவாதத்திற்காகக் கேட்கலாம் என்று இப்போதிருக்கிற விதியில் இருக்கிறது. அந்த அரை மணி நேர விவாதத்திற்கான விதியை ஒப்புக்கொண்டு, அன்றே, மறுநாளோ அரை மணி நேரம் ஒதுக்கலாம் என்ற அந்த விதி இப்போது வேறு மாதிரித் திருத்தப்பட்டிருக்கிறது. அரை மணி நேர விவாதத்தைப் பிறகு கேட்கலாம், அப்போதே கேட்க வேண்டும் என்பதல்ல, மறுநாள் கூட, 2 தினங்களுக்குள் அதைக் கேட்கலாம் என்பது அங்கத்தினர்களுக்கு இருக்கும் பெரிய உரிமை. இந்த

[திரு. கே. ராஜாராம்] [3rd April 1972

உரிமையை இந்த விதிகளில் நாம் சேர்த்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு பொதுவாக 'அப்ரூவ்' பண்ணி இந்த விதிகளை ஒப்புக் கொண்டு, நான் சொன்ன திருத்தங்களைப்பற்றிப் பின்னால் சொல்லலாம் என்று கூறி, இதை விட்டுவிடுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த அமெண்ட்மெண்டை விட்டுவிட்ட பிறகு நாம், புது விதிப் பிரகாரம், பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: "அப்ரூவ்" பண்ணுகிறபோது, கடைசியில் பேசலாம். "That the bill be passed" என்கிறபோது பேசாமல் இருக்கிறோமா. இப்பொழுதுதான் பேச வேண்டும். General ஆகப் பேச வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி, ஆங்கிலத்திலுள்ள விதிமுறைகள் தமிழிலும் கொண்டு வரப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற வற்பாடு, முறைப்படி மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That the Rules of Procedure of the Legislative Council, as amended by the Select Committee, be approved."

The motion was put and carried and the Rules were approved.

-15 p.m. MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

III. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

89. Notification issued with G.O. Ms. No. 29, Co-operation, dated the 25th January 1972, in regard to amendments to the Madras Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

90. Notification issued with G.O. No. 3742, Revenue, dated the 16th November 1971, in regard to reduction in the rate of sales tax on the sales of trailers by Elgi Equipments Private Limited, Madras and Coimbatore to the Government of India, Ministry of Defence. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

3rd April 1972]

91. Notifications issued with G.O. Ms. No. 2308, Rural Development and Local Administration, dated the 15th October 1971, in regard to redescription of the areas forming the Thottiam, Musiri, Thathiengarpet, Thuraiyur and Uppiliapuram Panchayat Unions in the North Tiruchirappalli development district. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, Notifications and Other Papers.

118. Notification issued with G.O. Ms. No. 1220, Labour, dated the 23rd September 1971, in regard to an amendment to the Minimum Wages (Madras) Rules, 1953 (Central Act of 1948).

119. Notification issued with G.O. Ms. No. 1216, Labour, dated the 23rd September 1971, in regard to certain amendments to Tamil Nadu Shops and Establishments Rules, 1948.

120. Notification issued with G.O. Ms. No. 3801, Revenue, dated the 10th November 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the two sale deeds in favour of the N. A. Annappa Raju Memorial High School, Rajapalayam, Ramanathapuram district.

121. Notification issued with G.O. Ms. No. 3942, Revenue, dated the 2nd December 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed in favour of the Thamizhaga Pulavar Kuzhu.

122. Notification issued with G.O. Ms. No. 3597, Revenue, dated the 10th November 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deeds to be executed by the Philanthropic public in favour of all the Local Library Authorities in this State.

123. Notification issued with G.O. Ms. No. 2891, Revenue, dated the 5th October 1971, in regard to an amendment to the table of fees, published at pages 316 to 319 in Part I of the *Fort St. George Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

124. Notification issued with G.O. Ms. No. 439, Revenue, dated the 11th February 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deeds to be executed in favour of the Life Insurance Corporation of India under the "Individual Employees Housing Scheme".

*125. The Tamil Nadu Appropriation Bill, 1972 (L.A. Bill No. 11 of 1972), as passed by the Assembly.

*126. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1972 (L.A. Bill No. 13 of 1972), as passed by the Assembly.

*Laid on the table of House on 30th March 1972.

Appendix I.

(*Vide* answer to Starred Question No. 286 on page 5)

(a) Details of staff employed for the enforcement of excise laws in this State.

Revenue Staff.

Serial number, Designation and number of posts.

1. Commissioner of Excise and Prohibition—1.
2. Deputy Commissioners—2.
3. Assistant Secretaries—3.
4. Assistant Commissioner (Excise)—14.
5. Senior Accounts Officer—1.
6. Superintendents—8.
7. Selection Grade Accountants——43.
8. Assistants—165.
9. Junior Assistants—29.
10. Typists—32.
11. Jeep Drivers—16.
12. Record Clerks—5.
13. Last Grade Government Servants and Excise Guards—441
14. Tahsildars—76.
15. Sarishtadars—13.
16. Huzur Head Assistant—1.
17. Deputy Tahsildars—57.
18. Revenue Inspectors—259.
19. Director of Excise and Prohibition Laboratory—1
20. Scientific Assistant, Grade I—2.
21. Scientific Assistant, Grade II—7.
22. Technician—1.
23. Senior Laboratory Attendant—1.
24. Night watchman—1.

Police Staff.

1. Deputy Inspector-General of Police (Excise)—1.
2. Superintendent of Police (Excise)—1.
3. Deputy Superintendent of Police (Excise)—14.
4. Inspector of Police—4.

Police Staff—*cont.*

Serial number, Designation and number of posts.

5. Sub-Inspector of Police—29.
6. Head Constables—27.
7. Police Constables—283.
8. Superintendent—1.
9. Assistants—2.
10. Camp Assistant—1.
11. Steno-Typist—1.
12. Typist—1.
13. Drivers—2.

(b) *Statement of cost per year on the employment of staff for enforcement of Excise Laws.*

Revenue Staff.

	Rs.
1. Office of the Board of Revenue (Excise and Prohibition), Madras	4,47,060
2. Office of the Deputy Commissioner (Excise and prohibition) Madras.	1,44,188
Districts—	
1. Madras	1,40,328
2. Chingleput	4,29,420
3. South Arcot	3,27,564
4. North Arcot	4,97,036
5. Thanjavur	4,74,264
6. Thiruchirappalli	4,87,044
7. Madurai	4,26,540
8. Ramanathapuram	5,25,524
9. Tirunelveli	1,41,300
10. Kanyakumari	1,96,236
11. Coimbatore	3,60,034
12. Salem	3,26,324
13. Dharmapuri	2,34,772
14. The Nilgiris	82,188
Total ...	56,09,822

3rd April 1972]

Police Staff.

	Rs.
Office of the Deputy Inspector-General of Police (Excise), Madras	62,148
Excise Intelligence Bureau, Madras	85,680
Deputy Superintendents of Police, (Excise) in 14 Districts	1,57,920
District Mobile Squads	11,41,424
Total ...	14,47,172

(1) போக்குவரத்து நெரிசல் முனைகளில் போக்குவரத்தை ஒழுங்குப் படுத்துதல்.

(2) காவல்பணி இரவு சுற்றுக்காவல் போன்ற பணிகள் புரிதல்.

(3) அழைப்பாணைகளைச் சேர்ப்பித்தல்.

(4) தகவல்கள், விவரங்கள் சேகரித்தல்.

(5) மக்களின் அச்சத்தை நீக்குதல், மீட்புப் பணி புரிதல், துயர் தணிப்புப் பணிகளை நிறைவேற்றுதல், தீயணைப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.

(6) உந்துபோக்குவரவு, பொறியியல், முன்னெடுப்பு பிரிவுகள், தீயணைப்புப் பேரணிகள், முதலுதவி, சிகிச்சை, தண்ணீர் வழங்கும் பணிகள், மின்சாரம் வழங்கும் பணிகள் ஆகியவற்றை நிறுவுதல் போன்ற இன்றியமையாப்

APPENDIX II.

(*Vide* answer to Starred Question No. 287 on page 5).

(அ) ஊர்க்காவல் படையினரின் பணிகளாவன :—
பணிகளைப் புரியும் செயல் படும் பிரிவுகளும் ஊர்க்காவல் படையில் உள்ளன.

(இ) ஊர்க்காவல் படைப்பிரிவுகள் பணிபுரியும் இடங்களின் பெயர்கள் :—

மாவட்டம்	ஊர்க்காவல் படை பணிபுரியும் இடங்களின் பெயர்கள்.
(1)	(2)
1. சென்னை	சென்னை மாநகரம்.

மாவட்டம்	ஊர்க்காவல் படை பணி புரியும் இடங்களின் பெயர்கள்.
(1)	(2)
2. செங்கற்பட்டு (கிழக்கு, மேற்கு)	பாங்கிமலை, திருவொற்றியூர், ஆவடி, அம்பத்தூர், தாம்பரம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு.
3. தென்ஞற்காடு	கடலூர், நெய்வேலி, விழுப்புரம்.
4. தஞ்சாவூர்	தஞ்சாவூர் நகரம், கும்பகோணம், நாகப்பட்டினம்.
5. திருச்சிராப்பள்ளி	திருச்சி நகரம், டால்மியாபுரம், கரூர், புதுக்கோட்டை, திருவெறும்பூர்.
6. மதுரை நகர்ப்பகுதி	மதுரை மாநகர்.
7. மதுரை வடக்கு.	திண்டுக்கல்.
8. இராமநாதபுரம்	இராஜபாளையம், சிவகாசி, இராமநாதபுரம், காரைக்குடி.
9. திருநெல்வேலி	திருநெல்வேலி நகரம், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.
10. கன்னியாகுமரி	நாகர்கோயில்.
11. வட ஆற்காடு	வேலூர், திருவண்ணாமலை, வாணியம்பாடி, ஆம்பூர்.
12. சேலம்	சேலம் நகரம், மேட்டூர்.
13. தருமபுரி	தருமபுரி.
14. நீலகிரி	உதகமண்டலம்.
15. கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி.

(உ) அலுவலகப்பணிகளைச் செய்வதற்காக, சென்னை மாநகரின் பருந்தாம் தளவாய், மற்ற அதிகாரிகளின் உபயோகத்திற்கு ஒரு நிலையமூர்தி (Station Wagon) ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊர்க்காவல்படை பிரிவுகளுக்கு ஊர்தி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

APPENDIX III.

(*Vide* item 11 on page 584.)

REPORT OF THE SELECT COMMITTEE ON THE RULES OF PROCEDURE OF THE MADRAS LEGISLATIVE COUNCIL APPOINTED IN THE YEAR 1971.

TO

The Honourable The LEGISLATIVE COUNCIL,
MADRAS-9.

The Committee which was constituted by a motion on 28th **July** 1971 for the amendment of the Madras Legislative Council Rules has the honour to make this report.

2. A preliminary meeting of the Select Committe was held on the 30th August 1971 in the Council Members' Lounge room, Fort St. George, Madras-9. The Committee again met at Ootacamund

from the 27th to the 30th September 1971. Thereafter the Committee met at Madras from the 15th to the 17th November 1971 and on the 10th and the 11th January 1972.

3. The draft report was considered and approved by the Committee at its meeting held on 11th January 1972.

4. The Committee examined in detail all the rules in the Madras Legislative Council Rules on the basis of the suggestions made by the Hon. Chairman and the Members which were printed and circulated. The amendments considered by the Committee are printed as Annexure I. @ The existing Rules and the Rules, as amended, are printed as Annexure II @ to this report.

5. The important changes made by the Committee are as follows:—

GENERAL.

(1) The name of the rules has been changed as the " Tamil Nadu Legislative Council Rules ", consequent on the renaming of the State as Tamil Nadu under the Madras State (Alteration of Name) Act, 1968. The Committee also decided that wherever the word " Madras " occurred in reference to the State, the word " Tamil Nadu " be substituted.

(2) New definitions of the terms " private member " and " private members business " have been added in lieu of the terms " non-official member " and " non-official business " which occur in various existing rules. The object is to exclude from the category of private member's business certan kinds of business for which notices are given by private members such as motions in pursuance of statutory provisions and notification laid on the table of the House under any law, and motion of thanks for the Governor's Address.

(3) At present, there is no provision in the rules outlining the procedure to be followed in regard to ratification of the Constitution (Amendment) Bills. The new rules make provision for this, embodying the procedure at present being followed. (New rules 140-A to 140-C.)

@ Available in the Legislative Council Department.

(4) From the year 1970, Policy Notes of the Government in respect of some departments are discussed in the Legislative Council as a matter of convention. New Rule 153-A has now been incorporated so as to make specific provision for discussing such Policy Notes.

RULE 2.

Committee.—In the existing rules, only the term ' Select Committee ' and no ' Committee ' has been defined. But under the rules a number of other Committees are constituted. Hence, the Committee decided to define the term ' Committee ' so as to include a ' Select Committee ' and a ' Joint Select Committee ' and omit the existing definition of ' Select Committee '. [New rule 2 (1) (c).

Information.—The ' Information ' is now being issued which contains a brief record of the proceedings of the Council at each of its sittings. Further, any information that has to be conveyed to the members both during meeting and non-meeting days, such as the swearing-in-, the arrest or the release of members is being conveyed to them through the ' Information '. To give an express sanction, the Committee decided to define the word ' Information ' [New rule 2 (1) (h)].

Precincts of the House.—At present the term ' Precincts of the House ' has not been defined in the rules although a definition of the term was adopted by the House on the 8th September 1960 on the recommendation of the Committee of Privileges. The Committee decided to incorporate a definition of this term in the Rules [New rule 2 (1) (p).]

NEW RULES 3-*A*, 3-*AA* *and* 3-*AAA*.

The existing rules do not provide for maintenance of roll of members and for making and subscribing an oath or affirmation, as required under Article 188 of the Constitution of India, though in the title of Chapter III, the term " Roll of Members " finds a place. The Committee decided to make provision in this regard.

should be taken up within seven days from the date of admission thereof and that the Chairman may permit not more than two questions by the Member who has called the attention of the Minister by way of elucidation or clarification.

RULE 60-A.

The Committee decided to incorporate a new Chapter on 'No-Day-Yet-Named Motions'. Accordingly, this Chapter provides for discussion on a matter of general public interest on a motion made with the consent of the Chairman. Such a motion should raise substantially one definite issue and should be restricted to a matter of recent occurrence and the Chairman may, in consultation with the Leader of the House, allot a day or days or part of a day for the discussion of any such motion.

Discussion on such a motion is different from a discussion under rule 57 in that the latter will take place without any motion before the House and without any voting thereon.

RULE 61.

The existing rule provides for the transaction of the business of the Council only in English. The Committee decided to amend it so as to provide that the business might be transacted either in Tamil or in English or in both.

NEW RULE 99-A.

The new rule prescribes the quorum for a meeting of the Select Committee, thereby making good the omission in the existing rules.

RULE 103.

The existing rule does not enable any member who is not a member of a Select Committee to be present at a meeting thereof. The Committee felt that Members of the House who were not members of a Select Committee should be permitted to be present at meetings of the Select Committee, if they so desired and watch its proceedings. Accordingly, the revised rule provides that Members who are not members of a Select Committee may be present during the deliberations of the Committee, without any right to participate in its discussion.

RULE 107.

New sub-rule (3) provides for minutes of dissent given by Members being appended to the Report of a Select Committee.

NEW RULE 116-A.

The existing rules do not specifically lay down the scope of discussion at the third reading stage of a Bill. New rule 116-A defines the scope of such discussion.

NEW RULE 116-B.

This new rule provides that the Chairman shall have power to correct patent errors and make such other changes in the Bill, as passed by the Council, as are consequential upon the amendments accepted by the House. It also provides that the corrections so made shall be intimated to the Members through 'Information'.

RULES 134 TO 137.

Article 197 of the Constitution lays down the procedure to be followed by the Legislature of a State in the case of disagreement between the two Houses on a non-Money Bill. The existing Council Rules do not provide for the complete procedure to be adopted in accordance with the Constitution. Revised Rules 134 to 137 provide for two journeys to the Council from the Assembly in the case of a non-Money Bill.

RULES 137-A TO 137-H.

The existing rules were framed in the year 1966 according to which only one reading has been provided for in respect of a Money Bill. The Committee felt that an opportunity should be available to the Members to discuss the Bill before it was returned. Therefore, it decided to amend rule 137-H so as to provide for moving a motion. "That the Bill be returned" after the consideration of all the clauses and the recommendations, if any.

RULE 157.

The existing rule provides that the consent of the Chairman should be obtained to ask the leave of the House to make a motion raising a matter of privilege. In practice this consent is required to be taken for raising the matter in the House. The rule has been amended omitting the words "to ask the leave of the House to make the motion" so as to bring it in line with the subsequent rules.

[3rd April 1972

NEW RULE 162-A.

This rule provides that a member of the Committee of Privileges who has a personal or direct interest so as to prejudicially affect the consideration of the matter of privilege to be considered by the Committee shall not sit on the Committee, when the matter is considered by it.

RULE 164.

The existing rule provides that the House may consider the report of the Privileges Committee on a motion made in the House but does not lay down the detailed procedure to be followed in this regard. The rule has been revised providing for a detailed procedure to be followed for consideration of the report of the Committee of Privileges.

RULES 191 TO 195-A.

Under the existing rules, there is no Standing Committtee on rules of the House. Only an *Ad hoc* Committee is constituted when it is desired to make any amendments to the rules. The revised rules provide for a Standing Committee on rules to which amendments suggested by the Members from time to time will be referred for consideration and report. The new rules also provide that amendments may be suggested by Members to the recommendations of the Committee in the first instance in which case the Committee will consider those amendments and then make a final report to the House.

Rule 197.

The existing rule provides for the expunction of words used in debate which are defamatory or indecent, or unparliamentary or undignified only. The revised rule provides for the expunction also of words or portions in debate which are grossly irregular and also of such words in the minutes of dissent appended to the Report of a Select Committee on a reference to the Chairman by the Chairman of the Select Committee.

C. P. CHITRARASU,
Chairman.

Fort St. George,
Madras-9, 11th January 1972.

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 4th April 1972

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Tamil Arasu

* 353 *Q.*—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to publish the Government Notifications only in Tamil Arasu; and

(*b*) if so, the details thereof?

'தமிழரசு'

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்திசார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு அறிவிப்புகளை 'தமிழரசு' பத்திரிகையில் மட்டுமே வெளியிட வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த அல்லது மாநில முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் அனைத்தும், "தமிழரசு" பத்திரிக்கையில் மட்டும் வெளியிடப்பட வேண்டுமென்று 1971-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் அரசு முடிவு செய்தது. அரசு விளம்பரங்களுக்காகும் செலவைக் குறைப்பதே இதன் நோக்கம். 1971-ம்

ஆண்டு ஆகஸ்ட் 1-ம் நாள் முதற்கொண்டு இது செயற்படுத்தப்பட்டு வருகிறது. பிற செய்தித்தாள்களுக்கு அளிக்கப்படும் விளம்பரங்களை, அரசு படிப்படியாக குறைத்துக்கொண்டு வருகிறது.

* 354 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state the number of copies of circulation of the Tamil Arasu District-wise as on date ?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இன்று வரை எவ்வளவு 'தமிழரசு' இதழ்கள் மாவட்ட வாரியாக விற்பனை ஆகின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பட்டியல் @ அவையில் வைக்கப் பட்டிருக்கிறது.

Union Administrative Reforms Commission

a 355 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the report of the Union Administrative Reforms Commission has been received by the Government; and

(b) if so, the action taken thereon ?

மத்திய நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இந்த அறிக்கையில் சில பகுதிகள் அரசுக்கு வந்துள்ளன.

(இ) இவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

@ Printed as Appendix I on page 689

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த அறிக்கையைப்பற்றி உட்பொருள் ஏதாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்திய அரசின் நிர்வாகமும் அது செயல்படும் முறைகளும், பணியாளர் நிர்வாகம், மாநில அளவில் நிர்வாகம், மாவட்ட நிர்வாகம், குடிமக்களின் குறைகளைக் களைவது தொடர்பான பிரச்சினைகள் ஆகியன குறித்து நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் அறிக்கைகளை மாநில அரசுக்கு அனுப்புகையில் அவ்வறிக்கைகளில் கண்டுள்ள பல்வேறு பரிந்துரைகளைக் குறித்து மாநில அரசின் கருத்துக்கள் நாளடைவில் தமக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசு விரும்பியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த அரசிலும் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைத்திருக்கிறோம். மத்திய அரசிலும் அதற்கான நிர்வாகக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளை ஏற்று அதன்படி இங்கேயுள்ள நம்முடைய சீர்திருத்தக் குழு செயல்படுமா என்றும், அதுபற்றிய விவரங்களையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவ்வாறு இங்கிருந்து அனுப்பப் படும் கருத்துக்களுக்கும் மாநில நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கும், மாநில அரசு எடுக்கக்கூடிய முடிவுகளுக்கும் தொடர்பு ஏதும் இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Children's Theatre, Madras

* 356 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI): With the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the Children's Theatre, Madras has been named after the late Thiru N. S. Krishnan, the comedian actor; and

(b) if so, the reasons therefor ?

சிறுவர் அரங்கம், சென்னை.

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள சிறுவர் அரங்கத்திற்கு மறைந்த நகைச்சுவை நடிகர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தன் வாழ்நாளில் கலைக்காக நாடகத் துறையிலும், திரைப்படத் துறையிலும் ஆற்றிய தன்னலமற்ற தொண்டினைப் போற்றும் வகையில் சென்னை சிறுவர் அரங்கம் "கலைவாணர் அரங்கம்" என்று பெயரிடப் பெற்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்தச் சிறுவர்கள் அரங்கத்தைச் சுற்றிலும் சிறுவர்கள் விளையாடுவதற்காகவும் அவர்கள் நீந்துவதற்காகவும், நீச்சல் குளம் முதலியவற்றுக்காக முன்பு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக அறிகிறேன். அதை இப்பொழுது மாற்றியுள்ளதால், வேறு சிறுவர் அரங்கம் ஒன்றை மறு படியும் உருவாக்க அரசால் முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறுவர்கள் அரங்கம் என்பது ஏற் கெனவே திரைப்படங்கள் போடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒன்றுதான். இப்பொழுது கலைவாணர் அரங்கம் என்ற பெயரில் உள்ள அரங்கை அரசாங்கம் 15 இலட்ச ரூபாய் செலவிலே புதுப்பிக்கப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவைகள் முடிந்த பிறகு அவைகளுக்குப் பக்கத் தில் சிறுவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நீச்சல் தொட்டிகள் அல்லது தோட்டங்கள் இவைகளைச் செய்வதற்காக இடம் இருக்குமானால் அவைகளைத் தொடர்ந்து செய்யலாம்.

Newsprint Quota

* 357 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have any say in the matter of allotment of newsprint quota; and

(b) if so, the details thereof ?

செய்தித் தாள் காகிதப் பங்கீடு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செய்தித் தாள் காகிதப் பங்கீட்டு அளவு ஒதுக்கீடு குறித்து கருத்து தெரிவிக்கும் உரிமை ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

4th April 1972]

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இல்வினா எழவில்லை.

Cattle Wealth

* 358 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any team of British Experts is visiting this State early in 1972 to suggest expansion of cattle wealth; and

(b) if so, the details thereof ?

கால்நடைச் செல்வம்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவது குறித்து கருத்துரை வழங்க 1972-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இம்மாநிலத்திற்கு பிரிட்டிஷ் நிபுணர் குழு ஏதாவது வருகை தரவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) பிரிட்டிஷ் குழுவொன்று சென்னைக்கு வருகை புரியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அக்குழுவின் வருகை பற்றிய சரியான விவரங்கள் இந்திய அரசினரால் மாநில அரசுக்கு இதுவரையிலும் தெரிவிக்கப்படவில்லை.

Institute of Rural Health and Family Planning, Gandhigram.

* 359 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any financial assistance is given to the Institute of Rural Health and Family Planning, Gandhigram in Madurai District, for the year 1970–71 and 1971–72; and

(b) if so, the details thereof ?

கிராம சுகாதாரம்-குடும்பக் கட்டுப்பாடு நிலையம், காந்தி கிராமம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், காந்தி கிராமத்திலுள்ள கிராம சுகாதாரம்-குடும்பக் கட்டுப்பாடு நிலையத்துக்கு 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளுக்காக நிதியுதவி ஏதாவது அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) போவை முன் ஒரு விவரமான அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

Manufacture of Salt

* 360 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the salt manufacturers at Tuticorin are affected following the sudden termination of their lease and cancellation of licence for manufacture of salt on lands belonging to Central Government; and

(*b*) if so, the steps proposed to be taken by the Government to redress their grievances?

உப்பு தயாரிப்பு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசுக்குச் சொந்தமான நிலங்களில் உப்பு தயாரிப்பதற்காக குத்தகை திடீரென்று இறுதி செய்யப்பட்டதன் விளைவாகவும், உரிமம் திடீரென்று ரத்து செய்யப்பட்டதன் விளைவாகவும், தூத்துக்குடியிலுள்ள உப்பு தயாரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்களது குறைகளைத் தீர்க்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) அரசு நிலங்களைக் கையகப் படுத்தும் பொழுதெல்லாம் உப்பு உற்பத்தியாளர்கள் அந்நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும்பொழுது, உப்பு உற்பத்தி செய்யத் தகுந்த வேறு

@ Printed as Appendix II on page 690-691

நிலங்களில் அவர்கட்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்னும் உறுதி 27—10—71-ல் வெளியிடப்பட்ட அரசு பத்திரிகைக் குறிப்பு எண் 20-ல் அளிக்கப்பட்டுள்ளது. உப்பு உற்பத்தியைப் பாதிக்காத வண்ணம் வெளியேற்றப்பட்ட உப்பு உற்பத்தியாளர்களுக்கு வேறு நிலம் ஒதுக்கப்படும்வரை தொடர்ந்து அதே நிலங்களில் குறுகிய காலத்திற்கு உப்பு உற்பத்தி செய்ய அனுமதிக்க அரசு உத்தேசித்துள்ளது. பாதிக்கப்பட்ட உப்புத் தொழில்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அரசால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

THIRU G. SWAMINATHAN: On a point of clarification, Sir. In the English copy of the questions in question No. 316, it is noted as molasses and industrial alcohol by Thiru V. Isvarmurti and in the Tamil Copy, it is in my name. I want to bring to the notice of the Hon. Chairman this discrepancy.

Government College of Arts, Madras and the Government School of Arts and Crafts, Kumbakonam.

* 361. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government College of Arts, Madras and the Government School of Arts and Crafts, Kumbakonam, have the same syllabus; and

(*b*) if so, the reasons for naming one as College and the other as School?

சென்னையில் உள்ள அரசு கல்-கைவினைக் கல்லூரி, கும்பகோணத்திலுள்ள அரசு கலை-கைவினைப் பள்ளி.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் உள்ள அரசு கலை-கைவினைக் கல்லூரி, கும்பகோணத்திலுள்ள அரசு கலை-கைவினைப் பள்ளி ஆகியவற்றில் பாடத் திட்டங்கள் ஒரே மாதிரியாயுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், ஒன்றைக் கல்லூரி என்றும், மற்றொன்றைப் பள்ளி யென்றும் பெயரிடப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தகுதி பட்டயப் படிப்பு வகுப்புகள் சம்பந்தப்பட்டவரை இரண்டு நிறுவனங்களிலும் பொதுவான பாடத் திட்டம் அனுசரிக்கப்படுகிறது. ஆனால் சென்னையில் உள்ள கலை, கைத்திறத் தொழில்

கல்லூரியில் மட்டும் மேல் நிலை தகுதி பட்டய படிப்பு வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன. அம்மாதிரி மேல் நிலை தகுதி பட்டய படிப்பு வகுப்புகள், கும்பகோணம் கலை, கைத்திறத் தொழில் பள்ளியில் நடத்தப்படவில்லை. ஆகவே கும்பகோணத்திலுள்ள நிறுவனம் "பள்ளி" என்று அழைக்கப் படுகிறது.

Mobile Court

* 362 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a mobile court for the trial of offences for cruelty to animals; and

(b) if so, the details thereof ?

நடமாடும் நீதி மன்றம்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மிருகங்களைக் கொடுமைப்படுத்தும் குற்றங்கள் புரிபவர்களை விசாரிப்பதற்காக நடமாடும் நீதி மன்றம் ஒன்று ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: *(அ)* இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Basic Amenities for the West Madras Neighbourhood Area.

3 S.N. Q.—THIRUVALARGAL M. ARUMUGASWAMI AND P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. Minister for Backward Classes be pleased to state—

(a) whether any representation has been made by the Members of the Legislature in June, 1971 for providing certain basic amenities such as street-lighting, market, transport facilities in the West Madras Neighbourhood Scheme (Batch III) at Anna Nagar, Madras; and

(b) if so, the action taken thereon ?

4th April 1972]

சென்னை மேற்குப் புறநகர்ப் பகுதிக்கு அடிப்படை வசதிகள்

திரு. எம். ஆறுமுகசாமி & திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மேற்குப் புறநகர்ப் பகுதித் திட்டம் (தொகுதி III ன்) கீழ் சென்னை, அண்ணா நகரில் தெரு விளக்கு வசதி, அங்காடி வசதி, போக்கு வரத்து வசதி ஆகிய சில அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக 1971, ஜூன் திங்களில் சட்ட மன்ற உறுப்பினர்களால் ஏதாவது முறையீடு செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

THE HON. THIRU K. RAJARAM: (a) Yes.

(b) The Tamil Nadu Housing Board is taking necessary immediate action to provide the basic amenities such as street-lighting market and transport facilities in the West Madras Neighbourhood Scheme (Batch III) at Arignar Anna Nagar, Madras. The road work has started; the laying of sewer line work is in progress; laying of water supply distribution lines is almost completed; street-lighting work has been entrusted to the Tamil Nadu Electricity Board; the construction of a market has been finalised and a site for the construction of a bus depot has been handed over to the Pallava Transport Corporation. The provision of all these amenities will be completed by the end of 1973.

MR. CHAIRMAN: Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

(1) *Message from the Governor.*

II ANNOUNCEMENTS.

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recomending to the Legislative Council the consideration of the Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972.

[4th April 1972

(2) *Messages from the Assembly.*

MR. CHAIRMAN: I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills, as passed by the Legislative Assembly, and signed by him for the recommendation of the Legislative Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India—

1. The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972. L.A. Bill No. 2 of 1972)

2. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972).

3. The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 4 of 1972).

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Legislative Council—

1. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972).

2. The Cultivating Tenants Arrears of Rent (Relief Bill) 1972 (L.A. Bill No. 6 of 1972).

3. The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972).

4. The Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu (Amendment) Bill 1972 (L.A. Bill No. 5 of 1972).

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion, as passed by the Assembly, on 3rd April 1972 desiring to obtain the concurrence of the Council in setting up a Joint Select Committee of the two Houses consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and seven Members of the Legislative Council) to consider the Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 (L.A.

4th April 1972] [Mr. Chairman]

Bill No. 23 of 1972), and that the following Members of the Assembly had been selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. Vezhavendan.
2. Thiru M. V. Narayanaswamy.
3. Thirumathi T. N. Anandanayaki.
4. Thiru N. K. Palaniswamy.
5. Dr. H. V. Hande.
6. Thiru A. Subramaniam.
7. Thiru K. Kandaswamy.
8. Thiru K. A. Wahab.
9. Thiru N. Ganapathy.
10. Thiru S. Duraiswamy.
11. Thiru R. Ramalingam.
12. Thiru P. S. Manian.
13. Thiru K. Kalimuthu.
14. Thiru V. Balasundaram.

III. GOVERNMENT MOTIONS.

(1) SUSPENSION OF RULE 42 (3) OF THE COUNCIL RULES.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாடு, சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-ஆவது விதி அதன் (3) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்."

MR. CHAIRMAN: The question is—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter, under that rule, be permitted to be raised to-day."

The motion was put and carried.

[4th April 1972

IV. CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE.

NON-CO-OPERATION BETWEEN THE TRUSTEES OF SRI KAILASANATHASWAMY DEVASTHANAM AT THIRUMANUR, TIRUCHIRAPPALLI DISTRICT AND THE EXECUTIVE OFFICER OF THE TEMPLE

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"திருச்சி மாவட்டத் திருமானூர் ஸ்ரீகைலாசநாத சாமி தேவஸ்தான தர்மகர்த்தா குழுவிற்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், தேவஸ்தான நிர்வாகம் சரிவர இயங்காமல் ஸ்தம்பித்து, தேவஸ்தான சிப்பந்திகளான அர்ச்சகர்கள், மேளக்காரர்கள் ஆகியவர்களுடைய சம்பளங்கள் பல மாதங்களாகக் கிடைக்காமல் அவதியுறும் நிலையைக் குறித்து."

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்துள்ள விவரப்படி திருச்சி மாவட்டம் திருமானூர் திரு ஸ்கலாச நாதசாமி கோவில் நிர்வாக அதிகாரி அந்தக் கோவிலிலுள்ள ஆறு சிப்பந்திகளுக்கு மொத்தத்தில் ரூ. 508-ம், 102 கலம் நெல்லும் சம்பள பாக்கி வைத்திருந்ததாகத் தெரிகிறது. சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை மனுக்கள் மூலம் ஆட்சித்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொண்டவுடன் மேற்படி மனுக்கள் முறையான விசாரணைக்காக அரியலூர் வட்ட ஆட்சித் துறை ஆய்வருக்கு உதவி ஆணையரால் அனுப்பப்பட்டது. கோவில் ஊழியர்களுக்கு துரிதமாக நிவாரணம் கிடைக்க திருச்சி உதவி ஆணையர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவரை உடனடியாகக் கலந்து ஆலோசித்து பின் ஆலய ஊழியர்களுக்குச் சேரவேண்டிய மொத்தச் சம்பளமும் கொடுக்கப்பட்டு விட்டது.

இக்கோவில் நிர்வாக அதிகாரி தன்னிச்சையாக சில சட்ட விரோதமான செய்கைகள் செய்திருந்ததால், அவர்மீது திருச்சி உதவி ஆணையர் குற்றச் சாட்டு ஏற்படுத்தி அவருடைய சமாதானத்தைக் கோரியிருந்தார். கோவில் சிப்பந்திகளுக்கு ஒழுங்காக ஊதியம் பட்டுவாடா செய்யாததும் ஆலய அறங்காவலர்கள் ஆணையரால் நியமிக்கப்பட்ட பின்னரும் அறங்காவலர் குழு கூட்டத்தினை சட்டப்படி நிர்வாக அதிகாரி கூட்டாததும் இந்தக் குற்றச் சாட்டுகளுக்குள் அடங்கும். அதன்பேரில் நிர்வாக அதிகாரி சென்னை உயர் நீதி மன்றத்தில் மனுச் செய்து உதவி ஆணையருக்கு அதிகாரம் இல்லையென்று

இடைக்காலத் தடுப்பாணை பெற்றிருந்தார். மேற்படி நிர்வாக அதிகாரியை திரு கைலாசநாதசுவாமி ஆலயத்திலிருந்து வேறு ஒரு ஆலயத்திற்கு மாற்றம் செய்ய கோவை துணை ஆணையருக்கு சென்னை அறநிலைய ஆணையர் கட்டளையிட்டிருந்தார். அவ்வாணைக்கெதிராக நிர்வாக அதிகாரி சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் வழக்குத் தொடுத்து இடைக்காலத் தடுப்பாணை பெற்றிருந்தார். "எனவே இந்த நிர்வாக அதிகாரியின்மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அமைந்துள்ள இவ்விரண்டு இடைக்கால தடுப்பாணைகளையும் நீக்க ஆணையால் தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதன் காரணமாக நிர்வாக அதிகாரி தன்மீது குற்றச்சாட்டு ஏற்படுத்த உதவி ஆணையருக்கு அதிகாரமில்லையென்று உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த ரிட் மனு 29-3-72-ல் தள்ளுபடி செய்யப்பட்டது. அதே நாளில் அன்னரை வேறு ஒரு ஆலயத்திற்கு மாற்றம் செய்ய கோவை துணை ஆணையருக்கு சென்னை அறநிலைய ஆணையர் கட்டளையிட்டிருந்த ஆணையின்மீது பெற்றிருந்த இடைக்காலத் தடுப்பாணையையும் சென்னை உயர்நீதி மன்றம் நீக்கிவிட்ட காரணத்தினால் இந்த நிர்வாக அதிகாரி திருச்சி மாவட்டத்திலுள்ள கோடாலி கருப்பூருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(2) DECREASE IN DEARNESS ALLOWANCE OF LABOURERS DUE TO FALL IN COST OF LIVING INDEX

திரு. காட்டேர் கோபால் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"1972 பிப்ரவரி மாத வாழ்க்கைப் புள்ளி கணக்கீட்டில் 38 புள்ளி குறைந்துள்ளதால் வாழ்க்கை செலவுப் புள்ளி அடிப்படையில் பஞ்சப்படி தொகை பெறுகிற சுமார் 3 லட்சம் தொழிலாளர்களது சம்பளத் தொகையில் ரூ. 10 முதல் 35 ரூபாய் வரை பாதிப்பு ஏற்படுவது குறித்து."

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, சென்னை நகருக்கான நுங்கர் பொருள் குறியீட்டு எண் புதிய தொடர் பிப்ரவரி 1970-லிருந்து அமுலாக்கப்பட்டிருக்கிறது. இக்குறியீட்டு எண் இந்தியா வில்லுள்ள தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத்தோட்டங்கள் நிறைந்த 50 நிலையங்களுக்கும் ஒரே கணிக்கும் முறையைக் கொண்டு அமைத்ததாகும். இந்த வரிசைகளுக்கான அடிப்படை ஆண்டு 1960 ஆகும். தொழிற்சாலைத்

[திரு. என். வி. நடராசன்] [4th April 1972

தொழிலாளர்களுக்கான குடும்ப வாழ்க்கை பற்றி, இந்திய அரசைச் சேர்ந்த தொழிலாளர் நலக் கழகம் நடத்திய ஆய்வு, விலை சேகரிப்புக்கான பொருட்கள் பட்டியல், அவற்றின் ரகங்கள், செலவு விகிதம் (வெயிட்டேஜ்) அங்காடிகள் அமைந்துள்ள இடம் போன்றவற்றிற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

சென்னை மாநகரிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு அங்காடிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு கடைகள் வீதம் ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு விலை விவரங்கள் (கொட்டேஷன்ஸ்) சேகரிக்கப்பட்ட விலைப் பட்டியல்கள், நான்கு வாரங்கள் கொண்ட திங்கள் ஒன்றிற்கு உணவுப் பொருட்களுக்கு மட்டும், 1960 விலைவாசி விவரங்கள் கொண்டதாகும்.

இந்த விலைவாசி விவரங்களை சென்னை மாநகரிலுள்ள இந்திய அரசு அதிகாரிகள் சரிபார்க்கின்றனர். குறியீட்டு எண்களை இறுதியாக முடிவு செய்யும் பொறுப்பு இந்திய அரசைச் சார்ந்த சிம்லாவிலுள்ள தொழிலாளர் நலக் கழகத்தின் இயக்குநரைச் சார்ந்ததாகும். தொழிலாளர் நலக் கழகத்தின் இயக்குநரிடமிருந்து அதிகாரபூர்வமான தகவல் கிடைத்தவுடன் இக்குறியீட்டு எண் மாநில அரசால் வெளியிடப்படுகின்றது.

1971 டிசம்பர் திங்களில், சென்னை மாநகர நுகர் பொருள் குறியீட்டு எண் 895 ஆக இருந்தது. இது 1972 ஜனவரியில் 923 ஆக அதிகரித்தது. சட்ட பூர்வமான அரிசி விற்பனை இல்லாமையாலும், பண்டிகை, திருமண விழாக்களை முன்னிட்டும் உணவுக்கான எண்ணெய்கள், மிளகாய் ஆகியவற்றின் விலைவாசிகள் அதிகமாகியதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

484 நியாய விலைக் கடைகளில் அரிசி மலிவான விலையில் வழங்கப்பட்டதால் 1972 பிப்ரவரித் திங்களில் இக் குறியீட்டு எண் 855 ஆகக் குறைந்தது. சர்க்கரையும் இம்மாதிரியே வழங்கப்பட்டது. உணவுக்கான எண்ணெய்கள், காய்கறிகள், மிளகாய் முதலியவற்றின் விலைகளும் அதிகப்படியான வரத்தின் காரணமாகக் குறைந்தன.

டிசம்பர் 1970-லிருந்து இக்குறியீட்டு எண்ணின் போக்கை கவனிக்கும் போது இவ்வெண் 828-லிருந்து 1971 டிசம்பரில் 895 ஆக 67 புள்ளிகள் அதிக மாகியிருக்கிறது. 1971 ஜனவரியிலிருந்து 1972 ஜனவரி வரை இவ்வெண் 823-லிருந்து 923 ஆக 100 புள்ளிகள் உயர்ந்துள்ளது. 1971 பிப்ரவரியிலிருந்து 1972 பிப்ரவரி வரை இவ்வெண் 819-லிருந்து 885 ஆக 66 புள்ளிகள் உயர்ந்துள்ளது. இக்குறியீட்டு எண் டிசம்பர் 1971-லிருந்து ஜனவரி 1972-ல் 28 புள்ளிகள் உயர்ந்தது. 1972 பிப்ரவரியில் 38 புள்ளிகள் குறைந்துள்ளன.

4th April 1972] [திரு. என். வி. நடராசன்]

போதிலும் 1971 டிசம்பர் புள்ளியுடன் ஒப்பிடின் 1972 பிப்ரவரியில் இவ்வெண் 10 புள்ளிகள்தான் குறைந்திருப்பதும் 1971 பிப்ரவரியுடன் ஒப்பிடின் 66 புள்ளிகள் உயர்ந்திருப்பதும் புலனாகும்.

மத்திய அரசினரால் கணிக்கப்படும் இப்புதுத் தொடர் குறியீட்டு எண்ணில் அரிசியின் விலை கணிக்கப்படும் முறை வருமாறு: அரசினரால் நியாயவிலைக் கடைகளின் மூலம் வினியோகிக்கப்பட்ட அளவையும், வெளிச் சந்தையில் வாங்கப்படும் அளவையும் தொழிலாளர் குடும்பத் தேவையில் இவ்விரு அங்காடிகள் மூலம் பெறப்படும் அளவில் அடிப்படையில் விகிதாச்சாரம் கணித்து, இவ்விரு அங்காடிகளிலும் நிலவும் விலைகளைக் கொண்டு நிறையிட்ட சராசரி விலை (weighed average price) கணிக்கப்படுகிறது. இவ்விகிதாச்சாரம் 1972 பிப்ரவரியில் நியாய விலைக் கடைகள் மூலம் 19 சதவிகிதமும், வெளிச்சந்தையில் 81 சதவிகிதமுமாக நிறையிட்ட சராசரி அரிசி விலை கிலோவிற்கு ஒரு ரூபாய் 20 காசாக கணிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைச் செலவு குறியீட்டெண்ணை மாநில அரசு திரட்டி மத்திய அரசின் சிம்லாவிலுள்ள தொழிலாளர் நலக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறது. அதுபோலவே மத்திய அரசின் சார்பிலும் மாநிலத்திலிருந்து சரி பார்த்து நேரடியாக விவரம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் ஆராய்ந்து இறுதியாக குறியீட்டெண்ணை கணித்து அதிகாரபூர்வமாக மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பி வெளியிடச் செய்கிறது. ஆகவே, வாழ்க்கைச் செலவு குறியீட்டெண் கணிப்பதில் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது. அது மட்டுமல்லாமல் வாழ்க்கை செலவு குறியீட்டெண் கணிப்பில் எவ்விதத் தவறும் ஏற்படவில்லை என்பதையும் தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் இந்த மாநில அரசுக்கு வாழ்க்கைப் புள்ளி எண்ணிக்கை எவ்வளவு என்பதை வெளியிடுகிற அதிகாரம் மட்டும் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போதைய நிலைமையில் இப்படி ஒரேயடியாக வாழ்க்கைப் புள்ளி ஏறுவதும், திடீரென்று இறங்குவதுமான நிலைமைகளையெல்லாம் ஒட்டி இந்த அதிகாரத்தை மாநில அரசே பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமா, அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, இந்த விலைவாசி உயர்வும் தாழ்வும் ஒரேயொரு மாதத்தான். பிப்ரவரி மாதம் மட்டுமே 38 புள்ளிகள் குறைந்திருக்கின்றன. ஆனால் மார்ச் மாதத்தில்

சிறுகச் சிறுக பெருகி வருகிறது. ஆனால் இந்த அதிகாரத்தை இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற முடியுமா என்று கேட்டார்கள். அதைப்பற்றி சமயம் வரும்போது ஆலோசிக்கப்படும்.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கேள்வி என்ற முறையில் நான் ஒன்றும் கேட்கப்போவதில்லை. ஒரு விளக்கமதான் கோருகிறேன். இது முற்றிலும் மத்திய அரசைப் பொறுத்த பிரச்சினை. மாநிலப் பிரச்சினை அல்ல. ஆனால், உடனடியாக ரூ. 10 சம்பளத்தில் வெட்டு என்று வருகிறபோது, அது வயிற்றுப் பிரச்சினையாக ஆகிவிடுகிறது. ஆகவே, சம்பளம் குறையாமலிருப் பதற்காக அரசாங்கம் ஏதாவது செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, எதிர்க்கட்சி தலைவர் சொல்லும்படியான அந்தக் குறையை அரசு அனுதாபத்தோடு கவனிக்கிறது. ஆனால், வெளியே, இதில் ஏதோ மாநில அரசு தவறு செய்து விட்டது, தவறான புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறது என்று பேசப்படுகிறது. சில தொழிலாளர் தலைவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகவும் பொறுப்போடும், இந்த இரண்டு பக்கமும் உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஆனால் மற்றும் சில தொழிலாளர் தலைவர்கள் வேண்டுமென்றே, இதை ஒரு மோசடி என்று சொல்கிறார்கள். அவர்கள் சற்று நிதானமாக ஆதாரத்தோடு பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். மற்றப்படி, எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன பிரச்சினை சமயம் வாய்க்கும்போது யோசிக்கப்படும். இதில் மாநில அரசுக்குக் கொஞ்சம் கூட அதிகாரம் இடையாது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

III. Government Motions—*cont.*

(2) The Tamil Nadu Labour welfare Fund Bill, 1972 (L.A. Bill No. 23 of 1972).

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மேலவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை எண் 23/1972) ஆய்வு செய்யும்பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 21 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 14, சட்ட மேலவை உறுப்பினர்கள் 7) கூட்டுத் தேர்வு குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இந்த மன்றம் ஒத்தியங்குகின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இந்த மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)
2. திரு. காட்டூர் கோபால்

3. திரு. கே. ராசாராம்
4. திரு. டி. கே. சண்முகம்
5. திரு. ஜி. பராங்குசம்
6. திரு. சுந்தரேசத் தேவர்
7. திரு. எம். ஆறுமுகசாமி

இக்குழுவிற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமை வகிப்பர். தொழிலாளர், அவர்களைச் சார்ந்துள்ளோர் ஆகியோரின் நலனை உயர்த்துவதற்காக தொழிலாளர் நலநிதி ஒன்று அமைக்கப்படுவதன் தேவை நீண்ட காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. இந்திய அரசால் அமைக்கப்பட்ட தொழிலாளர் நலக் குழு எல்லா மாநிலங்களிலும் தொழிலாளர் நல நிதி அமைப்பதற்குப் பரிவுரை செய்தது. தேசிய ஆணைக்குழுவும் (நேஷனல் கமிஷன்) சட்டப்படிக்கான தொழிலாளர் நல நிதி அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்தது. தொழிலாளர் நல நிதியை அமைப்பதற்கான இந்திய அரசால் அமைக்கப்பட்ட தொழிலாளர் நலக் குழுவின் பல்வேறு கருத்துக்களை அரசு ஆய்வு செய்து, இம் மாநிலத்திற்குத் தொழிலாளர் நல நிதி ஒன்று அமைப்பது என்று முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் நல நிதியில், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரிட மிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகைகள், வாரியத்திற்குச் செலுத்தப் பட்ட "கொடுக்கப்படாத சேர்மானத் தொகைகள்" தொழிலதிபர்கள், தொழிலாளர்களிடமிருந்து பெற்ற அபராதத் தொகைகள், நன்கொடைகள், மற்றும் அரசு வழங்கியுள்ள மானியங்கள் ஆகியவை அடங்கும். இந் நிதியை நிர்வகிப்பதற்காக, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படும். இந்த வாரியம் சட்டப்படி அமைந்த ஒரு நிறுவனமாகும். இது முறையான வழி உரிமை உடையதாகும். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவார். சம எண்ணிக்கையுள்ள தொழிலதிபர் தொழிலாளர் ஆகியோரின் பிரதிநிதிகள், மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு சில உறுப்பினர்கள், அரசுச் சார்புள்ளவர்கள், அரசுச் சார்பற்றவர்கள் ஆகியோரை இவ்வாரியத்தின் உறுப்பினர்களாக அரசு நியமிக்கும்.

தொழிலாளர்களின் நலனையும் அவர்களைச் சார்ந்துள்ளோரின் நலனையும் மேம்படுத்த அவ்வப்போது அரசு குறிப்பிடக்கூடிய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காகும் செலவைச் செய்வதற்கு வாரியம், தொழிலாளர் நல

[திரு. என். வி. நடராசன்] [4th April 1972

நிதியைப் பயன்படுத்தும். தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிப்பதற்காக சமுதாய—சமூகக் கல்வி நிலையங்களை அமைத்தல், மகப்பேறு நிலையங்களைக் கட்டுதல், தொழிலாளர் சமுதாயத்தின் பிற தேவைகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றிற்குச் சிறப்பாக இந்நிதி பயன்படுத்தப்படும். தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது, அவர்களது சமூக நிலைமைகளை உயர்த்துவது போன்ற செயல்களுக்கான நடவடிக்கைகளை வாரியம் மேற்கொள்ளுவதற்குத் தேவையான கட்டளைகளையும் அரசு பிறப்பிக்கலாம். மேற்சொன்ன செயல்களை நிறைவேற்றுவதற்காக அரசின் முன் அப்புறுதியுடன் கடன் வாங்க வாரியத்திற்கு அதிகாரமுண்டு. மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதில், பல்வேறு நிறுவனங்களை ஆய்வு செய்வதன் மூலம் வாரியத்துக்குத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் உதவி புரிவர். மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்ற இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இத்தீர்மானத்தை ஏற்று இசைவளிக்குமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972 (L.A. Bill No. 23 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Thiru N. V. Natarajan.
2. Thiru Kattoor Gopal.
3. Thiru K. Rajaram.
4. Thiru T. K. Shanmugam.
5. Thiru G. Parangusam.
6. Thiru N. Sundaresa Thevar.
7. Thiru M. Arumugaswami. "

The motion was put and carried.

4th April 1972]

V. GOVERNMENT BILLS.

(1) THE TAMIL NADU BETTING TAX (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 2 OF 1972)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பந்தய வரி (திருத்த) சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 2/1972) பரிவுரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

பல்வேறு சட்ட விதித் துறைகளின்கீழ் செலுத்தத்தக்க வரித் தொகை, அல்லது செலுத்தத் தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவை குறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல் ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக அத்தொகையை மாற்ற சட்ட பூர்வமான விதித் துறை செய்யப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க, 7-ஏ என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ்நாடு 1935-ம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

மேலவைத் தலைவரவர்களே, மேலவை இச்சட்ட முன்வடிவை ஏற்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 2 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations. "

* **திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்த மசோதா ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காகக் கொண்டுவரப்பட்டது. இருந்தபோதிலும் கூட, இதை உபயோகப்படுத்திக்கொண்டு என்னுடைய மனதிலுள்ள சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன். பெட்டிங், குதிரைப் பந்தயம் இவைகளையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று இன்றிருக்கிற ஆளுங்கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருந்தார்கள். அதற்கு முன்பும் பேசுவது வழக்கம். அந்த எண்ணம் இப்போதும் இருக்கிறதா? குதிரைப் பந்தயத்தை ஒழிக்கக்கூடிய எண்ணம் எதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், குதிரைப் பந்தயம் இருக்கக்

* Printed as Appendix III on pages 691–692.

[திரு. கே. ராஜாராம்] [4th April 1972

கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால்—அந்த எண்ணத்தில்தான் இப்போதும் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்—இதில் வருவாய் குறையும்படியாக ஏற்படும் என்பதற்காக மட்டும் இதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினால், அப்படி எண்ண வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலமாக மாத்திரம் ரூ. 30 கோடிக்கு மேல் அரசுக்குக் கிடைக்கிறது. எனவே, குதிரைப் பந்தயத்தை எடுத்துவிட்டால் என்ன, அதைப்பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இப்போது கூறியதற்கும் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை. குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கை அளவில் நாங்கள் இன்னும் கை விட்டுவிடவில்லை, காப்பாற்றி வருகிறோம். ஆனால், அண்டை மாநிலங்களில் இந்தக் குதிரைப் பந்தயத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். குதிரைப் பந்தயத்தை நாம் எடுத்துவிட்டால், ஆந்திர எல்லையிலே அதை நடத்துவதற்கு அந்த அரசு தயாராக இருக்கிறது. குதிரைப் பந்தயத்தை எல்லா மாநிலங்களிலும் எடுத்துவிட வேண்டுமென்று இந்திய அரசு முடிவு செய்யுமேயானால், அதற்குத் தமிழ்நாடு அரசு முன்னிலையில் இருக்கும், அதை முழு மனதோடு வரவேற்கும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியில்லாமல், வேறு சில மாநிலங்களில் வைத்துக்கொண்டுவிட்டு, தமிழ் நாட்டில் மட்டும் அது எடுக்கப்பட்டுவிடுமேயானால், இங்கே இருக்கிறவர்கள் நம் மாநிலப் பணத்தை எடுத்துக்கொண்டு போய் அங்கே ஒழித்துவிட்டு வரக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக, இந்த மாநிலப் பணம் இங்கேயே இருப்பதற்காகத் தான் குதிரைப் பந்தயத்தை இங்கே எடுப்பதில்லை என்று வைத்திருக்கிறோம். அகில இந்திய ரீதியில் சட்டம் இயற்றப்படுமேயானால், தமிழக அரசு அதனைப் பெருமையோடு பாராட்டி வரவேற்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதா, பின்னமாக இருப்பதை முழு ரூபாயாக ஆக்க வேண்டும் என்று ரிசர்வ் பேங்கின் வேண்டுகோளின் அடிப்படையில்தான். எனவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 2 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

4th April 1972]

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN: As there are no recommendations to clauses 2 and 1, the Long Title and the Enacting Formula, the Bill will be returned to the Assembly without any recommendations.

(2) THE TAMIL NADU SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 3 OF 1972)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முடிவு எண் 3/1972) பரிவுரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

பல்வேறு சட்ட விதித் துறைகளின் கீழ்ச் செலுத்தத் தக்க வரித் தொகை, அல்லது செலுத்தத்தக்க ஏனைய தொகை, திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய நிலுவைத் தொகை ஆகியவை குறித்து ரூபாயின் பின்னங்களில் கொடுக்கல் வாங்கல் ஏற்படுகையில் நடைமுறை எளிதாவதற்காக அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக அத்தொகையை மாற்ற சட்ட பூர்வமான விதித் துறை செய்யப் படவேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துரைக்கிணங்க 7- என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம், தமிழ் நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

மேலவைத் தலைவரவர்களே, மேலவை இச்சட்டத்தின் முன் வடிவை ஏற்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, although I have nothing specific to state on this Bill, may I remind the Hon. Minister of his past promise that he would amalgamate the

@ Printed as Appendix IV on pages 692-693.

[Thiru A. R. Damodaran] [4th April 1972

surcharge which he introduced last year on the Motor Spirit Taxation? Formerly the taxation was Rs. 120 per kilo litre. But in the last Budget, he levied surcharge at 5 per cent and the tax rate went up to Rs. 126. In fixing the rate for such items, I may request the Hon. Minister to fix a round sum because in rounding off, it is the trader or some other person that makes the profit on sales tax. Therefore, in calculating the sales tax, not only in levying of fines and fees, etc., but even in the levy of tax, if that levy could be so adjusted that the sale value comes to a round figure, then it would not give an opportunity for traders to profiteer and the Government could very well retain the profits. I would request him, when he comes forward with a doubtless proposition, which he would do in September this year, to take note of this and see that the taxation is rounded off to a figure which he has himself brought forward in this Bill.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உறுப்பினர் கருத்தை மனதில் வைத்துக்கொண்டிருக்கிறேன். சர்சார்ஜைப்பற்றிச் சொல்லப்பட்டது. அதை மனதில் வைத்துக்கொண்டிருக்கிறேன். சர்சார்ஜ் வரியைச் சேர்த்து விடலாமா என்பதை மன்றத்தில் வைக்கின்ற நேரத்தில் யோசிக்கலாம். இப்போதிருக்கின்ற இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Except the hon. Member, Thiru A. R. Damodaran, nobody has the spirit to speak on the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972.

The question is—

"That the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations to clauses 2, 1, the Long Title and the Enacting Formula, the Bill will be returned to the Assembly without any recommendations.

(3) THE TAMIL NADU GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 4 OF 1972)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1972) பரிவுரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

இதற்கு முன்னர், அந்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவின் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ் 12 சதவித ஒரு முனை விற்பனை வரி விதிக்கப் பட்டதோடுகூட, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 34/1971) கீழ் 12 சதவித விற்பனை வரி விதிக்கப்பட்டது. அந்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவின் மீது இவ்வாறு இருமுறை வரி விதிப்பதற்குப் பதிலாக, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 24 சதவீதம் ஒரு மொத்த விற்பனை வரி விதிக்கப்பட் வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன் மூலம் இது 22-2-72-ல் செயலுக்கு வந்தது.

1026/1969-ஆம் எண் நடுவர் மன்ற மேல் முறையீடு குறித்து சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் நீதி மன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது :—பாட்டரி உலர்ந்த மின்கலங்கள் (ட்ரை பேட்டரி செல்ஸ்) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையின் ஐந்தாவது இனத்தின்கீழ் 15 சதவீத வரி விதிப்பிற்குட் படமாட்டா. அவை மேற்படி சட்டத்தின் 41-வது இனத்தின் கீழ் 'மின்சாரப் பொருள்களாகக் கருதப்படுவதோடு அவை 9 சதவீத ஒரு முனை வரி விதிப் பிற்கு உட்பட்டவையாகும். பின்னர், மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் தனி இனத்தின் கீழ் உலர்ந்த மின்கலங்களை வகைப்படுத்து வதன் மூலம் இம்மாநிலத்தில் உலர்ந்த மின்கலங்களின் முதல் விற்பனையின் மீது 15 சதவீத விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இதற்காக மேற்படி சட்டத்தின் 59-வது பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் இது 24—2—1972-ல் செயலுக்கு வந்தது.

தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவின் (2) உட்பிரிவின் கீழ், மேற்சொன்ன அறிவிப்புகளுக்குப் பதிலாகச்

@ Printed as Appendix V on pages 693–694.

[திரு. ப. உ. சண்முகம்] [4th April 1972

சட்ட முன்வடிவு ஒன்று சட்ட மன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடரில் முகவுரைக்கப்பட வேண்டியுள்ளது.

தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் 69-வது இனத்தின்படி "கொப்பரை உட்பட தேங்காய்", இம்மாநிலத்தில் முதல் கொள்முதல் மீது 5 சதவீத ஒருமுனை வரி விதிப்பிற்குட் பட்டதாகும். மேற்படி சட்டத்தின் கீழ் தேங்காய் விற்பனைக்கு வரி விதிப்பதனின்றும் அரசு விலக்களித்துள்ளது. தேங்காய்க்கு விலக்களித்துள்ளதைத் தலைமுறை முறையில் பொருள் கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் 69-வது இனத்தைத் தனிப்பட்ட இரு இனங்களாக அதாவது தேங்காய்க்கு ஒரு இனமாகவும், கொப்பரைக்கு மற்றொரு இனமாகவும் பிரிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும்பொருட்டு, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் மன்றப் போவை சட்ட முன்வடிவு எண் 4/1972) இப் மேலவையின் ஆலோசனைக்காக வைக்கப்படுகிறது.

இத்தீர்மானத்தை மேலவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 4 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations to clauses 2, 1, the Long Title and the Enacting Formula, the Bill will be returned to the Assembly without any recommendations.

(4) THE TAMIL NADU CULTIVATING TENANTS ARREARS OF RENT (RELIEF) BILL, 1972 (L.A. BILL NO. 6 OF 1972)

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, @ 1972 (L.A. Bill No. 6 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

@ Printed as Appendix VI on pages . . . . .

4th April 1972] [Thiru P. U. Shanmugam]

Hon. Members are aware that in 1968, the State Legislature passed an Act facilitating payment of arrears of rent in four instalments by the cultivating tenants to their land-lords. Under the above Act, the cultivating tenants have to pay before the 1st April of every year one fourh of the arrear of rent along with the rent due for each year subsequent to the 20th April 1968. It has been represented that the cultivating tenants have found it difficult to pay the arrears of rent as well as the rent due for each year as indicated above with the result that they are in heavy arrears in respect of the rents payable. It has also been represented that the cultivating tenants have borrowed and added to their debts during the years of drought and that they are not in a position to pay the arrears of rent due to their indebtedness and poor economic conditions. Due to default in the payment of arrears of rent, landholders have taken action against the cultivating tenants for eviction and for recovery of arrears of rent. It has been considered that the cultivating tenants should be spared the distractions and expenditure involved in such action in order to increase agricultural production. Further, as part of the agrarian reform it has been decided to give relief to the cultivating tenants from the burden of discharging the arrears of rent outstanding on the 30th June 1971, subject to the condition that the cultivating tenants pay the rent due for the current fasli, namely, fasli 1381. This decision has also been announced by the Chief Minister in his Budget Speech on the 1st March 1972. The Bill seeks to achieve the above object.

The salient features of the Bill are as follows :—

In clause 3 of the Bill, time has been granted for a period of six months from the date of the publication of this Act for the payment of the dues for the current fasli, namely, fasli 1381, that is, for the period commencing from the 1st July 1971 and ending with the 30th June 1972, so as to enable the cultivating tenants to become eligible for the waiver of arrears of rent due upto the 30th June 1971.

Clause 5 of the Bill prohibits any action being taken against a cultivating tenants for the eviction for non-payment of any arrears of rent and for the recovery of such arrears until the

[4th April 1972

expiration of a period of six months from the date of the publication of the proposed Act. It also provides that all pending proceedings relating to eviction of a cultivating tenant for non-payment of any arrears of rent or for the recovery of such arrears shall stand stayed for a period of six months from the date of the publication of the proposed Act.

Cause 7 of the Bill provides for the restoration of the possession of the land by a cultivating tenant who has been evicted from the land on or after the 1st March 1972 and before the date of the publication of this Act on the ground of non-payment of any arrears of rent, if he pays or deposits, or has paid or deposited, or is deemed to have paid or deposited, under the proposed Act, the whole of the rent due for the current fasli.

According to the decision of the Madras High Court, in *Palaniswamy* v. *Kandappa Gounder* (AIR 1968, Madras-96), under section 3 (4) (*b*) of the Tamil Nadu cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), the Revenue Divisional Officer has jurisdiction to direct the cultivating tenant in order to avoid being evicted from his holding, to deposit all arrears of rent even though some portion of arrears of rent has become time-barred. It has been considered that it will be harsh if the cultivating tenant is required to deposit even those arrears of rent which have become time-barred. This opportunity has therefore been availed of to amend section 3 (4) (*b*) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955). so as to provide that the Revenue Divisional Officer should not ask the cultivating tenant to deposit arrears of rent which have become time barred under the law of limitation. Similar amendment has been suggested to section 19 of the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961).

The Bill seeks to achieve the above objects.

I request the House, Sir, to accept the motion.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as passed by the Assembly, be taken into consideration. "

4th April 1972]

THIRU A. R. DAMODARAN : Sir, I consider this to be a very harsh and cruel Bill and also extremely discriminatory in one sense and non-discriminating in another sense. I consider it discriminatory because it singles out landowners for a cruel attack under the so-called plea that because of prolonged drought conditions in our State, this Bill has become necessary . The Hon. Minister in introducing the Bill has stated that representations have been received and it is in the light of these representations that this Bill has been brought forth. Sir, I do not know whether these representations have been received. We would certainly have the right to have more evidence regarding this matter and, I, for my part, am not prepared to accept that the drought conditions have been so prevalent in our State that such a measure has become necessary. If the Hon. Minister has brought forward this measure in the year 1968-69, when due to failure of the rain, we had received over 17 or 18 crores of rupees from the Central Government, then there could possibly have been some justification for this measure. At the same time, if drought conditions have been so prevalent for the past 3 or 4 years, then may I ask the Hon. Minister why the Government have not exempted landowners—small as well as big landowners—from the payment of land revenue which is an essential pre-requisite if drought conditions exist in our State. Therefore, Sir, the motivation behind this Bill is not representations that have been made or the existence of drought or famine conditions, but I think it is purely on the ground of political expediency that the Bill has been brought forth before this House. I think, Sir, it is unjust and unfair to landowners—not only the big landowners,—of course, nobody has any sympathy for them and therefore, we should not speak on behalf of them. But, what about the owners who own 3 or 5 acres of land ? This Bill means that these landowners who have 3 or 5 acres, who are not in a position to cultivate these lands, who have been unfortunate enough to lease out these lands to tenants, will have not only to write off the arrears of rent that existed on 1st July 1968; even if the Hon. Minister had said that those arrears could be written off on a graded scale, one could have some sympathy with the Bill, but not only he has included the arrears of rent as on 1st July 1968, he has also gone to the extent of saying that the rent for the years

[Thiru A. R. Damodaran] [4th April 1972

1969, 1970 and 1971 could also be written off if the rent for the year 1972 is deposited, not in the year 1972, but six months after the date of publication of the Act. I do not know what terrible crime the landowners in our State have committed to attract this benign attention from the Government. Probably it is felt that as a measure of agrarian reform this should be done. This, of course, is the phrase that has to be introduced in this Bill; otherwise, it may attract legal complications and we may find High Courts ruling that it is expropriatory in one sense. Arrears of rent is a form of property right. It is a form of wealth that remains uncollected or form of income that remains uncollected by the landowners and although the Hon. Minister has sought to justify this measure on the ground that it is a measure of agrarian reform, I still feel very doubtful whether the destruction of the property right without payment of adequate compensation can be taken up in a Bill of this kind. Probably, if it had been brought under the 25th Amendment and they had said that the Directive Principles 39 (B) and (C) would apply to this Bill, probably the Court might have given a different interpretation to this measure, but obviously, he has consulted his Legal Department and whatever may be the legalistic viewpoint, I think it is wrong and perhaps a little immoral for us to suggest to tenants that they should not pay off their rightful dues. If this principle is to be extended, then we could also pass a Bill saying that people living in houses . . . .

MR. CHAIRMAN : Is the word ' immoral ' parliamentary or unparliamentary ? I think it is an unparliamentary word.

THIRU A. R. DAMODARAN : I do not know. There are three words moral, immoral and unmoral. Moral means perfectly moral, but unmoral means lacking morality and immoral means . . . .

MR. CHAIRMAN : This is like the three kinds of words married, unmarried and non-married.

THIRU A. R. DAMODARAN : If the Chairman feels that the word ' immoral ' is too harsh a phrase, I shall change it to say ' unmoral ', which means lack of morality.

MR. CHAIRMAN : Because this is the Upper House, the hon. Member should not get its dignity lowered. He may please proceed.

4th April 1972] [Thiru A. R. Damodaran]

THIRU A. R. DAMODARAN : The only point I wish to make is that if we think that it is legal to pass a Bill of this kind and waive arrears of rent due to landowners, why we should not think about Bills to waive arrears of house rent for all those people who are living in houses where the rent that they are paying is below Rs. 50 or 60. If it is merely a question of helping judgment—debtors to evade their debts, then any Bill of this kind would certainly receive the sympathy of a large section of the public and if we ourselves encourage the feeling that debts should not be repaid, I think it is likely to do a great deal of harm not only because the Co-operative structure is itself giving a great deal of loans to the agriculturists and other people in our State but Banks are also advancing and why I said that it was unmoral was that it might encourage a feeling amongst the people that this was an era where debts could rightfully be evaded and not paid to these owners. Sir, I presume that this Bill also applies to Charitable Trusts and also temples under the Hindu Religious Endowments and I had asked for particulars from the Pathaleeswarar Temple where I happen to be a Trustee, of the amount of money that this temple would have to write off as a result of this Bill. Sir, the amount due to this temple alone possessing about 20 acres of land where not a single tenant has been changed for over 15 years would come to Rs. 45,000. I presume that there are hundreds of temples in our State where tenants have not paid up their dues and the write off may result in a loss of over crores of rupees to these various Institutions. Sir, this is not a Bill where an attempt has been made to write off excessive interest that has been collected from these people; this is merely a Bill where an attempt is being made to write off a legitimate share that the landowner is entitled to according to the previous Bills which the Government have passed. We have assured the tenant that he will get a 60 per cent share and the owner 40 per cent and this attempt to write off even this small debt is likely to prove disastrous to the whole system of our land tenure. Not only that, there is already considerable conflict in our State and more particularly in Thanjavur district and this is also likely to have the effect of preventing the tenants from fulfilling their obligations in the future also. I would suggest that if it is the intention of the Government to spare the

[Thiru A. R. Damodaran] [4th April 1972

tenants the agony of paying their rightful share of the produce which the Government themselves have stipulated in another Bill, then the time has really come for us—for the Government—to consider whether a Land Purchase and Sale Corporation could not be formed with the intention of purchasing all the lands that will doubtless be offered in future by small landowners and even by medium class landowners. The Government should relieve the agony of these landowners by purchasing these lands and they are entitled, if they wish to fulfil their own concept of social justice, to lease out these lands to tenants at very normal rents and perhaps no rent at all for a period of 5 or 10 years. If the burden will be borne by the State Government and if they feel that this is absolutely essential in the interest of social justice, I would suggest that many of the lands that are going to be offered in the near future may be taken up by such a Corporation and either sold to the tenants or retained by the Government and given on lease to these tenants. I have also suggested that the provisions of this Relief Bill—in an amendment that I shall move later—should not apply to those cultivating tenants who are either Income-tax Assessees, Assessees under the Agricultural Income-Tax Act or who are themselves owners of lands paying land revenue or who are Sales-tax Assessees and the object of my amendment is only to point out that there are different types of cultivating tenants. If it is a question of only helping the landless labourers whose main occupation is cultivating half an acre or one quarter of an acre of land, then I can understand the object of the Bill and perhaps sympathise with its motives. But if it seeks to exempt all types of persons who are cultivating tenants, then I think it is broadbased and does not reflect the justice in the scale which it should. I know for a fact that in the cultivation of temple lands there are many gentleman who have got business, who have got house property, who are Sales-tax Assessees and they are also considered to be cultivating tenants because they have taken up 2 or 3 acres of lands of temples. This Bill gives them the option of having their lands and I do not see any reason why such class of persons are seeking relief under this Bill. If this Bill really seeks to help only those landless labourers who have no other means of vocation, who have become seriously indebted,

4th April 1972]

and who are unable to pay off their debts, then it should be restricted only to that class of persons and should not be applied on a general scale. Generally speaking, I cannot support this Bill because it introduces an element within our society and it will result in many persons trying to evade their dues and legal responsibilities. Thank you, Sir.

*தவத்திரு தெய்வசிகாமணி அருணைல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்): மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நிலம் உழுபவர்கள் நிலச் சொந்தக் காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய வாரத்தைத் தள்ளுபடி செய்கிற இந்த மசோதாவை நான் முற்றுக வரவேற்கமுடியாது போனாலும், மறுப்பதற்கு முடியாமல் இருப்பதற்குக் காரணம், எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப் போல பல உழவர்கள் அல்லல்படுகிறார்கள் என்பதேயாகும். எனவே, இந்த மேசாதாவைப் பொது நலனைக் கருதி வரவேற்பதில் எந்த விதமான கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது. ஆனால் இராமநாத புரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இனம் மானியங்கள் நிலத்திலே நில உரிமை, பாத்தியா பாத்தியத்தை கொண்டாடி வழக்கில் இருக்கிறவர் களுக்குத் தள்ளுபடி ஆகாமல் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இது உழுகிற விவசாயிகளுக்கும் நிலச்சுவாந்தார்களுக்கும் உடன் பாடு ஏற்பட்ட பிறகு கொடுக்கப்படாமலிருக்கிற பாக்கிக்கு இருந்தால் சரி, ஆனால் நிலத்தை உரிமை கொண்டாடி எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு 5 ஆண்டுகள் 10 ஆண்டுகள் என்ற அளவில் வைத்துக் கொள்பவர்களுக்குப் புகலிடம் கொடுக்குமானால், பல நிறுவனங்கள் தங்கள் சொத்துக்களே இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதற்கு இடமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குடியானவர் பாதுகாப்புச் சட்டத்திற்கும், இந்து அறநிலைய சொத்து உச்ச வரம்புச் சட்டத்திற்கும் வேற்றுமை இருக்கிறது. தனி நிலச்சுவாந் தார்கள், நிலத்தை உழுபவர்கள் தங்கள் குத்தகைதாரர்களை வைத்துக்கொள்ள முடியாது. டிரஸ்ட் நிலச் சட்டத்தின் கீழ் ஒருவர் குத்தகை எடுத்து இன்னொருவருக்கு குத்தகை கொடுக்கலாம் என்ற விதி இருக்கிறது. முதன்மைக் குத்தகைதார் துணைக் குத்தகைதாரிடம் வசூல் செய்வார். ஆகவே, இந்த முதன்மையான குத்தகைதாரருக்குத் தள்ளுபடி கொடுப்பதற்கு வழி வகை இருக்கக்கூடாது. உழுபவர்களுக்கு லாபம் போக வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமையில்லை. பொது அற நிறுவனத்தின்கீழ் இந்த விதி விலக் கிருக்கிறது. அதாவது ஒருவர் ஒரு நிறுவனத்தின் குத்தகையை எடுத்துக்

[4th April 1972

[தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்)]

கொண்டு, அந்தக் குத்தகைதாரர் இன்னொருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே அவர் தூணைக் குத்தகைதாரிட்த்தில் வசூல் பண்ணியிருப்பார். இந்தப் பொதுக் குத்தகைதார் இருக்கிறார்களல்லவா, அவர்களுக்குச் சொந்தத்தில் 5, 10 எக்கர் நிலம் இருக்கும். இந்தப் பொது நிறுவனத்தின்கீழ் வருகிற முதன்மைக் குத்தகைதார் அப்படி எங்காவது இருப்பார்களானால், அவர்களுக்கு இந்தத் தள்ளுபடி செல்லுபடி யாகாமல் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். காரணம், அவர்கள் வசதி உடையவர்கள், மேலும் அவர்கள் தூணைக் குத்தகைதாரர்களிடத்திலிருந்து வசூலித்திருப்பார்கள். இந்தச் சட்டத்தினால் உழுவர்களுக்கு லாபம் போய்ச் சேராது. ஆகவே, இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதனால் சின்ன, குறைந்த வருவாயுள்ள, அற நிலையங்களின் வருமானம் குறைந்துவிடும். இப்போதே பல அற நிலையங்களில் வருமானம் வராமல் அவைகள் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவைகளைப் பொறுத்த வரையில், விதி விலக்கு கேட்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று புரியவில்லை. ஆனாலும் இந்த மாதிரி நிறுவனங்கள் அற நிலையத் துறைக்குக் கொடுக்க வேண்டிய சகாயத் தொகை கொடுக்கப்படாமல் பல ஆண்டுகளாகப் பாக்கி நிற்கிறது. இந்த அற நிலையங்கள் இரண்டு லட்ச ரூபாய்க்குள்ளே வருமானம் வரக்கூடிய நிறுவனங்களாக இருந்தால், அவைகள் கொடுக்கக் கூடிய கண்ட்ரிப்யூஷன், தணிக்கைத் தொகை போன்றவைகளை வஜா செய்து இந்தக் கோயில்கள் கடன்படாமல் இருக்கச் செய்ய வேண்டும், அல்லது அவைகள் அரசினுடைய இந்து அறநிலையத் துறைக்குக் கொடுக்க வேண்டிய சகாயத் தொகையைத் தள்ளுபடி செய்து கொடுக்கும்படியாக தமிழக அரசை, இந்தப் பேரவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லையென்று சொன்னால், நாளைக்கு இந்து அறநிலையச் சட்டத்தின்படி அவர்கள் பாக்கி வசூலிக்க வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை எடுத்தால், கோயில்களில் ஒன்றும் இருக்காது. பல கோயில்களின் நிலைமை இது. குறைந்த பட்சம் இந்தச் சகாயத் தொகையையாவது இரண்டு லட்ச ரூபாய் வருமானம் வருகிற கோயில்களுக்கு, அல்லது அரசு எப்படி வேண்டுமானாலும் நிர்ணயிக்கலாம், அல்லது ஒரு லட்ச ரூபாய் வருமானம் வருகிற கோயில்களுக்கு இப்படி வருமானம் குறைவாக உடைய கோயில்களுக்கு வஜா செய்து கொடுக்க வேண்டும். பொதுவாக, நிலச்சுவாந்தார்கள், டிரஸ்ட் ஆனாலும்

4th April 1972]

[தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்)]

தனியார் ஆனாலும் சரி, அவர்களுக்கும் உழுவர்களுக்கும் நல்ல சௌமையான உறவு ஏற்பட்டு, அவர்கள் கூட்டுப் பங்காளிகள் போல கருதும்படியான நிலைமை ஏற்பட்டால் தான், இந்த மாதிரியான சிக்கல்களிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும். தனியார் நிலச்சுவாந்தார்களாலே முடியாமல் போனாலும், அற நிலையங்களைச் சேர்ந்தவர்களாவது தங்களுடைய நிலங்களை உழுகிறவர்களைக் கூட்டுப் பங்காளிகளாகக் கருதி அவர்களுடைய வாழ்க்கை ஈடுபாட்டிலே ஈடுபட்டு, அவர்கள் பால் அக்கறை ஏற்பட்டு அவர்களுக்குக் கொடுப்பதைச் சுமையாகக் கருதாமலிருந்தால், அது நலன் பயப்பதாகும். அப்போது அற நிலையங்களுக்கு விடுதலை ஏற்படும். இதை அற நிலையத்தைச் சேர்ந்தவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கடைசியாக, இது ஆயிரக்கணக்கான உழுவர்களுக்கு நன்மை தருகிறதென்றாலும், குறிப்பிட்ட சில திருத்தங்களை அரசு நினைவில் ஏற்குமாறு கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றி ஓளவு என்னுடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் கொஞ்சம் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். அந்த அளவு இல்லாவிட்டாலும் ஓளவாவது விமர்சனம் செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயத்தான் எனக்கும். ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமையிலே, குத்தகைதாரர்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இப்பொழுது அநேகமாக 99% பேர் ஒரே பக்கத்திலேயே பேசிக்கொண்டிருக்கும் நிலைமையாகிவிட்டது. அதிலேயும் அரசியலிலே இருப்பவர்களுக்கு லாபம் ஏற்பட வேண்டுமென்று அரசியல்வாதிகளாக இருப்பவர்களும், அப்படிப்பட்ட முறையிலே—வியாபாரம் பண்ணுகிறவர்களுக்குப் பணம் லாபமாக இருக்கலாம்—அரசியலிலே இருப்பவர்களுக்கு அதிகாரம் ஒரு லாபம் என்று கருதக்கூடிய அளவிலே பார்க்கிறபோது, எது எது அரசியலிலே லாபகரமான சட்டங்களாக இருக்க வேண்டுமோ அதையெல்லாம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் நாட்டுக்குச் சிறந்தது என்ற அபிப்பிராயம் நெடுகிலும், எல்லா இடங்களிலேயும் ஏற்பட்டு வருகிற நிலைமை இருக்கிறது. வர வர, எதிர்த்து வந்தவர்கள்கூட, கொஞ்சம் மாறி மாறி, 99.9% ஒரு பக்கத்திலே இருக்கிறபோது, இது சரியான சட்டமே இல்லை என்று என்னைப்போல சிலபேர் நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்குக்கூட, இவ்வளவு பேர் பேசுகிறார்களே, தவறுகளா பேசுவார்கள் என்ற அபிப்பிராயங்கூட ஏற்படக்கூடிய காலகட்டங்களிலே வந்து நிற்கவேண்டிய அவசியம்

ஏற்படுகிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சட்டங்களின் சிக்கலைச் சந்திக்கிறபோது, குத்தகைதாரர்கள், நிலப்பிரபுக்கள் என்ற ஒரு வார்த்தையைப் போட்டார்கள். இந்தக் காலத்திலே உள்ள அரசியல், Image psychology என்று ஏற்பட்ட முறையிலே அமெரிக்கா நாட்டிலே கண்டுபிடித்த அந்த உருவகத்தை உற்பத்தி செய்துவிட்டால், ஊரிலே அது உண்மையாக இருந்தாலும், தவறாக இருந்தாலும், ஓட்டு விழும் என்பார்கள். அதைப் போல நிலச்சுவான்தார் என்று சொல்லப்படுகிற நிலை ஏற்படுகிறபோது, நிலச்சுவான்தார்கள் எல்லாம், நிலப்பிரபுக்கள் எல்லாம் வாண்டையார்கள், மூப்பனார்கள் போன்றவர்களாக இருக்கக்கூடும் என்ற உருவக நிலை வரும். பழைய காலத்திலே இரட்டை மாட்டு வண்டியிலே பள பள என்று போக, அதற்குப் பக்கத்திலே ஆள் கூட ஓடுவது, அவர் வெற்றிலைச் செல்லத்தோடு உட்கார்ந்துகொண்டு தஞ்சாவூர் மாவட்டத்திலே போகிற காட்சிதான் நிலப்பிரபுக்கள் என்று எல்லோருக்கும் மனதிலே ஏற்படுவதாக இருக்கிறது. ஆனால் உண்மையிலேயே இதைப் பார்க்கிறபோது, இந்த வார்த்தை, நிலவுடமைக்காரர்களுக்கு உள்ள வார்த்தை நிலப்பிரபு என்பதாகும். லேண்ட் லார்டு—லார்டு என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. சென்ற தடவைகூட பேசுகிறபோது நான் சொன்னேன். தஞ்சாவூர் மாவட்டத்திலே—சரியான குறிப்பை நான் எடுத்துவரவில்லை—இருக்கிற நபரிலே கிட்டத்தட்ட 80% பேர் 5 ஏக்கருக்கு உள்ளாக இருக்கக் கூடிய நிலச்சுவான்தார்கள் என்பது என்னுடைய கவனம். சென்ற தடவை குறிப்போடு கொண்டுவந்து நான் சொன்னேன். 5 ஏக்கருக்கு உள்ளாக இருக்கிற நிலச்சுவான்தார்கள் என்று வைத்துக்கொண்டோமானால், கிட்டத்தட்ட 2,000 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களாக இருக்கலாம். 2,000 ரூபாய் என்றால், அதற்கு மேல் கிஸ்தி எல்லாம் கொடுத்த பிறகு 150 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களாக இருக்கலாம். இவர்களைத்தான் நாம் 'லார்டு' என்று சொல்கிறோம், பிரபுக்கள் என்று சொல்கிறோம். 150 ரூபாய் வருகிறவர்களை பிரபுக்கள் என்றால், நகர்ப்புறங்களிலே இருக்கிற குமாஸ்தாக்கள் 400 ரூபாய், 500 ரூபாய் வாங்குகிறார்கள். இன்னும் எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிலே உள்ளவர்கள் 700 ரூபாய், 800 ரூபாய்கூட வாங்குகிறார்கள். பிரபுக்கள் என்று இவர்களையே சொல்வோமானால், அவர்களையெல்லாம் எப்படிப்பட்ட பிரபுக்கள் என்று சொல்வது? மகா பிரபுக்கள் என்றுகூட சொல்லலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் குறிப்பிடலாம். ஏழையான நிலச்சுவான்தார்கள் என்று சொல்கிறபோது, எல்லா நிலச்சுவான்தார்களும் குத்தகையா விட்டிருக்கிறார்கள் என்ற கேள்விகூட எழலாம். இதற்காக நான் நடுநிலைமையிலேயிருந்து பார்ப்போம் என்று ஆராய்ச்சி செய்து பார்த்தேன்.

மொத்தம் எவ்வளவு குத்தகைதாரர்கள் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறார்கள் என்ற கணக்கு, அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஏனென்றால் அரசாங்கத்திலே கூட எனக்குத் தெரிந்த வரையிலே, பல புத்தகங்களையெல்லாம் பார்த்தபோது, ஒருவருக்கொருவர் தோராயமான கணக்குகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட பழைய ரிக்கார்டுகளை எடுத்துப் பார்க்கிறபோது, 1969 ஆம் ஆண்டிலே சங்கரையா அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். இந்த மாநிலத்திலே ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த, மாநில முழுதுக்கும் எத்தனை குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள் என்று அவர்கள் ஒரு கேள்வி கேட்க, அப்பொழுது 1969-லே 3,48,416 பேர் இந்த மாநிலத்திலே குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு பதில் சொல்லப்பட்டது. அதற்கு மேலே, இந்தக் குத்தகைதாரர்களுடைய பதிவு மதராஸ தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வந்த பிறகு, அந்த டைரக்டராக இருப்பவர், ஒரு கணக்கைக் கொடுத்தார். அந்தக் கணக்குப்படி பார்க்கிறபோது, தஞ்சாவூர் மாவட்டத்திலே 1970-ஆவது ஆண்டிலே குத்தகைதாரர்கள் எவ்வளவுபேர் இருக்கிறார்கள் என்று பார்த்தால், 1,40,900 பேர் என்று அவர்கள் கணக்குக் கொடுத்தார்கள். அது மட்டுமல்ல, திருச்சி, தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களிலே இருக்கிற மொத்தக் குத்தகைதாரர்கள் 2,35,382 பேர் என்று அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள். எங்களுடைய மாவட்டக் கலெக்டராக திரு. வேதநாரயணன் அவர்கள் இருக்கிறபோது, ஸீபோர்டு, பவுண்டேஷன் காரர், ஏதோ சொல்லிவிட்டுப்போக, அவருக்கு இவருக்கும் தகராறு ஏற்பட்டு அப்பொழுது அவர்கள் கொடுத்த கணக்கு 70,000 பேர் குத்தகைதாரர்கள் என்பது. இந்தக் குளறுபடி தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு இப்பொழுதாவது துல்லியமான கணக்கு . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த குத்தகைதாரர்களைப் பொறுத்த மட்டிலும், குளறுபடி இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது எல்லாம் ஒழுங்காக, சீராக ஆகவேண்டுமென்றுதான் மாநில முழுதுக்கும் 'டெனன்சி ரெக்கார்ட்ஸ்' தயாரிப்பதற்காக இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மாநில முழுவதுக்கும் ஒரு கணக்கு எடுத்ததற்குப் பிறகுதான் எவ்வளவு குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள் என்று நிச்சயமாக வரையறுத்துச் சொல்ல முடியும். இப்பொழுது இருப்பதெல்லாம் மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர்களிடத்திலே புள்ளிவிவரத்தைச் சேகரித்துக் கொடுக்கப்படுகின்ற புள்ளி விவரங்களே தவிர, ஆதாரபூர்வமாக எவ்வளவு இருக்கிறார்கள் என்று முழுக் கணக்கு வேண்டுமென்று சொன்னால், மாநில முழுவதும் 'டெனன்சி

[திரு. ப. உ. சண்முகம்] [4th April 1972

டெக்கார்ட்ஸ்' பதிவு நடைபெறுகிறது, அது முடிந்த பிறகுதான் சொல்ல முடியும். அதிலே கூட சில தவறுகள் இருக்கலாம். 'டெனன்சி செக்கார்ட்ஸ்' பதிவு செய்ய வருகின்றபோது, நிலச்சுவான்தாரர்கள் விவசாயிகளை மிரட்டுகிறார்கள். அங்கே பதிவு செய்துகொண்டால், அடுத்த முறை வைக்கமாட்டேன் என்று மிரட்டுகிறார்கள். அதனாலே பலவிடங்களிலே பதிவு செய்வதற்குச் சங்கடம் ஏற்படுகிறது என்று அதிகாரிகளும் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகளும் புகார் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்படியும் சில நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் தாண்டி ஏழை நிலச்சுவான்தாரர்கள் எவ்வளவு குத்தகைதாரர்கள் என்பதைக் கணக்கு எடுத்ததற்குப் பிறகுதான் இந்தக் குளறுபடியே தீரும், சிக்கல் தீரும் என்று நான் நம்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, எதற்குமே சட்டம் கொண்டு வருகிறபோது, கொஞ்சம், பொறுத்திருந்து பார்த்து, இந்த மாநிலத்திலே எவ்வளவு குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள், அந்தக் குத்தகைதாரர்கள் எவ்வளவு எவ்வளவு நிலம் சாகுபடி செய்கிறார்கள், அவர்களுடைய 'எக்கனமிக் கண்டிஷன்' என்ன என்பதைப் பற்றி யெல்லாம் ஒரு சர்வே எடுத்துச் செய்தால், சட்டம் நல்ல முறையிலே இருக்கும். அதிகாரிகளை நம்பித்தான் நாம் சட்டம் செய்கிறோம். அதற்குள்ள அடிப்படை உண்மைகள் இல்லாத சமயத்திலே, இந்த மாதிரி சட்டம் செய்கிறபோது, சட்டமே சரியாக வராது என்பது என்னுடைய கருத்து. அத்தகைய . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொறுத்திருந்து சட்டம் செய்ய வேண்டும் என்கிறார்கள். அதற்குள் பல பேர் நிலத்திலேயிருந்து வெளியேற்றப் பட்டுவிடுவார்களே என்பதற்காகத்தான் சட்டம் செய்யப்படுகிறது. ஆகவே இதிலே பொறுத்திருந்தால் இலட்சக்கணக்கானவர்கள், ஆயிரக்கணக்கானவர்கள் நிலத்திலேயிருந்து வெளியேற்றப்பட்டிருப்பார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசாங்கத்திலே இப்பொழுது இருக்கிற சக்தி, அதனுடைய அதிகாரத்தைப் பார்க்கிறபோது, வெளியேற்றப்பட்டவர்களை மறுபடியும் திருப்பி எடுத்துக்கொள்ளலாம் என்று ஏதோ சொல்லலாம். இப்பொழுதே நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் கூட, எக்ஸ்ப்ரோப்ரையேட்டரியாக இருக்கிறது, சொத்து பணம் என்பதுகூட பிராப்பர்டிதான், காம்பென்சேஷன் இல்லாமல் எடுக்கலாமா என்று கேள்வியைக்கூட எழுப்பினார்கள். ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமையிலே அரசாங்கத்திலே என்ன சொல்வார்கள் என்றால், நாங்கள் அந்தச் சொத்துக்களை எடுத்துக்

4th April 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

கொள்ளவில்லை. யாரோ எடுத்துக்கொண்டதை எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறோம். நாங்கள் செய்யவில்லை, ஆகவே 'காம்பென்சேஷன்' கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லலாம். அரசாங்கத்திலே இருக்கக்கூடிய, அதிகாரங்களைக் கொண்டு, வெளியேற்றப்பட்டவர்களைத் திருப்பிக் கொண்டு வரலாம். அவர்கள் கொடுத்த பணத்தைக்கூட திருப்பி வாங்கிக்கொள்ளச் சொல்லலாம். ஏனென்றால் பல லட்சக்கணக்கான குத்தகைதாரர்கள் முன்னுரிமை, எற்கனவே கொடுத்துவிட்டார்கள். அவர்களெல்லாம் இப்பொழுது சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்குப் பின்னாலே வருகிறேன். அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு அந்தப் பணத்தைக்கூட திருப்பிக் கொடுங்கள் என்று சொல்லக்கூடிய அதிகாரம் உண்டு. வசதி உண்டு. அதை இல்லையென்று சொல்லவில்லை நான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த நேரத்திலே தெளிவாகச் சொல்லி விடுகிறேன். கொடுத்துவிட்ட பாக்கியை, குத்தகையை திருப்பிக்கொடுங்கள் என்று அரசாங்கம் சட்டம் போடவில்லை. நேற்றையதினம் பேசவையிலும் அதுபற்றி வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். இங்கேயும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: போடவில்லை என்பதை நான் அறிவேன். வேண்டுமானால் போடலாம் என்ற அதிகாரம் உங்களிடத்திலே இருக்கிறது என்பதற்காகத்தான் அதைச் சொல்கிறேன். 'செப்ரசென்டேஷன்' வந்தது என்கிறார்கள். அதுமாதிரி வேண்டுமென்றால்கூட பலபேர் ஆயிரக்கணக்கிலே அனுப்பலாம். ஏனென்றால் கொடுத்தவர்கள் அதிகம். கொடுக்காதவர்கள் குறைவு. என்னிடத்திலே கணக்கு இருக்கிறது. நான் சொல்கிறேன். இந்தக் குத்தகை நிலுவை மசோதா வருகிறபோது லேண்ட் டெனன்சி செக்கார்ட்சைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே இன்னமும் சரியாக வரவில்லையென்று சொன்னார்கள். அந்த மசோதாவையே ஏன் போட்டோம் என்ற அளவுக்கு அந்த அதிகாரிகள் எழுதிவைத்திருக்கிறார்கள். எனக்குத் தெரியும். அந்த டிபார்ட்மென்ட்டையே கலைத்துவிட வேண்டுமென்று அதனுடைய இயக்குனரே சொன்னார். ஏனென்றால் கிட்டத்தட்ட யாரும் அதைப்பற்றிக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் பல கிராமங்களிலும் குத்தகைதாரர்களும் இல்லை, மிராசுதாரர்களும் இல்லை. இப்பொழுது இருக்கிற நிலைமையே தீடித்தால் நல்லது என்று சொல்லி, அவர்கள் கொடுத்திருக்கிற 4 செக்கமெண்டேஷன்களிலே முக்கியமானது, 3-வது செக்கமெண்டேஷன் என்று நினைக்கிறேன். இந்த டிபார்ட்மென்ட்டை வைத்திருக்க வேண்டியது தேவையில்லை, கலைத்து விடுங்கள் என்று எழுதினார்கள். அந்த நிலைமை வருகிறபோது மொத்தம்

உள்ள குத்தகைதாரர்கள் தமிழ் நாட்டிலே எவ்வளவு, அதுவும் தஞ்சாவூர் மாவட்டத்திலே எவ்வளவு என்று பார்த்தால், 1,40,900 பேர் குத்தகைதாரர்களாக தஞ்சாவூர் மாவட்டத்திலே இன்றைய தினத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் எப்படி சாகுபடி செய்கிறார்கள் என்ற கணக்கை நான் எடுத்தேன். அதை எடுத்துப் பார்க்கிற போது, மொத்தத்திலே ஒரு ஏக்கருக்குள்ளாகச் சாகுபடி செய்பவர்கள் 25.25 சத விகிதம் பேர். ஒன்றிலிருந்து ஐந்து ஏக்கர் வரையிலே சாகுபடி செய்பவர்கள் 63.6 சத விகிதம். ஐந்திலிருந்து 15 ஏக்கர் வரையிலே சாகுபடி செய்பவர்கள் 11 சத விகிதம். பதினைந்து ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்பவர்கள் 0.1 சத விகிதம். ஆக இந்த 1,40,900 பேரிலே ஐந்து ஏக்கருக்குள்ளாக எவ்வளவு பேர் சாகுபடி செய்கிறார்கள் என்று பார்த்தீர்களானால், கிட்டத்தட்ட 1,13,992 பேர் ஐந்து ஏக்கருக்குள்ளே சாகுபடி செய்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்வது என்னவென்றால், கிட்டத்தட்ட இதிலே பாதிப்பேர் சாகுபடி செய்பவர்கள் பணம் கொடுக்கவேண்டாம் என்று சொல்வீர்களானால், இதிலே லட்சக்கணக்கான பேர் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டு பார்ப்பீர்களானால் ஒரு குத்தகைதாரருக்குச் சாதாரணமாக ஒரு நிலச் சுவான்தார் இருப்பார். அவருக்கு ஒரு ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருப்பார். அல்லது இரண்டு ஏக்கர் அல்லது 3 ஏக்கர் நிலம் கொடுத்திருப்பார். எவ்வளவு பேருடைய வாழ்த்துக்கள் கிடைக்கிறதோ அவ்வளவு பேர்—நான் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகிக்க விரும்பவில்லை,—வருத்தப்படுகிற அளவுக்கு அரசாங்கத்திற்கு ஏற்படும். ஒரு லட்சத்து மூப்பத்தையாயிரம் பேர் என்றால் . . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழில் கடுமையான வார்த்தையை உபயோகிக்க முடியாது என்று கூறினார்கள். தாராளமாக அவர் உபயோகிக்கலாம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், ஆங்கிலத்தை விடவா தமிழில் கடுமையாகப் பேச முடியும்? தமிழில் அத்தகைய கடுமையான வார்த்தை இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: வார்த்தைகளைக் கடுமையாக உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் யாரும் உபயோகிக்கவில்லை. சாதாரண வார்த்தை கூட கடுமையானதாக அமைச்சர் மனத்தில் படக்கூடாதென்பதற்காகத்தான் சொல்கிறேன். வார்த்தை கடுமையானது என்று அர்த்தமல்ல. இவ்வளவு பேர் குத்தகைதாரர்கள் ஏழைகளாய் இருக்கிறார்கள், இவ்வளவு பேர் நிலச்சுவான்தார்கள் என்று சொல்லப்படுவார்கள், அவர்களுக்கு வருத்தம் ஏற்படுகிறது.

இந்தக் குத்தகைதாரர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு வருமானம் எவ்வளவு வருகிறது என்பதையும் அரசாங்க ரிக்கார்டிலிருந்தே எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஏக்கருக்குக் கீழ் குத்தகைதாரர்கள் ஒரு லட்சத்து 31 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏக்கர் என்பது சாதாரண ஏக்கரா அல்லது ஸ்டாண்டர்ட் ஏக்கரா? ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கீழ்தான் அதிக பட்சம் விலக்குக் கொடுப்பதாய் இருக்கலாம். அதற்கு மேல் வைத்திருப்பவர்களுக்குக் கணக்கு வைத்துக்கொள்ளப்படுகிறது. நான் மாண்புமிகு அங்கத்தினரைக் கேட்பது, அவருடைய பேச்சை இடைமறிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, விளக்கத்திற்காகத் தான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: 5 ஏக்கருக்குக் கீழ் வைத்திருப்பவர்கள் எத்தனை பேர், 5 ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களிடமிருந்து எவ்வளவு பேருடைய நிலத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்குக் கொடுத்த கணக்கு ஏதாவது அமைச்சரிடம் இருக்கிறதா? அந்தத் துறையில் யார் யார் வைத்திருக்கும் அதிக பட்ச நிலத்தையும் இதுவரையிலும் எடுத்துக்கொள்ள வில்லை? அதனால் வரக்கூடிய அபாயங்கள், தொந்தரவுகள் எல்லாவற்றையும் பார்த்து, குத்தகைதாரர்கள் 5 ஏக்கருக்கு மேல் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கைச் சொல்லும்போது, பத்திரிநாத், டேபிள் 4, பேஜ் 17 . . . .

THE HON. THIRU P. U. SHANMUGAM: I am very sorry to hear that the hon. Member has taken reference from Badrinath's Report of which the Government did not have any cognizance and we do not rely on that report.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பத்ரிநாத் ரிப்போர்ட், அந்த அறிக்கை அவரே தயாரித்தது அல்ல. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆட்சியாளர்கள், டெபுடி கலெக்டர், தாசில்தார், இன்னும் அந்தத் துறையிலுள்ள மற்ற அதிகாரிகள், கிட்டத்தட்ட நூற்றுக் கணக்கானவர்கள் இந்தப் புள்ளி விவரத்தைச் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். யார் யார் அந்த விவரம் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. பத்ரிநாத் எடுத்த விவரங்களின் கண்ணோட்டத்தை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அந்த அடிப்படை சரியா தவறு என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். அந்தக் கணக்கு எல்லாரு மாகச் சேர்ந்து எடுத்த கணக்கு ஆகும். இப்போதிருக்கும் நிலைமையில்,

எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைக் கணக்குப் போட்டீர்களேயானால், ஒரு ஏக்கருக்கு தஞ்சை மாவட்டத்திலுள்ள பல இடங்களில் ஆராய்ச்சி செய்து பார்க்கிறபோது, சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்துக்கு, ஒரு போகமாக இருந்தால் 170 ரூபாய், இரு போகமாக இருந்தால் 220 ரூபாய் வருமானம் வருமென்று அரசாங்கப் புத்தகங்களில் கண்டிருக்கிறது. இந்த 220 ரூபாய் வருமானம் என்று சொன்னால், 5 ஏக்கருக்குக் கீழ் நிலமுள்ளவர்கள் 1 லட்சத்து 13 ஆயிரம் பேர். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட 1,100 ரூபாய் அளவுக்கு இருக்கிற நிலைமை. கிட்டத்தட்ட 100 ரூபாய் மாதம் ஒன்றுக்கு என்ற நிலைமையில் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமையை வைத்து அந்த நிலச்சுவான்தார் கணக்கை எடுத்துப் பார்த்தால், 1, 2, 3, 5 ஏக்கர் என்ற அடிப்படையில் பார்த்தால், இன்று ஒரு லட்சத்து 13 ஆயிரம் பேர் 5 ஏக்கருக்குக் கீழ் நிலம் வைத்திருப்பவர்கள், கணபதியா பிள்ளை ரிப்போர்ட் முதலியவற்றை வைத்துக்கொண்டு பார்க்கிற போது, அவர்களுக்கு 5 ஏக்கருக்கு 2,000 ரூபாய் வருகிறது என்று பார்க்கிறோம். மாதத்துக்கு 150 ரூபாய் இவர்களுக்கு வருகிறது. அவர்களுக்கு 100 ரூபாய் வருகிறது. ஆக வித்தியாசம் 50 ரூபாய். இதிலும்கூட, நிலப் பிரபுக்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு 'வாட்டர் டேக்ஸ்'—தண்ணீர் நீர்வை இருக்கிறது, அதற்கு மேல் பஞ்சாயத்து யூனியன் லெஸ் இருக்கிறது. இதற்கு மேலும் விமானத்திலிருந்து மருந்து தெளித்துவிட்டால், அதற்கான வரிகளையும் நிலச் சுவான்தார்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. குத்தகைதாரர் களுக்கு என்ன நிலைமையோ அதே நிலைமைதான் 1 லட்சத்து 13 ஆயிரம் பேர் களுக்கும் என்பதைச் சொல்லிகொள்ள விரும்புகிறேன். நிலச் சீர்திருத்த அடிப்படையில், சோஷலிஸ அடிப்படையில் நாம் இதைச் செய்கிறோம் என்று சொல்லும்போது, பணக்காரர்களிடமிருந்து ஏதோ வாங்கி ஏழைகளுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்வதில், அவர்களும் ஏழைகள், இவர்களும் ஏழைகள், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய 100 ரூபாய் பணத்தை நீங்கள் அவர் களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்வது எவ்வளவு தூரம் நியாய மானது என்று கேட்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தகை தாரர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமானது தான். அந்தக் குத்தகை தாரர்களுக்குக் கடன் எதாவது கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கிடைத்திருக் கிறதா என்றால், கிராமத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 1970 வரையில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற கணக்கை இங்கு குறிப்பிட விரும்பு கிறேன். பத்திரநாத் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கும்பகோணத்தில் சித்தநல்லூர் கிராமத்தில் 150 பேருக்குக் கூட்டுறவுக் கடன் கிடையாது. செம்மங்குடியில் 36 பேருக்குத்தான் இது கிடைத்தது. தொழுவூரில்,

19 பேருக்குத்தான் கிடைத்தது. உக்கரையில் 208 பேரில், 50 பேர்களுக்குத்தான் கூட்டுறவுக் கடன் கிடைத்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் சொன்னது போல், முழுத் தகவலும் என்னிடம் இடையாது. இருந்தாலும் வருமானமும் குறைந்து, கடன் பட்டிருப்பதைக் கட்ட முடியாமலும், மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் சீர்குலைந்து கஷ்டமும் துயரமும் உள்ள சூழ்நிலையில் அந்தக் குத்தகை தாரர்கள் நிலைமை இருக்கின்றது. ஏதோ 100 ரூபாயை வைத்துக்கொண்டுள்ள ஏழைகளிடமிருந்து பிடுங்கிக் கொடுக்கிறது அல்ல இதற்கு வழி, அதற்கு வேறு வழி செய்யப்பட வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொன்று, குத்தகைதார்கள் மீது ரெவின்யூ கோர்ட்டு, தஞ்சைமாவட்டத்தில் கிட்டத்தட்ட 25, 26 ஆயிரம் வழக்குகள் போட்டிருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் அப்படி வழக்குகள் போட்டதில், ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேரில், 1 லட்சம் பேர் பணம் கட்டிவிட்டார்கள். 60—40 சட்டத்தின் அடிப்படையில், பணத்தைக் கட்டியவர்கள் 1 லட்சம் பேர். பணம் கட்டியவர்கள் எல்லாம் மூட்டாள்கள், பணம் கட்டாதவர்கள் எல்லாம் புத்திசாலிகள் என்று சொன்னால், அது நியாய மானதா? சாதாரண விவசாயிகள் சட்டத்துக்குப் பயந்து கஷ்டப்பட்டுக் கொடுத்தார்கள். ஆகவே கட்டியவன் எல்லாம் மூட்டாள், கட்டாதவன் எல்லாம் புத்திசாலி என்ற நிலைமையை அரசு உருவாக்குவது சரியான காரியமல்ல. இந்த நிலைமையில் அரசு அப்படிக் கட்டியவர்களுக்கெல்லாம் எதாவது உதவியைச் செய்ய வேண்டும். ஏனென்றால், அதைக் கட்டாதவர்களுக்கு என்ன நெருக்கடி ஏற்பட்டதோ அதே நெருக்கடிதான் பணம் கட்டிய அந்த ஒரு லட்சம் பேருக்கும் அவர்கள் கட்டிய பணத்தை மீண்டும் தந்து உதவி செய்வது அவசியம். இதனால் அவர்கள் மனம் நொந்து வேதனைப்படுகிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் கோவில் தர்ம சாசனத்தைப்பற்றிச் சொன்னார்கள். 'லாண்ட் ரிபார்ம்ஸ்'ஐப் பொறுத்த வரையில், consolidation of land holdings என்ற கொள்கையின் அடிப்படையில், தமிழகத்திலுள்ள நிலங்கள் எல்லாம் சிதறித் துண்டு துண்டாகப் போயிருக்கின்றன என்ற காரணத்தால், இந்த நிலத்தில் இருக்கக் கூடிய 80% பேர்கள், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை வேறு தொழி லுக்கு மாற்றியாக வேண்டும். ஒரு கிராமத்திலுள்ள குறுகிய நிலத்தில் உள்ள வர்கள் ஒருவரோடு ஒருவர் போராட வேண்டிய நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமே தவிர, இந்தச் சட்டம்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [4th April 1972

முக்கியமல்ல என்று சொல்லி, அதனுடைய நோக்கம் நல்லது என்று பாராட்டினாலும், அதனுடைய நடைமுறை சரியானதல்ல, இதை வரவேற்க இயலவில்லை என்பதைக்கூறி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் தஞ்சை மாவட்டத்தில் வயிற்றெரிச்சல் என்று. இது முற்றிலும் மாறுனை தொன்று. பெரும் பாலான சிறுநில உடைமையாளர்கள்கூட, இப்போது ஒரு பசலிக்காவது பணம் வருகிறதே என்று மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். 5, 10 ஆண்டுகள் வரையில் இது கிடைக்குமா, கிடைக்காதா என்று உண்மையாகவே ஏங்கியிருந்தவர்கள் எல்லாம், இப்போது ஒரு பசலிக்காவது பணம் கிடைக்கிறது என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ அரசியல் 'பிஸினெஸ்' என்ற வகையில் இந்தத் திட்டம் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கு முன் வைத்திருக்கிற திட்டத்திற்கு ஒரு ஆதாவும் இல்லை யென்று சொல்கிறார். இது பிஸினெஸ்க்காகப் போடப்பட்ட திட்டமல்ல. யாரால் கொடுக்க முடியாதோ, அப்படிக் கொடுக்க முடியாதவர்களுக்காக, கடன் பட்டவர்களுக்காக ஒரு சட்டமே தவிர, வேறல்ல. முன்பு கூட ராஜாஜி கொண்டுவந்தாரே, அதில் யார் யாருக்கு லாபம் என்பது அவருக்குத் தெரியும். கடன்பட்டவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் பலர் இருக்கின்றார்கள். அந்த ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காகக் கொண்டுவரப் பட்ட நிவாரணச் சட்டமே தவிர, அவர் சொன்னதைப் போல், இது பிஸினஸ் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். பணம் கட்டியதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். விளைந்திருந்தால் கொடுத்திருக்கிறார்கள். விளையாத இடங்களில் கொடுக்கவில்லை. விவசாயி என்ற முறையில் நான் சொல்கிறேன். அந்த முறையிலே நானும் நிலத்தில் சாகுபடி பண்ணியிருந்தேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதனால் அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது லாபம் கிடைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : லாபமில்லை, விளைகிற நேரத்தில் கொடுத்துவிடுவோம். விளையாத நேரத்தில் கொடுக்கிறதில்லை. ஆகையால், நமது மாண்புமிகு உறுப்பினர் வாங்கக்கூடிய இடத்திலிருந்து வந்தவர், நான் கொடுக்கிற இடத்திலிருந்து பிறந்தவன். ஆக, விளைந்த நேரம் கொடுப்பதும், விளையாதபோது கொடுக்க முடியாத நிலைமையும் வரும். ஆகவே, குத்தகை

4th April 1972] [மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி]

தாரர்களாயிருந்தாலும் சரி அல்லது குத்தகை அளிப்பவர்களாய் இருந்தாலும் சரி, இரண்டு பேரும் மிக்க மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்று சொல்கிறேன். நீங்கள் கூறுவதுபோல நிலைமை இல்லை என்பதை நான் நிச்சயமாகச் சொல்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதை ஏதோ குறை கூற வேண்டுமென்ற அபிப்பிராயத்தில் நான் சொல்லவில்லை. அப்படி அமைச்சர் அவர்களும் நினைக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நடுநிலைமையில் இருந்து சாதக பாதகங்களையும் அரசியல் பார்க்காமல் ஒருவர் நோக்குகிறபோது எப்படித் தோன்றுகிறது என்ற நிலைமையைத்தான் நான் சொன்னேன். இதை நான் சொல்லுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். சட்டத்தைப் பிரேரேபித்த அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இங்கே அவர்கள் எனக்குப் பதில் கூறியிருக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் சொல்லியிருக்கலாம். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் என் சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்பவில்லை. ஆனாலும் கூட அவர் சொல்வது தவறு என்று சொல்லத் தயாராக இல்லை. தஞ்சை மாவட்டத்திலே யிருந்து வந்தவர்கள் என்ற முறையிலே எனக்கு எவ்வளவு பாத்தியத்தை இருக்கிறதோ அவ்வளவு பாத்தியதை அவருக்கும் இருக்கிறது என்ற உண்மையிலே அவர் சொல்லியிருக்கலாம் எல்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி எவ்வளவு அவருக்குத் தெரியுமோ அவ்வளவு தூரம் எனக்கும் தெரியும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை எல்லாத் தரப்பினரும் ஏகமனதாக ஏற்று நீண்டநேரம் விவாதமில்லாமல் மகிழ்ச்சி தெரிவித்து, வர வேற்றுப் பேசி அமர்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அதற்கு ஒரு காரணம் இந்த அவையில் பேசியவர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இரண்டு முறையும் எடுத்துச் சொன்னார்கள். அவர் பேச எழுவதற்கு முன்னால் நானும் நன்றி தெரிவித்து விட்டு அமரலாம் என்று தான் இருந்தேன். இன்றைய தினம் அவர் தன் பேச்சை ஆரம்பித்து அவரே பதிலும் சொல்லி முடித்திருக்கிறார்கள். ஆரம்பத்திலே சொன்னார்கள், 5 ஏக்கருக்குக் குறைந்தவர்கள் இலட்சத்து சொச்சம் பேர்கள் நிலச்சுவான்தார்களாக இருக்கிறார்கள். அவர்கள் 5 ஏக்கரை வைத்துச் சாகுபடி செய்து

[திரு. கே. எஸ். மணி] [4th April 1972

கொண்டிருக்கிறார்கள்; குத்தகையை நீங்கள் தள்ளுபடி செய்தால், இவர்கள் உங்களை வரவேற்றாலும், அவர்கள் சொம்ப ஆத்திரப்படுவார்கள்; எனவே இரண்டும் சமமாகத் தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை அவர் சொல்லியதுதான் உண்மையாக இருந்திருந்தால், அவர் எங்களைப் பாராட்டியிருக்க வேண்டும். அதைத் தொழில் முறைக்குக் கொண்டுவர அவசியமே இல்லை. இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்று தெரிந்தும், இவ்வளவு துணிவாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டுகிறேன் என்று ஒரு வரியில் சொல்லி முடித்திருக்கலாம். இன்னொன்று கொடுத்தவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்று கருதி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். நானும் அந்த வார்த்தையைத் திரும்பச் சொல்கிற துர்பாக்கியம் ஏற்பட்டதற்காக என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும் அவர்கள் அறிவாளிகளா இல்லையா என்ற ஆராய்ச்சிக்கு இந்தச் சட்டம் தேவையில்லை. அதற்கு நடைமுறையில் தஞ்சை மாவட்டத்திலே அவருக்கு இருக்கிற உரிமைகள் காரணத்தாலும் அவருக்கு இருக்கிற சிறந்த அனுபவத்தின் காரணத்தினாலும் இதுவரை அவர் கேட்டறிந்து புரிந்திருப்பார் என்று நம்புகிறேன். ஆகையினால் இந்த மன்றத்தில் ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சட்டம் வருகிற தென்றால், அந்தச் சட்டம் அரசியல் லாபத்தோடு வருகிறது என்று எண்ணுகிறவர்கள் உள்ளபடியே அரசியலில் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டுமென்று கருதினால் நாட்டு மக்களுக்கு எப்பொழுது எது தேவையோ அதைச் செய்கின்ற ஆற்றலும் புத்தியும் உடையவர்கள்தான் அதைச் செய்ய முடியும் என்பதை இந்தச் சட்டம் எடுத்துக்காட்டுகிறது. கீழ்ச் சட்டசபையில் இருந்த நேரத்திலும் சரி, வேறு எந்த நேரத்திலும் சரி, இந்தத் தமிழ்நாடு சர்க்கார் விவசாயிகளுக்காகச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டங்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் கேட்டதைப்போல், வெகு நாட்கள் தவணை கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. சட்டத்தின் பெயரைப் பார்த்தால், புனிதத் தன்மையும் நல்ல புகழ் வாய்ந்த மெருகு கொடுக்கக்கூடியதாகவும் இருந்தனவே தவிர அந்தச் சட்டங்களை யாருக்காக இயற்றினோமோ அவர்கள் அந்தச் சட்டத்தின் முழுப் பலனையும் பெறவில்லை. நாம் இன்றைய தினம் எந்தெந்தச் சட்டங்களை மேற்கோள் காட்டுகிறோமோ அந்தப் பழைய சட்டங்களில் இருந்த பல குறைபாடுகள் நீக்கப்பட்டு புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மேலும் நல்ல முறையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள் என்று நம்புகிறேன்.

4th April 1972] [திரு. கே. எஸ். மணி]

அதிலே அடிகளார் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். நீங்கள் சட்டம் போட்டிருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தினால் உண்மையான பலன் உழவர்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆனால் மொத்தக் குத்தகைக்காரர்கள் அல்லது பாகப்பிரிவினைக்காக இருந்து இந்தச் சட்டத்தினுடைய பலன் தடைப்பட்டு, டிப்பாசிட் செய்யப்பட்டு, அது தீர்வு காணுமல் இருக்கிற குத்தகைக்காரர்களுக்கு போய்விடக் கூடாது என்று சொன்னார்கள். மைனர் இனும் அபாலிஷன் ஆக்ட் சம்பந்தமான நடவடிக்கைகள் தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சட்டங்களின் விதிமுறைகளில் இந்தச் சட்டங்கள் எதுவும் செய்ய இயலாது என்று என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன். அதோடுகூட மொத்தக் குத்தகைகாரர்கள் என்ற பிரச்சினை வரும்போது தனிப்பட்ட மொத்த குத்தகைதாரர்களுக்கு டிரஸ்ட் ஆக்டில் இருப்பதைப்போல் உள் குத்தகைக் காரர்களுக்கான வாய்ப்புக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட நிலச் சுவான்தார்களிடத்தில் பெறுகிற உள் குத்தகைக்காரர்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பழைய 1955-வது வருடத்தினுடைய ஃபேர் ரென்ட் பிக்சேஷன் ஆக்ட்டில் பார்க்கிறபோது அதனுடைய முழுத் தன்மையும் ஒருவர் மொத்தக் குத்தகை வைத்திருந்து அது உள் குத்தகைக்கு விடப்பட்டால், அந்த மொத்தக் குத்தகைதார் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே மொத்தக் குத்தகைக் காரர் பிரச்சினை 1955-வது ஆண்டிலிருந்து இந்த 1972-ஆண்டு வரை இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமில்லை. காரணம், அவர்கள் அப்பொழுது வெளியேற்றப்பட்டிருப்பார்கள். அப்படி இல்லையென்றால், இந்த உள் குத்தகைக் காரர்கள் வேறு ரூபத்தில் வெளியேற்றப்பட்டிருக்கக்கூடும் அல்லது விவசாயியாக ஆக்கப்பட்டிருக்கக் கூடும். எனவே மொத்தக் குத்தகைக்காரர் பிரச்சினைக்கு 1955-இல் தீர்வு காணப்பட்டு 1972-ஆம் ஆண்டுவரையில் இருக்க வேண்டிய நியாயம் இல்லையென்றே கருதுகிறேன். அதற்கடுத்தாற்போல் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிற நேரத்தில் இலாப நோக்கத்தோடு கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் வருகிறபோது சோஷலிசம் பேசுகிறவர்கள், பொதுவுடமை பேசுகிறவர்கள், அரசுக்கு யோசனை வழங்குகிறவர்கள் ஒரு சட்டம் வருகிறபோது அது தனித் தன்மை வாய்ந்தது என்னைத் தாக்கக் கூடிய நேரத்தில் அவருடைய மன வேக்காடு எப்படி இருக்கும் என்பதை இந்த மன்றத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் சொம்பத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதை நான் உணர்கிறேன். அவர்களுக்கு இருக்கிற ஆத்திரத்தைப் போல் தஞ்சை

[திரு. கே. எஸ். மணி] [4th April 1972

மாவட்டத்தில் இருக்கிற இலட்சோப இலட்சம் குத்தகைக்காரர்களுக்கும் நிலச் சுவான்தார்களுக்கும் இருக்கும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அப்படி இருக்காது. அப்படி இருந்தாலும் கூட, அதைத் தாங்கிக்கொள்வதற்கு, எதிர் நீச்சல் போடுவதற்கு நல்ல நம்பிக்கையோடுதான் இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று கருதுகிறேன். எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அது மக்களுக்குப் பயன்படவேண்டுமென்ற ஒரு குறிக்கோளை மட்டும் முதலில் வைத்து இந்த அரசு நடத்துகிறது என்பதற்கு ஒரு உதாரணம் நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களை திருவையாற்றில் இப்பொழுது வேளாண்மைத் துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள கட்சிச் செயலாளர் அவர்கள் சந்தித்து விவசாயிகளுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கிட்டத்தட்ட 20 நிமிடத்தில் அவரிடத்திலே வாதாடிக் கேட்ட போது எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார். என்னென்ன காரணங்கள் என்று எல்லாம் கேட்டார். என்ன சிக்கல்கள் என்று கேட்டார். ஆக எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு ஆகட்டும் பார்ப்போம்; ஏதாவது ஒரு முடிவு செய்யலாம் என்று தான் இருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் திரும்ப அவரிடத்தில் எப்படிச் செய்யப் போகிறீர்கள்; எப்பொழுது செய்யப் போகிறீர்கள்; தயவுசெய்து சொல்லுங்கள் என்று கேட்டேன். இதையெல்லாம் உன்னிடத்தில் சொல்வதற்கில்லை. அது செய்கிறபோது உனக்குத் தெரியும். அப்பொழுது பார்த்துக் கொள் என்று என்னிடத்திலே சொன்னார். நான் இந்த அவையில் நம்முடைய மன்றத் தலைவருக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டுக்கு முதலமைச்சர் மட்டுமல்ல அவர், அவர் எங்கள் கட்சியின் தலைவரும் கூட. அவர் ஏதாவது ஒன்றைச் சொல்லி வெளியே சொல்லாதே என்று சொன்னால், என்னுடைய உயிரே போவதாயிருந்தாலும் சொல்லமாட்டேன். அப்படிப்பட்ட என்னிடத்திலே கூட இப்படி ஒரு சட்டம் வருகிறது என்று அந்த நேரத்திலே கடுகளவுகூட சொல்லவில்லை. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், அவ்வளவு நம்பிக்கையுடைய, அவர் கிழித்த கோட்டைத் தாண்டாத எங்களிடத்திலே அவர் இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லவில்லை. அவரை 27-ந் தேதி திருவையாற்றில் சந்தித்துக் கேட்டோம். 1-ந் தேதி யன்று மன்றம் கூடி நிதி நிலை அறிக்கை தயாரித்து வெளியிட்டோம். மூன்றாநாள் சட்ட மன்றத்திற்கு நான் வரவில்லை. இரண்டாந் தேதி பத்திரிகையில் படிக்கிறேன், ரேடியோவில் செய்தியைக் கேட்டேன் இந்த சட்டம் வந்திருக்கிறது என்று. இதை எதற்காக நினைவுபடுத்துகிறேன் என்றால், ஒரு சட்டம் வருகிறபோது யாராயிருந்தாலும், எப்படிப்பட்டவராய் இருந்தாலும், என்ன வேண்டியவர்களாக இருந்தாலும், கட்சிக்காரர்களாக இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பில்

4th April 1972] [திரு. கே. எஸ். மணி]

இருப்பவர்களாக இருந்தாலும், இப்படித்தான் அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்து வந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான் நான் இந்த மன்றத்திலே நினைவு படுத்துகிறேன். இன்னொன்றுகூட நினைவுபடுத்தலாம் என்று ஆசைப்படுகிறேன். சட்டங்களைக் கொண்டுவருவதில் அந்தச் சட்டம் அரசு இலாபத்திற்கா அல்லது அரசியல் இலாபத்திற்கா என்று கருதினாலும் கூட, என்னைப் பொறுத்த வரையில் நான் அதை ஏற்றுக்கொள்ளக்கூட கடமைப்பட்டிருக்கிறேன். உழைப்பவர்கள் பலனை எதிர்பார்ப்பது தவறில்லை. அந்த உழைப்புக்குத் தக்க ஊதியத்தைப் பொது மக்களிடையே எதிர்பார்த்து, ஒரு சட்டத்தை அரசு இயற்றுமானால், அதை ஒரு நல்லரசு என்று பாராட்டுவதில் எந்தவிதமான தப்பும் இருக்க நியாயமில்லையென்று கருதுகிறேன். காரணம், அரசியல் அடிப்படையிலே அமைந்திருக்கிற அரசு இது, எந்த அரசாக இருந்தாலும் மக்களுக்கு நல்லதைச் செய்து அதனுடைய பலனைப் பெற்று அரசியலிலே அவர்கள் பெரும் பேற்றினைப் பெறவேண்டும் என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் பாடுபட்டு வருவது உள்ளபடியே அரசியல் கட்சிகளுடைய பெருமிதத்தையும் அவர்கள் கொண்டிருக்கிற அழியாத நம்பிக்கையையும், அவர்களுக்கிருக்கிற வேட்கையின் தன்மையையும் தான் காட்டுகிறது என்பதை இங்கே தெளிவு படுத்திச் சொல்ல விரும்புகிறேன். யார் யார் விரும்புகிறார்கள், யார் யார் வெறுக்கிறார்கள் என்பதெல்லாம் பல ரூபத்தில் வருகிறது. இந்த மாதிரிச் சட்டங்களைப் பரிசீலிக்கிற நேரத்திலே எல்லாம் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொம்பத் தெளிவாக இதற்கான விளக்கத்தினைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். என்ன காரணத்தாலோ அவர் விளக்கவில்லை. உள்ளபடியே அவரே நல்ல பதில் சொல்வார், நல்ல விளக்கங்கள் தருவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் எடுத்துச் சொல்லாத காரணம் புரியவில்லை. இந்தச் சட்டத்தை அவர் நிச்சயம் வரவேற்பதோடு மட்டுமல்ல, இப்படிப்பட்ட சட்டங்களை இந்த அரசு கொண்டு வருவது சொம்ப சாலச் சிறந்த கடமை என்பதை விளக்குவார், அது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி நாதன் அவர்களுக்குப் பதிலாக அமையும் என்று நினைத்தேன். நாங்கள் சொல்லத் தேவையில்லை, மாற்றார்கள் சொல்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகச் சொன்னேன். இன்னொன்று இந்தச் சட்டத்தில் இருக்கிற ஒரு பெரிய பெருமை, 1955-ம் வருஷத்தில் வந்த நியாய வாரச் சட்டத்திலே இது போன்ற சிக்கல்கள் நில வெளியேற்றத்திற்கு இருப்பதையும், இன்றைக்கு இருக்கப்பட்டதையும் பார்ப்பீர்களானால், 1951-ம் வருஷத்தில் கொண்டு வரப்பட்ட பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமானாலும், 1955-ம் வருஷத்தில்

[திரு. கே. எஸ். மணி] [4th April 1972

கொண்டு வரப்பட்ட நியாய வாரச் சட்டமானலும், இவைகளைக் கொண்டு வந்ததற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள் ஏராளம். ஒருவரை நிலத்தை விட்டு வெளியேற்றியதற்குப் பிறகு அவன் 'பொசஷன்' எடுத்துக்கொண்டு நட்டுவிடு வானுனால், அவன் அந்த நிலத்தில் உரிமை பெற்றவன். அந்தச் சட்டத்தின் மூலம் பலன் பெறுவதற்கு மனுப் போட்டால், அந்த நிலத்தில் உழுது நட்டதைத் திருப்பிக் கொடுப்பதற்கு எப்படி இயலும் என்ற சர்ச்சைகள் எழும்பியது. இதன் மேல் உயர் நீதி மன்றத்திற்குப் பல ரிட்டுகள் வந்து தீர்ப்புகள் கொடுக்கப் பட்டன. அப்படிப்பட்ட தீர்ப்புகள் கூடுமானவரை பலனே எவன் பெற வேண்டுமென்று நினைத்தோமோ அந்தக் குத்தகைக்காரர்களுக்குப் பாதக மாகவே வந்தன. உயர் நீதி மன்றத்தின் பல வழக்குகளில் இப்படி பாதக மாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது. இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிற சட்டத்தில் அப்படிப்பட்ட சர்ச்சைக்கே இடமில்லை. இது தெளிவாக்கப்பட்டு விட்டது. குத்தகைக்காரர்களைப்பற்றி இன்னும் சொன்னார்கள். இந்தக் குத்தகைக்காரர்கள் நெல் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை வராமல் போகுமோ என்னவோவென்று அனுதாபப் பட்டார்கள். ரொம்பச் சங்கடங்கள் உள்ளன, அவர்களுடைய நாணயம் கெட்டு விடும் என்று சொன்னார்கள். அப்படி இதிலே வருமென்ற சந்தேகமே கிடையாது. இந்த ஃபசலிக்குரிய தொகையைச் செலுத்தினால் தான், எற்கெனவே இருக்கிற பழைய பாக்கிகள் தள்ளுபடி செய் வதற்கு அவர்களுக்கு அனுகூலமாக அமையும் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. அதிலும் சங்கடம் வந்து விடும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்களோ என்று முதலில் நிதி நிலை அறிக்கையைப் படிக்கிற போது எண்ணியிருந்தேன். திரும்பவும் இன்னும் சரியான முறையில் விளக்கம் தந்து, ஒருக்கால் சட்டம் நடைமுறைக்கு வர நாளாகும் என்று கருதி, அதற்கு 6 மாத காலம் தவணை தந்திருக்கிறார்கள். இதை விட புனிதமான சட்டம், உண்மையான குத்தகைதாரர்களுக்குப் பலன் அளிக்கத் தக்க வகையில் வேறு என்ன தான் வரவேண்டுமென்று எடுத்துச் சொன்னாலும் கூட, அடுத்த மன்றத்தில் விவாதிக்கலாம் என்று கேட்கிறேன், யாரும் சொல்லவில்லை. ஆனால் எதைச் சொன்னாலும் குற்றம், எதைச் செய்தாலும் குற்றம் என்று இருப்பவர் களுக்கும் அல்லது இந்தச் சட்டம் நம்மை பாதிக்கிறது, நம் குடும்பத்தைப் பாதிக்கிறது, நாம் எழுதிவைத்திருக்கிற டிரஸ்டைப் பாதிக்கிறது என்று கருதி, அதைப் பேச்சு சாதுர்யத்தால், தங்களது பேச்சு வன்மையால் மன்றத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் நம்புவார்கள் என்று நினைத்தால், மன்றத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் நம்ப மாட்டார்கள்; பெருவாரியாக நம்ப மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே, திரும்பத் திரும்பச் சொல் கிறேன். இந்தச் சட்டத்தைத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற லட்சக்கணக்

4th April 1972] [திரு. கே. எஸ். மணி]

கான விவசாயிகள் மதிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள். ஒருவர் இரயிலில் வரும் போது என்னிடத்தில் பேசிக்கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டத்தைப் போட்டுவிட்டார்களே, இந்தச் சட்டம் திடீரென்று வந்து விட்டதே, எப்படி பாக்கியை வசூலிப்பது என்றார்கள். ஏற்கெனவே 4 வருஷ காலமாகக் குத்தகை பாக்கியைக் கொடுக்கலாம் கொடுக்கலாம் என்று சொல்லி, கொடுக்க முடியாமல் போன காரணத்தினால், பாக்கியை வசூல் செய்ய வழியில்லை, கோர்ட்டுகளில் வழக்குகளைத் தீர்க்க முடியவில்லை, எனவே இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று சொன்னேன். அவர் அப்போது அரைகுறையாக ஒப்புக்கொண்டார். நான் கேட்டேன், பாக்கிக்காக மனு போட்டீர்களே, 5, 6 வருஷ காலத்திற்கு ரெவின்யூ கோர்ட்டில், முன்சீப் கோர்ட்டில் மனு போட்டுப் போயிருக்கிறீர் களே அதற்கான செலவை எழுதி வைத்துக்கொள்ளுங்கள், அதற்கிடையில் உள்ள குத்தகை பாக்கி எவ்வளவு என்று பாருங்கள், எது அதிகமிருக்கிறது என்று சொல்லுங்கள் என்று கேட்டேன். அவர் செலவழித்த தொகை அதிகம். பாக்கி அதிக மில்லையென்று சொல்லி விட்டார். எனவே, இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் ஒரு நல்ல சட்டத்தை, புனிதமான சட்டத்தை, தேவையான சட்டத்தை, நிலத்திலிருந்து குத்தகைதாரர்களை வெளியேற்றாமலிருக்க பாது காப்புச் சட்டத்தை, சிறந்த முறையில் கொண்டுவந்த சம்பந்தப்பட்ட அமைச் சரவர்களுக்குப் பாராட்டு தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

* திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று ஆரம்பத்தில் எண்ணியிருந்தேன். அதற்குப் பின்னால் நம்முடைய மேலவையில் பெரிய எதிர்ப்பு ஒன்றும் வராது போலிருக்கிறது என்று கருதி நான், அதற்கு எதிர்ப்பு இல்லாத ஒரு நேரத்தில் எதிர்ப்பு இருப்பது போன்ற நிலைமையை ஏன் உண்டாக்க வேண்டு மென்று கருதி, நான் பேசாமல் இருக்கலாமென்று இருந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரன் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் இந்தச் சட்டத்தை இவ்வளவு கடுமையாக எதிர்ப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இது மிகக் கொடிய பயங்கரமான சட்டம் என்று கூறினார்கள். இதிலே என்ன கொடுமை இருக்கிறதென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ரொம்ப நேரமாகச் சிந்தித்துப் பார்த்தேன். எனக்கு விளங்கவில்லை. இது மிகச் சாதாரண விஷயம். இதிலே அதிகமாகப் பேசத் தேவை என்ன? கடன் கொடுக்க சக்தியற்றவர்களிடத்தில் கடன் பாக்கியைத் தள்ளிவிடுவது இன்று நேற்று பழக்கமல்ல. இது நீண்ட நெடுங்காலமாக இருக்கிற பழக்கம். இதில் ஒன்றும் புரட்சியில்லை. கடன் கொடுக்க முடியாத நிலைமை என்றால், சர்க்காரே கடனை வஜா செய்துகொண்டிருக்கிறது. ஆகையினாலே இது பெரிய புரட்சி

[திரு. எம். ஆறுமுகசாமி] [4th April 1972

என்று சொன்னால், நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அடுத்து, ஒரு காரணத்தைச் சொன்னார்கள். எல்லோரும் தான் கொடுத்து விட்டார்களே, டவ் இர்தச் சட்டம் என்று கேட்டார்கள். எல்லோரும் தான் வாங்கிக்கொண்டு ஷட்டீர்களே, எல் இவ்வளவு பயம்? இந்தச் சட்டத்தினால் கஷ்டம் வரப் போவ தில்லை என்று சொல்வேன். எல்லோரும் செலுத்தி விட்டார்கள், கொஞ்சம் பேர் தான் பாக்கியிருப்பார்கள் என்றால், இதைப்பற்றிப் பயப்படவேண்டிய அவசியமில்லை. இதில் ஒரு உண்மை மறைந்திருக்கிறது. கொஞ்சம் பேர் தான் செலுத்தியிருக்கிறார்கள். ரொம்பப் பேர் செலுத்தவில்லை என்பது தான் அந்த உண்மை. இல்லாவிட்டால் சட்டம் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் காது. இப்படிப்பட்ட நிலை வந்திருக்காது. இதிலே அரசியல் இருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். யார் பேசுவதில் அரசியல் இல்லை! அரசியல் இல்லாத உறுப்பினர்கள் யார்? எல்லோரும் அரசியல் வாதிகள் தான். அதிலே ஆட்சேபணையில்லை. அவரவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிற தொகுதி, அல்லது மக்கள் பிரிவு இருக்கிறார்களே, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் எல்லோரும் உறுதியாக இருக்கிறார்கள். நான் பிரதிநிதித்துவப்படுத்துகிற மக்கள் நலன் வருகிற போது நானும் உறுதியாக இருக்கிறேன். அதே போல மற்றவர்களும் உறுதியாக இருக்கிறார்கள். இப்போதெல்லாம் நேரடியாக எதிர்ப்பதற்கு முடியாமல் சுற்றி வளைக்கிறார்கள். தாங்கள் அரசியலில் நடு நிலையில் இருப்பது போல பாசாங்கு செய்கிறார்கள். ஆனால் அது உண்மை யல்ல. அவர்கள் நேரடியாகப் பல பிரச்னைகளை எதிர்க்க முடிவதில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலப் பிரபுக்கள்—இப்போது பிரபுக்கள் என்று சொல்லக் கூடாது, நிலப் பிரபுக்கள் சாதாரண நில உடமையாளர்கள் ஆகிவிட்டார்கள்—அவர்கள் சொல்வார்கள், குத்தகைதாரர் விஷயம் அல்லது ஒரு கூலிப் போராட்டம் வந்தால், அந்த ஊரில் இருக்கக் கூடிய 5 ஏக்கர், 7 ஏக்கர் வைத்திருப்பவர்களை இந்தப் பெரிய நில உடமையாளர்கள் கூப்பிட்டு, இதோ பார் எனக்கு 50 கிராமம் இருக்கிறது, ஒரு கிராமத்தில் இருக்கிற நெல் வராமல் போனாலும் பரவாயில்லை, உனக்கு 5 ஏக்கர் தானே இருக்கிறது, நீ எப்படி சமாளிக்கப் போகிறாய், அவனோடு சண்டை போடு என்று உசுப்பி விடுவார்கள். பெரிய ஹோல்டிங் முதலாளி தனக்கு இடைஞ்சல் வந்தால், அதை வெளிக் காட்டாமல் இந்த ஹோல்டிங்கில் நஷ்டம் வந்தாலும், நான் சமாளிப்பேன், இந்த நஷ்டத்தை இன்னொரு ஹோல்டிங் லாபத்தில் ஈடு செய்து சமாளித்துக்கொள் வேன், நீ என்ன செய்வாய் என்று 3 பேரை மட்டும் வைத்திருக்கிற ஒரு சின்ன முதலாளியைத் தட்டி விடுவார்கள். அவர்கள் உண்மையாகவே பாதிக்கப்பட்ட வர்கள். இவர்கள் அவர்களை உசுப்பி விட்டு, விவகாரத்திலே இறக்கி விடு வார்கள். கடைசியில் இந்த இரண்டு பேரும் மோதிக் கொண்டிருப்பார்கள்.

4th April 1972] [திரு. எம். ஆறுமுகசாமி]

இது போல யாரோ கொஞ்சம் பேர் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருப் பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நாம் யாரும் நீலிக் கண்ணீர் வடிக்க வேண்டியதில்லை. இந்த 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள் நிச்சயமாக வாழ முடியாதா என்று நான் கேட்கிறேன். உழாதவனுக்கு ஏன் உழவன் என்று பெயர்? இவர்கள் absentee landlords . சென்னையில் உட்கார்ந்து கொண்டு ஒரு ஹோல்டிங்கில் டைரக்டராக இருக்கிறார், உத்தியோகம் பண்ணிக் கொண்டிருக்கிறார், அவர் 3, 4 ஏக்கர் நிலச் சொந்தக்காரர். குத்தகைதாரர் களைப்பற்றி அவர்கள் தான் இப்படி இருப்பதாக திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். நிலச் சொந்தக்காரர்களும் இப்படி இருக்கிறார்கள். ஜம்ஷட் பூரில் ஒருவர் இருக்கிறார். அவர் நிலச்சுவான்தார். அவருக்கு இங்கே நிலம் இருக்கிறது. அவருக்கு இங்கிருந்து விற்றது போக நெல் அங்கே போகிறது. இந்த ஊர் அரிசி வரவில்லையென்றால், அவருக்குச் சாப்பாடு இறங்குவது கிடை யாது. வேறு ஊர் அரிசி ஜீரணமாவதில்லை. இப்படிப் பாரம்பரியமாக ஒரு பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியுமா? இரண்டு இடத்தில் அவர்கள் எப்படி தொழில் செய்பவர்களாக இருக்க முடியும்? ஒன்று அவர்கள் உழுவர்களாக இருக்கட்டும், அல்லது தொழில் செய்பவர்களாக இருக்கட்டும். அவர்களுக்கு தொழிலில் வருமானம் வருகிறது. ஆக, அவர் களுக்கு 3 ஏக்கர் 2 ஏக்கர் நிலம் இருப்பதனாலேயே, மற்றவர்கள் நினைக்கிற மாதிரி, அவர்கள் ஒன்றும் கஷ்டப்படுகிறவர்கள் அல்ல. அவர்கள் வேறு விதங் களில் வருமானம் உள்ளவர்கள். அப்படியில்லை என்றால், அவர்களே நேரடி யாகச் சாகுபடி செய்ய மாட்டார்களா?

அடுத்து, புள்ளி விவரங்களைப்பற்றி அதிகமாகப் பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில், இந்தப் புள்ளி விவரங்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் சரியானவை அல்ல. எனக்குத் தெரிந்து, ஒரு நிலச் சுவான்தார் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். அவருடைய நிலத்தை நேரடிச் சாகுபடி நிலம் என்று கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே ஒரு ஏஜெண்ட் வைத்திருக்கிறார். ஆனால் கணக்குப்பிள்ளை இருக்கிறாரே! இப்போது, ஒரு குத்தகைதாரர் சாகுபடி செய்கிறார் என்றாலும், அவர் நேரடிச் சாகுபடி என்று கணக்குக் காட்டுகிறார். இதுமாதிரி எத்தனை ஏக்கர் சாகுபடி நடக்கிறது தெரியுமா? இந்தக் குத்தகை தாரர்கள் எல்லாம் சொந்தக்காரர்களிடம் குத்தகைச் சீட்டுக்குப் போகப் பயப் படுகிறார்கள். பல நிலச்சுவான்கள் முன்னாலேயே புரோநோட் எழுதி வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். எப்படியாவது நிலம் வேண்டும் என்ற கணக்கில் இப்படியெல்லாம் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம்

[திரு. எம். ஆறுமுகசாமி] [4th April 1972

குத்தகைதாரர்கள் என்ற கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. இப்படி இன்னும் ஆயிரக்கணக்கில் சட்டத்தில் வராமல் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். ஆயிரம் வேலி இருக்கிற ஒருவர் இந்தச் சட்டம் வந்தபிறகு பிரித்து பலர் பேரில் எழுதி வைத்திருப்பது போலவே குத்தகை விஷயத்திலும் பலர் பினாமி வேலை செய்துவருகிறார்கள். அந்த நிலங்களில் எல்லாம் குத்தகைக்கு உழுதுகொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் சிட்டு கிடையாது. இப்படிப் பலரை உதாரணம் சொல்ல முடியும். பல ஏக்கர் நிலங்கள் இருப்பதாகச் சொல்ல முடியும். ஆகவே குத்தகைக் கணக்கு என்று சொல்லி, ஒரு லட்சம் பேரில் சில பத்தாயிரம் பேர்கள் பாதிக்கப்படுகின்றவர்கள் என்று சொல்ல வேண்டாம். தஞ்சை மாவட்டத்தில் எங்களது மேல் பகுதியில் டைரக்ட் கல்டிவேஷனே அதிகம் இருக்கிறது. கீழ்த் தஞ்சையில் தான் ஆயிரக் கணக்கானவர்கள் குத்தகை செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். உள் குத்தகைபற்றிப் பேச்சே இல்லை. உள் குத்தகை சட்டப்படி குற்றம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே சப்லீஸ் அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உள் குத்தகை விடலாம், டெனன்சி சட்டத்தில், சப்லீஸ் விடலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

We can see even in the Cultivating Tenants Act that the word ' sub-tenant ' also includes the term ' tenants '. So, we can give tenancy to a sub-tenant.

திரு. எம். ஆறுமுகசாமி: நான் தெளிவாகச் சொல்கிறேன். சப்-டெனன்ட் யாரும் நிலத்தை உழலாம். ஒருவர் வாங்கி இன்னொருவருக்குக் கொடுக்கலாம். ஆனால், அந்த இடையில் இருக்கிறார்களே, அவர்கள் டெனன்ட்டாகக் கருதப்படமாட்டார்கள். டெனன்ட் என்ற பதத்தின் கீழ் வரமாட்டார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி: தலைவரவர்களே, பாக்கி கொடுக்காமல், அல்லது, கரெக்டாகக் கொடுத்திருந்தாலும் கூட, வெளியேற்றலாம் என்று சட்டம் இருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : When the Record of Tenancy Bill came I raised this point because it provides for sub-letting the land. The Select Committee on Cultivating Tenants Bill said that the sub-tenant also will be construed as tenant.

4th April 1972]

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, ஏற்கனவே நமது ஆக்டில் இருக்கிறது. சப்-டெனன்சிக்கு விட்டு செய்து விட்ட பிறகும் . . .

" A sub-tenant if he contributes his own physical labour or that of any member of the family in the cultivation of such land is a cultivating tenant."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, யார் வேண்டுமானாலும் கீழ்க் குத்தகைக்கு விடலாம். மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டு கீழ்க் குத்தகைக்கு விடலாம். ஆனால் இண்டர்மீடியரிஸ் கிடையாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அப்படி மொத்தக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு கீழ்க் குத்தகைக்கு விட்டால், கீழ்க் குத்தகைக்காரரும் குத்தகைக்காரர் ஆவர் என்று சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஒரு ஐந்து ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், அதில் இரண்டு ஏக்கர் நிலத்தைக் கீழ்க் குத்தகைக்கு விட்டுவிடலாம், நிலச் சொந்தக்காரருடைய சம்மதம் வேண்டியதில்லை. அப்போது, மூன்று ஏக்கர் வைத்திருப்பவர் மேல் குத்தகைக்காரர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர் கீழ்க் குத்தகைக்காரர் ஆவார். அது தான் விஷயம்.

திரு. எம். ஆறுமுகசாமி: நான் கூட அதைத் தான் சொன்னேன். இண்டர் மீடியரிஸ் கிடையாது. சப்-டெனன்ட் என்று வைத்துக்கொண்டு வசூல் செய்யலாம். ஆனாலும் இண்டர்மீடியரிஸ் என்று கிடையாது. அப்படிக் குத்தகைக்கு விட்டுவிடுவார்களானால், அவரிடம் நிலம் பெறுபவர் அசல் குத்தகைதாரர் ஆவார். எனவே இண்டர்மீடியரீஸ் கிடையாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஐந்து ஏக்கர் நிலத்தில் மூன்று ஏக்கரை வைத்துக்கொண்டு இரண்டு ஏக்கரைக் கீழ்க் குத்தகைக்கு விட்டுவிட்டால், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர் ஒரு குத்தகைதாரர், இரண்டு ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவரும் ஒரு குத்தகைதாராராக இருப்பார்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஐந்து ஏக்கர் இருந்து, அதில் மூன்று ஏக்கர் குத்தகைதாரரும், இரண்டு ஏக்கர் கீழ்க் குத்தகைதாரரும் இருந்து, இரண்டு ஏக்கரா குத்தகைதாரர் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், யார் பொறுப்பாளி?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சப்-டெனன்ட்தான் பொறுப்பாளி.

[4th April 1972

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, 'இண்டர்மீடியரிஸ்' இடையாது. அதிலே ஏமாற்ற முடியாது. 'டாகுமெண்ட்' இல்லாமல் பரஸ்பர ஒற்றுமை முறையில் நடந்துகொண்டிருக்கிறது. அது மாதிரி பலர் இருக்கிறார்கள். நான் கூறியதெல்லாம் கூட இந்த இடைத் தரகர்கள் என்பவர்களே எடுத்துவிட வேண்டும் என்பதுதான். இதற்கிடையில் மூன்றாவது ஆள் அல்லது வேறொரு டெனன்ட் இருந்தால் ஆட்டோமேடிக்காக—இயல்பாகவே நிலம் அவனிடம் சட்டப்படி போய்விடுகிறது.

இதை எதற்காகக் கூறினேன் என்று சொன்னால், கடன் கொடுக்க முடியாமல் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு, சிறுசிறு குத்தகைக் காரர்களுக்கு—அவர்களுக்கு உற்சாக மூட்டுவதற்காக, அவர்கள் வாழ்வதற்காக வகை செய்யப்பட வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். நான்கு ஆண்டுகளில் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியை ஒரே ஆண்டில் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டமெல்லாம் நடைமுறையில் இல்லை. ஒரு வருஷம் வெள்ளத்தினாலோ, மழை இல்லாமல் போய் விட்டாலோ, பூச்சிகளால் பயிர் கெட்டுவிட்டாலோ அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இப்போது நடப்பதெல்லாம் பழைய அதிகார வர்க்க முறையிலேயேதான் நடந்துகொண்டிருக்கின்றது. எனவே, கஷ்டங்கள் இருக்கின்றன, அவற்றை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு நன்மை செய்கிறது என்ற அளவில் அவர்களுடைய கடன் சுமையைக் குறைக்கிறது என்ற அளவில் இதை நான் வரவேற்கிறேன்.

"ஃபிராக்மெண்டேஷன்" பற்றிச் சொன்னார்கள். இன்றைய தினம் நிலம் துண்டு துண்டாகப் போய்க்கொண்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு சட்டமில்லையென்று சொன்னார்கள். இதற்காகச் சட்டம் கொண்டுவந்தால், அந்தச் சட்டம் தங்களின் நன்மைக்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைக் கூட அவர்கள் உணருவதில்லை. ஆகவே, அவர்களுக்கே, அதிலே நியாயம் இருக்கிறது என்ற உணர்வு ஏற்பட வேண்டும். 20 வருஷங்களுக்கு முன்னெல்லாம் தொழிற் சங்கங்களில் போய், தொழிலாளர்களைப் பார்த்து, "உங்களுக்கு இப்படி இப்படி உடை இருக்க வேண்டும், சம்பளம் வேண்டும், முதலாளி அதைத் தர வேண்டும் என்று சொன்னபோது, தொழிலாளர்களே, "இது நியாயமா?, முதலாளியால் இதைக் கொடுக்க முடியுமா? இப்படியெல்லாம் கொடுத்தால் முதலாளிக்கு என்ன மிச்சம் ஏற்படும்" என்றெல்லாம் சொல்வார்கள். அது போலவே, துண்டு துக்காணி நிலங்களையெல்லாம் ஒன்று

4th April 1972] [திரு. எம். ஆறுமுகசாமி]

சேர்க்க வேண்டும், அதற்காக இப்படிப்பட்ட சட்டங்கள் எல்லாம் அவசியம் என்று விவசாயிகள் உணர்ந்த பிறகுதான், அவர்கள் ஒன்றுகச் சேருவார்கள். அவர்களுக்கு இப்போது நிலப்பசிதான் இருக்கிறது. அதனால்தான் 'லிப்ட் இர்ரிகேஷன்' வெற்றிகரமாக நடத்தப்பட முடியவில்லை. நிலம் வேண்டும் என்கிற ஆசை பூர்த்தி செய்யப்பட்ட பிறகே இத்தகைய முறைகளுக்கு விவசாயிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும்.

ராம மக்களுக்கு நிலத்தை அளிப்பதில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து, அவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட காரியங்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, இந்தச் சட்டத்தை வரவேற்று எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு தலைவரவர்களே, நில உரிமை சம்பந்தமாக, நிலப் பிரச்னை சம்பந்தமாக எத்தச் சட்டம் வந்தாலும், தமிழ் நாட்டில் முதலில் அது தஞ்சாவூரைக் குறிப்பிடுவதாகவே எல்லோரும் கருதுகிறார்கள். இந்த நிலப் பிரச்னை சம்பந்தமாக நுணுகி ஆராய்ந்தவர்களும் தஞ்சாவூர்க்காரர்களாக இருக்கிறார்கள். நான் இதிலே என் பேச வேண்டுமென்ற எண்ணம் தோன்றி விட்டது, இரும்படிக்கும் பட்டறையில் சுக்கு என்ன வேலை என்று. எனக்கு நான்கு ஆண் மக்கள். ஒருவன் டாக்டர். அவன் படித்திருக்கிறான். சம்பாத்தியம் இருப்பதால் அவனுக்குச் சொத்து வேண்டியதில்லை. மீதமுள்ள மூன்று பேருக்கு 6¾ ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்தோம். இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், கடந்த நான்கு வருஷங்களாக அங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நான் கிராமத்தைச் சேர்ந்தவன். என்னுடைய மனதில் தோன்றுவது என்னவென்றால், நாம் சமதர்மம் பேசுகிறோம், எல்லோரும் வாழ வேண்டும், எல்லோருக்கும் சமமாகச் சட்டம் வர வேண்டுமில்லையா? எல்லோருடைய நியாயத்தை கஷ்ட நஷ்டங்களை ஒன்றுகக் கருதி இந்தச் சட்டம் செய்யப்பட வேண்டும். அங்கிருக்கிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள், குத்தகை செலுத்த முடிவதில்லை, ஆகவே இது வரவேற்கத் தக்க சட்டம் என்று கூறுகிறபோது, தஞ்சாவூரிலே இருக்கிற நிலச்சுவான்தார்கள், நில உடமையாளர்கள் இதற்குப் பணியா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள்தான் இதற்குப் பணியா? நிலத்தில் சாகுபடி செய்கிறவர்கள் பல லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். வாஸ்தவம் ஏன், அங்கே சாகுபடியான நிலங்களில் தண்ணீர் ஒவ்வொரு வருஷமும் கிடைக்கிறது, விளைகிறது. கடந்த 4, 5 வருஷங்களாகத் தஞ்சாவூரில் விளைச்சல் அதிகம் என்று

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [4th April 1972

அரசு சொல்லியிருக்கிறது. மேன்மேலும் தஞ்சாவூரில் நல்ல விளைச்சல், அதிக விளைச்சல் கண்டிருக்கிறது என்று பெருமையாக அல்லவா சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1966-ம் ஆண்டு பஞ்சம் ஏற்பட்டது. மழையில்லை. தஞ்சை மாவட்டத்தில் எப்படி வரூல் செய்ய முடியும் என்று அப்போதிருந்த அரசு தள்ளி வைத்தார்கள். அதனுடைய சுமை தான் சேர்ந்துகொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். அப்போதிருந்த அரசு, மழை பெய்யாத காரணத்தினால், தஞ்சை மாவட்டத்தில் வறட்சி இருக்கிறதென்று, கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையைத் தள்ளி வைத்தார்கள். அப்போதிருந்த அரசு எது என்று நான் சொல்லத் தேவையில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: நான் சொல்வது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 1966-க்கு செல்லவில்லை. இப்போது நாம் பசுமைப் புரட்சி என்று செய்கிறோம். கிராமத்தில் நடக்கிறது. கடன் உதவி செய்கிறோம். உரங்களைக் கொடுக்கிறோம். நல்ல விளைச்சல் கண்டு வருகிறது. ஆகவே, எனக்கு மனதில் தோன்றுவதெல்லாம், நான் அரசியல் தேவையில்லையென்று சொல்லிக்கொள்ள முடியாது. என்றாலும் கூட என்னுடைய உணர்வு அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. எண்ணியிருந்தால் நான் பேசாமல் இருந்திருக்கலாம். இதில் என் பேரில் என்று நான்கு பேர் விமரிசனம் பண்ணலாம். அது கூடப் பரவாயில்லை. ஆனால் கருத்தைச் சொல்லாமலிருப்பது பாவம் என்று என் மனச்சாட்சி சொல்கிறது. ஆகவேதான் நான் சொல்வது தவறாக இருக்கலாம். என்னுடைய கருத்து தவறாக இருக்கலாம். ஆனால் என் மனதில் தோன்றியதைச் சொல்லாமலிருப்பது பாவம் என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது அவசர நிமித்தமாக இருக்கலாம், ஆனால் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் தடை மட்டும் செய்து விட்டு, நன்றாக யோசித்துப் பார்த்து, இதனால்யார் பாதகம் அடையக் கூடியவர்கள், என்ன பாதகம் நேரும், அப்படி எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன, சாகுபடி செய்கிறவர்கள் என்ற பெயரில் வேலையாள் தொழில்களைச் செய்கிறவர்கள் எவ்வளவு பேர் இதிலே இருக்கிறவர்கள், அவர்கள் என்னென்ன தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் பெட்டிக் கடை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ ஆயிரம் ரூபாய்க்கு வரிகளை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களில் எத்தனை பேர் இதிலே நுழைந்திருக்கக் கூடும்? இதையெல்லாம் காண முடிகிறதா? இதை யோசித்து இந்த அளவில் ஓளவிற்குத் திருவிப் பார்த்து எல்லாவற்றையும் பார்க்க முடியாவிட்டாலும் கூட, ஒருவன்

4th April 1972] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

கொஞ்சம் நிலம் வைத்திருந்தான் என்ற பாவத்திற்காக, இந்தச் சட்டத்தின் மூலம் இந்தக் கஷ்டத்தை அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கருத்தில் சொல்கிறேன். அந்த வகையில் இந்தச் சட்டத்தை அவசரப்பட்டுக் கொண்டு வந்து விட்டார்களே என்று வருத்தப்படுகிறேன். நிலத்தை விட்டு வெளியேற்றாமல் இருக்க ஒரு தடை மட்டும் செய்து விட்டு நன்றாக யோசித்துச் செய்திருக்கலாமே என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று கடந்த 4 ஆண்டுக் காலமாகச் சொல்லி, தள்ளிக் கொண்டே வந்தோம். தள்ளி வந்ததன் காரணமாக, சென்ற ஆண்டு சட்டம் போடும் போது சொன்னோம். 4 ஆண்டு பாக்கியை அடுத்த 4 ஆண்டு காலத் தவணைகளில் கட்டலாம் என்று சொன்னோம். ஏற்கெனவே உள்ள 60—40 குத்தகைச் சட்டப்படி 4 ஆண்டுக் காலத்திற்கு 40 வீதம் கொடுக்க வேண்டும். இந்த ஆண்டு 40 கொடுக்க வேண்டும். 4 ஆண்டு பாக்கிக்காக ஒரு தவணை சேர்த்து 80 கொடுக்க வேண்டி வந்து விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு மேலும் கஷ்டம் ஏற்படுகிறபோது, அதைக் கொடுக்க முடியாத சிரமம் ஏற்படுகிறது. இந்த ஏழைகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கருதுகிறோமே தவிர, வேறு அல்ல. இந்தப் பாதுகாப்பளித்திருப்பது இன்னொருவரைக் கொடுமைப்படுத்த வேண்டுமென்று அல்ல. சுமை தாங்க முடியாது அவதிக்குள்ளாகியுள்ள உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது அரசின் பொறுப்பு என்ற நிலையில் இது வந்திருக்கிறது. அந்த நம்பிக்கையில் செய்திருக்கிறோம். வேறு அல்ல.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, எனக்கு இன்னொரு யோசனை கூட. தஞ்சையில் ஒரு போகம் இரண்டு போகம் விளைவதற்கான நல்ல நிலங்கள் இருக்கின்றன. தண்ணீர் இருக்கிறது. தண்ணீர்த் தட்டு கிடையாது. அப்படியிருந்தும் ஏன் அவர்களால் குத்தகை செலுத்த முடியவில்லை என்ற கேள்வி எழுகிறது. அங்கே இந்தக் குத்தகைச் சாகுபடியாளர்களுடைய குடும்பத்தை நடத்துவதற்கேற்ற வருமானம் அவர்கள் சாகுபடி செய்த நிலத்தின் மூலமாகவே கிடைத்துவிடும் என்று சொல்ல வரவில்லை. அந்தக் குடும்பத்தினுடைய தேவை 2,000 ரூபாய் இருக்கலாம். சாகுபடி செய்யும் நிலத்தின் மூலமாக அத்தகைய உயர்ந்த வருமானம் வராது. 500 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் தான் கிடைக்குமென்றாலும், பற்றாக்குறை என்னமோ பற்றாக்குறை தான். அந்தக் குடும்பத்தின் தேவை அதிகமாக இருக்கிறது. இதை நான் நினைத்துப் பார்க்கும் போது, தஞ்சையிலே சாகுபடி செய்கிறவர்கள் குடும்பத்திற்குத் தேவை அதிகமாக இருக்கலாம். அதனால் குத்தகையைத் திருப்பிச் செலுத்த முடியாத கஷ்டங்கள் இருக்கலாம். அப்படிப் பார்த்தால்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [4th April 1972

உடைமையாளர் குடும்பத்திற்கு வருஷத்தில் 2,000 ரூபாய் தேவை இருக்கலாம். அவருக்கும் அதே மாதிரித் தேவை இருக்குமே, அதற்கு என்ன செய்வது? சாகுபடி செய்கிறவர்களுடைய தேவையை மட்டும் கருத்தில் கொண்டு இவர்களுக்கு அனுகூலம் அளிக்கப்படுமானால், இந்தக் குத்தகையை எதிர்பார்த்திருக்கும் நில உடைமையாளர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கஷ்டப்படுகிறார்களே, அவர்களுடைய குடும்பத்தில் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாயவரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர்களுடைய தலைவர் திரு. காமராஜர் அவர்கள் குத்தகைதாரர்களுக்காகப் பரிந்து பேசிவிட்டு சென்னைக்கு வந்த பிறகு பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இதைப்பற்றிக் காமராஜர் அவர்களிடத்தில் பேசி இதை ஏன் யோசிக்கவில்லையென்று கேட்டார்களா வென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அங்கு பேசியது எனக்குத் தெரியும். பொதுவாக அவர்களுக்குக் கஷ்டமில்லையென்று நானும் வாதிக்கவில்லையே. யார் நிலத்தில் இன்றைக்குச் சாகுபடியாளர்களாக இருந்துகொண்டிருக்கிறார்களோ அவர்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள் என்று சொல்கிறேன். இல்லையென்று தானே சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சற்று நேரத்திற்கு முன்பு நீங்கள் சொன்னீர்கள். தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் ஏன் குத்தகை கொடுக்கவில்லையென்று எனக்குத் தெரியவில்லை. மழை இல்லையா, ஒரு போகம், இரண்டு போகம் இல்லையா, ஏன் கொடுக்கவில்லையென்று கேட்டீர்கள். அதே சமயத்தில் நிலச்சுவான்தாரர்களுக்குச் சிரமம் இல்லையா, பட்ஜெட் இல்லையா, அவர்கள் பணத்திற்கு எங்கே போவார்கள், அதை எப்படிச் சமாளிப்பது, அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா என்று கேட்டீர்கள். அதைத்தான் திருப்பிக் கேட்கிறோம். நாங்கள் செய்திருக்கிற சட்டம் குத்தகைதாரர்கள், ஏழை விவசாயிகள் பயிரிட்டுக் கொடுக்க வேண்டும். தாங்கள் உழைத்துப் பயிரிட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி விளையாத நேரத்தில் அவர்களால் கொடுக்க முடியவில்லை. அது தர்மம் அல்ல, அதர்மம் என்று தர்மத்தைச் செய்தோம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: ஒரு வருஷம் விளையவில்லையா, இரண்டு வருஷம் விளையவில்லையா, குத்தகை இல்லாமலேயே சாகுபடி செய்ய வேண்டுமென்று சட்டம் செய்யுங்கள், ஆதரிக்கிறேன். விளையவில்லை என்று சொன்னீர்கள். நன்றாக விளைந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது வாதத்திற்காக விளையவில்லையென்று சொன்னால், எப்படி எடுத்துக்கொள்வது? ஆகையினாலே நான் சொல்வதெல்லாம் வேறு ஒன்றுமில்லை. அவர்களுக்கும் அனுகூலம் கிடைக்க வேண்டும். தலைவர் திரு. காமராஜர் அவர்கள் மாயவரத்தில் சொல்லியிருக்கலாம். அவர்கள் பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பிரச்னை கவனிக்கப்பட வேண்டியதாக வாஸ்தவத்தில் இப்படி இருக்கிறது.

4th April 1972]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிரச்னை கவனிக்கப்பட வேண்டியது என்று சொல்கிறார்கள். ஆனால் திரு. காமராஜர் அவர்கள், "எல்லோரும் போராடத் தயாராகுங்கள், நானே தலைமை ஏற்கிறேன், மாயவரம் தாலுகாவில் 25 ஆயிரம் குத்தகைதாரர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் சும்மா பார்த்துக் கொண்டிருந்தால், இந்த சர்க்காரை சும்மா விடக் கூடாது. நானே தலைமை ஏற்று நடத்துகிறேன்" என்று அவ்வளவு தீவிரமாகப் பேசும்போது, நம்முடைய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அவரிடத்தில் 5 நிமிடம் பேசித் தெளிவுகளைப் பெற்றார்களா, அல்லது இவராவது அவருக்குத் தெளியவைத்து சமாதானப்படுத்தினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: நான் உண்மையில் விவாதிக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் அவர்கள் விவாதித்திருக்கலாம் என்று கருதுகிறேன். அவர் நாகரீகமினம் பேசும்போது திரு. காமராஜர் எண்ணம் என்ன என்பதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: திரு. காமராஜர் அவர்கள் மாயவரத்தில் பேசியதை வைத்துக்கொண்டு நான் பேசுவதாக நீங்கள் நினைத்துக்கொள்ள வேண்டாமென்று முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன்: மாண்புமிகு உறுப்பினர் நாளைக்குப் பேச்சைத் தொடரலாம். சபை இத்துடன் கலைந்து நாளை மாலை 4 மணிக்குக் கூடுகிறது.

The House then adjourned.

[4th April 1972

VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

92. Notification issued with G.O. Ms. No. 2680, Public Works, dated the 29th December 1971, in regard to an amendment to the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Rules, 1964. [(Laid on the table of the House under section 17(2) of the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Act, 1962 (Tamil Nadu Act 4 of 1962)].

93. Notification issued with G.O. Ms. No. 3342, Home, dated the 10th December 1971, making the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Rules, 1971. [Laid on the table of the House under section 27(4) of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Act, 1971 (Tamil Nadu Act 37 of 1971).]

94. Order issued with G.O. No. 261, Revenue, dated the 29th January 1972, in regard to exemption from liability to entertainments tax for a further period of three years to all cinema shows of 8 m.m. and 16 m.m. dimension up to and inclusive of the 8th September 1974. [(Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

95. Order issued with G.O.R. No. 139, Revenue, dated the 21st January 1972, in regard to exemption from liability to entertaiments tax due in respect of the film shows organised by the Secretary, Women's Association, Shastrinagar, Adyar on 8th January 1972 at Eros Theatre, Adyar, [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

96. Order issued with G.O.R. No. 36, Revenue, dated the 6th January 1972, in regard to exemption from liability to entertainments tax, in repect of one cinematograph benefit film show organised by the Honorary Secretary, Shree Mahavir Jain Kalyan Sangh on 30th January 1972. [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

97. Order issued with G.O.R. No. 386, Revenue, dated the 18th February 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal,

4th April 1972]

S.I.V.E.T. College, Gowriwakkam on 19th February 1972, at M.R. Theatre, Tambaram. [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

98. Notification issued with Memorandum No. 129603/A.II/71-3, Agriculture, dated the 24th December 1971, in regard to an amendment to the Agriculture Department notification II-1 No. 1304 of 1969, relating to declaration of market area to the Market at Vadaseri in Kanyakumari district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

99. Notification issued with G.O. Ms. No. 450, Revenue, dated the 14th February 1972, in regard to declaration of Manjalar Reservoir Project in Madurai district as an Irrigation work under the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959. [Laid on the table of the House under section 9(3) of the Tamil Nadu Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959 (Tamil Nadu Act 25 of 1959).]

100. Notification issued with G.O. Ms. No. 3312, Agriculture, dated the 23rd December 1971, in regard to regulation of trade in arecanut in Coimbatore district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

101. Notification issued with G.O. Ms. No. 2848, Agriculture, dated the 28th October 1971, in regard to notification issued under section 5(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, relating to declaration of notified market area for Hosur Regulated Market in respect of groundnut and gingelly. [(Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. Reports, Notifications and Other Papers

127. Ninth Report (Fifth Assembly) of the Committee on Estimates, 1971-72 on the Employment and Training which was presented to the Assembly on the 1st April 1972.

[4th April 1972

128. Tenth Report (Fifth Assembly) of the Committee on Estimates, 1971–72 on Labour including Factories which was presented to the Assembly on the 1st April 1972.

129. Eleventh Report (Fifth Assembly) of the Committee on Estimates 1971–72 on the Animal Husbandry which was presented to the Assembly on the 3rd April 1972.

* 130. The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 2 of 1972) as passed by the Assembly.

* 131. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972) as passed by the Assembly.

* 132. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 4 of 1972) as passed by the Assembly.

* 133. The Public Works (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 (L.A. Bill No. 5 of 1972) as passed by the Assembly.

* 134. The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972) as passed by the Assembly.

* 135. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972) as passed by the Assembly.

* 136. The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 3rd April 1972.

APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 354 on page 628)

'தமிழரசு' 1—12—1971 முடிய விற்பனை விவரம்

மாவட்டம் (1)	சந்தாதார் (2)	முகவர் (3)	மொத்தம் (4)
தஞ்சாவூர்	2,820	2,173	4,993
திருச்சி	1,979	2,208	4,187
சேலம்	1,746	1,725	3,471
தர்மபுரி	856	238	1,094
கோவை	2,123	3,428	5,551
வட ஆற்காடு	2,025	1,611	3,636
தென் ஆற்காடு	5,230	1,644	6,874
செங்கற்பட்டு	1,305	550	1,855
மதுரை	2,390	2,592	4,682
இராமநாதபுரம்	1,575	1,012	2,587
திருநெல்வேலி	1,020	1,595	2,615
கன்னியாகுமரி	208	703	911
நீலகிரி	265	160	425
சென்னை	296	6,000	6,296
மொத்தம் ..	23,538	25,639	49,177

மேலே உள்ள பட்டியலில் கண்ட விவரங்களுடன் அனுப்பப்படும் 49,177 இதழ்களுடன், அமைச்சர்கள், சட்டப் பேரவை, சட்ட மேலவை, உறுப்பினர்கள், அரசு செயலாளர்கள் முதலியோர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், வெண்பாப் போட்டியில் பங்கு கொள்வோர்களுக்கும் மற்றும் 'தமிழரசு' இதழில் கதை, கட்டுரை எழுதும் தனிப்பட்டோர்களுக்கும் இலவசமாக சுமார் 1400 இதழ்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. மீதமுள்ள சுமார் 1,400 இதழ்கள். விற்பனைக்காக எல்லா மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றன.

APPENDIX II.

(*Vide* answer to Starred Question No. 359 on page 632)

கபநதி கிராமம், கிராமப்புறச் சுகாதார குடும்பநலத்திட்ட நிலையத்திற்கு அதன் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட மானியங்களின் விவரம் :—

தொடர் எண்	திட்டத்தின் பெயர்.	கிராமப்புற சுகாதார குடும்ப நலத்திட்ட நிலையத்துக்கு வழங்கப்பட்ட ஆண்டிற்கான மானியம்.	
		1970–71	1971–72 8-3-1972 வரையில்.
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
1.	ஆத்தூர் வட்டாரத்தில் மகப்பேறு குழந்தைகள் நல, குடும்பநல சிறப்பு மும்முரத்திட்டம் ..	16,986	21,048
2.	சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் கிராமப்புற குடும்பநலத்திட்ட நிலையங்கள் ஐந்து ..	51,700	25,850
3.	வட்டார குடும்ப நலத்திட்டம் பயிற்சி நிலையம்	1,13,560	56,780
4.	நிர்வாகப் பிரிவு	27,052	1971–72-ல் மூடப்பட்டது.
5.	சுகாதாரக் கல்வியில் பட்டயத் தகுதி படிப்பு	81,328	..
6.	திரைப்படக் காட்சி சாதனங்கள் ..	20,000	..
7.	காந்தி கிராமம் கிராமப்புறச் சுகாதார குடும்பநலத்திட்ட நிலையத்திற்கான வட்டாரக் குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையம் கட்டுதல்	..	2,33,000
8.	காந்தி கிராமம் ஒளவை கிராமப்புற மருத்துவப்பணி நிலையத்தின் (கஸ்தூர்பா மருத்துவமனை) நிலையத்தில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல்	..	55,000

4th April 1972]

தொடர் எண்.	திட்டத்தின் பெயர்.	கிராமப்புற சுகாதார குடும்ப நலத்திட்ட நிலையத்துக்கு வழங்கப்பட்ட ஆண்டிற்கான மானியம்.	
		1970–71.	1971–72 8-3-1972 வரையில்.
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
9.	காந்தி கிராமம் ஒளவை கிராமப்புற மருத்துவப்பணி நிலையத்தின் (கஸ்தூர்பா மருத்துவமனை) மகளிர் குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான 20 படுக்கைகளுக்கு பராமரிப்பு மானியம்	23,500	47,000
10.	காந்தி கிராமம் ஒளவை கிராமப்புற மருத்துவப்பணி நிலையத்தால் (கஸ்தூர்பா மருத்துவமனை) நடத்தப்படுகிற ஒரு முதன்மை நிலையத்துக்கும் இரண்டு துணை நிலையங்களுக்கும் மானியம்	16,830	16,828
	மொத்தம் ..	3,50,956	4,55,506

APPENDIX III.

[*Vide* item V (1) on page 645.]

L.A. Bill No. 2 of 1972.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Betting Tax (Amendment) Act, 1972.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

[4th April 1972

2. *Insertion of new section 7-A in Tamil Nadu Act XX of 1935.*—After section 7 of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935), the following section shall be inserted, namely :—

" 7-A. *Rounding off of tax or other sum.*—The amount of tax or any other sum payable, and the amount of refund due, under the provisions of this Act shall be rounded off to the nearest rupee and, for this purpose, where such amount contains a part of a rupee consisting of paise, then, if such part is fifty paise or more, it shall be increased to one rupee and if such part is less than fifty paise, it shall be ignored. ".

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date : 3rd April 1972.

K. A. MATHIALAGAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

APPENDIX IV.

[*Vide* item V (2) on page 647.]

L.A. Bill No. 3 of 1972.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Act, 1972.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section 7-B in Tamil Nadu Act VI of 1939.*—In the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939), after section 7-A, the following section shall be inserted, namely :—

" 7-B *Rounding off of tax, penalty, etc.*—The amount of tax, fee, penalty, fine or any other sum payable, and the amount

4th April 1972]

of refund due, under the provisions of this Act shall be rounded off to the nearest rupee and, for this purpose, where such amount contains a part of a rupee consisting of paise, then, if such part is fifty paise or more, it shall be increased to one rupee and if such part is less than fifty paise, it shall be ignored. ".

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date : 3rd April 1972.

K. A. MATHIALAGAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

APPENDIX V.

[*Vide* item V (3) on page 649.]

L.A. Bill No. 4 of 1972.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act, 1959.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Amendment) Act, 1972.

(2) Clauses (*a*) and (*b*) of section 2 shall be deemed to have come into force on the 24th February, 1972 and clause (*d*) of section 2 shall be deemed to have come into force on the 22nd February, 1972.

2. *Amendment of First Schedule to Tamil Nadu Act 1 of 1959.*—In the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959),—

(*a*) for item 3-A and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

" 3-A	Batteries	Do.	15
3-B	Dry Cells	Do.	15 ";

(*b*) in item 41, in the entry in column (2), after the words " All electrical goods ", the brackets and words " (other than those specifically mentioned in this Schedule) " shall be inserted;

(*c*) for item 69 and the entries relating thereto, the following item and entries shall be substituted, namely :—

" 69	Coconut	Do.	5
69-A	Copra	Do.	5 ";

(*d*) for item 70 and the entries relating thereto, the following item and entries shall be substituted namely :—

70 (*a*)	All kinds of foreign liquors that is to say, wines, spirits and beer imported into Indian from foreign countries and dealt with under the Indian Tariff Act, 1934 (Central Act XXXII of 1934) or under any other law for the time being in force relating to the duties of customs on goods imported into India.	At the point of first sale in the State.	24
(*b*)	All kinds of alcoholic liquors for human consumption (other than foreign liquors falling under sub item (*a*), toddy and arrack).	Do.	1^2
(*c*)	Arrack.	Do.	6^2

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date : 3rd April 1972.

K. A. MATHIALAGAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 5th April 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITTARASU) in the Chair.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF THIRU MUHAMMAD ISMAIL, M.P.

MR. CHAIRMAN : I have to inform the House, with deep regret of the demise of Thiru M. Muhammad Ismail, M.P. I now call upon the Hon. the Chief Minister to move the Condolence Resolution.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சென்னை மாநகர முஸ்லிம் நகர்ப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு, 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவராகவும் இருந்த திரு. 'காய்தே மில்லத்' முகம்மது இஸ்மாயில், எம்.பி. அவர்கள் 5—4—1972-ஆம் நாளன்று அதிகாலை 12-55 மணிக்கு மறைந்துவிட்டதைக் குறித்து இம்மேலவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது".

தலைவர் அவர்களே, இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழியக்கூடிய ஒரு வேதனையான சூழ்நிலை ஏற்பட்டமை குறித்து இந்த மன்றம் மாத்திரமல்ல, தமிழகம் பெரிதும் கலங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கின்றேன். மறைந்த பெரியவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தலைவராக மாத்திரமல்லாமல், இந்தியப் பெருநாட்டினுடைய பெருமைக்குரிய

[டாக்டர் மு. கருணாநிதி] [5th April 1972

தலைவர்களிலே ஒருவராகவும் விளங்கியவர்கள் ஆவார்கள். அடக்கமும், அமைதியான தன்மையும், எளிய சுபாவமும், ஏழை மக்களுக்காகப் பாடுபட வேண்டும் என்கின்ற ஏற்றமிகு எண்ணமும் கொண்ட ஏந்தல் மறைந்த தலைவர் காய்தே மில்லத் இஸ்மாயில் அவர்கள். அவர்கள் பல்லாண்டு காலம் சட்ட மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், நாட்டு மக்களுக்காகத் தன்னுடைய கம்பீரமான குரலை ஒலித்துக் காட்டியவர்கள் ஆவார்கள். இந்தியாவினுடைய தேசிய மொழி எதுவாக இருக்கவேண்டும் என்கின்ற சர்ச்சை எழுந்தபோது, வளமும் செழுமையும் கொண்ட என் தாய்த் தமிழ் மொழியே தேசிய மொழியாக இருக்கலாம் என்ற ஒரு குரலை எழுப்பிய பெருமைக்குரியவர் மறைந்த காய்தே மில்லத் அவர்கள். அவர்கள் முஸ்லிம் லீக்கினுடைய தலைவர் என்றாலும், எதிர்க் கட்சித் தலைவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றவர்கள் ஆவார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உத்தமர் காந்தியடிகளுடைய தலைமையிலே இருந்து, தன்னுடைய கல்லூரிப் படிப்பையும் பொருட்படுத்தாமல் போர்க்களத்திலே இந்திய விடுதலைக்காகக் குதித்த பெருமகன் மறைந்த பெரியவர், காய்தே மில்லத் அவர்கள். 1936-ஆம் ஆண்டிற்குப் பிறகு அவர்கள் முஸ்லிம் லீக் கட்சியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, பாகிஸ்தான் பிரிந்த பிறகுகூட இந்தியாவிலே உள்ள முஸ்லிம் மக்களுடைய நலன்களைக் காப்பதிலே அக்கறை கொண்டு, அதே நேரத்தில் இந்தியாவுக்கு அன்னியப் பகைவர்களால், அவர்கள் சீன நாட்டுக்காரர்களாக இருந்தாலும், அல்லது பாகிஸ்தான்காரர்களாக இருந்தாலும், யார் வாயிலாக எதிர்ப்போ, ஆக்கிரமிப்போ வந்தாலும், அப்பொழுதெல்லாம் இந்தியக் குடிமகன் என்கின்ற அந்த உணர்வோடு அவர்களையெல்லாம் எதிர்த்து நின்ற மாவீரராகவும் மறைந்த காய்தே மில்லத் அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் மரணத் தருவாயிலேகூட எவ்வளவு அடக்க உணர்ச்சியைக் காட்டினார்கள், நன்றி உணர்வினைக் காட்டினார்கள் என்பதையெல்லாம் இன்று காலையிலே பேரவையிலே நடைபெற்ற இரங்கல் தீர்மானத்தின் அடிப்படையிலே ஆற்றிய உரைகளில் தலைவர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட பெரியவர், எளிமையான பண்பு படைத்தவர், எவரையும் மதிக்கின்ற சுபாவம் கொண்டவர். இந்திய நாட்டுத் தலைவர்களிலே ஒரு பெரும் சிறப்பைத் தன்னகத்தே கொண்டவர் இன்று நம்மிடையே இல்லை. தமிழ் நாட்டு மக்களும், இந்திய நாட்டு மக்களும் வருந்துகின்ற அளவுக்கு அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்களென்றாலும், அவர்கள் வகுத்த கொள்கைகள், நாடு வாழ நலிவு இர அவர்கள் பட்ட பாடுகள் இவைகள் எல்லாம் என்றென்றும் நம்முடைய நினைவிலே தங்கிடவும், நெஞ்சத்திலே பதிந்திடவும், அவர்கள் விட்டுச் சென்ற நல்ல கொள்கைகளையெல்லாம் ஏற்று நடத்திடக்கூடிய அந்தத் தனியாத ஆர்வத்தை நாம் அனைவரும் பெற்றிடவும் வேண்டும் என இந்த

5th April 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

கோக்கிலே சூளுரைத்து மறைந்த பெரியவருக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலும், தமிழகத்தின் சார்பிலும் இரங்கலைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், அவர்களுடைய இல்லத்தார், உற்றார் உறவினர், அவர்களை உயிரென நேசித்த நண்பர்கள், அவர்களுடைய கட்சியினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை நான் மீண்டும் ஒருமுறை இங்கே தெரிவித்து இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, முஸ்லிம் லீக் தலைவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். என்னுடைய தலைவர் என்னை விட்டுப் பிரிந்து விட்டார். தமிழகத்தின் ஒரு பெருந்தலைவர் தமிழர்களை விட்டுப் பிரிந்துவிட்டார். இந்திய தேசத்தின் மாபெரும் ஒரு தலைவர் இந்திய மக்களை ஆழாக் கவலையில் ஆழ்த்தி விட்டுச் சென்று விட்டார். அவர்களுடைய சிறப்புக்கள் பலவற்றைப் பற்றி முதல்வர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முதல்வரவர்கள் அவர்களிடத்திலே பெரும் மதிப்பு வைத்திருந்தார்கள். அதே போன்று அவர்கள் முதல்வரிடத்திலே பெரும் அன்பு வைத்திருந்தார்கள். முதல்வர் கடைசியாக அவரை சந்தித்துப் பேசியபோது இரண்டே வார்த்தைகள்தான் அவர்கள் பேச முடிந்தது. தங்களுக்குக் காட்டுவதெல்லாம் என்னுடைய நன்றி. இதுதான் அவர்கள் முதல்வரிடத்தில் கடைசியாகப் பேசிய வார்த்தைகள். அவ்வளவு அன்போடு அவர்கள் வாழ்ந்தார்கள். இஸ்லாமிய சமுதாயம் நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு சின்ன சின்ன மாகிச் சீர்குலைந்திருந்தது. அதை ஒற்றுமைப்படுத்தி, சேகரித்து, எவ்வளவோ இன்னல்களை எதிர்த்துப் போராடி முஸ்லீம்களுக்கு ஒரு கவுரவமான வாழ்வு இந்த நாட்டில் கிடைக்க வழி செய்த பெருமை நமது காய்தே மில்லத் அவர்களைச் சாரும். அவருடைய சிறப்புகளைச் சொல்ல வேண்டுமென்றால், நேரம் போதாது. ஆனால் ஒன்றுமட்டும் சொல்வேன். அவர் வாழ்க்கையில் நேர்மையாக வாழ்ந்தவர். பொது வாழ்விலும், தன் சொந்த வாழ்விலும் எங்களுக்கெல்லாம் அடிக்கடி சொல்வார்: "எப்போதும் நேர்மையான வழியைக் கடைப்பிடியுங்கள், பொது வாழ்விலாகட்டும், தனி வாழ்விலாகட்டும். உதாரணத்துக்குச் சொல்கிறேன். நீங்கள் கார் ஓட்டுகின்றீர்கள். காரில் செல்லும்போது, போலீஸ்காரர் இருந்தால், அவரைச் சுற்றிச் செல்லவேண்டிய கட்டம் இருந்தால், சுற்றிச் செல்வீர்கள், இல்லாவிட்டால் குறுக்கே சென்றுவிடுவீர்கள். போலீஸ் காரர் இல்லாவிட்டாலும், போலீஸ்காரர் இருக்கும்போது எப்படிச் சுற்றிச் செல்வோமோ அதுபோல் சுற்றித்தான் செல்ல வேண்டும். அது மட்டுமல்ல, வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் நீங்கள் அப்படித்தான் நடக்க வேண்டு" மென்று எங்களுக்கெல்லாம் உபதேசம் செய்துவந்தவர்கள். அவரும் அதே அடிப்படையில் வாழ்க்கையை நடத்திச் சென்றார். எந்த ஒரு பிரச்னை வந்தா

4-10 p.m.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [5th April 1972

லும், அவர் யோசிப்பார். அதற்குத் தீர்வு காண்பதற்கு யோசிப்பார். சரியான தீர்வு காணவில்லையென்றால், நபிகள் நாயகம் ரசூல் ஸல்லல்லாஹூ அலைவஸல்லம் அவர்கள் வழியில் எந்த மாதிரியான சம்பவம் நேர்ந்தாலும், அதற்குத் தீர்வு கண்டு விடுவார். அவருடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து வழிகளைக் கண்டு பிடித்து, அந்த வழிகளை அப்படியே பின்பற்றி, அந்தப் பிரச்னையைத் தீர்க்க முற்படுவார். அவர் வாழ்ந்த அடிப்படையிலே வாழ்ந்த, ஒரு தூய்மையான உத்தமர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். உண்மையிலேயே நாம் ஈடுசெய்ய முடியாத ஒரு பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கின்றோம். அலி இக்பால் என்ற கவிஞர் உருதுவில் பாடினார். ஆயிரமாயிரம் ஆண்டுகள் நர்கீஸ் என்ற மலர் தன்னிடத்தில் மணம் இல்லையே, நல்ல மணம் இல்லையே என்று கண்ணீர் வடிக்குமாம், ஆனால் மெக்கா அடைந்தவுடன் பூங்காவனத்தில் நல்ல மணம் உள்ள மலர் மலருமாம். அதுபோன்று, முஸ்லிம் சமுதாயத்தில், ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்வை உயர்த்துவதற்கு நறுமணமுள்ள நர்கீஸ் மலர் போல் நமக்கென்றிருந்த ஒரு தலைவரைத் திடீரென்று ஆண்டவன் அழைத்துக் கொண்டார். எல்லாம் வல்ல இறைவன் அவருடைய ஆத்ம சாந்திக்கு அருள் புரியவேண்டுமென்று மனப்பூர்வமாக நான் பிரார்த்தித்து, நம் சபையின் சார்பிலும், முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலும் நான் அவருக்கு இரங்கல் காட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் இந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து சில வார்த்தைகள் மிகவும் கனத்த மனதுடன் பேசுகின்றேன். அநேகமாக இந்தச் சபையில் எல்லோரைக் காட்டிலும் அதிகமான வருஷங்கள் அவரைத் தெரிந்து கொண்டவன் நான் என்று நினைக்கின்றேன். 1946 மார்ச் மாதம் முதன் முதல் சட்டசபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, 212 மெம்பர்கள் உள்ள நமது சட்ட சபையில், 12 அங்கத்தினர்கள் கொண்ட எதிர்க் கட்சியின் தலைவராக அவர் இருந்தார். வேறு எதிர்க் கட்சியே இல்லை. இரண்டு கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். எதிர்க் கட்சியை எவ்வளவு கண்ணியமாக அவர் பெருந்தன்மையோடு நடத்தி வந்தார் என்று நினைக்கும்போது, அவரிடம் பல விஷயங்கள் நாம் கற்றுக்கொண்டோம் என்று சொன்னால், அது மிகையாகாது. எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சில சமயம் அரசாங்கத்தின் கொள்கைகள் பிடிக்காமல் வெளிநடப்புச் செய்தாலும், அதில் ஒரு உரிமையுடன் அந்த வெளிநடப்பு இருக்கும். வெளியே சென்று, 5 நிமிடத்தில் திரும்பிவந்து, புன்னகை மலர வந்து உட்காருவார். மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவர், ஜெண்டில்மேன் என்று சொல்லத்தக்க விதத்தில் அவர் நடந்துகொண்டார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். என்றும் அவருடைய முகத்தில் கோபத்தைப்

5th April 1972] [திரு. கே. ராஜாராம்]

பார்த்திருக்கவே முடியாது. எவருடனும் அவ்வளவு சுமுகமாகப் பழகுவார். அதற்குப் பின்னால், 1952-ல் ராஜாஜி அவர்களுடைய அமைச்சரவை ஏற்பட்ட பின், முகம்மத் இஸ்மாயிலுடன் அடிக்கடி தொடர்புகொண்டு, அவரிடம் போய்ப் பேசி வருவதுண்டு. ராஜாஜி அவர்களுக்கும் முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கும் இடையில் பேசுவதற்காக அடிக்கடி நான் அவரைச் சந்தித்து வருவதுண்டு. எங்கள் மாவட்டத்தில் திண்டுக்கல்லில் அவர் சம்பந்தம் செய்து கொண்டதால், பல வகையில் உரிமையோடு என்னிடம் பாசத்துடன் பேசுவார். என்பேரில் அளவற்ற பிரியம் வைத்திருந்தார். திரு. வகாப் அவர்களை 2 தினங்களுக்குமுன் சந்தித்துப் பேசும்போது, அழாத குறையாக இருவரும் பேசிக் கொண்டோம். ஏனென்றால், முஸ்லிம் லீக் கட்சி ஏற்பட்டு, நாடு பிரிந்தபோது, மிகக் கோபாவேசத்துடன் அந்தக் கட்சியைத் தாக்கிக்கொண்டிருந்த காலம் அது. சட்டசபையிலும் சரி, வெளியிலும் சரி, அதை ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் என்று யாராவது சொல்லிவிட்டால், கோபமே வராத அவருக்கு சொம்ப ஆத்திரம் வரும். அந்தக் கட்சி ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் அல்ல, அது ஒரு தேசிய ஸ்தாபனம், முஸ்லிம்களின் தேசிய உணர்ச்சியைச் சிதற விடாமல் ஒன்றுபடுத்தி, அவர்கள் மத உணர்ச்சியோடு தேசிய உணர்ச்சியும் கொள்ள வேண்டும், அவர்களுடைய தேச பக்தியை அதிகப்படுத்துவதற்குத் தான் நாங்கள் அந்த ஸ்தாபனத்தை வைத்திருக்கிறோம், அது ஒரு வகுப்புவாத ஸ்தாபனமல்ல என்று அவர் வெகு அழுத்தமாகச் சட்டசபையில் வாதிட்டுப் பேசுவார், வெளியிலும் பேசுவார். முதலமைச்சர் குறிப்பிட்டபடி, அதுதான் மிக அழுத்தமாக என் மனதில் பட்டது. முஸ்லிம் லீக் என்பதுதான் இந்தியாவிலிருந்து, பாகிஸ்தானைப் பிரித்த ஸ்தாபனம் என்பதைத் தவிர, அப்படி ஏதாவது சண்டை என்று வருமேயானால், மற்ற இந்துக்களை விட தாங்கள் முன்னால் நின்று பாகிஸ்தானோடு போராடுவோம், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கும் பாகிஸ்தானுக்கும் ஒரு உறவும் இடையாது, மற்ற இந்துக்களைவிட முன்னால் நின்று இந்திய முஸ்லிம் லீகைச் சார்ந்தவர்கள் ரத்தம் சிந்துவதற்குத் தயாராய் இருக்கிறோம் என்று சொன்ன அந்த வார்த்தைகள் இன்னும் என் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கின்றன. அவர், தான் ஒரு இந்தியர் என்பதோடு, முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, தான் ஒரு தமிழர் என்பதை எடுத்துக்காட்டி, தமிழ்ப் பிரச்சாரத்துக்கு அவர் ஒரு உணர்ச்சி கொடுத்து, மகிழ்ச்சியோடு உழைத்துவந்தார். திருநெல்வேலியில் பிறந்து மாணவராக இருந்தபோதே, தேசாபிமானத்துடன் காங்கிரசில் சேர்ந்து, தன்னுடைய படிப்பைக்கூட தியாகம் பண்ணினார். அவர் மாணவராகவேயிருந்து மேலும் மேலும் படித்திருக்கலாம். அவருடைய வாழ்க்கைத் தரணை பிறந்த குடும்பம், தமிழ்நாட்டிலேயே அநேகமாக ஒரு மிக உயர்ந்த குடும்பம், தமிழ்நாட்டிலே அவ்வளவு பெரிய குடும்பம் இருக்காது, அந்தக் காலத்திலே பெரிய கோடீச்வரக்

[திரு. கே. ராஜாராம்] [5th April 1972

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதனாலேயே அவர் தேசத்தில் பல பெரியவர்களுடைய பணக்காரர்களுடைய மதிப்புக்குப் பாத்திரமானார். இன்னும் தமிழ் நாட்டு மக்களுடைய குறிப்பாக முஸ்லிம் மக்களுடைய அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாகயிருந்த அவர் நம்மைவிட்டு மறைந்துவிட்டார். அவர் இருந்தால் இன்னும் சில காலம் தமிழ்நாட்டுக்கு நன்மையாக இருக்கும். அவருடைய ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் அதே வழியில் அவரைப் பின் பற்றி, அவருடைய வழியில் செல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் அப்படிச் செல்ல வேண்டுமென்று நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இன்று அவருடைய மறைவு இந்தத் தமிழ்நாட்டுக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு. ஈடு செய்ய முடியாது என்றே நினைக்கிறேன். அவருடைய ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன். அவருடைய குடும்பத்தாருக்கும் எனது அனுதாபத்தையும் என்னுடைய கட்சியின் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : I fully associate myself with the sentiments expressed by the Hon. the Chief Minister and the Leader of the Opposition Party. Thiru "Quaide Millat" Muhammad Ismail was the President of the Indian Union Muslim League, since 1948 and Tamil Nadu State Muslim League since 1945. He was a Member of the Tamil Nadu Lgislative Assembly and Leader of the Opposition during 1946–52. He was a Member of the Constituent Assembly during 1948–50, a Member of the Rajya Sabha during 1952–58, and has been a Member of the Lok Sabha since 1962.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased and pass the Resolution unanimously.

The Resolution was passed *nem. con.*, all the hon. Members standing in silence for a couple of minutes.

MR. CHAIRMAN : As a mark of respect to the late Thiru M. Muhammad Ismail, the House will now adjourn for the day and meet again at 10 a.m. to-morrow.

The House then adjourned.

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Thursday, the 6th April 1972.

Th House met in the Council Chamber, Fort St. George, at ten of the Clock, Mr. Chairman (The Hon. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Manufacture of Matches.

*375 Q.—THIRU M. AIYASWAMY (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government Industrial Units have given up the manufacture of Matches in this State ; and

(*b*) if so, the reasons therefor ?

தீக்குச்சி தயாரிப்பு.

திரு. எம்.அய்யாசாமி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் அரசு தொழிற்சாலைப் பிரிவுகள் தீக்குச்சி தயாரிப்பதை நிறுத்திவிட்டனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொடக்கத்திலிருந்தே, இத் தீப்பெட்டித் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்கி வந்தது.

Coral Reefs near Mandapam.

*376 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether any permission to cut and remove the coral reefs near Mandapam has been granted to any private persons ; and

(*b*) if so, the details thereof ?

மண்டபத்திற்கருகே உள்ள பவளக் கொடிகள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மண்டபத்திற்கருகே உள்ள பவளக்கொடிகளை வெட்டி அவற்றை அப்புறப்படுத்த தனியார் எவருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : ஆம். தங்கச்சிமடம் வளைகுடாவின் முன்பாக, மீன்பிடிக்கும் படகுகள், பிடித்த மீன்களை கரையில் கொண்டு சேர்ப்பதற்கு வசதி ஏற்படுத்தும் முக்கிய காரணத்தை முன்னிட்டு, மீன் துறையினரால் வரையறுக்கப்பட்ட ஒருமிகச் சிறிய இடத்தி லுள்ள பவளப்பாறைகளை வெட்டியெடுத்துச் செல்ல, இண்டஸ்டிரியல் கெமிக்கல்ஸ் லிமிடெட், தாழையூத்து என்னும் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் லிமிடெட் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்திலுள்ள தலைவி, வாலை, முல்லைத் தீவுகளில் 1,549·84 ஏக்கர் பரப்பளவிற்கு பவழச் சுண்ணாம்பு கற்கள் வெட்டி எடுக்க கொடுக்கப்பட்ட சுரங்க குத்தகை மேலும் ஐந்து வருடங்களுக்கு 1—9—1969 முதல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தனியார்கள் வேறு யாருக்கும் மண்டபத்திற்கு அருகில் பவழப்பாறைகளை வெட்டி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, may I know whether the opinion of the State Geologist in the matter of cutting coral reefs has been obtained ? May I also know whether there is any danger to the shore being eroded by such coral reefs being cut on a large scale ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது 1964-ல் கொடுக்கப்பட்டிருக்கிற அனுமதி. பின்னாலே புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பவளக் கற்கள் கடலுக்குள்ளாக இருந்தால் பரவாயில்லை. கரைகளில் இருந்தால் ஆபத்து வரலாம் என்பதைப்பற்றிப் பரிசீலிப்பதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டு அந்தக் குழுவினுடைய அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் துறைமுகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நம்முடைய அரசாங்கம் கலந்தாலோசித்து வருகிறது. விரைவிலே எந்தெந்தப் பகுதிகளில் இந்தப் பவளக் கற்கள் எடுக்கக் கூடாது என்று உத்தரவிடலாம் எனபதைப்பற்றி முடிவெடுப்போம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கேள்வியில் "பவளக் கொடிகளை வெட்டி அப்புறப்படுத்த" என்று இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பவளப்பாறை என பதில் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

6th April 1972]

மாண்புமிகு திரு செ. மாதவன் : பவளப் பாறையில் தான். அது உண்மையான பவளம் அல்ல. சுண்ணும்புக் கற்களிலே ஒரு விதம். அதிகமான சுண்ணும்புச் சத்துள்ள பவளச் சுண்ணும்புக் கற்கள் என்பதுதான் அது.

Tamil Nadu House at Delhi.

* 363 Q.—THIRU K.S. MANI (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government for the expansion of Tamil Nadu House at Delhi ; and

(*b*) if so, the estimated expenditure therefor ?

தமிழ்நாடு இல்லம், டில்லி.

திரு கே. எஸ்.மணி (திரு. வே. தங்கபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) டெல்லியிலுள்ள தமிழக இல்லத்தை (Tamil Nadu House) விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தை விரிவுபடுத்தும் பொருட்டு பல-மாடிக் கட்டிடம் கட்டுவதற்கான வரைப்படங்களும் மதிப்பீடுகளும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு இல்லம். இருக்கிற இடம் நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமா அல்லது மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இடம் மத்திய அரசுக்குச் சொந்த மானது. கட்டிடம் நம்முடையது.

திரு ஜி. சுவாமிநாதன் : இந்த இடத்தை வாங்குவதற்கான ஆலோசனை ஏதாவது இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். அது மட்டு மல்லாமல் , அது நல்லமுறையில் நடந்து வந்தாலும், அங்கு செல்லுகிற வர்களுக்கு உணவு அளிக்கும்போது, "பசுமதி" என்ற அரிசி போடுகிறார் கள். அதை வடநாட்டிலே உள்ள நல்ல அரிசி என்ற சொல்லுகிறார்கள். ஆனால் அந்த அரிசி ஒரு வீச்சு வீசுவதால் அங்கு தங்குபவர்களுக்குச் சாப்பிட முடியாத நிலை ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு கேள்விகளைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். அதில் இப்பொழுது 3,500 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நாம் லீஸ் கொடுத்து வருகிறோம். அந்த இடத்தைத் தமிழ்க அரசாங்கம் விலைக்கு வாங்குவதற்காகக் கேட்டபோது மறுத்து விட்டார்கள். அதைப் போலவே மற்ற மற்ற மாநிலங்களுடைய இடங்களும் லீசுக்குத்தான் அளிக்கப்படுகின்றன. ஆகவே நமக்குத் தர இயலாது என்று கூறி விட்டார்கள்.

அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். பசுமதி அரிசி போடுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது அங்கே பல சலுகைகளின் காரணமாக தமிழக இல்லத்தில் வருவாயைவிட செலவு கொஞ்சம் அதிகமாக ஆகி யிருக்கிறது. அதையெல்லாம் குறைக்க வேண்டுமென்று, நான் அதன் வரவு-செலவுக் கணக்குகளைப் பார்த்துவிட்டுக் கூறியிருக்கிறேன். "பசுமதி" யைக் குறைப்பதனால் இன்னும் கொஞ்சம் மிச்சம்தான் ஏற்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஏற்றுக் கொள்ளு வதற்கு எந்தத் தடையும் இல்லை.

Expenditure incurred during the stay of the President of India at Courtallam.

* 364 Q.—THIRU K. S. MANI (on behalf of THIRU S. S. THENNARASU) : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the total expenditure incurred during the stay of the President of India at Courtallam in June, 1971 ; and

(*b*) the share of Tamil Nadu in the expenditure ?

குடியரசுத் தலைவர் குற்றாலத்தில் தங்கிய காலத்தில் ஏற்பட்ட செலவு.

திரு. கே. எஸ். மணி (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஜூன் மாதத்தில் குடியரசுத் தலைவர் குற்றாலத்தில் தங்கிய காலத்தில் ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு?

(இ) அதில் தமிழக அரசின் பங்கு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ரூ. 49,153·53 செலவாயிற்று.

(இ) இச் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய காலத்தில் சோஷலிச ராஜாங்கத்திலே ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ரூபாய் ஐந்தாயிரத்துக்கும் மேல் செலவாகியிருக்கிறதே, இவ்வளவு செலவு

அவர்கள் செய்ததைத் தமிழக அரசாங்கம் முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்தானு என்பதை அரசு ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தச் செலவு தனியாக குடியரசுத் தலைவருக்கு மட்டுமல்ல, அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படை யொடு வருகின்ற காரணத்தினாலே செலவு அதிகமாக இருக்கின்றது.

Raffle Tickets.

* 365 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that the Income-tax Department Officials of Central Government inspected the Government Treasury at Madras and seized the records relating to the distribution of prizes for the Tamil Nadu Raffle Tickets ; and

(*b*) if so, the details thereof ?

பரிசுச் சீட்டு.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பரிசு சீட்டுகளுக்கு பரிசுகள் வழங்கியது சம்பந்தமான தஸ்தா வேஜுகளை சென்னையிலுள்ள சர்க்கார் கருவூலத்தில் மத்திய சர்க்காரின் வருமான வரி இலாகா அதிகாரிகள் சோதனை நடத்திக் கைப்பற்றி எடுத்துச் சென்றது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Small Savings.

* 366 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether this State has reached the target fixed for small savings during the year 1970–71 ;

(*b*) if not, the reasons for the shortage ; and

(*c*) the steps proposed to be taken by the Government to mobilise more small savings during the current financial year ?

சிறுசேமிப்பு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970–71இல் சிறுசேமிப்பு குறித்த குறிக்கோள் அளவை இம் மாநிலம் எய்துள்ளதா?

(இ) இல்லையெனில், குறிக்கோளளவை எய்தாததற்கான காரணங் கள் யாவை?

(உ) நடப்பு நிதியாண்டில் அதிக அளவில் சிறுசேமிப்புக்கு நிதி திரட்ட அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) 1970–71 ஆம் ஆண்டில் சிறு சேமிப்புக்கான இம்மாநிலத்தின் மொத்த வசூல் ரூபாய் 42·29 இலட்சம், நிகர வசூல் ரூபாய் 529 இலட்சம்; 1970–71 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள் அளவாகிய ரூபாய் 850 இலட்சத்திலே இது 62 சதவீதமாகும்.

(இ) பெருமளவில் பணம் திரும்ப வாங்கிக் கொள்ளப்பட்டதால் இக்குறைவு ஏற்பட்டது.

(உ) எனைய மாநிலங்களில் தலைமை அலுவலகங்களையுடைய நிறு வனங்களிடமிருந்து சிறுசேமிப்பு வசூலுக்காக முதலீட்டைப் பெறுவது போன்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட் டங்களில் முன்னதாகவே, அதாவது அக்டோபர் திங்களிலிருந்தே சிறப்பு இயக்கங்களே நடத்த இந்த ஆண்டில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறு சேமிப்பு இயக்கத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமெனக்கோரி அவர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1970–71 ஆம் ஆண்டுக்கு இந்திய மாநிலத்திலே 188 கோடி ரூபாய் அளவிலே மாநிலங் கள் எல்லாம் திரட்ட வேண்டுமென்றும் அதிலே தமிழக மாநிலம் சரியான அளவிலே திரட்டவில்லை என்று குற்றசாட்டு கூறப்பட்டிருக்கிறதே, அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அறிந்தார்கள் என்றால், $4\frac{1}{2}$ சதவீதத் திலிருந்து $5\frac{1}{2}$ சதவீதம்தான் வட்டி கொடுக்கப்படுகிறது. வங்கியிலே 8 சதவீதம் கொடுக்கிறபோது, இதிலே யாரும் போடமாட்டார்கள் என்ற அளவிலே இந்த வட்டி வீதத்தையாவது உயர்த்தும்படி மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்த தமிழக அரசு முயலுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபற்றி அன்றைக்கே விரிவாக விளக்கியிருக்கிறேன். இந்த சிறு சேமிப்புத் திட்டம் கூட மத்திய அரசு அளவிலே இல்லாமல் மாநில அரசு அளவிலே வர வேண்டுமென்ற நம்முடைய எண்ணத்தை அன்றைய தினம் வெளியிட்டிருக்கிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு என்பதன் பெயரால் புதிதாகச் சேமிக்கப்படாதபடி முந்தைய கணக்கிலே இருக்கக் கூடிய பணம் பெருவாரியாக இந்தக் கணக்குக்கு மாற்றப்படுகிறது என்பதை அரசு அறியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதை ஊக்குவிக்காதபடி புதிதாக இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவதைத் தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்திரவிடுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, குறைந்த அளவு வட்டி வீதம் கொடுத்துவிட்டு கட்டாயமாகப் பணம் கட்ட வேண்டுமென்று பல இடங்களில் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அந்த நிர்ப்பந்தத்தைக் குறைப்பதற்கு ஏதேனும் நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிர்ப்பந்தத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். மாநில அரசு அதிகமாக சிறுசேமிப்பு சேர்க்கவில்லை என்று மத்திய அரசு கோபித்துக்கொண்டதா என்று கேட்கிறார்கள். இதில் இந்த இரண்டுக்கும் இடையிலே ஒரு சம நிலையில் நாம் நடக்க வேண்டியிருக்கிறது.

Pensioners

***367 *Q*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether there is any proposal to implement the recommendation of the Second Tamil Nadu Pay Commission in regard to the payment of Dearness Allowance to the pensioners of the State ard;

(*b*) if so, from when ?

ஓய்வூதியம் பெறுபவர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அக விலைப்படி வழங்குவது குறித்த இரண்டாவது தமிழ் நாடு சம்பள ஆணைக்குழுவின் பரிவுரையைச் செயல்படுத்துவது குறித்த செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது முதல் இது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பணியில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் அகவிலைப்படியில் பாதி அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படலாமென்று இரண்டாவது தமிழ் நாடு சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்தது. பணியில் உள்ள தனது பணியாளர்களுக்குக் கூடுதல் அகவிலைப்படியை அனுமதிக்கும் பொழுதுதான், அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப் படியை அனுமதிக்கும் வினை எழும்.

(இ) இவ்வினை எழவில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு என்ன அகவிலைப்படி கொடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அகவிலைப்படி ஓய்வு பெற்ற தனியார் ஆசிரியர்—பென்ஷன் தாரர்களுக்கும் உண்டா, அதை விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை விஸ்தரிக்கும்போது ஆசிரியர்களும் அதில் சேருவார்கள். இப்பொழுது எவ்வளவு கொடுக்கப் படுகிறது என்கின்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. காட்டேர் கோபால் : அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு அளித்திட அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் மூலம் இந்த மன்றத்திற்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் அரசு ஊழியர்களுடைய மாநாடு ஒன்று சென்னையிலே நடைபெற இருக்கிறது. அதிலே நான் கலந்துகொள்வதற்கு முன் அந்த அரசு ஊழியர்கள் எல்லாம் என்னைச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இது பற்றி நான் ஏதாவது அறிவிக்க வேண்டியிருக்கும். அப்படி அறிவித் தால், நாளைய தினம் மன்றத்திற்கு அதைத் தெரிவிப்பேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : முக்கியமான அறிவிப்பு வெளியிலே அறிவிக்கப்படுவதைவிட இம்மன்றத்திலே அதை அறிவிப்பது நன்றாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அந்த அரசு ஊழியர்களின் பிரதிநிதிகளோடு சந்திப்பது இந்த மன்றத்திலே இயலாத காரியம் என்பதற்காக நான் சொன்னேன். மீறி அங்கே அறிவித்து விட்டாலும் மன்றத்திற்கு நாளைய தினம் அறிவிப்பேன்.

மிஸ்டர் சேர்மன் : டிரஷரி பென்ச் பக்கமுள்ள உறுப்பினர்கள் இங்கே சரியாக வருவதில்லை. இதை சர்க்கார் கொரடா கொஞ்சம் கவனிக்க வேண்டும். மூன்று மணி நேரம் கூட "சாக்ரிஃபைஸ்" பண்ண முடியாவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நானும் தலைவர் அவர்களோடு சேர்ந்து அதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : கட்சித் தலைவர் இருக்கிறார் என்பதற்காகச் சொல்கிறேன். உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள் ?

The Hon. Thiru K. ANBAZHAGAN : Treasury Bench may mean Ministers.

Change of name of Chinna Kadai street, Salem

***368 *Q.*—Thiru T. K. SUBBIAH (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—**

(*a*) whether the Collector of Salem has received any petition in October 1971, from a large number of residents, protesting against the change of name of Chinna Kadai street ; and

(*b*) if so, the details thereof ?

சேலம் சின்ன கடைத் தெருவின் பெயர் மாற்றம்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, அக்டோபர் மாதத்தில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, சின்ன கடைத் தெருவின் பெயர் மாற்றத்தை எதிர்த்து, அங்கு குடியிருப்போர் பலரிடமிருந்து புகார் மனு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ)" சின்னக்கடை " " I அக்கிரகாரம் " " II அக்கிரகாரம் " ஆகிய தெருக்களின் பெயர்களை மாற்றுவது குறித்து நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ் மெய்யப்பன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, சேலம் நகராட்சி மன்றம், 23-9-1971-ல் நடந்த கூட்டத்தில் அதை நிறைவேற்றியது என்று சேலம் நகராட்சிப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். மேற் கண்ட செயற்குறிப்பை அரசின் ஆணைகளுக்காக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது அனுப்பியுள்ளார். நகராட்சி மன்றத்தின் செயற்குறிப்பு விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப் படும்.

Leprosy Centre at Udumalpet

*369 *Q.*—THIRU T. K. SUBBIAH (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Leprosy Centre has to be opened at Udumalpet in Coimbatore District; and

(*b*) if so, the details thereof?

தொழுநோய் மருத்துவ நிலையம், உடுமலைப்பேட்டை

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம். உடுமலைப்பேட்டையில் தொழு நோய் மருத்துவ நிலையம் திறக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN: I referred only to the hon. Members on the Treasury Bench side and not the Hon. Ministers. Hon. Ministers are all attending. I am very glad about that. I only remarked about the absence of hon. Members on the Treasury Bench side.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: டிரஷரி பெஞ்சு உறுப்பினர்கள் என்றால், அது அமைச்சர்களைத்தான் குறிக்கும்.

மிஸ்டர் சேர்மன்: டிரஷரி பெஞ்சு பக்கமுள்ள உறுப்பினர்கள் என்றால், அது ஆளும் கட்சி உறுப்பினர்களைத்தான் குறிக்கும்.

Ceylon-Burma Refugees Colony at Idaiyamelur.

*370 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that 9 (nine) families in the Ceylon-Burma refugees colony at Idaiyamelur, Sivagangai Taluk, Ramanathapuram District have not been provided with any assistance; and

(*b*) if so, the reason therefor?

இடையமேலூர் இலங்கை–பர்மா குடியமைப்பு காலனி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை வட்டத்தில் உள்ள இடையமேலூர் இலங்கை–பர்மா குடியமைப்பு காலனியில் 9 (ஒன்பது) குடும்பங்கள் எந்தவிதமான சலுகைகளும் வழங்கப் படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

Study Group of the Parliamentary Committee

*371. *Q.*—Thiru T. K. SUBBIAH (on behalf of Thiru V. ISVARMURTI) Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to State—

(*a*) whether any Committee of Members of Parliament has met the State Government in September, 1971 and

(*b*) if so, the details thereof?

நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, செப்டம்பரில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு மாநில அரசின் அதிகாரிகளைச் சந்தித்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) ஆம். மத்திய அரசிலிருந்து, அரிசன மற்றும் பழங்குடியினர் நல மூன்றுவது ஆய்வுக்குழு, அரிசனங்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக 1971–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 மற்றும் 14 நாட்களில் இம் மாநிலத்திற்கு வருகை புரிந்தது. 11 பாராளுமன்ற உறுப்பினர்களும் அக்குழுவின் மற்றும் 4 பாராளுமன்ற செயலக அலுவலர்களும் அக்குழுவின் உறுப்பினராவர். அரிசனங்கள் மற்றும் பழங்குடியினருக்கு நிலம், வீடு ஆகியவை

வழங்குதல் குறித்தும் மற்றும் அரிசன நலம் குறித்த பல்வேறு பொருள் குறித்தும் 13-9-1971 அன்று அரசின் முக்கிய அலுவலர்களுடன் கலந்து உரையாடியது.

Purchase of Prawns

*372. *Q.*—Thiru K. S. MANI (on behalf of Thiru S. S. THENNARASU) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have taken any steps to prevent the Kerala Exporters from camping at coastal areas like Veerapandian Pattinam, Manappadu, etc., in Tiruchendur Taluk and purchasing prawns at cheap rates and exporting them to foreign countries at exorbitant rates via Cochin Harbour; and

(*b*) if not, the action proposed to be taken by the Government?

இறால் வாங்குதல்

திரு. கே. எஸ். மணி (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்) : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள வீரபாண்டியன்பட்டினம், மனப்பாடு முதலிய கடற்கரைப் பகுதிகளில் முகாமிட்டு இராலை (Prawns) குறைந்த விலைக்கு வாங்கி, கொச்சித் துறைமுகத்திலிருந்து மேலை நாடுகளுக்கு அதிக விலை போட்டு அனுப்பும் கேரள முதலாளிகளைத் தடுக்க அரசு ஏதேனும் முயற்சி எடுத்ததா ?

(இ) இல்லையெனில், அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) திருச்செந்தூர் தாலுகா கடற்கரைப் பகுதிகளில் கேரள முதலாளிகள் நேரடியாக இராலைக் கொள்முதல் செய்யவில்லை. கேரளாவில் இராலைப் பக்குவப்படுத்தி மேல் நாடுகளுக்கு அனுப்பத்தக்க வாய்ப்புகளும், ஏற்றுமதி வியாபார அனுபவம் முதலிய சாத்தியக் கூறுகளும் இருப்பதால் தமிழ் நாட்டு கடற்கரைப் பகுதிகளில் பிடிபடும் இராள்கள், தமிழ் நாட்டு வியாபாரிகளால் முதலில் வாங்கப்பட்டு, பின்பு கேரள வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு அதன் பின்னர் கேரளாவிலிருந்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஆகவே, இப்பகுதிகளுக்கு வரும் கேரள வியாபாரிகளின் ஊர்திகளையோ, அல்லது அவர்களுக்கு இரால் விற்கப்படுவதையோ தடை செய்ய வேண்டிய அவசியமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இராலைப் பொறுத்தவரையிலே, கேரள நாட்டிலே மிகச் சிறந்த முறையில் அந்த வியாபாரத்தை நடத்தி கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் பெற்றுவருகிறார்கள்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே, எவ்வளவு தூரம் ஏற்றுமதி செய்கின்றோம், அந்த அளவு அது விரிவடையும் என்பதற்கான குறிப்புகள் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நமது நாட்டிலிருந்து ஏறத்தாழ இரண்டு இரண்டரைக்கோடி அளவில் இரால் மீன்களை ஒவ்வொரு ஆண்டும் நாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். நம்மை விட அதிக வாய்ப்பு கேரளத்திலேதான் இருக்கிறது, மேல்நாடுகளுக்கு அனுப்புவதற்கு. அங்கே நல்ல குளிர்பதன முறைகள், குளிர் சேமித்தல் முறைகள் இருப்பதுடன், அமெரிக்காவுக்கு, ஜப்பானுக்குச் செல்லும் கப்பல்கள் அடிக்கடி வருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட வசதிகள் அங்கே இருக்கிற காரணத்தால் கேரள வியாபாரிகள் அதிகமாக இரால் அனுப்ப வேண்டும் என்ற முயற்சி செய்து தமிழகத்திலே வந்து திருச்செந்தூர் பகுதியிலே இருக்கிற தமிழ் வியாபாரிகளிடத்திலே அவர்கள் பணம் கொடுத்து இரால்களை வாங்கிக்கொண்டு, கேரளாவுக்குச் சென்று அங்கேயிருந்து அவர்கள் கொச்சித் துறைமுகத்தின் மூலமாக பலவிடங்களுக்கு அனுப்பு கிறார்கள். அந்த வாய்ப்புகளையெல்லாம் நாமும் செய்வதற்காக இப்போது மீனளத் துறையின் மூலமாக முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டிருக் கிறோம். அப்படிப்பட்ட துறைமுகங்கள் இருந்து, ஆழ்கடல் மீன் பிடிப் பதும், இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகு அங்கே கேரளாவுக்கு செல்வதற்கு அவ்வளவு அவசியமிருக்காது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கேரளாவிலே 17, 18 கோடி ரூபாய்க்கு அனுப்புகிறார்கள் என்று நான் தெரிவித்தேன். இந்த கோல்டு ஸ்டோரேஜ் ஃபெசிலிடிஸ் என்பதன் மூலம் கேரளாவிலே நல்ல முறையிலே அவர்கள் செயல்படுத்தி அனுப்புமாறு பயன்படுமாறு செய்கிறார்கள். தமிழ் நாட்டிலே அதுமாதிரி சில கோல்டு ஸ்டோரேஜ் ஃபெசிலிடிஸ் ஏற்பாடு செய்தால்—மகாபலிபுரத்திலேகூட அமைப்பதாக இருக்கிறது என்று கேள்விப்பட்டேன், அதுமாதிரி ஏதாவது செய்தால், இங்கே யுள்ள மீன்களை அவர்கள் வாங்கி ஏற்றுமதி செய்ய முடியும். அதோடு நாமே இன்னும் நல்ல முறையில் செய்வதற்கு ஏதாவது ஏற்பாட்டினை அரசாங்கம் செய்யுமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அதை உத்தேசித்துத்தான் இந்த ஆண்டு பெரியசாலையில் ஒரு பெரிய குளிர்ப்பதன சாதனம் நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் நிறைய திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகு கேரளாவுக்குக்கூட அனுப்பாமல் நாமே இங்கேயிருந்து அனுப்பலாம். இப்போது இங்கு தனியார்தான் அப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எண்ணூரிலே தனியார் ஒருவர் வாங்கித்தான் அங்கே குளிர்ப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புகிறார். அதை அரசாங்கமே செய்வதற்கான முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. எனவே இன்னும் சில வருடங்களில் இந்த முயற்சிகளில் நாம் வெற்றி பெறுவோம் என்று நான் கருதுகிறேன்.

Cenral Institute of Mental and Moral Hygiene

* 373. *Q.*—Thiru T. K. SUBBIAH (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any enquiry was conducted by the Police in Madras City, with the assistance of the Central Institute of Mental and Moral Hygiene on the incidence of immoral traffic during 1968-69 and 1969-70 ;

(*b*) if so, the findings of the enquiry ; and

(*c*) the action taken thereon?

மனநல-ஒழுக்க மத்திய நிலையம்

திரு. டி. கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விபசாரம் நடைபெறுவது பற்றி 1968-69, 1969-70 ஆண்டுகளில் மனநல-ஒழுக்க மத்திய நிலையத்தின் உதவியுடன் சென்னை மாநகர காவல் துறையினர் எதாவது விசாரணை நடத்தினார்களா ?

(இ) ஆமெனில், அவ்விசாரணையின் முடிவுகள் யாவை ?

(உ) அவற்றின் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

Loss of Lives due to the Floods in the River Vaigai

* 374. *Q.*—Thiru K. S. MANI (on behalf of Thiru V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the number of persons, who lost their lives due to the floods in the Vaigai River during December 1971 ;

(*b*) whether any compensation was granted to their families ; and

(*c*) the estimated loss caused by the floods in the Vaigai River?

வைகை நதி வெள்ளத்தால் உயிரிழந்தவர்கள்

திரு. கே. எஸ். மணி (திரு. வே. தங்கபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வைகை நதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் எத்தனை பேர் உயிர் இழந்தனர் ?

(இ) அவர்கள் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு ஏதும் வழங்கப்பட்டதா ?

(உ) வைகை நதி வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மதுரை மாவட்டத்தில் மட்டும் 40 (நாற்பது) நபர்கள் உயிரிழந்தனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் உயிரிழப்பு எதுமில்லை.

(இ) இவர்களில் வெள்ளத்தில் சிக்கித் தவித்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு, எலிக்காப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழ்நாடு தீயணைப்புத் துறையைச் சார்ந்த திரு. குழந்தைதவேலின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொதுத் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 5,000 மான்யத் தொகையாக வழங்கப்பட்டது. மற்றும் குடும்பத் தலைவர்களை இழந்த ஒன்பது குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதமும், குடும்பத் தலைவரல்லாத நபர்களை இழந்த பதினாறு குடும்பங்களுக்குப் பிரித்துக்கொடுக்குமாறு ரூ. 2,000 மும் முதலமைச்சர் பொதுத் தணிப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

(உ) மதுரை மாவட்டம்.—சுமார் ரூ. 11,51,000.

இராமநாதபுரம் மாவட்டம்.—சுமார் ரூ. 9,00,000.

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, இந்த மதுரையிலே ஏற்பட்ட வைகை நதியில் வெள்ளப் பெருக்கின் காரணமாக பல சலவையாளர்களுடைய வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அதிலே இருந்த வராளமான துணிகள் ஆகியவைகள் எல்லாம் நஷ்டமாகி விட்டதாக அறிகிறேன். அது சம்பந்தமாக எதாவது அவர்களுக்கு உதவி செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதற்கு மேல் அரசாங்கம் எதுவும் உதவி செய்ததாகத் தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஏ. ஆர். கோலப்பா : தலைவர் அவர்களே, ஆற்று ஓரங்கள் சலவைத் தொழிலாளர்கள் சலவை செய்வதற்கு ஏற்ற இடமாக இருப்பதன் காரணமாக அங்கே சலவை செய்துகொண்டு வருவதால் அப்படிச் சலவை செய்யும் சலவைத் தொழிலாளர்கள் வேறு இடங்களில் வசிக்க அரசு எதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மதுரையிலே வைகையிலே ஆற்றுப் படுகையிலே இவர்களெல்லாம் குடிசை போட்டிருந்தார்கள். வெள்ளம் வருகிறது என்று எச்சரித்தும்கூட, இவர்களே காலி செய்வதற்காக அதிகாரிகள் சொல்கிறார்கள் என்று தவறுதலாகக் கருதிக்கொண்டு இவர்கள் காலி செய்யாமல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்துவிட்டார்கள். வெள்ளம் வந்ததற்குப் பிறகு விபத்து ஏற்பட்டது. இப்பொழுது குடிசைகளை படுகையில் போடக்கூடாது, வேறு பகுதியில் போடவேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

CROP INSURANCE SCHEME.

* 377 Q.—THIRU G. SWAMINATHAN: will the Hon. the Minister for Agriculture be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 28 on 22nd August 1969;

(*a*) the stage at which the proposal to introduce Crop Insurance Scheme in Tamil Nadu now stands; and

(*b*) the salient features of the scheme?

பயிர் ஈட்டுறுதித் திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 22—8—1969 ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் வினா எண் 28-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை அறிமுகப் படுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்ட இந்திய அரசின் மாதிரி முன்மொழிவு பரிசீலனையில் உள்ளது. 1970-ஆம் ஆண்டு பயிர்க்காப்புறுதியை கொண்டுவரும் வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இரண்டு ஆண்டுக்கால அளவுக்கு ஒப்பளிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் முடிவுகள், 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. அம்முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் கிடைத்த பின்னர், இவ்விஷயத்தில் மத்திய அரசின் கருத்துகள், மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

RENTAL HOUSING SCHEME.

* 378 Q.—THIRU M. RAJA IYER : Will the Hon. Minister for Backward Classes be pleased to state—

(*a*) the number and the cost of the houses so far constructed under the Rental Housing Scheme for Government Servants;

(*b*) whether any loan or subsidy is available for the Scheme from the Life Insurance Corporation and if so, the amount so far secured; and

(*c*) whether there is any proposal for further implementation of the scheme?

வாடகை வீட்டு வசதித் திட்டம்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இதுவரை கட்டப்பட்டுள்ள வீடுகள் எத்தனை? இவற்றைக் கட்டுவதற்கு ஆன செலவு எவ்வளவு ?

(இ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து இத் திட்டத்துக்காக ஏதாவது கடன் அல்லது உதவித் தொகை கிடைத்துள்ளதா ? ஆமெனில், இதுவரை கிடைக்கப் பெற்ற மொத்தத் தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டத்தை மேலும் தொடர்ந்து செயல் படுத்துவதற்கான செயற் குறிப்பு ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் 6,210 அங்கணங்கள் ரூ. 529·31 லட்சம் செலவில் தமிழ் நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன.

(இ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இத்திட்டத்தை அமல் படுத்த கடன் தொகை மட்டுமே அளிக்கின்றது. இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 578·95 லட்சம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

(உ) ஆம். மேற்சொல்லி ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்கள் அமல் படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வரும் திட்டங்களுக்கு அவ்வப்போது ஒப்புதலளிக்கப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற இந்தத் திட்டம் எந்தெந்த ஊர்களில் இருக்கிறது ? எந்தெந்த ஊர்களில் அது விஸ்தரிக்கப்படுகின்ற நோக்கம் இருக்கிறது ? அத்தகைய ஊர்களில் இராமநாதபுரமும் ஒன்று என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலைவரவர்களே, எந்தெந்த ஊர்களில் இத்திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்ற குறிப்புகள் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, ஊப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து ரூ. 578·95 லட்சம் இடைத்திருப்பதாகவும் அதில் ரூ. 529·31 லட்சம் தான் செலவு செய்திருப்பதாகவும் நான் அறிகிறேன். இன்னும் கடன் வாங்கிய தொகை ரூ. 50 லட்சம் செலவு செய்யப்படாமலிருப்பதாகத் தோன்றுகிறது. அதை உபயோகித்து விரைவில் மேலும் வீடுகள் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலைவரவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக நிறையத் திட்டங்கள் போடப்பட்டு நிறை வேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1958–லிருந்து 1972–வரை ரூ. 18·88 கோடி வரை வாங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பல அபிவிருத்திப் பணிகளின் மூலம் இது வரை ரூ. 578 95 லட்சம் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 50 லட்சத்திற்கான திட்டங்கள் பல போடப்பட்டு பல ஊர்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதில் இராமனாதபுரம் உண்டா இல்லையா என்பதற்கான குறிப்புகள் தற்போது இல்லை.

LEGISLATORS' SPECIAL BUSES.

* 379 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to ply Legislators' special buses for the convenience of the Legislators between Legislators' Hostel and Egmore and Central Railway Stations at the commencement and termination of each Legislature Session ; and

(*b*) if so, the stage at which the matter stands?

சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகத் தனிப் பேருந்துகள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு சட்ட மன்றக் கூட்டத்தொடர் தொடங்கும் சமயத்திலும், முடிவுறும் சமயத்திலும் சட்ட மன்ற உறுப்பினர்களின்

வசதிக்காக, சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கும், எழும்பூர், சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குமிடையே சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகத் தனிப் பேருந்துகளை விடுவதற்கான செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா ?

(இ) ஆமெனில், இச்செயற் குறிப்பு எந்நிலையிலுள்ளது ?

THE HON. THIRU S. RAMACHANDRAN, :—(*a*) and (*b*) The Pallava Transport Corporation is operating two special buses between the Central and Egmore Railway Stations and the Legislators' Hostel for tranportation of the members two days prior to the commencement of the session and two days after the close of the session.

THIRU M. RAJAH IYER : May I know whether there will be any specific time scheduled for these buses to go to the stations and to come from the stations so that the members need not run on taking chances with the taxi-walahs?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Now two buses are run according to the convenience of the passengers. But preference is given to the train timings, especially during morning and evening hours. If we prescribe time-schedule for these buses, there again difficulty will arise for the Members.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த பஸ்களில் எல்லாம், உறுப்பினர்களை மட்டுமல்லாமல், மற்றவர்களையும் ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று கருதுகிறேன். இந்த பஸ்களுக்குப் பதிலாக சிறிய வேன்கள் ஏதாவது விட்டால், தற்போது ஏற்படுகிற செலவு குறையும். இந்த பஸ்களில், ஒவ்வொரு தடவையும் குறைவான உறுப்பினர்கள்தான் பிரயாணம் செய்கிறார்கள். எனவே, சிறிய பஸ்களை அல்லது வேன்களை விட்டால், உறுப்பினர்களுக்கு வசதியாகவும் இருக்கும். செலவும் குறையும். அவ்வாறு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதைப் போல, உறுப்பினர்கள் மட்டும் இந்த பஸ்களில் பிரயாணம் செய்வதில்லை. ஒவ்வொரு உறுப்பினரும் தன் கூட கொண்டுவருகிறவர்களைப் பார்க்கும் போது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேன் கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இது ஜனநாயகத்தில் ஒரு விழிப்புணர்ச்சியைத்தான் காட்டுகிறது. இப்போது இருக்கிற நிலையைப் பார்த்தால், இப்போது விடப்படுகிற பஸ்களே போதாது என்று தோன்றுகிறது.

MR. CHAIRMAN : The Coimbatore fast Passenger reaches Madras Central at 5·40 a.m. I am mentioning this for the information of the hon. Members.

[6th April 1972

CO-OPERATIVE MILK SUPPLY SOCIETY AT OOTY.

*380 Q.—THIRU T. K. SUBBIAH (on behalf of Thiru V. ISVARMURTI). Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Co-operative Milk Supply Society at Ooty has drained large quantity of Milk during November 1971; and

(b) if so, the details thereof ?

கூட்டுறவு பால் வழங்கும் சங்கம், உதகை.

திரு. டி.கே. சுப்பையா (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, நவம்பரில் உதகமண்டலத்திலுள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் பெருமளவு பால் தள்ளப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆடை நீக்கப்பட்ட திரிந்துபோன பால், அருந்துவதற்கு முழுமையாக பயன்படாமல் போன பால் மட்டும், உதகை கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கத்தால் தள்ளப் பட்டது.

(இ) 13—11—1971 முதல் 21—11—1971 வரை, நாள் ஒன்றுக்கு சராசரியாக 4,294 லிட்டர் திரிந்துபோன பால் தள்ளப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டில் தள்ளப்பட்ட பாலுக்கும் இந்த ஆண்டில் அமைச்சரவர்கள் குறிப்பிட்ட திரிந்து போன பாலுக்கும் வேற்றுமைகள் என்ன என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு தள்ளப்பட்ட பால் பற்றி குறிப்பு என்னிடம் இல்லை. இந்த ஆண்டு தள்ளப்பட்ட பால் பற்றிய குறிப்பு மட்டும்தான் என்னிடம் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, 1971 நவம்பரில் எவ்வளவு பால் தள்ளப்பட்டது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு முன்னால், அந்த ஆண்டு தள்ளப்பட்ட பால் எவ்வளவு என் பதற்கான குறிப்புகள் எதாவது இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட தகவல் என்னிடம் தற்போது இல்லை.

6th April 1972]

IDOLS.

*381 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that some idols were burgled from a Perumal Temple at Paruthiyur Village, Nannilam taluk, Thanjavur district during the last week of October 1971 ;

(b) if so, the number and details of idols lost ; and

(c) the action taken thereon ?

சிலைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, அக்டோபர் கடைசி வாரத்தில் தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பருத்தியூர் கிராமத்திலுள்ள பெருமாள் கோவிலிலிருந்து சில சிலைகள் களவாடப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், களவாடப்பட்ட சிலைகளின் எண்ணிக்கை யாது ? சிலைகளைப் பற்றிய விவரங்கள் யாவை ?

(உ) அது குறித்து எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பருத்தியூர் கிராமத்திலுள்ள ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் கோவிலிலிருந்து 28-10-1971 அன்று, சுமார் ரூ. 15,000 மதிப்புள்ள நான்கு வெண்கல சிலைகள் களவாடப்பட்டன. அவற்றின் விபரம் பின்வருமாறு :

(1) ஸ்ரீ இராசகோபாலன்.

(2) ஸ்ரீ ருக்குமணி.

(3) ஸ்ரீ சத்தியபாமா.

(4) ஸ்ரீ வரதராஜப்பெருமாள்.

(உ) கொரடாச்சேரி காவல் நிலையத்தில் அக்கோயில் அறங்காவலரால் புகார் செய்யப்பட்டு விக்கிரகங்கள் 4-ம் காவல் துறையினரால் மீட்கப்பட்டு மேற்படி துறையினரின் பொறுப்பில் உள்ளன. திருட்டில் சம்பந்தப்பட்ட இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மூன்றாவது நபரை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த விக்கிரகங்கள் 28-10-1971 அன்று திருடப்பட்டன என்று சொன்னார்கள். இந்த விக்கிரகங்கள் களவாடப்பட்டன என்று மூன்று நாட்கள் கொரடாச்சேரி காவல் நிலையத்திற்குச் சென்று வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோதும், சரியான முறையில் குற்றம் பதிவு செய்யப்படவில்லை. காலதாமதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலிடத்திலுள்ள சில அதிகாரிகளிடம் சொன்ன பிறகு நான் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். திருடப்பட்ட பொருள்களைப்பற்றி யார் புகார் தாக்கல் செய்தார்களோ, அவர்களே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், காவல் துறையினரிடம் இப்படிப்பட்ட போக்கு இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு, துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு .மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தக் கோயிலைப் பொறுத்த வரையில், இது அரசுத் துறையைச் சேர்ந்த கோயில் அல்ல. தனியார் வசம் இருக்கின்ற கோயில். இந்த விக்கிரகங்கள் திருடப்பட்டு விட்டதாக 28-10-1971 அன்று பருத்தியூர் கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்பவரால், தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தகவல் கொடுத்தவரையே கைது செய்ததாகத் தகவல் ஏதும் இல்லை. இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் ஸ்ரீனிவாசன் என்பவரும், பழனிவேல் என்பவருமாவர். இது சம்பந்தமாக இராமச்சந்திரன் என்பவரைக் காவல் துறையினர் தேடிக் கொண்டிருக்கிறார்கள். புகார் கொடுத்தவரை இதிலே குற்றவாளியாக ஆக்கியிருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

UNSTARRED QUESTIONS.

Recreation Clubs.

14 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether a large number of Recreation Clubs have emerged in Madras City recently ?

A. No.

Roadside taps.

15 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) the number of roadside taps fixed by the various departments duri drought period in 1968-69 in Madras City ; and

(b) the steps taken to safeguard them ?

A.—(a) A total number of 12,467 borewells were fixed by the various departments as indicated below :

1.	Public Health Engineering and Municipal Works Departments.	1,800 Nos.
2.	General and Buildings Department	4,840 ,,
3.	Highways and Rural Works Department	3,200 ,,
4.	Irrigation Department	2,627 ,,
		12,467 Nos.

(b) Of the 1,800 numbers of tubewells fixed by the Public Health Engineering and Municipal Works Department 859 are being maintained by it and 941 were removed by them. Of the 4,840 numbers of tubewells erected by the Buildings and General Department, 943 borewells proved unsuccessful,2,874 borewells have since been removed, 153 have been handed over to the Corporation and the balance 870 are yet to be handed over to the Corporation. Of 3,200 numbers of tubewells fixed by the Highways and Rural Works Department, 1,330 pumps were pulled out. Of the 2,627 numbers of tubewells erected by the Irrigation Department 650 proved unsuccessful, 1,800 tubewells including 650 unsuccessful ones have been pulled out, 748 are being maintained by the department and 79 were handed over to the Corporation.

Loans to finance Hire Purchase Schemes.

16. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Slum Clearance Board has approached the Life Insurance Corporation for loans to finance the Hire Purchase Schemes ; and

(b) if so, the details thereof ?

A.—(a) and (b) The Tamil Nadu Slum Clearance Board approached the Life Insurance Corporation of India to get substantial loan to finance Capital programme of Slum Clearance Board to meet the need of putting up pucca tenements in Slum areas. The Life Insurance Corporation regretted its inability to entertain the request of the Slum Clearance Board for financing its scheme for construction of tenements. The Life Insurance Corporation has , however, indicated that there is some possibility to render assistance to the Slum Clearance Board if it comes forward to avail group insurance scheme through

an apex Co-operative Society . The suggestion of the Life Insurance Corporation is under examination of the Tamil Nadu Slum Clearance Board.

Youth Service Corps.

17. *Q*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the details of the newsppaers in which the advertisements calling applications for the Youth Service Corps were given ; and

(*b*) the expenditure incurred thereon?

A.—(*a*) 1. Thennagam.
2. Swadesamitran.
3. Daily Thanthi.
4. Indian Express.
5. The Mail.
6. Dinamani.
7. Murasoli.
8. Hindu.
9. Viduthalai.

(*b*) Rs. 14,250·10
(Except Viduthalai).

Slum Clearance Board Office, Nandanam.

18. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the amount spent for housing the Slum Clearance Board Office at Nandanam ; and

(*b*) the details of the expenditure incurred thereon ?

A.—
(*a*) Nil.
(*b*) Does not arise.

Clandestine Gun Factory.

19. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any clandestine gun factory has been unearthed at Chengam Hill in this State about 30th August 1971 ; and

(*b*) if so, the details thereof ?

A.—

(*a*) Yes.

(*b*) A raid was conducted by the Police at Chengam Forest area on the night of 27th and 28th August 1971, and at Kottavoor one Govindaraj Achary was arrestedas he was found manufacturing spare parts for muzzle loading guns and cocking springs. A case under the Indian Arms Act was registered in Chengam Police Station, against the accused and a charge sheet was laid before the Sub-Divisional Magistrate, Tirupattur, on 28th August 1971. The accused was fined Rs. 50 in default to undergo R.I. for 6 weeks by the Sub-Divisional Magistrate, Tirupattur. The accused paid the fine.

Alleged refusal to receive complaints from the Public.

20. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Chief Secretary has received letters from the Advocates that the Commissioner of Police, Madras has declined to receive complaints about 6th September 1971 ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

A.—

(*a*) Two letters were received one letter from Thiru R. K. Balasubramanian, M.A., B.L., Advocate, Madras dated 7th September 1971 and the other from Thiru N. Dennis, Advocate and M.L.A. dated 9th September 1971.

(*b*) Both the representations relate to the point that it was not legally correct on the part of the Commissioner of Police in having declined to receive complaints from the public.

(*c*) The matter was enquired into and it was found that there was no general refusal by the Commissioner of Police to receive complaints from the public whenever such complaints directly involving Police Department are made and in all cases necessary action is being taken by him.

Setting up of Distilleries.

21. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to permit the Sugar Factories for setting up distilleries in the State; and

(*b*) if so, the details thereof?

ப—

(அ) & (இ): இம்மாநிலத்தில் தனியார் துறையிலுள்ள ஆறு சர்க்கரை ஆலைகள் வடிசாலைகளை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன:—

1. சவுத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸிஸ்) பிரைவேட் லிமிடெட், சென்னை. 2. அருணை சுகர்ஸ் லிமிடெட், சென்னை.	பீர் தவிர ஆனால் சாராயம் உட்பட மது வகைகளை தயாரிக்க.
3. சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக் கூடல் கோபம்புத்தூர், மாவட்டம்	தாய்மைப் படுத்தப்பட்ட சாராயம் மட்டும் தயாரிக்க.
4. டெக்கான் ஆப்காரி-சுகர்ஸ் லிமிடெட், புகலூர், திருச்சிராப்பள்ளி. 5. காவேரி சுகர்ஸ், திருச்சிராப்பள்ளி. 6. பாலாறு சுகர்ஸ் லிமிடெட், மெயில் பட்டி, வட ஆர்க்காடு மாவட்டம்.	சாராயம் மட்டும் தயாரிக்க.

Loss of human life at Swamimalai.

22. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there was any loss of human life at Swamimalai about 2nd September 1971 in connection with the Kumbabishekam; and

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) Nine women got suffocated due to a crowd rushing to a particular place at Cauvery bridge, Swamimalai at 7-30 hours on 2nd September 1971 to have a clear view of the Kumbabishekam at Swamimalai temple held there on that day. Out of them four women died en route to the hospital. Out of the 4 deceased, three were aged 60 and one above 50. It has been reported that the death was due to the old age and fragile health of the ladies. The incident took place suddenly and could not have been anticipated.

Compensation for Police personnel.

23. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to pay compensation for police personnel crippled during performance of duty?

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) The Inspector-General of Police has recommended the grant of lumpsum compassionate gratuity in the case of death or disability resulting in the performance of duty, without imposing any condition for the grant of such gratuity. The Inspector-General has been asked to examine the feasibility of introducing the group Insurance Scheme for the State Police in consultation with the Life Insurance Corporation of India and send a report to Government. On receipt of Inspector-General's report, suitable action will be taken by the Government.

Commemorative Postage Stamp.

24. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the State Government have sent any proposal to the Union Government to issue a commemorative postage stamp in honour of Thiru O. P. Ramaswamy Reddiar; and

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) The Government have requested the Director General of Posts and Telegraphs on 20th September 1971, to move the Government of India to issue a postage stamp in commemoration of late Thiru O. P. Ramaswamy Reddiar and intimate the decision of the Government of India in the matter to this Government early. Their final reply in the matter is awaited.

Arrest of Naxalites in Coimbatore District.

25. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether wanted Naxalites in murder cases in other States have been apprehended in Coimbatore district about 18th September 1971; and

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) Three Naxalites undertrial prisoners who were involved in a murder case of Kerala State and who had escaped from the Sub-Jail, Viyyoor in Kerala State on 26th May 1971 night were arrested in Coimbatore District. Of the 3 Naxalites, two were arrested on 9th September 1971, and the third was arrested on 16th September 1971.

Personal File System.

25. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the representatives of the Non-Gazetted Government Officers had made any representation to the Hon. Chief Minister for the abolition of the personal file system about the end of September, 1971; and

(*b*) if so, the action taken thereon?

A.—

(*a*) and (*b*) No such representation was made by the Representatives of Non-Gazetted Government Officers to the Chief Minister about the end of September 1971.

Construction of Buildings on the Island Grounds.

27. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 248 on 30th July 1971:

(*a*) whether any reply has been received from the Central Government; and

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) The Union Defence Minister has stated that on account of the increase in the requirement for accommodation for service personnel in the past few years, and as the Defence Services have not been able to find suitable land in Madras the construction of buildings on a part of the Island Grounds has become an inescapable necessity. In my reply to the Union Defence Minister, I have reiterated the need to keep the whole of the Island Grounds as an open space and offered to make available alternate sites to meet Defence requirements.

Administrative Staff Training College, Hyderabad.

28. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Government are subscribing to the Administrative Staff Training College in Hyderabad; and

(*b*) if so, the details thereof?

A.—

(*a*) Yes.

(*b*) A subscription of Rs. 2,000 per year is being paid.

Madhavaram Milk Project.

29. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether the Government have directed the Madhavaram Milk Project purchase milk from Ooty during November 1971; and

(*b*) if so, the details thereof?

A.—

(a) No, Sir.

(b) Does not arise.

MR. CHAIRMAN. Questions are over.

[NOTE.—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member]

II. POINT OF INFORMATION RE ADJOURNMENT MOTION RE INCIDENTS AT TIRUPPATTUR.

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூரில் நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : நிராகரிக்கப்பட்டு விட்டது.

திரு கே. ராஜாராம் : அதற்குக் காரணம் என்ன என்று வினா கதை அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The matter sought to be discussed involved nothing more than the administration of law. Hence, I have withheld my consent.

Till 12 noon, Government Bills will be considered and then Veledictory Addresses to the retiring Members will begin.

III. ANNOUNCEMENTS.

(1) *Nomination of Members to the House Committee.*

MR. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have neen validly nominated for election to the House Committee for the financial year 1972–73.

1. Thiru K.S. Abdul Wahab
2. Thiru M. Arumugaswamy
3. Thiru C.R. Kolappa
4. Thiru P.T. Muthu
5. Thiru S. A. Rajamanickam
6. Thiru N. Sundaresa Thevar

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under rule 173 (1) of the Council Rules, I nominate the following two members to be the Members of the said Committee :

1. Thiru R. Krishnaswami Naidu.
2. Thiru G. Parangusam.

The Deputy Chairman of the Council shall be the ex-officio Chairman of the Committee.

(2) *Nomination of Members to the Committee of Privileges.*

MR. CHAIRMAN : I have to inform the House that the following candidates have been validly nominated for election of nine Members to the Committee of Privileges for the financial year 1972–73 :

1. Thiru S. T. Adityan.
2. Thiru K. Arivazhagan.
3. Thiru D. V. Narayanaswamy.
4. Thiru Neela Narayanan.
5. Thiru M. Rajah Iyer.
6. Thiru K. Rajaram.
7. Thiru S. C. Sengottuvelappa Gounder.
8. Thiru G. Swaminathan.
9. Thiru S. S. Thennarasu.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is ex-officio Member.

Under rule 156 (4) of the Council Rules, I have nominated Thiru K. Rajaram to be the Chairman of the Committee.

(3) *Messages from the Assembly.*

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16

[Mr. Chairman] [6th April 1972

of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Legislative Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills, as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Legislative Council :—

1. The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 14 of 1972).

2. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972).

10-30 a.m. 3. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972).

IV. CALLING ATTENTING TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE.

(1) *Breach of a bridge near Urangumpatti villag eon the Sivagangai-Madurai highway,*

மிஸ்டர் சேர்மன் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். தென்னரசு, திரு. பி. திருஞானசம்பந்தம் இருவரும் அவையில் இல்லை. பதில் சொல்லவேண்டிய அமைச்சரவர்களும் இல்லை.

(2) *Attack on the Traffic Manager and Checking Inspectors by the Transport employees on route No 56-A on 24th March 1972.*

MR. CHAIRMAN : I understand from the Hon. the Minister for Transport that the matter relating to the call attention notice given by Thiru K. Rajaram is *sub judice* and, therefore, it may not be taken up to-day. The case is before the Court.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது கேட்கும்போது கேஸ் இல்லாததினாலே இதைக் கொடுத்தேன்.

மிஸ்டர் சேர்மன் : நீங்கள் கொடுத்த பிற்பாடு கேஸ் போட்டு வந்து விட்டது. ஆகவே கேஸ் வருவது உங்களுக்கு எப்படித் தெரியும் ?

6th April 1972]

V. GOVERNMENT BILLS.

THE TAMIL NADU CULTIVATING TENANTS ARREARS OF RENT (RELIEF) BILL, 1972 (L.A. BILL NO. 6 OF 1972)—*cont.*

மிஸ்டர் சேர்மன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தன் பேச்சைத் தொடர்ந்து ஆரம்பிக்கலாம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தலைவரவர்களே, குத்தகை சாகுபடிதாரர்கள் குத்தகை பாக்கி நிவாரணம் சம்பந்தமாக உள்ள இந்த மசோதாவில் என்னுடைய கருத்துக்களைத் தொடர்ந்து சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பொதுவான கருத்து இந்த மசோதா சம்பந்தப்பட்ட மட்டிலே, இந்த மசோதாவை ஆதரிக்கும் முறையிலே தான் இதிலேயுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்வதாகும் என்ற என்னுடைய கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சாராருக்கு இந்த நிவாரணம் மிக மிக அவசியமாக இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு இந்த நிவாரணத்தை நாம் அளிக்கும்போது, இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களும் பெரும் அளவில் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களையும் கவனித்து பாதிக்கப்படுகிறவர்கள் யார் என்று கண்டறிந்து, அதற்குத் தகுந்தபடி இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவிற்குவிட்டு அதனுடைய முடிவை அறிந்து இதற்கு நிவாரணம் அளித்திருக்கலாம். இதற்கிடையே குத்தகைச் சாகுபடியாளர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுதவாறு ஒரு தடையைப் பிறப்பித்து விட்டு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருந்தால் எல்லோருக்கும் ஒரு நிம்மதி அளிக்கும் வகையிலே இந்தச் சட்டம் அமைந்திருக்கலாமே என்பது என்னுடைய கருத்து. அவ்வாறு அரசு செய்யவில்லையென்று கருதுகிறேன்.

"எவா மக்கள் மூவா மருந்து" என்று சொல்வார்களே, அது போல இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

மிஸ்டர் சேர்மன் : அதற்கு அர்த்தம் சொன்னால்தான் எல்லோருக்கும் தெரியும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : சொல்வதற்கு முன்னாலேயே கருத்தை குறிப்பறிந்து காரியம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடக் கூடிய மக்கள் என்று அர்த்தம். ஆகையினாலே "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற முறையில் ஒருவர் யோசனையை ஏற்று இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் சேர்மன் : எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அந்த வகையிலே கொண்டு வந்திருக்கிற மசோதா பலருக்கு அதிருப்தியையும் அவர்களுடைய வாழ்வில் நஷ்டத்தையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறதே என்பது என்னுடைய கருத்து. அதைத் தான் நான் சொல்ல வந்தேன். இதிலே நில உடமையாளர்கள், பெரு நிலக்கிழார்கள் அல்லது சிறு நில உடமைக்காரர்கள் என்றால், இந்தக் காலத்திலே அவர்கள் மீது துவேஷம் கற்பிக்கும் வகையில் பேசப்பட்டு வருவது நியாயமல்ல. நம் மரபிற்கும் அது எடுப்பாக இருக்காது என்று கருதுகிறேன். அவர்களை எதோ கொள்ளைக்காரர்கள் மாதிரி, யாருடைய சொத்தையோ அபகரித்துக் கொண்டவர்கள் மாதிரி, அவர்களைப்பற்றி இன்றைய தினம் பேச்சுகளெல்லாம் பேசப்பட்டு வருகின்றன. இதைத் தவிர்க்கும் வகையில் கூட அரசு எதேனும் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலச் சுவாந்தார்களெல்லாம் கொள்ளைக்காரர்கள், திருடர்கள் என்று யாரும் சொல்லவில்லை. நாங்கள் அப்படிக் கருதவில்லை, யாரும் கருதவில்லை. திரு. ஆறுமுகசாமி அவர்கள் கூட கருதவில்லையென்று கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அந்தக் காலத்திலே நில உடைமையாளர்கள் நிலம் வைத்துக்கொண்டிருந்தார்களென்றால், இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்து முடிவடையும் தருவாய் வரையிலும் பெரும் நிலக்கிழார்கள், சிறு நிலச்சுவாந்தார்கள் நிலத்தை வைத்துப் பாதுகாத்துக்கொண்டிருந்தார்களே, அதுவே பெரிய காரியம் என்று சொல்லவேண்டும். அது வரை விவசாயம் கட்டுப்படியான தொழிலாக இருந்தது என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏதோ முன்னோர்கள் நம்முடைய தலையிலே பாரத்தைப் போட்டு விட்டுப் போயிருக்கிறார்களே, இதைப் பாதுகாத்து வைத்துக் கொண்டு தொழில் நடத்தியாகவேண்டியிருக்கிறதே, வேறு தொழிலுக்கும் புகலிடமில்லையே என்றுதான் செயல்பட்டு வந்து முன்னோர்களிட்ட கட்டளையேயென்று கருதினார்களே தவிர, இது ஆதாயம் தரத் தக்க தொழிலாக இருந்ததில்லை.

திரு. கே. எஸ். மணி : தலைவரவர்களே, ஆதாயம் இல்லாத தொழில் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால், நன்றாக இருக்கும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : உப்புக்கு பப்பு என்று சொல்கிற மாதிரிக் கேட்கிறார்கள். நேரமில்லை. ஆளும் கட்சி அங்கத்தினர்கள் எல்லோருடைய பேச்சுகளும் அமைச்சர்கள் சொல்கிற பாணியிலேயே அமைந்திருக்கின்றன. அதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். ஆகவே, அதிகமாகத் தலையிட வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினாலே இந்த நிலச்சுவாந்தார்கள் அந்தக் காலத்திலேயே நில உடமை, சொத்துரிமை இதையெல்லாம் குற்றமாகக் கருதாத காலத்திலே கூட சமுதாய வாழ்வில் எத்தனையோ பழக்க வழக்கங்களில் அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட

நெருக்கடிகள், நிலைமைகளுக்குத் தகுந்தவாறு காரியங்களில், மனோபாவங்களில் மாறி வந்திருக்கின்றனர். நம் நாட்டில் நடைபெறக்கூடிய காரியங்கள் அப்படி இருந்திருக்கின்றன. அப்படி நம் பண்பிலும் நாகரிகத்திலும் இன்று உள்ள நிலைமையிலே இந்த மாறுதல்களைக் காண்கிறோம். அந்த வகையில் வரக்கூடிய மாறுதல்களை சமுதாயம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் வெளிநாடுகளில் பிரமாதமான புரட்சிகள் நடக்கும்போது, ரத்தம் சிந்தி புரட்சியை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் பெரும் மாறுதல்கள் சாவதானமாக, சமாதான முறையிலே நடைபெற்று முடிந்திருக்கின்றன. நம் நாட்டில் எவ்வளவோ பெரிய மாறுதல்கள் நடைபெற்றிருக்கின்றன. சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் ஏற்பட்ட மாறுதல் எந்த ஒன்றிலும் ரத்தம் சிந்தி இந்தக் காரியங்களை நாம் சாதித்துக் கொள்ளவில்லை. அப்படி அத்தகைய மாறுதல்களை சமுதாயத்தின் நன்மை கருதி நாடு ஏற்றுக்கொண்டேயிருக்கிறது. ஆகையினாலே சொத்து உடமையை இழிவென்றும் ஒரு பெரும் குறை என்றும் நாம் கருதக் கூடாது. அந்த வகையிலே நம்முடைய நாடு பண்புள்ள நாடு என்பதிலே சந்தேகமேயில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழங்காலந்தொட்டே புதிய சிந்தனைகள் புதிது புதிதாக உருவாகிக்கொண்டு வந்திருக்கின்றன. மார்க்ஸீய சிந்தனையிலிருந்து அதற்கு முன்னாலே கூட அரசியல் ரீதியாக பொருளாதார ரீதியாக ஏற்படக் கூடிய சமுதாய நிலைமைகளையெல்லாம் பரிசீலிப்பதாக சிந்தனைகள் தூண்டப்பட்டு உருவாகிக் கொண்டு வந்திருக்கின்றன. அவைகளிலே இவற்றை பல பல நாடுகள் பல்வேறு விதங்களிலே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. நம் நாடும், நாகரீகம், பொருளாதாரம், பழக்கவழக்கம், நமது மரபுகள் இதனையொட்டி அக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இதே போல நிலச் சுவாந்தார்கள் சம்பந்தப்பட்ட மட்டிலேயும் இந்த மாறுதல்களை இப்படிப் பார்த்துக் கொண்டு வருகிறோம். உருவாக்கக்கூடிய இந்த மாற்றங்களை வைத்து நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வது இப்போதும் கூட அசெம்பிளியிலே இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடாவிட்டாலும் கூட சாத்தியமானால் சட்டத்தைப்பற்றி எனக்குத் தெரியாது—இப்படிப்பட்ட சட்டங்கள் வரும்போது வார்த்தைக்கு வார்த்தை தமிழில் சரியான மொழி பெயர்ப்போடு திருத்தங்களையும் கொடுக்கா விட்டாலும், அதைப் பற்றிய சாரம் இன்னது என்பதையாவது தமிழில் அச்சிட்டு சபையில் வைக்கக் கூடாதா ? என போன்றவர்கள் சட்ட நுணுக்கங்களை இந்த ஆங்கில பிரதிகளை வைத்து சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

பல வருஷ காலத்தில் தமிழிலேயே எல்லாம் மாறுதல்கள் அடைய வேண்டும் என்று கருதுகின்றோம். அந்த நிலையை அடைகிறவரையுமாவது இந்தச் சட்டத்தின் சாராம்சம் இன்னது, முன் இருந்த சட்டம் இப்படி, புதிய சட்டத்தினால், இன்னின்ன வகையிலே அனுகூலம் இருக்கிறது என்று விளக்கம் தரும் வகையில் அரசு தமிழில் ஒன்றைக் கொடுத்திருக்க வேண்டும். இந்த அவையிலே வைக்கும்போது, இது மிக மிக அவசியம் என்று கருதுகிறேன். என்னைப் 10-40 a.m.

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [6th April 1972

போல் உள்ளவன் 'க' எனறுல் கருப்பட்டி, 'வ' என்றுல் வாயிலே போட்டுக் கொள்ள சொல்கிறுப்போல இருகிறது என்ற வகையிலே சந்தர்ப்பத்தையொட்டி அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சட்ட நுணுக்கம் தெரியாதவர்கள், முறையாக ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளாதவர்கள் அம்மாதிரி மனதிலே கற்பனே செய்து கொண்டு பேசவேண்டியிருக்கிறது. அதனுல் பிழைகள் நேரிடும்.

மிஸ்டர் சேர்மன் : "ஓ" என்றுல் கிருஷ்ணசாமி நாயுடு என்று வந்துவிடுகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அதற்கு நமது மாண்புமிகு தலைவர் அவர்கள் தொடர்ந்து இம்மாதிரியான சட்டங்கள், சட்ட மன்றத்தில் வருகிறபோது அதற்கான குறிப்புகளை தமிழில் வைக்க வேண்டும் என்று சொல்லுவார். அது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில், நாம் குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்ற நிலையில், அவர்கள் இந்த பாக்கியைச் செலுத்த முடியாத நிலைமைக்கு உள்ளானவர்கள் என்று ஆராய்ச்சி செய்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட பிறகு, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியது தான். அதே நேரத்தில் இந்தக் குத்தகையைப் பெறுததால் நிலச்சுவான்தார்களில் யார் யாருக்கு எப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதையும் கண்டறிந்து, நிலச் சொந்தக்காரர்களாக இருந்ததற்காக அந்த நிலத்துக்கு ஏற்கெனவே அரசாங்கத்திற்கும், பல்வேறு கடன்களுக்கும் பணிகளுக்கும் கொடுத்துக் கொண்டுவந்து குத்தகையையும் இழகும் பொறுப்பிலே இருந்த நிலச்சுவான்தார்களுக்கும் பொருளாதார வகையிலே பலனேம் நேரிடாத வகையில் நிவாரணம் அளிக்க வகை செய்ய வேண்டியது மிக மிக அவசியம். அவ்வாறு இந்தச் சட்டத்திலே சொல்லப்படவில்லை, செய்யப்படவில்லை.

1971-ஆம் ஆண்டுக்கு முன்னுல் நிலத்திலேயிருந்து வெளியேற்றப் பட்டவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலே, இந்தச் சட்டத்திலே அவர்களுக்கு நிவாரணம் இல்லை. 1971-72-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்கள் கடைசி வருஷக் குத்தகையை மட்டும் செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு இதன் மூலம் வகை செய்யப்பட்டிருப்பதாக என் மனதிற்குப் படுகிறது. இதிலே வித்தியாசம் இருக்கிறது. அதற்கு முன்னுல் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர் களுக்கும் அந்த பாக்கிக்காக அரசாங்கமே கடனுக அளித்து அவர்கள் அந்த நிலங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள வழி வகையை என் செய்திருக்கக்கூடாது ? அதை யோசிக்கலாம். அதையெல்லாம் செய்ய வேண்டியதுதான். ஆகவே ஒரு சாராருக்கு மட்டும் இதிலே அனுகூலம்

6th April 1972] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

இருக்கிறது. குத்தகை சாகுபடி செய்து பாக்கியைத் தாமல் நிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்ட பலருக்கு இந்த அனுகூலம் இல்லே. இப் பொழுதும் ஒன்றும் காலம் அதிகமாகிவிடவில்லே. சந்தர்ப்பம் இல்லே என்று சொல்லமுடியாது. மேலவையிலேகூட இதை நிறைவேற்றுவதை நிறுத்தி வைத்துக்கொண்டு நிலத்தைவிட்டு அவர்களே வெளியேற்றி விடாதபடி ஒரு தடையை மட்டும் விதித்துவிட்டு, இவைகளையெல்லாம் ஆராய்ந்து நன்றுக யோசித்து, இந்தச் சட்டம் உபயோகமானதென்றுலும் எல்லோரும் வரவேற்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தை யாருக்கும் பாதகமில்லாதபடியாகக் கொண்டுவரலாம் என்று நான் கருதுகிறேன். அவ்வாறு இந்தச் சட்டத்தை நல்ல முறையில் தயாரித்து கொண்டுவர வேண்டுமென்று நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப் பொழுது குத்தகைக் குடிவாரச் சட்டத்திலே நிவாரணம் அளிக்கக்கூடிய அளவுக்கு சென்ற சில ஆண்டுகளாக நாட்டிலே உற்பத்தித் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயப் பெரு மக்கள் தங்களுக்கு வினேவே இல்லாத காரணத்தால், அதற்குக் குத்தகை கட்ட முடியவில்லே என்று நீண்டகாலம் கஷ்டப்பட்டதை எண்ணி இந்த அரசாங்கம் இன்றைக்கு ஒரு சட்டத்தை கொண்டுவந்திருக்கிறது.

** ** ** **

திரு. வி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர் 10-50 களுக்கு நிவாரணம் அளிக்கின்ற இந்தச் சட்டத்தைப் பாராட்டி ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்லும் வாய்ப்பு தந்த உங்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தால் இந்த அவை யில் பிரச்னைகள் ஏராளமாகக் கிளப்பப்பட்டிருக்கின்றன. நான் ஒத்துக் கொள்கிறேன். உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசுகின்றபோது, ஏழைகள், ஏழைகள் என்று சொன்னுர்கள், மற்றவர்கள் எல்லாம் ஏழைகளுக்காக அல்ல என்ற முறையிலே. சட்டமே ஏழைகளுக்காகத் தான் செய்யப்படுகிறது. ஆகவே கொஞ்சம் பணக்காரர்களாய் இருப்பவர் கள் அதிகமாக நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பஞ்சமா பாதகத்தில் ஒன்று அல்ல. காலம் மாற, மாற ஜனநாயகம் மலர மலர, எல்லோருக்கும் நிலம் வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இந்தச் சட்டத்தால் நிலம் கிடைத்துவிடுமா என்று கேள்வி கேட்டால், நிச்சயமாக நிலம் அதிகமாக வைத்திருப்பவர்கள் இனி நிலம் அதிகமாக வைத்திருந்தால் என்னென்ன தொல்லே வருமோ என்று நினைக்கிற அளவுக்கு, இந்தக் குத்தகைதாரர்களுக்கு நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இருக்கிற நிலச் சொந்தக்காரர்களை "பண்டமெண்டல் ரைட்" என்ற அடிப்படையில் ஒழித்துவிடுவதற்காகச் செய்யப்படுகிற சட்டமல்ல. கடன் நிவாரணம் தான். 2 வருஷம் 3 வருஷம் நிலத்தில் உழைத்துவிட்டு, அவர்கள் அதை வைத்துக்கொண்டு வாழ வழியில்லாமல், அதிலும் ஏராளமாக நஷ்டப்பட்டுவிட்ட அப்பாவி

** Expunged as ordered by the Chair.

யான ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள், பயிரிட்டு அதனுல் வாழமுடியாமல் 2, 3 வருஷமாகக் கஷ்டப்பட்டவர்கள்—அவர்களுக்காகத்தான் இந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் வாயிலாக இப்போது எராளமாக எல்லோருக்கும் ஆசை வந்திருக்கிறது. ஒரு எக்கர் கிடைக்காதா, 2 எக்கர் கிடைக்காதா என்று ஏழைகள் நினைக்கிறார்கள். நிலம் வைத்திருப்பவர்களே "லேண்டு லார்டு" என்கிறோம். "லேண்டில்" என்ன லார்டு?.

'Landlord has gone out', 'Landowner' என்ற பதம் போட்டிருந்தால் நான் உள்ளபடியே பாராட்டியிருப்பேன். இந்தக் காலத்தில் Landlord இருப்பதாக நான் எண்ணவில்லை. Landlord இருந்தாலும், நம்முடைய அரசு விடமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தான் இந்தச் சட்டத்தைப் பாராட்டுகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் இனி ஏழைகளுக்கு எராளமாக நிலம் கிடைக்க இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். "லேண்ட் ஓனர்களும்" இனி தங்கள் நிலத்தை விற்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே 2, 3 எக்கர்கள் எதிர்காலத்தில் இவர்களுக்குக் கிடைக்கும் என்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் என்ற அடிப்படையில், இந்த மசோதா வருகிறது என்ற தன்மையில் இதைப் பாராட்டி, நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சபைமுன் விவாதத்தில் இருக்கும் மசோதா, பொதுவாக மிகவும் வரவேற்கத் தகுந்த ஒரு மசோதா. பலவிதமான பிரசினைகள் இந்த மசோதாவின் பேரில் எழுப்பப்பட்டிருக்கின்றன. பலவித சர்ச்சைகளுக்கு உட்பட்டிருக்கிறது. பொதுவாக நிலச்சீர்த்திருத்தம் என்பது, எந்தக் காலத்திலும் முடிவாகத் தீர்க்கப்பட்டதே கிடையாது. இந்திய தேச சரித்திரத்தை நாம் எடுத்துக் கொள்வோமேயானுல், அக்பர் சக்கரவர்த்தி கூட முழு முயற்சி எடுத்தும் பலிக்கவில்லை. எப்படியாவது நிலப் பிரசினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்று, மொகலாய சக்கரவர்த்திகள் காலத்திலிருந்து ஒவ்வொரு "டைனஸ்டி" என்றிருக்கிற வம்சாவளி அரசர்களும் அதில் முயற்சி செய்துவந்திருக்கிறார்கள். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னலே, 1937-ம் வருஷம் இருந்த காங்கிரஸ் மந்திரிசபை ஒரு பெரிய புரட்சிகரமான அளவில் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை அன்று கொண்டு வர ஏற்பாடு செய்தார்கள். அது ஒரு பெரிய சீர்திருத்தம். அன்றையதினம் ரத்தம் சிந்தாமல் ஏற்பட்ட பெரும் புரட்சி என்று நாடே அன்றைக்கு இருந்த மந்திரிசபையைப் பாராட்டி பெருமிதமாகப் பேசப்பட்டது. அவ்வளவு பெரிய புரட்சி இன்று உள்ளவர்கள் கண்முன் ஒரு சிறிய விஷயமாகத் தென்படுகிறது. அதேமாதிரி, இந்த நாட்டில் மன்னர்கள் இருந்தார்கள், இப்போது அவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள். மன்னர்கள் எல்லாம் ஒழிந்து, மன்னர் மானியம் என்ற அந்த முறை ஒழிந்தபோது அது ஒரு பெரிய புரட்சியான மாறுதலாகத் தான் வந்தது. ஆனுல் நாள் ஆக ஆக, அதனுடைய பெருமையும் மங்க ஆரம்பித்தது. நிலச் சீர்த்திருத்தம் என்னும்போதுகூட, ஒரு காலத்தில் சீர்த்திருத்தம், ஒரு பெரிய மாறுதல் என்று தென்படுவதில் சில வருஷங்கள் கழித்து

பல குறைகள் இருப்பது தெரிகிறது. அந்தக் குறைகளை அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசு, சுதந்திர நாட்டில் அதற்கான திருத்தங்களைச் செய்து, பெருவாரியான மக்களுக்கு நன்மை செய்வதற்கு எதாவது திருத்தங்களைக் கொண்டுவரத்தான் வரும், அதைத்தான் செய்து வருகிறார்கள். இப்போது அவையின் விவாதத்தில் இருக்கும் மசோதா மிகவும் இன்றியமையாதது, மிகவும் அவசரமானது. அந்தத் தேதி தவறியிருந்தால், இந்த மார்ச் மாதம் 31 தேதிக்குள் இதில் நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால், அதனுல் பாதிக்கப்படுபவர்களின் நிலைமையை நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானுல், அந்தச் சட்டத்தின் அவசரமும், அவசியமும் எவ்வளவு என்பது தெரியும். மார்ச் மாதம் 31 தேதிக்குள் இது அமுலுக்கு வராதிருக்குமானுல், ஒரு லட்சம் பேர் விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருப்பார்கள். நஞ்சை நிலமானிலேயே 25 ஆயிரம் குடும்பங்கள், மாயவரத்தைச் சுற்றிலும், தமிழ் நாட்டிலே பார்த்தால் உடனடியாக ஒரு லட்சம் ஜனத்தொகையுள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அந்த 25 ஆயிரம் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் காமராஜர் அவர்கள் பிப்ரவரி மாதத்தில் 25-ந்தேதி மாயவரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் சொன்னார். நானும் அதில் பேசினேன். அந்தக் கூட்டத்தில் அவர் வெளியிட்டார். "இப்போதுள்ள அரசாங்கம், குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் ஏழைகளாய் உள்ள இவர்களுக்காகத் தான் நாம் அரசாங்கம் நடத்துகிறோம் என்று சொல்கிறார். இவர்களைக் காட்டிலும் ஏழைகள் யார் இருக்கிறார்கள்? 25 ஆயிரம் குடும்பங்கள் இன்னும் 1 மாதத்துக்குள் அவர்கள் மிகவும் மோசமான நிலைமையில் நிலத்தை விட்டு விரட்டி அடிக்கப்படப்போகிறார்கள். இதை கவனித்து, இதற்கு என்ன செய்யப் போகிறார் முதலமைச்சர் என்று தெரியவில்லை. அவர் இதில் ஏதாவது செய்யத் தவறினுல், ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்படும். நானே முன்னின்று அந்தக் கிளர்ச்சியை நடத்துவேன், அதை ஆரம்பிப்பேன்," என்று பேசினார். தலைவர் இப்படிச் சொல்லும்போது, ஒரு லட்சம் பேராவது அந்தக் கூட்டத்தில் கூடியிருப்பார்கள். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். பொதுமக்களிடத்தில் அந்த உணர்ச்சி இருந்தது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே மேற்கொண்டு "இந்த மசோதா வர வேண்டுமென்று பலமான கிளர்ச்சி நடக்கும், எவிக்ஷனைத் தடுக்க வேண்டும், நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தாமலிருக்க வேண்டும். இதற்கான வகையில் ஒரு மாதத்துக்குள் ஒரு அவசரமான முயற்சி அரசு எடுக்க வேண்டும். அதற்காக ஒரு கிளர்ச்சி ஆரம்பிப்பதாய் இருந்தால், அதை முன்னின்று நடத்துவேன்", என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அங்கே எற்பட்ட உணர்ச்சிகளையைப் புரிந்துகொண்ட முதலமைச்சர் அவர்களுடைய மனதில் முன்னலேயே அந்த எண்ணம் இருந்திருக்கவேண்டும். 3 தினங்களில் அவ்வளவு சீக்கிரமாக அச்சடித்து, கவர்னர் உரையிலேயே அதைக் கொண்டுவரும் வகையில், அது அவருடைய மனத்தில் உறுத்திக்கொண்டிருந்திருக்கும். அந்த 1-ந் தேதி கூட்டத் தொடரில் இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்கு என்னுடைய ஆதரவு உண்டு. நான் முதலமைச்சரைப் பாராட்டி, இந்த 25 ஆயிரம் குடும்பங்கள், ஒரு லட்சம் ஜனத் தொகை கொண்ட அவர்களைக் காப்பதற்காகக் கடைப்பிடித்த குறிப்பிட்ட கொள்கையைப் பாராட்டி, நான் அன்று பேசினேன். 11-00 a.m.

[திரு. கே. ராஜாராம்] [6th Apr 1972

ஆகவே இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கைபற்றி எந்தவித மான ஆட்சேபணையும் கிடையாது. எவிக்ஷனிலிருந்து அவர்களைக் காப் பாற்றியது பெரிய காரியம். என்னுடைய குறையெல்லாம் இது கொஞ்சம் அரைகுறையாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான். இன்னும் முழு மன தோடு செய்திருக்கலாம். முன்பெல்லாம் நிலம் வைத்திருந்தால் நிலத்தை அடமானம் வைத்துத்தான் லோன் வாங்க முடியும். இப்பொழுது அப்படி யில்லை. குத்தகை எடுத்தவர் நிலச் சொந்தக்காரராக இல்லாமல் இருந்தாலும்கூட பயிரை அடமானம் வைத்து சர்க்காரிலிருந்து கடன் வாங்கலாம் என்று இருக்கிறது சில வருடங்களாக. ஆகவே இதே குத்தகைக்காரர்கள் அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கியிருக்கிறார்கள். மற்றவர்களிடம் கடன் வாங்குகிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடன் பூராவையும் தள்ளுபடி பண்ணவில்லை. என்ற லும் கூட, கொஞ்சம் ஒத்திப்போடலாம் என்ற ஷரத்தைச் சேர்த்திருக்கலாம். அரசாங்கம் தான் செய்ய வேண்டிய இந்தக் கடமையை ஏன் செய்யவில்லை? அவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்களையும் கூட இன்னும் சில காலம் கழித்துச் செலுத்தலாம் என்று சேர்த்திருக்கலாம். அதை விட்டுவிட்டார்கள். அப்படிச் செய்திருக்கலாமே முழுமனதோடு என்ற ஒரு குறைதான் எனக்கு.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தினால் எற்படக் கூடிய நன்மைகள்.... குத்தகைக்காரர்கள்.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போதே சின்ன விளக்கம் ஒன்றைச் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். அரசாங்கக் கடன்கள், அரசாங்க வரிகள் இவை களையெல்லாம் கூட தாமதமாக வசூலித்திருக்கலாமே, அதைத் தள்ளு படிசெய்யலாமே என்ற பொருள்படும்படி சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 1966, 1967, 1968, 1969, இந்த ஆண்டுகளிலே வரி வசூலை நிதானப் படுத்த வேண்டும்; அவசரப்படுத்தக் கூடாது; இவைகளையெல்லாம் "Go slow policy" யின் கீழ் கொண்டு செல்ல வேண்டுமென்று அரசாங்கம் அப்பொழுதே ஆணையிட்டிருக்கிறது. வரிகளையெல்லாம் வஜா செய்யக்கூடாது என்பது அல்ல; வசூல் செய்வதைத் தாமதமாகச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் ஆணை யிட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : இதில் பல பேருடைய கவனத்திலிருந்து விட்டுப்போன ஒரு முக்கியமான நன்மை, அதை யாருமே குறிப்பிட்டுப் பேசவில்லையென்று நினைக்கிறேன்—வரப்போகிற சட்டத்தினால் எற்படக் கூடிய நன்மை என்னவென்றால், காலாவதியான குத்தகைகளைக்கூட இப்போது இருக்கக் கூடிய ரெவின்யூ போர்டுக்குச் செலுத்தச் சொல்ல லாம் என்று சட்டத்தில் இருக்கிறது. "லிமிட்டேஷன் பார்" ஆனாலும்கூட குத்தகை பாக்கிகளைச் செலுத்த வேண்டுமென்று உத்திரவிட ஆர். டி. ஓ. வுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதை இப்பொழுது கொண்டு வந்திருக்கும் திருத்த மசோதாவில் ரத்து செய்திருக்கிறார்கள். இது

6th April 1972] [திரு. கே. ராஜாராம]

ஒரு பெரிய நன்மை. இப்பொழுது காலாவதியான கடன்களைக் கொடுக்கச் சொல்லக் கூடாது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது விளக்கமாக எடுத்துச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என் பேச்சுத் தொடர்ச்சியிலே விட்டுப் போய்விடுமோ என்பதால் ஒரு சின்ன விளக்கம் சொல்லிவிடு கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க உண்மைதான். எற்கெனவே போட்டிருந்த டெனென்ட் சட்டத்தின் கீழ் பாக்கியெல்லாம் கேட்பதற்கு உரிமை உண்டு என்று போட்டார்கள். முன்பிருந்த அரசாங்கம் இதைப் போட்டது தவறு என்று சொல்வதாகக் கருத வேண்டாம். அன்றைக்கு இருந்த சட்டம் சரியென்ற காரணத்தினால், அப்பொழுது அப்படிப் போட்டார்கள். ஆனால் இப் பொழுது எங்களிடத்தில் கொண்டுவரப்பட்ட குறைபாடுகளையெல்லாம் கண்டு அப்படிப்பட்ட சட்டத்தில் ஒரு திருத்தம் போட வேண்டுமென்று கருதி னோம். மூன்று வருடங்களுக்கு மேலே கடனே கிடையாது. மூன்று வருடம் தாண்டிவிட்டால் அதைக் கேட்பதற்குப் பணம் கொடுத்தவ னுக்கே உரிமை இல்லாத போது குத்தகை மட்டும் கொடுக்க உரிமை இருக்க முடியாது. எனவே காலாவதியான கடனை வசூலிக்கக்கூடாது என்று அந்தச் சட்டத்தில் புது ஷரத்து ஒன்றினைப் போட்டோம்.

திரு. கே. ராஜாராம் : குத்தகை செய்யக் கூடியவர்களுக்கு இவ்வளவு நன்மை கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கோர்ட்டுக்குக் கொடுத்திருந்த அதிகாரத்தைக் கூட ரத்து செய்தது உறுதியான ஒரு நன்மை. . .

தவத்திரு தெய்வசிகாமணி அருணைசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்): நிலச்சுவாந்தார்களுக்கும் இலாபம் தான்.

திரு. கே. ராஜாராம் : இதிலே இன்னுமொரு முக்கியமான விஷ யத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்தச் சட்டத்திலும் விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாளைய தினம் இங்கு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்போகிற மாசோதாவில்கூட "Agriculturists Debt Relief Bill" இல் கூட விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. சில குத்தகைக்காரர்கள் எராளமாக வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். வருஷத்துக்கு பத்தாயிரம், இருபதினாயிரம் என்று வருமான வரி செலுத்துகிறார்கள். 20 ஆயிரம் ரூபாய் வருமானம் செலுத்தக்கூடிய அளவுக்கு சென்னையிலே வியாபாரம் செய்துகொண் டிருக்கிறார்கள். அவர்கள் தனக்கு சாப்பாட்டுக்கு அரிசி வேண்டும் என் பதற்காக சொந்த நிலமில்லாமல் 4 எக்கர், 5 எக்கர் என்று குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். அவர்களும் குத்தகைக்காரர்கள்தான். யார் யாருக்கு இந்தச் சட்டத்தினுடைய அனுகூலங்கள் கிடைக்க வேண்டுமென்று சொல்லும்போது, இவர்களுக்கு என் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். வருமானவரி செலுத்தக்கூடிய அந்தக் குத்தகைக்காரர்கள்

தஞ்சாவூர், மாயவரம் பக்கத்தில் பல பேர்கள் இருக்கிறார்கள். இந்த மாதிரி இந்தச் சட்டத்தினால் அனுகூலம் அடைபவர்களிலிருந்து சில பேரை விலக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சின்ன விளக்கத்திற்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். நிலத்தை எடுத்த குத்தகைக்காரர்கள் சென்னையிலே வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படி இருப்பது துர்லபம் என்று கருதுகிறேன். எனெனில் குத்தகை எடுத்தவர்கள் சென்னையிலே இருக்க முடியாது. அவர்கள் அங்கே நிலத்தை உழுவதற்காக இருக்க வேண்டும். வேறு யாரிடத்திலாவது கீழ்க குத்தகைக்கு விடுவார்களேயானால், அந்தக் கீழ்க் குத்தகைக்காரர்களே குத்தகைக்காரர்களாக வந்துவிடுவார்கள் என்று சட்டத்திலே போட்டிருக்கிறோம். எனவே சென்னையிலே வியாபாரம் செய்கிறவர்கள் சொந்தமாக நிலம் வைத்திருக்கலாம். குத்தகை எடுத்துக் கொண்டு நடத்துகிறார்கள் என்று சொன்னால், துர்லபம் என்று கருதுகிறேன். ஆங்காங்கே ஒன்றிரண்டு அப்படி இருக்கக் கூடும். அப்படியிருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கீழ்க் குத்தகைக்காரர்கள், குத்தகைக்காரர்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள், அவர்கள் குத்தகைக்காரர்களாக இருக்கமாட்டார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : குத்தகைக்காரர்களைப் பொறுத்து அவர்களை உழுபவர்களாக இருக்க வேண்டுமென்று எந்தச் சட்டமும் இல்லை. அவர்கள் குத்தகை எடுத்துக்கொண்டு ஆட்களை வைத்துக்கொண்டுகூட பயிர் செய்யலாம். ஆகவே குத்தகைக்காரர்கள் உழுவதற்காக அங்கேயே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது சரியானதாக இல்லையென்று அபிப்பிராயப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் தெரிவித்தது அப்படி அங்கே இரண்டொருவர் இருக்கக்கூடும். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வராமல் இருக்கக் கூடும். அப்படி அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அந்தக் கீழ்க்குத்தகைக்காரர்களுக்கு குத்தகைக்காரர்களாக உரிமைகள் கிடைக்கும்படி செய்வோமே தவிர இந்தக் குத்தகைக்காரர்கள் குத்தகைக்காரர்களாக இருக்கும்படி விதியில் இல்லை. ஏற்கெனவே உள்ள விதியில் கீழ்க் குத்தகைக்கு விடக்கூடாது என்றுதான் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : கீழ்க் குத்தகைதாரர்களாக இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. நானே குத்தகை எடுத்துக்கொண்டு நான் கைந்து ஆட்களை வைத்து அந்தக் குத்தகை நிலத்தைப் பயிர் செய்து குத்தகைதாரராக இருக்கலாம். தற்போதுள்ள சட்டத்தில் குத்தகைதாரர்கள் உழவர்களாக இருக்க வேண்டுமென்று கிடையாது. ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, சென்னையிலோ அல்லது அந்தந்த ஊர்களிலோ வட்டாரங்களிலோ பல பேர் இருந்துகொண்டு,

குத்தகை எடுத்துக் கொண்டு, அவர்கள் மற்றவர்களை வைத்துக்கொள்ளும் சிறு விவசாயிகளாக நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிறு குத்தகைக்காரர்களைக் குத்தகைக காரர்களாக ஆக்க வேண்டுமென்று அபிப்ராயம் சொன்னது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யார் யார் அப்படிச் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். தனிப்பட்டவர்கள் பெயரையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படிச் சட்டத்தின் உள்ளே புகுந்து ஏமாற்றுபவர்களின் பெயரைச் சொல்லுவார்களேயானால், அது சாங்கத்திற்கு உதவியாக இருக்கும். சட்டத்திலே குத்தகைக்காரர்கள் உழுபவர்களாக இருக்க வேண்டுமென்று இல்லை என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். சட்டத்திலே இல்லையென்று சொல்லினும், அவர்கள் அங்கே நிலத்திற்கு குத்தகைக்காரர்கள் என்று சொல்வதைவிட நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். தஞ்சையிலே இல்லாவிட்டாலும், வேறு இடத்திலாவது இருக்க வேண்டும். வேறு எங்கோ இருந்து கொண்டு சென்னையிலே இருக்கிறவர் தஞ்சையிலே குத்தகை எடுத்துக் கொண்டு அங்கு இருக்கின்ற நிலத்தில் பயிர் செய்வது என்று இருப்பதாகத் தகவல் தெரிகிறது. அந்தத் தகவல்களைத் தெரிவிப்பார்களேயானால் ஒன்று மட்டும் நான் உறுதியாகச் சொல்லுகிறேன்—அதற்குண்டான சட்டத்திற்குக் கூட திருத்தம் கொண்டுவந்து இம்மாதிரி சட்டத்தையும் சமுதாயத்தையும் ஏமாற்றுபவர்களைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

11-10 a.m.

THIRU A. R. DAMODARAN : Sir, I may clarify. There is no question of anybody trying to go behind the Act. According to the present Act, for example, in Nellikuppam, there are persons who have taken four or five acres for growing sugarcane. They are also considered cultivating tenants, because they employ their own staff to cultivate the land. But, such people are also property tax assessees, sales tax assessees, and income-tax assessees. What we are trying to say is that the benefit of the Act should be restricted only to these class of poor landless labourers who have no other way of paying rent, and such persons should not be exempt from the provisions.

THE HON. THIRU P. U. SHANMUGAM : I think it is difficult to find out who are poor people, who are income-tax assessees who are sales tax assessees and who have got property and other things. But it will be very difficult to find out and it will be a laborious process which is not going to give us a substantial thing. By this Act, we have come forward to give relief to the poor class people. In this Section some persons who can afford to pay may also escape in respect of which we can do nothing.

THIRU G. SWAMINATHAN: Sir, in one of the Bills that have been submitted for discussion, I find the same clause. Most probably, in the Debt Relief Bill, the Income-tax payers and others have been exempted. If this could be found for them, the same could be given for these people also.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் சொன்னதை மறுபடியும் சொல்கிறேன். இன்கம்டாக்ஸ் அஸெஸி பட்டியலைக் காட்டுகிறார்கள், சேல்ஸ் டாக்ஸ் அஸெஸி பட்டியலைக் காட்டுகிறார்கள். அதை வைத்துக் கொள்ளலாம். குத்தகைக்காரர்கள் யார் என்ற பட்டியலில் இவர்கள் வருகிறார்களா என்று கணக்கு எடுத்துப் பார்ப்பது சுலபமான காரியமல்ல. அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் சலுகை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைச் செய்யவில்லை. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாயும். அதைத் தவிர்க்க முடியாது. மொத்தமாக ஏழைகளுக்குப் பாதுகாப்பு என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல, லட்சக்கணக்கான குடும்பங்களை ஒரு பெரிய ஆபத்திலிருந்து மீட்பதற்கு இந்தச் சட்டத்தைச் செய்கிறோமே தவிர, யாரோ ஒரிருவர் சென்னையிலிருந்து கொண்டு குத்தகை எடுத்துச் செய்வார்களானால், அப்படியிருக்கிறவர்களுக்காகச் செய்தோம் என்பது அல்ல. அப்படிப் பட்டவர்கள் தப்பித்துக்கொள்வார்களானால், அதற்குச் சட்டத்தில் ஒன்றுமில்லை. குத்தகைக்காரர்கள் என்ற பெயரில் சென்னையில் இருக்கிறவர்கள் தஞ்சாவூரில் இருக்கிற நிலத்தை எடுத்து வைத்துக் கொண்டு தஞ்சைக்குப் போகாமல் யாராவது ஒருவருக்குக் குத்தகைக்கு விட்டு, கீழ்க் குத்தகைக்கு விட்டுச் செய்வார்களானால், அதற்குச் சட்டத்தில் இடமில்லை. சென்னையில் இருக்கிறவர்கள் கீழ்க் குத்தகை என்று எதுவும் செய்ய முடியாது. கூலி ஆட்களை வைத்துப் பயிர் செய்தால், அவர்களே பயிர் செய்வதற்குச் சமம். கீழ்க் குத்தகை விடுவதற்கு சட்டத்தில் இடமில்லை.

THIRU A. R. DAMODARAN: On a point of explanation. According to the Bill that has been moved by the Hon. Minister, the Tamil Nadu Debt Relief Bill, one of the significant provisions of the Bill is as follows :

" Provided that a person shall not be deemed to be a debtor if he has in both the financial years been assessed to income-tax under the Income-tax Act of 1961 or has been assessed to the Agricultural Income-tax under the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955." We are not asking the Government to prepare a 'pattial' or a list of persons who have been assessed to income-tax, Agricultural Income-tax or property tax. It is enough if the Hon Minister makes a provision in the Bill. The land-owner will find out whether such a person is assessed under this Act and take it to the Court. That is all we want.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்படி ஒரு பட்டியலைத் தயாரிப்பது சிரமமான காரியம் என்று நான் தெரிவிக்கவில்லை. இந்தப் பட்டியல் எங்களிடத்தில் இருக்கிறது. அதற்குத் தகவல் உண்டு. நான் தெரிவித்தது, குத்தகைதாரர்களாக யார் யார் நிலத்தை வைத்திருக்கிறார்கள். 5 ஏக்கர் 3 ஏக்கர் என்று யார் யார் வைத்திருக்கிறார்கள் என்று கிராமம் கிராமமாகச் சென்று விசாரணை நடத்தி, இந்தப் பட்டியலில் இருக்கிறார்களாவென்று பொருத்திப் பார்த்து சட்டத்தில் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பது இயலாத காரியம். நடைமுறைக்கு வராத காரியம். போகாத ஊருக்கு வழி காட்டுவதாக இருக்கும். நடை முறைக்கு ஒத்து வராது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் நிலச் சொந்தக்காரராக இருந்து எனக்கு என்னுடைய குத்தகைக்காரர் பணம் கட்டாமலிருந்தால், அவர் இன்கம் டாக்ஸ் அல்லது சேல்ஸ் டாக்ஸ் செலுத்துபவரா என்பது எனக்குத் தெரியும். அப்படி அவர்கள் கொடுக்கவில்லையென்றால், அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், நீங்கள் விசாரணை செய்து செயல்படலாம். அதில் எந்த விதமான கஷ்டங்களும், சிரமங்களும் கிடையாது. அமைச்சரவர்கள் நியாயத்தை உணர்ந்து பார்க்க வேண்டும். இதைப் பெரிய சிரமமான காரியம் என்பதாக நினைக்க வேண்டியதில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்ட விஷயம் இது. கொள்கையைப் பொறுத்த வரையில், இன்கம் டாக்ஸ் செலுத்துபவர்கள், விவசாய வருமான வரி செலுத்துபவர்கள் இப்படி வசதியோடு இருக்கக் கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தின் சலுகைகளை, நன்மைகளைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. டெட் ரிலீஃப் ஆக்டில் உள்ளபடி செய்யலாம்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக்ட்படி இந்த வருமான வரி செலுத்துபவர்கள் டெனன்ட்டாக வர முடியாது. எதாவது ஒரு வகையில் நிலத்தில் அவனது "கண்ட்ரிப்யூஷன்" இருக்க வேண்டும். சென்னையில் இருந்துகொண்டு ஆடுதுறையில் விவசாயம் பண்ணுகிறேன் என்று சொல்ல முடியாது.

THIRU A. R. DAMODARAN: Sir, there is no need for any cultivating tenant to remain in Madras and cultivate the land in Thanjavur. He can remain in Thanjavur Town and still be a cultivating tenant.

திரு. கே. ராஜாராம் : ஆகவே, உடனடியாக அசெம்பிளியில் நிறைவேறிய ஒரு மசோதாவை இங்கு துரிதமாகக் கொண்டு வந்து நிறைவேற்றுமென்ற அந்த எண்ணத்துடன் நாங்கள் சொல்லவில்லை. நியாயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். உடனடியாகச் செய்யவில்லையென்றாலும், கவனத்தில் வைத்துக் கொண்டு எப்படித் திருத்த வேண்டுமோ அப்படி இந்த மசோதாவிற்குத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது நலம்

என்பதை எடுத்துக் காட்டத்தான் பேசுகிறேமேயொழிய, வேறில்லை. டெட் நிலீஃப் ஆக்டில் கொடுத்திருக்கக் கூடிய எக்ஸம்ப்ஷனே இதற்கும் கொடுத்துவிட வேண்டும். "டெட் நிலீஃப் ஆக்ட்"படி அனுகூலங்கள் கிடையாது என்று சொல்லிவிட்டு, இந்தக் குத்தகை நிவாரணச் சட்டத்தில் மட்டும் ஏன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் அரசாங்கமும் இதை ஒப்புக்கொள்ளும். கொள்கை ரீதியில் மாறுபட்ட அபிப்பிராயம் இல்லை. கூடிய சீக்கிரம் திருத்தத்தை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். கருணை கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இது நல்ல மசோதா, உரிய காலத்தில் செய்த ஒரு நல்லகாரியம் என்று சொல்லிக் கொண்டு இதை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாறி வரும் சமுதாயத்திற்கு ஏற்றவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த மசோதா பேரவையிலே நிறைவேறி மேலவைக்கு விவாதத்திற்கு வந்து பல அங்கத்தினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மசோதா மேலவையிலே, பேரவையைவிட கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறதென்று சொன்னால், அது மிகையாகாது. இந்த மேலவையில் விவாதித்த நண்பர் உயர்திரு தாமோதரன் அவர்கள் வழக்கத்திற்கு மாறுகக் கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைப் போட்டு இந்த மசோதாவைத் தாக்கினார்கள். இந்தச் சட்டம் கொடுமையான சட்டம், ஒழுக்கக் கேடான சட்டம் என்று பொருளபடும்படி பேசினார்கள். அவர்கள் பேசும்போது, குத்தகையைத் தள்ளுபடி செய்வது போல நாட்டில் வீட்டு வாடகை, கடைகளுக்கான வாடகை இவைகளைக் கொடுக்க முடியவில்லை என்று அதற்கும் தள்ளுபடி செய்யலாம் என்று சட்டம் போடலாமே என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணம் : 1966-ம் ஆண்டு தஞ்சை மாவட்டத்திலேயும், தமிழ் நாட்டிலுள்ள மற்ற பல பகுதிகளிலேயும் வறட்சி ஏற்பட்டது. அந்த வறட்சி காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டது. 1966-ல் பாதிக்கப்படப்போய் 1967-இல் குத்தகைகளை ஒத்திவைக்கின்ற, தள்ளி வைக்கின்ற ஒரு சட்டத்தை அபோதிருந்த அரசாங்கம் பிரகடனம் செய்து விட்டுச் சென்றார்கள். அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்த நேரத்தில் 1968-ம் ஆண்டு இதை மீண்டும் ஒரு ஆண்டிற்கு நீடித்தார்கள். அதன் பிறகு சட்டத்தைப் போடும்போது 4 தவணைகளாகப் பிரித்துக் கொடுங்கள் என்று சட்டம் போட்டோம். 4 தவணைகளாகக் குத்தகையைக் கொடுங்கள் என்று சொன்ன நேரத்தில் 4 ஆண்டுகளின் குத்தகை பாக்கி தேங்கி விட்டது. 4 பாகங்களாகப் பிரித்துக் கொடுங்கள் என்று சொல்லும்போது, ஒரு ஆண்டிற்கான குத்தகை 40 சதவீதத்தையும், ஏற்கெனவே கொடுக்க வேண்டிய 4 ஆண்டு பாக்கிகளில் ஒரு பங்காக ஒரு ஆண்டு பாக்கியான 40 சதவீதத்தையும் சேர்த்து ஆக 80 சதவீதம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகின்றனர். இதிலே விவசாயிகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள், பாதிக்கப்படுவார்கள் என்பதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மிக விரிவாகப் பேசினார்கள். நிலம் வைத்திருக்கிறவர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறதே, என்ன பாதுகாப்பு அளித்தீர்கள்

என்று நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விளக்கமாகக் கேட்டார்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள், நிலத்தை குத்தகை எடுப்பவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்கள் இருவருமே ஏழைகள் தான், ஆக ஒரு ஏழைக்கு நன்மை செய்கிறேன் என்று சொல்லி இன்னொரு ஏழையின் வயிற்றில் அடிக்கிறீர்களே, நியாயம்தானா என்று கேட்டார்கள். நிலத்தை வைத்திருக்கிறவர்கள், நிலத்தை உழுபவர்கள் இருவரையும் ஒரே தட்டில் எடை போட்டுப் பார்ப்பது சரியல்ல. இந்த அரசைப் பொறுத்த மட்டில், இதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலத்தில் விளைந்தால்தான் நிலத்திலிருந்து கொடுக்க முடியும். விளையாத நிலத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்பது நல்லதல்ல, தர்மமல்ல. ஆகவே, ஒரு ஆண்டு காலம் 1966-இல் விளையாத காரணத்தினால் 1967 பொதுத்தேர்தலுக்கு முன்பு இதைத் தள்ளிப்போட வேண்டும், கொடுக்க வேண்டிய காலத்தைத் தள்ளிப் போட வேண்டும் என்று அன்றைக்கிருந்த காங்கிரஸ் அரசு சட்டத்தைப் பிரகடனப்படுத்தி விட்டுப் போயிற்று. புதிதாக திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்றுக் கொண்ட பிறகு 1968-இல் இந்தச் சட்டம் காலாவதி ஆகிற நேரத்தில் இதை நீடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய சீர்திருத்தம், மறுமலர்ச்சி இவைகளுக்காகச் சட்டங்கள்செய்கிறபோது, சில நேரங்களில் காலதாமதமாவதனால் சில பாதகங்கள் ஏற்படத்தான் செய்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். பெரியவர் திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, இதைப் பொருக்குக் குழுவிற்கு விடலாம் என்று சொன்னார்கள். இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டால், இன்னும் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு பாக்கிகள் சேர்ந்து போகும். அதனால் இன்னும் பாதகம் ஏற்படுமே தவிர, பாதகத்திலிருந்து விடுவிப்பதாக ஆகாது. காலதாமதம் செய்வது கூடாது. இப்படி நெருக்கடியான கட்டத்தில் விவசாயிகள் குத்தகை பாக்கி செலுத்தவில்லையென்ற காரணத்தினால், முதலமைச்சரவர்கள் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டுவந்தோம் என்று சொன்னார்கள். ஆனால், மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்து, கொடுத்த பணத்திற்கும் அதிகமாக வட்டி கொடுக்கக் கூடிய நிலை வந்து, பிறகு கொடுத்த பணத்தைக் காட்டிலும் வட்டி அதிகமாக இருந்தால், அதை விட்டுவிட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். 11-20 a.m.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பிரின்சிபலைவிட வட்டி அதிகமாகச் செலுத்தியிருந்தால், அந்தக் கடனை தள்ளுபடி செய்துவிடலாம் என்று சட்டம் கொண்டுவந்தது உண்மை. ஆனால் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத்திற்கும் அந்தச் சட்டத்திற்கும் வேறுபாடு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப.உ.சண்முகம் : தலைவரவர்களே, அதைத் தான் நானும் சொல்கிறேன். மிகுந்த வேறுபாடு இருக்கிறது. சாதாரண வேறுபாடு அல்ல. வேறுபாடு இருக்கிற காரணத்தால் தான் நான் சொல்கிறேன்.

]திரு. ப. உ. சண்முகம்] [6th April 1972

விளைகின்ற நிலத்திற்குக் கொடுக்க வேண்டும், சரி. விளையாத நிலத்திற்கும் கூட கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அது எப்படிச் சரியாக இருக்க முடியும் என்பது தான் என்னுடைய கேள்வி. இந்தச் சட்டத்தை 1967-இல் ஆட்சியில் இருக்கிறவர்கள் கொண்டு வந்திருப்பார்களேயானால், அதைப் புரிந்துகொள்ள முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நமது உணவு அமைச்சர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால், சட்டசபையில் பேசிய போது, தமிழ்நாட்டில் சென்ற ஆண்டுகளில் நல்ல மழை பெய்து, விளைச்சல் நன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, இப்போது, விளைச்சல் இல்லை என்று சொல்கிறார்கள். அது எப்படி என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நன்றாகப் புரிந்துகொண்டு பேச வேண்டும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கோபத்தின் காரணமாகவும், ஆத்திரத்தின் காரணமாகவும் சரியாகப் புரிந்துகொண்டு பேசவில்லை என்று தோன்றுகிறது. இப்போது 1966–67 பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். 1971–72 பற்றிப் பேசப்படவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, 1967–68-க்கு மட்டும் இந்தச் சட்டம் இல்லை. தொடர்ந்து இதுவரை உள்ள விளையாத நிலங்களுக்கும் சேர்த்துத் தான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சட்டத்தைப்பற்றிப் பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொஞ்சம் விளக்கமாகப் பேச வேண்டும். 1966–67-இல் வறட்சி இருந்தது. 1966, 1967, 1968-இல் கூட "ட்ரெளட்" என்று சொல்லி தஞ்சை மாவட்டத்தில் மட்டும் திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஒரத்தநாடு ஆகிய வற்றை வறட்சி பகுதியாக அறிவித்து செலவு செய்வதற்காக 52·49 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நான் சொல்கிறபோது இந்த ஐந்து தாலுக்காக்களைத்தான் சொன்னேன். நான் வெள்ளையாகத் தானே படித்தேன். இந்தத் தாலுக்காக்களை வறட்சிப் பகுதிகள் என்று அரசாங்கம் தேர்வு செய்து ஆணை பிறப்பித்தது. ஆகவே, வறட்சி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால், வறட்சியே ஏற்படவில்லை, சந்தேகமாக இருக்கிறது என்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் அதை விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

1966-ஆம் ஆண்டு விளைந்தது. 1967-ஆம் ஆண்டு அந்த அரசாங்கம் இருந்தபோது விளைச்சல் இல்லை. வறட்சி இருந்தது என்று சொன்னால், அது தவறு என்று சொல்லவில்லை. எனவே அந்தச் சட்டம் தவறு என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : 1966–67-க்குப் பிறகும் அதற்குப் பிந்தைய வருஷங்களில் விளையவில்லை என்ற காரணத்தால், வறட்சிப் பகுதிகளுக்கு நிவாரணம் என்ற அளவில் செலவு செய்யப்பட்டதற்கு

6th April 1972] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு

ஆதாரம் இருக்கிறது என்பதைச் சொன்னேனே அல்லாமல், அப்போ திருந்த சர்க்கார் கூறிய கருத்தையோ, சட்டத்தையோ தவறு என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய சர்க்கார் அப்போது இருந்தது, எனவே அவர்கள் செய்தது நியாயம், இப்போது இருக்கிற சர்க்கார் செய்வது அநியாயம்; நியாயமில்லை என்று சொன்னால், நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கட்சியைப் பார்க்க வேண்டாம். ஏழை எளிய விவசாயிகளைப் பாருங்கள், ஏழைக் குத்தகைதாரர்களைப் பாருங்கள் என்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு விளைந்திருக்கலாம். ஆனால், எற்பட்டிருக்கிற சங்கடங்களையெல்லாம், சிக்கல்களையெல்லாம் பாருங்கள் என்று தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1966-இல் விளையவில்லை என்பதற்காக ஓராண்டிற்குக் கடன்களைத் தள்ளி வைத்துச் சட்டம் போட்டார்கள். 1968-இல் அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கடனை வசூலிக்க வேண்டும் என்று வந்தபோது, பதவி ஏற்றுக்கொண்ட புதிய நேரத்தில், விவசாயிகளை வெளியேற்ற வேண்டாம் என்று இன்னுமொரு ஆண்டு காலத்திற்கு அதை நீடித்துச் சட்டம் போட்டார்கள். அதற்குப் பிறகு 1969–70-இல் இந்த பாக்கியை தவணை களில் வசூலிக்க வேண்டும் என்று சட்டம் போட்டோம். எந்த இடத்தி லும் குறை செய்யவில்லை. நான்கு ஆண்டு குத்தகை பாக்கி ஆகிவிட்டது. அதைத் தெளிவாகச்சொல்கிறோம். ஆனால், ஒரேநேரத்தில் கொடு என்று சொல்வதற்குப் பதிலாக, நான்கு ஆண்டுகளில் கொடுங்கள் என்று சொன்னோம். அப்படியும் கொடுக்க முடியாது என்ற காரணத்தால், நாங்கள் தஞ்சை ஜில்லாவிற்குச் சென்றிருந்த நேரத்தில், அதிகாரிகளிடம் பேசினோம். விவசாயிகளிடமும் பேசினோம். அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை வைத்துக்கொண்டு பரிசீலித்த பிறகு முத லமைச்சரிடம் இதைப் பற்றித் தெரிவித்தோம். இப்படி ஒரு சங்கடமான நிலை இருக்கிறது என்று சொன்னோம். அதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து விவாதித்த பிறகு நிவாரணம் அளிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற முடிவுக்கு வந்தோம். சில சிறு சிறு நிலச்சுவான்தார்கள் எங்களைச் சந்தித்தார்கள். "இதற்கு ஒரு முடிவு காணுங்கள். ஒரு வகையில் இதை எப்படியாவது தீர்த்து விடுங்கள். இந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் சுமையாக இருக்கிறது. எப்படியாவது இந்த ஆண்டாவது இந்தக் கணக்கை முடித்து விடுங்கள்". என்று சொன்னார்கள். இதற்குப் பிறகு தான் இந்த மசோதா கொண்டு வரப் பட்டது. சட்டம் இயற்றுவதுபற்றி அமைச்சர்கள் மட்டத்தில் விவாதம் நடந்துகொண்டிருந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சித் தலைவர் மாயவரத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இதே கருத்தைத்தெரிவித்தார். உடனே முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், "நான் என்ன நினைத்துக்கொண்டிருந்தேனோ, அதையே காங்கிரஸ் கட்சித் தலைவரும் நியாயம் என்று கூறிவிட் டார்கள்" என்று. எனவே தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [6th April 1972

இதிலே இன்னொரு பிரச்னை. இந்தச் சட்டத்தினால், பெரு நிலக்காரர்கள், பெரும் நிலச் சொந்தக்காரர்கள், வசதி படைத்தவர்கள், இன்கம் டேக்ஸ் அசஸிகள் எல்லாம் பயனடைந்து விடுகிறார்கள், அவர்களுக்கு என் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். இதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குத்தகைதாரர் என்று சொல்லும்போது, ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் யாரும் இருக்க முடியாது என்று கருதுகிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி குத்தகைத்தாரர்கள் ஐந்து ஏக்கர் வரை தான் பயிர் செய்ய முடியும். தஞ்சை மாவட்டத்தில் குத்தகைதாரராக இருந்துகொண்டு சென்னையிலோ, இராமநாதபுரத்திலோ வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. அப்படி இருப்பது ரொம்ப துர்லபம். அப்படி யாரும் இருக்க முடியாது. எனவே, இதை வைத்துக்கொண்டு, சட்டத்தில் ஒரு பெரிய பாதகத்தை விளைவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனால் கோயில் நிலங்களுக்கெல்லாம் பாதகம் ஏற்பட்டுவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இதனால் கோயில்களுக்கெல்லாம் வர வேண்டிய வருமானம் போய் விட்டது. இதனால், கோயில்களில் பூசை, அர்ச்சனை, நைவேத்யங்கள் போன்றவைகள் கூட செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, ஸ்ரீவில்லிப் புத்தூருக்குப் பக்கத்தில் ஒரு கோயில். அதற்கு வரவேண்டிய வருமானம் வராத காரணத்தால், தேவஸ்தானம் சேத்தூர் ஜமீனிலிருந்து 100 கோட்டை நெல் கடன் வாங்கி அதிலிருந்து நிர்வாகத்தை நடத்த வேண்டிய நிலை இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கடன் வாங்கி ஒரு கோயிலின் நிர்வாகம் நடக்கிறது என்று சொல்கிறார்கள். ஒத்துக் கொள்கிறேன். ஹெச். ஆர். ஈ. போர்டில் ஒரு நிதி வைத்திருக்கிறார்கள். உறுப்பினர் கூறிய மாதிரி இருக்கின்ற ஆலயங்களுக்கு உதவி செய்வதற் காகத் தான் இந்த நிதி இருக்கிறது. எனவே, எச்.ஆர்.ஈ. போர்டை இவர்கள் அணுகியிருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் கூறுவேன். ஆலயப் பணிகளைத் தடுத்துவிட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. சட்டத்திலும் அப்படியில்லை. நாங்கள் அப்படிச் செய்யவும் மாட்டோம். உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிட்ட கோயிலைப் பொறுத்தவரையிலும், அப்படிப் பாதகம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படித் தெரிவித்திருந்தால், அதற்கான உடனடியான நடவடிக்கைகளை எடுத்து பரிகாரம் காண்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்கும் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக ஆலய வேலைகள் தடைப்பட்டு விட்டன என்று சொல்வது சரியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலயங்களுக்கு நிச்சயம் பாதகம் ஏற்படமுடியாது.

6th April 1972] [திரு. ப. உ. சண்முகம்

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒன்றை ஒத்துக்கொண் டார்கள். "சட்டத்தில் ஏற்கனவே இருந்த ஒரு குறையை நீக்கியிருக் கிறார்கள். கடன் காலாவதி ஆகிவிட்டாலும் கூட, அதையும் ரத்து செய்து விட்டோம். பாக்கி இருக்கக் கூடாது" என்று.

இந்தச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற் குள்ளாக, இந்த பசலிக்குள்ளாக இதை அமுல்படுத்த பாக்கியை கொடுத்து விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதை எதற்காகச் சொல்லி யிருக்கிறேன் என்று சொன்னால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு டெல்லி அரசுக்கு-ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அங்கேயிருந்து அங்கீகாரம் வர வேண்டும். அப்படி அங்கிருந்து அங்கீகாரம் வருவதற்குள்ளாக பசலி முடிந்து விடக் கூடும். அப்படி 1—7—1972-க்குள் இது சட்டமாக்கப்படாவிட்டால், இந்தச் சட்டத்தின் பலன் இல்லாமல் போய்விடக்கூடும்' என்ற காரணத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட தேதியி லிருந்து ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள்ளாக—அதாவது 1—7—1971-லிருந்து 30—6—1972 வரை உள்ளிட்ட பசலியையும் சேர்க்க வேண்டும் என்று சட்டம் போடப்பட்டது.

1968-லிருந்து காலி செய்யப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அவர் களுக்கெல்லாம் என்ன பாதுகாப்பளித்தீர்கள், 1—3—1972 லிருந்து நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்குத்தானே பாதுகாப்பு இருக்கிறதென்று உயர்திரு கிருஷ்ணசாமி நாயுடு கேட்டார்கள். நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1968-லே நிலத்திலிருந்து வெளி யேற்றப்பட்டு அந்த நிலங்களில் வேறு சில குத்தகைதாரர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குத்தகைக்காரர்கள் அநேகமாக வழைகளாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் குத்தகைதாரர்கள் குடியேற்றப்பட்டதற்குப் பிறகு, பயிரிட்டு சில இடங்களில் குத்தகையைக் கொடுத்திருக்கக் கூடும். பல இடங்களில் குத்தகையைக் கொடுக்காமல் இருக்கக் கூடும். அவர்களை நில உடைமையாளர்கள் வெளி யேற்றுவதென்றால், சட்டச் சிக்கல்கள் வரும். 'லிடிகேஷன்' வந்து விடும். 1—3—1972-ல் முதலமைச்சர் அறிவித்த தேதி யிலிருந்து யார் வெளியேற்றப்பட்டாலும் இந்தச் சட்டம் குத்தகைதாரர் களுக்கு நிலத்தில் பாதுகாப்பளிக்கிறது.

அடுத்து, திரு. சுவாமிநாதன் அவர்கள் பத்ரிநாத் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு வெகுவாக விவாதித்தார்கள். பத்ரிநாத் ரிபோர்ட்டைப் பற்றிக் கேள்வி கேட்டபோதே நான் தெரிவித்தேன். பத்ரிநாத் அவர்கள் இங்கிருந்த ஒரு அதிகாரி. அவரிடம் அரசாங்கம் ரிப்போர்ட் கேட்கவே இல்லை. அவர் டெனன்ஸி ரிகார்டைப் பற்றி ரிப்போர்ட் தயாரித்தார்கள். அரசாங்கம் கேட்கவும் இல்லை. முறைப்படி அந்த அதிகாரி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வில்லை. அது மட்டுமல்ல. அவர் எங்கெங்கு அனுப்பக் கூடாதோ அங்கெல்லாம் அனுப்பிவிட்டார்கள். காரணம் அவருக்குத் தான் தெரியும். அவர் சேகரித்த புள்ளி விவரங்களை எப்படிச்

சேகரித்தார்கள் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். இதைப் பற்றி போர்டில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டோம். ரெவின்யூ போர்டு ஆலோசித்து முடிவு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரெவின்யூ போர்டு எங்களுக்கு "Ignore it" என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே "we have "ignored it" நாங்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே பத்திரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு விவாதிப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சுவாமிநாதன் பேசும்போது டெனன்ஸி ரிகார்டுகளைப்பற்றிச் சொல்லி, அவைகள் சரிவர பதிவு செய்யப்பட வில்லையென்று குறிப்பிட்டார்கள். நான் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. டெனன்ஸி ரிகார்ட்ஸ்—குத்தகைதாரர் பதிவேடுகள் தமிழ்நாட்டில் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் புள்ளி விவரத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பிப்ரவரி 1972 முடிய தஞ்சை மாவட்டத்தில் குத்தகைக்தாரர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது 1,25,590 பேர்களாகும். திருச்சியில் 57,188 பேர்களாகும், மதுரையில் 19,561 பேர்களாகும். இப்படி மாவட்டந் தோறும் செய்திருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பதிவேடுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டது தஞ்சாவூர் மாவட்டத்தில்தான். அங்கே 1,40,000 பேர்களில் 1,25,000 பேர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். திருச்சியில் ஒரு லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய இடங்களில் 50 ஆயிரம் பேர்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த 3 மாவட்டங்கள் தவிர, பாக்கி திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இது மோசமான நிலையில் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். அதைப்பற்றிய விவரத்தை சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர், திருச்சி, மதுரை ஆகிய 3 மாவட்டங்களில்தான் சென்ற ஆண்டே பதிவெடுப்பிற்கு உத்தரவு போட்டு பதிவு செய்யச் சொன்னோம். ஆனால் மற்ற மாவட்டங்களுக்கு செப்டம்பர் 1971 இல் டெனன்ஸி ரிகார்டு அதிகாரிகளை நியமித்து அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. செப்டம்பர் 1971 லிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவிலே முடிந்து விடும். சிறப்பாக அமையுமென்று நம்புகிறேன். மாவட்டங்களிலிருந்து வருகிற ரிப்போர்ட்டைப் பார்க்கும்போது வருத்தப்படத்தக்க அளவிற்கு ஒன்றுமில்லை. நன்முகவே பணியாற்றுகிறார்களென்று கருதுகிறேன். குத்தகைப் பதிவேடுகளில் பதிவு செய்ய அதிகாரிகள் விசாரிக்கிற நேரத்தில் குத்தகைதாரர்கள் கையொப்பமிட சில இடங்களில் அஞ்சுகிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அவர்களை நிலச் சொந்தக்காரர்கள் மிரட்டுகிறார்கள். குத்தகைதாரர்கள் கையொப்பமிட்டால், குத்தகையை அடுத்த முறை

கொடுக்கமாட்டேன் என்று மிரட்டுகிறார்கள். இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் இந்த ஏழை விவசாயிகளுக்கு அங்கத்தினர்கள் வழியாகச் சொல்லிக்கொள்ள விரும்புவதென்னவென்றால், ஒரு முறை குத்தகைதாரர் கையொப்பமிட்டது நிராகரிக்கப்பட்டுவிட்டால், நிலச்சுவாந்தார்கள் எவ்வளவு முயற்சித்தாலும், அந்த நிலச்சுவாந்தார்கள் குத்தகைதாரர்களை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்த முடியாது. ஆனால் ஒன்று, இந்த ஆண்டு 4 ஆண்டு பாக்கிகளைத் தள்ளுபடி செய்ய ஒரு சட்டம் போட்டு விட்டோம் என்ற ஒரு காரணத்தினால், அதைப் பயன்படுத்தி குத்தகைதாரர்கள் இனிமேல் வருங்காலத்தில் குத்தகை கொடுக்காமலிருந்தால், அரசு தள்ளிவிடும் என்ற தவறான எண்ணத்தைக் கொள்ளக் கூடாது. நான் அதையும் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். 4 ஆண்டு பாக்கியைத் தள்ளுவதற்குக் காரணம் ஏற்பட்டுவிட்ட சுமையைக் குறைப்பதே தவிர, அடிக்கடி அரசாங்கம் இப்படித்தான் தள்ளிக் கொண்டிருக்கும் என்று தயவு செய்து கருதவேண்டாம். அரசியல் லாபத்திற்காகச் செய்கிறோம் என்று குற்றம் சாட்டப்பட்டது. நான் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றம் அரசியல் அரங்கம் தான். இது ஆசிரம அரங்கமல்ல. நாம் அரசியல்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். அரசியல் வேறு, மக்கள் வேறு என்று கருதவில்லை. மக்களுக்காகத்தான் அரசியல் இருக்கிறது. அந்த அரசியலை நடத்துவதற்குத்தான் நாம் இருக்கிறோம். ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கட்சி லாபத்திற்காக என்று குற்றம் சாட்டு வார்களானால், புரிந்துகொள்ள முடியும். கட்சி லாபத்திற்காக அல்ல. இந்த நாட்டில் உழவர் பெருங்குடி மக்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக ஆக்க வேண்டுமென்பது கருத்தல்ல. குத்தகைதாரர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. கட்சி லாபத்தை உத்தேசித்து அப்படிச் செய்யவில்லை. அரசியல் லாபத்தை உத்தேசித்து செய்தோமென்று சொன்னால் அந்தக் குற்றச் சாட்டிற்கு பதில் சொல்ல விரும்பவில்லை. பொதுவாக இந்தச் சட்டம் தமிழ் நாட்டில் எல்லாத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. சில பேருக்கு ஐயம் இருக்கிறது. இந்த நாட்டிலிருக்கிற பயிர் செய்ய முடியாத விதவைகள், பெண்கள், மைனர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையே, இவர்கள் நிலம் வைத்திருந்தால் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா என்றார்கள். நிலச்சுவாந்தார் யாராக இருந்தாலும் உழுது கொடுக்கவேண்டியவன், குத்தகைக்காரன். நிலத்திற்குச் சொந்தக்காரர் விதவையாக இருக்கலாம், மைனராக இருக்கலாம், அல்லது வயதானவராக இருக்கலாம். ஆனால் அர்களுக்குக் குத்தகை கொடுக்க வேண்டியவர்கள் இந்த உழவர்கள்தான். யார் சொந்தக்காரர்கள் என்பது பிரச்சினையல்ல. சொந்தக்காரர்களுக்குப் பாதகம் ஏற்படவேண்டுமென்று அல்ல, குத்தகை கொடுக்கிற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தில் எந்த வாதமும் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [6th April 1972

சேகரித்தார்கள் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். இதைப் பற்றி போர்டில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டோம். ரெவின்யூ போர்டு ஆலோசித்து முடிவு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரெவின்யூ போர்டு எங்களுக்கு "Ignore it" என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே "we have "ignored it" நாங்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே பத்திரத் திப்போர்ட்டை வைத்துக்கொண்டு விவாதிப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சுவாமிநாதன் பேசும்போது டெனன்ஸி ரிகார்டுகளைப்பற்றிச் சொல்லி, அவைகள் சரிவர பதிவு செய்யப்பட வில்லையென்று குறிப்பிட்டார்கள். நான் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. டெனன்ஸி ரிகார்ட்ஸ்—குத்தகைதாரர் பதிவேடுகள் தமிழ்நாட்டில் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் புள்ளி விவரத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பிப்ரவரி 1972 முடிய தஞ்சை மாவட்டத்தில் குத்தகைக்தாரர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது 1,25,590 பேர்களாகும். திருச்சியில் 57,188 பேர்களாகும், மதுரையில் 19,561 பேர்களாகும். இப்படி மாவட்டந் தோறும் செய்திருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பதிவேடுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டது தஞ்சாவூர் மாவட்டத்தில்தான். அங்கே 1,40,000 பேர்களில் 1,25,000 பேர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். திருச்சியில் ஒரு லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய இடங்களில் 50 ஆயிரம் பேர்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த 3 மாவட்டங்கள் தவிர, பாக்கி திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இது மோசமான நிலையில் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். அதைப்பற்றிய விவரத்தை சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர், திருச்சி, மதுரை ஆகிய 3 மாவட்டங்களில்தான் சென்ற ஆண்டே பதிவெடுப்பிற்கு உத்தரவு போட்டு பதிவு செய்யச் சொன்னோம். ஆனால் மற்ற மாவட்டங்களுக்கு செப்டம்பர் 1971 இல் டெனன்ஸி ரிகார்டு அதிகாரிகளை நியமித்து அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. செப்டம்பர் 1971 லிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவிலே முடிந்து விடும். சிறப்பாக அமையுமென்று நம்புகிறேன். மாவட்டங்களிலிருந்து வருகிற ரிப்போர்ட்டைப் பார்க்கும்போது வருத்தப்படத் தக்க அளவிற்கு ஒன்றுமில்லை. நன்றாகவே பணியாற்றுகிறார்களென்று கருதுகிறேன். குத்தகைப் பதிவேடுகளில் பதிவு செய்ய அதிகாரிகள் விசாரிக்கிற நேரத்தில் குத்தகைதாரர்கள் கையொப்பமிட சில இடங்களில் அஞ்சுகிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அவர்களை நிலச் சொந்தக்காரர்கள் மிரட்டுகிறார்கள். குத்தகைதாரர்கள் கையொப்பமிட்டால், குத்தகையை அடுத்த முறை

6th April 1972] [திரு. ப. உ. சண்முகம்]

கொடுக்கமாட்டேன் என்று மிரட்டுகிறார்கள். இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் இந்த ஏழை விவசாயிகளுக்கு அங்கத்தினர்கள் வழியாகச் சொல்லிக்கொள்ள விரும்புவதென்னவென்றால், ஒரு முறை குத்தகைதாரர் கையொப்பமிட்டது நிராகரிக்கப்பட்டுவிட்டால், நிலச்சுவாந்தார்கள் எவ்வளவு முயற்சித்தாலும், அந்த நிலச்சுவாந்தார்கள் குத்தகைதாரர்களை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்த முடியாது. ஆனால் ஒன்று, இந்த ஆண்டு 4 ஆண்டு பாக்கிகளைத் தள்ளுபடி செய்ய ஒரு சட்டம் போட்டு விட்டோம் என்ற ஒரு காரணத்தினால், அதைப் பயன்படுத்தி குத்தகைதாரர்கள் இனிமேல் வருங்காலத்தில் குத்தகை கொடுக்காமலிருந்தால், அரசு தள்ளிவிடும் என்ற தவறான எண்ணத்தைக் கொள்ளக் கூடாது. நான் அதையும் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். 4 ஆண்டு பாக்கியைத் தள்ளுவதற்குக் காரணம் ஏற்பட்டுவிட்ட சுமையைக் குறைப்பதே தவிர, அடிக்கடி அரசாங்கம் இப்படித்தான் தள்ளிக் கொண்டிருக்கும் என்று தயவு செய்து கருதவேண்டாம். அரசியல் லாபத்திற்காகச் செய்கிறோம் என்று குற்றம் சாட்டப்பட்டது. நான் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றம் அரசியல் அரங்கம் தான். இது ஆசிரம அரங்கமல்ல. நாம் அரசியல்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். அரசியல் வேறு, மக்கள் வேறு என்று கருதவில்லை. மக்களுக்காகத்தான் அரசியல் இருக்கிறது. அந்த அரசியலை நடத்துவதற்குத்தான் நாம் இருக்கிறோம். ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கட்சி லாபத்திற்காக என்று குற்றம் சாட்டு வார்களானால், புரிந்துகொள்ள முடியும். கட்சி லாபத்திற்காக அல்ல. இந்த நாட்டில் உழவர் பெருங்குடி மக்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக ஆக்க வேண்டுமென்பது கருத்தல்ல. குத்தகைதாரர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. கட்சி லாபத்தை உத்தேசித்து அப்படிச் செய்யவில்லை. அரசியல் லாபத்தை உத்தேசித்து செய்தோமென்று சொன்னால் அந்தக் குற்றச் சாட்டிற்கு பதில் சொல்ல விரும்பவில்லை. பொதுவாக இந்தச் சட்டம் தமிழ் நாட்டில் எல்லாத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. சில பேருக்கு ஐயம் இருக்கிறது. இந்த நாட்டிலிருக்கிற பயிர் செய்ய முடியாத விதவைகள், பெண்கள், மைனர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையே, இவர்கள் நிலம் வைத்திருந்தால் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா என்றார்கள். நிலச்சுவாந்தார் யாராக இருந்தாலும் உழுது கொடுக்கவேண்டியவன், குத்தகைக்காரன். நிலத்திற்குச் சொந்தக்காரர் விதவையாக இருக்கலாம், மைனராக இருக்கலாம், அல்லது வயதானவராக இருக்கலாம். ஆனால் அவர்களுக்குக் குத்தகை கொடுக்க வேண்டியவர்கள் இந்த உழவர்கள்தான். யார் சொந்தக்காரர்கள் என்பது பிரச்சினையல்ல. சொந்தக்காரர்களுக்குப் பாதகம் ஏற்படவேண்டுமென்று அல்ல, குத்தகை கொடுக்கிற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தில் எந்த வாதமும் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கம் தேவை. அமைச்சரவர்கள் முடித்து விட்டார்கள் என்று கருதுகிறேன். நான் சில விளக்கங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த நில உரிமையாளர்களிடமிருந்து எல்லாம், கடந்த 4 ஆண்டுகளுக்குமேல் பாக்கி வராமல் இருந்தாலும், லேண்டு டாக்ஸ், வாட்டர் டாக்ஸ் என்று சொல்லக் கூடிய தண்ணீர்த் தீர்வை, பஞ்சாயத்து யூனியன் செஸ், விவசாய வருமானவரி இவைகளை அரசாங்கம், இவர்களுக்கு வருமானம் வராமல் இருந்தும் கூட, வசூல் செய்து விட்டார்கள். இப்போது 100 சதவீதமும் குத்தகை தர வேண்டாமென்று சொன்ன பிறகு, வராத வருமானத்திற்கு வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுப்பார்களாளன்று நான் அறிய விரும்புகிறேன். இரண்டாவது, அரசாங்கம் உபரி நிலத்தை எடுத்து அந்த உபரி நிலங்களைத் தனிப்பட்ட விவசாயிகளுக்குப் பிரித்து கொடுத்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள பல பேர் அரசாங்கத்திற்கு இந்தக் குத்தகை பாக்கியை, நிலத்திற்கு உள்ள தொகையை செலுத்த வேண்டியதை அளிக்கவில்லை. அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுமல், அவர்களுக்கும் குத்தகை பாக்கியைத் தள்ளத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். மூன்றுவது, நேற்றைய தினம் கூடக் கேட்டேன். நிலச்சுவாந்தார்கள், குத்தகைதாரர்களில் எவ்வளவு பேர்மீது வழக்குப் போட்டார்கள், எவ்வளவு பேரால் கட்ட முடியவில்லை, அவர் களுடைய சதவீதம் என்ன, இவ்வளவு பேர்கள் கொடுத்து விட்ட பிறகு கட்டாதவர்களுக்கு இப்படிச் சலுகை கொடுத்து சட்டம் கொண்டு வரும் போது அவர்கள்—எற்கனவே கட்டியவர்கள்—வேதனைப்படுகிறார்களே, அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? இந்த மூன்றையும் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நேற்றுப் பேசியதற்கும் இன்று பேசியதற்கும் முரணை
11-40 a.m. வாதத்தை வைக்கின்றார்கள். நேற்றுப் பேசும்போது, 95 சத விகிதம் கொடுத்தாகிவிட்டது, 5 சதவிகிதத்துக்காக ஒரு சட்டமா என்று கேட்டார்கள். இப்பொழுது, "நீங்கள் விளையவில்லை என்று சொல்லுகிறீர்கள் . அவர்களிடத்திலிருந்து பணத்தை வசூலித்து விட்டீர்களே, திருப்பிக் கொடுப்பீர்களா?" என்று என்னைக் கேட்டார்கள். அரசாங்கம் வசூலிக்கப்பட்டவர்களிடத்திலேயிருந்து பெற்றதைத் திருப்பிக் கொடுப்பதில்லை. நியதி இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : பணமே வராதபோது, தண்ணீர்த் தீர்வை எப்படிக் கொடுப்பார்கள்? நிலத் தீர்வை எப்படிக் கொடுப் பார்கள்? வருமான வரி எப்படிக் கட்டுவார்கள்? நிலத்திற்காகக் கட்டுவார்களே தவிர, வருமானமே இல்லாதபோது எப்படி வசூல் செய்வது நியாயம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் சொன்னது, 1966, 1967, 1968-ல் வறட்சி காரணமாக ஒத்திவைக்கப்பட்ட சட்டத்தினால் பெரிய பாதகம் ஏற்பட்டு, அந்தச் சட்டத்தின் காரணமாக சுமை வந்து, அந்தச் சுமையின் காரணமாகத் தள்ள வேண்டி வந்தது என்று சொன்னேனே தவிர, நண்பர் திரு சுவாமிநாதன் சொன்னதைப் போல் சொல்லவில்லை. அதோடு நான் குறிப்பிட்டேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தள்ளுபடி செய்யப்பட்ட அந்த ஆண்டுகளிலே ஒரு மணி நெல் கூட நிலச்சுவாந்தார்களுக்குக் கிடைக்காத நேரத்தில் அவர் களிடத்திலிருந்து அந்தக் காலத்திலே இவ்வளவையும், வசூல் செய்தாகி விட்டது. அவர் நிலத்திலேயிருந்து வருமானம் வருகிற காரணத்தாலே, கொடுங்கள் என்று சொல்லி, தண்ணீர்த் தீர்வை, " அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் " பஞ்சாயத்து யூனியன் செஸ் போன்றவை எல்லாம் வசூல் செய்யப்பட்டுவிட்டன. அவர்களும் பின்னாலே வரும் என்ற காரணத் தாலே இவ்வளவையும் கொடுத்துவிட்டார்கள். நிலத்திலேயிருந்து வருமானமே இல்லை என்கிறபோது, வரியை மட்டும் வாங்கிக்கொண்டு திருப்பிக் கொடுக்கமாட்டேன் என்றால் , அது எப்படி நியாயம்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அவர்கள் " எற்கனவே பல பேர் கொடுத்துவிட்டார்கள். கொஞ்சம் பேர்தான் கொடுக்க வில்லை " என்று நேற்றைய முன்தினம் பேசும்போது சொன்னார்கள். கொடுத்தவர்கள் எல்லாம் முட்டாள்கள் போல் ஆகி விட்டார்கள் கொடுக்காதவர்கள் கெட்டிக்காரர்கள் ஆகிவிட்டார்கள் என்று சொன்னார்கள். கொடுத்தவர்களிடத்திலே திருப்பி வாங்க முடியாது என்றேன். விளைந்தது கொடுத்தார் என்று சொன்னேன். அதே போல நிலத்திற்கு உண்டான வரியை வசதி படைத்தவர்கள் கொடுத்தார் கள். கையில் இருந்தபோது கொடுத்து விட்டார்கள். அதைத் திருப்பிக் கொடுக்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. அப்படி எண்ணமும் இல்லை. இந்தச் சட்டத்தில் அப்படி இடமும் இல்லை.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி ; தலைவர் அவர்களே, நிலவுடைமையாளர்கள் நம்முடைய சர்க்காரே ரெவின்யூ வரியை யெல்லாம் தள்ளுபடிசெய்யும் என்று வந்த போது, 'அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டாம், வரி கொடுக்கவில்லை என்றால் நிலமே சொந்தமில்லை என்று ஆகிவிடும்" என்று சொன்னார்கள். அவர்கள் சிந்தனையெல்லாம் தண்ணீர், தீர்வை எல்லாம் வாங்கினால் போதும் என்பது. அந்த நிலைமை நிச்சயம் இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள். நேற்று முன் தினம் பேசும்போது ரொம்பவும் கோபமாகப் பேசினார்கள். இன்றைய தினம் பேசும்போது வேறுவிதமாகப் பேசினார்கள். நேற்றைய முன்தினம் பேசும்போது அவர்கள் கோபப்பட்டு ஒங்கிக் தன் மார்பில் கூட அடித்துக்கொண்டார்கள். முதலமைச்சர் அவர்கள்கூட வேகமாக அடித்துக்கொண்டார் என்று பயந்தார்கள். நான் சொல்லாவிட்டால் என்னுடைய மனச்சாட்சி குத்துகிறது, பாவம் என்று சொன்னார்கள்.

மிஸ்டர் சேர்மன் : நேற்று 4 மணிக்கு ஆரம்பித்தோம், இன்றைக்கு 10 மணிக்கு ஆரம்பித்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : பெரியவர்கள், அப்படி ஒங்கி அடித்துக்கொள்ள வேண்டியதில்லே. இன்றைய தினம் பேசும் போது அவர்கள் பேசிய தொனியே மாறுதலாக இருந்தது. இருந் தாலும் இடையிலே கேட்டார்கள். தர முடியாதவர்களுக்கு என்ன பரிகாரம், நிலச்சுவாந்தார்களுக்கு என்ன பரிகாரம் என்று கேட்டார்கள். நாம் தெளிவாகச் சட்டத்தின் மூலம் சொல்லியிருக்கிறோம். முன்பே சொல்லியிருக்கிறேன். நாம் சட்டம் இயற்றுவது குத்தகைதாரர் களுக்குப் பாதுகாப்பாக. இதை நிலச்சுவாந்தார்களுக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவரவில்லே. இந்தச் சட்டத்தில் நாங்கள் கொடுக்கும் உதவி குத்தகை கொடுக்க முடியாமல் போய்விட்டவர்களுக்குத்தான். குத்தகை கொடுத்துவிட்டவர்கள் அடுத்த ஆண்டு வருகிறவரையிலே ஒத்திவைத்துக்கொள்ளவேண்டும். குத்தகை செலுத்த முடியாதவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தான் சட்டம் கொண்டுவந்தோம். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள்ளாக இதற்கு உண்டான குத்தகை பாக்கியைக் கொடுத்துவிட வேண்டும். கொடுக்காதவர்களே நிலத்தைவிட்டு வெளியேற்றுவதைத் தவிர வேறு வழியில்லே. அந்த அளவுக்கு உழவர்கள் போகமாட்டார்கள், குத்தகைக்காரர்கள் போக மாட்டார்கள். ஒரு ஆண்டு காலத்திற்குக் கொடுத்துவிடுவார்களானால், ஏற்கனவே கொடுக்க வேண்டிய பாக்கி ரத்தாகி விடும். எனவே இந்த மசோதாவை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

MR. CHAIRMAN: The question is—

" That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 12 were put and carried.

Clause 13

MR CHAIRMAN: The motion is—

' That clause 13 do stand part of the Bill.'

THIRU A. R. DAMODARAN. Sir, I move the following amendment :—

Add the following as new clause 13 :—

" The provisions of this Bill shall not apply to those Cultivating Tenants who are Income-tax Assessees under the Indian Income-tax Act, 1961, Sales Tax Assessees under the Tamil Nadu General Sales Tax Act, owners of land paying land revenue, and assessees under the Tamil Nadu Agricultural Income-tax Act, or persons who are paying property-tax to any local body or Corporation.".

THIRU G. SWAMINATHAN : Sir, I second the amendment.

THIRU A. R. DAMODARAN : Sir, I have to explain this amendment very briefly. The object of this Bill, as has been pointed out by the Hon. Minister, is to relieve the burden of debt that has been accumulated on poor cultivating tenants because of drought condition that existed in 1966–67.

In my introductory remarks on the Bill, I said we could have understood it if the arrears as on 1st July 1968 had been totally written off by the Government but what we are not able to understand and appreciate is that in 1968–69, 1969–70 and 1970 71 where there has been good rain and good crop, where was the necessity for the Government to say that even the rent accruing for those years should not be paid by the tenants ? This is one ont on which I still remain unconvinced and which I hope the Hon. Minister will be able to explain. I am not one of those, as my hon. Friend pointed out, who are anxious that the cultivating tenants shoud be evicted from the land. There are two distinct aspects of the Bill. One is the question of collection of arrears of rent and the other is the question of eviction of cultivating tenants because of non-payment of rent. None of us have suggested that cultivating tenants should be evicted, because they have not paid arrears of rent. If the Government had so desired, it could have extended by another four years and it could have said that no cultivating tenant should be evicted because of non-payment of rent. The old Bill could easily have been amended. Therefore, I would not like the hon. Members to accuse us of being in favour of certain vested interest. People consider those owning three or four acres also as representing vested interest. I shall not go into this aspect at all. I would like to point out that we have not asked for the eviction of the tenants at all. All that we have said is that we are unable to understand the logic of writing off of arrears of rent prior to 1968, as well as rent that has accrued for the years 1969–70, 1970–71 and 1971–72. I do not think the Hon. Minister has any arguments to give in favour of that and if he had, he would have already mentioned it in his reply

to the Bill. Therefore, I shall take it that the only object that he had in mind was that one and a half million tenants have to be favoured. They constitute a majority. They are all poor—some of them are poor, some of them are not so poor and some of them may even be rich—but, the point is that the number of land owners will only be a lakh or1,25,000. Therefore, the majority is always right and even though there may not be justice in this, we have to do it because the majority wants it. That is one argument which I can never counteract . I was under the impression that in the application of the principles of justice, equity and fairplay, there should be certain common standards applicable to the Bill. However, in view of the arguments, I do not think there is any meeting point on which we can possibly discuss this matter and that is the reason why I have moved this amendment because I do not want those people who are paying property tax, to get the benefit of this Act. For example, Sir I have got here figures of the Pathaleeswarar temple where tenants have not paid arrears of rent for four years. They have perfectly good crop. I know it because I have been in Cuddalore. They have been able to get 40 kalams to 50 kalams, that is, 24 measure kalams in South Arcot. According to Thanjavur it will be 24 or 25 bags. These tenants are not poor cultivating tenants. Some of them own houses and they are paying property tax of Rs. 400 or 500. Some of them are running shops and they are sales tax assessees paying Rs. 500 or Rs. 600 as sales tax. None of them are income-tax assessees but some of them are also businessmen who are sales-tax assessees. My point is why these people should get the benefit of this Act. They do not deserve it. They are dishonest tenants who could afford to pay the rent to the temple but they have deliberately refrained from paying rent not because they expected the Government to bring forward such a Bill. Perhaps the expectation may come in the future, but the point is they deliberately defrauded the temple authorities from collecting the rent. We have filed suits in Court asking that these rent arrears should be collected. These dishonest tenants are also protected by this Bill. In moving this amendment, I want to restrict the benefit of the provisions of this Bill only to those cultivating tenants and accepting for a moment the very genuine motives of the Government in moving this Bill, I would say that it should be restricted only to those cultivating tenants who are in no position to repay these debts and we can exercise the judgment only by applying this rule. The Hon. Minister raised the point how the Government ouldeprepare a list of all these things. We do not want the Government to prepare such a list at all. By accepting this clause, landowners who have filed suits for recovery of rent in Court will automatically find out for themselves whether such cultivating tenants come under the provisions that we have mentioned in this amendment and they will move the Court that

such and such person is a sales tax assessee, property tax assessee and they will attach those buildings for the recovery of this rent. I wish to make it quite clear that while we are not against the writing off of the arrears prior to 1968, I consider it singularly unfortunate that where crops have also been grown well after 1968, I think it would be introducing an element of future doubt, because the landlord tenant and land-owner-tenant relationship is linked by so many conditions that we do not want to strain that relationship. That is why I would request the Hon Minister to accept this amendment.

திரு. ஏ. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் சொல்லியதை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அந்த குத்தகைதாரர்களைப் பொறுத்த வரையிலே, எதோ ஒரு சிலர் தான் என்று சொன்னாலும் மற்ற இடங்களிலே குத்தகையையும் வைத்துக் கொண்டு பாக்கிக் காரியங்களையும் கவனிக்க முடியும் என்பது புரியும். பெரும்பாலானவர்கள் ஆங்காங்கே உள்ள உழவர்களாகத் தான் இருப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் என்னுடைய அனுபவத்தைப் பொறுத்த வரையிலே, இந்த உழவர்களாக கலப்பையைப் பிடித்து நடத்திக் கொண்டிருப்பவர்களும் தாங்களே இருந்து செய்யாமல் ஆட்களை வைத்து நடத்துபவர்களும் கிட்டத்தட்ட 40 : 60 ஆக இருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். அவர்கள் சட்டப்படியே உழவேண்டும் என்பதல்ல. அவர்கள் உட்குத்தகையைக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் சட்டசபை உறுப்பினர்களாகக் கூட இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் குத்தகைதாரர்களாகக் கருதப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் குறைந்த அளவினர் தான் இருக்கிறார்கள். நிறைந்த அளவினர் இப்படி இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் சரியான அபிப்பிராயம் அல்ல என்று முதலிலே சொல்லிக் கொள்கிறேன். 11-50 a.m.

இரண்டாவது, திரு. தாமோதரன் அவர்கள் சொல்லியதைப் போல, நீண்ட பட்டியலைத் தயாரிப்பது முடியாத காரியம் என்று சொல்லத் தேவையில்லை. அது தேவையேயில்லாத விஷயம் மாதிரி எடுக்க வேண்டுமென்ற நிலைமை வருகிற போது, அங்கேயுள்ள நிலச்சுவான்தார்களே எடுத்துச் சொல்லி, அவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டால், தாராளமாக அதைக் கொடுக்க முடியும். ஆகவே இது சங்கடமான காரியம் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் கருதுகிற சோஷலிச முறைக்கு நாங்கள் கொடுத்திருக்கிற தீர்மானம் உறுதுணையான தீர்மானமாகும். ஒரு வேளை அமைச்சர் அவர்கள் இதை மறந்து போய் விட்டிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள், கிராமங்களிலே நிலம் வைத்துக் கொண்டு சென்னையிலே தொழில் நடத்துகின்றார்கள் என்று சொன்னார்கள். சென்னையிலே குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிலவுடமையாளர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்றார்கள். ஆகவே சோஷலிசத்திற்கும் இது உறுதுணை

[திரு. ஜி. சுவாமிநரதன்] [6th April 1972

யான தீர்மானம். நாங்கள் கொண்டு வருகிற காரணத்தால் அமைச்சர் அவர்கள் இதையும் கவனித்துச் செய்ய வேண்டும். நாங்கள் சொல்லும் எல்லாக் கருத்துக்களுக்கும் திறமையான வாதத்தின் காரணமாகஇவ்வளவு தூரம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அந்தத் திறமையைப் பயன்படுத்தாமல், இது உண்மையான கோரிக்கையாக இருக் கிற காரணத்தால், இதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை எற்றுக் கொள்வதற்கில்லை என்பதைத் தொடக்கத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன். எதோ எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் திருத்தம் கொடுத்தார்கள், ஆகவே அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதல்ல. திருத்தம் நியாயமான திருத்தம், தேவையான திருத்தம் என்றால் சேர்த்துக் கொள்வதிலே தவறில்லை. ஆனால் இந்தத் திருத்தம் தேவையில்லை. ஒரு கல்டிவேடிங் டெனன்ட்—குத்தகைதாரர் 5 ஸ்டேண் டர்டு ஏக்கராவுக்கு மேல் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சட்டம் வைத்திருக்கிறோம். அப்படி யார் இருக் கிறார்கள் என்று கேட்டார்கள். 5 ஸ்டேண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிறார்கள் என்றால், அது சட்டத்திற்கு விரோதமானது. சட்டத் தின் ஒட்டைக்குள்ளே நுழைந்திருப்பவர்கள் அவர்கள். அப்படி இருக்கக் கூடாது என்று சொல்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : 5 ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சட்டத்திலே இருக்கிறது. ஆனால் நடைமுறையிலே அது ஏற்படுத்தப்பட வில்லை. இருக்கிற குத்தகைததாரர்கள் 5 ஏக்கருக்கு மேல் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு இருக்கிறது என்று கணக்கு எடுக்கப்பட்டது, எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டு பிரித்துக் கொடுக்கப்பட்டது என்ற குறிப்பு அமைச்சர் அவர்களிடத்திலே இருக்குமா ? 30 ஏக்கரா என்று 'சீலிங்" வந்த தற்கே 10 ஆண்டுகள் நிலவுடமையாளர்களிடமிருந்து அதிக பட்சத்தை எடுப்பதற்கு, நிலக் குத்தகைதாரர்களிடமிருந்து எடுப்பதற்கு எந்தவிதமான காரியங்களும் இல்லை, நான் அறிந்த வரையிலே. இரண்டாவது, 5 ஏக்கருக்குள்ளே உள்ள குத்தகைதாரர்களும் கடை வைத்திருக்கலாம், அதிலேயிருந்து சம்பாதித்துக் கொண்டிருக்கலாம். எவ்வளவு குத்தகை வைத்திருக்கிறார்கள் என்பதல்ல. வேறு பிசினஸ்களிலேயிருந்து எவ்வளவு பணம் அவர்களுக்கு வருகிறது என்பதுதான் இந்தத் தீர்மானத்தில் முக்கியமான விஷயம்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்கள். இப்பொழுது 200 ஏக்கருக்கு மேலே உள்ள நிலத்தை 100 பேருக்கு மேலே எழுதி வைத்து அந்த மிராசுதார்களே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலச்சுவான்தார் என்றால் அவர்

6th April 1972] [திரு. மன்னை பி. நாராயணசாமி]

பெயரும் மன்னத்துணைநாத தேசிகர், சாமி பெயரும் மன்னத்துணைநாத சாமி. இந்தப் பெயரிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்படிப் பல நடவடிக்கைகள் எடுக் கும்படியான நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குத்தகைதாரர்கள் 5 ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சட்டத்திலே வைத்திருக் கிறோம். இப்படிச் சட்டத்திலே இருக்கிறது. நாட்டிலே பலர் கொஞ்சம் அதிகமாகவே நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்டு பிடிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்றார்கள். வேளா ண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குத்தகைதாரர்களிடம் உள்ள ஒரு ஊழலை எடுத்துச் சொன்னார்கள். இப்படிச் சில பேர் தப்பித்திருக்கலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்கு இந்த சட்டத்தை எமாற்றித் தப்பித்துக் கொண்டிருக்கிறவர்கள்—நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சமுதாயத்திற்கு ரொம்பவும் சேவை செய்ய வேண்டும் என்று அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்—அப்பேர்ப்பட்ட சமுதாயத் துரோகிகளின் பட்டியல் கொடுப்பாரேயானால், நிச்சயமாக அரசாங்கம் நட வடிக்கை எடுக்க உதவும். அதைக் கொடுக்காமல் மறைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு குறுக்கீடு.) இந்தத் திருத்தத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. விவசாய வருமான வரி, வருமான வரி, விற்பனை வரி கொடுக்கிறவர்கள் குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு என் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி இருப்பது துர்லபம். இருக்க முடியாது என்று தொடக்கத்திலேயே சொன்னேன். 12·00 Noon

நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் ஒரு பட்டியல் படித்தார். அவர் தர்மகர்த்தாவாக உள்ள கோவிலில் 4 ஆண்டுகளாகக் குத்தகை பாக்கி கொடுக்க வில்லை, அவர்களுக்கெல்லாம் சொத்திருக்கிறது, அவர்கள் எல்லாம் விற்பனை வரி, வருமான வரி கொடுக்கிறார்கள். அப்படியிருந் தும் 4 ஆண்டு காலம் அவர்களிடம் குத்தகை பாக்கி இருக்கிறது, அந்தக் குத்தகைதாரர்கள் யார் யார் என்ற விவரத்துக்கான பட்டியல் தன் கையில் இருக்கிறது என்று தெரிவித்தார். நான் ஒன்று தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். நிலத்தை விட்டு வெளியேற்றுவதைத் தடை செய்யும் வகையில் இந்தச் சட்டம் இருக்கிறதே தவிர, அந்தக் குத்தகை பாக்கியை ஆர். டி. ஓ. மூலமாகவோ அல்லது கோர்ட் மூல மாகவோ சொத்தை ஜப்தி செய்வதன் மூலம் வசூலித்துக் கொள்ளலாம். அதற்கு ஆட்சேபனையில்லை. ஆனால் அது சொத்துக்களே இல்லாத ஏழைகளுக்கு அல்ல.

THIRU A. R. DAMODARAN : We have filed suits in the Court. But what I am saying is that the Hon. Minister's Bill has written off those arrears.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தக் கோர்ட்டுகளில் பலபேர் மீது வழக்குகள் முடிந்து, அதில் இதற்காக பல நிலச்சுவாந்தார்கள் செலவு செய்து "டிக்ரி" வாங்கி விட்டார்கள். இவ்வளவும் செல்லுபடியாகாதென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் சொல்வது 1—3—72-க்கு முன்பு ஏற்பட்ட நிலைமை. நாங்கள் சட்டம் கொண்டு வந்தது 1—3—72 அன்று. சட்டம் கொண்டு வருவதற்கு முன்பேயே அவர்கள் வசூலித் திருக்கக்கூடும்.

THIRU A. R. DAMODARAN: One minute, Sir, I think I should read the particulars relating to Pathalceswarar temple. SC. 1. 156/53, O.S. 31/1955, SC. 177/1955. If I go on reading they all pertain to years prior to 1968, and the Hon. Minister's Bill will enable all these arrears that are decreed by the Court to be written off.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோர்ட்டில் போய் டிக்ரி வாங்கியிருக்கிறார்களே, அதை யார் கொடுப்பது என்று சொன்னார்கள். எனக்குத் தெரியாது. அவர்களே இந்தத் தேதிக்கு முன்னால் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை வசூலித்திருக்கலாம். 1—3—72ல் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அதனால் இந்தச் சட்டத்தை விட்டு விட முடியாது. சட்டம் கொண்டு வந்த பின், இனி அதிலிருந்து பின் வாங்குவதாக இல்லை. கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் நியாயமான சட்டம். மனச்சாட்சிக்கு விரோதமில்லாத ஒரு சட்டமாக நீங்கள் ஒப்புக் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்தச் சட்டத்தின் மூலம் விவசாய வரி, விற்பனை வரி, சொத்து வரி இந்த வரிகள் எல்லாம் கொடுக்கக்கூடிய வசதியுள்ளவர்களிடமிருந்து குத்தகை பாக்கியை வசூலிக்கலாம் என்று நீங்கள் சொன்னால், அவர்கள் மிகக் குறைவாகத் தானிருக்கலாம். இந்த ஒரு பெரிய சட்டம் நாட்டிலிருக்கிற லட்சக்கணக்கான விவசாயிகளின் பாதுகாப்புக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நிறைவேறினால், இதனால் ஏராளமான விவசாய மக்கள் நன்றாக வாழ்வார்கள். எனவே இந்தச் சட்டத்துக்கு மாறான இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. இதற்கு அவசியமில்லை என்றே நினைக்கிறேன். வசதியுள்ளவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். எனவே அதற்காக ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. இந்தத் திருத்தம் தேவையில்லை என்று சொல்கிறேன். இந்தத் திருத்தத்தைக் கைவிட வேண்டுமென்று கூறி, இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I have just a point of explanation to make. The Hon. Minister has tstated that such class of persons cannot be cultivating tenants. I only wish to elaborate that point because while I accept that a cultivating tenant cannot have more than 5 standard acres, I am not going into the question whether they have 10 or 15 acres

but the point is that a man who is owning 1 or 10 acres of land can also be a cultivating tenant and can have five standard acres, and that man is also sought to be protected by this Act. So, I agree that as far as Agricultural income-tax is concerned, that particular section we are prepared to remove from the amendment. But I do not think the Hon. Minister has passed a law stating that no cultivating tenant should be an income-tax Assessee, Sales-tax Assessee or Property-tax Assessee. We have not got the power to do it. So my point is that even if these people are not agricultural income-tax assessees they may still continue to be income-tax assessees, they may continue to be landowners paying land revenue. There are many cultivating tenants who have taken on rent 5 standard acres but who are still owners of land, they can have up to 15 standard acres. Therefore, why should the Government protect all these undeserving people? Protect only those deserving people whom we want to protect. That is all. That is why I request the Hon. Minister may consider that aspect also.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த வாதம் சரியல்ல என்று கூறுகிறேன். வருமான வரி கொடுக்க முடியாதவர்கள் தான் குத்தகை எடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க வசதியுள்ளவர்கள் குத்தகை எடுத்திருப்பதாக என்னால் நம்ப முடியவில்லை. அப்படி பெரிய பணக்காரராக இருந்தால், அவர் ஏன் குத்தகை எடுக்க வேண்டும் ? அவர் சொந்தமாகவே பணம் கொடுத்து நிலத்தைச் சொந்தம் ஆக்கிக்கொள்ளலாமே. ஆகவே அம்மாதிரியுள்ளவர்கள் குத்தகை எடுத்துக் கொண்டு பாக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. மேலும் அதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். சொந்தமாக உடையவர்கள் வருமான வரி கொடுக்கிறார்கள். வசதியுள்ள பணம் படைத்தவர்கள், 2, 3 ஏக்கரா நிலத்தைக் குத்தகை எடுக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, இந்தத் திருத்தம் அவசியமில்லை என்று கூறி இதை வற்புறுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Is the hon. Member pressing his amendment or withdrawing it ?

THIRU A. R. DAMODARAN.—Sir, I am not pressing my amendment, since the Hon. Minister is not willing to accept my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as passed by the assembly, be passed."

MR. CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

VI. VALEDICTORY REFERENCES TO THE RETIRING MEMBERS.

MR. CHAIRMAN The Hon. Chief Minister will now initiate valedictory references to the retiring members.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர், அவர்களே, நம்முடைய மேலவையில் பணியாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் விடை பெற்றுக் கொள்கின்ற நிலையில் அவர்களையெல்லாம் பாராட்டவும், வாழ்த்திடவும், அவர்கள் நற்பணிக்கு நன்றி காட்டவும், இந்த மாமன்றத்தில் திருக்கின்ற அனைவரும் கடமைப்பட்டிருப்பதைப் போல், நானும் கடமைப்பட்டிருக்கிறேன். எண்ணிக்கை அளவில், மாண்புமிகு உறுப்பினர்கள் 21 பேர் விடைபெற்றுக்கொள்கிறார்கள் என்றிருந்தாலும், கணக்கிட்டுப்பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர்களான திரு. அய்யாசாமி பிள்ளை அவர்கள், திரு. அருணாசலம் அவர்கள், திருமதி இளப்வாலா ஜாதவ் அவர்கள், திரு. டி. வி. தேவராஜ முதலியார் அவர்கள் திரு. இரா. தருமலிங்கம் அவர்கள், திரு. லட்சுமணன் அவர்கள், திருமதி மன்சுபாஷ்ணி அவர்கள், திரு. பொன்னப்ப நாயுடு அவர்கள், திரு. இராமன நாயர் அவர்கள் திரு. இராமகிருஷ்ண ஆச்சாரி அவர்கள், திரு. டி. எஸ். சினிவாசம் பிள்ளை அவர்கள், திரு. டி. கே. சுப்பையா அவர்கள், ஆகிய 12 பேரும் விடை பெற்றுக்கொள்கிறார்கள் என்பதுதான் பொருத்தமுடையதாகும். மீண்டும் எப்போதும் இந்த மன்றத்துக்கு அவர்கள் வரமாட்டார்கள் என்ற அளவிலேகூட அவர்களுக்கு நாம் விடையளித்து வழியனுப்பி வாழ்த்துரைக்கின்றோம் என்று கூட அதற்குப் பொருளல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த 21 பேரில், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்களும், திரு. கி. வ. இராஜகோபால் அவர்களும், திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி அவர்களும், திரு. இரா. சாம்பசிவம் அவர்களும், மீண்டும் இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது இந்த அவையினுடைய

உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், திரு. சந்தோசம் அவர்களும், திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும், திரு. வில்சன் அப்போலோஸ் அவர்களும் மீண்டும் வரவேண்டும் என்பதற்காக போட்டியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த 21 பேரையும் வழி அனுப்பிவைக்கவேண்டும் என்பதற்கியலவில்லை. ஏற்கெனவே மீண்டும் 4 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிட்டார்கள். மேலும் 5 பேர் வர வேண்டும் என்ற விருப்பத்தோடு போட்டியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே போட்டியில் ஈடுபட்டிருக்கின்றவர்களை நாம் இங்கே வழி அனுப்பி விடுவதால், நாம் அந்தப் போட்டியில் தவறு புரிந்தவர்களாவோம் என்ற காரணத்தால் நான் அதுப்பற்றிக் குறிப்பிடுவது முறையல்ல என்றே கருதுகிறேன். ஆனாலும், இந்த 21 பேரும் ஆற்றியிருக்கின்ற பணிகளை இந்த மாமன்றமும் நானும், அவர்களை இங்கே தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த அந்தந்தத் தொகுதிக்கு உரியவர்களும் மிக நன்றாக அறிவார்கள். இதிலே நம்முடைய நண்பர் திரு. அய்யாசாமி அவர்களை நான் நீண்டநெடு நாட்களாக அறிவேன். அவர்கள் சுயமரியாதை இயக்க காலம்தொட்டு திராவிட இயக்கத்திலும் பெரியார் அவர்களுடைய தலைமையிலும், போறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலும் பணியாற்றி, அறிவியக்கக் கருத்துக்களை அன்புற எடுத்துச் சொல்லுகின்ற அந்த முன்னணியிலே இருந்தவர்கள் ஆவார்கள். அவர்நல்ல நாடக ஆசிரியரும், நடிகரும் கூட அவர் எழுதிய பல நாடகங்கள் மதுரை மாவட்டத்தில் நடைபெறுத் குக்கிராமங்களே இல்லை. அதிலும் நான் தலைமையேற்று நடைபெறுத நாடகங்களே இல்லை. அந்த அளவுக்கு நாடகத் துறையில் நல்ல வீறு கொண்டு நாடகங்களை எழுதியிருக்கின்ற நாடக ஆசிரியராக இருந்திருக்கின்றார்கள். பிறகு அவர் சில கசப்பு உணர்ச்சிகள் காரணமாக—நான் கொள்கை உணர்ச்சி காரணமாக என்ற வார்த்தையைக் கூறத் தயாராயில்லை—அவர் கழகத்திலிருந்து பிரிந்து காங்கிரஸ் கட்சிக்கு வந்தார்கள். அந்தக் கட்சியில் அவர் ஈடுபட்ட பிறகு, அந்தக் கட்சி கொண்டிருக்கிற கொள்கைகளுக்கேற்ப, இந்த மாமன்றத்திலும், நாட்டிலும் பணியாற்றி வருகின்றார்கள். அவர் பல்வேறு நேரங்களில் இங்கே பேசிய நேரத்தில், இந்த அரசு மேலும் ஊக்கத்தோடு பணியாற்றுவதற்கு எற்ற நல்ல பல கருத்துக்களை எடுத்துரைத்திருக்கின்றார்கள் என்பதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் டி. எஸ். அருணாசலம் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் காங்கிரஸ் இயக்கம் வளர்வதற்குப் பெரும் காரணகர்த்தாக்களிலே ஒருவராக விளங்கினார்கள் என்பதையும், பெருந் தலைவர் காமராஜர் அவர்களுடைய அன்புக்கு உரியவர்கள் என்பதையும் அவர் சுதந்திர போராட்டத்திலே ஐந்து முறை சிறை சென்றவர் என்பதையும் எல்லோரும் நன்கு உணர்வர். அவர் இந்த அவையிலே அதிகம் பேசாவிட்டாலும், பேச்சு தேவையில்லை, செயலே தேவை என்கின்ற வகையில் மக்களிடத்தில் பணியாற்றியவர்கள் ஆவார்கள். அவருக்கும் அவருடைய தொண்டுகளுக்காக நான் என்னுடைய அன்பினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அம்மையார் கிளப்வாலா ஜாதவ் அவர்கள் சென்னை மாநகரிலே சமூகப் பணியில் ஈடு இணையில்லை என்கின்ற அளவுக்கு, எங்கும் அரும் தொண்டினை ஆற்றி வருகின்றவர்கள் ஆவார்கள். சென்னை மாநகரத்திலே முதன் முதலாக ஒரு பெண்மணி துணை ஷெரீபாக ஆளுர்கள் என்றால், அந்தப் பெருமை அவர்களுக்கு உரியதாகும். இன்றைக்கு கௌரவ நீதிபதியாகவும் அவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். 1946-ஆம் ஆண்டிலேயிருந்து 1966-ஆம் ஆண்டு வரை மேலவைக்கு அவர்கள் நான்கு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டு பணியாற்றியிருக்கிறார்கள். 1967-க்குப் பிறகு ஒரு தடவையாக ஐந்து தடவைகள் அவர்கள் மேலவையிலே உறுப்பினராக இருந்து ஐந்து முறை பணியாற்றியிருக்கிறார்கள். 1955-ஆம் ஆண்டு அவர்களுக்கு அவர்களுடைய சேவையினைப் பாராட்டி பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. 1968-ஆம் ஆண்டில் பத்மவிபூஷன் விருதினை அம்மையார் அவர்கள் பெற்றார்கள். ஏற்கெனவே 1936-ஆம் ஆண்டிலே முடிசூட்டு விழா பதக்கம் இந்தியாவிலே பெற்றவர்களில் அம்மையார் அவர்களும் ஒருவர் என்பதும் அவர் இந்த மாமன்றத்திலே வீற்றிருந்தார்கள் என்பதும் நாமெல்லாம் பெருமைப் படக்கூடிய ஒன்றாகும். அவருடைய சேவையினை மிகவும் பாராட்டி 14வது படையினர் வழங்கிய ஜப்பானின் வீரவாள் அம்மையாருக்கு அளிக்கப்பட்டது என்பதையும் நாம் நன்றாக அறிவோம். சமுதாயப் பணியிலும் அவர்கள் மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியிருக்கிறார்கள். இங்கே அவர்கள் அடிக்கடி பேசாவிட்டாலும், அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எல்லாம் அரசுக்கு தேவையான சமுதாயத்திற்கு ஏற்றதான நல்ல பல கருத்துக்களை, விழுமிய எண்ணங்களை எடுத்துச்சொன்னதற்காக நான் நன்றி கூறிக்கொளுகிறேன்.

நண்பர் திருவண்ணாமலை திரு. தேவராச முதலியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே ஈடுபாடு கொண்டவர் என்றாலும், நான் அவரை நன்றாக அறிவேன். அவரைப்பற்றி பல பேருக்குத் தெரியாது. அவர்கள் கதைகளையும் நூல்களையும் எழுதக்கூடியவர் என்பது பல பேருக்குத் தெரியாது. அவர் ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் ஒரு நாடகத்தை எழுதிக்கொண்டு வந்து கொடுத்து அதை நடிக்க வேண்டுமென்று அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது நான் "அவரைப் பார்த்தால் எழுத்தாளர் போல தெரியவில்லையே" என்று அண்ணா அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவர் எழுதிய நூல்களில் சிறந்தது "போர் வீரன் கோபாலன்" என்கிற நவீனமும் "நான் கண்ட மறை திருக்குறள்" என்னும் நூலும்," நான் கண்ட நெறி காந்தியின் நெறி" போன்ற நூல்களும் ஆகும். திரு. தேவராச முதலியார் அவர்கள் இந்த மன்றத்திலே அடிக்கடி வந்து கருத்துக்களை எடுத்துக் கூறவிட்டாலும், இந்த மன்ற உறுப்பினராக இருக்கின்ற அந்தப் பொறுப்பின் மூலமாக நல்ல பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். அவருக்கும் நான் நன்றியினையும் அன்பினையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே திருவண்ணாமலையைச் சேர்ந்த நம்முடைய நண்பர் திரு. திருமலிங்கம் அவர்கள் இந்த மன்றத்தில் சிறிது காலமே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள் என்றாலும், அவர் ஏற்கெனவே நடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்து நல்ல பணிகளை ஆற்றியிருக்கின்றார்கள். இன்றைக்கும் திருவண்ணாமலையிலே நகராட்சித் தலைவராக இருந்து அரும் பணிகளை ஆற்றி வருகிறார்கள். அவர்கள், தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்கும், உரிமைகள் காப்பாற்றப்படுவதற்கும் அடக்கு முறைகளை ஏற்று பலமுறை சிறைச்சாலைக்குச் சென்று வந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் பொது வாழ்விலே ஈடுபாடு கொண்டு அந்தப் பொது வாழ்வின் அடிப்படையிலே பொது மக்களுக்குப் பல பணிகளை இந்த அரசின் மூலமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நற்கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்திருக்கிறார்கள். அவருக்கும் நான் நன்றி கூறிக் கொள்ளுகிறேன்.

நண்பர் திரு. லட்சுமணன் அவர்கள் குடியானவர் குடும்பத்திலே பிறந்து ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபடவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு அரும் பணிகளை ஆற்றியவர்கள் ஆவார்கள். சமூகப் பணியாற்றுவதிலே தீவிரமாக அக்கறை கொண்டவர். அவர்கள் இந்த மாமன்றத்திலே நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவருக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி மஞ்சுபாஷினி அம்மையார் அவர்கள் தலைசிறந்த சமூக சேவகி என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். எப்படி திருமதி கிளப்வாலா ஜாதாவ் அம்மையார் அவர்கள் பெயர் சமூக சேவகி என்ற பெயர்ப் பட்டியலிலே வருகின்றதோ, அப்படி திருமதி மஞ்சுபாஷினி அம்மையார் அவர்களின் பெயரையும் மறந்துவிட இயலாது. அந்த அளவுக்கு நற்கீர்த்தியுடன் சமூகத் தொண்டினை வெகு தீவிரமாக அடக்கத் தோடும், ஆர்ப்பாட்டம் இல்லாமலும் ஆற்றிய அம்மையார் ஆவார்கள் அவர்கள். அவருடைய பெயரை நான் இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்பும், இன்னும் சொல்லப் போனால் நான் ஆளுங் கட்சிக்குக் கூட அல்ல, எதிர் கட்சியிலே எம்.எல்.ஏ.வாக வருவதற்கு முன்பு கூட அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். சென்சார் போர்டிலே மெம்பராக இருந்து, என்னுடைய படங்களிலிருந்து எவ்வளவு கத்தரித்துத் தள்ள முடியுமோ அவ்வளவு கத்தரித்துத் தள்ள உதவியாக இருந்திருக்கிறார்கள். என்னளவில் அம்மையாரின் பெயரை பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் அங்கும் சரி, இங்கும் சரி, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுகின்ற அளவுக்கு பல நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் இந்த மாமன்றத்தின் சார்பில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தென்னற்காடு மாவட்டத்திலே காங்கிரஸ் கட்சியிலே இருந்து காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுவரும், பொது மக்களோடு நெருங்கிய தொடர்பும், நல்ல சுபாவமும் கொண்டவர் திரு. பொன்னப்ப நாயுடு அவர்கள். இந்த மாமன்றத்திலே அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ராமன் நாயர் அவர்கள் விடுதலைப் போராட்டத்திலே மூன்று முறைக்கு மேல் சிறைச்சாலைக்குச் சென்று இந்திய நாட்டினுடைய விடுதலைக்காகத் தியாகத் தழும்பை ஏற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் இங்கே கருத்துக்களை சொல்லுகிற நேரத்திலே, குரலிலே சற்று கடுமை இருந்தாலும் கூட, பழகுவதற்குக் கனிவான இதயம் படைத்தவர் ஆவார். அவரையும் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். அவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பெரியவர் திரு. ராமகிருஷ்ண ஆச்சாரி அவர்கள் இந்த மாமன்றத்திலே மிகுந்த அக்கறை உணர்வோடு அமைதியான நிலையிலே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் வரவேற்கத்தக்கன. அவர் ஒரு முறை பெரிய நோக்கத்தில் கூட "நான் இந்த மன்றத்திலேயிருந்து விடைபெற்றுக்கொண்டு விண்ணிலே செல்ல இருக்கிறேன். நான் விட்டுச் செல்லுகின்ற இந்த இடத்திலே விஸ்வகர்மா முதலியாரைச் சேர்ந்த ஒருவரையே முதலமைச்சர் அவர்கள் இங்கே மறுபடியும் கொண்டு வருவார்கள் என்று எண்ணுகிறேன். நம்புகிறேன்" என்று சொன்னார்கள். அந்த நாள் வெண்டுகோளாகக் கூட எடுத்துக்கொள்ளப்பட்டு, எந்தத் தாய்பிலே பிறந்தாலும் நல்லவைகளை ஆணையாக ஏற்றுக்கொள்ளுகிற பழக்கத்தை நான் வற்புறுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அதை ஆணையாகவே ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அவர்கள் நற்காரியங்களை வழங்கி, பிரிந்துசெல்ல மக்களுக்காக தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள் என்பதற்காகவும் இந்த பின் தங்கிய மக்களுக்காக குரல் எழுப்பியவர் என்கின்ற வகையிலேயும் நான் அவருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. டி. எஸ். சீனிவாசம் பிள்ளை அவர்கள் வணிகப் பெருங்குடி மக்களிலே ஒருவராக இருப்பது மாத்திரமல்லாமல், காங்கிரஸ் பணியிலே மாவட்டத்திலே நல்ல முறையில் ஈடுபட்டு பெரும் தொண்டினை ஆற்றியவர்கள் ஆவார்கள். அவரும் இந்த மாமன்றத்திலே பல நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது நண்பர் திரு. டி. கே. சுப்பையா அவர்கள் இங்கே அடிக்கடி பல பிரச்சினைகளிலே பேசியிருக்கிறார்கள். அவர்கள் இங்கே பேசுகிற எந்த நேரத்திலேயும் மறைந்த நம்முடைய நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் எந்த அளவுக்கு பேச்சில் வேகத்தைக் காட்டினார்களோ அந்த அளவுக்கு வேகத்தைக் காட்டினார்கள். எல்லாம் இந்த மன்றத்திலே உள்ள வரையில்தான். இந்த மன்றத்திலேயிருந்து வெளியே வந்தால், புன்னகையோடு மற்றவர்களைப் பார்த்து அவர்கள் சகஜம் விசாரிக்கும் இனிய பழகுதலைக் கண்டு நான், மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். அவருடைய காரசாரமான பேச்சுக்கள், கடுமையான வாதங்கள் எல்லாம் எந்த நேரத்திலும் எண்ணையும் இந்த அமைச்சரவையில் இருக்கிறவர்களையும் புண்படுத்தாமல் அவைகளில் நியாயம் இருக்குமானால், அவைகளை எடுத்துக்கொண்டு

அதன்படி நாம் நடந்திட கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்ச்சியோடு இந்த அமைச்சரவை நடைபெற்றிருக்கிறது. அவர்கள் ஒரு தனி நபர் சத்யாக்கிரகத்திலே ஒரு மாத காலம் சிறையில் இருந்தது மாத்திரமல்லாமல், ஆகஸ்ட் போராட்டத்தில் ஈடுபட்டு ஓராண்டுக் காலம் சிறைப்பட்டார்கள். ஆகவே தியாகத் தழும்பு ஏறிய நண்பர் திரு. சுப்பையா அவர்கள் தொடர்ந்து இந்த மாமன்றத்திலே இப்பொழுது பணியாற்ற இயலாவிட்டாலும், இன்னொரு காலத்திலே பணியாற்றக் கூடும் என்கின்ற அளவிலே அவரை நான் வாழ்த்தி விடை கொடுத்து நன்றி கூறி அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தேர்தெடுக்கப்பட்ட நம்முடைய நண்பர்கள் திரு. முத்து அவர்கள் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் இங்கே ஆற்றி வருகின்ற பணியையும், மக்களிடத்திலே ஆற்றி வருகின்ற பணியையும் நாம் நன்கு அறிவோம். அவர்கள் தொடர்ந்து பணியாற்ற இருக்கிறார்கள். உழைப்பாளர் கட்சியினுடைய தலைவர் திரு. ராமசாமி படையாச்சி அவர்களும் நண்பர் திரு. சாம்பசிவம் அவர்களும் தென்னற்காடு மாவட்டத்திலேயிருந்து போட்டியில்லாமல் தேர்தெடுக்கப்பட்டு இங்கே மீண்டும் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களை வழியும் அனுப்பி வரவேற்கவும் நாம் இங்கே கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே அவர்களை மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்த்தி நான் வரவேற்கிறேன். போட்டியிடுகின்ற நண்பர்களிலே திரு. தாமோதரன் அவர்களும் ஒருவர். அவர்கள் எப்படிப்பட்ட பாம்பரையில் வந்தவர்கள் என்பதும் எப்படிப்பட்ட அறிவாற்றல் மிகுந்த குடும்பத்திலே கிடைத்த முத்து என்பதும் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொள்கைகளை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், கடந்த ஈராண்டு நாட்களாகக் குரலில் கடுமையைப் பார்த்தோமே அல்லாமல், மற்ற நாட்களில் எல்லாம் அந்த மொழியிலே இனிமையைக் கண்டு அந்த மொழிக்கு அவ்வளவு இனிமை இருக்கிறதா என்று எல்லாம் வியந்து பாராட்டியவர்களில் நானும் ஒருவன். ஆகவே அவர்களும் தொடர்ந்து இந்த மன்றத்திலே பணியாற்ற வேண்டும் என்கின்ற வேட்கையோடு போட்டியிடுகிறார்கள். ஆகவே அவர்களை நான் வாழ்த்துகிறேன்.

திரு. சந்தோஷம் அவர்கள் இங்கே பல பிரச்சினைகளைப் பற்றி எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களும் இன்றைக்கு வேட்பாளராகப் போட்டியிடுகிறார்கள். அவர்களும் இந்த மன்றத்திலே தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்கின்ற அந்த ஆவலோடு இந்தப் போட்டியிலே ஈடுபடுகிறார்கள். அவர்களையும் நான் வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே துணைத் தலைவராக வீற்றிருந்து அதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினராக மாத்திரம் இருந்த காலத்திலே ஆசிரியர்களுக்காகப் பெரிதும் வாதாடுவதிலே முன்னணியிலே

12·2(
p.m.

நின்றவர்களிலே ஒருவர் என்ற வகையிலே பணியாற்றிவர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி ஆவார்கள். அவர்களும் மீண்டும் போட்டியிடுகிறார்கள். அவர்களையும் நான் வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர்களுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் நல்லபல கருத்துக்களை எடுத்துரைத்த நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் மீண்டும் போட்டியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களையும் நான் வாழ்த்துகின்றேன்.

அதைப் போலவே மறைந்த மார்ஷல் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய தலைவராக வீற்றிருந்த திரு. நேசமணி அவர்களுடைய மகன் திரு. வில்ஸன் அப்பலோஸ் அவர்கள் இந்த மன்றத்திலே திறம்படப் பணியாற்றியவர். அவர்கள் மீண்டும் போட்டியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களையும் வாழ்த்தி, போட்டியிடுகின்ற வர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

விடைபெற்று செல்கின்றவர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். வென்று வந்தவர்களையெல்லாம் நான் வரவேற்கின்றேன் என்று கூறி, அனைவருமே இந்த மன்றத்தினுடைய மரபுகளைக் காப்பாற்றுவதிலும், இந்த மன்றத்தினுடைய பெருமையை உயர்த்துவதிலும் ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஒத்துழைத்தார்கள் என்கின்ற வகையிலே அனைவருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் மிக விரிவான விளக்கமான, அதிலும் கவிதை பாடுவது போன்று வெகு அழகான இந்தப் பிரிவு உபசாரமும் அத்தோடு வரவேற்பும் கலந்த அழகான ஒரு பேச்சுக்குப் பின்னால் நானும் இதில் கலந்துகொள்ளும்படியான ஒரு வாய்ப்பு இடைத் திருக்கிறது. நமது தேசத்திலேயே சென்னையில் உள்ள சட்டசபைகளில் இந்த மேலவைக்கு ஒரு தனிப் பாரம்பர்யம் உண்டு. டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் வெகுகாலம் இந்தச் சபையில் அங்கத்தினராக இருந்தது இந்த சபைக்கே ஒரு பெரிய கவுரவத்தையும் மதிப்பையும் கொடுத்து வந்தது. தனிச் சிறப்பும் பாரம்பர்யமும் உள்ள இந்த சபையின் கவுரவத்தை இது நாள் வரை நல்ல முறையில் பாதுகாத்துவிட்டோம். இதில் முழுமையாக ஒத்துழைத்து மனப்பூர்வமாக ஈடுபட்டு, கவுரவத்தையும் பாரம் பர்யத்தையும் பாதுகாத்து, இப்போது 12 பேர் நம்மை விட்டுப் பிரிந்து, போட்டி போடாமல் விலகிச்செல்கிறார்கள். 4 பேர் ஏற்கனவே திரும்பி வந்துவிட்டார்கள். இன்னும் 5 பேர் போட்டியில் எப்படி பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் 21 பேரும் இதிலே ஒத்துழைத்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த

21 பேரில் நான் தலைவராக இருந்து, எதிர்க் கட்சித் தலைவராக இருந்து நடத்திவரும் இந்தக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அங்கத்தினராக இருந்தவர்கள் 11 பேர்கள். பாதிக்கு மேலே, 21 பேரில் 11 பேர் என் கட்சியைச் சேர்ந்தவர்கள் விலகுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே என்னுடைய பலம் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கும் இனி மேல். எந்த வகையிலும் அது ஈடுசெய்ய முடியாத இழப்பு எனக்கு என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும். எண்ணிக்கையில் குறைந்தாலும், காரம் குறையாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது 11 பேர் போக மீண்டும் 7 பேர் இருப்போம். இன்னும் எத்தனை பேர் வந்து சேர்கிறார்களோ தெரியாது. இந்தப் 11 பேர் விலகுபவர்களில் அன்பர் திரு. அருணாசலம் அவர்கள் நான் என்று சட்டசபைப் பிரவேசம் செய்தேனோ 1946 மார்ச்சில் அதே தேதியில் அவர்களும் சட்டசபை அங்கத்தினராக வந்தார்கள். அன்றுமுதல் இன்றுவரை கீழவையிலும் மேலவையிலும் மாறி மாறி அவர்களும் சட்டசபை அங்கத்தினராக—இடையில் கொஞ்ச நாள் தவிர—இருந்துவந்தார்கள். அண்மையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உடல் நலக் குறைவினால் முழுதாகப் பங்குகொள்ள முடியவில்லை. அதற்காக மிகவும் வருத்தத்தோடு அடிக்கடி வந்து பேசுவார்கள். மீண்டும் அவர்கள் நின்றிருந்தால் வந்து சேர்வது எளிது. கஷ்ட மில்லை. அப்படியிருந்தும்கூட அவர்கள் மறுத்துவிட்டு இப் பொழுது ஓய்வு பெற்றுக்கொள்கிறார்கள்.

அதேமாதிரி மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் நானும் விரிவாகப் பேச வேண்டிய அவசியமில்லை. முதலமைச்சர் அவர்கள் பேசியதைக் காட்டிலும் நான் ஒன்றும் அதிகமாகப் பேசப் போவதில்லை. கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லா அங்கத்தினர்களைப்பற்றியும் நன்றாகப் பேசிவிட்டார்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் 4 பேர்கள் இப்பொழுது ஓய்வு பெற்றதில், 3 பேர்கள் ஏற்கனவே வந்துவிட்டார்கள். எங்கள் நகரப்பிதா மேயர் முத்து அவர்களும், திரு. ராஜகோபால் அவர்களும் திரு. சாம்பசிவம் அவர்களும் ஏற்கனவே வந்துவிட்டார்கள். திரு. தர்மலிங்கம் அவர்களுக்கு எது காத்துக்கொண்டிருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆகையினால் ஆளுங் கட்சியிலிருந்து விலகியவர்களில் 3 பேர்கள் வந்துவிட்டார்கள். மற்றவர்களும் வந்துவிடவேண்டும் என்று விரும்புவதால் போட்டியிடுபவர்கள், அவர்களை வர வேண்டாம் என்று நாங்கள் சொல்வதாக நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. நல்ல வழியில் திரு. தாமோதரன் அவர்களும் திரு. சந்தோஷம் அவர்களும் இந்த சபையில் ஆற்றிக்கொண் டிருக்கும் உழைப்பை, சேவையை நாம் என்றும் மறந்துவிட முடியாது. அவர்கள் மீண்டும் இந்தச் சபையில் அங்கத்தினர் களாக இருக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் சபையில் இப்பொழுது

உள்ளவர்கள் எல்லோருக்கும் உண்டு. ஆகவே தேர்தலில் எப்படி முடிவானாலும் சரி, அவர்கள் ஆற்றிவந்த சேவைக்கு என்றும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கொஞ்சமும், **fear or favour** இல்லாமல் பணியாற்றி வந்தார்கள். ஆளுங்கட்சியினிடத்தில் திரு. தாமோதரன் அவர்களுக்குப் பாசம் அதிகம் இருந்தாலும், கண்டிக்க வேண்டிய விஷயத்தில் கொஞ்சம்கூட தாமதமில்லாமல் தன் மனதில் பட்டதை சொல்லிக் கண்டித்து, சட்ட சபை அங்கத் தினராக இருந்த டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள், எப்படி சட்ட சபையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு லட்சிய புருஷராக இருந்தாரோ, அப்படி லட்சுமணசாமி முதலியார், இராமசாமி முதலியார் பாரம்பர்யத்தைக் காப்பாற்றி வந்தார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அது இன்றும் நேற்றும் அவர் பேசிய பேச்சிலிருந்து புரிந்துவிடும். இதற்கு முன்பும் பேசியிருக்கிறார்கள். என்றுமே அவர்களிடத்தில் எனக்கு அதிக மதிப்புண்டு. எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்த 11 பேரும் விலகிவிடுகிறார்கள். அதிலே யாருமே மீண்டும் தேர்தலுக்கு நிற்பதாகத் தெரியவில்லை. வேறு சிலர் எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் நிற்கிறார்கள். எத்தனை பேர் வருவார்கள் என்று தெரியாது. திரு. வில்ஸன் அப்பலோஸ் ஒருவர்தான் தெற்குக் கோடியில் கன்னியாகுமரியில் நிற்கிறார்கள். அவர்கள் வந்து சேர்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சியைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. தேர்தலுக்கு நிற்கும்போதே தெரியும், வந்து விடுவார் என்று. ஆனால் இந்தக் காலத்தில் 1972-ல் எந்த தேர்தலானாலும், ஒரு தேர்தலிலே நின்று போட்டியில்லாமல் வருவது என்றால் திரு. சாம்பசிவம் அவர்களையும், திரு. ராமசாமி படையாச்சி அவர்களையும் பாராட்டுவது கொஞ்ச நஞ்சமல்ல; எவ்வளவு அதிகமாகப் பாராட்ட வேண்டுமோ அவ்வளவு பாராட்டக் கடமைப்பட்டிக்கிறோம். அவர்கள் போட்டியில்லாமல் வந்தது மிகவும் பெருமை. பொதுவாக இதில் முதலமைச்சர் அவர்களையும் நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிஸ்டர் சேர்மன்: அவரும் ரிட்டயர் ஆகிவிடுகிறாரா? (சிரிப்பு).

திரு. கே. ராஜாராம்: ரிட்டயர் ஆகிறவர்கள் சொன்ன கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றியது பெரிய காரியம். திரு. அய்யாசாமி அவர்களையும் திரு. ராமகிருஷ்ண ஆச்சாரி அவர்களையும் அந்த சமூகம் மிகவும் பின்னடைந்த சமூகம் என்பதனால் அந்த சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் அங்கத்தினர்களாகப் போட்டோம். திரு. ராமகிருஷ்ண ஆச்சாரி அவர்களையும், திரு. அய்யாசாமி அவர்களையும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நியமித்திருந்தோம். அவர்கள் "நாங்கள் மீண்டும் அங்கத்தினர்களாக வரவில்லை என்றாலும்கூட, எதற்காக எந்த நோக்கத்திற்காக எங்களைக்

காங்கிரஸ் கட்சி நியமித்ததோ அந்த நோக்கத்திற்குக் குறை படாமல் முதலமைச்சர் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும்" என்று கேட்டார்கள். அதைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் நான் முதலமைச்சர் அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன். ஆக இரண்டு சமூகங்கள் மிகவும் பின்னடைந்தவை. இன்னும் எத்தனை வருஷத்திற்குக் கைதூக்கி விடவேண்டுமோ தெரியவில்லை. அவர் களுடைய கோரிக்கையை நிறைவேற்றியதற்காகத்தான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன் என்று சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

ஓய்வு பெறும் அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல் களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள் சபையை விட்டுப் போகிறார்களே ஒழிய, அரசியலிலிருந்து அவர்கள் ஓய்வுபெற வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் யாரும் பேச வில்லை. அவர்கள் இந்தச் சபையில் அங்கத்தினர்களாக இல்லா விட்டாலும், சமுதாயத்திற்கும் அரசியலுக்கும், வெளியிலிருந்து எத்தனையோ வகையில் சேவை செய்ய முடியும். அப்படி தொடர்ந்து சேவைசெய்து வருவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களை பாராட்டுகிறேன். மீண்டும் மீண்டும் பாராட்டி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. அறிவழகன்: பெருமதிப்புக்குரிய தலைவரவர்களே, மாண்பு மிகு முதல்வரவர்கள் தந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் ஒட்டி, இந்த மன்றத்தில் ஆறு ஆண்டுக்காலம் பணியாற்றி விடைபெற இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களைப்பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்களைப்பற்றி என னுடைய உணர்வுகளை பிரதிபலிப்பதற்கான ஒரு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 12-30 p.m.

இந்த மன்றத்தில் மிக நீண்டகாலமாகப் பணியாற்றிக்கொண்டு வருகிற திருமதி கிளப்வாலா ஜாதவ் அவர்கள் உண்மையிலேயே நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, கீழ் நிலையில் இருக்கின்ற, ஊனமுற்றவர்களுக்காகவும், சமுதாயத்தில் பல்வேறு கொடுமைகளுக்காளானவர்களுக்காகவும் மிகச் சிறந்த தொண்டாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பல்லாண்டு காலமான தொண்டை உணர்ந்து, அவருக்கு இந்தச் சட்டமன்ற மேலவை யில் உறுப்பினராக இருக்கின்ற பெருமையைத் தந்து அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியது உண்மையி லேயே சிலரது மனநிறைவைப் பெற்றதாக ஆகும்.

ஆசிரியர் தரப்பைச் சேர்ந்த இரண்டு பேர்கள் இந்த மன்றத்திலே திருவாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும்— மிகச் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள். சட்டமன்ற மேலவையில் ஆசிரியர் பிரச்னைகளைத் தான் மிகவும் அதிகமாகப் பேசுகிறார்கள் என்று அடிக்கடி சொல்லப்பட்டாலும், ஆசிரியர்களுடைய பிரச்னைகளை நல்ல முறையிலே எடுத்துச் சொல்லி, நாட்டிலே குழந்தைகளுடைய நல்

வாழ்க்கைக்காக திருவாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திருவாளர் சங்கரலிங்கம் அவர்களும் இந்த மன்றத்தின் முன்னால் பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.

பட்டதாரிகள் தொகுதியின் சார்பில் திரு. தாமோதரன் அவர்களும் திரு. சந்தோஷம் அவர்களும் இருக்கின்றார்கள். பட்டதாரி தொகுதிகளினுடைய பிரதிநிதியாக இருப்பது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். காரணம், பட்டதாரி தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள், எல்லாப் பிரச்னைகளிலும் மிகுந்த அக்கறை கொண்டு உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணித்து வருகிறவர்களாகும். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற முறையில் மிகச் சிறப்பான ஆங்கிலத்தில்—நாங்களெல்லாம் சொல்லி மகிழத்தக்க ஆங்கிலத்தில்—நல்ல கருத்துக்களை, இவர்கள் இங்கு சிறப்பாக எடுத்து நவின்றார்கள்.

மேலும் பல்வேறு பின்தங்கிய தொகுதிகளின் சார்பில் இங்கே பணியாற்றிய சிறப்புக்குரிய நண்பர் திரு. அய்யாசாமி அவர்களும், உயர்திரு ராமகிருஷ்ண ஆச்சாரி அவர்களும் அவரவர்களுடைய பின்தங்கிய மக்களுக்காக மிகச் சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

உண்மையிலேயே, இன்றையதினம் ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினருடைய தொண்டுகளைப்பற்றிப் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

பிளாட்டோ சொன்னது போல, உலகத்துப் பிரச்னைகள் எதை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள், தீர்த்துத் தருகிறோம், என்று சொல்லத் தக்க பேரறிவு படைத்தவர்கள் இந்த மன்றத்தில் பணியாற்றுகிறவர்கள்.

அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து, நான் அமைகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே குத்தகைகாரர்கள் வைத்துக்கொளைக்கூடிய நிலங்கள் ஐந்து ஏக்கராக இருக்கலாம் என்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த ஐந்து ஏக்கரா இனிமேல் நிரந்தரமாக ஐந்து ஏக்கராத்தான் இருக்கவேண்டும் என்பதாகவும் சட்டம் இன்னும் அதைத் தள்ளிப்போடுகிற நிலைமையிலே நிரந்தரமாக்கப் படுகிறது என்றுதான் நினைக்கிறேன். ஐந்து ஏக்கர் என்று சொல்லும் போது, அந்த ஐந்து ஏக்கருக்கு ஒரு குத்தகைக்காரருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்ற பிரச்னை முன்பு இந்த மன்றத்திலே பேசப்பட்டபோது, ஏக்கருக்கு எல்லாம் போக 200 ரூபாய் வருமானம் வருகிறது என்று கணக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நில உடமையாளர்களுக்குக் கொடுத்துவிட்டு, "கல்டிவேஷன் எக்ஸ்பென்ஸ்" என்று சொல்லக்கூடிய சாகுபடிக்கும் சேர்த்து கிட்டத்தட்ட 75 சதவிகிதம், 80 சதவிகிதம் செலவு செய்துவிட்டு அவர்களுக்கு மிஞ்சக் கூடியது 24 சதவீதம்தான்—அதாவது ஏக்கருக்கு 200 ரூபாய் என்று கணக்குக் காட்டியிருக்கிறார்கள். ஐந்து ஏக்கர்தான் அவர்களுக்கு இருக்கலாம் என்று ஒரு சட்டத்தைச் செய்துவிட்ட பிறகு அவர்களுக்கு ஆயிரம் ரூபாய்தான் வருமானம்

[திரு. ஜி. சுவாமிநாதன்] 7th April 1972]

வரலாம் என்ற நிலைமையை நாம் செய்கிறோம் என்பதாக அர்த்தம் கொடுக்கிறது. ஆகவே சாதாரணமாக நில உடமை யாளர்கள் 15 ஏக்கர் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். நில உடமையாளர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 400 வரக்கூடிய அளவிலே, இருபோகச் சாகுபடி செய்தால் கிட்டத்தட்ட 6 ஆயிரம் ரூபாயும் ஒருபோகச் சாகுபடிச் செய்தால் இரண்டாயிரம், மூன்றுயிரம் ரூபாயும் வருமானம் வரக்கூடிய அளவுக்குப் பண்ணி விட்டு குத்தகைக்காரர்களாக, உழுவர்களாக இருப்பவர்களுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் வரக்கூடிய ஐந்து ஏக்கர் நிலத்தை மட்டும்தான் சாகுபடி செய்யலாம் என்று சொல்லுவது எவ்வளவு தூரம் நியாயமாகும் என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், நிலத்தைச் சாகுபடி செய்பவர்களுக்கும், நில உடமையாளர்களாக இருப்பவர் களுக்கும் ஒரு "எக்னமிக் ஹோல்டிங்" இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை எல்லோரும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே ஐந்து ஏக்கர் நிலம்தான் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை மாறி, அவரவர்கள் நல்ல முறையில் உழைத்துச் சாகுபடி செய்தால், அவர்கள் அதிகப்படியான நிலம் வைத்துக்கொண்டிருந் தால் அதில் என்ன தவறுகள் ஏற்பட்டுவிடும் என்று அறிய விரும்பு கிறேன். எவ்வளவுக்கெவ்வளவு குத்தகைதாரர்கள் அதிகமாக நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அதற்குத் தகுந்தபடி சாகுபடி செய்யக்கூடிய அளவுக்குப் பொருளாதார வசதிகள் அவர்களுக்கு ஏற்படக்கூடும். ஆகவே தனிப்பட்ட முறையிலே ஐந்து ஏக்கர் என்று அவர்களுக்கு வைக்கவேண்டியது என்ன அவசியம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் ஐந்து ஏக்கர் என்று சொல்லுகிறபோது, அவர்களுக்கு நிலத்தை எங்கிருந்து கொடுப்பது என்ற பிரச்சினை எழலாம். ஆனால் தனிப்பட்ட முறையிலே ஐந்து ஏக்கர் என்று அவர்களுக்கு வைக்க வேண்டியது என்ன அவசியம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் ஐந்து ஏக்கர் என்று சொல்லுகிறபோது, அவர்களுக்கு நிலத்தை எங்கிருந்து கொடுப்பது என்ற பிரச்சினை எழலாம். ஆனால் தனிப்பட்ட முறையிலே அந்த ஊரிலே ஐந்து ஏக்கருக்கு மேலே வைத்துக் கொண்டிருப்பவர்கள், நான் நேற்று சொன்ன மாதிரி, இன்றையதினம் நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படி இருந்து கொண்டிருப்பவர் களுடைய நிலத்தைக் குறைப்பதனாலோ அல்லது தனிப்பட்டவர்கள் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கும் அந்தக் குத்தகை

7th April 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தாரரிடத்தில் அந்த ஐந்து ஏக்கருக்கு மேலே கொடுத்து சாகுபடி செய்யச் சொல்வதனாலோ அவர்களுடைய நிலைமைகள் மேலும் விருத்தியடையக்கூடும். இதை நான் குறிப்பாக இன்றைய தினம் ஏன் சொல்லுகிறேன் என்றால், 5 ஏக்கருக்கு உள்ளாக இருக்கும் குத்தகை தாரர்கள் 88 சதவீதம் இருக்கிற காரணத்தினாலேதான், அவர்கள் சரியான முறையிலே நில உடமையாளர்களுக்குக் கொடுக்க முடியாத ஒரு துர்லபமான நிலையிலே இருக்கிறார்கள் என்ற கருத்து நிலவுகிறது என்பதை நேற்றையதினம் இங்கே பார்த்தோம். அப்படியிருக்கிற பொழுது அவர்களுக்கு இன்னும் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னுமொரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக குத்தகைதாரர் என்று சொல்லுகிறபோது அவர்களை உழுவர்கள் என்றும் நில உடமையாளர் என்று சொல்லு கிறபோது, அவர்கள் தாங்களாகவே சாகுபடி செய்யாதவர்கள் என்ற அபிப்பிராயம் இந்த மன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் குத்தகைதாரர் என்று சொல்லுகிறபோது 25, 30, 40 சதவீதம் பேர் தான் தாங்களே தங்களுடைய உழைப்பின் மூலம் அந்தக் குத்தகையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பாக்கி பேர்கள் பண்ணையிலே எப்படி சாகுபடி செய்கிறார்களோ அதைப்போலவே அவர்கள் நேரிடையாக உழைப்பைச் செலுத்தாமல் ஆட்களை வைத்து அந்தக் குத்தகையை நடத்தி மேற்பார்வை செலுத்தி வருகிறார்கள். நிலச்சுவாந்தார்கள் எப்படி பண்ணையிலே நாட்டத் தைச் செலுத்துகிறார்களோ அதைப்போலவே இவர்களும் செலுத்து கிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொண்டு, குத்தகைதாரர்கள் என்றால் உழுவர்கள் என்றும் நிலச் சொந்தக்காரர் என்றால் தாங்களாகவே சாகுபடி செய்யாதவர்கள் என்றும் பேசப்பட்டு வந்தது தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று நில உச்ச வரம்பு குத்தகைதாரர் களுக்கு விதிக்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு குடும்பத்திலே உள்ள பெண்டு பிள்ளைகள் எல்லாம் மட்டும் வயலிலே இறங்கி வேலை செய்தாலும் அவர்களால் ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கருக்கு மேல் அதிகமாகச் செய்ய முடியாது என்பது அநேகமாக எல்லோரும் ஏற்றுக்கொண்ட அபிப்பிராயம்.

[திரு. எம். ஆறுமுகசாமி] [7th April 1972

இதனால்தான் நாம் பல விஷயங்களில் ஐந்து ஏக்கரைக் கணக்காக வைத்துக்கொண்டிருக்கிறோம். ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கருக்கு மேலே குத்தகைதாரர்களுக்கு வேண்டுமென்று மாண்புமிகு நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில், இப்படி 5, 10 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் குத்தகைதாரர்கள் நேரிடையாகச் சாகுபடி செய்வதில்லை என்று அவரே சொன்னார்கள். அந்த ஐந்து ஏக்கரையே நேரிடையாகச் சாகுபடி செய்யாத ஒருவருக்கு இன்னும் அதிகமான நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று என்ன கருத்தில் சொன்னார் என்பது விளங்கவில்லை. அவர்கள் நேரிடையாகச் சாகுபடி செய்ய வேண்டு மென்ற கருத்திலும், படிப்படியாக உழவர்களுக்கு நிலம் சொந்த மாக இருக்க வேண்டும் அல்லது சொந்தக்காரர்கள் உழவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தை ஒட்டித்தான் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்து வருகிறபோது, ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கர் என்பது நிச்சயமாக ஒரு குடும்பத்துக்குப் போதுமானது என்று அபிப்பிராயப்படுகிறேன். இன்றைக்கு இருக்கக் கூடிய வாரக் குத்தகை முறையிலே அவர்களில் பலர் நல்ல முறையிலே விவசாயம் செய்ய இயலாதவர்களாக இருக்கிறார்கள். நிலையற்ற தன்மை காரணமாக அவர்கள் இருக்கிறார்கள். எனவே 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பகுதியிலே தஞ்சை மாவட்டத்திலே அநேகமாக ஐந்து ஏக்கரே இருக்கும். சில இடங்களில் 4-3/4 ஏக்கரும் கூட இருக்கலாம். ஆனால் மாநிலம் முழுவதும் உள்ள மற்றப் பகுதிகளில் பார்க்கிறபோது அதற்குக் கூடுதலான நிலைமையே இருக்கும். எனவே ஒரு குடும்பம் சாகுபடி செய்வதற்கு 5 ஸ்டான் டர்ட் ஏக்கர் போதும் என்பதோடு அவர்களுக்கு அதிகமாகக் குத்தகை நிலத்தை விரிவுபடுத்த வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மறைமுகமாகவும் நிலச்சுவாந்தார்கள் போல அவர்கள் தூரத்தில் இருந்து கொண்டு விவசாயம் செய்கிறார்கள். கண்காணிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது கூட தேவை யில்லை. தூரத்திலே இருந்து கண்காணிக்கிற பிரச்சினையே இதனால் வராது. ஆதலால் இந்த 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் நில உச்சவரம்பு "ஆப்சன்ட்டீ லான்ட் லார்ட் சிஸ்ட்டத்தை"-க் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்கின்ற முறையிலே இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

7th April 1972]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தச் சட்டம் இப்போது ஏதோ புதிதாகக் கொண்டு வந்ததல்ல. 1962-ம் ஆண்டு நிலச் சட்டம் இந்த நாட்டில் வந்தபோது உழுபவர்கள், குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கலாம் என்ற சட்டம் போடப்பட்டது. அதிலே 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் வரையில் ஒரு குத்தகைதாரர் அதிகமாக உழலாம். அதற்கு மேல் உழக்கூடாது. 1962-ம் ஆண்டு கொண்டு வந்ததை மேலும் 3 ஆண்டு காலத்திற்கு நீடித்திருக்க வேண்டுமென்று போட்டார்கள். ஆண்டுக்கு ஆண்டு நீடித்துக் கொண்டே வந்தார்கள். இப்படிச் சட்டத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டே வந்தோம். 1972-ம் ஆண்டு மே மாதம் இரண்டாம் தேதி வரையில் இந்தச் சட்டத்திற்கு உயிர் இருக்கிறது. அது வரை செல்லுபடியாகும். அதை நிரந்தரமாக்குவோம். ஆண்டுக்கு ஆண்டு செய்ய வேண்டியதில்லை என்பதற்காக இப்போது இந்தச் சட்டப் பிரிவைக் கொண்டு வந்திருக்கிறோம். திரு. சுவாமி நாதன் அவர்கள் பேசும்போது, நில உச்ச வரம்பு வைக்கிறபோது, 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைத்து விட்டு, சொந்தக்காரர் களுக்கு அவ்வளவு வருமானம் கொடுத்து விட்டு குத்தகைதாரர் களுக்கு 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று ஏன் நிர்ணயித்தீர்கள் என்று கேட்டார்கள். குத்தகைதாரர்களுக்கு எப்படி 5 ஏக்கர் என்று சொல்கிறோமோ அப்படி நிலச் சொந்தக்காரர்களுக்கும் நிலத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் அதை வேண்டுமானால் கவனிக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நம் நாட்டில் இருக் கிற சோஷலிசம் மேலே இருக்கிறவர்களைக் கீழே கொண்டு வருவது என்று இருக்கிறது. சாதாரணமானவர்களை மேலே ஏற்றுவதற்கான வழிகளைச் சொல்கிறேன். சமப்படுத்துவது என்பதை மேலே இருக் கிறவர்களைக் கீழே இறக்கி எல்லோரையும் ஒரே நிலைக்கு ஆக்குவது என்று நாம் கருதுகிறோம். அதைத்தான் அமைச்சரவர்கள் சொல் கிறார்கள். சாதாரணமானவர்களை மேல் நிலைக்கு ஆக்குவதுதான் நான் கருதுகிற சரியான சோஷலிசம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மேலே இருக்கிறவர்களைக் கீழே இறக்க வேண்டுமென்பதல்ல. இப்போது செய்கிறோம் என்பதல்ல. தவறுக பத்திரிகையில் வரவேண்டியதில்லை.

[திரு. ப. உ. சண்முகம்] [7th April 1972

நான் தெரிவித்துக் கொள்வது அப்படி யோசிக்கலாம் என்று சொன்னேன். நேற்று திரு. சுவாமிநாதன் அவர்கள் வாதிடும்போது குத்தகைதாரர்கள் என்ற பெயரால் 5 ஸ்டான்டர்ட் ஏக்கர்தான் குத்தகைதாரர்கள் பயிர் செய்யலாம் என்று சட்டம் போட்டிருக்கிறீர்கள். ஏராளமான நிலத்தைக் குத்தகைதாரர்கள் வைத்திருக்கிறார்கள், பிடித்திர்களா, தடுத்திர்களா என்று கேட்டார்கள். அதற்கு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். வலிவலத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றி, அதாவது பினாமி குத்தகைதாரர்களைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். டெனன்ஸி ரிகார்டுகளைப் பரவலாக ஆக்கியிருக்கிறோம். அவர்கள் தீவிரமாக ரிகார்டு செய்துகொண்டு வருகிற காரணத்தினால், குத்தகைதாரர்கள் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பது சிரமமல்ல என்று நினைக்கிறேன். அதைச் சுலபத்தில் கண்டு பிடித்து விடலாம். 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் போதுமா, என்று கேட்டார்கள். 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் போதும் என்று 1962-ம் ஆண்டிலேயே கருதப்பட்டது. அதுவே போதுமென்று ஒப்புக்கொள்கிறோம். ஏனென்றால் தமிழ் நாட்டில் அதிகமான விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அதற்காக நிலத்தைத் துண்டு துண்டாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்பதல்ல. எவ்வளவு அதிகமான விவசாயிகளுக்குப் பலன் கிடைக்குமோ அந்த அளவிற்கு அவர்கள் வசதியாக வாழ்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது இந்தச் சட்டத்தின் நோக்கமே தவிர, இருக்கிறவர்களை வெளியேற்றுவதற்காக அல்ல. 80 சதவீதத்தினர் 5 ஸ்டான்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிறார்கள் என்று திரு. சாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். இப்படி 80 சதவீதத்தினர் 5 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கும்போது, அதிகமான நிலத்தை பினாமி பேரால் வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். டெனன்ஸி ரிகார்ட்ஸ் முழுமையானதற்குப் பிறகு, பினாமி வருவார்களானால், அதற்குப் பிறகு சட்டத்தை எப்படித் திருத்தலாம் என்று யோசிக்கலாமே தவிர, இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. டெனன்ஸி ரிகார்டு முடிவடைந்த பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம். 5 ஸ்டான்டர்ட் ஏக்கர் போதுமென்று ஏற்கெனவே உள்ள சட்டப்படி இருக்கிறது. அதுவே போதுமென்று புதிய சட்டத்தில் அதிகப்படுத்தவில்லை. எனவே இதை ஒப்புக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7th April 1972]

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, டெனன்ஸி ரிகார்டில் குத்தகைதாரர்களுடைய பெயர்கள் பதிவு செய்யாமல் விடப்பட்டுப் போகுமானால், இந்தச் சட்டத்திற்குப் பிறகு அவர்கள் குத்தகைதாரர்களாகக் கருதப்படமாட்டார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, குத்தகைதாரரா இல்லையா என்பதை முதலில் கேட்கிறோம். குத்தகைதாரர்களைப் பதிவு செய்துகொள்ளும்போது சாட்சிகளை வைத்துப் பதிவு செய்துகொள்கிறோம். யாராவது ஒரு விவசாயி தான் குத்தகைதாரர் இல்லையென்று சொல்லிவிட்டு கேட்கும்போது நான் குத்தகைதாரர் அல்ல, கூலி வேலை செய்கிறவர் என்று ஒதுங்கிவிடுவாரானால், மறுபடியும் குத்தகைதாரன் என்று அவரே சொல்வது சமுதாயத்திற்குப் பொருந்தி வராது. சட்டத்தைப்பற்றிப் பின்னால் யோசிக்கலாம். ஒன்று தெரிவித்துக்கொள்வேன். குத்தகைதாரர் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பாதுகாப்பு அளிக்கப்படும். பதிவு செய்கிற காரணத்தினால், அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்ற அச்சம் யாருக்கும் வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இப்போது குத்தகைதாரர்களாக இருக்கிறவர்கள் உண்மையில் நிலத்தில் இறங்கி வேலை செய்கிறார்களா அல்லது பெயரளவிற்கு அவர்கள் குத்தகைதாரர்களாக இருந்து கொண்டு தூண அல்லது கீழ்க்குத்தகைதாரர்களிடம் கொடுத்துப்பயன் பெறுகிறார்களா என்று கவனித்து இந்த மாதிரிப் பெயரளவிற்கு மட்டும் குத்தகைதாரர்களாக இருக்கிறவர்களை, குத்தகைதாரர்கள் என்ற உரிமையிலிருந்து நீக்குவதற்கு ஏதாவது வழி வகைகள், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ரொம்பவும் முற்போக்கான கருத்து. நேற்று இந்த மாமன்றத்தில் இந்த விவாதம் நடந்தபோது, சுதந்திரக் கட்சித் தலைவரவர்கள் இங்கே இல்லை. உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இதே கருத்தைக் கிளப்பினார்கள். இதைப்பற்றி விவாதித்து பினாமியாக நிறையப்பேர் இருக்கிறார்கள், ஐந்து ஏக்கருக்கு அதிகமாக வைத்திருக்கிறவர்கள் பல

[திரு. ப. உ. சண்முகம்] [7th April 1972

பேரை எனக்குத் தெரியுமென்று சொன்னார்கள். நான் நாட்டு நன்மையை உத்தேசித்து அந்தப் பெயர்களைக் கொடுங்கள் என்று கேட்டேன். தருவார்கள் என்று நம்புகிறேன். அப்படி யாராவது இருப்பார்கள். ஆனால் அப்படி லட்சக் கணக்கில் குத்தகைதாரர்களாக இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : அப்படி லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவரே சொன்னார்கள். 80 சதவீதத்தினர் 5 ஏக்கருக்குக் குறைவாகப் பயிர் செய்கிறார்கள் என்று அவர்களே சொன்னார்கள். அப்படியானால் 20 சதவீதத்தினர் தான் அதிகமான எக்கரில் பயிர் வைக்கிறவர்கள் போல் தெரிகிறது. டெனன்சி ரிகார்டு முடிந்த பிறகு யார் என்று கண்டுபிடித்து விடலாம். பினாமி போல் குத்தகை வைத்திருந்தாலும், 5 ஸ்டான்டர்ட் ஏக்கருக்கு மேல் கூடாது என்று சட்டம் வைத்திருக்கிறோம், லெஸ்சி, சப்லெஸ்சி பற்றிக் கேட்டார்கள். புதிதாகத் திருத்தியிருக்கிற சட்டத்தில் கீழ்க்குத்தகைக்கு யார் விட்டாலும் குத்தகைதாரர்களாக டெனன்சி ரிகார்டுகளில் சேர்க்க இந்த அச்சம் தேவையில்லை. அவர்களும் குத்தகைதாரர்களாக இருப்பார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர்வர்களே, எங்களுடைய தலைவர் கேட்டது, குத்தகைதாரரைப் பொறுத்த வரையில், குத்தகைதாரர்கள் இன்று குத்தகை எடுத்துக்கொண்டு குத்தகையில் 5 ஏக்கர், 2 ஏக்கர் என்று உள் குத்தகைதாரர்களுக்கு விட்டு அதிலே குத்தகைதாரர் பினாமி பேர் வைத்துக்கொண்டு பணம் வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்பது ஒன்று. குத்தகைதாரர்கள் 5, 10, 15 ஏக்கர் என்று இருந்தால், தங்கள் பெயரில் குத்தகைதாரர் என்று பதிவு செய்து நேரடியாக நிலத்தில் உழாமல் ஆட்களை வைத்துக்கொண்டு குத்தகை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதிலே மொத்தம் பார்த்தால் 40, 50 சதவீதம் பேராவது குத்தகைதாரர்களாக மற்றவர்கள் உழைப்பினாலே தாங்கள் சம்பாதித்துக்கொண்டு— சொத்தும் இல்லாமல் உழைப்பையும் செலுத்தாமல் தாங்கள் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். நேற்று, வந்த சட்டத்திலேயே சொன்னேன். குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு என்று

7th April 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

சொல்வது அதிலே உழைக்கிறவர்களுக்கல்ல பாதுகாப்பு, நிலத்தை வைத்துக்கொண்டு பிறருடைய உழைப்பிலே சம்பாதித்துக்கொண்டிருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பாதுகாப்பு என்று சொன்னேன். அதைத் தான் எங்கள் கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள். அதை மாற்ற அரசு சட்டம் ஏதாவது கொண்டுவரப்போகிறதா என்று அறிய விரும்புகிறார்கள். அம்மாதிரிச் சட்டம் கொண்டு வருவது மிக முக்கியமான காரியம் என்று சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்ட நிறுவனங்களில் இருக்கிறவர்கள் பல இடங்களில்— நேற்றுக் கூடச் சொன்னேன்—சட்ட மன்றத்தில் இருக்கிறவர்களில் கூட பல பேர் இப்படிக் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறுத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால்தான் உண்மையான சோஷலிசமாக இருக்க முடியும். அவர்கள் விளக்கம் அளிப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுதும் உண்மை. தனிப்பட்டவர்கள் நிலத்தில் அப்படி நடைபெறுவதில்லை. ஆண்டவன் பேரால் வைக்கப்பட்ட சொத்துக்களுக்கு டிரஸ்டிகளாக இருக்கிற பெரிய மனிதர்கள் இப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரே காரணம் அவர்கள் தங்களுக்குள்ள ஆதிக்கத்திறைடைய வலுவில் இருக்கிற ஏழை விவசாயிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள். நேற்று கூடச் சொன்னேன். வலிவலத்தில் ரெட்டியார்கள் என்ற பெயரில் 50 பேர்கள் இருக்கிறார்கள். அங்கு ரெட்டியார் குடும்பம் கிடையாது. குறும்பர்கள் என்ற குடும்பம் கிடையாது. அவர்கள் பேரிலேயெல்லாம் 200 ஏக்கர் எழுதப்பட்டிருக்கின்றன. 500 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் இப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது உள்ளபடியே அங்கேயிருக்கிற கோயில் நிலங்களில் இருக்கிறதே தவிர, தனிப்பட்டவர்கள் நிலத்தில் இல்லை. ஆரம்ப கட்டமாக நடவடிக்கையை வலிவலத்தில் எடுத்திருக்கிறோம். அதற்காகப் பயந்துகொண்டு சிலர் உழுகிறேன் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் நேராகச் சென்று உழுத நிலத்தைக் காட்டு என்று சொன்னால், அவர்களுக்கு அவர்களுடைய நிலம் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. கோயிலுக்குக் குத்தகை எழுதி வைத்திருக்கிறார்கள்—ஆனால் குத்தகை சரியாகக் கொடுப்பதில்லை. இதிலே இன்னும் கொடுமை என்ன வென்றால், ஒரு மிராசுதார் ஒரு கோயிலுக்கு 4,500 கலம் நெல்

[திரு. பி. நாராயணசாமி] 7th April 1972

பாக்கி வைத்திருக்கிறார். யார் பேரில் பாக்கியிருக்கிறது என்று பார்த்தால், ஊரிலேயே இல்லாதவர்கள் பேரால் பாக்கியிருக்கிறது. எப்படி வசூல் பண்ணுவது என்றே தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்படி, பல கோயில்களின் பேரால், பெரியவர்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த விவகாரம் கோர்ட்டில் இருப்பதால், இன்னும் விளக்கமாகக் கூற முடியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. நேற்றுக் கொண்டுவந்திருக்கிற சட்டத்தால் ஒரு கொடுமை ஏற்பட்டிருக்கிறது என்று கூறி, ஒரு உதாரணத்தையும் கூறினார்கள். பல இடங்களில் கோயில் சொத்துக்களை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தச் சட்டம் சகாயமாக, சௌகரியமாக இருக்கிறது. ஏழை எளியவர்களுக்காக சௌகரியம் செய்ய வேண்டுமென்று சொல்லி, பணக்காரர்களுக்கு நன்மையாகப் போய்விடுகிறது என்று எடுத்துச் சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி : தலைவரவர்களே, ஒன்றை வைத்துக்கொண்டு அதே போல எல்லாம் என்று சொல்லி விட முடியாது. இதே மாதிரி 10 சதவீதம் தான் இருக்க முடியும். இதை வைத்துக்கொண்டு சட்டம் அவர்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் என்று உங்கள் நோக்கத்தின்படி, மிக முற்போக்கான கருத்துக்களைச் சொல்கிறமாதிரி கூறி, இந்தச் சட்டத்தின் நோக்கத்தை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன உதாரணத்தின்படி, அந்த மாதிரி 10 சதவீதம் தான் இருப்பார்கள். பாக்கி 80 சதவீதம் ஏழைகள். அவர்களுக்காகத் தான் இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

தவத்திரு. தெய்வசிகாமணி அருணைசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : தலைவரவர்களே, உழுகிறவர்கள் மேல் மட்டத்தில் 5 ஸ்டான்டர்ட் ஏக்கரா வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு விதிகள் செய்திருக்கிறது. 5 ஏக்கருக்கு உட்பட்டு குத்தகைதாரர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அப்படி ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறவர்களுக்கு ஐந்து

7th April 1972] [திரு. தெய்வசிகாமணி அருணைசல தேசிகர்]

ஏக்கர் வரை உழ வேண்டுமென்று உயர் மட்ட எல்லையை ஐந்து ஏக்கர் என்று உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மிஸ்டர் சேர்மன் : அமைச்சர் பதில் சொன்ன பிறகு, ஒன்றிரண்டு சந்தேகங்கள் வேண்டுமானால் கேட்கலாம். தொடர்ந்து கேள்விகள் கேட்கக் கூடாது.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972), as passed by the Assembly, be passed."

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஐந்து ஏக்கர் சம்பந்தப்பட்ட விஷயம். பொதுவாக, நிலமில்லாமல் கூலி வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிலம் கொடுக்க வேண்டுமென்று நல்ல எண்ணத்தில்தான் 5 ஏக்கருக்கு மேல் எந்த ஒரு குத்தகைதாரரும் வைத்திருக்கக்கூடாதென 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இது நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே, இதை உயர்த்த வேண்டும். ஐந்து ஏக்கர் சீலிங்கை எடுத்துவிட வேண்டுமென்று சொல்வது வேறு நிலமில்லாத ஏழைகளுக்கு மேலும் நிலம் கிடைக்கும்படியான நிலை போய்விடும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 5 ஏக்கர் சீலிங் கொண்டுவர வேண்டும் என்று கூறுகிறேன்.

அதுமாத்திரமல்ல. ஒரு விவசாயி சொந்தமாக இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அதற்கு மேல் 3 ஏக்கர்தான் அவர் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள முடியும். அதற்கு மேல், அதிகமாக வைத்துக்

[திரு. கே. ராஜாராம்] [7th April 1972

கொள்ள இடமே இல்லை. ஒரு ஏக்கர் கூட இல்லாமல் ஆயிரக் கணக்கான விவசாயிகள்—விவசாயக் கூலிகள் அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் ஐந்து ஏக்கர் போதும்; ஐந்து ஏக்கர் முக்கியமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அன்றைக்கு இருந்த அரசாங்கம் அதை நிர்ணயித்தது. அதைத் தொடர்ந்து நடந்து வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த சிலிங்கை உயர்த்திவிடக் கூடாது என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, நான் கூட்டுத்தகைதாரர்கள் பதிவுச் சட்டம் சம்பந்தமாக ஒரு விளக்கம்—உண்டா இல்லையா என்று அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள் என்ற வகையில் பெற விரும்புகிறேன். யாரொருவர் குத்தகைதாரராக இருந்து இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யத் தவறி விட்டால் அவருக்கு குத்தகைதாரர் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா, இல்லையா? பதிவு செய்யாமல் விட்டுவிடுவார்களேயானால், இனியும் இந்தச் சட்டத்தின் மூலம் குத்தகைதாரராகப் புதுப்பிக்கப் படுவாரா இல்லையா என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஐந்து ஏக்கருக்குக் கீழ் பயிர் செய்கிறவர்களுக்கு மேற்கொண்டு ஐந்து ஏக்கர் வரை கொடுக்க வசதி செய்து கொடுக்க முடியுமா என்று அடிகளார் அவர்கள் கேட்டார்கள். இது பயிர் செய்கிறவர்களுடைய திறமையையும் உழைப்பையும், பொறுத்திருக்கிறது. அது அவர்கள் செய்ய வேண்டிய ஒன்று. அரசாங்கம் அதைச் செய்ய முடியாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஐந்து ஏக்கர் வரை என்று இப்போது வைத்திருப்பதை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை, இப்போது இருக்கிற சட்டத்தில் நியாயம் இருக்கிறது என்று சொன்னார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிப்பதைப் போல ஏன் அதிகமாக ஆக்கக் கூடாது என்று கேட்டார்கள். நான் ஒரு சின்ன விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஐந்து ஏக்கர் வரை ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சம் என்று வைத்திருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில், இந்த அளவுக்கு மேல் பதிவு செய்து கொள்ள முடியாது. ஒரு விவசாயி ஐந்து ஏக்கருக்கு மேல் சொந்த விவசாயம் செய்யவும்

7th April 1972] [திரு. ப. உ. சண்முகம்]

முடியாது என்பதை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். டிராக்டர் என்று வைத்துக்கொண்டால் கூட நிலத்தை உழலாமே தவிர, நாற்று நடுதல் போன்றவற்றை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு நாற்றுகத் தான் நட்டாக வேண்டுமே தவிர, ஒரு ஏக்கர் நிலத்தில் நாற்றுகளை அப்படியே புதைத்து விட முடியாது. திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுவதைப் போல, ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிறவர்கள்—அவர்கள் நாற்று நடுவதற்குக் கூலிகளை வைத்துக்கொண்டாலும் கூட, எவ்வளவு நட முடியும்? கணக்குச் சொல்லுங்கள் என்று சொன்னேன். எனவே, ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது. உண்மை நிலை அது தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்தவரையில், இது கூட்டு முயற்சியில் நடைபெறக்கூடிய ஒன்று. கூலிக்கு வேலை செய்தாலும், எப்படி வேலை செய்தாலும், அப்படி நடைபெறக்கூடியது நான் சொன்ன மாதிரித் தான் இருக்கக்கூடும். அதனால் தான் 5 ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். நிலச் சுவான்தாராக இருந்தால், 15 ஏக்கர் வரை வைத்திருக்கலாம்.

அடுத்து, எங்கெங்கோ இருக்கிறவர்கள், சென்னையில் இருக்கிறவர்கள், குத்தகைதாரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போய் நிலத்தை உழுவதுமில்லை. ஆள் வைத்து வேலை செய்கிறார்கள் என்றெல்லாம் தான் சொல்கிறார்கள். ஒரு வேளை இருக்கக்கூடும். இல்லை என்று சொல்லவில்லை. அவற்றை ப்ராபராக ஆராயலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தகவல் தெரிந்து சொன்னால், விசாரிக்க முடியும். அப்படி இருப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகத் தான் இருக்கும். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாயும் என்று கூறுவதைப் போல, ஏழை எளிய மக்களுக்காக இயற்றப்படுகிற சட்டம், சில சமயங்களில் வசதி படைத்தவர்களாக இருப்பவர்களுக்கும் நன்மையாக அமைந்து விடுகிறது. அதற்காக லட்சக்கணக்கானவர்களுக்கு நன்மை செய்கின்ற திட்டத்தை விட்டுவிடக் கூடாது என்று நேற்றும் சொன்னேன், இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இப்போது கூறிய விளக்கத்தை ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[7th April 1972

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 7 of 1972), as passed by the Assembly, be passed. "

The motion was put and carried and the Bill was passed.

(5) THE TAMIL NADU LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) SECOND AMENDMENT BILL, 1972 (L.A. BILL NO. 15 OF 1972.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I beg to move—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, @ 1972 (L.A. Bill No. 15 of 1972), as passed by the Assembly, be taken into consideration.

Under sub-section (5) of section 5 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), the maximum extent of land which a family consisting of more than five members can hold is 60 standard acres. It has been decided to reduce this maximum extent from 60 standard acres to 40 standard acres, as announced by the Hon. Chief Minister in his Budget Speech on the 1st March 1972.

The Committee of Legislators of both Houses constituted to review the exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), has recommended the deletion of the exemption in respect of hill areas contained in section 73 (v) of the Act. The Government have accepted this recommendation.

Sub-clause (2) of clause (40) of section 3 of Tamil Nadu Act 58 of 1961, prescribes the formula for conversion of ordinary acres into standard acres in respect of lands in the Kanyakumari district.

The wet lands irrigated by rain-fed tanks in Kanyakumari district are not covered by this formula. It has, therefore, been

@ Printed as Appendix V on pages 855–858

7th April 1972] [Thiru P. U. Shanmugam]

decided to amend sub-clause (2) of clause (40) of section 3 of the Act so as to treat the wet lands irrigated by rain-fed tanks in the Kanyakumari district to be on a par with the dry lands irrigated by rain-fed tanks for the purpose of calculation of standard acre.

Under section 60 of the said Act, the cultivating tenant's ceiling area means 5 standard acres. According to sub-rule (2-A) of rule 51 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1961, where the Authorised Officer finds that the land held by a cultivating tenant in excess of the cultivating tenant's ceiling area is more than ½ an acre in the case of wet lands and one acre in the case of dry lands, the Authorised Officer may for reasons to be recorded in writing leave such excess land in the possession of the cultivating tenant. On the recommendation of the Committee on Subordinate Legislation, it has been decided to incorporate the above provision in the Act by amending section 62 suitably.

According to clause (iv) of section 73 of the said Act, nothing contained in the Act shall apply to any land held by any industrial or commercial undertaking other than a co-operative society, which in the opinion of the Government *bona fide* carries on industrial or commercial operation and which is approved by the Government. Under this section, if the approval is given by the Government, then the industrial or commercial undertaking can hold any extent of land. There is no power under this section to restrict the extent of land in respect of which the undertaking should enjoy the exemption. It has, therefore, now been decided to provide in new section 37-A that an industrial or commercial undertaking should apply to the Government for permission to hold or acquire land in excess of the ceiling area. The exemption will be applicable only in respect of those lands specified in the order granting permission, provided that the conditions specified in the order granting exemption are complied with.

Section 111 of the said Act empowers the Government to issue orders to remove any difficulty that may arise in giving effect to any of the provisions of the Act. The Supreme Court in *Messrs. Balan Trading Company* vs. *Mills Mazdoor Sabha* (1967

[Thiru P. U. Shanmugam] [7th April 1972

I Supreme Court Journal 189) has observed that the power to remove difficulty by altering the provisions of the Act would in substance amount to exercise of legislative authority and that such power cannot be delegated to an executive authority. This opportunity has, therefore, been availed of to omit section 111.

The Bill seeks to achieve the above objects.

I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, சில விளக்கங்களை அமைச்சரவர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். Industrial and Commercial Institutions. சம்பந்தமாக, உதாரணத்திற்கு இந்த ஷுகர் ஃபாக்டரிக்கு என்று சொல்லி, கரும்பாலைகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் ஏற்கெனவே சொந்தமாக்கி வைத்திருந்தார்கள். அதற்கு ஒரு வரம்பு கட்டி அதற்கு மேல் வேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று புதுத் திருத்தம் கூறுகிறது. ஏற்கெனவே இரண்டாயிரம் ஏக்கர் நிலம் ஒரு கரும்பாலைக்கு இருக்கிறதென்றால், அப்படி அவர்கள் எழுதி வைத்திருப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கரும்பு பயிரிடுவதற்கு நிலம் என்று இப்போது கிடையாது. அதற்கு உச்ச வரம்பு இப்போது கொண்டு வந்து விட்டார்கள். இப்போது "எக்ஸம்ப்ஷன்" கிடையாது. இப்போது கொண்டுவந்திருப்பது பயிரிடுவதற்கல்ல. நிலத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு இத்தனை ஏக்கர் என்று வைத்துக்கொள்ளலாம் என்று போடப்பட்டிருக்கிறது. இப்போதிருக்கிற சட்டப்படி, 73-வது பிரிவின்படி, எத்தனை ஏக்கர் வைத்திருந்தாலும் கேட்க முடியாது. கொண்டுவந்திருக்கிற திருத்தத்தின்படி, அந்தத் தொழிற்சாலைக்கு எத்தனை ஏக்கர் வேண்டுமென்று கணக்கிட்டுப் பார்த்து சரிதானா என்று பார்த்து, கேட்பது சரியில்லையென்றால், மீதியிருக்கிற

7th April 1972] [திரு. கே. ராஜாராம்]

நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு அதிகாரத்தைப் பெறுகிறோம். பயிரிடுவதற்கு நிலம் அல்ல. எந்தப் பயிரிடுவதற்கும் தொழிற்சாலை நிலம் கொடுக்கப்பட மாட்டாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கரும்பைப் பொறுத்த மட்டில் 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் அவர்கள் ஆராய்ச்சிக்காக வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் போட்டதை இப்போது எடுத்து விட்டோம். இப்போது கொண்டுவந்திருக்கிற திருத்தத்தின் படி, தொழிற்சாலைக்கு நிலத்தை விட்டு வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு சில "கண்டிஷன்" கள் போடப்படும். அந்த "கண்டிஷன்" களை மீறினால், அதைத் திரும்பி எடுத்துக் கொள்ள சட்டம் போட்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தொழிற்சாலை கட்டுவதற்கு மட்டும் இது என்று சொல்லப்படுகிறது. கரும்பு உற்பத்தி பண்ணுவதற்கு என்று 2,000 ஏக்கர் நிலம் வைத்திருந்தார்களே, அதற்கு இடம் கொடுத்து விடுவோமோ என்ற அச்சத்தினால் இதை எழுப்பினேன். அதை எடுத்துவிட்டாலும் வேறு வழியில் இடம் கொடுத்து விடுகிறார்களோ என்று எண்ணினேன். தொழிற்சாலை பிரெமிசெஸ்லுக்காக என்றால், எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1972 (Land Acquisition Bill No. 15 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Long Title, and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972), as passed by the Assembly, be pleased."

[7th April 1972

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Land Reforms (Fixation of ceiling on Land) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 15 of 1972), as passed by the Assembly, be taken passed. "

The motion was put and carried and the Bill was passed.

(6) THE TAMIL NADU (TRANSFERRED TERRITORY) EXTENSION OF LAWS BILL, 1972 (L.A. BILL NO. 16 OF 1972).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I beg to move—

" That the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill @, 1972 (L.A. Bill No. 16 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations. "

In moving the Bill, I wish to say that the Bill seeks to extend the Tamil Nadu Stamp Penalties Regulation, 1831 (Tamil Nadu Regulation V of 1831) and the Tamil Nadu Agricutltural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955) to the transferred territory, namely, the Kanyakumari district and the Shencottah taluk of Tirunelveli district. Certain enactments in force in the State of Tamil Nadu have already been extended to the transferred territory in the State by two separate enactments in 1967 and 1960. Subsequently, by the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Act, 1965 (Tamil Nadu Act 22 of 1965), certain other enactments in force in the State of Tamil Nadu were also extended to the transferred territory. It is now proposed to extend the following enactments in force in the State of Tamil Nadu to the transferred territory and repeal the corresponding laws in force in that territory—

1. The Tamil Nadu Stamp Penalties Regulation, 1831 (Tamil Nadu Regulation V of 1831);

2. The Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1956).

@ Printed as Appendix VI on page 859-862

7th April 1972] [Thiru P. U. Shanmugam]

The Travancore-Cochin Agricultural Income-tax Act, 1950 is now in force in the transferred territory. It has been decided to extend the Tamil Nadu Act V of 1955 to the transferred territory and to repeal the Travancore-Cochin Act in order to obtain uniformity in the levy and collection of agricultural incometax throughout the State. Under the extended Act, the agricultural income shall be subject to assessment of agricultural income-tax under the Tamil Nadu Act in the transferred territory from the financial year commencing on the 1st April 1972.

The Bill seeks to give effect to the above decision. Sir, I request the House to accept the motion.

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu (Transferred Territory) Extension of Laws Bill, 1972 (L.A. Bill No. 16 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations. "

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

(7) THE TAMIL NADU NON-TRADING COMPANIES BILL, 1972 (L.A. BILL NO. 10 OF 1972.)

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Tamil Nadu Non-trading Companies Bill@, 1972 (L.A. Bill No. 10 of 1972), as passed by the Assembly, be taken into consideration. "

Consequent on the enactment of the Companies Act, 1956 (Central Act 1 of 1956) and the repeal of the Indian Companies Act, 1913, (Central Act VII of 1913) with effect from 1st April 1956, section 289-A of the Indian Companies Act, 1913 which enables the State Government to exercise the powers of the Central Government under that Act with respect to non-trading

@ Printed as Appendix VII on pages 862-864

[Thiru S. Madhavan] [7th April 1972

corporations with objects confined to one State must be said to continue in force. The Government of India, therefore, suggested that separate legislation might be undertaken by the State Governments for the incorporation, regulation and winding up of the said corporations, as the making of laws in respect of these corporations was within the exclusive competence of the State Legislature.

According to entry 32 of the State List (List II) in the Seventh Schedule to the Constitution of India, the incorporation and regulation of non-trading corporations with object confined to a single State is the responsibility of the State Government. The Indian Companies Act, 1913 (Central Act VII of 1913) in so far as it relates to matters specified in entry 32 of the State List remains unaffected until it is repealed or amended by a competent legislature, namely, by the State Legislature.

It is, therefore, considered necessary to enact a uniform law relating to the incorporation, regulation and winding up of non-trading corporations with objects confined to the State of Tamil Nadu which would apply throughout the State. Instead of enacting a comprehensive legislation for the purpose, it is proposed to make provisions of the Companies Act, 1956, applicable to non-trading corporations with objects confined to the State of Tamil Nadu by means of a referential piece of legislation.

The Bill seeks to achieve the above object. Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

7th April 1972]

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN: Motion Moved—

"That the Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972), as passed by the Assembly be passed."

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கம் தேவை. வர்த்தகம் அல்லாத கம்பெனிகள் எவை என்பதை நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. உதாரணத்திற்கு அதை இந்தச் சட்டத்திலைடைய அவியத்தைக் கருதி விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தச் சட்டத்தின் விளக்கத்தைப் படிக்கும்போது விவரமாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது நாம் கம்பெனீஸ் ஆக்டை அமுல் நடத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்களுடைய அதிகாரிகளின் மூலம் இதைச் செய்து வருகிறோம். மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்களே சட்டமியற்றி அவர்களே இதை நடத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காகச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நாம் சட்டம் கொண்டுவந்தாலும், பெரும்பாலும் கம்பெனீஸ் ஆக்டையே "இன்கார்ப்பரேட்" செய்து நான்-டிரேடிங் கம்பெனிஸுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். வியாபார சம்பந்தமில்லாத, கம்பெனி ஆக்டின் கீழ் வரக்கூடிய அசோசியேஷன், நிறுவனங்களை இது கட்டுப்படுத்தும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கம்பெனீஸ் ஆக்டின்கீழே வியாபாரம் செய்வதற்கு, டிரேடிங் கார்ப்பரேஷன் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே அதிகாரம் இருக்கிறது. நான்-டிரேடிங் கார்ப்பரேஷனுக்கு நமக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இங்கேயே இதற்குச் சட்டம் போட வேண்டுமென்று கேட்டிருக்

[திரு. செ. மாதவன்] [7th April 1972

கிறார்கள். நாம் எப்போதும் போடும்போது, அதே கம்பெனீஸ் ஆக்டையே பயன்படுத்துகிறோம். ஒரு பெயரில் டிப்பிகல்டியைப் போக்குவதற்கே தான், வேறு யாதும் எதுவும் கிடையாது.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வதிலிருந்து இன்னொரு உதாரணம் குறிப்பிட முடியாத நிலையில் முடிவு செய்து சொல்லி இப்படி இருக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். கம்பெனீஸ் ஆக்டின் கீழ் வராமல், சொசைட்டி ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் கீழே சிலது வர முடியும். உதாரணத்திற்கு காஸ்மாபாலிடன் கிளப் ஓரளவிற்கு வியாபாரம் செய்கின்றது. காஃபி, பலகாரம் விற்று அதிலே லாபங்கள் பெறுகிறது. இப்படி வேறு சங்கங்கள், கழகங்கள், டிரஸ்ட் என்ற பெயரில் வியாபாரம் செய்கின்றனர். அவற்றிற்கு வருமான வரி விலக்கு எல்லாம் கூட சட்ட ரீதியாக மத்திய ஆட்சி அனுமதித்திருக்கிறது. அவை இதற்குள்ளேயே அடங்குமா, அடங்காதா என்பதற்கு விளக்கம் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் இப்பொழுதே எதெது நான்-டிரேடிங் கார்ப்பரேஷன் என்று சட்டத்தில் சொல்லி விட வேண்டுமென்ற பொருளில் பேசியிருக்கிறார்கள். சொசைடி ஆக்டின் கீழ் வருமா என்று கேட்டார்கள். நிச்சயமாக வராது. சொசைடி ஆக்டில் ரெஜிஸ்டர் பண்ணியிருந்தால் கம்பெனீஸ் ஆக்டில் வருவதற்கு வாய்ப்பில்லை. வியாபார நோக்கத்தோடு நடத்தாது உள்ள கம்பெனிகள் எவை என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் தான், சேகரித்துத் தர முடியும். காஸ்மாபாலிடன் கிளப் வியாபாரம் செய்கிறார்களே, இது இதிலே வருமா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. இந்த மசோதாவைப் பொறுத்த அளவிற்கு கம்பெனீஸ் ஆக்டின் கீழ் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நிறுவனங்கள் நான்டிரேடிங் கார்ப்பரேஷனாக இருந்தால், நாம் அவர்களுக்கு அனுமதி கொடுத்து, அறிக்கை மாதிரி அவர்கள் சமர்ப்பித்து வருகிறார்கள். அதற்குப் பதிலாக இங்கேயே சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்ட காரணத்தினால், இப்போது போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எந்தெந்த கம்பெனி வரும் என்ற விவரங்கள் இல்லை.

7th April 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, கம்பெனீஸ் ஆக்ட் என்பது ரொம்பவும் முக்கியமான விஷயம். ஏனென்றால் சட்டங்களை எல்லாம் எடுத்துப்பார்க்கிற போது, பெரிய நிறுவனங்களெல்லாம் பிரைவேட் லிமிடெட், பப்ளிக் லிமிடெட் என்று வைத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய்களை வைத்து நடத்துகிறார்கள். 560, 600 செக்ஷன்களுக்கு மேல் கம்பெனீஸ் ஆக்டில் இருக்கிறது. அதில் சிறிய தவறுதல்கள், நாமறியாமல் ஏதேனும் போன்றவற்றில் தவறு ஏற்பட்டால் கூட, ஜெயிலுக்குப் போகவேண்டிய நிலைமை அல்லது 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை பீஸைன், இப்படி விதிகள் இருக்கின்றன. காஸ்மாபாலிடன் கிளப் போன்றவைகள் அல்லது எஸ்.பி.ஐ. போன்றவை டாக்ஸ் ஆக்டின் கீழ், சொசைடி ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் கீழ் இருக்கின்றன. என்ன விதமான சங்கங்கள் இதில் அடங்கும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். இது முக்கியமான காரியமாக இருப்பதால், சிரமத்தை உண்டாக்கக் கூடாது. ஆகவே தெளிவு படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

MR. CHAIRMAN: The hon. Member may put a separate question instead of asking for particulars.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான்-டிரேடிங் கார்ப்பரேஷனுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். பெரிய லிஸ்டு இருக்கிறது. மெட்ராஸ் பிஷப்பின் காலேஜை பப்ளிக் கம்பெனி என்று ரெஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். "Association for profit" என்ற முறையில் செயிண்ட்தியரா சபை, மதுரை காலேஜ் போர்டு இப்படி பல இருக்கின்றன. எல்லாவற்றையும் படிக்க முடியாது. என்னிடத்தில் 134 நிறுவனங்களின் பெயர்கள் இருக்கின்றன. நான் இந்த நிறுவனங்கள் அதிலே வந்து விடுமென்று சொல்வது பொருத்தமாக ஆகாது. நான்-டிரேடிங் கார்ப்பரேஷன் என்பதற்கு விளக்கம் சொல்லலாம். டிரேடிங் கார்ப்பரேஷனாக இருந்தால், மத்திய அரசாங்கத்திலுடைய நிர்வாகத்தின் கீழே வருகிறது. நான்-டிரேடிங் கார்ப்பரேஷனாக இருந்தால், மாநில சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தனியாகச் சட்டம் போடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இதற்கு முன்பு கம்பெனி நிறுவனமே நிர்வாகம் செய்யட்டும் என்று சொல்லி ஒரு

[திரு. செ. மாதவன்] [7th April 1972

ஆணையின் மூலமாக அவர்கள் அறிக்கையைச் சமர்ப்பித்து வந்தார்கள். நாமே தனியாகச் சட்டம் போட்டால் நல்லது என்று கருதி, இங்கே நான்-டிரேடிங் கார்ப்பரேஷனுக்கு தனியாகச் சட்டம் போட்டு, அப்படியே கம்பெனீஸ் ஆக்ட்டை "இன்கார்ப்பரேட்" பண்ணியிருக்கிறோம். எதெது வரலாமென்று உத்தேசத்திலே சொன்னேன். 104 நிறுவனங்கள் இருக்கின்றன. இவைகள் கட்டாயமாக வரும் என்று உறுதியிட்டுக் கூறுவது பொருத்தமாக இருக்காது. பொதுவாக டிரேடிங் கார்ப்பரேஷனு, நான்-டிரேடிங் கார்ப்பரேஷனு என்று நீதி மன்றத்தில் வாதிடுவதற்கு உரிமை இருக்கிறது. உதாரணத்திற்கு நான் ஒரு சில பெயர்களைப் படித்தேன். ஏராளமாக இருக்கிறது. சிவகாசியில் இந்து நாடார்ஸ் கார்ல்ஸ் ஹைஸ்கூல் கமிட்டி என்று இருக்கிறது. இது வரலாம்.

MR. CHAIRMAN : பரவில்லியூர்னார் எதை வந்தால் சரிதான்.

MR. CHAIRMAN : The question is—" That the Tamil Nadu Non-trading Companies Bill, 1972 (L.A. Bill No. 10 of 1972), as passed by the Assembly, be passed.

The motion was put and carried and the Bill was passed.

(8) THE TAMIL NADU PAWNBROKERS (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 8 OF 1972)

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

" That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill @, 1972 (L.A. Bill No. 8 of 1972), as passed by the Assembly, be taken into consideration. "

Under the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943) no person shall carry on business as a pawnbroker in any area without obtaining a licence under that Act. The licence obtained by a pawnbroker should be renewed every year. Sub-section (4) of section 4 of the said Act empowers the State Government to prescribe a fee not exceeding twenty-five rupees for the grant of a licence under the said Act. The fee payable for a licence at present is rupees twenty-five.

[Vice-Chairman in the Chair]

The expenditure for administering the said Act has increased consequent on the revision of scales of pay of the Goverment servants employed in administering the said Act. In Kerala a licence

@ Printed as Appendix VIII on pages 864-865

7th April 1972]

fee of rupees one hundred is being collected from pawnbrokers. It is, therefore, considered necessary to enhance the limit of licence fee or renewal of licence fee from Rs. 25 to Rs. 100.

The Bill seeks to achieve the above object, Sir. I request the House to accept the motion.

VICE-CHAIRMAN : Anybody wishing to speak (Thiru C. V. Rajagopal rose.)

VICE-CHAIRMAN : Motion moved :—

" That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972), as passed by the Assembly, be taken into consideration.

திரு. சி. வி. ராஜகோபால் : துணைத் தலைவர் அவர்களே, பான்புரோக்கர் சட்டத்தின் மீதே ஒரு சந்தேகம். பான்புரோக்கர் லைசன்சுக்கு, பணம் கட்டினால் உடனே லைசன்ஸ் கொடுக்கிறார்கள். பணம் கட்டுகிறபோது பான்புரோக்கர் லைசன்ஸ் பெறுகிறவர்கள் இன்னின விதிகள், இன்னின்ன கண்டிஷன் மீதேதான் அந்த வட்டி லேவாதேவி செய்ய வேண்டும் என்று விதிமுறைகளைத் தரவில்லை. விதிமுறை இல்லாமல், அவர்கள் ஏதோ நான் 6 சதவீதம், 8 சதவீதம் என்று கூறினாலும், லைசன்ஸ் வாங்குபவர்கள் வட்டி 24 சதவீதம் per annum , 30 சதவீதம் per annum என்று வாங்குகிறார்கள். இந்த மாதிரி நிலைமை நாம் அளிக்கின்ற இந்த பான்புரோக்கர் லைசன்சில் இல்லாமல் அவர்கள் எவ்வளவுதான் வட்டி வாங்க வேண்டுமென்ற நிலைமையை இதிலே புகுத்தினால், அவர்கள் வாங்குகிற வட்டித் தொகை கொஞ்சம் குறையும். எந்த சாமான் மீது வேண்டுமானாலும் வட்டிக்கு பணம் வாங்கலாம் என்ற நிலைமை இப்பொழுது இருக்கிறது. இதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள், வீட்டு ஜோடுதலை ஆனாலும், தவலையானாலும் தருகிறார்கள். மூக்குத்தி இருந்தாலும் தருகிறார்கள். புடவை எல்லாம் வைத்துக்கூட தருகிறார்கள். இப்படி புடவையை வைத்துக் கொண்டு, துணியை வைத்துக்கொண்டு தருவதை நிறுத்தவேண்டும். (குறுக்கீடு) ஜோடுதலை என்பது செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய வார்த்தை—ஆகவே நாட்டிலே நடமாடுகின்ற வார்த்தையைத்தான் இந்த அவையிலே பயன் படுத்துகிறேனே தவிர, இல்லாத வார்த்தையை பயன்படுத்தியிருந்தால் அது பார்லிமென்டரியா, அன்பார்லிமென்

[திரு. ஜி. பராங்குசம்] [7th April 1972

கொள்ளை அடிப்பதால், ஏழைகளை உறிஞ்சுகிறார்கள். இந்தக் கூட்டம் நம்முடைய தமிழ் நாட்டில் அதிகமாக இருக்கிறது. இந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, அவர்கள் கையில் சிக்கிக் கொண்டு தவிப்பதிலிருந்து இந்த ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக, இந்தச் சட்டத்தில் வழி வகைகள் அமைக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ரூ. 100 அல்ல இருக்கலாம் என்பது, பீஸ் தான், டாக்ஸ் அல்ல. அதற்கு மேலே போட்டால், டாக்ஸாக மாறிவிடும் என்று கண்டித்துச் சொல்வதே போதும். அதை நேற்றே சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறோம். சென்ஷரிட்டி வாங்குவதற்கு ஒரு சட்டம் தயாராயுள்ளது என்று அறிவித்திருக்கின்றோம். அதைத்தான் எதிர்க் கட்சித் தலைவரும் இங்கே குறிப்பிட்டார்கள். ஏற்கனவே இதை அரசு கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டுவிட்டது. ஈட்டிக்காரர் களைப்பற்றிச் சொன்னார்கள். இதற்கும் நாம் வழி வகுத்திருக்கிறோம். ஈட்டிக்காரர்கள் அதிகமாக வட்டி வாங்குகின்றார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் யாருக்குக் கடன் கொடுத்தார்களோ, அவர்கள் வேலை செய்கின்ற இடங்களுக்குச் சென்று கடன் வசூலிக்கக்கூடாதென்று நாம் வற்புறுத்தி வருகின்றோம். அதை மீறுகின்றவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் போலீசுக்கு ஆணையிட்டிருக்கிறோம். அப்படி மீறுகிறவர்களைக் கண்காணிக்க ரகசிய போலீசார் அனுப்பப்படுவார்கள். அப்படித் தொல்லை கொடுப்பவர்களைத் தடுக்கவேண்டுமென்று போலீசுக்கு நாம் உத்தரவு போட்டிருக்கிறோம்.

நம்முடைய கொறடாவுக்கு இதில் அனுபவம் இருக்காது என்றே நினைக்கிறேன்.

திரு. ஜி. பராங்குசம் : நானும் கடன் வாங்கியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவருக்கு இதில் சொந்த அனுபவம் இருக்கிறது என்று சொல்கிறார். இதில் நம்முடைய அரசு முயற்சிகள் எடுத்ததை விளக்கியிருக்கிறோம். கடன் வாங்குபவர்களோ இப்படி எழுதிக்கொடுத்துவிடுகிறார்கள். அதை நாம் தடுக்க முடியாது. அவர்கள் தங்கள் அவசரத்துக்காக எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அது நீதிமன்றத்துக்குச் செல்கிறபோது, இப்போ

7th April 1972] [திரு. செ. மாதவன்]

திருக்கிற "நெகோஷியபிள் இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் ஆக்ட்" படி, இவர்கள் எழுதிக்கொடுத்திருப்பதை மீறி நான் வாங்கவில்லை என்று அவர்கள் நிரூபிப்பார்கள். எனவே இந்தச் சங்கடத்தைப் போக்க முடியாத நிலை நம்முடைய அரசுக்கு இருக்கிறது. புரோ-நோட்டு எழுதி வாங்கும்போது, ரூ. 100 கொடுத்துவிட்டு 200 ரூபாய்க்கு எழுதியிருக்கிறார் என்றால், அடிப்படையில் இப்போதிருக்கிற சட்டப்படி, இந்த ரூ. 200 நான் வாங்கவில்லை என்று கையெழுத்துப்போட்டு எழுதிக்கொடுக்க வேண்டும். அதே மாதிரி பணம் கொடுத்தவரிடத்தில் நான் ரூ. 200 தான் கொடுத்தேன் என்று வாங்க வேண்டும். கிராமங்களில் எல்லாம் கடன் கொடுத்தவர்கள் வட்டியை முன்கூட்டியே எடுத்துக்கொள்கிறார்கள். அதிக வட்டி வாங்குகிறார்கள் என்ற குறைகளை நாம் பரிசீலிப்பதற்கான அதிகாரத்தைப் பெற நம்முடைய அரசு முயற்சி எடுத்து வருகிறது. நம்முடைய கொறடா அவர்கள் இதற்கெல்லாம் நாம் பரிகாரம் காணவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது "சோஷியோ எக்கனமிக் பேசிஸ்ட்" என்ற முறையில் இப்பிரச்னைகளுக்கான பரிகாரம் காண வேண்டுமென்றால், நாம் அதிகமான அளவுக்கு, அவர்களுடைய தேவைக் கேற்றவாறு, நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும். கூட்டுறவுத் துறையில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக உதவி செய்வதுதான் இதற்கு உண்மையான பரிகாரம் காண்பதாகும் என்று கூற விரும்புகிறேன். நம்முடைய அரசு கூட்டுறவுத் துறையில் இதற்கான பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுப்பதற்கு இதைப்பற்றி நாட்டு மக்களிடம் பிரசாரம் செய்து, ஓரளவுக்குக் கடன் பெறுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அதில் "ரிஸ்க்" அதிகமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. மத்தியில் "ரிஸ்க்" இருந்தாலும், ஏழை மக்களுக்கு உதவ, கடன் அந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்று நம்முடைய அரசு வாதாடி வருகிறது. மாநிலப் பகுதிகளில் உள்ள வங்கிகள் குறித்து, மத்திய ஆலோசனைக் குழுவில் வற்புறுத்துவது என்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி, நிதி வசதி செய்து கொடுத்தால்தான் இந்த அநியாய வட்டி வாங்குபவர்களிடமிருந்து இந்த ஏழை மக்களைக் காப்பாற்ற

[திரு. செ. மாதவன்] [7th April 1972

இயலும், அவர்களுடைய அல்லலைத் தீர்ப்பதற்குப் பயன்படும், இப்படிப்பட்ட கொடுமையான முறையைப் பின்பற்றுபவர்களை எல்லாம் தடுக்க முடியும். அது தான் உண்மையான பரிகாரம், அதை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதை நம்முடைய கொறடா. அவர்களுக்கு உறுதி கூறிக்கொள்கிறேன்.

VICE-CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 8 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Long Title, and the Enacting Formula, were put and carried.

THE HON. THIRU O. P. RAMAN: Madam, I move—

"That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 8 of 1972), as passed by the Assembly, be passed."

VICE-CHAIRMAN: The question is—

"That the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 8 of 1972), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

[Mr. Chairman in the Chair]

(9) THE TAMIL NADU MOTOR VEHICLES TAXATION (AMENDMENT) BILL, 1972 (L.A. Bill No. 20 of 1972).

THE HON. THIRU S. RAMACHANDAN: Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill @, 1972 (L.A. Bill No. 20 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

@ Printed as Appendix IX on pages 865-866

7th April 1972] [Thiru S. Ramachandran]

While presenting the Budget for 1972-73, the Hon. Chief Minister announced the decision of the Government to levy a surcharge of ten per cent on the tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 and the proceeds of this measure will be credited to a fund called 'The Tamil Nadu Rural Road Development Fund'. This fund will be utilised solely for the development and maintenance of public roads in rural areas.

The representatives of the Tamil Nadu Lorry Owners' Federation represented to the Chief Minister that the surcharge of ten per cent imposed on lorries should be cancelled. The Chief Minister considered their request sympathetically and announced in the Assembly on the 30th March 1972, the decision of the Government to reduce the surcharge from ten per cent to five per cent in respect of lorries.

The levy of surcharge will be at the rate of five per cent of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931, on every goods vehicle and ten per cent of the tax on every other vehicles except motor cycles and scooters. This measure will take effect from 1st April 1972.

With these words, Sir, I commend the Bill for consideration and acceptance by the House.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972), as passed by the Assembly, be taken into consideration".

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கும் இந்த மசோதாவில் மோட்டார் கார்களுக்கு, பஸ்களுக்கெல்லாம் ஏற்கெனவே செலுத்தப்பட்டு வரும் வரிக்குமேல் 10 சதவீதம் அதிகமாக வரி போடப்பட்டிருப்பதாகவும் லாரிகளுக்கு மட்டும் 5 சதவீதம் போடப்படிருப்பதாகவும், இந்த அதிகப்படுத்தப்பட்ட வரியிலிருந்து மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் இவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பெரும் பணக்காரர்களும், ஜமீந்தார்கள் போன்றவர்களும் தான் மோட்டார் கார்களை வைத்துக்கொள்ள இயலும் என்று இருந்தது. அது ஒரு சொகுசு என்ற அளவிலே

[திரு. கே. ராஜாராம்] [7th April 1972

இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது தங்களுடைய தொழில் காரணமாக ஒரு கார் இருந்தாலொழிய தொழில் செய்ய முடியாது என்ற அளவுக்கு வந்து, இருக்கிற வீட்டை விற்றுவது, அல்லது இருக்கிற நிலத்தை விற்றுவது கூட பல பேர்கள் கார் வாங்க வேண்டிய அளவுக்கு அது ஒரு அவசியப் பொருளாக ஆகிவிட்டது. அதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலையிலே பலவிதமான வரிகள் நாளுக்குநாள் போடப்பட்டு வருகின்றன. இனிமேல் அதிக மான வரி போடாமல் இத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சைக்கிள் வரியையே இன்னும் ரத்து செய்யாத காலத்திலே காருக்கு அதிக வரி போடுகிறோம் என்று கவலைப்படுகிற நாட்களிலே நாம் நிச்சயமாக இல்லை என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இன்னும், சட்டப் பேரவையில், வெளிநாட்டிலிருந்து வாங்கப்படுகிற கார்களுக்கு அதிகமான வரி விதிக்க வேண்டுமென்று இதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள்கூட எடுத்து சொல்லியிருக்கிறார்கள். அப்படித்தான் ஆகட்டும், அவ்வளவு என்ன அதிகத் தொகை என்று பார்க்கின்றபோது அவர்கள் செலுத்துகின்ற குவார்ட்டர்லி டாக்சிலே ஒரு 10 சதவீதம் இந்த நாட்டிலே இருக்கிற கிராமப்புற மக்களுக்காக சாலை வசதிகளுக் காகப் பயன்படுத்தப்படுகிறது என்ற அடிப்படையிலே பார்க்கின்ற போது, இதை வசதியுள்ளவர்கள் தாங்கிக்கொள்வார்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன். கார் என்பது ஆடம்பரப் பொருள் அல்ல ; அது ஒரு அடிப்படையான தேவையாக மாறி வருகிறது என்ற கருத்தினை நாம் மட்டுமல்ல, இந்திய அரசும் ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் கார் ஓனர்களுக்கு அவர்கள் தான் பரிகாரம் காண முடியுமே தவிர நாம் போடுகிற இந்த பத்து சத வீதம் எந்தவிதத்திலும் நிச்சயமாக பரிகாரமாகாது. ஆகையினால் கிராம மக்களுடைய நலனை உத்தேசித்து, அவர்களுக்கு நாம் அளிக்க வேண்டிய வசதிகளை உத்தேசித்து, கிராம இராஜ்யத்தை உருவாக்கு வதற்காக இதை அவர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்து இதைச் சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

7th April 1972]

*திரு. கே. ராஜாராம் : சைக்கிள் வரியை ரத்து செய்த மதுரை நகரிலிருந்து வருபவன் நான். மதுரையிலே முனிசிபாலிட்டியாக இருந்தபோது சைக்கிள் வரியை ரத்து செய்துவிட்டோம். சென்னை யில் கூட கிடையாது. சிறு முனிசிபாலிடிகளாக உள்ள சில இடங் களில் அந்த வருமானத்தைக் கைவிட முடியாத நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கார்களைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்ட தற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது கார் ஒரு அவசியப் பொருளாகிவிட்டது. அந்த மாதிரி இன்றைய நிலைமை மாறிவிட்டது. சாதாரணமாக கார் வைத்துக்கொள்ள வேண்டிய தன்மை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் நான் இப்பொழுது வரியை அதிகப்படுத்த வந்திருக்கும் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. இத்துடன் நிறுத்திக்கொண்டு இனி மேலாவது அதிகமாகப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால், நானூறு ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய ஒரு சிறு உத்தியோகஸ்தர் கூட ஒரு பத்தாயிரம் ரூபாய் போட்டு செக்கன்ட் ஹாண்ட் காராவது வாங்கினால்தான், தொழில் நடத்த முடிகிறது. சிறு வியாபாரிகள் கூட பல இடங்களில் சுற்று வதற்கு பத்தாயிரம் ரூபாய் போட்டு செக்கண்ட் ஹாண்டிலோ தேர்ட் ஹாண்டிலோ கார் வாங்கினால்தான், தொழில் நடத்த முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் அவர்கள் பால் கொஞ்சம் இரக்கம் காட்டி அவர்களிடமிருந்து அதிகமாகக் கறக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாம் போடுகின்ற வரியின் அளவையும், காரினுடைய விலை ஏறுகின்ற தன்மையையும் பார்க்கின்றபோது, இந்த வரி விதிப்பின் மூலமாக ஏதோ ஒரு பெரிய யானையை எறும்பு கடித்த மாதிரி இருக்குமே தவிர அந்த யானைக்கே ஆபத்து வந்துவிடும் என்று சொல்லக்கூடிய காரிய மாக இல்லை. கார் சொந்தக்காரர்களைப் பார்க்கிறபோது, அவர் களுக்கு பெட்ரோல் விலை இருக்கிறது ; ஸ்பேர் பார்ட்ஸ் விலை இருக்கிறது ; வாங்க வேண்டிய கேப்பிடல் காஸ்ட் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது நாம் போடுகிற இந்த சாதாரண மோட்டார் வாகன வரி எந்த விதத்திலே அவர்களுக்குத் தீமை செய்ய முடியும் என்று தெரியவில்லை. இருந்தாலும் அவர்கள் இதை

[திரு. ச. இராமச்சந்திரன்] [7th April 1972

ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

(10) THE TAMIL NADU PANCHAYATS (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 9 OF 1972).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் நிறைவேறிய தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 9/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

இச்சட்ட முன் வடிவை முன்னுரைக்கையில், நிலவரியின் ஒவ் வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரியை ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து பேரளவு வீதமாகிய இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்த இச்சட்ட முன்வடிவு விழைகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சி கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) கீழ் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி, ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய முக்கிய வருவாய்களில் ஒன்றுகும். நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற் போது விதிக்கப்படும் பேரளவு செஸ் மேல்வரி ஒரு ரூபாய் ஐம்பது காசாகும். 1—3—1972இல் முதலமைச்சர் அளித்த வரவு செலவுத் திட்ட உரையில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சிறு கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் முக்கியமாக குடிநீர் வசதி களை ஏற்படுத்திக் கொடுக்கவும், இணைப்புச் சாலைகளைப் போடு

@ Printed as Appendix X on page 866

7th April 1972] [திரு. செ. மாதவன்]

வதற்கும் இயலும் வகையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி பேரளவு வீத மாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டது. எனவே, நில வரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல் வரியை அதன் பேரளவு வீதமாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தும் வகையில் தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 116-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர்த் தேவைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், தற்போது விதிக்கப்படும் மேல்வரி வீதத்தை உயர்த்த ஊராட்சி ஒன்றியக் குழுக்களே தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

இச்சட்ட முன் வடிவு, மேற்கண்ட முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. இப்பிரேரணையை மேலவை ஏற்றுக் கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Panchayats Act (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972), as passed by the Assembly, be taken into consideration".

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்தபொழுதே இதுபற்றிய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறோம். இப்போது பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் போதாது என்ற நிலையிலே பஞ்சாயத்துக்கள் தங்களுடைய நிதிநிலை யும் சரியாக இல்லை என்று அரசாங்கத்தை அணுகிய போது, நிலவரி சர்சார்ஜிலே ரூபாய் 1.50 என்று முன்னல் இருப்பதை மாற்றி இரண்டு ரூபாய் ஐம்பது பைசா வரையும் நீங்கள் உயர்த்தி உங்க ளுடைய வருமானத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று, அவர்க ளுடைய கோரிக்கைகளை அரசாங்கம் திசை திருப்பிவிட்டிருக்கிறது என்றுதான் நான் இதிலே சொல்ல முடியும். ஆனல் நம்முடைய மாநிலத்திலே உள்ள பஞ்சாயத்து யூனியன்களிலே ஒரு ரூபாய்க்கும் குறைவாக இந்த சர்சார்ஜ் விதிக்கும் பஞ்சாயத்துக்கள் எத்தனை இருக்கின்றன? முதலமைச்சர் அவர்கள் 1¼ ரூபாய், 1½ ரூபாய் அளவிலே சர்சார்ஜ் வசூலிக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன்கள்

[திரு. ச. இராமச்சந்திரன்] [7th April 1972

ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 20 of 1972), as passed by the Assembly, be taken into consideration for making recommendations ".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

(10) THE TAMIL NADU PANCHAYATS (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 9 OF 1972).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் நிறைவேறிய தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 9/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

இச்சட்ட முன் வடிவை முன்னுரைக்கையில், நிலவரியின் ஒவ் வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரியை ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து பேரளவு வீதமாகிய இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்த இச்சட்ட முன்வடிவு விழைகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சி கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) கீழ் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி, ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய முக்கிய வருவாய்களில் ஒன்றாகும். நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற் போது விதிக்கப்படும் பேரளவு செஸ் மேல்வரி ஒரு ரூபாய் ஐம்பது காசாகும். 1—3—1972இல் முதலமைச்சர் அளித்த வரவு செலவுத் திட்ட உரையில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சிறு கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் முக்கியமாக குடிநீர் வசதி களை ஏற்படுத்திக் கொடுக்கவும், இணைப்புச் சாலைகளைப் போடு

@ Printed as Appendix X on page 866

7th April 1972] [திரு. செ. மாதவன்]

வதற்கும் இயலும் வகையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி பேரளவு வீத மாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டது. எனவே, நில வரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல் வரியை அதன் பேரளவு வீதமாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தும் வகையில் தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 116-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர்த் தேவைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், தற்போது விதிக்கப்படும் மேல்வரி வீதத்தை உயர்த்த ஊராட்சி ஒன்றியக் குழுக்களே தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

இச்சட்ட முன் வடிவு, மேற்கண்ட முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. இப்பிரேரணையை மேலவை ஏற்றுக் கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Panchayats Act (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972), as passed by the Assembly, be taken into consideration ".

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்தபொழுதே இதுபற்றிய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறோம். இப்போது பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் போதாது என்ற நிலையிலே பஞ்சாயத்துக்கள் தங்களுடைய நிதிநிலை யும் சரியாக இல்லை என்று அரசாங்கத்தை அணுகிய போது, நிலவரி சர்சார்ஜிலே ரூபாய் 1.50 என்று முன்னல் இருப்பதை மாற்றி இரண்டு ரூபாய் ஐம்பது பைசா வரையும் நீங்கள் உயர்த்தி உங்க ளுடைய வருமானத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று, அவர்க ளுடைய கோரிக்கைகளை அரசாங்கம் திசை திருப்பிவிட்டிருக்கிறது என்றுதான் நான் இதிலே சொல்ல முடியும். ஆனல் நம்முடைய மாநிலத்திலே உள்ள பஞ்சாயத்து யூனியன்களிலே ஒரு ரூபாய்க்கும் குறைவாக இந்த சர்சார்ஜ் விதிக்கும் பஞ்சாயத்துக்கள் எத்தனை இருக்கின்றன? முதலமைச்சர் அவர்கள் $1\frac{1}{4}$ ரூபாய், $1\frac{1}{2}$ ரூபாய் அளவிலே சர்சார்ஜ் வசூலிக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன்கள்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [7th April 1972

இப்போது எத்தனை இருக்கின்றன என்று அன்று சொன்னார்கள். 1½ ரூபாயளவில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில தான் என்று ஒரு நம்பரைக் குறித்தார்கள் என்று நான் கருதுகிறேன். குறைவான பஞ்சாயத்து யூனியன்கள்தான் அந்த 1½ ரூபாய் சர்சார்ஜை அந்த அளவிலே பயன்படுத்திக்கொள்கின்றன. இந்த சர்சார்ஜை உயர்த்தி வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்க முடியாது. ஏனென்றால் பெரும்பாலான கிராமங்களிலேயிருந்து வந்திருக்கக்கூடிய பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் கவுன்சிலிலே எதிர்ப்பார்கள். இந்தத் தொகையை உயர்த்தி வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள இயலவே இயலாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொண்டு, பஞ்சாயத்தினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு நாம் வகை செய்து கொடுத்தாலும் சட்ட பூர்வமாக உங்களுக்கு வழி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும் திருப்தி ஏற்படாது. பஞ்சாயத்து யூனியன்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொடுக்க இன்னும் வேறு முயற்சிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பராங்குசம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே பஞ்சாயத்துக்கள் வசூலிக்கிற வரியை அவர்கள் எந்தக் காரியத்துக்கு செலவு செய்யலாம் என்ற வரையறை ஏதாவது உண்டா என்பதை நான் கேட்கின்றேன். ரோடுகள் போடுவது, குடி தண்ணீர் வசதி செய்வது, பள்ளிக்கூடம் கட்டுவது இதுபோன்ற காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்கு விதி இருக்க வேண்டும். இந்த வரியைக் கட்டிடம் கட்டுவதற்குப் பயன்படுத்திவிட்டு, மற்றவற்றிற்கு பணம் இல்லை என்ற நிலை வரக்கூடாது. இதுபோன்ற நன்மைகள் செய்ய வேண்டும் என்று சட்டத்தில் விதி முறைகள் உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

* திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, கல்வி சம்மந்தமாக ஒரு குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பக் கல்வியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால் அவைகளுடைய நிதி வசதியைப் பெருக்குவதற்காக அந்தக் குழுவால் சிபார்சு செய்யப்பட்டு, அந்த சிபார்சின்படிதான் 1½ ரூபாய் லோகல் செஸ் சர்சார்ஜ் என்பதை 2½ ரூபாயாக உயர்த்துவதற்கு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிலவரி முழுவதையுமே அரசாங்கம்

7th April 1972] [திரு. கே. ராஜாராம்]

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றுகூட சிபார்சு செய்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒரு விஷயத்தை அரசாங்கத்திற்குச் சொல்கிறேன். ஏற்கனவே 10 ரூபாய் நிலவரி கொடுக்கக்கூடிய ஒருவர் 4½ ரூபாய் லோகல் செஸ் கொடுக்கிறார். 15 ரூபாய் லோகல் செஸ் சர்சார்ஜுக்கு செலுத்திக் கொண்டிருக்கிறார். 20 ரூபாய் செலுத்தக்கூடிய ஒருவர் இதற்கு முன்பு 54 ரூபாய் வரி செலுத்திக்கொண்டு வந்தவர், இனிமேல் 2½ ரூபாய் வீதம் லோகல் செஸ் சர்சார்ஜ் செலுத்தி, நில வரி 20 ரூபாய், லோகல் செஸ் 20, சர்சார்ஜ் 50, ஆக 79 ரூபாய் செலுத்தவேண்டி வரும். ஒரு சாதாரண விவசாயியின் கணக்கு இது. ஆனால் உண்மை என்னவென்றால், பஞ்சாயத்து யூனியன்கள் இந்த அளவுக்கு உயர்த்துவதே இல்லை. அவர்களுக்குக் கஷ்டங்கள் தெரியும். விவசாயிகள் தங்களைச் சும்மா விடமாட்டார்கள் என்று தெரியும். ஆகவே உயர்த்துவதில்லை. ஏற்கெனவே ரூபாய்க்கு 1½ ரூபாய் வசூலித்தால் போதும் என இருக்கும்போதே கூனூர், கோத்தகிரி, ஊட்டி ஆகிய மூன்றே பஞ்சாயத்து யூனியன்களில்தான் ரூபாய்க்கு 1½ ரூபாய் போட்டார்கள். அங்கே தேயிலைத் தோட்டங்கள் இருப்பதால் வசூல் செய்ய முடிந்தது. வேறு எங்கேயும் இதை வசூல் செய்யவில்லை. 1¼ ரூபாய், இன்னும் சில யூனியன்களில் ஒரு ரூபாய் போட்டார்கள். பெரும்பாலான யூனியன்கள் ரூபாய்க்கு முக்கால் ரூபாய், ஒரு ரூபாயோடு நின்றுவிட்டார்கள். இம்மாதிரி நிலைமையில், நான் அரசாங்கத்திற்கு யோசனை சொல்வது என்ன வென்றால், அவர்களுக்கு ஒரு impetusகொடுத்தால் நன்றாக இருக்கும். 1½ ரூபாய் சர்சார்ஜ் போட்டிருப்பதை 2½ ரூபாய் ஆக உயர்த்துவதற்கு, ஹவுஸ் டாக்ஸ் மேட்சிங் கிராண்ட் கொடுக்கிறமாதிரி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அவர்கள் எவ்வளவு தூரம் லோகல் செஸ் சர்சார்ஜ் போடுகிறார்களோ அந்த அளவுக்கு மேட்சிங் கிராண்ட் கொடுப்போம் என்று impetus கொடுப்பதாக இருந்தால் நன்றாக இருக்கும். லோகல் செஸ் சர்சார்ஜுக்குத்தான் கொடுக்கிறோம். இதற்குக் கிடையாது. ஆகவே இந்த சர்சார்ஜுக்கும் மேட்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருப்பது அவர்கள் சொன்ன மாதிரி போகாத ஊருக்கு பாதை சொன்ன மாதிரித்தான் இருக்கிறது. எந்தப் பஞ்சாயத்து யூனியனும் ரூபாய்க்கு 2½ ரூபாய் கொடுங்கள் என்று தீர்மானம் போட பயப்படும். கிராமத்திலே வாழ்கிறவர்கள்

[திரு. கே. ராஜாராம்] [7th April 197

பஞ்சாயத்து பிரசிடென்ட்கள், பாவம், சிரமப்படுவார்கள். அந்த பணத்தை விவசாயிகள் செலுத்த முடியாது. இந்த மாதி அரசாங்கம் கொடுப்பார்கள், நாம் 400 ரூபாய் வசூல் செய்து கொடுத்தால், அரசாங்கம் 400 ரூபாய் கொடுக்கும், ஆகவே பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லலாம். அதைத்தான் திரு. ரா. கி. அவர்கள் சொன்னார்கள். அவர்கள் திருப்தியாக சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள். பஞ்சாயத்து பிரசிடென்ட் களே தைரியமாகப் போட முடியும். அது இல்லாமல் நீங்களே வாங்கிக்கொள்ளுங்கள் என்றால், எந்த யூனியனும் போடாது. பல பஞ்சாயத்து சேர்மென்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கவனத்தி கொண்டுதான் பேசுகிறேன். இது மாதிரி, போகாத ஊருக்கு பாதை காண்பிப்பது போன்ற ஒரு நிலை வேண்டாம். அதுமாதிரி impetus ஐக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு வருவாயைத் தேடித் தர வேண்டும் என்று புதிய அதிகாரத்தை கொடுத்திருப்பதிலே திருப்தி அடையவாம். நமது தலைவர் ஆர். கே. அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே அது நமக்கெல்லாம் மகிழ்ச்சியையே தருகிறது. திருப்தியடைவதற்கு திசை திருப்பவேண்டாமென்ற வார்த்தையைச் சொன்னார்கள். திசை திருப்பவேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. கிராம மக்களெல்லாம் எங்களோடு இருக்கிறார்கள். அவர்கள் எங்களோடுதான் வருவார்கள். வேறு திசையையே பார்க்க மாட்டார்கள். பல ஆண்டுகளுக்கு ஆகவே, திசை திருப்ப வேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன்.

இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கிற காரணத்தை முதலமைச்சர் அவர்களே விளக்கினார்கள். இந்த அரசு வந்த பிறகு ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாய் வரையில் வரி ரத்து கொடுத்திருக்கிறது. 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கு அடிப்படை வரியை ரத்து செய்திருக்கிறோம். ஓரளவிற்கு விவசாயிகளுக்கு வரியி லிருந்து விதி விலக்கு கிடைத்திருக்கிறது என்பதை மறக்க முடியாது. இது போன்ற முயற்சிகள் அங்கேயுள்ள ஊராட்சி மன்றங்களுக்கு உடனடியாக பயன் அளிக்கும் என்று நம்பிக்கையிலே வேண்டுமானால் போடலாம். பின்னாலே, அந்த அதிகாரம் அவர்களுக்கு இருக் கின்ற காரணத்தினாலே, குறைத்துக் கொள்ளலாம்; அந்த கிராமங் களுக்குத் தேவை என்று கருதுவார்களானால், போட்டுக்

7th April 1972] [திரு. செ. மாதவன்]

கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அது கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே குறிப்பிட்டதைப் போல, முதலமைச்சர் அவர்களும் இங்கே குறிப்பிட்டதைப் போல, குறிப்பாக இணைப்புச் சாலைகள், குடி தண்ணீர்த் திட்டங்கள் இவைகளுக்கு ஊராட்சி ஒன்றி யங்கள் தன்னாட்சி உரிமையோடு பணியாற்ற வேண்டுமென்ற அடிப் படையிலே இந்தப் பணத்திற்கு வகை செய்துகொள்ளலாம். அந்த வேலைத் திட்டங்கள் நிரந்தரமாக இருக்க வேண்டியதில்லை. அந்த வேலைத் திட்டங்களை முடித்துவிட்டால், குறைத்துக் கொள்வதிலே யும் நமக்கு ஆட்சேபணை கிடையாது.

இதற்கு ஈட்டு மானியம், மேச்சிங் கிராண்டு கொடுக்கப்படுமா வென்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்டார்கள். நமது அலுவலர்கள் தருகின்ற தகவல் லோகல் செஸ் சர்சார்ஜுக்குத்தான் மேச்சிங் கிராண்ட். லோகல் செஸ்ஸுக்குக் கிடையாது. ஆகவே, இதற்குக் கிடைக்குமென்று தெரிகிறது. அது உண்மையாக இருக்கு மானால், ஊராட்சி மன்றங்களுக்கு நன்மையாகத்தான் அமையு மென்று குறிப்பிடுகிறேன். பொதுவாக, இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தவில்லையென்று சொன்னார்கள். அது அவ்வளவு சரியான தகவல் இல்லைபோல் தோன்றுகிறது. 1½ பைசா இருக்கிறது, முழு அளவிற்குப் போட்டவர்கள் 38 ஊராட்சி ஒன்றியங்கள், ஒரு பைசா போட்டவர்கள் 185 பஞ்சாயத்து யூனியன்கள். இது 31—3—1971 தேதி வரை உள்ள புள்ளி விவரம். அதற்கு முன்னாலேயும் போட் டிருக்கலாம். கிட்டத்தட்ட 100 பைசாவிற்கு பாதிக்குமேலே போட் டிருக்கிறார்கள் என்பது நமது புள்ளி விவரம் சொல்கின்ற உண்மை யாகும். அதில் சிலபேர் இந்த அதிகாரத்தையே பயன்படுத்த மாட்டோம், பயமாக இருக்கிறது என்று பார்க்கின்ற நிலை இருக்கு மானால், அதை விட்டுவைக்கக் கூடாது. அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றால், அதிகாரத்தைக் கொடுக்காமல், பஞ்சாயத்து ஒன்றியங்களை உருவாக்கி, பஞ்சாயத்து மன்றங்களை உருவாக்கி, இங்கே நம்முடைய அரசாங்கத்திலிருந்து பணம் அனுப்பிக் கொண்டேயிருக்கவேண்டுமென்ற கொள்கையும் சரியல்ல. நிரந்தர மாக தன்னாட்சி உரிமை பெற்று இந்த வருமானத்தைப் பெருக்கிக் கொண்டு அதிக அளவிற்கு உரிமை தர வேண்டுமென்ற கருத்தைத் தான் எங்கள் அரசாங்கமும் நாட்டு மக்களும் கொண்டிருக்கிறார்

[திரு. செ. மாதவன்] [7th April 1972

களென்று கருதுகிறேன். நம்முடைய வரி போடுகின்ற இனம் நாமே போடுகின்றோமே என்று சொல்கிறார்கள். இது அவர்களுடைய ஆட்சியிலே. எங்கள் ஆட்சி வந்தவுடன் புஞ்சை வரி ரத்து செய்யப் பட்டது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நல்ல கருத்தைச் சொன்னது போல, எதிர்காலத்திலே நில வரி முழுவதும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்குப் பயன்பட வேண்டு மென்று விவசாயிகள் விரும்புகிறார்கள். கிராம மக்கள் விரும்பு கிறார்கள். படிப்படியாக அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறைத்து கிராமங்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரங்களைக் கூட்டிக்கொண்டு வருவது நியாயம் என்றுதான் நமது அரசு கருதுகிறது. நான் இந்த அதிகாரத்தைப் பொறுத்த வரையில், இந்தக் கருத்தை ஆரம்பத்திலேயே சொன்னேன். திரு. கிருஷ்ணசாமி நாயுடு கட்சி யைச் சேர்ந்தவர்கள் பத்திரிகையில் கொட்டையாகப் போட்டார்கள் "மந்திரி வரிவிதிப்பிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறார்—பஞ்சாயத்துக் களே வரி போடும்படி தூண்டுகிறார்" என்று. உதாரணத்திற்கு ஒன்று கூறலாம் என்று நினைக்கிறேன். நமது பகுதியில் உங்களுக்குத் தெரியும்—புஞ்சைக்கு வரி இல்லை, ரத்து செய்திருக்கிறார்கள். புஞ்சை நிலத்தில் தென்னை பயிரிடுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வருமானம், ஆனால் ஒரு பைசா வரி இல்லை. இதை ஏன் ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது? திரு. கிருஷ்ணசாமி நாயுடு கேட்க வேண்டும். அவர் இங்கே இதைப் பேசாவிட்டாலும் கூட, அங்கே போய்ச் சொல்ல வேண்டும். அதே மாதிரி புஞ்சையில் கடலை போடுகிறார்கள். எவ்வளவு வருமானம் வருகிறது என்று நமக்கெல்லாம் தெரியும். இதன் மூலம் ஊராட்சிக்கு ஏன் வருமானம் கிடைக்கக் கூடாது? போய்ச் சொல்ல வேண்டும். ஊருக்குப் போய் மக்களிடத்திலே போய், "நமது அரசாங்கம் நல்ல அரசாங்கம், நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது, எல்லோரும் உடனே 2½ பைசா உடனடியாக போட்டு விடுங்கள். அரசாங்கம் 2½ பைசா தருவதாகச் சொல்கிறார்கள். தராவிட்டால் நான் கேட்டுத் தருகிறேன்," என்று பிரசாரம் செய்யுங்கள். அப்படிப் பிரசாரம் செய்து, எங்கள் ஆட்சிக்கு வாதாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மசோதாவை ஏற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, புஞ்சைக்கு நிலத் தீர்வை குறைக்கப்பட்டது என்று சொன்னார்கள். நஞ்சைக்கு ஏக்கருக்கு ரூ. 10 தீர்வை என்று சொன்னால், அரசாங்கம் இதைக்

7th April 1972] [திரு. கே. ராஜாராம்]

குறைப்பது எப்படி என்று அமைச்சரிடம் கேட்டபோது, இல்லை என்று சொன்னார்கள். ஒரு கிராமத்தில் ஒரு ஏக்கர் புஞ்சைக்குத் தீர்வை இல்லை, ஆனால் நஞ்சைக்கு ரூ. 10 போட்டிருக்கிறார்கள். இதைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவர்கள் வாதாடலாம். ஆனால் இங்கே அடிப்படைத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது, திரு. கிருஷ்ணசாமி நாயுடுவுக்குத் தெரியாததல்ல. வாடர் டேக்சை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டாலும், அப்படி பயப்படலாம். விவசாயிகள் தற்போது வாடர் டேக்சை ரத்து செய்ய வேண்டும், ஐந்து ஏக்கருக்கு வரி இருக்கக் கூடாது என்று கூறக் கூடாதா? அது உண்மை. உங்கள் அரசு அதற்கு பயப்பட்டது. எங்கள் அரசைப் பொறுத்த வரையில், விவசாயிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் தான் நன்மை செய்யமுடியும். அதற்காக பயந்து விட்டது என்று சொல்லலாமா? நாங்கள் எதிர்க் கட்சியிலிருந்துகொண்டு வாதாடு கிற நேரத்தில், ஐந்து ஏக்கருக்கு வரி ரத்து செய்ய வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அதற்கு எதிராக ஓட்டுப் போட்டு எங்களுடைய தீர்மானத்தைத் தோற்கடித்தவர் நமது திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள். இன்றைக்கு அந்தத் திட்டங்களை, திட்டவட்ட மாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி வருகிறது. இன்னும் இதுமாதிரி நிறைய நிறைவேற்ற வேண்டும். எனவே, நாங்கள் இப்போது கொடுக்கின்ற சலுகைகள் தவறு என்று வாதாடு வது ஏற்புடைத்தல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, நமது தொழிலமைச்சர் அவர்கள் விளக்கங்கள் தரும்போதும், பேசும் போதும், "எங்களுடைய அரசு, எங்களுடைய அரசு" என்றே குறிப்பிட்டு வந்தார்கள். இன்று கூட இதே மாதிரிக் குறிப்பிட்டார் கள். மொத்தத்தில், "நமது" அரசு என்று கூறியிருந்தால், பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : நீங்கள் பேசும்போது, "உங்கள் அரசு, உங்கள் அரசு" என்று தானே சொல்கிறீர்கள்? "நமது அரசு" என்று கூறுவதில்லையே.

[7th April 1972

The question is—

" That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972), as passed by the Assembly, be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 9 of 1972), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(11) THE TAMIL NADU LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) THIRD AMENDMENT BILL, 1972 (L.A. BILL NO. 19 OF 1972).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 Members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru V. Venga.
3. Thiru A. P. Janardhanam.
4. Thiru G. Parangusam.
5. Thiru S. A. Rajamanickam.
6. Thiru K. Rajaram.

7th April 1972] [Thiru P. U. Shanmugam]

7. Thiru S. Vellapandian.
8. Thiru S. S. Thennarasu.
9. Thiru G. Swaminathan.
10. Thiru M. Arumugaswamy.
11. Thiru N. Sundaresa Thevar.
12. Thiru T. K. Ponnuvelu.

Under section 73 (ii) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, the ceiling limit will not apply to any land held by (a) any charitable or educational institution of a public nature; (b) any trust; (c) any University constituted by any law.

According to section 3(49) " Trust " means trust for a public purpose of religious or charitable or of an educational nature and any temple, mutt, mosque, church or other place, by whatever name known which is dedicated to or for the benefit of or used as of right by any community or section thereof as a place of public religious worship. Section 2 of the Act says that nothing contained in the Act shall apply to lands held by religious trusts of a public nature.

In the budget speech presented on the 1st March 1972, the Chief Minister announced that all exemptions in favour of trusts created after the 26th January 1950, the date on which our Constitution came into force would be withdrawn except for a limited extent to be allowed for trusts for educational purposes and medical facilities.

The Government have examined the matter further. They have decided that lands held by religious institutions as patta lands should continue to be exempted from the Land Ceiling Act. They have also decided that " trust " as such need not continue to be exempted whether such " trust " is created before or after the 26th January 1950. However, the Government have examined the requirements of various Colleges, High Schools and Hospitals in the State. After taking all relevant aspects into consideration, they have decided that in the case of Colleges, which are mentioned in Part I of Schedule I of the Bill, the ceiling area shall be 60 standard acres. In the case of High Schools which are mentioned in Part II of Schedule I of the Bill, the ceiling area shall be 20 standard

[Thiru P. U. Shanmugam] [7th April 1972

acres. In the case of hospitals mentioned in Part III of Schedule I of the Bill, the ceiling area shall be the extent of land held by such hospitals as on the 1st March 1972. These hospitals cannot acquire in future any land in excess of the land already held by them on the 1st March 1972.

The Bill seeks to achieve the above objects.

As this is an important measure relating to land reforms, the Government have decided to refer the Bill to a Joint Select Committee of Legislators of both the Houses for detailed scrutiny.

I commend the motion for referring the Bill to a Joint Select Committee for the acceptance of the House.

MR. CHAIRMAN : Motion moved—

"That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru V. Venga.
3. Thiru A. P. Janardhanam.
4. Thiru G. Parangusam.
5. Thiru S. A. Rajamanickam.
6. Thiru K. Rajaram.
7. Thiru S. Vellapandian.
8. Thiru S. S. Thennarasu.
9. Thiru G. Swaminathan.
10. Thiru M. Arumugaswamy.
11. Thiru N. Sundaresa Thevar.
12. Thiru T. K. Ponnuvelu.

7th April 1972]

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, மசோதா கூட்டு செலக்ட் கமிட்டிக்குப் போவதால் அதிகம் பேச வேண்டிய தில்லை. நான் கூட ஒரு அங்கத்தினராக இருப்பதால், இங்கே பேச வேண்டியதில்லை. என்றாலும் கூட, பொதுவாக சபையில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ட்ரஸ்ட்களைப் பொறுத்தமட்டில், நிறைய உண்மையான நோக்கத்தோடு இல்லாமல் தவறான நோக்கத்தோடு ட்ரஸ்ட்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதில் அரசாங்கத்தினுடைய நோக்கத்தை தெரிந்து கொண்டால், நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி ட்ரஸ்ட்களெல்லாம் பணத்தைத் துஷ்பிரயோகம் பண்ணுகிறார்கள். ஒவ்வொரு ட்ரஸ்ட்டுக்கும் நிர்வாகத்தில் நிதியைப் பரிபாலிக்கும்படியான அதிகாரிகளோடுகூட ஒரு அரசாங்கப் பிரதி நிதியை நியமிக்க வேண்டும். ஹெச். ஆர். ஈ. போர்டிலிருந்து கோயில் நிர்வாகத்திற்கு—கோயில் நிர்வாகம் தவறாக நடந்தால்—ஒருவரை எக்சிக்யூடிவ் ஆபீசராக போட்டுவிடுகிறார்கள். அதே மாதிரி இங்கேயும் போடலாம். ட்ரஸ்டில் வருகிற வருமானத்தைத் தவறான வழியில் செலவழிக்கிறார்கள். அந்தச் செலவுகள் நேர்மையான வழியில் செய்யப்படுவதற்கு கூட்டு நிர்வாகத்தை ஏற்படுத்தி, வருமானம் தவறான வழியில் செல்வதைத்—துஷ்பிரயோகம் செய்வதை—தடுக்க முடியும். இதற்கு செலக்ட் கமிட்டியில் ஒரு கிளாஸ் போடலாம். ட்ரஸ்ட் நிர்வாகத்தில் அரசாங்கத்தின் பங்கு இருக்கிறது.

இன்றைக்கு சில குடும்பங்களில் பல வருஷங்களுக்கு முன்பே பிள்ளைகள் சொத்தைப் பாழாக்கிவிடுவார்களென்று எண்ணி, பிள்ளையார் கோயில் கட்டுவார்கள். கோயில் 2 ஆயிரம் ரூபாய் செலவில் தான் கட்டியிருப்பார்கள். ஆனால் சொத்து ரூ. 3 லட்சம் எழுதி வைத்திருப்பார்கள். அதற்குப் பிறகு 2, 3 தலைமுறைகள் ஆகியிருக்கும். ஆனால் அந்தச் சொத்து அப்படியே இருக்கும். அதை, இந்த ஐந்தாறு குடும்பங்களாகப் பிரிந்திருந்தால், அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும், 5 அல்லது 10 ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கலாம். இதற்கு ட்ரஸ்ட் விதிகளில் மாற்றம் கொண்டுவர வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [7th April 1972

அரசாங்கம் ட்ரஸ்ட் நிறுவனங்களின் நிதிகளைக் கவனித்து நல்ல வழியில் செலவழிக்கும்படியான நிலையைக் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியது போல, அற நிலையங்களின் சொத்தும், வருமானமும் நேரிய முறையில் சட்ட ரீதியாக, தர்ம ரீதியாகச் செலவு செய்யப் படுவதற்கு அரசாங்கம் முழு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அங்குள்ள டிரஸ்டிகளோடு நாம் ஒரு டிரஸ்டியை நியமிப்பது அந்த டிரஸ்ட் ஆக்டின்கீழ் எவ்வளவிற்குப் பயன்படும் என்பதைத் தெளிந்து பார்க்க வேண்டும். அதோடு, டிரஸ்டில் ஒரு ஆள் அரசாங்கம் சேர்த்துப் போட்டு விடுவதால் 5 டிரஸ்டிகளோடு அவர் 6-வது டிரஸ்டியாகத் தான் இருப்பார், தவறு நடக்கிறதென்று சொல்லவில்லை,—மெஜாரிட்டி, மைனரிட்டி என்று வருமானால் இந்த ஒருவர் டிரஸ்டில் இருப்பதால் ஒன்றும் செய்ய முடியாது. அதனாலே இது மாதிரியான பொது அற நிலைகளின் கணக்குகள் முழுவதையும், லோகல் ஃபண்டு ஆடிட் செய்வது போல, அரசாங்கத்தின் ஆடிட்டர்களைக் கொண்டு தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்ற விதியை இதிலே சேர்த்து விட்டால் செம்மையானதாக இருக்கும். அன்றியும் பழைய காலத் தில் பெரியவர்கள் ஒரு கோயிலுக்குச் சொத்தை எழுதிவைத்து, 4 தலைமுறைகள் கழிந்த பிறகு, பின்னே குழந்தைகளுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்று எண்ணுவது தற்கால ரீதியிலே பொருத்தம் போல தோன்றலாம். ஆனால் அந்த தர்மம் செய்தவர்களுடைய நோக்கம் இருக்கிறதே, அந்த நோக்கத்தை முற்றிலும் அழித்து விட்டால் பாவம் கூட வந்து சேரும், சட்ட விரோதமும் ஏற்படும் என்பதைப் புலப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். தர்மம் செய்தவர் களுடைய நோக்கம் என்னவோ அந்த நோக்கத்தை நிறைவேற்று வது தான் அரசாங்கத்தின் தலையாய கடமை என்று கருதி, அந்தத் தர்மத்தைத் தொடர்ந்து செம்மையாக நடத்தவும், தவறுகள் நிகழாமல் காக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே யன்றி, தர்மம் செய்தவர்களுடைய பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுப்பது தவறு என்பது இதுவரையில் தமிழ் நாட்டில் தோன்றாத ஒன்று. அதனாலே தான் பழைய கல்வெட்டுகளில் இறுதியில் எழுதி இருப்பான் : இத்தர்மம் எப்போர்ப்பட்டோர்பாலும் கொடுத்து நிறைவேற்றுக. இத்தர்மம் காப்பான் பாதம் என் தலைமேலே எனச்

7th April 1972] [திரு. சா. கணேசன்]

சொல்லி அந்த கோத்திரத்தில் இருந்தவன் என்று இல்லாமல், உரிமைக்காரன் என்று இல்லாமல், எவன் அந்தந்தக் காலத்தில் இருக்கிறவர்களில் யோக்கியமானவனை அவனே விட்டுப் பார்க்கச் செய்து அதை நிறைவேற்றுக என்று இருக்கிறது. இந்த எண்ணத்தை மனதில் கொண்டு அறம் செய்தவர்களுடைய பொது நோக்கத்திற்கு ஊறு இல்லாமல் செயல்படுவதற்கு அரசு தணிக்கை முறையைக் கடுமையாக்கி, பப்ளிக் ஆடிட்டர்ஸ் என்று சொல்கிற சி. ஏ. காரர் களைக்கூடப் போட வேண்டுமென்று சொல்லவில்லை—அரசாங்க ஆடிட்டர்கள், லோகல் ஃபண்டு ஆடிட்டர்கள், முனிசிபாலிடி கணக்கு பார்ப்பது போல இவைகளைத் தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வழி வகைகளை, வரம்புகளை அமைத்து ஒரு கண்டிஷன் போட்டு விட்டால் அதனாலே பயன் இருக்கும். அப்படி நடத்தினால் நல்லது என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்படி பப்ளிக் டிரஸ்ட், பிரைவேட் டிரஸ்ட் என்று இரண்டு வித டிரஸ்டுகள் உண்டு. பொதுவாக டிரஸ்ட் சட்டம் மத்திய அரசாங்கத்தின் சட்ட மாகும். டிரஸ்டுகளைக் கண்காணிப்பதற்கு நம் ஆட்களை நியமிக்க முடியுமா, டிரஸ்டுகளை எப்படி கண்டிரோல் செய்வது என்றெல்லாம் அரசு தனியாகப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு பல மாநிலங்களில் இது போன்ற சட்டங்கள் இருக்கிறதா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அது தனித்த ஒன்றாகும். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும் போது, டிரஸ்டுகள் என்ற பெயரால் பிள்ளையார் கோயிலுக்கு 2, 3 லட்ச ரூபாய் எழுதி வைத்திருக்கிறார்கள், அந்த நிலங்களை பிள்ளைகள் பிரித்து எழுதிக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் நோக்கம் அதுவல்ல. டிரஸ்ட் என்ற பெயரால் ஏராளமான நிலத்தை எழுதி வைத்து விட்டு அதைத் தங்கள் குடும்பச் சொத்தாக வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். நிலச் சட்டம் வந்தபோது ஏற்பட்ட சில ஓட்டைகளில் இதுவும் ஒன்றாகும். உதாரணத்திற்கு முதலமைச்சரவர் கள் அன்றையதினம் விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது சொன் னார்கள். புது பங்களாவில் இருக்கிற கிருஷ்ணன் படத்திற்குப் பூஜை செய்வதற்கு 63 ஏக்கரா என்று ஒருவர் எழுதி வைத்திருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எந்த நோக்கத்

[திரு. ப. உ. சண்முகம்] [7th April 1972

தோடு கொண்டு வந்தோமோ அதைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிச் செய்யப்பட்டது. எனவே இப்போர்ப்பட்ட தவறுகள் நடக்காமல் தவிர்க்க இந்தச் சட்டத்தின் மூலம் அதிகாரத்தை எடுத்து டிரஸ்டுகளே நீக்கி விடுவதற்கு யோசனை செய்திருக்கிறோம். அதே நேரத்தில் கல்லூரிகள், உயர்தரப் பாடசாலைகள், மருத்துவ மனைகள் இவைகளெல்லாம் செம்மையாக நடப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறோம். கல்லூரிக்கு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் உயர்தரப் பாடசாலைக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் இப்போதிருக்கிறது. இப்படி இரண்டு மருத்துவ மனைகள் டிரஸ்ட் அடிப்படையில் இருக்கின்றன. அவைகளை அப்படியே விட்டு விட்டோம். ஒழுங்காக செங்கிப்பட்டி, பெருந்துறை மருத்துவ மனைகள் நடைபெறுகின்றன என்பதற்காக அவைகளை அப்படியே விட்டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, செங்கிப்பட்டி மருத்துவ மனையை விட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், செங்கிப்பட்டி மருத்துவ மனைக்கு எழுதி வைத்திருக்கிற சொத்துக்களுக்கு எந்த விதமான வருமானமும் குத்தகைதாரர்களிடமிருந்து வரவில்லை. இந்த மருத்துவ மனையைப் பொறுத்த வரை சரியான முறையில் இயங்கவில்லை. இந்த மருத்துவ மனையின் சொத்துக்களை எடுத்துக் கொண்டு பணம் கொடுத்து அதை பாங்கியில் போட்டு வட்டிக்கு விட்டால் அந்தப் பணத்தைக் கொண்டு இயங்குவதற்கு வசதியாக இருக்கும். அதற்கு விதி விலக்குத் தேவையில்லை. அந்த மருத்துவ மனை இயங்க வேண்டுமானால், பணத்தைப் பாங்கியில் போட்டு வட்டிக்கு எடுக்கலாம். அப்படி இல்லாத காரணத்தினால், அரசாங்கம் கொடுக்க முடியவில்லை. அவர்களால் செய்ய முடியாத சங்கடத்தில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த விதி விலக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அப்பொழுது தான் அந்த மருத்துவ மனை சரியாக இயங்க முடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது போன்ற சிக்கல்கள் பல செங்கிப்பட்டி போன்ற இடங்களில் இருக்கின்றன. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்கிற விளக்கம் உள்ளபடியே வரவேற்கத்தக்க விளக்கமாக இருக்கிறது. இவை அனைத்தும் ஆய்வுக்குழுவில் வருவது சிலாக்கியம் என்று கருதுகிறேன்.

7th April 1972]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, கல்லூரிகளுக்கு, உயர் நிலைப் பள்ளிகளுக்கு முறையே 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் இருக்கிறது. கீழே,

" Provided further that in computing the ceiling area of the land held by any College, High School or Hospital mentioned in the above proviso, the lands held under a trust by such College, School or hospital, shall also be taken into account. "

இது விட்டு வைக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது விட்டு வைக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் இது போன்ற இரண்டு மருத்துவ மனைகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை காம்பன்சேஷன் கொடுத்து விட்டு எடுத்துக்கொண்டால், அதன் மூலமாக இவைகளைத் திறமையாக நடத்த முடியுமா என்பதைப் பற்றி செலக்ட் கமிட்டி கருத்து அறிவிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் ஏற்கெனவே இருக்கிற டிரஸ்டுகளை ஒன்றும் செய்ய முடியாது. இது பொறுக்குக் குழுவிற்குப் போவதால் பாதகம் ஏற்படாது. நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்கு பிறகு மீண்டும் அவையில் கொண்டு வந்து சட்டமாக ஆக்கலாம். நான் பிரேரேபித்த இந்தத் தீர்மானத்தை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru V. Venga.
3. Thiru A. P. Janardhanam.
4. Thiru G. Parangusam.
5. Thiru S. A. Rajamanickam.

[Mr. Chairman] [7th April 1972

6. Thiru K. Rajaram.
7. Thiru S. Vellapandian.
8. Thiru S. S. Thennarasu.
9. Thiru G. Swaminathan.
10. Thiru M. Arumugaswamy.
11. Thiru N. Sundaresa Thevar.
12. Thiru T. K. Ponnuvelu."

The motion was put and carried.

(12) The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972).

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru D. V. Narayanaswamy.
3. Pulavar O. Arivudai Nambi.
4. Thiru K. Arivazhagan.
5. Thiru Kattur Gopal.
6. Thiru V. Thangapandian.
7. Thiru Saw Ganesan.
8. Thiru K. Rajaram.
9. Thiru R. Krishnaswamy Naidu.
10. Thiru S Jayarama Reddiar.
11. Thiru G Parangusam.
12. Thiru M. Rajah Iyer. "

7th April 1972] [Thiru O. P. Raman]

The burden of debt on labourers, wage-earners and Government servants and other poor classes of people in the low income groups, in this State, is as heavy as the indebtedness of an agriculturist. These classes of people pay usurious rates of interest to the professional money lenders and fall victim to their dishonest dealings. The burden goes on accumulating, impairing also their efficiency. It has been felt necessary to undertake legislation to afford relief to these low income classes of people and protect them from exploitation by money lenders, on the lines of the protection afforded to the agriculturists under the Tamil Nadu Agriculturists Relief Act, 1938.

The benefits of the proposed measure will not however apply to persons who in the two financial years ending 31st March 1972 have been assessed to Income-tax or Agricultural Income-tax on an annual income of more than Rs. 7,200. Provisions have been made in the Bill for scaling down of the debts payable on the publication of the Act, for debts incurred before 1st October 1971 and for debts incurred on or before 1st October 1971. Provisions have been in respect mortgages.

In view of the importance of the Bill and the interest of the public, it has been proposed that the Bill may be referred to a Joint Select Committee.

Sir, I request the House to accept the motion.

MR. CHAIRMAN : The question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council to consider the Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru D. V. Narayanaswamy.
3. Pulavar O. Arivudai Nambi.
4. Thiru K. Arivazhagan.

[Mr. Chairman] [7th April 1972

5. Thiru Kattur Gopal.
6. Thiru V. Thangapandian.
7. Thiru Saw. Ganesan.
8. Thiru K. Rajaram.
9. Thiru R. Krishnaswamy Naidu.
10. Thiru S. Jayarama Reddiar.
11. Thiru G. Parangusam.
12. Thiru M. Rajah Iyer. "

The motion was put and carried.

(13) THE TAMIL NADU AGRICULTURISTS RELIEF (AMENDMENT) BILL, 1972 (L.A. BILL NO. 22 OF 1972).

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru D. V. Narayanaswamy.
3. Pulavar O. Arivudai Nambi.
4. Thiru K. Arivazhagan.
5. Thiru Kattur Gopal.
6. Thiru V. Thangapandian.
7. Thiru Saw. Ganesan.
8. Thiru K. Rajaram.
9. Thiru R. Krishnaswamy Naidu.
10. Thiru S. Jayarama Reddiar.
11. Thiru G. Parangusam.
12. Thiru M. Rajah Iyer. "

The Tamil Nadu Agriculturists Relief Act, 1938 (Tamil Nadu Act IV of 1938) was enacted with a view to provide for the relief of indebted agriculturist in this State. Many of the provisions of the said Act are exhausted provisions and not up-to-date. The agriculturists in this State are still feeling very much distressed in view

7th April 1972] [Thiru O. P. Raman]

of the heavy burden of debts. As a result of the heavy burden of debts, the agricultural development in this State is very much affected. In order to remove the distress caused to agriculturists by the heavy burden of debts, it is felt necessary to amend the said Act suitably for the purposes. It is proposed to extend the Act to the transferred territory also.

It has also been proposed to scale down the debts payable by agriculturists on the date of the publication of the proposed amending act.

In view of the importance of the Amending Bill and in the interest of the public, it has been proposed that the Amending Bill may be referred to a Joint Select Committee.

Sir, I request the House to accept the motion.

MR. CHAIRMAN : The question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 36 Members (24 Members of the Legislative Assembly and 12 Members of the Legislative Council) to consider the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru K. S. Mani.
2. Thiru D. V. Narayanaswamy.
3. Pulavar O. Arivudai Nambi.
4. Thiru K. Arivazhagan.
5. Thiru Kattur Gopal.
6. Thiru V. Thangapandian.
7. Thiru Saw. Ganesan.
8. Thiru K. Rajaram.
9. Thiru R. Krishnaswamy Naidu.
10. Thiru S. Jayarama Reddiar.
11. Thiru G. Parangusam.
12. Thiru M. Rajah Iyer.'

The motion was put and carried.

APPENDIX I.

Vide item III (1) on page 792]

L.A. Bill No. 12 of 1972.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Revenue Recovery Act, 1864.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Revenue Recovery (Amendment) Act, 1972.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section 52-A in Tamil Nadu Act II of* **1864.—In the Tamil Nadu Revenue Recovery Act, 1864 (Tamil Nadu Act II of 1864), after section 52, the following section shall be inserted, namely :—**

" 52-A. *Recovery of sums due to the Tamil Nadu Agro-Industries Corporation and other Corporations, etc.*—Without prejudice to any other mode of recovery which is being taken or may be taken, all loans granted and all advances made to any **person—**

(i) by the Tamil Nadu Agro-Industries Corporation Limited, **Madras, or**

(ii) by such other Corporation, (the shares of which have been contributed, underwritten or guaranteed by the State Government) as may be notified in this behalf by the State Government in the *Tamil Nadu Government Gazette*, or

(iii) from out of the Amalgamated Tamil Nadu Shares of the Post-War Service Reconstruction Fund and the Special Fund for Reconstruction and Rehabilitation of Ex-servicemen,

together with interest on such loans and advances, and all sums due to the Corporations mentioned in clauses (i) and (ii) may be recovered in the same manner as arrears of land revenue under the provisions of this Act. ",

APPENDIX II.

[*Vide* item III (2) on page 794]

L.A. Bill No. 5 of 1972.

(As passed by the Assembly)

A Bill further to amend the Public Wakfs (Extension of Limitation) Act, 1959, in its application to the State of Tamil Nadu.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Act, 1972.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall be deemed to have come into force on the 31st December 1970.

2. *Amendment of section 3, Central Act 29 of* 1959.—In section 3 of the Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959), for the expression " the 31st day of December 1970 ", the expression " the 31st day of December 1972 ", shall be substituted.

APPENDIX III.

[*Vide* item III (3) on page 795]

L.A. Bill No. 14 of 1972.

(As passed by the Assembly)

A Bill to amend the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Act, 1972.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

[7th April 1972

2. *Amendment of section* 34, *Tamil Nadu Act* 4 *of* 1971.—In section 34 of the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970 (Tamil Nadu Act 4 of 1971), in sub-section (4), for the words, figures and brackets " or in the Reserve Bank of India constituted under the Reserve Bank of India Act, 1934 (Central Act II of 1934), and the said account shall be operated upon by such officers of the Board as may be authorised by the Board and in such manner as may be prescribed ", the following shall be substituted, namely :—

" or in—

